உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வடமொழியிலமைந்த உத்தரமீமாஞ்சையிலுள்ள
பிரமகாண்டப்பொருட்கு முரணுறாது நவரசமமையத்
தென்மொழி யாப்பினால்

துறைமங்கலம்

**சிவப்பிரகாச சுவாமிகள்**

அருளிய

# வேதாந்தசூளாமணி

மூலமும்,

இராமநாதபுரம்

**முத்துவிஜயரகுநாதசேதுபதி**

மகாராஜா அவர்கள் கோரிக்கையின்படி
திருத்துருத்தி - இந்திரபீடங்
கரபாத்திரசுவாமிகளாதீனம்

**பிறைசை. அருணாசலசுவாமிகள்**

இயற்றிய பதவுரைக்கிணங்க,
இவரதுமாணாக்கர்

**ஈசூர். சச்சிதானந்தசுவாமிகள்**

இயற்றிய

பொழிப்புரையும்.

இவை
இவரது தருமபரிபாலனசபையின்
காரியதரிசி
ப. முத்துகிருஷ்ணரெட்டியாரவர்களால்
சென்னை:
மதராசு ரிப்பன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டன.
(இரண்டாம் பதிப்பு.)
1897.

*Registered Copyright*

சிவமயம்.

# உரைச்சிறப்புப்பாயிரம்.

நேரிசையாசிரியப்பா.

இஃது

இந்நூலுரையாசிரியர் மாணாக்கராகிய

பாரிப்பாக்கம்

## முனியப்பமுதலியாரியற்றியது.

மணிவளருததிசூழ் மாநிலமதனி - லணிபெறவிளங்குநல் லான்மகோடி
கடம் - முறுவினை மறந்தறி யாமையோ ருருவாய் - மருளினிற் சுழன்று
வருந்திடுங்காலையிற் - றன்னைமறவாத் தன்மையான் மாயையின் மன்னி
யோ னருளான் மகிழ்வுடனோக்கிக் - காலமாதியதத் துவங்களு மிலகு -
ஞாலமார்புவனபோகமு நல்கித் - தனுகரணங்களுந் தந்தனுபவிக்கு - மின
ம்வருத் ததனாலிதந்தனை யுணர்வித் - துண்ணும்போததி லுறுசுகதுக்க -
நண்ணுறுமதனா னலிவுறுமவற்றை - நீக்குவான்கருதி நெறியுணர்ந்துய்ய -
வாக்கமாய்முனமே யுளதாமோத்திற் - சிலவெடுத்திருக்கா தியபதினான்கா -
நிலவிடவைத்த நிமலமாம்வித்தையுட் - சிறந்த மீமாஞ்சையுட் செப்புமுத்
தரத்தி - னுறைந்திடும்பிரம காண்டத்துளோதும் - பொருளதுவிளங்கப்
புத்தேள்வியாத - னருளொடுசூத்திர ரூபமாயமைப்ப - விளங்குறுஞ்சாம
வேதத்துச்சியிற் - றுளங்குமாவாக்கியத் தூய்மையினமைந்த - பிரமகூடத்
தரின் பேதநீங்கினமெய் - யுரமதேயுண்மையென் றோர்ந்துலகுய்யச் - சங்
கராசாரிய சாமிதன்னருளாற் - றுங்கமாநுவலுமத் துவிதபாடியமே - யுண்
மைப்பொருளென வுணர்வுடையோர்க - ணண்ணுறுமிஃதை யாவருநணு
கக் - கருதினாரியமொழி கற்றுவல்லார்க்கே - யுரியதாமேனையோர்க் குரிய
தன்றாதலிற் - சிவப்பிரகாச தேசிகன்மகிழ்ந்தே - சிவத்தினுக்கார்வமாந் தெ
ன்மொழியதனி - லுரைத்தவே தாந்தசூளாமணியொண்கவிக் - குரைவிரித்
துலகோ ருய்யத்தருகெனச் - சுப்பிரமணியனாந் தொல்கடன்மூழ்கி - யற்
புதமாந்திரா விடவமுதனைத்தும் - வாரிவிழுங்கிய மாமுனியுறையுங் - காரு

லாம்பொதியைக் ககனமளாவிய - சிரந்தனி னின்றுஞ் சீருலகுய்யப் - பர ந்திடும் வானதிபாரினிற்போந்து - சந்தனமாதிய தருக்களின் குழுவுஞ் - சுந்தரமாநவமணிகளுந்தொடரத் - தலைவனைநோக்கிச் சார்ந்திடுவையை சூழ் - நிலமகடிலகமாய் நிலவிடுங்கன்னி - நாட்டிற்சிறந்தமென் னந்தைமா நகரிற் - பாட்டிற்புகழ்தரு பல்வளம்பெருகும் - பூவசியன்றெருவின் மேவுத னன்கெனத் - தாவினல்லுழவரைக் கூஉய்த்தனதிடஞ் - சேர்த்துவன்பூவி னை பார்த்துத்திருத்தி - நீர்த்தடையின்றிப் பூர்த்தியாய்ப்பாய்ச்சிச் - செந் நெலுமிக்குபுன் கன்னல்சீர்க்கமுகாய் - மன்னியகமுகுநற் றென்னைநற்று வெனச் - செல்லுறைசோலையு மில்லுறையோரையு - நல்லுறவைக்கொடு புல்லுறவைத்தவிர் - துறவியுநல்குர வுறுபவர்யாரையு - மறத்துடன் வளர் க்குஞ் சிறப்பினம்மறவர்கோன் - முத்துச்சாமிவே ளுத்தமதவத்திற் - சித்தி யாநான்முகன் புத்தியினுதித்த - செய்யாமுனிவரி னையாச்சாமிமால் - வை யகம்புகழும் கடம்பவனேந்திரன் - வடிவேன்முத்து வயிரவக்குரிசின் - முடியெனவந்தோர்க் கடியெனுமிளவல் - தேவுலகத்திற் சீருளதான - பூவு லகத்திற் பொற்புறவிளங்கு - மேருவின்றென்பால் விளங்கு நன்னதிகளிற்- சீருயர்கங்கையிற் சிறந்தவிற்கொடியு - மத்திசைதன்னிலமர் நற்றலங்களி ன் - முத்தித்தலம் வாரணசிதனின்முதிர் - முராரியர்ச்சித்து முற்பவந்தொ லைத்த - விராமேச்சுரமெனு மிருஞ்சிவதலமும் - பாதுகாக்கும் பண்பிலுயர் ந்த - சேதிபதியெனுஞ் சீர்த்தியை யுடையோன் - மணஞ்செய்வான் கருதி மான்முதலமரர் - கணம்வரவரவக் கயிலைதாழாமற் - சமஞ்செயக் குறுமுனி தனித்து வீற்றிருக்கு - நிமலஞானிகளக நிலையென நிற்கும் - புதுமலர் வாசப் பொதியமால்வரையோன் - றுதைமலர்க்குருந்தினற் றூயவனருளா- மதுரவாரியின்வாய் மடுத்தருள்பொழியு - முதியமாணிக்கவா சகன்றுயர் முனிய - வுருகுமெய்யன்பிற் கொடுத்தமாநதியைப் - பெருகவிடுக்கப் படி மிசைபெருகி - யன்பிற்றேக மாதியகரைக்க - வின்புருவாய்வரு மியல்பென முத்தின் - குழுவையுந் துப்பின் கொடியையுமீர்த்து - வழுவறச்செல்லும் வையைமாநதியோன் - பனையொடுமலயத் துவசனேற்றால்வருந் - தனை யளங்கயற்கணி தனிமுடி கவித்துப் - பூவேந்தனை வரும் போற்றரியணைமி சைத் - தேவேந்தாகித் திகழ்வதைவானோர் - செந்நலுங்கன்னலு மரம்பை யுந்தெங்கு - மன்னுசோபானமாய் வந்தடிபணியும் - பைந்தமிழ்விளங்கும் பாண்டிநன்னாடன் - மைந்துறுமெய்யிலு மாசுணமுடிமேற் - றங்குநீரக முந் தனித்தனி சூழத் - திங்கள் வந்துலவுஞ் சேணுயர் மேடையின் - பளிக்கினு லமைந்த பலகணிவாயி - ஞெளித்தி நோக்கியமின் ஞெள் ளியமுகமல - ராடவராநந மருக்கணும்மலரக்-கூடியானந்தங்குளித்தகற்பின

ர்வா - மூராவணைத்துயில்வோ னருள்பெறுபதியா - யிராமநாத புரமெனுநக
ரோ - னறிவின்மையாமிருட் கறிவெனுங்கதிரோன் - செறிவுற்றஃதைச்
செயித்துநிற்பதுபோற் - பகைவர்வல்லமையைப் பாறிடத்துரத்துந் - தகை
யுளன்றளவத் தாமமாலிகையான் - மனமெனும்புரவியான் மாயாபுரத்தைத்
தனியனுய்த்தாண்டுஞ் சதிரினைப்போலக் - கருதலரரணைக் சடந்தனனக
ரை - மருவிடச்செய்யு மாதேதியுடையா - னனகமாமுணர்வை யடைந்தி
டுநிமித்த - முனமகமெனவுரை மூன்றின்முதன்மையாம் - பரமாங்காரமாப்
பகர்மதக்களிற்றி-னுரமுறப்பவபகை யோடத்துரத்தலி-னிகலவர்வலிகெட
வெவ்வெவதிசையுந் தகவுறநடாத்துந் தந்தாவளத்தான் - றன்னைத்தான்
காண்பதுவே சத்தியம் - பின்னமாக்காண்பது பெட்டென்றெங்கு - மவனி
யோர்காண வேதங்களதிர்த்தலி - னிவனேமன்னவ னென்பதுமெய்யென-
முன்றிலென்று முழங்குமாமுரசோன் - மன்றில்வாழ் சிற்றம் பலவனென்ம
னமே - கோயிலாக்கொண்டான் கொடியகாமங்கள் - வாயில்விட்டோடின
வகையுலகறியக் - காவிதரித்த கருத்தைக்காட்டலின் - பூவிற்காசு பொருந்
திறனிவற்கு - வந்திறை கொடுத்து வளமைபெற்றிருக்கச் - சந்ததங்கூவுந்
தாளாண்மையினைக் - காணவாடுங் காவிக்கொடியோன் - பேணுதற்கரிய
பிரமபதம்பெறச் - சீவரைச் செலுத்துஞ் சிட்சை ரட்சைகளாற் - பாவபுண்
ணியவினைப் பற்றறவிளங்கு - நடுநிலையாக நடிக்கு மீசனைப்போற் - குடிமு
ழுதாளுங் கொள்கையாலிவரிற் - றுட்டரைக் காய்ந்து சிட்டரைத் தூய்
மையிற் -றட்டறக்காத்துத் தானவைசாரா - மனுநெறியதனை வழாதுநடாத்
துங் - கனமுறவுலகைக் காத்தசெங்கோலான் - சக்கரவாளத் தன்மையாற்
காக்கு - மிக்கசத்துவமாதி வெண்கொற்றக்குடையான் - கட்டுத்தவறுக்
கவரிபோன்மனுவின் - சட்டந்தவறுத் தன்மையானஃதின் - சிகழியையிரு
புறஞ் செல்வியரிரட்டும் - புகழ்தருகவரி புடையொலிவுடையான் - முடி
யானடியே முடியானதனுற் - படிமீதெவர்க்கும் பணியாமுடியான் - திரிபு
ண்டரநீற் றழகுந்திலகமு - மருவிவிளங்கு மதிமுகநுதலான் - ஞாலமாருயி
ர்க ளியாவையுமுயப்புறஞ் - சீலமார்தன்போற் றேர்கருணைக்கணன் - வச்சி
ரத்தோடு மரகதத்தொங்கலு - முச்சமதாயொளி ரும்பலவணியுந் - தவமெ
லாமுதிர்ந்த சற்குருமொழியே - நவநவமாகக் கேட்குநற்செவியான் - சது
மறைமுடிவின் றற்பரம்பொருளை - மதுரமா யடைந்துமெய் வழங்குறுவா
க்கோன் - மணிமுத்தாரமு மகரகண்டிகையு - மணிபரமேச னருட்கண்ணு
ரமு - நாதாதீதமாய் நவிறரும் பொருளை - நாதமாக்காண நவிலகண்டத்
தா - னங்கதங்கடக மொழிகண்முதலாத் - துங்கமாநவமணி குயின்றபல்ல

ணிபுமார் - மாயவளையை மண்ணெலனநூறூர்-தூயமேருவினற் றுணையெனுந்
தோளான் - றிருவுங்கவுத்துவஞ் சேர்ந்து விளங்கலி - னருளுமதாணியு மார
மாதிகளு - மிருபுறமுஞ்சாரா வேகமாமுரத்தி - னொருபுறஞ்சாரா வுளமுர
முடையா - னுலகமனைத்தையு முதரத்தில் வைத்து - நலமுறக்காக்கு நார
ணன்றனைப்போற் - றனதரசிற்குட் சாருயிரனைத்தையுங் - கனமுறக்காக்
குங் கருப்பமுடையான் - சிட்டாளனைவரு முரமுடன் றிகழவுந் - துட்டா
டங்குணந் தூரப்போகவு - மன்னவர்யாவரு மகிழ்ந்ததிசயிக்கவு - நன்னல
மொலிக்குநற் கழலணியடியா - னரசருக்கறிகுறியாகுமாகத்தா - னுரந்தனை
க்காட்டா வொளியெனும்பொறியா - னுக்கமழியா தருளொடும் விளங்க -
வூக்கமாஞ்சிரசி லொளிர்பிராணத்தான் - றனக்கொரு சலனஞ் சாராநெறி
யின் - கனத்தசிவச்செயற் கருதிடுமனத்தான் - றன்மனினிறைந்த சத்துவகு
ணத்தான் - மன்னரில்வீமனை மதித்திடும்வலியா - னிதியிற்சங்கம் பதுமநீ
ள்வானோர் - பதியிற்கற்பக பாதபங்காம - தேனுவுஞ்சிந்தா மணியினுஞ்சிற
ந்து - நானிலந்தன்னின் ஞானசிரியன் - றன்னைக் கொடுத்தல்போற் றரும்
பெருங்கொடையான் - பன்னியவருளு மன்பும்பாச - வொழிவும் பிரமத்
துண்மையுணர்தலும் - வாழாது நிறைந்த மன்னுணர்வுடையான் - சுருதி
நடாத்துந் தொல்லறிஞரைப்போன் - மிருதிநடாத்தும் விருப்புளநீதியான்-
சமயமனைத்துந் தற்பரன்றனையே - யமர்தரத்துதிக்கு மன்பினின்றுலக -
மனைத்துமகிழ்வுற வாதரிப்பதனான் - மனத்துந்துதிக்கு மன்னியபுகழான் -
ஸ்ரீமதிரணிய கருப்பயாஜி - யேமரவிகுல முத்துவிஜய - ரகுநாதராம சாமிசே
துபதிக்கு-மிகமுளோர் புகழுமிராணிசேதுபதி- பருவதவர்த்தனிப் பங்கயா
சனிக்குந் - திருவெனும்புத்திரியாகுமிராணி - சேதுபதித்துரையிராஜநாச்சி
யார் - காதலன்முத்து விஜயரகுநாத - சேதுபதித்துரை சிற்சுகமாமனு -
பூதிவிளங்கப் புகன்றனனுக - சையகிரியிற் றங்கிய தமிழ்முனி - செய்யகம
ண்டலத் திருந்தசெல்வியை முனந் - தந்திமுகக்கொடி சாய்க்க நீருருவா
ய்ச் - சந்தனஞ்சங்கந் தரளந்தமனிய - மாதியவீசு மலையொடுபரந்து - நீதி
யாஞ்செந்நென் முதலியபைங்கூழ் - பலமுதலாகிய சோலைகள் படரப் -
புலப்படகாக்கும் பொன்னிநாடதனிற் - சந்திரகாந்தத் தகடுசாந்தந்தோய்-
சுந்தரமாகவின் டோய்ந்துயர்மாளிகை - மலிதிருத்துருத்தி மாநகர்தனில்
வா - ழிலகுமுத்தரவே தீச்சுரன்சந்நிதி - தன்னின்மறையவர் சதுமறைய
றைய - மன்னரும்வசியரு மரபுடனேத - சூத்திரர்க்கப்பொரு டேய்மையாய்
விளங்கப் - பார்த்திருந்தவர்க்கெலாம் பவப்பிணியகலச் - சமயிகனெறியெ
லாந் தட்டழிந்திரிய - வமையும்வன்னச் சிரமங்களகலத் - துவிதம்விசிட்
டாத் துவிதம்விட்டோடத் - துவிதமின்றியபொரு டேய்மையாய்க்காணச் -

சங்கராசாரிய சாமிகளமைத்த-துங்கமாரிந்திர பீடத்தொரு முதற் - கரபாத்திரனெனக்காணுஞ் சதாசிவப் - பிரமேந்திரயோகி வரியர்பெருமான் - முத்தியுலகிற் கரசனும்முடிவில்-பத்தியுள்ளோர்க்கருள் பண்பினனுகி - யரியாசனத்திருந் தாக்கினைசக்கர - மரியாப்பிறவா மாண்புயிரொய்த - நடாத்துநாளி னுடரும்பதத்தை - விடாதுபற்றும் விமலதத்தாத்ரய - சேதனர்க்கருளவச் செம்மல்செங்கமலபொற் - பாதர்க்கருளவப் பான்மையோனுகைவாழ் - மறையவரரசர்வசியர்சூத்திரருக் - கறைதரும்பொருளெலா மாராய்ந்ததனின் - களங்கமனைத்தையுங் கருவொடு களைந்து - வளம்பெறநிறைந்தமாசிலாமணிபோற் - றிகழ்தருபிரமமே சேடமென் றுணர்த்தும் - புகழருணசலப் புங்கவர்க்கருளத் - திங்கள்வந்துலவுஞ் சேணுயர்மாளிகை - துங்கவார்துவசத் தோகைவிளிக்க - வரம்பைகள்வரவிவ் வரண்மனைமாதர் - பரிந்துபசரித்துப் பண்புடன்றிருவென - வுலவுமேன்மேடையு மொளிர்மணிவிளங்கும் - பலமணித்தோரணம் பைந்தாரரம்பையும் - பூரணகும்பமும் புட்பமாலிகையுந் - தோரணநிரையாய்த் துலங்கு மாவணமு - மாதியவளமலி யமலைவாழ்பிறைசை - யூதியவுயிர்கட் குளமகிழ்வெய்த - வெமக்கன்பாகிய விந்துவுநதியுஞ் - சமப்படவிளங்குந் தன்மையானமைக்குச் - சிரமெனத்தமனியத் திருமதில்சூழப் - பருப்பதமென்னப் பரந்தகோபுரமுஞ் - சூழுநற்கோயிலே தொல்லைமாக்கயிலையின் - வாழுதற்கிடமென வளர்விசாலாட்சி - தன்னுடன்மகிழ்விசு வேசன்றுனமர் - பொன்னுறைபிறையாற் றின்வளர்புங்கவன் - றனக்கவனருளத் தானனுபவிக்கத் - தினங்குருபரன்மொழி சிந்தித்ததற்கோர் - சான்றுவிளங்குஞ் சதுமறைமுடிவை - யூன்றிவிசாரித்தொளிர்மாவாக்கியத் - ததுநீயாயின வெனும்பதப்பொருளைக் - கதவுதலதனுற் கண்டகூடத்தன் - பிரமமாயதுவும் பேரானந்த - வுருவமாயாவு முணர்ந்ததுவதுவா - யிலங்குமனுபவத் தியற்கையுந்தழீஇப் - பலநூற்பொருளின் பான்மையுந்தழீஇக் - குருவாக்கொருமொழி கொண்டதனிலைதழீஇ - யருமையாத்தர்கண்மொழி யனுபவமுந்தழீஇ - யனுபவரத்திறுகரமெனுநாமம் - புனைந்தருளினன் முற்புகலுமாநகரி - னருளிறைநாமமமைந்த - பொருவருமருணசலபுங்கவனே.

## உரைச்சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

# வேதாந்தசூளாமணி.

## காஞ்சிபுரம் - இராமசாமிநாயகரியற்றியது.

திருவளர்கமலமருமலர் நாப்பட் - கயலமர்ந்தறநெறி யியலுறநடாத்தி - முச்சகங்காக்கு முழுமுடிமன்னர்கை - மச்சவிரேகையை மானுந் திருத்தகு - தண்டுறைவாவிசூழ் தருதுறைமங்கலத் - தெண்டிசைபழிச்ச விறைகொளுந்தவத்தோன் - பவப்பிணிப்புற்றுப்பரிதவித்துழலு - முயிர்கட் கிரங்கியவ் வுண்மைப்பொருளின் - றிறமதையெளிதிற் றெள்ளிதிற்றெளிக்கு - மல்லமதேவ னமலலீலை - தேர்ந்துணர்பொருட் சித்தாந்தசிகாமணி - யாதியநூல்க ளலகிலவருளினோன் - பவப்பிரகாசப் பற்றறுத்திலகுஞ் - சிவப்பிரகாச தேசிகப்பெயரோன் - மறைப்பொருண்முழுதுந் திறப்படச்செறித்துப் - பெருமைசேர்நாமம் பிறங்குவேதாந்த - சூளாமணியெனத் தோற்றியோர்முதநூ - லுடாப்புனைந்து நலமுறநல்கின - னனையதுமிகுதெருளாளர்க்கன்றி - மற்றையர்க்கெண்மையின் மதிதகவுணர்த - லெல்லாதாக விற் றெருல்லோர்நூல்வழிப் - புரைதபவொளிரு முறையொன்றியற்றி - யளித்திடுகென்று வணியிழைமடவார் - புனல்குடைந்தாடி வரும்வளனோக்கா - மென்னடைக்கஞ்கிய பொன்சிறையெகினஞ் - செந்தீப்பாயுஞ் செயலினைப்பொருவ - வொளிவிரிகமலத் துகளவெரீஇ - வாட்டகட் டகட்டிளவாளைகள்வெடிபோய்ப் - பைந்தாற்றுக்கமுகின் பழுக்குலையுகுத்து - விண்மணியெனுமவ் வெங்கதிர்ச்செல்வ - னிரதத்தார்த்தவேழ் துரகதமருட்டி - மீண்டுறுந்தடநிரை யீண்டியபணைசூழ் - நலநிறையிராம நாதபுரத்திற் - கோதுபதிந்திடாச் சேதுபதிமரபில் - வருபுகழ்ப்பருப்பத வர்த்தனிநாச்சியா - ளெனும்பெயர்வலம்புரி தருந்திருமுத்துறழ் - துரைராஜநாச்சியார் துணையெனவந்தோன் - பவக்கடலுவர்க்கடல் பரவாதருக்கிய - தவக்கடலுறைதிருச் சந்தமால்வரையா - னினைதொறுமமணர்த நெஞ்சுபறைகொட்ட - வனைதிரைகொழிக்கும் வையைமாநதியா - னருமறைப்பொருள்விளை யாடல்பயின்ற - பரவருஞ்சிறப்பமை பாண்டிநாட்டா - னமராவதித்துணை யரிதெனலரிதெனச் - சமையுமென்னந்தைத் தனிநகருடையா - னைந்தவித்தடங்கிய வாற்றல்சான்முனிவரர் - சொல்லின்விரைந்து செல்லுவாம்பரியான் - குலங்கெழுதியசக்கயங் கூடியுருத்தென - விலங்குவெண்மருப்பி னேழுயர்களிற்றன் - வருமாதுலர்க்கு வரையாவள்ளல்போ - லொருவாப்பாண்செய் துறுவண்டினங்கட் - கிருந்தேனளிக்கும் பெருந்தளவமாலையா-னுறுபருவத்து மகலாதார்த்து-வீறுமெழிலி யுளதெனிறெருவா-ருமிணையெனவதிர் சேமமும்முரசா-னைங்கணையாளியிதருந்தவர்குறி

யெனாக் - கண்டுமெனம்வெரூஉங் காவிப்பதாகையா - னாவலந்தீவென நற்
பெயர்மருவி - மேவுறுமிடனெலா மேவுறுமாணையா - னிக்குடையோன்
கவி கைக்கிருங்கதிர்தரு - மக்கதிர்நிகர்கா விக்குடையாளன் - கருதலர்வண
க்கிக் காய்ப்புறுதாளான் - மருவளர்கமல மாதுறைதோளா - னுண்மையு
டையா னும்பரானன்ன - வண்மையுடையான் மதன்றிகைத்தேங்கு - முரு
வுடையானிறை திருவுடையானுறு - பொறையுடையான்மிகு நிறையுடை
யானுயர் - வெற்றியார்முத்து விஜயரகுநாதன் - சொற்றனனாக முற்றுநன்
காராய்ந் - தவதாரிகைமுத லாமுறுப்பமைத்துச் - சொல்வளம் பொருள்
வளஞ் சுவைவளமின்னன - பல்வளந்தழுவிப் பயிலவகுத்தன - னிலகுரு
நாம மிடமெனுமூன்று - மேவாப்பொருளவை மேவிவந்தென்ன - மூவாப்
பொழில்சூழ் முதுதிருத்துருத்தியில் - வந்துற்பவித்த விந்திரபீடத் - தெ
ந்தையாங்கரபாத் திரன்மரபோங்க - வீண்டவதரித்த வாண்டகை நறுஞ்
செந் - தாதிவரம்புயப் போதுதண்புனலிடை - வைகுதன்மங்கையர் வாண்
முகமதனை - நேரவோர்தாளினின் றந்தவம்புரி - தன்மையாமென்னத்
தழைதருபாசடைப் - பன்மலர்துதைதடம் பலப்பலசுலவிய - பிறைசைவா
ழ்வுவந்த பீடுறுபெரியோ - னமலராமாயண மாதிய நூல்கட் - கமரரும்விய
ப்பவரும்பொருள் விரித்தோன் - காயடைதின்றுமைந் தீயிடைநின்றும் -
வாயுமறித்தும்போய்முழைபுக்கும் - பற்பலரருந்தவம் பயின்றுமறிந்திடாச்-
செம்பொருடன்னைச் செறியுளங்கையி - னகத்தாமலகம தாமெனவறிந்
தோன் - றுக்கமுஞ்சுகமு மொக்கநாடற்குச் - சான்றெனச்சந்தினுந் தழ
லினுமீரடி - வதிதரவைத்திவ் வையம்புரந்த - மதிமிகுசனக மன்னவனெ
ன்ன - வில்லறந்தாங்கி யிருந்துந்துறவெனும் - வல்லறந்தாங்கியோர் வழு
த்தவீற்றிருப்போன் - றன்னடைந்தோரைத் தகப்பரிசித்தன் - முன்னுத
னோக்கலென் மூவகைத்தீக்கையாற்-றவலருமலத்தையுந் தற்போதத்தையு-
மவலமுறக்கெடுத் தனிலமுலவாத - விடத்துக்கறங்கா விளக்கமுந்திரை
தீர் - தடத்துப்புனலுந் தகைபெறக்கோட்டிய - சித்திரமும்விசை தீர்ந்தபம்
பரமு - மொத்திடவைப்போன் மெய்த்தவர்விழையு - மருணாசலதேசிகனெ
ன-வொருநாமம்புனைந்தொளிருமாதவனே.

முற்றிற்று.

உ

# சிறப்புப்பாயிரம்.

இ ஃ து.

வருதிபுரம் வேலுசுவாமிகளியற்றியது.

அருள்வடிவா யிலகுசிவப் பிரகாசதேசிகனறுதிகன்மத்
திருள்வடிவ நீங்கிமருள் வடிவிலுழலுயிர்களோ வடிவமெய்தத் [ய்ப்
தெருள்வடிவாய்ப்புகன்றருள்வேதாந்தசூளாமணிக்கின்னுரைசெய்தான் மெ
பொருள்வடிவாம் பிறைசையரு ணாசலசற் குருராயன் புலவரேறே.

இ ஃ து.

சேலஞ்ஜில்லாசிவில்கோர்ட்டு-வக்கீல்

ம - ள - ள - அப்பாசுவாமி பிள்ளையவர்க ளியற்றியது.

மூவடிவாய் முழுதுமாயல்லவாகு
முழுமுதலாஞ் சிவத்தியல்வு முழுதுந்தேர்ந்திங்
கோவடிவாஞ்சிவப்பிரகா சையன்சொல்வே
தாந்தசூளாமணிக் கின்னுரைபுகன்றோன்
கோவடிவா யெழுந்தருளி யன்பர்க்கெல்லாங்
குலவுமொரு நொடியில்பரஞானமோனச்
சேவடிவாய்த் திடவளிக்கும் பிறைசைமேவுஞ்
செம்மலரு ணாசதேசிக னெங்கோனே.

இ ஃ து.

இந்நூலுரையாசிரியர் மாணாக்கராகிய

ஈ சூர்கணக்கு - சச்சிதானந்தப்பிள்ளையியற்றியது.

சந்தனவெற்புறைமுனிவன் றனைநிகருஞ் சிவப்பிரகாசைய னோதுஞ்
செந்தமிழ் வேதாந்த சூளாமணிக்கின் னுரைபுகன்றோன்சிறியனேனுட்
பந்தமற வீட்டிமலர்ப் பதஞ்சூட்டியொருமொழிப்பா லூட்டியாண்ட
நந்தலில்சீர்க் குருபரனற் பிறைசையருணாசலமெய்ஞ்ஞானவேந்தே.

இ ஃ து.

இந்நூலுரை யாசிரியர்மாணாக்கரும் ஆயுள்வேத பண்டிதருமாகிய

செ-வெங்கடாசலமுதலியாரியற்றியது.

மட்டறுவிதழியிள மதிமௌலியோனென மதிக்குஞ் சிவப்பிரகாச வள்ளறிருவாய்விண்ட வேதாந்தசூளாமணிக்கு நவநவமதாக, விட்டறுச் சொன்னயம் பொருணயம் விளங்கிடவிரித்துரை செய்தச்சிலிட்டான், வினையோட்டியடியிணையென் முடிசூட்டி மலவிருளை வீட்டியுயர் தொம்பதத்தின், முட்டறுபந் தமற் றருளாதன் முடிவென்று முன்னருந்தற்பதத்தின் முன்னதிட் டானமாமுதலென்று மசிபதநன்முதல்சிவத்தங்கமாதல், சிட்டரு முடிவென்று மாகமஞ்சுருதியுப நிடதமாவாக்கியததாற், றெருட்டியெற்கருள்செய்பிறை யாற்றினருணாசல சிவாதித்தனன் புகழ்ந்தே.

இ ஃ து.

புரசை - முருகப்பவுபாத்தியாயரியற்றியது.

அருண்மலிதில்லைப் பொதுச்சுடரெறிவேதாந்தசூளாமணி யதற்கீகாரர், பொருண்மலியுரைசெய் தெழுதருமச்சிற் பொலிவுறப்பதித்தனன் புதிதா யிருண்மலிமலம்போய் மும்முத லொன்றாயியற் பிறையாற்றினின்றிலகுந், தெருண்மலி யருணசலனெனு ஞானதேசிகன் கருணையினுமால்.

இஃது - தென்பயறு.

இராமசுவாமிநாயகரியற்றியது.

அருமைசேர்நான்காஞ் சாதனத்தோர்கட் கமைத்தசிற் சுகந்தருவாழ்வின், மருவிடவியற்றும் வேதாந்தசூளா மணிக்கரும்பத மநுபவமுந், தரவுரைபுனைந்தா னிந்திரபீடத் தனிமரபினில்வரு நாகைக், குருபரனன்பு கொண்டெழிற்பிறைசைக் குலவருணசலகுருவே.

இ ஃ து - வளவநல்லூர்குமாரபுரி

நீலம் - வீராசுவாமிப்பிள்ளையியற்றியது.

வெண்பா.

ஆசாபா சங்க ளனைத்துமற வேகெடுக்குந்
தேசார் சுகங்கொடுக்குந் தென்பிறசை - நேசானு
பூதியரு ணசலநற் பூமானிந் நூலதனுக்
கோதியமா நன்கா ருரை.

இ ஃ து - விக்கிரபாண்டி

காளத்திரெட்டியா ரியற்றியது.

நலந்திகழுங் கவின்றுறைமங்கலத்தின்மேவு ஞானசிவப்பிரகாச நாதனெங்கோ, னிலந்திகழ விருமிகுந்தகல்விஞான நிறைவறிஞருணரமீ மாஞ்சைதன்னைப், பொலந்திகழத் தமிழ்ப்பாவாற் புகன்றானிந்தப் புநிதநூலரும் பொருளைப் புவியிலியாரும், வலந்திகழக்கொண்டுணரவுரையிட்டானல் வளமலிதென் பிறைசையின்கண்வருமெங்கோனே.

இ ஃ து.

வளவநல்லூர் குமராபுரி

செங்காடு - கிருஷ்ணப்பசெட்டியாரியற்றியது.

திருமலியிந்திர பீடநன்மரபிற் றிகழ்கரபாத்திர தேசிகன்றன், றேசருள்பெற்று நாகையின்மருவுந் தெளிவருணச லேந்திரன்றன், றருமலிபுரைபேரருளினைப்பெற்றதண்பொழிற்சூழுநற்பிறைசை, தன்கணோங்கருணசலசிவசொருபன் றகுந்துறைமங்கலத்துறையும், வரமலிவீரசைவமெய்ஞ் ஞான வாழ்வருள் சிவப்பிரகாசன், வகுத்தமீ மாஞ்சையுத் தரபாக மருவறிவாஞ் சிந்தாமணிக்குக் கரமலிநெல்லி யங்கனிபோலக் கருதுலகுயிர்பரமமை யுங்கா னலினீராய்க் கண்டுலகுய்யக் கனபொருளதை விரித்தனனே.

இஃது.

ஷை யூர்.

கஞ்சம் - சீனிவாச உபாத்தியாயரியற்றியது.

உலகுபுகழ் துறைமங்கலத்தில்வரு மெய்ஞ்ஞான வுருவுகொண்டினி தெழுந்த, வுயர்சிவப்பிரகாசதேசிகனுரைத்த வேதாந்தசூளாமணிக்கிங், கல கில்சொன் முடிபுபொருண் முடிபுதமதநுபவமதிற் றோன்றவேவைத்ததி, னரிய பொருணிலவு பண்டிதபாமராளுணர்ந் தானந்தமருவிவாழ்க, விலகு மவதாரிகை பதப்பொருட் பதசாரவெண்ணரியதாற்பரியமைந், திலக்கண மொடதிவிசே டமதாகவருள் சுரந்தினிதினல்லுரையருளினு, னலமலிசெ ய்மலர்வாவி பூம்பொழில்குலாவுவள நண்ணுபிறைசையின்மருவுமெய்ஞ், ஞானவருளேவடிவமான வருணாசலவதீதசிவகுருநாதனே.

இஃது - ஷை யூர் - பொய்கைப்பாக்கம்.

அப்பாசுவாமி யுபாத்தியாயரியற்றியது.

மலமறப்பே ரருடரும்வே தாந்தசூளா மணியெனவே யொளிசிறந்த மாசினூற்கு, நலமுறுமெய்ஞ்ஞானியர் சுவானுபூதி நண்ணவு மென்போலி யருநசையற்றின்பம், பலமுறவு முரைவிரித்தா னமரர்யாரும் பரவு மிந்திர பீடமரபின்வந்த, பொலமுறுநற் பிறைசையின்கணருளார்ஞான போதவரு ணாசலமெய்ப் புனிதன்மாதோ.

இஃது - புதுவை - செந்தமிழ்ப்புலவர்

வெ - பொன்னியா ரியற்றியது.

வேதவேதாந்தங்க டமைவிளக்கும் வியாதனென விமலஞான, போத மூலகடைந்துய்ய வுத்தரமீமாஞ்சையிஞெண் பொருளேயோர்ந்தே, யேத மில்சீர்ச்சிவப்பிரகாசன் புகல்சூளாமணியி னியல்கடோன்ற, வாதரவாற் பிறைசையரு ணாசலன்செய்யுரைக்கிணைவேறுறையற்பாற்றே.

இஃது.

வளவனூர் - சின்னுதுசெட்டியார் - குமாரரும்

செங்காடு - கிருஷ்ணப்பசெட்டியார் - மாணாக்கருமாகிய

வீரபத்திர செட்டியாரியற்றியது.

மன்புவியோ ரெளிதுணர்ந்து பவநீங்கிமெய்யறிவின்மயமாம்வண்ண மின்புறுவேதாந்த சூளாமணியி னுரைதெளிவாயெடுத்துரைத்தா, னின்மல மாம் பரப்பிரம வருளொளிமய படிவமென நேர்ந்துவந்த, சொன்மறை யோர் மகம் வளர்க்கும் பிறைசையருணாசல தேசிகத்தூயோனே.

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

உ

ஓம்.

சிவமயம்.

# வேதாந்தசூளாமணி.

மூலமு முரையும்.

சிவமெனத்துதிசெயப்
பவம்பொடிபடுமே.

## தற்சிறப்புப்பாயிரம்.

விநாயகஸ்துதி.

விருத்தம்.

நாதாந்தப் பேரொளியாய் நவையற் றெங்கு
நண்ணுபரி பூரணமாய் நடுவாய் நின்ற
போதாந்தம் பெற்றவருண் மதத்தை வீசும்
பொற்களிற்றி னடிவழுத்திப் புலன்க டம்மின்
பேதாந்த மகற்றிநிர திசயா நந்தப்
பெற்றியுல கடைந்துய்யப் பெருமை யோங்கும்
வேதாந்த மரபினிலே விளக்கு மொண்வே
தாந்தசூ ளாமணியை விரித்தல் செய்வாம்.

இதுவுமது-வேறு.

மோன பூரண வாரியின் மூழ்குமெய்ஞ்
ஞான யோகிய ருள்ளமுந் தில்லையு
மான கற்பகத் தானைப தாம்புயத்
தேனை யுண்டுரை செப்புது மொப்பவே.

சபாபதிதுதி கட்டளைக் கலித்துறை.

திருவளர் தில்லைச்சிற் றம்பல மேவிய சிற்சுடரை
மருவள ரானந்த மஞ்சரி சூட்டி வணங்குதுமால்
கருவளர் துன்பங் கடக்கவே தாந்தசூ ளாமணிக்கட்
டெருள்வள ரப்பொருள் பூரித் துலகுய்யச் செப்புதற்கே.

இதுவுமது.

பொன்னம் பலவனங் கம்மூகங் கண்முகம் புண்டரிகப்
பொன்னம் பலவன மாயமைந் தாலெனப் பொங்குதில்லைப்
பொன்னம் பலவன மோடு சடாடவிப் பொற்புமிகும்
பொன்னம் பலவனென் றன்னுள மாயுறை பூரிப்பனே.

அநுவிறைவணக்கம்.

விருத்தம்.

சத்தியவிங் கிரபீடத் தலைமையாங் கரபாத்திர சத்தாமாத்திர
வித்தகனு தீனமர பினினிலகு மடிகடமை விடாதமோன
சித்தகுண சிவோகமாய்த் திருநாகைப் பதியுளெழு சிவக்குன்றாய
நித்தியவரு ணாசலதே சிகனையுளத் திருத்தியுரை நிறுத்துவாமால்.

அவையடக்கம்.

வேதமுப நிடதமுத லாகவொரு தொன்னூலின் விளங்கு ஞானர்
நீதமர புணரவே தாந்தசூ ளாமணிக்கு நிலைநின்றோங்க [வேந்தர்
வோதுமுறை நவமணியைக் குரவர்புனை யினுமெள்ளா துலகின்
சோதிமுடிக்கணிவதற்கா சிப்பதுபோற் றொல்லறிஞர்சூழுவாரால்.

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

அகிலகாரணம் ... ௭௪
அங்கிமகுபதி ... ௧௦௪
அண்ணணிருமி ... ௧௧௭
அதனது ... ௨௦௫
அத்தியா ... ௫௦
அந்தவவி ... ௧௩௧
அப்பாற் ... ௯௭
அப்பிரம ... ௧௦
அப்பெரும் ... ௧௦௧
அப்பொரு ... ௧௧௬
அருமறை ... ௧௧
அருமையெனு ... ௧௬௮
அருவிரா ... ௭௧
அவித்தை ... ௯௮
அவைகளுப ... ௧௭௧
அவ்வகிலங் ... ௧௬௭
அறியவுணர் ... ௨௬
அறிவுடையோ ... ௨௦௨
அறைதலுறு ... ௧௫௦
அறைந்தநுகர் ... ௨௦௭
அனுபவித்தல் ... ௧௨௭
அனையதொரு ... ௯௦
அனையவன ... ௨௫
அனறி ... ௧௭௮
அன்னமொடு ... ௧௩௩
ஆகமுதலன ... ௫௧
ஆங்காரான்மா ... ௧௨௨
ஆதலினலா ... ௫௫
ஆத்தமுடன் ... ௧௭
இகலிலா ... ௧௫௬
இக்கரண ... ௧௦௨
இசைப்பிலது ... ௧௪௨
இச்சையுட ... ௨௧௯
இத்திறத்தீசன் ... ௭௭
இத்திறமிங் ... ௧௩௯
இந்தவுடம் ... ௧௭௫
இந்துவினை ... ௮௭
இந்நிலனிற் ... ௩௦
இப்பரிசு ... ௨௨௦
இருந்தவகங்காரம் ... ௧௩௪
இருமகதத்துவந் ... ௯௯
இறைவனற் ... ௧௧௪
ஈங்குமன ... ௧௦௯
ஈசனிருமித ... ௧௧௫
ஈசனென்றிடு ... ௮௪
உடம்பினை ... ௧௮
உண்டினை ... ௧௮௯
உரைத்தவிரண் ... ௯
உரைத்தவைதா ... ௬௪
உரைத்தவையுட் ... ௧௪௯
உரைப்பருஞ் ... ௧௦௦
உலகநிலை ... ௨௧
உலகவழக் ... ௨௧௮
உலகிறந்த ... ௨௨௭
எல்லாவாழ் ... ௧௯௮
என்றுமெவ் ... ௨௨௮
ஏனையவோ ... ௧௭௦
ஒருமலர்க்கு ... ௧௬௩
ஓங்காராதி ... ௧௭௮
ஓர்வடிவாகி ... ௭௬
கங்கையினில் ... ௧௫௨
கடத்தினுக்கு ... ௧௭௩
கடத்தொடு ... ௧௬௫
கடந்துநதி ... ௧௪௬
கடமுதலா ... ௨௮
கடாதி ... ௧௯௦
கந்தமுதலா ... ௧௦௮
கருத்தனுமொண் ... ௧௪௩
காய்ந்துள ... ௬௯
குறிகளோர் ... ௨௧௪
குறையகலும் ... ௧௮௬
கூறுமிவை ... ௧௭௨
கொன்மக ... ௯௯
சங்கமறு ... ௧௯௨
சங்கைநவ ... ௧௪௬
சச்சிதாநந்த ... ௧௯௧
சத்துவகுண ... ௧௦௧
சமைதமை ... ௧௬
சாதகர்களா ... ௨௨
சாற்றரியசீவ ... ௬௬
சாற்றரியசுவே ... ௧௮௭
சாற்றரியவச் ... ௮
சாற்றின்வயி ... ௧௦௭
சித்திரப்பட ... ௭௩
சீர்கொண்ட ... ௨
சீவசேதன ... ௯௩
சீவனென்றிடு ... ௮௩
சீவனேடீசன் ... ௫௭
சீவன்முத்தர் ... ௨௧௨
சீவபரவிசாரணை ... ௧௧௮
சுருதிசித்தமா ... ௧௧௨
சுருதியினுளேக ... ௪௭

சூசகனும் ... ௨௩
சூதகாதிக ... ௧௬௯
சூத்திரான்மக ... ௭௨
செஞ்ஞானி ... ௨௦௫
செப்பரிய ... ௧௭௫
சொற்பன ... ௧௩௮
சொற்றவ ... ௧௩௦
ஞானநிலை ... ௧௯௬
ஞானரக்கை ... ௨௧௩
தக்கதேகான்ம ... ௧௮௫
தக்கமாஞா ... ௧௯௪
தடத்தினுயர் ... ௨௧௦
தத்துவஞானத்திற்கு ௧௯௯
தத்துவஞானத்தினன் ௨௨௨
தருக்கவனு ... ௧௭௭
தருணமா ... ௧
தற்பதத்தினுக்கு ... ௧௫௧
தற்பதவாச் ... ௧௫௫
திருந்திய ... ௪௪
தீவிரமந்த ... ௧௧௯
தும்மலுடன் ... ௧௦௬
துரியநிலை ... ௧௪௪
தூயதத்தொ ... ௧௬௨
தெரித்தகாரி ... ௧௧௧
தெரிவரிய ... ௨௧௫
நடுக்கமறு ... ௧௩௭
நாஞரிப் ... ௨௪
நித்தியமான் ... ௧௫
நியமசத்தி ... ௮௦
நிரவயவ ... ௪௫
நின்றிதயந் ... ௧௦௫
நீங்கியவிகார ... ௭௯
நீர்விழுந் ... ௭௦
நீலகுண ... ௧௩௫
நெருப்பினொடு ... ௧௨௧
பகர்ந்தவுயிர் ... ௧௮௧
பகற்பொழுது ... ௨௯
பஞ்சபூத ... ௧௨௫
பந்தமவை ... ௧௮௩
பரமமாஞா ... ௨௦௪
பற்றியவான் ... ௧௨௦
பின்னமோடு ... ௯௧
புகலுலகாயுத ... ௩௬
புத்தியிந்திரியங் ... ௧௦௩
புலனில்கண ... ௯௬
புன்னெறி ... ௧௪௩
பெருந்தூல ... ௧௨௪
பெற்றவுயர் ... ௨௭௦
பெற்றவொரு ... ௬௭
பொய்ப்பொருள் ... ௧௧௩
பொய்யாகிச் ... ௯௫
போற்றிறை ... ௮௦
மடிவிடயா ... ௧௮௧
மண்ணுலகில் ... ௨௨௧
மதித்தன் ... ௫௩
மருவலுறு ... ௧௮௮
மறைப்பகலு ... ௨௧௬
மன்றசுழுத்தி ... ௧௩௨
மாதுமுதல் ... ௫௮
மாயைவரு ... ௯௬
மிகுமரப் ... ௮௨
மித்தையெனு ... ௧௬௫
மூத்திவிருப் ... ௨௩௦
மூற்றலுறு ... ௨௦௧
முன்னமொழி ... ௧௫௩
மூடமொடு ... ௧௯
மேய்ந்துதிரி ... ௧௨௬
மைந்தர்முத ... ௧௨௩
வடிவுறு ... ௮௫
வந்தணை ... ௨௧௭
வந்தமய ... ௨௧௦
வந்துசிறு ... ௨௦௦
வாதராய ... ௨௨௪
வாய்த்த ... ௧௨
விடயங்க ... ௨௦௯
விடையமது ... ௧௪
விண்ணின்மலர் ... ௯௨
விரிஞ்சனே ... ௭௫
விரிந்துபட ... ௯௪
விரிந்தவிதி ... ௧௪௭
விரியுமுல ... ௫௯
விருத்தமறு ... ௧௫௪
விருத்திபரி ... ௧௧௨
விலங்கு ... ௧௨௮
விளங்குறு ... ௮௮
விணையிரண் ... ௨௩௦
வெப்பினே ... ௧௪௦
வெம்மை ... ௫௪
வெயிலினி ... ௧௩௬
வேண்டும் ... ௧௮௩
வேதமுத ... ௨௩௯
வேதமொரு ... ௩
வேதவியா ... ௧௨௫

# முகவுரை.

இந்நூலாசிரியர் தனது சுவானுபூதிப் பிரத்தியட்சம் எவர்க்கும் எளிதில் விளங்குமாறு கருதி யிந்நூலியற்றினாரேனும் ஒருத்தி, தன்சிறுவனது பிணி தணிப்பான்வேண்டித் தீம்பண்டங்காட்டி யவுடதந்தந்து அந்நோய் தணிக்குமாறுபோன்று ஞானகாண்டிகளன்றியேனையோரு மிதனையேற்க இயற்றமிழ்த்திறத்தைக்காட்டி யதனோடு ஏகமேவாத்வைதம் பிரம்மோக மென்பதையுஞ் சுருங்கச்சொல்லி விளங்கவைத்தனர். இதனைவேண்டுவோர் பாஷைவலியையுந் தனதெதார்த்த நிலைமை வலியையுந் தரற்பாலதாதலின், இதனை வரையாதேற்றுத் தெளியக்கடவர். பாஷையாவது:—எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம், தருக்கம் என்னும் இம்முகத்தால் இயைவது. இஃதின்றியக்கால் இந்நூலாசிரியரது முக்கியகருத்து சற்றும் விளங்காது. இவரது முக்கிய கருத்தாவது:—அறிவறியாமைப் பகுப்பைப் பற்றிப் பிரதிவாதிக்கும் பேதாபேத விலக்கணங்கள். இவ்விலக்கணங்கள் தானே தானாதற்கியைந்த நெறித்தாதலின், அறிவுடையோர் இதனை வரையாது கொள்வர் தன்னிலக்கண மாதலினென்க. விரிக்கிற் பெருகுமாதலிற் சுருக்கி யுரைத்தாம்.

# புத்தகவிளம்பரம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| பிரபுலிங்கலீலை உரையுடன் ... ... ... ... | 2 | 8 |
| கைவல்லிய நவநீத விருத்தியுரை ... ... ... | 1 | 4 |
| வேதாந்த சூளாமணி விருத்தியுரை (2வது பதிப்பு) ... | 1 | 4 |
| ஷை திக்காகிதம் ... ஷை ... ... | 1 | 8 |
| தத்துவநிஜாநுபோகசாரம் ... ... ... ... | 1 | 0 |
| வாசுதேவமனனம் ... ... ... ... | 0 | 14 |
| சர்வமதசித்தாந்த விளக்க வினாவிடை ... ... ... | 0 | 12 |
| திருக்குதிருசிய விவேகம் உரையுடன் ... ... ... | 0 | 12 |
| உத்தமவாதம் ... ... ... ... | 0 | 10 |
| ஷை காலிகோ பயிண்டு ... ... ... ... | 0 | 12 |
| பிரத்தியட்சானுபூதிவிளக்கம் ... ... ... | 0 | 8 |
| ஷை காலிகோ பயிண்டு ... ... ... ... | 0 | 10 |
| வேதாந்த இலக்கணம் ... ... ... ... | 0 | 8 |
| சசிவன்னபோதம் உரையுடன் ... ... ... | 0 | 8 |
| தசகாரியமகாவாக்கியம் உரையுடன் (2-வது பதிப்பு) ... | 0 | 8 |
| ஜீவகாருண்ய விளக்கம், சுவானுபூதிவிளக்கம் ... ... | 0 | 6 |
| சொரூபசாரம் உரையுடன் ... ... ... | 0 | 6 |
| சத்தப்பிரகரணம் ... ... ... ... | 0 | 6 |
| உபநிடத விருத்தியுரை ... ... ... ... | 0 | 5 |
| அதார்த்தவாதம் ... ... ... ... | 0 | 4 |
| ஞானவாசிட்டத்திரட்டு ... ... ... ... | 0 | 3 |
| சுகர் கைவல்லியம் ... ... ... ... | 0 | 2 |

விற்கிறவர்:
ப. முத்துகிருஷ்ணரெட்டியார்,
55, விநாதீர்த்தமுதலி தெரு,
புரசைவாக்கம், சென்னை.

} வெளிநாட்டார் V. P. Post மூலமா யிவரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

சென்னை:
டிசம்பர்மீ
1897ளு

} ஈசூர்-சச்சிதாநந்தசுவாமிகள் தருமபரிபாலன சபையார் உத்தரவின்படி,
ப. முத்துகிருஷ்ணரெட்டியார்,
காரியதரிசி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வேதாந்தசூளாமணி.

(அவதாரிகை.)

கணேசவணக்க முணர்த்துகின்றது.

*தருணமா துமைமுகத் தாம ரைக்கெழு*
*மருணனு மெனவுதித் தடியர் பாற்புரி*
*கருணைமா மதமெனக் காட்டு மாமுகன்*
*சரணவா ரிசமலர் தலையிற் கொள்ளுவாம்.*

(இதன் பொழிப்புரை) "*தருணமா துமை முகத் தாமரைக் கெழு மருணனுமென வுதித்து*" எ. து. தருணங்கண் டடியருக் கருள் புரிபவளாகிய வுமாதேவியின் முகமென்னுந் தாமரை விகசிதமாதற் குதிக்கும் பூதசூரியன்போல அடியர் சிந்தையிலுதித்து, "*அடியர் பாற்புரி கருணைமா மதமெனக் காட்டுமாமுகன்*" எ. து. அவ்வடியவரிடத்துப் புரியு மருளையே மிக்க மதம்போலக் காட்டும் யானைமுகக் கடவுளின், "*சரணவாரிசமலர் தலையிற் கொள்ளுவாம்*" எ. து. பாத மென்னுந் தாமரை மலரை யெமது சிரசிற் சூடிக்கொள்ளுதும் என்றவாறு.

*தருணம்அவசரம்; முகத்தாமரை, சரணவாரிசமலர் உருவகம்; அருணனு மெனவென்பது உவமை; கருணையை மாமதம்போலக் காட்டல் ஆரோபம்; உதித்தவிடத் தாண் மகனெனக் கேட்டுழி அகமகிழ்தலோடு முக மலர்ச்சியு மெழல் பெற்றவட் கியல்பாதலின் 'தருணமாதுமை முகத்தாமரைக்' கெனவும், தாமரை மலர்தற்குச் சூரியோதயம் வேண்டுமாறு போன்று ஈன்றாள் முகமலர்தற் காண்மக னுதித்தல் வேண்டுதலின் 'முகத்தாமரைக்கெழு மருணனுமென வுதித்' தெனவுங் கூறினார். பின்னுளோர் வழி படுதற்கு மதந் தழுவி மாமுகனென்றார். தாமரை மலரைத் தாமரையென்றது ஆகுபெயர். மாமுகன் நிர்த்தேசம், சரணம் வாழ்த்து, தலையிற் கொள்ளுதல் வணக்கம். இவற்றை வட நூலார் மங்களாசரணை யெனவும், தென் னூலார் கடவுள் வாழ்த்தெனவுங் கூறுப. பொதுப்பாயிரமாதலின் பொருளேற்கோர் தொடர்பா விளங்கற்குப் பொழிப்புரை யாக்கினும். என்னை? "பொழிப் பெனப் படுவது பொருந்திய பொருளைப் பிண்டமாகக் கொண்டுரைப் பதுவே" என்று ரறிஞர். சத்தி யெனக் காண்டற்கு மாதுமை யென்றதனால், சிவத்தைச் சத்தனாகவும், உதித் தென்றதனால் கணேசனை மகனாகவுங் கொள்க.*

இது சைவமத மரபாதலினானும், அம்மதத்திற் றானுதித்தலினானும் இங்ஙனங் கோடற் கியைந்தது. என்றாலும் அறிவு சத்தன், அறியாமை சத்தி. இவ்விரண்டு மிறந்த விட மானந்த மென்ப திவர் கருத்து. ஆகவே, சச்சிதானந்த வொருமையெனப் பெற்றாம். இவ்வொருமையே இவரது வணக்கமெனக் கண்டாம். (௧)

---

# சிறப்புப்பாயிரம்.

(அ. கை.)

மூற் கவியிற் கடவுள் வணக்கங் கூறி, இக்கவியில் அதன தருளாற் றானியற்றப்புகும் நூற்பெயரும், அது வாதவரலாறும் இனையவென வுணர்த்துகின்றது.

வேறு.

சீர்கொண்ட வருமறையின் முடிமணியைத் தெய்வ
சிகாமணியை யடியவர்தங் கண்மணியை மாயைப்
பேர்கொண்ட விருளிரிக்குந் தினமணியை முக்கட்
பெருமணியை யகத்தினுக்கோர் விளக்காக விருத்தி
யேர்கொண்ட விவேகசிந்தா மணியெனுநூ லதனு
ளெடுத்தியம்பும் வேதாந்தப் பரிச்சேதப் பொருளை
நேர்கொண்ட தமிழ்விருத்த யாப்பதனாற் றெரிய
நிகழ்த்துவன்வே தாந்தசூளாமணியென் றொன்றே.

(இ. ரை.) "சீர்கொண்ட வருமறையின் முடிமணியைத் தெய்வசிகாமணியை யடியவர்தங் கண்மணியை" எ. து. சான்றோரால் புக ழமையப்பெற்ற அரிய நான்கு வேதங்களின் முடியில் விளங்கு மணிபோல்வதை, தெய்வங்களுக்கெல்லாஞ் சிகாமணி போல்வதை, அடியவர்களுக்குக் கண்மணிபோல்வதை, "மாயைப் பேர்கொண்ட விரு ளிரிக்குந் தினமணியை முக்கட் பெருமணியை யகத்தினுக் கோர் விளக்காக விருத்தி" எ. து. மாயையெனப் பெயர் கொண்ட விருளைக் கெடுக்கும் ஞான சூரியன்போல்வதை, முக்கட் பெருமானாகிய சிறந்த மணிபோல்வதை, எம தகத்தினுக் கென்று மோர்விளக்காக விளங்குமாறிருத்தி, "ஏர்கொண்ட விவேகசிந்தாமணியெனுநூலதனு ளெடுத்தியம்பும் வேதாந்தப் பரிச்சேதப்பொருளை" எ. து. சத்துக்களால் மகிமைபெற்ற விவேகசிந்தாமணி யென்னு மாரியநூலின்கண் சத்துக்கள் தமது சுவாநுபூதியில் விளைந்தவா றெடுத் தியம்பிய வேதாந்த பரிச்சேதமென்னுஞ் சருக்கத்தி னர்த்தத்தை, "நேர்கொண்ட தமிழ்விருத்த யாப்பதனாற் றெரியநிகழ்த்துவன் வேதாந்தசூளாமணியென்றொன்று" எ.து. மூரணுறாதமைந்த தமிழ்க் கவி சம்பந்தத்தா லெவர்க்குந் தெளிய விளங்கு

மாறு வேதாந்த சூளாமணி யென்று பெயர் கொடுத் தோர் நூலியற்றுவன் எ. று.

ஏ அசை. இங்கே மணியெனக் கூறிய வைந்தும் உவமை யாகுபெயர். சைவமதத்திற் றனக்குண்மைவிளங்கிய தென்பதைக் குறிக்க முக்கட்பெரு மணியென்றார். தெய்வ சிகாமணி யென்றது மேல் கீழொப் பின்மையைப் பற்றி. இங்கே கண்மணி யென்றது கண்ணொளியை. மாயைப் பேர் கொண்ட விருளிரிக்குமென்றதனால் தினமணியை ஞானசூரியனென்றும். அருமறையின் மணி யென்றது முடியென்ற விதப்பால் இலக்கியார்த்தமெனக் கண்டாம். சொப்பிரகாசமெனக் குறிக்க அகத்தினுக் கோர் விளக்காக விருத்தி யெனப்பட்டது. விருத்தங்களாற் றொடுக்கப்படுவது யாப்பாதலால் விருத்த யாப் பெனப்பட்டது. பெயர் தந் தென்பது சொல் லெச்சம். ஓர் நூலே யாதலால் ஒன்றெனல் அளவை யாகுபெயர். சூடாமணி யெனினுஞ் சூளாமணியெனினு மொக்கும். சூடை சிகை எனவே, சிகாமணியென் றாயிற்று. மாயை யிருள் உருவகம். தேகாதிப் பிரபஞ்ச மனுக்குழூச் சையோக மெனற்கியைய அதனை யோராது தமக்கியைந்தவா றெவரும் அதிஷ்டான மெனக் கருதி: உறவு, அயல், சத்துரு, மித்துருவெனக் கற்பித் தவல மாதலாரோபமன்றோ? இங்ஙனமாதல் புத்திவிகற்பமன்றோ? இந்தப் புத்திவிகற்பமே மாயையெனற்கு மூர ணென்னே? இந்த மாயையை யிருளென் றுருவகிக்கலாகாதோ? ஆகாதெனின், தன தெதார்த்த நவ நவமான அனுபூதி நிலைகளை மறைத்தது மாயையாதலி னிதனை யிருளெனல் பொருந்து மென்க. (௨)

(அ. கை.)

முன்னர்க்கூறிய வேதாந்த மினையதெனத் தெரிவிப்பான்வேண்டி வித்தைக ளித்துணைய வெனவும், அவற்று ளொன்று இரு கூறதா மெனவும், முதற்கூறு இத்துணைத்தாகி யின்னபெயர்த்தாமெனவும் இருப்பதை யுணர்த்துகின்றது.

வேதமொரு நான்குமா றங்கமுநன் னியாய
    மீமாஞ்சை யொடுமிருதி புராணமுமீ ரேழா
வோதலுறும் வித்தைகளா மிவற்றுண்மீ மாஞ்சை
    யுயர்ந்ததா யைந்நான்கத் தியாயமா யருத்த
பேதமுற விருகூறா மவற்றுண்முதற் கூறே
    பிறங்குமருட் சைமினிசூத் திரரூப மாகிப்
போதுமீ ராறத்தி யாயமாய்க் கருமப்
    பொருளுணர்த்திப் பூருவமீ மாஞ்சையெனப் படுமால்.

(இ. ரை.) "வேத மொரு நான்கு மாறங்கமு நன்னியாய மீமாஞ்சை யொடு மிருதி புராணமு மீரேழா வோதலுறும் வித்தைகளாம்" எ. து. நான்கு வேதங்களும், ஆறங்கங்களும், நல்ல ஞாயமும், மீமாஞ்சையும், பதி

னெட்டு ஸ்மிருதிகளும், பதினெண் புராணங்களு மெனப் பதி னன்காகச் சொல்லப்பட்டிருப்பவை வித்தைகளெனப்படும்; "இவற்றுள் மீமாஞ்சை யுயர்ந்ததா யைந்நான் கத்தியாயமா யருத்தபேதமுற விருகூறும்" எ. து. இப்பதினான்கனுள் மீமாஞ்சை யெனப்படுவது எப் பொருளினுஞ் சிறந்ததாயும், இருபதத்தியாயமாயும், கன்மம் ஞானமென அருத்தபேதந் தோன்ற விரண்டு பாகுபாடதாயு நிற்கும்; "அவற்றுள் முதற்கூறே பிறங்குமருட் சைமினி சூத்திரரூபமாகிப் போதுமீரா றத்தியாயமாய்" எ. து. அந்தக் கன்மம் ஞானமென்னு மிரண்டினுள் முதற் கூறே சிறந்த அருளை யுடைய சைமினி யென்பவராற் சொல்லப்பட்ட சூத்திரரூபமாயும், அதற்குத் தக்க வாறு செல்லும் பன்னிரண்டத்தியாயமாயுநின்று, "கருமப்பொருளுணர்த்திப் பூருவ மீமாஞ்சையெனப்படும்" எ. து. கன்மத்தைப்பற்றிப் பிரதிபாதிக்கும் பொருளினையதென வுணர்த்திப் பூர்வமீமாஞ்சையென் றறிஞரா லிப்பெயரேற்கப்படும் எ. று.

ஆல் அசை. நான்கு வேதங்களாவன:—ஸ்வயம்பு வெனவும் ஈசுரனு லுண்டானதெனவுஞ் சொல்லா நின்ற இருக்கு, யசுர், சாமம், அதர்வண மென்பனவாம். இவைகள் விதி வாதம், அர்த்த வாதம், மந்திர வாதம், நாம தேயமென நான்குவிதமாய்ச் சமஸ்த கன்மங்களையும் போதிக்கும்.

இவற்றுள் இராசாக்கினையைப்போலப் புருஷரை நிஷேத கன்மங்களைச் செய்யாமற் சற்கன்மமேசெய்ய விதிப்பதே விதிவாதமெனவும், பட்டுக்களைப்போல வேதார்த்தத்தின் மகிமையைத் துதிப்பதே அர்த்தவாதமெனவும், ஆசிரியனைப்போலச் செய்யத் தக்கது இது வெனக் காண்பிப்பதே மந்திரவாதமெனவும், ஜநநீ ஜநகரைப்போல யாகாதிகளுக்குப் பெயரிடுகிறதே நாமதேய மெனவுஞ் சொல்லும் இந்நான்குங் கன்ம காண்டப் பிரதிபாதிகமாம்.

மேல் ஸ்ரீ ருத்திரம், பிரகதாரண்ணியம், சுவேதாசுவதரம், கைவல்லியம், காலாக்கினி, கடவல்லி, காத்தியாயனம், பிரமம், நாராயணம், அங்கிசம், பரமாங்கிசம், பாஸ்கரம், பிரமபிந்து, ஆருணி, அமிர்தபிந்து, பஞ்சுவபஞ்சம், பிரமசாபாலம், தேசோபிந்து, வாரஸ்யாநீயம், போதாயநீயம், ஆஸ்வலாயநீயம், சாங்கியாயநீயம், வாஸ்ராயநீயம், சௌனகீயம், சிவசங்கற்பம், சிரவணம்,பாராகம், கிம்புரோடியம், மாண்டூகம், முண்டிரம், மௌண்டிரம், தைத்திரியமெனச் சொல்லும் இம்முப்பத்திரண் டுபநிஷத்துக்களும், ஞானுங்கமான பஸ்ம உருத்திராக்ஷாதிகளும் ஞானகாண்டப் பிரதிபாதிகமாம்.

உபவேதங்களாவன:—ஆயுர்வேதம், அர்த்தவேதம், தனுர்வேதம், காந்தர்வ வேதமென நான்காம். இவற்றுள் வியாதி நிதானமும், வியாதிச் சின்னமும் அறிந்து மந்திராவுஷதாதியான சிகிச்சையினு லாயுராரோக்கியாதிகளைச் சொல்லுவதே ஆயுர் வேதமும், தட்சணை ஆச்சிய சரு உபகாராதிகளை நிண்ணயம் பண்ணுவித்துத் தருமாதி சதுர்வித புருஷார்த்தத்திற்குஞ் சாதனமாயிருப்பதே அர்த்தவேதமும், சத்துரு ஜயார்த்தமாகிய மந்திராதிப்

பிரயோகங்களைச் சொல்லுவதே தனுர் வேதமும், சாம வேதாதிகளால் ச, ரி, க, ம, ப, த, நி என்னுஞ் சத்த சுர கீதப் பிரபந்தங்களை விவகரிப் பதே காந்தர்வ வேதமுமாம்.

ஆறங்கங்களாவன:—இவ்வேதங்கட்குப் பாத, அஸ்த, முக, ஆக்கிராண, நேத்திர, சுரோத்திரங்கள்போலச் சந்தசு, கற்ப, வியாகரண, சிட்சை, சோதிஷ, நிருத்தங்களாம். இவற்றுள் மந்திராதிகளுக்குச் சிருட்டி முத லான அட்சர கணிதங்கள் சொல்லுவதே சந்தசும்; ஆசுவலாயநீய, போதாய நீய, ஆபஸ்தம்பநீயாதி சூத்திரரூபத்தி லெஞ்ஞப் பிரயோகாதிகளுக்குக் கிர மஞ் சொல்லுவதே கற்பமும்; வைதிக சப்தார்த்த சித்தி சமர்ப்பிப்பதே வியாகரணமும்; உதாத்த, அனுதாத்த, சுவரித பிரசயங்களென்னுஞ் சதுர் வித ஸ்வர கரண பூருவமான பதக் கிரம வேதாத்தியாயனாதிகள் சொல்லு வதே சிட்சையும்; லக்கினம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் இவை களினால் வைதிக கன்மங்களுக்குக் காலந் தெரிவிப்பதே சோதிஷமும், வைதிக சத்தத்திற்கு நிர்வசனம் நியமிப்பதே நிருத்தமுமாம்.

இனி மீமாஞ்சை, நியாயம், ஸ்மிருதி, புராணங்கள் நான்கு வேதங்களி னுபாங்கங்களாம். இவற்றுள் மீமாஞ்சையென்பது:—உபக்கிரம முதலான ஷட்விதலிங்க தாற்பரியத்தில் வேதவாக்கிய விசார பூருவகமாகச் சோதிஷ் டோம யாகாதிகம் விதியுக்தமாகச் சொல்லப்படுவதே பூருவ மீமாஞ்சை யெனவும், இனி யிந்நூலுட்சொல்லப்படுவ துத்தரமீமாஞ்சை யெனவுமாம்.

நியாயமென்பது:—பிரமாணம், பிரமேயம், ஐயம், பிரயோஜனம், திரு ஷ்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தர்க்கம், நிண்ணயம், வாதம், செற்பம், விதண்டை, ஏதுப்போலி, சலம், சாதி, தோல்வித்தானங்க ளென்னுஞ் சோடசபதார்த்தங்களுஞ் சொல்லப்பட்டுப் பிரபஞ்சத்திற் கீசுரனே கர்த்தி ருத்துவ மென்று நிச்சயஞ் செய்வதாம்.

ஸ்மிருதிகளாவன:—மனு, தக்ஷம், யமம், பிருகஸ்பதி, சங்கலிதம், பிரசேதம், பராசரம், யாக்கியவல்கியம், விஷ்ணு, அத்திரி, ஆங்கிரசம், சம் வர்த்தம், சாதாதபம், ஹாரீதம், ஆபஸ்தம்பம், கௌதமம், உசனம், வசிட் டம் என்பனவாம்.

இவற்றுள் கிரேதாயுகத்தில் மனு ஸ்மிருதி தருமமும், திரேதாயுகத் திற் கௌதம ஸ்மிருதி தருமமும், துவாபரயுகத்திற் சங்கலித ஸ்மிருதி தரு மமும், கலி யுகத்திற் பராசர ஸ்மிருதி தருமமுமே முக்கியமா யிருக்கும். இனி யிந்த ஸ்மிருதிகள் மூன்று காண்டமாகச் சொல்லும். அவையாவன:— சாதி வருணாச்சிரம முதலியவைகளைச் சொல்வது கர்ம காண்டமும், வழ க்கு ஒழுக்கம் தண்டம் தாயாதி விபாக முதலிய பதினெண் பேதங்களைச் சொல்வது விவகார காண்டமும், பிரம்ம ஹத்தி பஞ்சமா பாதக முதலிய மகாபாதகங்களுக்குச் சிட்சை சொல்வது பிராயச்சித்த காண்டமுமாம்.

இவற்றுட் சாதியாவன:—கம்மிய, கன்னட, ஆந்திர, திராவிடமென நான்காம். வருணமாவன:—பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென நான்

காம்: இவற்றுள் கர்ப்பாதானம், பும்சவனம், சீமந்தம், உந்நயநம், சாத
கர்ம்மம், நாம கரணம், உபநிஷ்காமனம், அன்னப் பிராசனம், சவுளம்,
உபநயனம், மகாநாமியம், மகாவிரதம், உபநிஷத்து, சோபனம், உத்துவா
கனம், மிருகதியென்னும் ஷோடச கன்மங்களும்; யசன, யாசன, அத்தியா
யன, அத்தியாபக, தான, பிரதிக்கிரக மென்னுஞ் சட்கருமங்களும்; சிவபத்
தியாதியசற்குணங்களுங் கூடினவனே பிராமணனும்; பிரசாபாலன, யஜன,
அத்தியாயன, துர்ச்சன துஷ்ட மிருக பட்சி சத்துருசங்காரமும்; அன்ன
தான, வஸ்திரதான, பூதான, கன்னிகாதான, இரணியதான, கோதான,
உபயமுகி கோதான, மகிஷதான, வருடைதான, அசுவதான, சுவேதாசுவ
தான, கஜதான, காளாமுகிதான, மஹாமேருதான, கற்பக விருட்சதான,
வித்தியாதானமாதிய சோடச மகாதானங்களும்; தேச கால பாத்திர பரீ
ட்சை விஷ்ணுபத்தியாதி கன்மமு முடையவனே க்ஷத்திரியனும்; பிரதமஸ்
தான, துவித ஸ்தான, திரிதிய ஸ்தான, சதுர்த்த ஸ்தான, பஞ்சம ஸ்தான
மென் றிங்ஙனமுள்ள முப்பத்தாறு ஸ்தான பரியந்தக் கிரமத்தில் ஏக, தச,
சத, சகஸ்ர, தச சகஸ்ஸிர, லட்ச, தசலட்ச, கோடி, தசகோடி, சதகோடி,
அற்புத, நிற்புத, கர்வ, மகாகர்வ, பற்ப, மகாபற்ப, குரோணி, மகா குரோணி,
சங்க, மகாசங்க, க்ஷிதி, மகாக்ஷிதி, சோப, மகாசோப, நிதி, மகாநிதி, சாகர,
மகா சாகர, அரி, மஹாவரி, சங்க, மகாசங்க, பணி, மகா பணி, கிருது,
மகாகிருதென்றிந்த விலக்கங்ளோடு ஏக, பூமிசவுஞை, சந்திரசவுஞை இவை
முதலானது ஒன்றிற்கும்; துவா, தொந்துவா, துவித, துதீய, யுக்ம, யுகள யுக,
உபய, பாகு, பாத, பட்ச, நயன இந்த இலக்கமெல்லா மிரண்டிற்கும்; திரி,
திரய, திரிதிய, அர நயன, அக்கினி, புர, வர, ரத்திஞதி முத லான இலக்
கம் மூன்றிற்கும்; சவுசதுர்த்தி, கஷாய, வேத, வருண, ஆசிரம, சமுத்திர,
சவுஞை முதலானவை நான்கிற்கும்; பஞ்ச, அரவக்திர, விரத, இந்திரிய,
பாண, விஷய, பாண்டவ, பூதாதிகள் ஐந்திற்கும்; சடு, திரவிய, ருது, ரச,
ஸ்கந்தமுக, வேதாங்க, கர்ம, வர்ண, தரிசன, அர்த்தாதிகள் ஆறிற்கும்; சத்த,
முனி, கிரி, ராச்சியாங்க, துரக, தாது, சபாங்க, சுர, சாகர, சவுஞை முதலா
னவை யேழிற்கும்; அஷ்டவசு, திக், கஜ, மறத, கர்ம முதலானவைகள் எட்டி
ற்கும்; நவ, ரந்திர, நிதி, ரச, கிரக, ரத்தின, பரவாதிகள் ஒன்பதிற்கும்; விந்து;
சூனிய, நாஸ்தி, அனுசார, ககன, சவுஞை முதலானவை பத்திற்கும் பெய
ராயிருக்குஞ் சகல சங்கியை சவுஞைகளையும் அறிந்து அதிகமானதை நீக்கிக்
கணிதாதிகளெண்ணிக் கிரமுகாதி சமஸ்தவஸ்துக்களைப் பிரமாணித் திலக்
கஞ் செய்து; சிறைய, வட்டி, வட்டம், சின்னத்தின் வண்ணம், பவளத்தின்
களஞ்சு, மணிகளின் சவ்வு, ரத்தினத்தின் சூத்திரபரீட்சை, வச்சிரத்தின்
மஞ்சாடி, பச்சையின் ரதி முதலானவை வேறு வேறிலக்கஞ்செய்து, பின்
னும் பத்துப்பணத்துநிறை, களஞ்சு, களஞ்சுநாலு கூடின தொரு கருஷம்,
கருஷநாலுகூடினதொருபலம், பலமிருபதுகூடின தொருவீசை, வீசையஞ்சு
கூடின தொருதுலாம், துலாமிருபதுகூடின தொருபாரம், பாரம் பத்துக்
கூடின தசிதமாமென்றும், கற்பூராதி தூக்கிலக்கம் பிரமாணித்துப் பின்னு

மொரு சிட்டியே நிகுஞ்சம், இது நாலுகூடின தொரு குடவம், இது நாலு கூடின தொரு பிரஸ்தம், இது விரண்டு கூடின தொரு வர்க்கம், இது விரண்டு கூடின தொருவாடகம், இது நாலு கூடின தொருதுரோணம், இது அஞ்சு கூடின தொருகாரியாகுமென்று மறிந்து,தானியாதிக ளளந்தறிந்து வாணிபஞ் செய்து, கிருஷி, கோபாலிகம், சூரியாதி பத்தி கன்ம யுத்தனவனேவைசியனும்; பிராமணாதி வருணத்திரய சேவை க்ஷேத்திரரட்சா சகல தேவதா பத்தியாதி கன்ம யுத்தனவனே சூத்திரனுமாம்.

ஆசிரமமாவது:—பிரமசாரி, கிரகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி யென்பன. ஒவ்வொன்றிற்கும் நந்நான்காகக்கூறிய சோடசமுங் கரும காண்டமாம். ஏனைய காண்டமிரண்டும் விரிவாகலின் அந்நூலிற்காண்க.

புராணமாவன:— வியாசபகவான் சொன்ன வேத நிஷ்ட சாகார்த்தப் பிரதிபாதிகத்தையும்; சர்க்க, பிரதிசர்க்க,வம்ச,மன்வந்தர,வம்சானு சரித்திரங்களென்னும் பஞ்சலட்சணங்களையும், சமஸ்த வைதிக தாந்திரிக கர்மங்களையும், தேவதா தாரதம்மியங்களையுஞ் சொல்லாநின்ற நாலுலட்சங் கிரந்தஞ் சங்கியையுள்ள பதினெண் மூலபுராணங்களாம். இவற்றுள் சைவம், ஸ்காந்தம், இலிங்கம், கூர்மம், வாமனம், வராகம், பௌஷிகம், மச்சியம், மார்க்கண்டேயம், பிரமாண்ட மென்னு மிவை பத்துஞ் சிவ புராணமும் ; நாரதீயம், பாகவதம், காருடம், வைஷ்ணவ மென்னு மிவை நான்கும் விஷ்ணுபுராணமும்; பிரமம் பதுமமென்னு மிவை யிரண்டும் பிரமபுராணமும் ; பிரமகைவர்த்த மென்பது சூரியபுராணமும் ; ஆக்கினேய மென்பது அக்கினிபுராணமுமாம்.

அன்றியு முபபுராண மஷ்டாதசமாம். அவையாவன:—சனற்குமாரம், உசனம், நாரசிங்கம், நந்தி, சிவதன்மம், தூருவாசம், நாரதீயம், கபிலம், மானவம், ஆங்கீரம், வாருணம், காளி,வாசிட்டலிங்கம், சாம்பவம், சவுரம், பராசரம், மாரீசம், பார்க்கவ மென்பன. இவை யந்த நாமதேய முள்ளவர்களா னிருமிக்கப்பட்டன.

இனி வியாசர் வான்மீகர் ஆகிய இவர்களா னிருமிதமானவை சத்துவாதிகுண பேதங்களும்,தேவத்திரய லட்சணங்களும்,தேவ தானவராதிகள் ஜநநக் கிரமங்களும், யுதிஷ்டிர ராமசந்திராதி ராஜாக்கள் சரித்திரங்களும், வைதிகாதி தன்மங்களும் குரோடீகரித்துச் சொல்லும் பாரத இராமாயணங் களென்னு மிதிகாசங்களுமாம்.

இனி மற்று முள்ள சகல சமயங்களும், அவற்றி னிலக்கணங்களும் அவற்றின் பேதங்களும் அவற்றால் வரும் பத முத்திகளும் இனைய வென விவேகசிந்தாமணி யென்னுங் கிரந்தப்படி மேற் சில தெரிவிக்கப்படும். (௩)

(அ. கை.)

முற்கூறிய சைமினி சூத்திரத்திற்கு மூன்று வியாக்கியானி வியாக்கியானங்களின் நாமங்க ளுணர்த்துகின்றது.

சாற்றியவச் சைமினிசூத் திரத்திற்கு மிக்க
சாபரமென் றொருபாடி யம்புரியப் பட்ட
தூற்றமீ மாஞ்சைக்கு மதம்பாட்ட மென்ன
வொன்றுபட்டா சாரியனு லுரைத்திடவந் தென்றும்
போற்றுமவன் சீடனு கியபிரபா கரனுற்
புகழ்பிரபா கரமெனவோர் மதாந்தரநன் கமைய
வாற்றியவச் சாபரபா டியமதற்கு விளங்க
வாக்கப்பட் டுலகமெலா மறிந்திடநின் றதுவே.

(இ. ரை.) "சாற்றியவச் சைமினி சூத்திரத்திற்கு மிக்க சாபரமென் றொருபாடியம் புரியப்பட்டது" எ. து. முற் கூறிய அந்தச் சைமினி சூத்திர ரூபமான பூர்வமீமாம்சைக்கு மேலாய சாபரமென் றப்பெயருடையோரால் ஒருபாடியஞ் செய்யப்பட்டது; "ஊற்ற மீமாஞ்சைக்கு மதம் பாட்டமென்னவொன்று பட்டாசாரியனு லுரைத்திட வந்து" எ. து. புகழ் பெற்ற அந்த மீமாம்சைக்குப் பாட்டமெனக் கூறு மோர் மதாந்தரம் பட்டாசாரியனுற் சொல்லப்போந்து, "என்றும் போற்று மவன் சீட னுகிய பிரபாகரனுற் புகழ் பிரபாகரமெனவோர் மதாந்தர நன்கமையவாற்றிய" எ.து. யாவராலு மெப்போதுந் துதிக்கத்தக்க அந்தப் பட்டாசாரியரது மாணுக்க ராகிய பிரபாகரரென்பவரால் நன்கமைந்த பிரபாகரமென் றோர்மதமானது பழுதின்றி யமையுமாறு முன்ன ரியற்றிய, "அச்சாபர பாடியமதற்கு விளங்க வாக்கப்பட் டுலகமெலா மறிந்திடநின்றது" எ. து. அந்தச் சாபர வியாக்கியானத்திற்குப் பொரு ளௌிதில் விளங்கச் செய்யப்பட்டு உயர்ந்தோ ரனைவரும் அறியுமாறு நின்றது எ. று.

ஏ அசை. வியாக்கியானிகள்:—சாபரமுனி, பட்டாசாரி, ப்ரபாகரர் ஆகிய விவர்களாம். வியாக்கியானங்கள்:—சாபர பாடியம், பாட்ட மதம், ப்ரபாகரமதம் இவைகளாம். இங்ஙனமாய விவை யனைத்தும் மீமாஞ்சையேனுங் கருமப்பொரு ளுணர்த்தாநின்றன; ஆதலின், பூர்வ மீமாம்சையெனப் பட்டது. அறிவு அயலை யனுபவிக்க முயலுதல் கன்மம்; அறிவு தன்னைத்தானனுபவிக்க முயலுதல் ஞானம். இங்ஙனம் நிற்றலின் பொதுப்பட மீமாஞ்சை யெனப்பட்டது. பிரத்தியட்சத்திற்குப் பாவம் யாதுக்கு? ஆதலின், யோகத்தையுங் கிரியா யோகமென்ப ரறிஞர். இதனை வேத மெனற் கிழுக்கென்னை? வகையின்றி யயலைமாத்திர முணர்த்தல் வேதமோ? வகையோடு அயலையுந் தன்னையு மையந்திரி பின்றி யுணர்த்தல் வேதமோ? இருமையு முணர்த்துவதாதலின் ஆரியர் வேதமே வேதமெனத்தகும்; அதை மறுத்தல் அவலம். மனோநாசம் விவகாரத்திலும் வாய்க்கச் செய்யும் வலி யின்மையின் யோகத்தை யமுக்கிய மாகவும் ஞானத்தை முக்கிய மாகவுங் கொண்டதென்க. இருமையும் விளக்குவதுபற்றி மீமாம்சத்தை வித்தைக ளனைத்திலு மிக்கதென்றுர். இதனை யேலார் பகிர்முக நாட்டத்தார். (௪)

(அ. கை.)

மீமாம்சை யிருகூறனுள் முதற்கூறு இனையதென முன்னிரண்டு கவிகளாற் கூறி, பிற்கூறு இரண்டு காண்டமா நிற்றலை யுணர்த்துகின்றது.

உரைத்தவிரண் டாங்கூறு பிரமமுரைப் பதனு
லுத்தரமீ மாஞ்சையெனப் பட்டருள்கூர் வியாதன்
றெரித்தசூத் திரவடிவ மாகியிரு நான்கத்
தியாயமா மவற்றுண்முத னன்கத்தி யாயம்
விரித்தலுறு தேவதா காண்டமெனப் பட்டு
விளங்குறுதெய் வதவிலக்க ணம்பலபத் திரனு
னிரைத்துரைசெய் யப்படுமே னன்கத்தி யாய
நிகழ்பிரம காண் டமென வேநிகழ்த்தப் படுமால்.

(இ. ரை.) "உரைத்த விரண்டாங் கூறு பிரம முரைப்பதனு லுத்தர மீமாஞ்சை யெனப்பட் டருள்கூர் வியாதன் றெரித்த சூத்திர வடிவ மாகி யிருநான்கத்தியாயமாம்'' எ. து. மேற்கூறிய இரண்டாங்கூறு பிரமத்தைச் சொல்வதா லுத்தர மீமாம்சையெனச் சொல்லப்பட்டு,மிக்க அருளையுடைய வியாசமுனியினுற் றெரிவித்தசூத்திரரூபமாகி யெட்டத்தியாயமாக நிற்கும்; "அவற்றுண் முதனன் கத்தியாயம் விரித்தலுறு தேவதா காண்ட மெனப் பட்டு' எ. து. அந்த எட்டத்தியாயத்துள் முதலி னுள்ள நான் கத்தியாயம் விரிவாகச் சொல்லியுள்ள தேவதா காண்டமென்று சொல்லப்பட்டு, "விளங்குறு தெய்வத விலக்கணம் பல பத்திரனு னிரைத்துரை செய்யப்படும்'' எ. து. விளங்காநின்ற மந்திர வாதத்தைப்போ லமைந் திருக்கின்ற தேவ விலக்கணங்களைப் பலபத்திரராமனுற் கிரமமாகச் சொல்லப்படும்; "மேனு ன்கத்தியாயம் நிகழ் பிரமகாண்டமெனவே நிகழ்த்தப்படும்'' எ. து. பின்னருள்ள நான்கத்தியாயம் விளங்காநின்ற பிரமகாண்டமென்று சொல்லப் படும் எ. று.

ஆல் அசை. இரண்டாங்கூறு மீமாம்சையெனப்பட்டுச் சூத்திர வடிவ மாகி யிருநான்கத்தியாயமாமெனவும்,முதனன்கத்தியாயம்,தேவதாகாண்டமெனப்பட்டு நிரைத் துரைசெய்யப்படுமெனவும், மேனுன்கத்தியாயம் நிகழ்த்தப்படுமெனவு முடிக்க. மீமாம்சை சைமினி ரிஷியினுலும், வியாசமுனிவராலுஞ் சூத்திரரூப மாக்கப் பட்டதெனவே, முன்னர் வசன ரூபமாக நின்றதெனப் பெறும். பூர்வம் களையத்தக்கது, உத்தரம் ஏற்கத்தக்கது, எனவே, கன்மங் களையத் தக்கதெனவும், ஞானம் ஏற்கத் தக்கதெனவும் அநுபவ மிருக்கக் கண்டாம். இரண்டாங் கூறு பிரமத்தை யுரைப்பதாக விருப்பினும்,தேவதாகாண்டம் பிரமகாண்டமென வகுத்தது ஒன்றுஆராதித்தற்கும்,ஒன்று விசாரித்துத் தெளிதற்கு மிடம்பெறலினென்க. பிரமமெனினுங் கடவுளெனினு மொக்கும். பிரமத்தை யாராய்வார் எங்கணு மிலர்; ஆராதிப்பார் எங்கணுமுளர். இவ்விரண்டு நிலைமையையும் பிரதிவாதிப்பது

ஈசுவர வாக்கியமோ? ஏனையோர்வாக்கியமோ? ஏனையோர்வாக்கியமெனின் ஆராய்ச்சிக் கிடம்பெறாத தென்னை? மீமாம்சை யிடம் பெறுவதால் ஈசுவர வாக்கியமெனக் கண்டாம். ஈசுவர வாக்கிய மிது வானதால் வேதமெனற் கையுறுவதென்னை? ஏனையோர் மதநூல்களோ ஆராய்ச்சியைச் சற்றுமுணர்த்தாததா லீசுவர வாக்கியமென் றேற்றற்கு ஞாயமென்னை? இன்றாதலால் ஆரியர் மத நூலே வேத மெனப்படும். ஏனைய அனைத்தும் போலி. இதற்கு யாது முரண்? இதனை வாசிப்பார் நன்குன்னவேண்டும். அறிவு தனக்கயலை யாராதித்தல் தேவதா காண்டமெனவும், அறிவு தன்னைத்தா னாராதித்தல் பிரம காண்ட மெனவுங் கோடற் கியைந்த நயந் தர நின்ற திரண்டாங் கூறென்க. ஆதலின் ஈசுவர வாக்கியமென்பதே திண்ணம். (ரு)

(அ. கை.)

முன்னர்ப் பிரமகாண்ட மிருவகை யெனப்பட் டவற்றுள் முற்கூறைச் சொல்லியதால், இது பிற்கூறினையதென் றுணர்த்துகின்றது.

அப்பிரம காண்டத்துட் சிவமொடுயி ரயிக்க
மறைதலாற் சங்கரா சாரியனுங் குருவா
லொப்பரிய பாடியமென் றொன்றுரைக்கப் பட்ட
துரைத்ததற்கு விவரணு சாரியனென் பவனாற்
செப்பரிய விவரணமாக் கூறப்பட் டதுவே
தெரியின்வே தாந்தநூ லென்றுரைக்கப் படுமா
லிப்பெரிய வேதாந்த நூற்பொருளி னகல
மெங்ஙனமென் றிடினுரைத்து மியம்பிய நூன் முறையே.

(இ. ரை.) "அப்பிரம காண்டத்துட் சிவமொடுயிரயிக்க மறைதலாற் சங்கராசாரியனுங் குருவா லொப்பரிய பாடியமென்றொன் றுரைக்கப்பட்டது" எ. து. மேற் கூறிய அந்தப் பிரமகாண்டத்தில் சீவேசுவர ஐக்கியஞ் சொல்லப்படுவதால், சங்கராசாரிய னென்னுஞ் சிறந்தகுருவினா லுவமித்தற் கரிய சங்கரபாஷியமென் றோர்பிரபந்த மேற்படுத்தப்பட்டது; "உரைத்ததற்குவிவரணு சாரியனென்பவனாற் செப்பரியவிவரணமாக் கூறப்பட்டதுவே தெரியின் வேதாந்த நூலென்றுரைக்கப் படுமால்" எ. து. அவர்கூறிய சங்கர பாஷியத்திற்கு விவரணுசாரியனென்னும் பெயருடையோனா லெவரானுஞ் சொல்லற்கரிய விவரண வியாக்கியானமென்பதாகவோர் பிரபந்த மேற்படுத்தப்பட்டது. அந்த விவரண வியாக்கியான மென்னு மோர் பிரபந்தத்தை யூன்றி யாராய்ந்துபார்க்குங்கால் அந்த வியாக்கியானமேவேதாந்தநூலென்று சொல்லப்பட்டிருப்பதால், "இப்பெரிய வேதாந்த நூற்பொருளினகல மெங்ஙனமென்றிடி னுரைத்து மியம்பிய நூன்முறையே" எ. து. இந்தமகத்தான வேதாந்த நூற் பொருளின் கடல்போன்ற விரி வெத்தகைய தெனக் கேட்கின், சான்றோராற் சொல்லப்பட்ட முத னூலி னெறித் தாகவே யாமுஞ் சொல்லப்புகுதும் எ. று.

சிவமொ டுயிரைக்க மெனலில் சிவமெனல் அறிவு, உயி ரெனல் அறி யாமை. யாதினுலெனின் அறிவு பொருளைப் பொருளாகக் கோடலினுனும், அறியாமை பொருளல்லவற்றைப் பொருளாகக் கோடலினுனுமென்க. சீவ னறியாமை யெனற்குத் தக்கவுதாரணங் காட்டுதும். அதாவது சூனியமென் றெவரானு மாகாயம் வரையப்பட்டதேனும் ஏனைய நான்கு பூதத்தைப் பற்றிச் சற்று விசாரிக்குதும். மண்முதலிய நான்கு பூதமும் பொருளா? குணமா? பொருளெனின் ஒவ்வொரு பூதமும் அணுமகத் தெனல் விகார மாகிய குண மன்றோ? அன்றெனின் எதனது மகத்து? எதனது அணு? என்ற வினு வராது காக்கவேண்டும். கூடாதெனின், ஓர் சுயம்பாகவும் ஓர் முதலாகவும் நிற்ப தியாது? கணிக்கப்படாதெனின், விகாரங்களைச் சுயம் பாகக் கண்டு பூத பௌதிகமெனக் கொண்டு உறவுகொண் டலைந்திழப்பது அறிவேனும் அல்லவற்றை யாமெனக் கோடலால் அறியாமை யெனற்கே யியையும். ஆதலின் உயிரை யறியாமை யென்றாம். இங்ஙனமாய அரியநிலை யைக் கண்டுபிடித்து எவர்க்கும் விளங்க வைத்தவர் சங்கரராதலின், ஆசா ரியனென்னுது மிகைபடக் குருவென்றது இம்மகிமை பற்றியென்க. அது வென்று வருவித்தது பொரு ளமைதி பற்றி. அதுவே யென்பதில் ஏகாரம் பிரிநிலை யெனினும் அமையும். அங்கலிங்க விலக்கணம் வேதாந்தப் பெருங் கடலில் விளங்கத் தோன்றுமென் றிருப்பதால் வேதாந்த நூற் பொருளி னகலமென்றார். இயம்பிய நூலென்றது விவேகசிந்தாமணி யென்னும் நூலி னெறியை. ஆயின், ஐக்கியமெனல் யாது? பொன்னை யன்றிப் பணியும், மண் ணையன்றிக் கடமும், நூலையன்றிப் படமு மிருக்குமெனின், அறிவையன்றி அறியாமை யிருக்கலாம். இல்லை யெனின், ஐக்கிய மெனற்கு முரணுறுவ தென்னை? இதனைச் சொல்லாற்றலாற் சொல்லாது சோதனை ஞாயம் பொ ருத்தங்களா லமையக் கொள்ளின் எவர்க்கு முரணுறு தென்க. இயம்பிய நூன்முறையே வுரைத்து மென்றது என திஷ்டப்பிரகார முரைப்ப னெ னலை மறுக்க. (சு)

(அ. கை.)

இக்கவியி னிந்நூலாசிரியர தருமையும் அவரது நாமமும் விளங்க வுணர் த்துகின்றது.

வேறு.

அருமறையின் பொருடெரித்த விவேகசிந்தா மணியதனு
ளறைவே தாந்தப்
பொருளினைமுந் நீர்வரைப்பி னுலகறியச் செந்தமிழாற்
புனைதல் செய்தான்
பெருகுசுவை நறவொழுகு செஞ்சொன்மல ராற்புனைபாப்
பெருந்தண் மாலைக்
கருமிடற்று வானவற்கே சாத்துசிவப் பிரகாசன்
கவிஞர் வேந்தே.

(இ. ரை.) "அருமறையின் பொருடெரித்த விவேகசிந்தா மணி யதனு ளறை வேதாந்தப் பொருளினை முந்நீர்வரைப்பி னுலகறியச் செந்தமிழாற் புனைதல் செய்தான்" எ. து. அரிய வேதங்களின் பேதா பேதங் கடந்த பொருளித்தகையதெனத் தெரிவித்த விவேகசிந்தாமணி யென்னுநூலினுட் சொல்லப்பட்டிருக்கும் வேதாந்த பூரிச்சேதத்திற் கூறிய பரமாத்ம வைக் கியப்பொருளைக் கடல் சூழ்ந்த வுலகில் அறிவுடையோ ருணருமாறும் செந் தமிழ்ப் பாஷையில் அதற் குரிய விலக்கணங்கட் கமையுமாறும் அலங்கரித் துப் பாடினன்: "பெருகுசுவை நறவொழுகு செஞ்சொன் மலராற் புனை பாப் பெருந்தண்மாலை கருமிடற்று வானவற்கே சாத்துசிவப் பிரகாசன் கவிஞர்வேந்து" எ. து. அவனுரெனின் மிக்க நவரசமென்னுந் தேன்மலிந் தொழுகும் இயற்றமிழ்க்குரிய வினிய சொல்மலர்களாற் றொடுக்கப்பட்ட கவிகளென்னுஞ் சிறந்த குளிர்ச்சி பொருந்திய மாலையை நீலகண்டத்தை யுடைய பரமசிவனுக்கே தரிக்கத்தக்க சிவப்பிரகாசனென்னு நாமதேயத் தையுடைய கலைவல்லோருக் கரசன் எ. று.

ஏ அசை. செந்தமிழாற் புனைதல் செய்தா னெனவே, விவேக சிந்தா மணியென்னு நூல் வட மொழியி லமைந் திருந்ததென் றுயிற்று. இங்கே வுல கென்றது ஆகுபெயர். பெருகு சுவை நறவொழுகுஞ் செஞ்சொலாவது எழுத்துச்சொல் முதலிய பஞ்ச விலக்கணங்களும் இதுவேயெனத் தோன்று மாறு விளக்குஞ் சொற்களை. சொல் மலர் பாமாலை யென்பன உருவகம். இஃதிந்நூலாசிரியரை இவரது மாணுக்கர் வியந்து புகழ்ந்ததென்க. சுவை நவரச மெனினு மமையும். வானவற்கே யென்பதிலுள்ள யேகாரம் ஏனை யோர்க் கன்றெனப் பிரித்தலின் பிரிநிலை யெனினு மமையும். (எ)

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

---

# பொதுப்பாயிரம்.

(அ. கை.)

மங்களாசரணை முதல் அநுபந்தசதுஷ்டய மீறாக் கிடந்த இந்நான்கும் எல்லா நூன்முகத்தும் உரைக்கவேண்டுவ தாதலின், இந்நூன் முகத்தும் பொதுப்பட வுணர்த்துகின்றது.

வேறு.

வாய்த்தநூன் முகத்துரைக்கு மங்களா சரணை
வாழ்த்துவணக் கொடுவத்து நிர்த்தேச மெனமூன்
றூர்த்தபதம் பதப்பொருளே வாக்கியயோ சனையே
யறிவிறு விடையிவையைந் துரையினிலக் கணமாங்

கோத்துரைசெய விசேடவிசே டியங்கருத்தா கருமங்
கொள்கிரியை யிவையைந்தன் னுவயவிலக் கணமாஞ்
சாற்றுமனு பந்தசதுட் டயநூற்கு விடயஞ்
சம்பந்தம் பயனதிகா ரிகளெனநான் கறியே.

(இ. ள.) "வாய்த்தநூன் முகத்துரைக்கு மங்களாசரணை வாழ்த்து வணக் கொடு வத்துநிர்த்தேச மென மூன்று" எ. து அறிவுடையோரால் வாய்க்கப் பெற்ற எல்லாநூற்கும் முதலினுரைக்கப்படும் மங்களாசரணையெனல் வாழ்த்து, வத்துவணக்கம், நிர்த்தேசம் என மூன்றும்; "ஆர்த்த பதம் பதப்பொருளே வாக்கியயோசனையே யறிவினுவிடையிவையைந்துரையினிலக்கணமாம்" எ. து. எழுத்துக்கியைந்த இலக்கணங்கள் வழுவின்றியமையப்பெற்றபதமும், பதப்பொருளும், பதசாரமும் அறிந்துகொள்வான்வேண்டி வினுவுதலும், அதற்குத் தக்க விடை கொடுத்தலு மாகிய விவை யைந்தும் வியாக்கியானங்களி னிலககண மாம்; "கோத் துரை செய் விசேட விசேடியங் கருத்தா கருமங் கொள்கிரியை யிவை யைந்தன்னுவய விலக்கணமாம்" எ. து. இல்லாத விடத்துக் கோவையாகச்சொல்லப்படும் விசேடணமும், விசேடியமும், சருத்தாவும், கருமமும், கோடற்கியைந்த கிரியையுமாகிய இவை யைந்தும் அன்னுவய விலக்கண மெனப்படும்; "சாற்றுமனு பந்த சதுட்டயநூற்கு விடயஞ் சம்பந்தம் பய னதிகாரிகளென நான் கறியே" எ. து. அறிஞரால் கூறத்தகும் அனுபந்த சதுஷ்டயமெனல் ஓர் நூலுக்கியைந்த விஷயமும், சம்பந்தமும், பயனும், அதிகாரிகளுமென நான்காக நீ யறிதி எ. று.

எல்லாநூன்முகத்து முரைக்கப்படுவது மங்களாசரணை, உரையிலக்கணம், அன்னுவய விலக்கணம், அனுபந்த சதுஷ்டயம் என நான்காதலின் பொதுப் பாயிர மென்றும். இஃது மோர் நூலாதலின் இந்நான் கமைந்திருக்கு மென்பதைக் குறிக்க இந்நூன் முகத்துக் கூறினர். வாய்த்த ஆர்த்த என்பவை ஆசெதுகை. என்னை? "யரலழ வென்னு மீரிரண் டொற்றும் வரன்முறை பிறழாது வந்திடை யுயிர்ப்பி, னஃதாசிடையெதுகை" என்று இருத்தலினென்க. சாற்றுமெனப் பாடங் கோடல் "தக்கார் தகவில ரென்ப தவரவ ரெச்சத்தாற் காணப்படும்" என்பதுபோல இனவெதுகை யெனக் கொள்க. சாத்து மனுபந்த மெனப் பாடங் கொள்ளின் சாத்தல் பதித்தல், அமைதல் அப்பல் என்றுரை யிருப்பதால் அந்தந்த நூற்கமைந்த அனுபந்த சதுஷ்டயமென் றுரை கொள்க. ஆசரித்தல் ஆசரணை யென் றாயிற்று. மங்களம் சுபம். ஆசரணை நடத்தை எனவே, துன்பத்துக் கியையாத நடக்கை யென்றாயிற்று. இடைநிலைத்தீபமாகிய வத்துவெனலை மூன்றிடத்துமொட்டுக. நிர்த்தேசம் காட்டல் எண் ணும்மைகள் மூன்றும் எஞ்சி நின்றன. கர்த்தா, கர்மம், கிரியையெனல்: எழுவாய், செயப்படுபொருள், பயனிலைகளை. இந்நூலில் விசேஷண விசேஷியமாவது சச்சிதானந்த முதலிய விலக்கணங்கள் அமைதற் கியைந்த விலக்கியம் எனவே, இலக்கியத்தி னமைதி

யிலக்கண மென்றாயிற்று. இங்கே யிலக்கியமெனல் பரவஸ்துவை. மோதிரத்திற்கு விரலென்றாற்போல, சச்சிதானந்த முதலிய விலக்கணங்கட்குப் பரவஸ்து விலக்கிய மெனக்கோடல் மதத்தர்சம்மதம். விரலுக்கு மோதிர மென்றாற்போல, பரவஸ்துவாகிய விலக்கியங் கண்டதற் கியைந்த விலக்கணங் கோடல் வேதாந்தி சம்மதம். அனுபந்த மெனல் அனு உபசர்க்கம், பந்தம் கூடி நிற்றல்; எனவே, விடயமுதலிய நான்குங் கூடி நிற்பதென்றாயிற்று. இக்கவியிற் கூறிய மங்களாசரணை விதி பற்றியும், தருணமா தென்னும் கவியிற்கூறிய மங்களாசரணை இடையூ றெய்தாமைபற்றியு மென்க. இந்நூல் வேதாந்தத்தைப் பிரதி வாதித்தலால், மங்களாசரணை முதலிய நான்கையு மிதற் கியைந்த நெறித் தாகவே பொரு ளமைத்துக் கொள்க. அன்றேல், பேத வாதமாக முடியும். முடியின் ஐக்கிய மெனல் பயனின்றியமையும். ஆதலின், இந்நூலாசிரியர் கருத்தறிந் துரைகொள்க. (அ)

(அ. கை.)

முன்னர்க் கூறிய அனுபந்த சதுஷ்டயத்தி னிலக்கண மினைய தெனவும், சாதன சதுட்டயம் இனையதெனவு முணர்த்துகின்றது.

விடயமது சிவசீவர் தமதேகத் துவமாம்
விமலனொடு நூற்கறையைப் படலறையுந் தன்மை
யடைதலுறு சம்பந்தம் பயன்றுயரெ லாநீத்
தாநந்த பதம்பெறுதல் சாதனநான் கினையு
முடையவனே யதிகாரி யென்றறைவ ரறிஞ
ருரைத்தசா தனசதுட் டயநித்த வநித்தப்
படுபொருளின் விவேகமிக பரபோக விராகம்
பழிப்பரிய சமைமுமூட் சுத்வமெனப் படுமால்.

(இ. ரை.) "விடயமது சிவசீவர் தமதேகத்துவமாம் விமலனொடு நூற்கறையப்பட லறையுந் தன்மை யடைதலுறு சம்பந்தம்" எ. து. விடயமாவது சீவேசுவரரது ஏகத்துவமாம்; எய்தற்குரிய சம்பந்தமாவது பரமசிவத்தோடு வேதாந்தநூற்கு முரணுறா தறைப்படுதலைக் கூறுந் தன்மையாம்; "பயன் றுயரெலா நீத்தானந்த பதம் பெறுதல்" எ. து. பயனாவது சகல துன்பங்களையு மொருங் கொழிக்குமா றொழித்து நித்தியானந்த பதத்தை யடைதலாம்; "சாதன நான்கினையு முடையவனே யதிகாரியென் றறைவ ரறிஞர்" எ. து. அதிகாரியாவது நான்கு சாதனங்களையு முடையோன் யாவனோ, அவனே யாமென்று சத்துக்கள் கூறுவர். "உரைத்த சாதன சதுட்டய நித்த வநித்தப் படுபொருளின் விவேக மிக பரபோக விராகம் பழிப்பரிய சமை முமூட் சுத்வமெனப்படும்" எ. து. அதிகாரியெனல்பற்றிக் கூறிய சாதன சதுஷ்டயமாவது நித்தியாநித்திய வஸ்து விவேகமெனவும், இகமுத்திரார்த்த பலபோக விராகமெனவும், குற்றமற்ற சமாதி சட்க சம்பத்தி யெனவும், முமூட்சுத்வ மெனவுஞ் சொல்லப்படும் எ. று.

ஆல் அசை. விடயம் ஏகத்துவமாம், சம்பந்தம் அறையுந் தன்மையாம், பயன் பதம் பெறுதலாம், அதிகாரி உடையவனே யாமென முடிக்க. இந் நான்கனுள் அதிகாரிக் குரிய சாதன நான்கையு மிங்கே பொதுவாகக் கூறி யது இனி வகுத்தற் கென்க. விமலனொடு நூற் கறையப்படலும் அறையுந் தன்மையு மென்றது இந்நூ லேக மேவாதவைதத்தையும், அதற் கியைந்த சொல்லாற்றலையு முடையது பற்றியென்க. சமையெனத் தனியே கூறாது பழிப் பரியவெனக் கூறிய மிகையால் சமாதிசட்க சம்பத்தியென்றும். வட நூலார், அறையப்படல் பிரதிபாத்தியமெனவும், அறையுந்தன்மை பிரதிபா திகமெனவும் , மோக்ஷம், இச்சா, யஸ்ய, தஸ்ய, பாவா எனல் முமூ ட்சுத்வமெனவுங் கூறுப ஆகலி னிம்மொழிகளை யுய்த்துணர்ந்துகொள்க.

(அ. கை.)

மேற் சாதன சதுஷ்டய மெனலை வகையாக வுணர்த்துவான் றொடங்கி யிக்கவியில் மூன்றினிலக்கண மினையவென வுணர்த்துகின்றது.

நித்தியமான் மாவேபொய் விடயமெலா மெனத்தேர்
நிலைதருநித் தியாநித்திய வத்துவிவே கம்பின்
மெத்திவரு மிகமுடனுத் தரத்தில்வரு போக
விராகமிம்மை மறுமையுள விடயநுகர் வனைத்தும்
பொய்த்தழியு மிடும்பையென மனம்விடுத லாகும்
புகழ்சமையே முதலாய சட்குணங்கள் பெறுதல்
வைத்தசமை யியல்பாய முத்திவிருப் பதுவே
வயங்குமுமூட் சுத்துவமென் றறிந்திடுக மதித்தே.

(இ. ரை.) "நித்திய மான்மாவே பொய்விடயமெலா மெனத்தேர் நிலைதரு நித்தியா நித்திய வத்துவிவேகம்" எ. து. நித்தியாநித்திய வத்து விவேகமெனல்ஆன்மாவே நித்தியமெனவும்,அவ்வான்மாவால் அறியப்பட்ட தேகமுதலிய விடயமனைத்தும் அநித்தியமெனவுந் தெளியத்தக்க நிலைமை யினைத்தரும்; "பின்மெத்திவருமிகமுட னுத்தரத்தில் வருபோகவிராக மிம் மைமறுமையுள விடயநுகர்வனைத்தும் பொய்த்தழியு மிடும்பையென மனம் விடுதலாகும்" எ. து. பின்னர் வியந்து வரத்தகும் இக முத்திரார்த்த பல போக விராகமெனல் இம்மைக்கண்ணும் மறுமைக்கண்ணும் எய்தற்பாலவா நின்றுள்ள விடயபோகமனைத்துங் கணத்தி னில்லாதழியுமென்றும், அவை துன்பங்கட் கியைவன வென்றுங் கண்டு மனம் பற்றற விடுதலெனப்படுவ தாகும்; "புகழ்சமையே முதலாய சட்குணங்கள் பெறுதல் வைத்தசமை" எ. து. இவ்விரண்டின்பின் னிரையே வைத்தசமையெனல் யாவராலு மதி த்தற் கியைந்த சமை தமை முதலிய சட்குணங்களையு மெய்தற்பாலதாம். "இயல்பாய முத்திவிருப்பதுவே வயங்கு முமூட்சுத்துவமென் றறிந்திடுக மதித்து" எ. து. பின்னர் நடாத்தும் முமூட்சுத்துவ மெனல் இயல்பாக வெழும் முத்தி விருப்பேயென்று திரமாக மதித்தறிந்திடுதி எ. று.

ஏ அசை. ஆன்மாவே யென்பதி லேகாரம் தேற்றம். முத்தி விருப்ப மென்றது இயல்பாயவென் றடைகொடுத்தது கற்பனை கடந்த முத்தி யெனற்கு. அதாவது அறிவு அயலை யறிவதன்று; அறிவு தன்னைத்தானே யறிவது. வயங்கென்னு மிலேசானே முமூட்சுத்துவ மிரண்டெனப் பெற்ரும். ஒன்று பதவி முத்தி பற்றியதும் ஒன்று ஐக்கிய முத்தி பற்றியது மென்க. இங்கே மதித் தென்றது ஆராய்தலை. இனிவருங் கவியில் சமாதி சட்க சம்பத்தியி னிலக்கணங்களை வகையாகச் சொல்லப் புகுவதால் அஃதொழிந்த மூன்று குணங்களை யுணர்த்துகின்ற தென்ரும். (கO)

(அ. கை.)

சமை முதலிய ஆறு குணங்களின் நாமங்களும் அவற்றி னிலக்கணங் களு மினையவென வுணர்த்துகின்றது.

சமைதமையே திதீக்கையுப ரதிசிரத்தை சமாதி
சமைமுதலா மறுகுணங்க ளுட்கரண மடக்கல்
சமைதமைதான் புறக்கரண மடக்குதல்கா மாதி
தணித்திடுத றிதீக்கைகரு மங்களனைத் தினையுஞ்
சுமையெனவே விடுதலுப ரதிசுருதி குருவைத்
துணிவினு னம்புமதே சிரத்தைகுரு மொழிநெஞ்
சமைவுறவே திட்பமுறல் சமாதி யிச்சா தனஞ்சே
ரதிகாரி செயுங்குருசே வையினையெடுத் தியம்பில்.

(இ. ரை.) "சமை தமையே திதீக்கை யுபரதி சிரத்தை சமாதி சமை முதலா மறு குணங்கள்" எ. து. சமை முதலிய ஆறு குணங்களாவன:— சமை, தமை, திதீக்கை, உபரதி, சிரத்தை, சமாதி எனபனவாம். "உட்கரணமடக்கல்சமை தமைதான் புறக்கரணமடக்குதல் காமாதி தணித்திடுதறிதீக்கை" எ. து. அவற்றுள் சமையெனல் மனமாதிய அகக் கரணங்களை யடக்குதலும், தமையெனல் இரு வகை யிந்திரியங்களையும், விடயப் பராக்கிற் செல்லாதடக்குதலும், திதீக்கையெனல் காமக்குரோதாதிகளைமேலெழ வொட்டாது தணியச் செய்தலு மாம்; "கருமங்க ளனைத்தினையுஞ் சுமை யெனவே விடுதெ லுபரதி சுருதி குருவைத் துணிவினுனம்புமதே சிரத்தை" எ. து. உபரதியெனல் சரியை கிரியை யோகங்களுக கியைந்த சகல சேஷ்டைகளையுஞ் சுமையாகவே கண்டு விடுதலும், சிரத்தை யெனல் சுருதியையும் குருவையும் உண்மை மொழித் துணிவினுல் மெய்யாக நம்புதலுமாம்; குருமொழி "நெஞ்சமைவுறவே திட்பமுறல் சமாதி யிச் சாதனஞ்சே ரதிகாரி செயுங் குரு சேவையினை யெடுத்தியம்பில்" எ. து. சமாதி யெனல் குரு வுபதேசத்தை மனதிற் பொருந்த ஐயந் திரிபறக் கோடலுமாம். இந்த நால்வகைச் சாதனங்களு மமைந்த அதிகாரி செய்யுங் குரு சேவையினை முறையே யெடுத்துச் சொல்லுமிடத்தில் எ. று.

உட்கரணம் அடக்கலாவது காமக் குரோதாதிகளுக் கிடமின்றிச் செயலே. புறக்கரணம் அடக்குதலாவது அக்காமாதிக ளினி யெழவொட்டா தாராய்ச்சியாற் றணித்தலே. திட்பம் உறுதி; அதாவது பசையின்றிய வுலக மெனத் தெளிகை. (கக)

(அ. கை.)

குருசேவைக் கியைந்த அதிகாரிகளி னிலைமை நான்கெனவும், அவற் றின் இலக்கணங்க ளினையவெனவும், இனிக் கூறப்புகுங் காண்டங்களின் பெயரினையவெனவும், இவற்றால் அதிகாரிகள் வெவ்வேறுவாரெனவு முண ர்த்துகின்றது.

ஆத்தமுட னங்கமே தானஞ் சற் பாவ
 மாமவற் றுட் குருபரனுக் கனுகூல விருத்தி
யாத்தமுயர் குருபரன்குற் றேவலே யங்க
 மருட்குரவற் குரியமனை நிலமுதலா மவற்றைக்
காத்தலது தானமாஞ் சற்குருவே மெய்யாக்
 கண்டசிவ மெனநம்பு மதுவேசற் பாவ
மேத்துகரு மம்பத்தி மிகுஞான காண்ட
 மெனுமிவற்றான் மூவதிகா ரிகள்வேறு முளரால்.

(இ. ரை.) "ஆத்தமுட னங்கமே தானஞ் சற் பாவமாம்" எ. து. மாணுக்கன் றனதாசிரியருக் கன்புசெய்யு நிலைமை: ஆத்தம், அங்கம், தான ம், சற்பாவம் என நான்காம். "அவற்றுட் குருபரனுக் கனுகூல விருத்தி யாத்த முயர் குருபரன் குற்றேவலே யங்கம்" எ. து. மேற் கூறிய நான்க னுள் ஆத்தமெனல் ஆசிரியனுக் கவரிட்டப்படி செய்யுங் கிர்த்தியங்களாம், அங்கமெனல் மேலாய குரு பரனது பாத சிசுருஷை செய்தலாம்; "அருட் குரவற்குரிய மனை நிலமுதலாமவற்றைக் காத்தலது தானமாம்" எ. து. தான மெனல் மிக்க அருளையுடைய குருபரனுக் குரித்தாயுள்ள வீடு நிலம் முத லியவற்றை விக்கினம் வராது காத்தலாம்; "சற்குருவே மெய்யாக் கண்ட சிவமென நம்புமதுவே சற்பாவம்" எ. து. சற்பாவமெனல் உண்மையாகக் கண்ட சிவ வடிவமென்று திடமாக நம்புவதாம். "ஏத்து கருமம் பத்தி மிகு ஞான காண்டமெனு மிவற்றான் மூவதிகாரிகள் வேறுமுளர்" எ. து. எவ ரும் மதிக்கத்தக்க கருமகாண்டம், பத்திகாண்டம், மேலாய ஞான காண்ட மெனக் கூறு மிம்மூவகையால் அதிகாரிகளும் மூவகையாவர். இவ ரன்றி வேறதிகாரிகளு முளர் எ. று.

ஆல் அசை. ஆப்தம் வடமொழி, ஆத்தம் அது திரிந்த தென்மொழி. மனை நில முதலியவற்றைக் காத்தற்குத் தான் பீடமா நிற்றலின் தான மென்றார். சிவம் எதிரில் வந்தா லெத்தகைத்தோ, அத்தகைத்தாகக் குரு காண்டலின், சற்குருவே மெய்யாக்கண்ட சிவமென நம்புமதென்றார். சிவ த்திற் கையந் திரி பெங்ஙன மின்றோ, அதுபோலக் குருவினிடத் தையந்

திரிபின்மையின், சிவமே குருவென்னுது குருவே சிவமென்றார். இங்ஙனங் கோடற் கையமின்மையின், நம்புமதுவே சற்பாவ மெனப்பட்டது. துக்க நிவிர்த்திக் கேனைய காண்ட மிடம் பெறாமையின், மிகுவென் றடைகொடுத்து மிகு ஞான காண்டமென்றார்.மூவதிகாரிகளாக வேறுமுளர் என்றுரை கோடல் சிறப்பு; ஆத்த முதலிய நான்கிடத்துங் கூறிய ஆசிரியர்க ளின்ன வருணுசிரமத்தரென இதிற் கணியாததால். ஞாயம், சோதனை, பொருத்தம் என்னும் இம்மூன்று முகத்தா லையந் திரிபகற்ற வலி யில்லாதார்: தமைத் தாமே யாசிரியரெனக் கொள்ளுத லெவ்வருணுசிரமத்தாருக்கும் நீதி யன்றெனக் காட்டக் குரு பரனெனவும், உயர் குருபரனெனவும், அருட் குரவனெவும், சற்குருவெனவுங் கூறினார். மெய்யாக் காணக் கூடாத சிவத்தை மெய்யாக்கண்ட சிவமென்றது குருவின் அருமை தோன்றற்கென்க. (கஉ)

(அ. கை.)

முன்னர்க் காண்டம் மூன்றென்றார். அவற்றிற்குரிய அதிகாரிகளின் இலக்கணங்களும் இன்னும் வேறாகவுள்ள ஐவரின் நாமங்களும் இனைய வென உணர்த்துகின்றது.

உடம்பினையும் வருகுடும்பந் தனையுமியா னெனதென்
றுளன்கரும காண்டியெலாக் கிரியையுமீ சற்கே
திடம்பெறநின் றாக்குமவ னேபத்தி காண்டி
செயுங்கரும மனைத்தினுக்குங் கரிதானென் றிருப்போன்
மடநதவிரு நன்ஞான காண்டியென லாகு
மற்றுமுள ரைவரொரு வர்க்கொருவ ருயர்வா
யடைந்தவதி காரிகளாங் கருமிமுமூட் சுவினோ
டறையுமப்பி யாசியனு பவியுடனா ரூடன்.

(இ. ரை.) "உடம்பினையும் வரு குடும்பந்தனையு மியானெனதென் றுளன் கருமகாண்டி" எ. து. உடம்பையும் அதுகாரணமாக வருங் குடும்பத்தையும் யானென தென்னு மயக்கமுள்ளோன் கருமகாண்டியெனப் படுவதாம்; "எலாக் கிரியையு மீசற்கே திடம்பெற நின்றாக்குமவனே பத்திகாண்டி" எ. து. தனது சற்கருமங் காரணமாக இயற்றப்படுங் கிரியைகளனைத்துந் தனதெனக்கொள்ளாது ஸ்திரமாகநின்று ஈசுரார்ப்பணஞ் செய்பவனே பத்தி காண்டி யெனப் படுவதாம்; "செயுங் கரும மனைத்தினுக்குங் கரிதானென் றிருப்போன் மடந்தவிரு நன்ஞானகாண்டியெனலாகும்" எ. து. தனது திரிகரணத்தாலும் இயற்றப்படுங் கருமமனைத்தினுக்கும் உடன்படாமல் அவற்றிற்குச் சாட்சி தானென்றிருப்பவனே அறியாமை கடந்த நல்ல ஞான காண்டி யெனப்படுவதாம். "மற்று முள ரைவ ரொருவர்க் கொருவருயர்வா யடைந்த அதிகாரிகளாங் கருமிமுமூட்சுவினோ டறையு மப்பியாசியனுபவியுட னாரூடன்" எ. து. முன்னர் வேறுமுள ரென்றோமே; அவர்கள் தத்தமக்குள் ஒருவருக்கொருவர் தாரதம்மியத்திறத்தராய்க் கருமி, முமூ

ட்சு, எவருஞ் சொல்லத்தக்க அப்பியாசி, அனுபவி, ஆரூடன் என்னு நாமத்தை யடைந்த அதிகாரிகளெனப் படுவராவார் எ. று.

எவ்வகை மாந்தரும் இம்மூவகைத் திறத்தரா யிருப்பதுபற்றிக் காண்டி மூன்றென்முர். எவ்வகை மதத்தரு மொப்புமைபற்றி யிம்மூன்றினுளடங்கு வராதலால், ஒப்பின்முடித்த லென்னு முத்தி. இஃதெவ்வகை மதத்தரும் உடன்படற் கியைதலின், இது வுடம்படலென்னுமதம். அன்றேல் இம்முத்திறக் காண்டிக ளல்லராக வேண்டும். அங்ஙன மின்றே. இல்ல ராதலின் அது வழு. எல்லாக் கிரியையும் ஈசுவரார்ப்பணஞ் செய்தல் யாது பற்றியெனின், எல்லாக்கிரியைகளையுந் தனக்கெனச் சொரூப மொன்றில்லாத தனதுடலுக்கும், பிறவிதோறும் நூதன நூதனமாக வருங் குடும்பமாகிய வறிய வுடல்களுக்குந் தத்தஞ் செய்தலின், பய னின்றி யமையும். ஆதலின், பிறவிதோறும் நின்று காத்த லீசனாதலி னவனுக்கே தத்தஞ்செய்தல் அறிஞருக்குடன்பாடு பற்றி யென்க. அனைத்தினுக்குஞ் சரி தானெனல், அறிவை யன்றிச் சகல சேட்டைகட்கும் வினை முதல் வேறின்மையினானும், உண்டேல் ஆய்தலின்கண் அயல்போற் றோற்றி மறைதலினானும் பொருந்து மென்க. அயலின்றித் தான்மாத்திரமா விளங்கலின், மடந் தவிரு நன் ஞானகாண்டி யெனப்பட்டது. இங்கே மற்றெனல் பிறிதெனலைக் காட்டநின்றது. (கரு)

(அ. கை)

*மேற்கூறிய ஐந்ததிகாரிகளில் நால்வர் இலக்கணம் உணர்த்துகின்றது.*

மூடமொடு தன்சாதி கருமமே பற்றி
முத்தனா மவனூறு பிறப்பினிலொண் கருமி
நீடுலக முண்மையென நினைந்துபுறக் கரும
நிட்டனாய் முப்பிறப்பின் முத்தனா மவனே
நாடரிய முமூட்சுலகங் கனவெனக்கண் டுள்ள
நற்கருமஞ் சேர்ந்துபிறப் பிரண்டினிலப் பியாசி
வீடுலக விவகார நினையாமல் விவேக
மேவியோர் பிறப்பினா முத்தனனு பவியே.

(இ. ரை.) "மூடமொடு தன்சாதி கருமமே பற்றி முத்தனா மவனூறு பிறப்பினி லொண்கருமி" எ. து. மூடத்தோடு தன்சாதிக் குரிய கர்மானுஷ்டானத்தையே விடாதுபற்றி யினி வரும் நூறு பிறப்பினுள் சீவன் முத்தனாகத்தக்கவனே ஒள்ளிய கருமி யெனப்படுவான்; "நீடுலகமுண்மையென நினைந்து புறக்கரும நிட்டனாய் முப்பிறப்பின் முத்தனாமவனே நாடரிய முமூட்சு" எ. து. இந்தப்பெரிதாகிய வுலகஞ் சத்தியமெனக்கருதி யியற்றும் புறக் கருமங்களுக்கு மாறாய சிந்தை யுடையவனாய் இனி மூன்று ஜனனத்திற் சீவன் முத்தனாகத் தக்கவனே மதித்தற்கரிய முமூட்சு எனப்படுவான்; "உலகங் கனவெனக்கண்டுள்ள நற்கருமஞ் சேர்ந்து பிறப்பிரண்டினி லப்பியாசி" எ. து. உலகங் கனவெனக் கண்டு தனதுள்ளம் ஆத்மானுஷ்டானத்

திற் சார்ந்து, இனி வரு மிரண்டு ஜன்மத்திற் சீவன் முத்தனாகத்தக்கவனே யப்பியாசி யெனப்படுவான் ; "வீடுலக விவகார நினையாமல் விவேக மேவி யோர்பிறப்பினு முத்தனனுபவியே" எ. து. தனது வீட்டைப்பற்றியும், உலகத்தைப்பற்றியும் இயற்றும் விவகாரஞ் சற்றுந் தனது நினைவிற் றுக்காது சுயம்பிரகாசநாட்ட மேலிடத்தக்க விவேகத்தையே யடைந்து, ஓர் பிறப்பிற் றானே சீவன்முத்தியாகத் தக்கவ னனுபவி யெனப்படுவான் எ. று.

ஏ அசை. தத்தம் வருண நெறிபற்றி யொழுகல் மூடங் காரணமாக வாதலின், மூடமொடு தன்சாதி கருமமெனப்பட்டது. புறக் கருமங்களுக்கு வெதிருத்தசேட்டை உலகம் யாதெனவும், அதற்கதிஷ்டானம் யாதெனவும், உயிர்க்குப் பேதமோ அபேதமோ வெனவும், பேதமெனின் உடற் சம்பந்த மின்றிய வுயிராகவேண்டுமெனவும், அபேதமெனின் உயிருலகமாகவேண்டு மெனவும் வரும் நிலைமைகளைச் சிந்தித்தலே. நற் கருமஞ் சேர்தல் உலகம் யாதினது பிரிதிபலனம்? எங்கே தோன்றி யெங்கே யொடுங்கலென் றக நாட்டங் கொண்டு நிற்றலே. வீடுலக விவகார நினையாமல் விவேக மேவல் வியாபக விளக்க நாட்டத்தில் நன வாகவும், நினை வாகவும், கன வாகவும், சேட்டை யிழப்பாகவும், அவ்வவற்றிற் குரிய காட்சிகள் பற்பல வாகவும், அவஸ்தைகள் பற்பலவாகவும் அனந்த ஜன்மங்களாக வழங்கிவந்த தெங்கே யென நாடிக் காணும லது வாக நிற்றலே. பிறப் பிருவகைப்படும்; அவை வினைவயத் தெய்துவதும், நிலைவயத்தெய்துவதுமென. வினைவயத்தெய்தல் காமியத்தவங் காரணமாதலே; நிலைவயத்தெய்தல் நிட்காமியத்தவங் காரண மாதலே. இங்கே பிறவி வரையறைகாட்டியது மானிடஜன்மத்தைக் குறிக்க. எனவே, இடையி லேனைய பிறவிக ளெய்தினும் எய்துமென்பது பெற்றாம். ஒவ்வோ ரான்மாவும் மானிடரா நின் றியம நியமாதிகளி லொவ் வொன் றநுஷ்டித் திருக்குங்கால் பிராரத்வத்தா லெய்திய வுடனீங்கும். இடையில் வேறு ஜன்மங்க ளனந்தம் வாய்க்கினும் குறைவாக விட்ட அநுஷ்டானம் நிலையைப்பற்றவும், அதுகாரணமாக மேலேறவும் மானிடஜன்மம் வேண்டு மாதலால் இங்ஙனம் வேண்டுகோளின் முறைமைபற்றிப் பிறப் பெல்லை வகுத்தாரெனினும் அமையும். மறுக்கில் சாதனஞ் சற்றுமில்லாதார்க்கு அந் தந்த நிலை வாய்ப்பானேன்? வாய்ப்பதால் மறுத்தற்கிடமின்றென்க. இதனை மறுப்பார் வெறும் வாயை மெல்லல்போன்றவராம். யாவனொருவ னெவற் றிற்கும் முரணாநின்று யாதோர் பிரயோசனத்தைப்பற்றியேனும் விதிவாக்கி யத்திற்குக் கட்டுப்படின், விரைவிற் சில ஜன்மத்திற் கணிக்கப்படாத பல பிறவிகளி னின்றகல்வன் என்பது துணிபெனக் காட்ட நூறு பிறப்பினி லெனவும், அவ்வவர் பருவத்திற் கியைந்தவாறு மூன்று பிறப்பிலெனவும், பிறப் பிரண்டினி லெனவும், ஓர் பிறப்பிலெனவுங் கூறியவாறு காண்க.கச

(அ. கை)

ஏனைய ஆரூடன் இலக்கணமும், இவரொழிந்த மூன்றதிகாரிகளின் இலக்கணமும் இனையவென வுணர்த்துகின்றது.

உலகநிலை தோன்றுமற் றன்றிகழ்ஞா னத்தா
லுண்மைமுத்த னுமவனே யாரூடன் மற்று
முலகமுத லியாதெனத்தேர் வொடுகுருவை யடைந்து
முடம்பாதி பொய்யெனக்கண் டருட்குருவை யடைந்து
முலகிலொரு குரவன்றன் மகற்குபதே சஞ்செய்
துறக்கேட்டு முயர்தருஞா னிகளாகி முத்தி
யுலகுதொழு விவேகமொடு விரத்திதெய்வ கதியா
லுற்றிடுவ ரிவர்வேறு மூவதிகா ரிகளாம்.

(இ. வை.) "உலக நிலை தோன்றுமற் றன் றிகழ் ஞானத்தா லுண்மை முத்தனுமவனே யாரூடன்" எ. து. உலகிருப்புச் சற்றுந் தோன்றுது தன் பால் விளங்கும் மெய்ஞ்ஞானத்தா லுண்மை முத்தனு விளங்குபவன் யாவனே, அவனே யாரூடனெனப்படுவான். "மற்றுமுலகமுதல் யாதெனத் தேர்வொடு குருவை யடைந்தும்" எ. து. பின்னும் உலகத்திற்கு முதல் யாது பொருளென விசாரணைத் தெளி வோடு ஆசிரி யரைச் சரணுகதி யடைந்தும், "உடம்பாதி பொய் யெனக்கண் டருட் குருவை யடைந்தும்" எ. து. தேகமுதலிய அனைத்துந் தனக்கெனச் சொரூப மொன்றின்மையின் மித்தையெனக்கண் டுய்வான்வேண்டி யருட் குருவை யடைந்தும், "உலகி லொரு குரவன்றன் மகற்குபதேசஞ் செய்துறக்கேட்டும்" எ. து. உலகத் தின்கண் ஓராசிரியன் றனது மாணுக்கனுக் குபதேசஞ் செய்ய அதனைக் கேட்டும், "உயர்தருஞானிகளாகி முத்தியுலகு தொழு விவேகமொடு விரத்தி தெய்வ கதியா லுற்றிடுவ ரிவர் வேறு மூவதிகாரிக ளாம்" எ. து. அதனுற் சிறந்த ஞானவான்களாகிச் சான்றோராற் கொண்டாடத்தக்க விவேகமோடு விரத்தியாலேனுந் தெய்வகதியாலேனும் முத்தியடைவோர் வேறு சிலருளர்; இவர்களும் மூவதிகாரிகளெனப்படுவர் எ. று.

அறிவே வடிவாயின னெனக் காட்ட ஆரூட நிலை யினைய தென்று கூறப்பட்டதென்க. முத்தி யெனலை மூன்றிடத்து மொட்டுக. இம்மூவகை யும் ஐக்கிய முத்தியெய்தற் கியைதற் பாலவாதலின், இதுகாரணமாக மூவதி காரிகள் வேறுமுளரென்றூர். இம்மூவகையோர்க்கும் ஞானுநுபூதி வாய்த் தல் இன்ன காரணத்தாலெனக் கணித்தற் கரி தாதலின், விவேக மொடு விரத்தி தெய்வகதியா லென்றூர். உடன் கொடுத்தமையின் விவேகத்தை விரத்தி தெய்வகதியோடு சேர்த்து மூன்றுக்குக. அன்றேல், உடனிகழ்ச்சிப் பொருள் தருவானேன் ? தருவதால் மறுக்கற்க. யாதோர் முன்னிலை குரு வின்றி யறிவுக் கறிவா விளங்கலைத் தெய்வகதியெனவும், விரத்தி மேலுற் றுழி யாசிரிய னுபதேசித்த அக்கணத்திற் றன தெதார்த்தம் விளங்கலை விரத்தியெனவும், சோதனை ஞாயம் பொருத்த மென்னு மிம்மூன்று முகத்தா லையந் திரிபறச் சுருதி யுத்தி தெளிந்த விடத் தாசிரிய னருட்கண்படத் தன தெதார்த்தம் விளங்கலை விவேகத்துட னெனவுங் கொள்ளக் கிடந்தமை

காண்க. அடைந்தும், கண்டும், கேட்டும் முத்தி யுற்றிடுவரெனக் கூட்டி முடிக்க. இங்கே யுலகத்திற்கு முதலெனல் இனி யுபாதேயத்துக் கிடம் பெறுத வுபாதானத்தை. அறிபடு பொருள்க ளனைத்துமெனக் குறிக்க உடம் பாதி யென்முர். இவற்றைப் பொய் யெனல் விகாரத்தை யன்றித் தனக் கெனச் சுயம்பாக வோர்முதலின்றிக் காண்டலைப்பற்றியென்க. இந்த மூன் றும்மைகளும் எண்ணும்மை. விவேகம், விரத்தி, தெய்வகதி என்பவற்றை முன்னே மூன்முேடுகூட்டி நிரனிறையாக்கவேண்டுவதால் இது நிரனிறை யணி. இக்கவியில் உலசென்னு நான்கனுள் மூன்று பஞ்சபூத மயமெனவும், ஒன்றறிவுடையோரெனவுங் கொள்க. தெய்வகதியா லென்றதனுல், ஏனைய விரண்டையு மேதுப் பொருளாக்குக. இங்கே மூவரெனலை மூன்று வினை யெச்சங்களாற் றெரிந்திடுக. (கரு)

(அ. கை.)

மாணுக்கன் அதிகார பேதத்தால் வரும் ஆசிரிய பேத மெண்வகை யாமெனக் கூறுவான் ருெடங்கி, இக்கவியில் போதகர் முதலிய நால்வர் இலக்கணம் இனையவென வுணர்த்துகின்றது.

சாதகர்க ளாஞ்சீடர் பேதத்தாற் குரவர்
தாமும்போ தககுருவே முதலாக விருநாற்
பேதமடை குவ ரவரிற் போதகன்முன் னூலிற்
பெரும்பொருள்கூ றிடுபவன்றத் துவந்திகழ்த்து பவனே
வேதகனல் வசியாதி யாலிம்மை யின்பம்
வெந்துயரங் குதவுமவ னிகிதகுரு வறத்தைப்
போதகஞ்செய் திருமையினு மின்பமருள் பவனே
புகழ்தருகா மியகுருவென் றறைகுவர்மு தறிஞர்.

(இ. ரை.) "சாதகர்களாஞ் சீடர் பேதத்தாற் குரவர்தாமும் போதக குருவே முதலாக விருநாற் பேத மடைகுவர்" எ. து. அப்பியாசிகளா யுள்ள சீடபேதங்களா லவரவர்க் கனுக்கிரகிக்கும் ஆசிரியர்களும் போதகாசிரியர் முதலாக எண்வகையின ராவர். "அவரிற் போதகன் முன் னூலிற் பெரும் பொருள் கூறிடுபவன் றத்துவந் திகழ்த்துபனே வேதகன்" எ. து. அவர்க ளுக்குட் போதக னெனல் முத னூலான மகா வாக்கியத்தி லுள்ள சிறந்த அர்த்தங்களை யையந் திரிபுறு து கூறுபவ னும்; வேதக னெனல் உண்மை ஞானத்தை விளக்கி விப்பவனும் ; "நல்வசியாதியா லிம்மை யின்பம் வெந் துய ரங்குதவுமவ னிகிதகுரு" எ. து. நிகிதகுருவெனல் நல்ல வசியமுதலிய அஷ்டகருமங்களா லிம்மைக்கியைந்த இன்பமும் மறுமைக்கியைந்த துன்ப முங் கொடுப்பவ னும். "அறத்தைப் போதகஞ் செய் திருமையினு மின்ப மருள்பவனே புகழ்தரு காமியகுருவென்றறைகுவர் மூதறிஞர்" எ. து. புக ழுத்தக்க காமிய குருவெனல் காமியார்த்தத்துக் கியைந்த அறநெறியை யதி னின்றுஞ் சற்றும் வழுவுருது நிற்கப்போதித்து, இம்மை மறுமை யிரண்

டிடத்துஞ் சுகபோகங் குறையா தருள்பவனும் என் றறிவின் மிக்கோர் கூறுவர் எ. று.

இங்ஙனம் மாணுக்கரா லாசிரிய பேதங் கோட லெவர்க்கு முரணுறு தென்க. பெரும் பொருள் கூறுத லாவது முன் பின் முர ணுறுது விளக்க லும், தத்துவம் நிகழ்த்தலாவது தத்துவங்களனைத்தையுங் களைந் துண்மை யை விளக்கலும், இம்மையிலின்பமு மறுமையிற் றுன்பமும் வரச்செய்தல் இம்சை மைதுனாதிகளுக் கிடம்பெற நிற்றலும், இருமையினு மின்பந் தருத லாவது இல்லறம் வழுவுறு நிற்கப் போதித்தலுமாம். நிஹிதமெனல், நிகித மென்றுயிற்று. வசியாதி: வசியம், மோகம், தம்பனம், ஆகருஷ்ணம், உச்சாடனம், வித்துவேஷணம், பேதனம், மாரணம் என எட்டாம். அவற் றுள் ராஜவசியம், ஜனவசியம், ஸ்திரீவசியம் முதலியவற்றை வசியமென வும்; சுழுத்தி, விடம், மூர்ச்சை முதலிய மாயங்களைச் செய்தல் மோகன மெனவும்; அக்கினிஸ்தம்பம், ஜலஸ்தம்பம், சிம்மஸ்தம்பம், இந்திரிய ஸ்தம்பம், கட்கஸ்தம்பம், கதிஸ்தம்பம், ரூபஸ்தம்பம் முதலியவைகளைச் செய்வது ஸ்தம்பனமெனவும்; வஸ்திராபரண வாகன வனிதாதி வஸ்துக் களை நிச ஸ்தானத்திலிருந்து வரச் செய்வது ஆகருஷ்ண மெனவும், பூர்வ சுகாசரித நிரச ஞத்மகஞ் செய்தல் உச்சாடன மெனவும், பிராண சிநேக நீங்க அன்னியோன்னிய விரோத கரணஞ்செய்தல் வித்துவேஷண மென வும்; பாதுகாசித்தி, யஞ்சனசித்தி, குளிகாசித்தி, மூலிகாசித்தி, ரஸவாத முதலிய சித்திகளைச் செய்தல் பேதனமெனவும், அபிசார கன்ம ஜனித வியாதியாதிகளி லிருந்த கால மிருத்து வரச் செய்வது மாரண மெனவுங் கொள்க. (கரு)

(அ· கை.)

மேல் நிறுத்த முறையானே சூசகன் முதலிய நால்வர் இலக்கணமும், அதி தீவரனது இலக்கணமும் இனையவென வுணர்த்துகின்றது.

சூசகனும் விவேகத்தாற் சமைமுதலாங் குணங்க [வோன்
டொகுப்பவன்பொய் விடயமென வான்மவிருப் பருள்
வாசகனுஞ் சிவசீவ ரயிக்கியஞா னத்தை
வழங்குமவன் காரகனை யந்தவிர்த்து நிலைத்த
வாசகனு முத்தியருள் பவன்விகித குருவா
மதிகாரி யிவராகு மெனமுன்னர்க் கூறு
நேசமுறு சீடர்தம்மு ளொருவன்முத் தாப
நெருப்பினல் வெந்துசிந்தா குலமுடைய னுகி.

(இ. ரை.) "சூசகனும் விவேகத்தாற் சமைமுதலாங் குணங்கடொகு ப்பவன்" எ. து. தனது விவேகத்திறுற் சமை தமை முதலிய சட் குணங் களையும் ஒருங்கே வரச் செய்பவன் சூசகாசாரியனும்; "பொய் விடயமென வான்மவிருப்பருள்வோன் வாசகனும்" எ. து. கருத்துப் பொருள் காட்சிப்

பொருளா நின்றுள்ள விடய மனைத்தும் அதிஷ்டான மன்றுதலால் மித்தையே யெனக்காட்டி, ஆரோபமெனற் கெவ்விதத்துஞ் சற்றுமுடன்படாத ஆன்ம சைதன்யத்தில் நேரே பிரியம் விளையச் செய்வோன் வாசகாசிரியனும்; "சிவசீவரைக்கிய ஞானத்தை வழங்குமவன் காரகன்" எ. து. இசையுமாறு சீவேசுவர ஐக்கிய ஞான மினையதென விளக்குவிப்போன் காரகாசிரியனும்; "ஐயந்தவிர்த்து நிலைத்த வாசகனு முத்தியருள்பவன் விகிதகுருவாம்" எ. து. குற்றமற்றதாயும் என்றும் நிலைபேறுடையதாயு மிருக்கின்ற முத்தியருளத்தக்கவன் விகிதாசிரியனும். "அதிகாரியிவராகு மெனமுன்னர்க்கூறு நேசமுறு சீடர்தம்முளொருவன் முத்தாப நெருப்பினால் வெந்து சிந்தாகுல முடையனாகி" எ. து. இவர்களே யதிகாரிகளாவரென முன்னர்க் கூறிய அன்புள்ள சிடர்களுக்குள் அதிதீவரனாகிய வொருவன் தாபத்திரயாக்கினியினா னீறுபட் டதனால் மனோதுக்க மேலிட்டு எ. று.

சமை முதலாங் குணங்களென்றதனால் சட் குணங்களையும் வருவிக்க. ஆன்ம விருப் பருள்வோ னென்றதனால் விடய வெறுப் பெஞ்சி நின்றது. சிவ சீவரைக்கியமென்னாது ஞானத்தை மிகைபடக் கூறியது ஞானத்தையன்றிச் சிவசீவரின்றெனற்கு. ஐயந்தவிர்த்தென்றதனால் திரிபையும் வருவிக்க. சீடர்தம்மு ளொருவ னென்றதனால் அதி தீவர னெனப் பெற்றாம். மிக்க இதத்தைச் செய்தலின் விகித னெனப் பட்டது. காரகன் சொடுப்பவன்; எனவே, ஐக்கிய ஞானத்தைக் கொடுப்பவனென்றாயிற்று. தாபத்திரயாக்கினியாவன:—ஆதியாத்மிகம், ஆதிதெய்விகம், ஆதிபௌதிகமென மூன்றும். முத்தாப நெருப்பெனல் உருவகம். சிந்தை ஆகுலமெனல் சிந்தாகுலமென்றாயது தீர்க்க சந்தியா லென்க. இங்கே கூறிய ஆசிரியர்கள் அவ்வவ்வவசர நிலைகளாலன்றி ஏகமாகாரென்க. குருவென்றதும் அந்தந்தநிலைகளை விளக்கற் கென்க. இதனால் உத்தமம் மத்திமம் அதமமெனல் அமைந்திருப்பதை யந்தந்த நூல்களாற் காண்க. இக்கவி குளகம். (கஎ)

(அ. கை.)

முன்னர்க் கூறிய தாபத்திரயாக்கினியால் வெந்த அதி தீவரன் றனது குறை தவிர்க்கத்தக்க ஆசிரியனைக் கண்டடைந்து வணங்கவேண்டிய வாறு வணங்கி, தனது குறையிரத்தலை யுணர்த்துகின்றது.

நானுரிப் பவமெனக்கு வந்தவா றென்கொ
னசிப்பதெவ ராலெனவாய்ந் தலர்கரங்கொண் டேகி
யானுநற் கல்வியறி வடக்கம்வை ராக
மாதியாங் குணமுடைச்சற் குருவையடந் தெதிர்மண்
ணூறரப் பணிந்தெழுந்தன் பாற்கரங்கள் குவித்து
வுறவழுத்தி யருட்குருவே யென்பாசத் தழிவு
தானுமெத் திறத்தினு லெனவினவல் சீடன்
றனதுவிதி வத்துபசன் னத்துவமா மன்றே.

(இ. ரை.) "நானெறிப் பவமெனக்கு வந்தவா றென்கொ னசிப்ப தேவ ராலெனவாய்ந்தலர்கரங்கொண்டேகி" எ. து. எல்லாரிடத்தும் வழங்கப்படு நானென்பவன் யாவன்? இந்நானுக்குப் பவம் வந்தவா றெங்ஙனம்? யாது காரணத்தால் நசிப்பது? என் றாராய்ச்சி யுடையே னுய்த தனது கையிற் றூயமலர்கொண்டு சென்று, "ஆனநற்கல்வியறிவடக்கம் வைராசமாதியாங் குணமுடை சற்குருவை யடைந்து" எ. து. என்றும் நசிவரு த பூரண கல்வியும் உயர்ந்த விவேகமும் யாவரிடத்தும் அடக்கமுடைமையும் அசுத்தத்திற் சித்தம் வையாத வைராகமும் முதலாக நின்றுள்ள வுயர்ந்த குணங்களைத் தனக்கியல்பாகவுடைய சற்குரு வினையனைக் கண்டடைந்து, 'எதிரண் ணூனுறப்பணிந் தெழுந் தன்பாற்கரங்கள் குவித்தே யுற வழுத்தி யருட்குருவே யென்பாசத் தழிவுதானு மெத்திறத்தினுலென வினவல்' எ. து. அவரது சன்னிதியிற் றனது தேகமுழுது நிலத்திற் படுமாறு டணிந்து, எழுந்து நின்று, தனது மிக்க அன்பா லுபயகரங்களையுங் குவித்து, நாவாரத் துதித்து அருளே வடிவாநின்றுள்ள குருவே! எனது பாசநாச மெங்ஙனமெய்துமென இரந்து கேட்டல், "சீடன்றனது விதிவத் துபசன்னத்துவ மாம்" எ. து. மாணாக்கனது நெறியாநின்றுள்ள வுபசன்னத்துவமெனப்படுவதாம் எ. று.

அன்று எ அசைகள். அல்லதை நானெனலால் நானுரெனவும், எப்பவமும் எவ்வுயிர்க்குஞ் சுதந்தரமன்றாதலால், இப்பவமெனக்கு வந்தவாறென் கொலெனவும், பத்திகாண்டத்திற் பவநாசம் சதா சிவனாலெனவும், ஞான காண்டத்தில் ஆன்மாவா லெனவுங் கூறிய தொருதலை துணிபாக வேண்டி நசிப்பதெவராலெனவுங் கூறியவாறு காண்க. ஆதியாங் குணமென்றதனால் இரக்கம், அருளுடைமை, கிருபாநோக்க முதலியவற்றைக் கொள்க. குணமுடையவென்பது குணமுடையென்றாயது கடைக்குறை. ஊனுறப்பணிந் தென்றதனால் அஷ்டாங்க நமஸ்காரமெனக் கொள்க. அவை: பாதமிரண்டு, கரமிரண்டு, புயமிரண்டு, லலாடமொன்று, அட்சமொன்று என்க வழுத்தல் அஷ்ட மந்திரங்களை இவற்றைச் குரு கீதையில் சைதன்னியஞ் சாஸ்வித மென்னுஞ் சுலோகத்திற்காண்க. உபசன்னத்வமென்பது உப சமீபம். சன்னத்வம் இருத்தலென் றாயிற்று. எனவே, குரு சமீபத்திலிருந்து பர வஸ்துவைக் கேட்கவேண்டியவாறு கேட்டுத் தெளிதலெனப் பெற்றாம். நாவுற வழுத்தி யென்பது உறவழுத்தி யென்றாயது முதற்குறை, விதிவத்து என்பது நெறிப்படி பரவஸ்துவையெனக் கொள்க. ஊனெனபது காரண வாகு பெயர். ஆய்ந்து, கொண்டு, ஏகி, அடைந்து, பணிந்து, எழுந்து, உய்த்து, வழுத்தி, வினவலென முடிக்க. கொலலென்பது ஐயம்.

(அ. கை.)

அதனைக்கேட்ட குரவன் முன்ன ருணர்த்தவேண்டியது இனையதெனவும், அஃதிந்தனை வகைத்தாமெனவும் இக்கவியி லுணர்த்துகின்றது.

அனையவன தகிகாரந் தெரிந்தருளா னோக்கி
யஞ்சலோம் பென்றபய கரஞ்சிரத்தி லிருத்தி

புனையவருஞ் சுருதியுக்தி யாலவன னான்ம
புத்தியினை யொழித்துத்தா தான்மியவாக் கியத்தா
னினைவரிய வொருபிரம நீயேயென் றுள்ள
நிலையையுணர்த் துதல்குரவ னுபதேச மாகு
மினையவுப தேசமுறை யுத்தேச முடனே
யிலக்கணஞ்சோ தனையெனுமூன் றினையுமுடைத் தாமால்.

(இ. ரை.) "அனையவன ததிகாரந் தெரிந்தருளா னோக்கி யஞ்சலோம் பென்றபயகரஞ் சிரத்திலிருத்தி" எ. து. அங்ஙனம் வினவிய மாணாக்கனது பக்குவ நிலைமை யுணர்ந்து மிக்க அருளா னோக்கி நீ யாதொன்றிற்கு மஞ்சாதே; யாம் விளக்குவதைக் கடைப்பிடி தி யென்று தன தபயாஸ்தத்தை யவனது சிரசில் வைத்து, "புனையவருஞ் சுருதி யுக்தியாலவனனான்ம புத்தியினையொழித்து" எ. து. யாவராலும் இனையதென அலங்கரித்துச் சொல்லற்கரிய சுருதியினாலும், யுத்தியினாலும், அவனுக் கனந்த ஜன்மமா நின்றுள்ள அநாத்ம புத்தியை யொருங்கே யொழித்து, "தாதான்மிய வாக்கியத்தா னினைவரிய வொருபிரம நீயே யென்றுள்ள நிலையை யுணர்த்துதல் குரவ னுபதேச மாகும்" எ. து. தாதான்மிய மெனப் படும் வாக்கியத்தினா லினையதென் றெட்டியறிதற்கரிய தத்துவக் குழாங்களுள் யாதொன்றும் நீ அல்லை, பிரம சொரூபமே நீ யென்று எதார்த்த நிலையை விளங்க வுணர்த்தலாசிரியன துபதேசமெனப் படுவதாம். "இனைய வுபதேச முறை யுத்தேச முடனே யிலக்கணஞ் சோதனையெனு மூன்றினையு முடைத்தாம்" எ. து. இத்தகையா நின்றுள்ள வுபதேசத்தின் முறைமை உத்தேசம், இலக்கணம், சோதனை என்கின்ற மூன்றினையு முடையதாம் எ. று.

ஆல் அசை. நோக்கி, இருத்தி என்றமையா லினநோக்கிக் கருதலையும் வருவிக்க. அனான்மபுத்தியாவது தானலாததைத் தானெனக்கொள்ளும் மயக்க புத்தியை. தாதான்மிய வாக்கியமாவது அறிவையன்றிச் சீவனு மீசனு மின்மையென விளக்குவதை. நீயே யென்பதி லேகாரம் தத்துவங்களல்லை யெனப் பிரித்துக்காட்டலால் பிரிநிலை யெனப்படும். உள்ளநிலையாவது கற்பனை யற்றதை. நோக்கல் முதலிய மூன்றும் தீட்சா சமஸ்காரத்திற் கியைந்தது. அத்தீட்சை அகம் புறமென இரண்டாம்; அவைகளு மிவற்றுள் அடங்கும். நோக்கி, இருத்தி, ஒழித்து என்னும் வினையெச்சங்களை உணர்த்துதலென்பதில் முதனிலைப் பகுதியோடு முடிக்க. அஞ்சல் ஓம்பு இவ்விரண்டும் முன்னிலை யேவல். இங்கே யுட னென்பது எண் ணும்மையைக் காட்டாநின்றது. (கக)

(அ. கை.)

முன்னர்க் கூறிய உத்தேச முதலியவற்றின் வகையும், அஷ்டவிதப் பிரமாணத்தின் றொகையு மினையவென வுணர்த்துகின்றது.

அறியவுணர்த் துறுபொருளை நாமமாத் திரையா
லுறைந்திடுத லுத்தேச மாங்களகம் பளமாங்

குறியுடைய தானெனல்போ லப்பொருளிற் சிறந்த
குறியுரைத்த விலக்கணமவ் விலக்கியமாம் பொருளிற்
செறிவுறுமவ் விலக்கணமுண் டோவிலையோ வென்னத்
தெரிந்திடுதல் பரிட்சையோர் பொருளறிந்து பெறற்குப்
பொறியுறல்செய் காட்சியா மளவைமுத லாகப்
பொருந்துபிர மாணங்க ளெட்டுளவா மன்றே.

(இ. வை.) "அறியவுணர்த் துறுபொருளை நாமமாத் திரையா வறைந்திடுத லுத்தேசமாம்" எ. து. தக்கோ ரறியுமா றுணர்த்தத் தக்க பொருளை அரி யரன் முதலிய பெயர்மாத்திரமாகச் சொல்லுத லுத்தேச மெனப்படுவதாம்; "களகம்பளமாங் குறியுடைய தானெனல்போல் அப்பொருளிற் சிறந்த குறியுரைத்த லிலக்கணம்" எ. து. அலைதாடியென்னுங் குறியை யுடையது பசுவென்றாற் போல அந்தப் பரவஸ்துவிற் கியைந்த சிறந்த குறியினையதென் றுரைத்த விலக்கண மெனப்படுவதாம்; "அவ்விலக்கியமாம் பொருளிற் செறிவுறு மவ்விலக்கண முண்டோ விலையோ வென்னத் தெரிந்திடுதல் பரிட்சை" எ. து. அந்த இலக்கியார்த்த மெனப்படும் பரவஸ்துவிலதற் கியைந்த முக்கிய இலக்கணங்க ளுளவோ இலவோவென் றாராய்ந்துத் தெளிந்திடுதல் பரிட்சையெனப் படுவதாம். "ஓர் பொருளறிந்து பெறற்குப் பொறி யுறல்செய் காட்சியா மளவை முதலாகப் பொருந்து பிரமாணங்க ளெட்டுளவாம்" எ. து. அங்ஙன மாய வொப்பற்ற பரம்பொருளை யுணர்ந்தடைதற்குப் பிரத்தியட்சமா நின்றுள்ள காட்சிப் பிரமாண மாதி வைதீக மிறுவாக்கிடந்த பிரமாணங்க ளெட்டுளவாம் எ. று.

அன்று ஏ அசைகள். களம் கண்டம், கம்பளம் கம்பிளிபோற் றொங்குமலை தாடி. ஆசிரியர் நீ பிரம மென லுத்தேச மெனவும், அதற்குரிய நிலைகளைச் சொல்லல் இலக்கண மெனவும், அப்பிரமம் நீ யென விளக்கி யவ்விலக்கணங்களையு மொக்கக்காட்டல் பரிட்சை யெனவுங் கொள்க. பிரமாணங்க ளெட்டாவன:—பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம், உவமானம், அருத்தாபத்தி, அபாவம், சம்பவம், ஐதீகம் என்பவை. சுதரிசனத்தைப் பிரத்யட்ச மெனவும், அனுமித்தலை அனுமான மெனவும், வேதத்தை ஆகமமெனவும், உவமித்தலை உவமான மெனவும், அருத்தத்துக் காபத்து நேரிடலை அருத்தாபத்தியெனவும், இன்மையை அபாவமெனவும், உண்மையைச் சம்பவமெனவும், தொன்றுதொட்டு வழங்கிவருதலை ஐதீகமெனவுங் கொள்க. இங்கே இகம் இயதி எனல் ஐதீகமென்றாயது வடமொழிச் சந்தி. பரிட்சை சத்தாவத்தையிலு மென்க. சிறந்த குறியாவது சச்சிதானந்த வொருமையை; அன்றேல் முரணும். ஒருமையாக்குத லெங்கணுமரிது. (உ௦)

(அ. கை.)

முன்னர்க் கூறிய அளவை யெட்டனுள் காட்சி முதலிய மூன் றிலக்கண மினையவென வுணர்த்துகின்றது.

கடமுதலா மவற்றினது காண்கையது தானே
காட்சிபுகை யாலங்கி ஞானமனு மானந்
திடமருவு மவ்வனுமா னம்பதிஞை யேது
திட்டாந்த மெனுமங்க முடைத்தவற்றுட் பதிஞை
யிடமலைவெவ் வழலுடைத்தென் பதுபுகையுண் மையினு
லெனலேது மடைப்பளிபோ லென்பதுதிட் டாந்த
முடைமையுண ராத்தனுரை யானதிதீ ராதி
யுறுகனியா திகளுண்மை ஞானமா கமமாம்.

(இ. ரை.) "கடமுதலா மவற்றினது காண்கை யது தானே காட்சி, புகையா லங்கிஞான மனுமானம்" எ. து. கட முதலிய வஸ்துக்களின் றெரிசனமே பிரத்தியட்சப் பிரமாணமெனப் படுவதாம்; புகை காரணமாக அக்கினி யுண்டென் வுணரும் விவேகமே அனுமானப் பிரமாண மெனப் படுவதாம்; "திடமருவு மவ் வனுமானம் பதிஞை யேது திட்டாந்தமெனு மங்கமுடைத்து" எ. து. இங்ஙனந் திடமாகக் கொள்ளப்பெற்ற அவ்வனு மான மெனப்படுவது பிரதிஞ்ஞை, ஏது, திட்டாந்தம் என்னு மூன் றுறுப் புகளையு முடையது; "அவற்றுட் பதிஞை யிடமலை வெவ்வழ லுடைத் தென்பது" எ. து. அம்மூன் றுறுப்பினுள் பிரதிஞ்ஞையெனல் உயர்ந்த பர் வதங் கொடிய அக்கினியை யுடைத்தென்பது; "புகை யுண்மையினுலென லேது" எ. து. புகை யுண்டா யிருப்பதினு லக்கினி யுண்டெனக் கோடலேது வெனப்படுவது; "மடைப்பளிபோ லென்பது திட்டாந்தம்" எ. து. பாக சாலையைப்போ லிருக்குமெனக் கொள்வது திட்டாந்தமெனப் படுவ தாம்; "உடைமையுணராத்த னுரையா னதிதீராதி யுறுகனியாதிக ளுண்மை ஞான மாகமமாம்" எ. து. உண்மைப் பொருளினை யுணர்ந்த ஆப்தனது வசனத்தினுல் நதிக்கரை முதலிய வற்றிலுள்ள கனி முதலியவற்றை யுண ர்ந்த வுண்மை யறிவே யாகமப்பிரமாண மெனப்படுவதாம் எ. று.

கடமுதலாமவற்றி னென்றது காட்சிப்பொருள், கருத்துப் பொருளை யென்க. காண்கையாவது விடயகதப் பிரத்தியட்சம், ஞானகதப் பிரத்தி யட்சங்களை. விடயகதப் பிரத்தியட்சம் அவ்விருவகைப் பொருள்களையும் விஸ்மரணையாகக்காண்டலும், ஞானகதப் பிரத்தியட்சம் தஸ்மரணையாகக் காண்டலுமாம். புகையின்றேல் அக்கினி யுண்டெனக்கோடல் கூடாமை யின், புகையா லங்கி ஞானம் அனுமான மெனப்பட்டது. அவ்வனுமான மும் பிரதிக்ஞை, ஏது, திருஷ்டாந்தம் என மூன்றும். அவற்றுள் உபமா னம் இம்மலை யக்கினி யுடைத்தென்றற்போல உபமேயம் இவ்வுலகம் அறி வாகிய சத்துடைத் தென்பது பிரதிக்ஞை யெனவும், உபமானம் புகை யிருப்பதினு லென்றற்போல உபமேயம் ஞெப்திப் பிரிய மிருப்பதினு லென் றறிதல் ஏது எனவும், உபமானம் ஐய முறுமேல் அதனைத் தணித்தற்குப் பாகசாலை யென்றற்போல உபமேயம் உயிர்களைக் காட்டல் திஷ்டாந்த

மெனவுங் கொள்க. உடைமை யுணராத்தனென்றதனால் உடைமை யுண ராத ஆத்தனு முளனெனப் பெற்றாம். உடைமை யுண ராத்தன லேற்கப் பெற்றது பிரபல சுருதியெனவும், உடைமை யுணராத ஆத்தன லேற்கப் பெற்றது அற்ப சுருதி யெனவுங் கொள்க. நதிதீராதி யென்றதனால் ஏரி குளம் முதலியவைகளையும், கனியாதி யென்றதனால் நிழலாரோக்கிய முத லியவற்றையுங் கொள்க. நதிதீராதி யுறுகனியாதிக ளுண்மை ஞான மென் றதனால் போலி ஞானமு முளதெனப் பெற்றாம். கங்கை முதலிய தீரங்களும் அக்கரையிலுள்ள கனியாதிகளு முண்மையானாற் போலப் பிரபல சுருதியி னெல்லையும் அதிற் கூறுந் துசகாபாவம் சர்வகாமாப்திக முதலிய பயன் களும் உண்மையா மெனவும், கானல் முதலிய நதி தீரங்களும் அக்கரையி லுள்ள கனியாதிக ணிறைந்த தோப்புகளும் பொய்யானாற் போல அற்ப சுருதியி னெல்லையும் அதிற் கூறுஞ் சுகப்போலி ஆரூர்த்துயர் முதலிய பயன் களும் பொய்யா மெனவும் அறிய ஆகமமெனப் பொதுப்படக் கூறினு ரென்க. ஆமென்ற ஆக்க வினையை யேனை யிரண்டிடத்து மொட்டுக. ஆப்தன் இஷ்டன். (உக)

(அ. கை.)

அருத்தாபத்தியும் உவமானமுமாகிய பிரமாணங்கள் இனைய வென வுணர்த்துகின்றது.

பகற்பொழுதுண் ணுனொருவ னிளையாமை கண்டு
பரிந்திரவூண் கற்பித்தல் காணருத்தா பத்தி
யகத்தினிலை யுறுதேவ தத்தனெனி லிருப்ப
னவன்வேறோ ரிடத்திலெனத் தெரிந்தறித றன்னைத்
தகப்பெரியர் கேள்வியருத் தாபத்தி யென்பர்
தகுபசுவோ டொக்குமரையெனுமொழிகேட்டிருந்தோன்
புகப்படரும் வனத்திற்றன் விடயஞா னத்தாற்
பொருந்துதலை யுவமானப் பிரமாண மாகும்.

(இ. ரை.) "பகற் பொழுதுண் ணுனொருவ னிளையாமை கண்டு பரிந் திரவூண் கற்பித்தல் காணருத்தா பத்தி" எ. து. பகற்காலத்திற் சற்று முண வுண்ணுத நித்திய வுபவாசி யெனப்படுவோ னொருவனது தேகஞ் சுருங்கா மற் பாரித்திருப்பதைக்கண் டிவ னிராக்காலத்தில் மிக்க விருப்பத்தோடு கரவி லுணவுண்கிறானெனக் கற்பித்தல் திருஷ்டாருத்தாபத்தி யெனவும், "அகத்தினிலை யுறுதேவ தத்தனெனி லிருப்ப னவன்வேறோ ரிடத்திலெ னத் தெரிந்தறித றன்னைத் தகப்பெரியர் கேள்வி யருத்தாபத்தி யென்பர்" எ. து. இங்கே யிருந்த தேவதத்தனென்போ னிப்போது வீட்டிலில்லை யென்றொருவன் சொன்னால். அவன் வேறோரிடத்தி லிருப்பனெனக் குறி ப்பிற் றெரிந்து கொள்ளுதலைத் தக்க பெரியோர்கள் சிரவணருத்தாபத்தி யெனவுங் கூறுவர். "தகு பசுவோ டொக்குமரையெனு மொழிகேட் டிருந்

தோன் புகப்படரும் வனத்திற் றன்விடய ஞானத்தாற் பொருந்துதலே யுவ மானப் பிரமாணமாகும்" எ. து. மரை யென்னு மோர் மிருகந் தக்க பசு வோடொக்குமென் றுலகர் கூறும் வசனத்தைக் கேட்டிருந்தோ னொருவன் போகப் போகப் படர்ந்து செல்லும் ஆரண்யத்திற் றனது விஷய ஞானங் காரணமாக அதன்பா லடைதலே யுவமானப் பிரமாண மெனப்படுவதாம் எ. று.

நித்தியவுபவாசி யெனப் பெயர்கொண்டா னொருவ னுட லிளையாமை கண் டிரவிற் கரந்துண்பானெனக் கோடல் திஷ்டாருத்தாபத்தி யெனவும், ஒருவன் றனது வீட்டி லில்லையெனக் கேட்டுழிப் புறம்பிற் சென்றிருப்பா னெனக் கோடல் சிரவணருத்தாபத்தி யெனவும் நிற்றற் கிடம் பெறலி னிதனை யருத்தாபத்திப் பிரமாணமெனக் கொள்க. பசுவோடொக்கு மரை யென்றது தகுவென மிகைபடக் கூறலால் அலை தாடி யின்றிய பசு வெனக் குறிப்பித்ததாகக் கண்டாம். காணவே, ஏனைய வுறுப்பிற் சற்று மிளை யாமை பெற்றாம். எனு மொழி யென்றதனால் உலகரை வருவித்தாம். இங்கே விடய ஞான மாவது கண்ணாற் காண்டலே. தக்க பெரிய ரெனல் தகப் பெரிய ரென்றாய தெதுகைபற்றி யாதலா லிஃதிடைக் குறை கற்பித் தல் குறிப்பாற் கோடலே. உறுவென்ற விலேசானே முன்னிருந்த தேவ தத்தனென்றாம். எனவே, சணப்பொழுதிற்குமுன் வீட்டிலிருந்த தேவதத்த னிப்போ தில்லையெனக் குறிக்கப் பெற்றாம். பகற்பொழு துண்ணானொருவ னென்றதனால், நித்திய வுபவாசியென் றுரை கொண்டாம். இல்லை யெனல் இலையென்றாய திடைக்குறை. (உஉ)

(அ. கை.)

ஏனைய மூன்று பிரமாணங்க ளினைய வெனவும் இவ்வெண்வகையிற் சமயவான்களுக் குடன்பாடு தனித்தனி யினையவெனப் பின்னர் கூறுவான் வேண்டிப் பொதுப்பட இனையதெனவு முணர்த்துகின்றது.

இந்நிலனிற் கடமில்லை யென்பதனாற் றோன்று
மின்மையுணர் வபாவமா மாயிரமா கியவெண்
டன்னிலொரு நூறெனுமெண் ணுண்டெனுஞா னந்தான்
சம்பவமா மிம்மரத்தி னியக்கனுள னென்னுஞ்
சொன்னிகழ்வில் வருமியக்க விடயவுணர் வதனைச்
சொற்றிடுவ ரறிஞரைதி கமதாக வளவை
யென்னவிவண் டொகுத்துரைத்த காட்சிமுத லாய
வெண்வகையிற் சமயர்கொள வின்னவென வுரைப்பாம்.

(இ. ரை.) "இந்நிலனிற் கடமில்லை யென்பதனாற் றோன்று மின்மை யுணர் வபாவமாம்" எ. து. இச்சக்கரத்தி லப்பிய மண்ணிற் கடோபாதி நான்கு காலத்து மில்லையெனப் பிரதிவாதித்தற்கியையுமென்று கூறப்படுவ தால் அதுகாரணமாகத் தோன்றுங் கடாபாவ ஞானமே யபாவப்பிரமாண

மெனப்படுவதாம்; "ஆயிரமாகியவெண்டன்னிலொருநூறெனுமெண்ணுண் டெனு ஞானந்தான் சம்பவமாம்" எ. து. ஆயிரமென்னுந்தொகையிலொரு நூறென்னுந்தொகையிருக்கின்றதெனக் கொள்ளும் விவேகமே சம்பவப் பிரமாணமெனப்படுவதாம்; "இம்மரத்தி னியக்கனுளனென்னுஞ்சொன் னிகழ்வில்வருமியக்க விடயவுணர்வதனைச் சொற்றிடுவரறிஞ ரைதிகமாக" எ. து. இம்மரத்தின்கண் யக்ஷ னிருக்கிற னென்னுஞ் சொல்வழக்கத்தில் வருகின்ற யக்ஷவிடய ஞானத்தை யைதிகப்பிரமாணமெனப்படுவதாமென் றறிவுடையோர் சொல்லுவர். "அளவையென்ன விவண்டொகுத்துரைத்த காட்சி முதலாய வெண்வகையிற் சமயர்கொள லின்னவென வுரைப்பாம்" எ. து. பிரமாணமென் றிங்கே தொகுத்துச்சொல்லிய பிரத்தியட்சமுதலிய வெண்வகையிற்சமயவான்கள் தனித்தனி கோடற் கியைந்தவை யின்னின் னவாமென் றினி யுரைக்குதும் எ. று.

இல்லை யெனல் குறிப்பு வினைமுற் றுதலால் நான்கு காலத்தையுங் கொள்க. அவை:—பிராகபாவம், பிரத்தொம்சாபாவம், அன்னியோன்னி யாபாவம், அந்தியாந்தாபாவ மென்பன. இவைதமிழில், முன், பின், இடை, ஒரு காலத்து மெனப்படும். பற்பல பாத்திர பேதங்களைக் குறிக்கப் பொதுப் படக் கடமென்றார். இந்நிலனெனச் சுட்டியதால் சக்கரத்தை வருவித்தாம். வேறிடத்து மண்ணைக்குறிக்கின் இவ்வளவு நயங் கருதிப் பிரதிவாதித்தல் கூடாதென்க. தோன்று மின்மை அபாவமா மென்றது உணர்வை யிடை யில் வருவித்தது அபாவமுணர்வுக்கே யன்றிக் கடோபாதிக் கன்றெனற்கு. எங்ஙனமெனில் இந்நூலாசிரியரிக்கவியில்அபாவத்தையும், சம்பவத்தையும், ஐதீகத்தையும் உணர்வினதாகக்கூறியதாலென்க. கடம், நூறு, இயக்கனென் புவை திஷ்டாந்தம். இம்மூன்றிடத்து மறிவெனல் தாஷ்டாந்தமெனக் கொள்க. மண்ணையன்றிக் கடமெனல் நான்கு காலத்து மின்றுதல்போல அறிவையன்றிச் சகத்தெனல் நான்கு காலத்து மின்றுதலின், தோன்று மின்மை யுணர்வு அபாவமா மெனவும், ஆயிர மென்னுந் தொகையில் ஒரு நூறென லெங்ஙனமுண்மையோ, அதுபோலச் சராசர பற்பலபேத பல்லா யிரங்கோடி யுயிர்த்தொகையினு ளோருயிராகிய வுணர்விருத்தலின், ஆயிர மாகிய வெண்டன்னி லொருநூறெனு ஞானந்தான் சம்பவமா மெனவும், நூறென்னு மெண்ணிக்கைத் தொகையன்றி யாயிரமென்னும் பிண்டத் தொகை யின்றுதல்போல, ஒவ்வோருயிரெனல் சொல்லும், அறிவெனல் பொருளுமா நிற்றலினானும், இங்ஙன மோருயிரைச் சோதிக்குங்கால் முடி வில் சிற்பிரகாசமா விளங்குதலினானும், இவ்வா றொருவன் றன்னைத் தான் காணில் சமஸ்தமு மிவனுக்குச் சிற்பிரகாசமா விளங்குதலினானும், நூறெ னலைப் பிண்டித்த பொருளெனவும், ஆயிர மெனலைப் பிண்டப் பொருளெ னவு முவமானித்த தென்க. இம்மரத்தின்கண் பேயாகிய யட்ச னுளனெ னச் சொன்மாத்திரமா வழங்குமாறு போன்று நானென்னும் அகந்தை யெவ்வுயிர்பாலுஞ் சொன்மாத்திரமா வழங்கலின் 'இம்மரத்தினியக்கனுள னென்னுஞ்சொன்னிகழ்வில் வருமியக்க விடயவுணர்வதனைச் சொற்றிடு

ரறிஞ ரைதிகமாக' வென்றார். அருத்தாபத்திக்கும் உபமானப் பிரமாணத்துக்குந் தாஷ்டாந்தம் யாதெனின், உடல் பாரித்திருப்பதினால் நித்திய வுபவாசி யெனல பொய்ப் படுமாறு போன்று உலகம் பிரியமயமா யிருத்தலின், நாஸ்தி நபாதி யெனல் பொய்ப்படுதற்குப் 'பகற் பொழு துண்ணானொருவனிளையாமைகண்டு பரிந் திரவூண்கற்பித்தல்காணருத்தாபத்தி' எனவும், தன்னால் தேடப்புகுந்த வோர்புருடன் அகத்தின்க ணில்லை யெனினும் புறத்தி விருப்பனென் றெண்ணுமாறுபோன்று, தன்னால் தேடப் புகுந்த வோர் பரவஸ்து, விருத்தி பேதத்தினாற் றன்பாற் காணப்படுத லின்றேனும் விருத்தி நிக்கிரகத்தாற் காணப்படுதலுண்மையாதலின் 'அகத்தினிலையுறுதேவதத்தனெனி விருப்பனவன் வேறோரிடத்திலெனத் தெரிந்தறித றன்னைத் தகப்பெரியர் கேள்வியருத்தாபத்தி' யெனவும், அலைதாடி யொன்றின்றி யேனைய அவயவங்களோடு விளங்கும் பசு வொன்றுளதேல், அதனை யொக்கு மரையென்னு மிருகமென்றாற்போல அநிர்தாதி குறியின்றிய ஆகாய மொன்றுளதேல் அதனை யொக்குஞ் சிதாகாசமென லுபமானப் பிரமாண மெனவுங் கொள்க. பசுவைப்போல மரையை விளக்கல் திட்ட வுபமானமெனவும், புருடனைப்போலச் சாயாபுருடனை விளக்கல் அதிட்டவுபமான மெனவுங் கூறுப.

மேற் பிரத்தியட்சப் பிரமாணமாவது ஞானகதப் பிரத்தியட்ச மெனவும், விஷயகதப் பிரத்தியட்ச மெனவு மிரண்டாம். அவற்றுள் ஞானகதப் பிரத்தியட்சத்தை நிருவிகற்பப் பிரத்தியட்சமெனவும், விஷயகதப் பிரத்தியட்சத்தைச் சவிகற்பப் பிரத்தியட்ச மெனவுங் கூறுவாரு முளர். இவற்றுள் ஞானகதப் பிரத்தியட்சமாவது அபரோட்ச ஞானமாம். விஷயகதப் பிரத்தியட்சமாவது விஷயப் பிரத்தியட்ச மெனவும், இந்திரியப் பிரத்தியட்சமெனவும், மானதப் பிரத்தியட்ச மெனவும், வேதனாப் பிரத்தியட்சமெனவும்,யோகப்பிரத்தியக்ஷமெனவு மைந்தாம். இவற்றுள் வேதாந்தமுடியினுள்ள மகாவாக்கியப்படி பரமாத்ம ஐக்கியமான அத்துவித வேதாந்திகட்கு ஞானகதப் பிரத்தியட்ச மொன்றுமேயாம். ஏனைய வுலகாயதன் முதற் பாட்ட வேதாந்தி யீறான சமயவாதிகட் கைந்துவிதமான விஷயகதப் பிரத்தியட்சங்களி லவரவர்க்குத் தகுந்தவைகளே யாம். இன்னும் பிரத்தியட்சப் பிரமாணமாவது மூன்றுவிதமா யிருக்கும். அவையாவன:— விபரீதப் பிரத்தியட்ச மெனவும், சந்தேகப் பிரத்தியட்சமெனவும், யதார்த்தப் பிரத்தியட்சமெனவுமாம். இவற்றுள் உஷக் காலாந்தகா ரவிமோசன பூருவங் கண்ணிருந்துங் கட்டையைக் கள்வனாகக்கண்டு பயகம்பனாதிகளை யடைவதுபோல அஞ்ஞானாந்தகார விமோசன பூருவம் சித்திருந்துஞ் சச்சிதானந்த ஸ்வரூபமான பிரமத்தை யநிர்த சட துக்க ரூபமான சகத்தாகக் காண்பதே விபரீதப் பிரத்தியட்சமும், அருணோதயபூருவம் நாம் கண்டது கள்வனாக விருந்தாற் சரிக்கவேண்டுமே; அங்ஙனஞ் சரியாமையினாற் கட்டையோ, கள்ளனோவென் றையுறுதல்போல அஞ்ஞானவிமோசன விவேக பூருவ மியாங் கண்டது சகத்தாகவிருந்தாற் பிரியமன்றியிற் றோற்ற வேண்

டுமே; அங்ஙனந் தோற்றுமையாற் சச்சிதாநந்தமோ, சகத்தோ வென்றையுறுதல் சந்தேகப் பிரத்தியட்சமும்,சூரியோதகாலத்திற் கண்ணொளியுஞ் சூரியனொளியு மேகோபித்து யாங் கண்டது நிச்சலமா யசைவற்றிருத்தலிற் கள்வனன்று, கட்டையேயென் றறிந்தாநந்திப்பதுபோல ஞானோதயகாலத்திற் சிற்றறிவும் பேரறிவும் ஏகோபித்து யாங் கண்டது தற்பிரியமாகத் தோற்றியிருத்தலின் அநிர்த சட துக்க ரூபமான சகத்தல்ல, இருப்பது சச்சிதாநந்த ஸ்வரூபமாகிய சித்தேயெனக் காண்பது யதார்த்தப் பிரத்தியட்சமுமாம்.

வினா:—இங்ஙனம் ஸ்வரூபப் பிரத்தியட்சமான அனுபவமுண்டானால் மேல் அனுமானப் பிரமாண மியாதுக்கு ?

விடை:—பூர்வஞ் செய்த நிட்காம புண்ணிய பரிபாகத்தினா லிவ் வனுபவங் கிடைப்பது அதிதீவரபக்குவர்க்கேயன்றி யேனையோர்க் கின்மையின் அவர்களை முன்னிட் டக் காரணமான சித்தைக் காரியமான திரிஸ்யத்தினால் வெளிப்படுத்திப் பிரத்தியட்சமாகக் காண்பிக்கும் நிமித்தம் இப்பிரமாணமும் வந்ததென்க.

வினா:—அஃதெங்ஙனம் ?

விடை:—அவ்வனுமானப் பிரமாணமும் ஐந்துவிதமாயிருக்கும். அவை யாவன:—பிரதிஞ்ஞை,ஏது, திட்டாந்தம், உபநயம், நிகமனம் என்பனவாம். இவற்றுள் பிரதிஞ்ஞை: பிரதிஞ்ஞை, ஸப்பிரதிஞ்ஞை, விப்பிரதிஞ்ஞை என மூவகையாம்; ஏது:இயல்பேது, காரியவேது,அனுபலத்தியேது என மூவகையாம்; திட்டாந்தம்: அன்னுவயம், வியதிரேக மென இருவகையாம். உபநயம், நிகமனம் இவற்றிலடங்கி யிருக்கின்றன. இவ்வைந்தங்களையுடைய அனுமானம் பூருவப் பிரத்தியட்சானுமானமெனவும், அனுமானானுமானமெனவும், ஆகமானுமானமெனவும் மூன்றாம். முற்கூறியவற்றுள், இப்பருப்பதத்தில் வேயாதிவிருட்சங்களும், காந்தமாதிய கற்களுமிருப்பதனால் அத்தருக்களொன்றோடொன் றிழைந்து அவற்றுள் வியாபித்திருந்த அக்கினியும், கதிரினுட்டணங் காந்தக் கல்லிற் றாக்க, அவற்றுள் வியாபித்திருந்த அக்கினியும் வெளிப்படுதலின் இம்மலையின்கண் அக்கினியுண்டென நிச்சயிப்பதுபோல இச்சகத்தின்கணுள்ள சராசர வுயிர்க ளொவ்வொரு போகங்களை யனுபவிக்குமிடத் தவற்றுள் வியாபித்திருந்த தற்பிரீதி வெளிப்படுதலின் இவ்வுயிர்களிடத்திற் பிரமசித் துண்டென நிச்சயிப்பதே பிரதிஞ்ஞை யெனவும், அத்தருவின்கணுள்ள அக்கினி வெளிப்படுத்தற்கு அதன் காரியமான புகை முன் வெளிப்படுதல்போல இவ்வுயிர்களிடத்துள்ள ஆன்மப்பிரியம் வெளிப்படுத்தற்கு அதன் காரியமான விடயானந்தம் வெளிப்படுதலி னிஃதே யேது வெனவும், சலமாதியவற்றிலுள்ள தூமம்போலன்றிப் பாகசாலையின்கணுள்ள தூமத்தால் அக்கினியைப் பிரத்தியட்சமாகக் காண்பதுபோலக் கால வரம்பைக் காட்டுங் கடியாரமாதியவற்றின் சித்துப்போலன்றி, அஃதின்ன விதமாகச் செய்யி னின்ன விதமாகக் கால வரம்பைக் காண்பிக்கு மென்

றறிந்து அதுசெய்யுஞ் சத்தியைக்கொண்டு அச்சத்தனை யறிவதுபோல இச் சகத்துற்பத்தி லய மிவ்விதமாய்ச் செய்யி னிவ்விதமாய் நடந்து வருமென் றறிந்து செய்யுஞ் சிற் சத்தியைக்கொண்டு அதனுதாரமான சுயஞ் சித்தைப் பிரத்தியட்சமாகக் காண்பதே திட்டாந்த மெனவுமாம்.

வினா:—இங்ஙனம் இவ்விரண்டு பிரமாணங்களினால் ஞானகதப் பிரத்தி யட்சமானால் மேல் ஆகமப் பிரமாண மியாதுக்கு ?

விடை:—இவ்வனுபவத்தை யடைவோர்கள் அதை யடைந்த ஆப்தர் கள்வசனத்தை முக்கியமாகக்கொள்ள வேண்டுவதாகலின் இப்பிரமாணமும் வேண்டிற்றென்க.

வினா:—அஃதெங்ஙனம் ?

விடை:—இவ்வாகமமுஞ் சாத்திரம் அசாத்திரமென விரண்டாம்; இன்னும் இவையே மூன்று கலைகளுமாம். அவையாவன: தந்திரகலை, மந்திர கலை, யுபதேசகலை யென்பனவாம். இன்னுமிவை யிரண்டு சுருதிகளுமாம்; அவை அற்ப சுருதி பிரபல சுருதி யென்பனவாம். அவற்றுள் கானலாற்றின் கரையிற் கனி யிருக்கின்ற தென்னும் அநாப்தன் வசனத்தைக் கேட்டுச் செல்வதுபோல தேவர் முதற் றேவர மீறுவுள்ள வுலகங்களிற் சொர்க்காதி விடயாநந்தங்க ளிருக்கின்றனவென்னும் பாமரர் வசனத்தை நம்பச் சொல் வது அசாத்திர மெனவும், கங்கையாதி நதி தீரங்களில் முக்கனி முதலிய வைக ளிருக்கின்றன வென்னும் ஆப்தன் வசனத்தைக் கேட்டுச்சென் றவ ற்றை யடைவதுபோல, மனுடாநந்த முத லிரணிய கருப்பாநந்த மீறான ஆநந்தங்க ளனைத்தும் விளங்குதற்கு ஸ்தானமான நிரதிசயாநந்த மிருக்கி ன்ற தென்ற ஆப்தன் வசனத்தைக் கேட்டு அவ்வழிச்சென் றச்சுயஞ் சித் தைப் பிரத்தியட்சமாகக் காணச் சொல்வதே சாத்திர மெனவுமாம்.

வினா:—இங்ஙனம் மூன்று பிரமாணத்தால் அச்சுயஞ் சைதன்னியம் பிரத்தியட்ச மானால் மேல் உவமானப் பிரமாண மியாதுக்கு ?

விடை:—இவ்வனுபவம் அறிவினிடத்திற் கண்டு அதீதமாக வேண்டுத லால் இப்பிரமாணமும் வேண்டிற் றென்க.

வினா:—அஃதெங்ஙனம் ?

விடை:—அதிட்டம் திட்டமென விரண்டாம். அவற்றுள் புருடனைப் போலச் சாயாபுருட னிருப்பா னெனக் காணுதலின், சுத்தாவத்தையிற் றோன்றும் அனுபவம் ஆநந்தாதீதமா யிருக்குமென்பது அதிட்டமும், பசு வைப்போல மரை யலைதாடியின்றி யிருக்குமென்றபடி யதைதேடிக் கண்ட விடத் தஃதாய் அதில் அதீதப்பட்டு நிற்றல்போலச் சமாதியின்கண் தத் தரிசனமான ஆத்மாநந்தத்தைப்போலச் சிவாநந்தம் போதமின்றியிருக்கு மென்றபடி சிந்தித்த விடத்து உதயமானபோது அவ்விரண்டு மின்றி யதீதா னுபவம் பிரத்தியட்சமாய்க் காண்பது திட்டமுமாம்.

வினா:—இங்ஙனம் இந்நான்கு பிரமாணத்தாற் சுவானுபவம் பிரத்தியட்சமா யிருக்க, மேல் அருத்தா பத்திப் பிரமாண மியாதுக்கு?

விடை:—அவ்வனுபவி யெவ்விதமா யிருக்கினும் அவ்வானந்தாதீத மாகவே யிருப்பனென் றறிதற்காக இப்பிரமாணமும் வேண்டிற் றென்க.

வினா:—அஃதெங்ஙனம்?

விடை:—சிரவணம் திட்டமென விரண்டாம். அவற்றுள் சீவிதமான புருடன் வீட்டின்க ணில்லை யென்றால் மற்றோரிடத்தி லிருப்பானென் றறிவதுபோல, அவ்வறிவினிடத்து அதீதானுபவ மில்லை யென்றால், ஆநந்தத்தி லிருக்குமென்பது சிரவணருத்தாபத்தி யெனவும், பகலி லுண்ணாத புருடன் றேகம் பருத்திருப்பதைப்பார்த்து இரவிற் சரவிலொளித் துண்பானெனக் காண்பது போல, புறம்பினுள்ள விடயங்களைக் கூடி யாநந்தியாதவன் முகத்திற் பிரமதேஜஸ் ஜொலிக்கின்றதைப் பார்த்து அகத்திற் பிரமாநந்தத்தைப் பிரத்தியட்சமா யடைந்திருக்கின்றா னெனக் காண்பது திட்டாருத்தாபத்தி யெனவுமாம்.

வினா:—இங்ஙனம் இவ்வைந்து பிரமாணத்தாற் சமாதி யனுபவம் பிரத்தியட்சமானால், மேல் அபாவப் பிரமாண மியாதுக்கு?

விடை:—இவ்வனுபவஞ் சகசத்தில் விளங்கும் நிமித்தம் இப்பிரமாணமும் வேண்டிற்றென்க.

வினா:—அஃதெங்ஙனம்?

விடை:—பிராகபாவம், பிரத்தொம்ஸாபாவம், அன்னியோன்னியாபாவம், அத்தியந்தாபாவ மெனப்பட்டு முன் பின் இடை யொரு காலத்து மில்லையென நிற்பனவாம். அவற்றுள் உற்பத்திற்குமுன் மிருத்திகையைத் தவிரக் கடமின்மைபோலச் சிருட்டிக்குமுன் சத்தைத் தவிரச் சகத்தில்லாமையால் பிராகபாவ மெனவும், லயத்திற்குப்பின் மிருத்திகையைத் தவிரக் கட மின்மைபோல லயத்திற்குப் பின்னுஞ் சத்தைத் தவிரச் சகத்தில்லாமையால் பிரத்தொம்சாபாவமெனவும், இடையில் கடத்திற் படமும் படத்திற் கடமு மில்லை யென்பதனால் மிருத்திகையுந் தந்துவுமே யிருக்கின்றது போல இடையில் அறிதலில் அறிபொருளும் அறிபொருளில் அறிதலுமின்றி யறிவாகிய சத்தே யதுவதுவாய் விளங்குதலிற் றிரிபுடிரூபமாகிய சகத் தில்லாமையால், அன்னியோன்னியா பாவ மெனவும், இந்த மூன்றிடத்து மிருத்திகையைத் தவிரக் கடமில்லாததுபோல எப்போதுஞ் சத்தே பிரத்யட்சமா யிருத்தலின் எப்போதுஞ் சகத் தில்லாமையால் அத்தியந்தா பாவ மெனவுமாம்.

வினா:—இந்த ஆறு பிரமாணத்தாற் சதோதயமான சத்தே பிரத்தியட்சமானால் மேற் சம்பவப் பிரமாண மியாதுக்கு?

விடை:—இவ்வனுபவம் எக்காலத்திலும் இயல்பாய் விளங்குகின்றதென்பதை யறிவிக்கும் நிமித்தம் இப்பிரமாணமும் வேண்டிற் றென்க.

வினா:—அஃதெங்ஙனம் ?

விடை:—சகஸ்திரத்திற் சதமிருக்கு மென்னு மிடத்திற் சகஸ்திரத்திற் குஞ் சதத்திற்கும் அபேதந் தோன்றல் போல, பிரமத்திற் கூடத்தனிருக்கு மென்னு மிடத்து அக்கூடத்தனே பிரமம், பிரமமே கூடத்தனென அபேதம் பிரத்தியட்சமாகத் தோன்றுவதே சம்பவப் பிரமாண மெனவுமாம்.

வினா:—இவ்வேழு பிரமாணங்களால் அத்துவித ஸ்வரூபம் பிரத்தியட்ச மானால் மேல் ஐதிகப் பிரமாண மியாதுக்கு ?

விடை:—இவ்வனுபவந் தொன்று தொட்டு விளங்குகின்ற தென்பதை யறிவிக்கும் நிமித்தம் இப்பிரமாணமும் வேண்டிற்றென்க.

வினா:—அஃதெங்ஙனம் ?

விடை:—இம்மரத்தில் இயக்க னுளனென்பது அநாதி சித்தமா யிருப்ப தென்னு மிடத்து இம்மரமே பேயாய்க் காண்பதுபோல, இச்சகத்திற் சித்துள தென்பது அநாதி சித்தமா யிருப்ப தென்னுமிடத்து இச்சகமே சித்தாய் விளங்குதல் பிரத்தியட்ச மாதலின் ஐதிகப் பிரமாண மென்பதாம்.

வினா:—இவைகட்குச் சுத்தானுபவ மியாது ?

விடை:—சுவானுபவாதீத சுயம்பிரகாச ஸ்வரூபமே பிரத்தியட்சமும், அதனது ஸ்வப் பிரபையான ஸ்புரணமே அனுமானமும், அந்த ஸ்புரண ரூபமான சங்கற்பம் அதீதமான தத்தெரிசனார்த்தமாய் வந்ததே யன்றி வேறின்றென நிச்சயிப்பது சத்தமும், இப்பூரணமான சங்கற்பத்தைப்போ லவ்வறி விருப்பினும் அறிதல் மாத்திரங் கரைந்து நிற்றல் உவமானமும், இச்சங்கற்பம் பகிர்முகத்தில் அதிசயமான விடயானந்தங்களான் மொத்துண் டதுவே யகத்தி னிரதிசயாநந்தத்தைக் காட்டுதலில் அருத்தாபத்தியும், அச்சங்கற்பம் முன் பின் னிடை யொருகாலத்துமின்றி யெப்போதுந் தானகப் பிரகாசித்தலின் அபாவமும், இச்சங்கற்பஞ் சத்தின் சுபாவமா யுண்டென்பதனாற் சம்பவமும், இச்சங்கற்பத்தை யதீதம் வியாபித்து நிற்றலின் ஐதிகமுமாம். இஃது சுருதி குரு சுவானுபவ ரீதியாற் குரு வாக்கியப் படி யனுபவத்திற் காண்க. இன்னும் பிரமாணங்களின் விரிவைத் தர்க்க சாத்திரத்திற் கண்டுகொள்க. (உ௩)

(அ.கை.)

மேற்கூறியவாறு அஷ்டவித அளவைகளுள் உலகாயுதன் முதற் புராணிக ரீறாயுள்ள சமயவான்கள் தனித்தனி யேற்றுக் கொண்ட அளவைக ளிவையென வுணர்த்துகின்றது.

புகலுலகா யுதனுக்குக் காட்சியொன்றே சயின
புத்தவைபா டிகர்கடமக் கிரண்டனுமா னத்தோ
டுகளுறுசாங் கியர்க்குமுன் றுரையொடுநான் குவமை
யோடுநியா யற்கருத்தா பத்தியொடைந் தாகு

மிகுபிரபா கரற்காறு மபாவமொடு பாட்ட
வேதாந்தி கட்காகு மெனவறிக தெரிவுற்
றிகலருமொண் புராணிகர்க டமக்களவை யெட்டா
மென்றுரைப்பர் சம்பவவை திகங்களுட னன்றே.

(இ. ரை.) "புகலுலகா யிதனுக்குக் காட்சியொன்றே சயின புத்தவை பாடிகர்க டமக்கிரண் டனுமானத்தோடு" எ. து. சொல்லப்பட்ட வுலகாயுத னென்னுஞ் சமயவாதிக்குப் பிரத்தியட்சப் பிரமாண மொன்றேயாம்; சைனன், பவுத்தன், வைபாடிகன் என்னும் இம்மூன்று சமய வாதிகளுக்கும் பிரத்தியட்சப் பிரமாணமும் அனுமானப் பிரமாணமு மென விரண்டாம்; "உகளுறு சாங்கியற்கு மூன்றுரை யொடு நான்குவமையோடு நியாயற்கு" எ. து. நிலையாது பாயத்தக்க சாங்கிய னென்னுஞ் சமயவானுக்குப் பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம் எனப் பிரமாணம் மூன்றாம்; தர்க்கசமயவானுக்குப் பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம், உவமை என்னும் நான்கு பிரமாணங்களாம்; "அருத்தாபத்தியொ டைந்தாகு மிகு பிரபாகரற் காறு மபாவமொடு பாட்ட வேதாந்திகட் காகுமென வறிக தெறிவுற்று" எ. து. மேற்கூறிய நான்கு பிரமாணத்தோடு அருத்தாபத்தியுங் கூட்டி மிக்க பிரபாகர சமயத்தானுக் கைந்து பிரமாண மெனப் படுவதாகும்; மேற்கூறிய ஐந்துடன் அபாவப் பிரமாணமுங் கூட்டிப் பாட்டவேதாந்த சமயிகளுக்குப் பிரமாணம் ஆறெனப்படுவ தாகுமென ஆராய்ச்சியாற் றேர்ந் தறிந்திடுக. "இகலரு மொண் புராணிகர்க டமக்களவை யெட்டாமென் றுரைப்பர் சம்பவவைதிகங்களுடன்" எ. து. மேற்கூறிய ஆறினோடு சம்பவத்தையும் ஐதிகத்தையுங் கூட்டி முரணுத லின்றிய வொள்ளிய புராணிக ரென்னுஞ் சமயவான்களுக்குப் பிரமாண மெட்டாமென் றறிஞர் கூறுவர் எ. று.

அன்று ஏ அசைகள். காட்சிப் பிரமாண முலகாயுதனுக்கும், காட்சியும் அனுமானமும் சைனன் புத்தன் வைபாடிகன் ஆகிய மூவர்க்கும், காட்சி அனுமானம் ஆகமம் என்னும் இம் மூன்றும் சாங்கிய சமயத்தானுக்கும், பிரத்தியட்சம் அனுமானம் ஆகமம் உவமை என்னு நான்கும் தர்க்க சமயவானுக்கும், மேற்கூறிய நான்கோடு அருத்தர்பத்தியுங் கூட்டிப் பிரபாகரனுக்குப் பிரமாண மைந்தாகும்; மேற்கூறிய ஐந்தோடு அபாவமுங் கூட்டிப் பாட்ட வேதாந்திகட்குப் பிரமாணம் ஆறாகும்; மேற் கூறிய ஆறோடு சம்பவத்தையும் ஐதிகத்தையுங் கூட்டிப் புராணிகராகிய சமயவான்களுக்குப் பிரமாண மெட்டாமென வறிக. இந் நூலாசிரியர் இப் பெரிய வேதாந்த நூற் பொருளின் அகல மெங்ஙன மென்றிடின் உரைத்து மியம்பிய நூன் முறையே யென்றமையானும், இந்நூற்கு வேதாந்த சூளாமணி யெனப் பெயர் தந்தமையானும், இடையில் வரும் வெவ்வேறு விஷயங்களாகிய பதினான்கு வித்தைகளை விரிக்காமல் மீமாம்சத்தை மாத்திர மேற்கொண்டு அதிலடங்கிய இரண்டு காண்டத்தில் ஐக்கிய காண்டத்தை மாத்திரம் பிரதிவாதிக்கப் புகுந்தமையானும் எங்ஙனஞ் சமயவாதிகளுடைய நிலை

களைத் தனித்தனி விரித்துரைக்கப் புகுவர்? இவருக் குடன்பா டன்றாமை யின் ஓர் கவியிற் சுருக்கி யுரைத்தனர். ஆதலின், யாமெங்ஙனம் விரித்துரை செய்யப் புகுதும்? இதன் அகலம் வேண்டுவோர் அந்தந்தச் சமய நூல் களிற் காண்க. எடுத்துக்கொண்ட விடயமாகிய வேதாந்தப் பெருங் கட லெல்லையை விளக்க இடம் போதாமையால், நூலாசிரியர் கருத்தின் வண் ணம் இக்கவிக்குச் சுருக்கி யுரை செய்தனம். (ஆகமம், சத்தம், உரை என்பன வொரு பொருட் கிளவி.) மத நிச்சயங்கள் வேண்டுவோர் தன் மதம் நாட்டற் காதலின், இதுவும் அங்ஙனமாமெனக் கருதினு மமையும். அமையினும் ஏனைய மதத் துணிவுபோ லொட்டிய அதிஷ்டானம் ஆரோபமா தற் கியையாது. இங்ஙனமாய வேதாந்தத்தைச் சமயவாதத்தி லொன்றாகக் கூறுத லடாது; (அறிவையே பிரதிவாதிப்பதாலென்க.)

பிரகஸ்பதியினாற் சொல்லப்பட்ட வுலகாயுதமென்னும் அவைதிக சாத் திரப் பிரபஞ்சத்திற் சாருவாகனாதிய மூன்று பேதமாய் நின்று கந்தமுதலிய நான்கு குணங்களை யுடைய பிருதிவியாதி சதுர்ப் பூதமே சகத் தெனவும், அதன் ஏகதேச விகாரமாய்ப் பரிணமித்த தேகத்தில் அப்பூதங்களின் கூட் டரவினாற் சைதன்னியமென் றொரு தருமம் பிறக்கு மென்று சொல்லி, அதைச் சாருவாகன் றேகமெனவும், சாருவாக ஏகதேசிக ளிந்திரிய மென வும், இரணியகருப்ப சாருவாக ஏகதேசிகள் பிராணனெனவும், இவற்றையே யாத்மா வெனவும், இவற்றாலுண்டாய சுகதுக்கங்களே சொர்க்க நரகமென வும், இவற்றி னொருமையாய மகளிர்முதலிய விஷயானுபவமுந் தேக நசிப்பு மே முத்தியெனவுங் கூறுப. இவர்கட்குக் கண்டதே காட்சி, கொண்டதே கோல மென்ப துறுதியாகலின், புகலுலகாயுதனுக்குக் காட்சி யொன்றே யெனவும்;

அரகதமுனிவனாற் சொல்லப்பட்ட சயினமென்னும் அவைதிக சாத்தி ரப் பிரபஞ்சத்தி னிகண்டவாதி ஆசீவகனென்னு மிரண்டு பேதமாய்க் கார ண காரிய ரூபத்தால் ஆத்மாக்களின் கன்மானுரூபமான சரீரங்களினுடைய பரிமாணத்தைத் தனக்குப் பரிமாணமாகக் கொண்டிருக்கின்ற சகத்து: பின்ன பின்னமும், நித்தியாநித்தியமும், சத்தியாசத்தியமுமா யிருத்தலின் சமுசாரம் அநாதி யெனவும்;

இன்னும் ஊனகேச திகம்பர பாணி பாத்திர மயூர பிஞ்ச பஞ்ச மல தாரணாதிகளையும்; பொய், களவு, பரத்துவராவதி, காங்கிசை, இமிசை யில் லாதிருக்கிற பஞ்சானுவிரதங்களையும், மதுபலாண்டு முதலிய நிடேத திரவி யங்களையும் விட்டு, தப்த சிலா சயனாதிகளி னுக்கிர தவ மாசரிக்கிற முனி வித்தைகளையும், ஏமச்சந்திராதிய இருபத்து நான்கு தீர்த்தகர் சரித்திரங் களையும், ஸியாதஸ்தி, ஸியாநாஸ்தி யென்னும் இவைமுதலான சப்தபங்கி களையும்; சீவ, சற்ஜீவ, நிற்ஜீவ, நிற்சர, ஆசிரவ, பந்த, மோட்சமென்னுஞ் சப்த பதார்த்தங்களையும், ஞான முதலிய வெண் குணங்களையு மடைந்து, ஞானவர்ணியமாதிய எண்குற்றங்களையும் பசித்தன் முதலிய பதினெண் குற்

றங்களையும் கடிந்துகொண்டது காலம், சீவன், தன்மாத்திகாயம், அதன் மாத்திகாயம், புண்ணியம், பாவம், விசும்பு, புட்கலம், பந்தம், வீடு என்கின்ற பதார்த்தங்கள் பத்தும் அநாதியெனவும், தேகாதி விலட்சணனாய்த் தேக பரிமிதனாகி மத்திம பரிணாமத்தின் சங்கோச விகாச கன்ம யுத்தனுமே ஆத்ம னெனவும்;

பல தாரணாதிகளாலும் ஆத்ம ஞானத்தாலும் பிரகிருதி நிர்முத்தனா யூர்த்தகதியி லுத்தரோத்தர கமனமே மோட்சமென்னுஞ் சயினனுக்கும், சுகதராற் சொல்லப்பட்ட பௌத்தமென்னும் அவைதிக சாத்திரப் பிரபஞ்சத்திற் சவுந்திராந்தகன், யோகாசாரன், மாத்திமிகன், வைபாடிக னென்னும் நான்கு பேதமாய்ப் பூமியாதி புத்திகடையாகவுள்ள இருபத்துமூன்று தத்வாத்மகமே பிரபஞ்சம், அது தீபச்சுவாலையைப் போல க்ஷணிகமாத்திரமாய் ஞாதுரு, ஞான, ஞேயமென்னும் பதார்த்தங்கட்கு உரு, அரு, வீடு, வழக்கென நான்கெனவும், அவற்றிற் பூத முபாதானமென வுருவத்திற் கிரண்டும், சித்தங் கன்மமென அருவத்திற் கிரண்டும், குற்றங் கந்த மென வீட்டிற்கிரண்டும், உளது இலதென வழக்கிற் கிரண்டுமாக வெட்டெனவும், இதின் உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானமென்ற ஐந்து கந்தத்தா லுண்டானது சகத்தெனவும்;

இம்முறைப்படி கெடல் பந்தம், முற்றுங்கெடல் வீடெனவும்; உயிர், ஆகாயம், காலம், திசை, ஈசன், இவ்வைந்து மில்லையென்ற சவுந்திராந்திகனுக்கும், ஞாதுரு ஞேயங்களின் மயக்க ஞானமே கனவைப்போல்வது சகத்து, அதுவும் க்ஷணிகமென் றறிவதே முத்தி யென்னும் யோகாசாரனுக்கும்; தேகமே சகத்து, பிரமாணப் பிரமேய பிரமாதா வுண்டென்பது மயக்கம், சூனியத்தாலே இத்தேகஞ் சூனியமென்றறிகை முத்தியென்ற மாத்மிகனுக்கும், மஞ்சளுஞ் சுண்ணமுங் கூடினவிடத் துண்டான சிவப்பைப் போலப் பரமாணு சங்காதமாயது விடயமும், தத் விஷ யாஞ்ஞானமுங் கூடின விடத்துப் பிரசித்தசித்தமா யிருப்பது சகத்து, அதை யறியும் புத்தியே யான்மா, அதிற் றிரபுத்தியே பந்தம், இதிற் சுகதுக்காதி மயக்கமடாத சுத்த புத்தி சந்ததியே மோட்ச மென்னும் வைபாடிகனுக்கும், இன்னும் காயாநிகன், சவுசுருத னென்பவருக்கும், புகையைக் கண்டு நெருப் புண்டென்று நிச்சயிப்பதுபோலத் தத்விஷயமாகிய அனுமானத்தைக்கொண்டு புத்தியே யாத்மா வெனவும்; இன்னுஞ் சூனியமே யாத்மா வெனவும்; இவை பிரத்தியட்சமாக அறிதற் கவ்வனுமானமும் வேண்டுதலின் இஃதும் வேண்டுமென்பார் 'சயின புத்த வைபாடிகர்க டயக் கிரண் டனுமானத்தோர்' டெனவும்;

கபிலராற் சொல்லப்பட்ட சாங்கிய மென்னும் அத்தியாத்மீக சாத்திரத்தில், அசங்க சின்மாத்திரமான ஆத்ம சந்நிதானத்திற் குணத் திரயம் ஆத்மகப் பிரகிருதியைச் சுதந்தரமாகக்கொண்டு பஞ்சவிம்சதி தத்துவாத்மக ஜக தாகாரமாகி, அந்தப் பிரகிருதியோடு ஆத்துமாவுக் குண்டான் அநாதி

சம்பந்தமே சம்சாரம், பிரகிருதி புருட விவேகத்தினால் அவித்தியாநாசமானதே மோட்சம், அதனாற் புருடனைப் பிரத்தியட்சமாக அறிதற்கு விவேக புத்தியாகிய அனுமானமும், பிரகிருதி யாரோபிதமா யொன்றுண்டென்னும் ஆகமப் பிரமாணமும் வேண்டுமென்பார்: சாங்கியற்கு மூன்றுரையோடெனவும்;

அக்ஷபாதரராற் சொல்லப்பட்ட வைதிக சாத்திரப் பிரபஞ்சத்திற் பிரமாணம், பிரமேயம், ஐயம், பிரயோசனம், திருட்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தர்க்கம், நிண்ணயம், வாதம், செற்பம், விதண்டை, ஏதுப்போலி, சலம், சாதி, தோல்வித்தானம் என்னும் சோடச பதார்த்தங்களுஞ் சொல்லப்பட்டு பரமாணு சமுகமே சகத்துக் குபாதானகாரண மெனவும், அனுமானிகேசுரனே நிமித்தகாரணமெனவும், விபுவாயும் அனேகமாயுஞ் சைதன்னிய யுத்தனுயுமிருப்பவனே யாத்மாவெனவும்; பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், காலம், திக்கு, ஆத்மா, மனம் இவ்வொன்பதும் நித்தியமெனவுஞ், சம்சாரம் அநாதி யெனவும், ஈசுரோபாஸ்தியாற் றேக முதலாய இருபத்தொருவிதமான சுக துக்க ஞானம் நசிக்கையே மோட்சமெனவுங் கூறி, இவ்வாத்மா வியாபகப் பிரத்தியட்சத்தை யடைதற்குப் புத்தியாகிய அனுமானமும், சம்சாரம் அநாதியென்பதற் காகமமும், ஈசுரோபாஸ்திக்கு அவனின்னவிதமா யிருப்பனென் றுபாசித்தற்கு நிமித்தமும், உவமானமும் வேண்டுமென்பார் நான்குவமையொடு நியாயற்கெனவும்;

சைமினியினாற் சூத்திரரூபமாகச் சொல்லப்பட்ட பூருவ மீமாஞ்சை பேதமான பிரபாகரமென்னும் வைதிக சாத்திரத்தில் அநாதி கன்மத்தினற்றனே யுண்டாகி யழிவதே சகம், மந்திரரூபமே தேவர்கள், வேதம் அநாதி, நித்தியமாய்ச் சுவேதப் பிரமாணமான ஞான ஸ்வரூபனே யாத்மா, கன்மமானது நித்தியம், நைமித்தியம், காமியம், நிஷித்தம், பிராயச்சித்த மென ஐந்து வகை யெனக் கூறி, சீவ கோடிகளுக்குள்ள பிராரத்த ஆகாமிய சஞ்சிதங்களால் அபூர்வத்துவாரா சொர்க்க இன்பத்தைக் கொடுத்தல் முத்தியென்னும் பிரபாகரத்திற்குத் தேவாநந்தப் பிரத்தியட்சத்தை யடைய அதை யறியும் அறிவென்னும் அனுமானமும் அச்சுகத்தைப் போதகஞ் செய்யும் வேதமும் அச்சுகம் இங்ஙன மிருக்குமென்னும் உவமானமும் யாகாதிக ளிலவாகிய வருத்தமான தகத்தி லின்புற்றுச் சகத்தை விளக்குதலின் அருத்தாபத்தியும் வேண்டுமென்பார் அருத்தாபத்தியொ டைந்தாகுமிகு பிரபாகரற்கெனவும்;

வியாசரா லுபநிடதார்த்தப் பிரதிபாதிகமான வேதாந்தமென்னும் அத்தியாத்மீகசாத்திரம், பாஸ்கரியம், மாயாவாதம், யாதவப்பிரகாசம், யோகாயனம், சத்தப் பிரமவாதம், கிரீடப் பிரமவாதமென ஆறு பேதமாயிருக்கும். அவற்றுள் பிரமந் தானே சத்தியோபாதி மிசிரமாய்க் கொண்டு பிரமிக்கையே சமுசாரமும் வருணாச்சிரம தர்மோசிதமாய் வாக்கிய ஜன்னிய ஞான பூர்வகமாயுள்ள வுபாசனாத்மக ஞானத்தின லுபாதி நசிக்கையே மோட்ச

மென்ற பாஸ்கரியமும்; நிர்விசேஷ சின்மாத்திரமே மாயா சபளமாகக் கொண்டு பிரமிக்கையே சம்சாரமும், மகாவாக்கிய ஜன்னிய ஞானத்தினுல் அந்தப் பிரமைபோகையே மோட்ச மென்னும் மாயாவாதமும், அந்தப் பிரமந் தானே சத்தியமான சித்தசித் தீசுராத்மகமான பிரபஞ்சமாகக் கொண்டு பிரமிக்கிறது, அதற்குண்டான பேதஞானமே சம்சாரமும், ஞான கன்மச் சமுச்சயத்தினுலே பேத ஞானம்போகையே மோட்சமென்னும் யாதவப் பிரகாசமும்; பிரமஞ் சகத்காரணம், அப்பிரமத்துக் கதிபய சத்தி விசிட்ட மென்னும் வைதிக சித்தாந்தத்தையுடைய யோகாயனமும், அப்பிரமம் நாதாதீத மென்னுஞ் சத்தப் பிரமவாதமும், தற்சொரூபமே யாவுமா யானந் தித்துக் கொண்டிருக்கும் லீலையே கிரீடப் பிரமவாதமுமாம்.

இன்னும் மித்தியத்துவமே சகத்து, பரமாத்மா யிக்கத்துவம் வன்னிக் கப்பட்ட ஞெப்திமாத்திரமே யாத்மா, பரமாத்மா யிக்கியத்தில் விபகாராதி சமுசாரபந்த நிவிர்த்தியே மோட்சமென்னும் வேதாந்தத்திற்குப் பரமாத்மா யிக்கியமான ஞானகதப் பிரத்தியட்சத்தை யறிதற் கேதுவான விசாரக் கியானமாகிய அனுமானமும், அதுவே வஸ்துவென நிச்சயிப்பதற்கு வேத மும், அது அதீதமாதலால் அதின் பரியாய நாமங்கள் அறிதற்கு உவமான மும், ஒருசெயலு மின்றி நித்திய திருத்தி யடைந் திருத்தற்கு அருத்தாபத்தி யும், அதுவே சதோதயமாயும் நித்தியமாயும் விளங்குதற்கு அபாவப் பிரமா ணமும் வேண்டுமென்பார் ஆறும் அபாவமொடு வேதாந்திகட்கெனவும்;

முற்கூறிய முனிவர் சிவப்பிரகாசத்தாற் சொல்லப்பட்ட வெத்த, நட்ட, சாகர, அர்த்தப் பிரதிபாதிகமான நாலு லட்சங் கிரந்தமுள்ள புரா ணங்களிற் சர்க்க, பிரதிசர்க்க, வம்ச, மன்வந்திர வம்சானு சரித்திரங்க ளென்னும் பஞ்சலட்சணங்களும், சமஸ்த வைதிக தாந்திரிக கன்மங்களுஞ் சொல்லப்பட்ட புராணங்கட்கு முற்கூறிய ஞானகதப் பிரத்தியட்சத்தை யறிதற்குப் புராதனத்துள்ள சத்துக்க ளறிந்துரைத்த அனுமானமும், அது வே நிச்சயமென் றறிவிக்கும் ஆகமமும், அதற்கு ஆப்தர்கள் அடைந்திருந்த அனுபவ வுல்லாசத்தைக் காண்பதற்கு உவமானமும், அவர்கள் நிராசை யாற் றிருத்தியடைதற் கருத்தாபத்தியும், அத்திருத்தி மாறுதிருக்குந் துக்க நிவிர்த்தியாதற்கு அபாவமும், இக்குணங்களிற்றுன் பிரிவுபடாம லொன்று யிருத்தற்குச் சம்பவமும், இவ்வனுபவந் தொன்று தொட்டுப் பண்டித பாமர சாதாரணமா யுளதென்பதற்கு ஐதிகமும் வேண்டுமென்பார் புராணி கர்கள் தமக்கு அளவை யெட்டாமெனவுங் கூறினர்.

இவற்றுள் கணுதராற் சொல்லப்பட்ட வைதிக சாத்திரப் பிரபஞ்சத் தில் திரவியம், குணம், கன்மம், சாமானியம், விசேடம், சமவாயமென்னுஞ் சட்பதார்த்தங்களுள் திரவியத்திற்கு பூதமுதலிய வொன்பதும், குணத்தி ற்கு உருமுதலிய விருபத்துநான்கும், கன்மத்திற்குக் குவிதல் முதலிய ஐந் தும், சாமானியத்திற்குச் சாதிமுதலிய விரண்டும், விசேடத்திற் கொன் றும், சமவாயத்திற் கொன்றும் இவ்வாறு பதார்த்தங்களுடைய விசேட

விவேக ஞானத்தாலே யறியத்தக்கவைகளான ககனாதி பூத பஞ்சக சீவாத்மா பரமாத்மாக்களாகிய ஏழும் நித்தியம், பாஞ்ச பூதிகமான பிரபஞ்சம், சகாத்திரிகம், சீவாத்மாக்கள் அநேகராயும், விபுக்களாயுஞ் சுகாம்பல போக்த்தாளாயுங் கர்த்துரு பராதீனளாயுஞ் சாபேக்ஷாளாயும் அனுமானீசுரனே யுடைத்தாயுந் தர்க்கத்தி லேகதேசமாயும் இச்சட்பதார்த்த விவேக ஞானத்துவாரா சுகதுக்க நிவிர்த்தியே மோட்சமாயும் பிரதிபாதிக்கின்ற வைசேடிகனைத் தார்க்கீகனோடும் உபக்கிரம முதலான சட்விதலிங்க தாற்பரியத்தில் வேதவாக்கிய விசார பூருவகமாய் ஜோதிஷ்டோம யாகாதிகம் விதியுத்தமாகச் சொல்லியும் ஆத்ம சுவதப்-பிரமாணமே ஞானஸ்வரூப னெனவும் சொல்லும் பூர்வ மீமாஞ்சை பேதமான பாட்டனைப் பிரபாகரனோடுங் கூட்டுக.

இன்னுஞ் சில மதங்களுள. அவையாவன:—சாக்தேயம், பாஞ்சராத்திரம், லௌகிகம், பாதஞ்சலம், பாசுபதம், காபாலியம், மகாவிரதம், சித்தாந்தமென வெண்வகையாம். இவற்றுள் சத்தி தத்துவ வாசியினாற் சொல்லப்பட்ட வாமசாத்திரங்களிற் சத்தியின் பரிணாமமே சடாசடப் பிரபஞ்சம், ஆநந்தமே யாத்மா, ஆநந்தப் பிராப்தியே முத்தியென வாதி மத விஸ்தாரஞ் செய்வதே சாக்தேயமெனவும், வாசுதேவனாற் சொல்லப்பட்ட பாஞ்சராத்திர மென்னுஞ் சாத்திரங்களிற் பிருதிவியாதி மனசாந்தமான சதுர்விம்ஸதி தத்துவத்திற்குமேல் குண தத்வாத்மக வாசுதேவனி லிருந்து கிருஷ்ண, அனிருத்த, மகாதவக, ரௌகினேய ரென்னும் நால்வர்களாலுஞ் சகத்து யதார்த்தமா யுற்பத்தியாதி கிருத்தியமும், நாடி மத்தியகதனா யாத்மா அணுப்பிரமாண மெனவும், வாசுதேவாத்மகப் பிரகிருதியினிற் சொரூப ஆனி யில்லாதடங்குவதே மோட்சமென்றது பாஞ்சராத்திர மெனவும், தன்வந்திரியினாற் சொல்லப்பட்ட லௌகிக சாத்திரத்தில் ஆயுள்வேதம், தண்டம், நீதி முதலான திஷ்ட பலன்களையு முள்ள தேக புத்திராதிரூபமே ஆத்மாவெனவும், இகபரங்களிற் புத்திரபாரியாதிகளுடனே கூடி வியாதியாதிய துக்கமில்லாமற் சுகத்திலிருக்கிறது மோட்சமென்பதே லௌகிகமெனவும்;

பதஞ்சலியினாற் சொல்லப்பட்ட அத்தியாத்மீக சாத்திரத்தில் இயமாதியஷ்டாங்க யோகத்தினன் மனோ நிச்சலசித்தியும், அசங்க சின்மாத்திரமே யாத்மாவெனவும், மனோலயத்துவாரா அஞ்ஞான அழிவே மோட்சமென்பது பாதஞ்சலமெனவும், மாயாதத்துவ வாசியான ருத்திரனாற் சொல்லப்பட்ட அத்தியாத்மீக சாத்திரத்தில் மாயை கன்மமென்னும் பாசத் தொய்த நிச்சயத்தினால் நித்திய வியாபக சைதன்னியனே யாத்மனெனவும், பிரபாகேசுரத்தினால் ஈசுரத்துவம் அன்னியருக்குக் கொடுத்து ஆத்மன் ஞெப்திமாத்திரமாயிருப்பது மோட்சமென்பதே பாசுபதமெனவும், முற்கூறிய தத்துவவாசியான ருத்திரனாற் சொல்லப்பட்ட ஆதியாத்மீக சாத்திரத்தில் நரகபால பிட்சாடனாதிகளும், நித்திய வியாபக சைதன்யனே யாத்மனெனவும், கர்த்துருத்துவமே சமுசாரமும் அதைவிட்டு ஞெப்திமாத்திரமா யிருப்பதே

மோட்சமென்பது காபாலிகமெனவும், வித்தியாதத்துவ வாசியான ருத்திர ஞற் சொல்லப்பட்ட அத்தியாத்மீக சாஸ்திரத்தில் அஸ்தி தாரணுதிகளைச் சொல்வதனுல் நித்திய வியாபக சைதன்னியமே யாத்மனெனவும், கத்துருத்துவமே சமுசாரமெனவும் அதை விட்டு ஞெப்திமாத்திரமா யிருப்பதே மோட்சமாதலின் மஹாவிரதமெனவும்;

பரமசிவனுற் சொல்லப்பட்ட மந்திர சவுக்ஞ சாத்திரத்தில் மோட்சாங்கமான சரியை கிரியை யோக ஞானுதிகளையும் நித்திய வியாபகக் கிரியா ரூபனே யாத்மா, சடத்துவாதீத சிவசமானத்துவம் மோட்சமென்பதே மந்திர சவுக்ஞ சித்தாந்திகளெனவுமாம். இவர்களில் உலகாயுத, சயின, பௌத்த, பூருவமீமாஞ்ச, சாங்கியரென்னும் இவர்களை நிரீசுரவாதிகளெனவும், மற்றவர்களெல்லாஞ் சேசுர வாதிகளெனவும் இம் மஹாவாதிகளுக்குள் சாருவாகனுதிய யாவரும் பேதவாதிகளெனவும், வேதாந்தி யொருவனே யபேதவாதியெனவுங் கொள்க. இவைகளோடு முற்கூறிய சமயங்கள் பதினெட்டும் அவற்றின் கருத்தாக்கள் பதினெட்டுபேரும் அவர்களாற் கூறப்பட்ட சாத்திர பேத மேழுமாம். இன்னும் மதங்கள் அனேகமுள. அவைகளைக் காணவேண்டின் அவைகட்குரிய பல நூல்களினுற் காண்க. (உச)

பொதுப்பாயிரமுற்றிற்று.

ஸ்ரீசற்குருவேநம:

# திருக்குவிவேகம்.

(அ. கை.)

முன்னர் வேதாந்த நூற்பொருளின் அகலம் விரித் துரைத்து மென்ற முறையாற் கூறப்புகின், அது அறிவு, அறிபடுபொருள் எனக் கோடற் கியைய நிற்கும். அங்ஙனங் கோடற்கியைய நிற்கும் அறிவு திருக்கெனவும், அறிபடுபொருள் திரிசியமெனவும் ஆரியத்தில் வழங்கி நிற்றலின், இவ்வதி காரமுகத்துத் திருக்குவைக் கூறப்புகுவார் அதற்கு முரணுயுள்ள சுசாதி முதலிய மூன்றின் இலக்கணம் இனையவென இக்கவியி லுணர்த்துகின்றது.

திருந்தியவே தாந்தநூ லியம்புறுவ திருக்கு
　　திரிசியமென் றிருபொருளங் கவற்றின்முதற் றிருக்கின்
வரைந்திடுவ சுவகதந்தன் சாதிவிசா திகளா
　　மற்றவைமூன் றினுக்குமுதா ரணமுறையே மொழியின்
விரிந்தநிழ றருநெடும்பூம் பணைமரமொன் றிற்கு
　　மிஞிறினங்கள் புக்குமுகத் துழுதுபெரு குறுதே
னருந்துநறு மலர்முதலா யினவும்வே றுள்ள
　　வணிமரமுங் கன்முதலா யினவும்போ லாமால்.

(இ. ரை.) "திருந்தியவே தாந்தநூ லியம்புறுவ திருக்கு திரிசியமென் றிருபொருள்" எ. து. ஐயந் திரிபினின்று திருந்திய வேதாந்த சாத்திரங்க ளாற் சொல்லப்படு பொருள்கள் திருக்கு திரிசியமென இரண்டாம்; "அங்க வற்றின் முதற்றிருக்கின் வரைந்திடுவ சுவகதந்தன் சாதிவிசாதிகளாம்" எ. து. அங்கேகூறிய அவ்விரண்டினுள் முதலிற் கூறப்பட்டுள்ள திருக்குவி னின்று தள்ளப்படுபவை: சுவகதபேதம், சுசாதிகம், விசாதிகமென மூன் றும். "மற்றவைமூன் றினுக்கு முதாரணமுறையே மொழியின்" எ. து. இந்தச் சுகதபேதமுதலிய மூன்றிற்கு முதாரண முறைப்படி சொல்லுமிடத்து, "விரிந்தநிழ றருநெடும்பூம் பணைமரமொன் றிற்கு மிஞிறினங்கள் புக்குமுகத் துழுதுபெரு குறுதே னருந்துநறு மலர்முதலா யினவும்" எ. து. சுகதபேதமெனல் விரிந்த நிழலைத்தரும் அழகாக நீண்டுள்ள சாகைகளை யுடைய வோர் விருட்சத்திற்கு வண்டுக் கூட்டங்கள் சென்று முகத்தாற் கிண்டி, அதனாற் பெருகி யோடுந் தேனை யருந்தற் கிடமாயுள்ள மலர்முத லானவைகள் போலவும், "வேறுள்ள வணிமரமுங் கன்முதலாயினவும் போலாம்" எ. து. சுசாதிகமெனல்: மரம்போல வெவ்வேறு நின்றுள்ள

அழகிய மரங்கள் போல்வனவும், விசாதிகமெனல்: மரங்களுக்கு வெதிருத்தமான கல் முதலானவைகளைப் போலவுமாம் எ. று.

ஆல் அசை. நியாயம், சோதனை, பொருத்தமுகத்தாற் றிருந்தியது வேதாந்தநூ லொன்றே யாதலின், திருந்திய வேதாந்த நூலென்றார். திருக்கி னென்பது ஐந்தாம் வேற்றுமை நீங்கற்பொருள் தர நின்றது. சுவகத பேதமுதலிய மூன்றும் அதற்குரிய வுதாரண முதலிய மூன்றும் நேர் நிரனிறையணி. மலர்முதலாயினவென்றதனால் இலை, தளிர், காய், கனி முதலியவற்றையும், கல் முதலாயினவென்றதனால் மண், நீர், அனல், காற்று முதலியவற்றையுங் கொள்க. சுவகதம் சுவ தன்னிடத்தில், கதம் நீங்காது பற்றல்; எனவே, ஒன்றிற் றோன்றியதினின்று நீங்காது பல தன்மையா நிற்பதென்றாயிற்று. தன்சாதி சுசாதியமென்றாயது தன்னைப்போல் மற்றொன்றிருத்தல் பற்றி யென்க. வீ நீக்கம்; சாதி அம்சம் எனற்பாலது விசாதியென்றாயது தனக்கு மாறாக நிற்றல்பற்றி யென்க. திருக்குவினின்று சுசாதிக முதலிய மூன்றையு நீக்கியது மதஸ்தர்கள் கூறும் பர வஸ்துவினிலை யதார்த்த மன்றெனற்கு. மிஞிறெனல் ஞிமிறென்றாயது விகாரம். ()

(அ. கை.)

சுசாதிக முதலிய மூன்றும் பரவஸ்துவிற் குடன்பாடன்றெனற் கேது உணர்த்துகின்றது.

நிரவயவ மாதலினு னுஞ்சத்து வேறு
  நிகழாமை யானுமிறை தனக்குமுத னடுவின்
றொருவுறுக விவ்வுலக காரணமா மாயை
  யுண்மையினு விறுதியதி லென்பதென்கொ லென்னில்
வரைவுதரு சித்திரிகன் சித்திரசத் தியைப்போன்
  மாயையுஞ்சின் மாத்திரமாம் பிரமத்தின் வேறாத்
தெரிவதிலா மையினென்றுஞ் சச்சிதா நந்த
  சிவத்தினுக்கு விசாதியிலை யென்றுணர்க தெரிந்தே.

(இ. ரை.) "நிரவயவ மாதலினானுஞ் சத்து வேறு நிகழாமையானு மிறைதனக்கு முதனடுவின் றொருவுறுக" எ. து. திருக்குவாகிய பரவஸ்து தன்பாற் சக சீவ பரமென்னும் அவயவஞ் சற்று மில்லாமல் விளங்குவதினானும், இங்ஙனம் விளங்கும் பரவஸ்துவைப்போல வேறோர் பரவஸ்து உண்டாய் விளங்காமையானும், அப்பரவஸ்துவிற்கு முதலாகியது சுவகதபேதமும், நடுவாகியது சுசாதிகமு மெங்ஙன முளவாம்? கோடற் கிடம்பெறாமையின் அவற்றை நீக்கிடுக. "இவ்வுலக காரணமாமாயை யுண்மையினு விறுதியதி லென்பதென்கொ லென்னில்" எ. து. இவ்வுலகத்திற்கு உபாதானமா நின்றுள்ள மாயையெனவின்றோ? நேரே யிருப்பதினு விறுதியாகிய விசாதிகம் பரவஸ்துவிற் கில்லையெனச் சாதித்த லெங்ஙனமேற்கப்படு

மெனக் கேட்கில், "வரைவுதருசித்திரிகன் சித்திரசத்தியைப்போன் மாயை யுஞ்சின் மாத்திரமாம் பிரமத்தின்வேறாத் தெரிவதிலாமையின்" எ. து. சித்திரத்தைப் படத்தில் வரையுஞ் சித்திரிகனினின்று வேறுபடாத சித்திர சத்தி யெங்ஙனமோ, அதுபோல, மாயையெனலுஞ் சின்மாத்திரமா விளங் கும் பிரமத்தினின்று வேறாகத் தெரிந்துகோடற் குடன்படுதற் கிடம்பெறா மையின், "என்றுஞ் சச்சிதாநந்த சிவத்தினுக்கு விசாதியிலை யென்றுண ர்க தெரிந்து" எ. து. நான்கு காலத்துஞ் சச்சிதாநந்த வொருமையாக விளங்குஞ் சிவத்திற்கு விசாதி யெனல் சற்று மில்லையென் றநுபூதிப் பிரத் தியட்சத்தினாற் றெரிந் தறிந்திடுக எ. று.

ஏ அசை. அவயவமெனலால் சக சீவ பரத்தை வருவித்தாம். சுயம்பிர காசமா விளங்குவதால் நிரவயவமெனவும், சுயம்பிரகாசத்திற் கெல்லை வேறின்மையின் சத்து வேறு நிகழாமை யெனவும், அறிவே யறியாமை யெனப்படுவதன்றி வேறாகக் கோடற் கிடம்பெறாமையின் மாயையும் பிர மத்தின் வேறாத் தெரிவதிலாமையி னென்றுஞ் சச்சிதாநந்த சிவத்தினுக்கு விசாதியிலை யெனவுங் கூறியவாறு காண்க. அறிவைப் பிரம மெனவும் அறி யாமையை மாயையெனவுங் கோடற்கு முரணென்னை? உளதேல் அறிவை யன்றி யறியாமை யிருக்கவேண்டும். அங்ஙன மேற்கில் அனைத்துந் தன்மய மாக விளங்காதிருக்கவேண்டும். அங்ஙனம் அனுபவித்த லின்றே; ஆதலிற் பொருந்தாதென்க. முற்கவியிற் சுசாதிசமுதலியவற்றைக் குறித்துத் திஷ் டாந்தமெனற்கும், இக்கவியில் அவற்றை யிலக்கியார்த்தத்தில் விளக்கியது தாஷ்டாந்தமெனற்கும் இயைய நிற்றலைக் காண்க. புடைபெயர்ச்சியைச் சத்தி யெனவும், வினை முதலைச் சத்த னெனவுங் கொள்க. அது போலச் சைதன்யமுந் தானுகிற சிதாகாயத்தி லில்லாத சக சீவ பரங்களை வரைந்து மெய்யாகக்கண்டு மகிழ்தலை மாயையெனவும், விஸ்மரணையெனவும், அம் மயக்கந் தெளிந்து தற்பிரகாசத்தைக்கண் டிவ்விபரீதமின்றித் தானுவிளங் கலைப் பிரமமெனவும், தஸ்மரணையெனவுங் கொள்ளினு மமையும். வேறாத் தெரிவதிலாமை அநுபூதியி லன்றிக் கூடாதென்க. (இறை, பிரமம், சிவமெ னல் ஒருபொருட் கிளவி.) மாயைக்கும், பிரமத்திற்கும் இருக்கும் பேதா பேதத்தைத் தெரிவிக்கச் சித்திரிகனையுஞ் சித்திர சத்தியையுங் கூறவந்தது உவமை. சுகதபேத முதலிய மூன்றையுங் குறிக்க முதல், நடு, இறுதி என் றது தற் குறிப்பணி. இவ் வுலக காரண மாமாயை யெனல் பொருந்தும். எங்ஙனமெனின் இவ்வுலகமாகிற கால தேச வஸ்துக்களைத் தனித்தனி விசாரிப்புழி அதிஷ்டானமாகவும், உபாதானமாகவும், நிர்விகாரமாகவும் முடியாது ஆரோபமாகவும், உபாதேயமாகவும், விகாரமாகவு முடிவதா லென்க. இங்ஙனமாய தீர்ப்பை நியாயஞ் சோதனை பொருத்தமுகத்தால் மறுக்கி னேற்குதும். அன்றேல் தடுக்குதும். இவ்வலிக்குப் பின்னிடுது மன்று. இங்ஙனமாய நிலையை நாட்டற்கு யாமே யுத்தரவாதி. மாயையும் என்பதி லுள்ள உம்மை, எதிர் மறையெனினும், இழிவு சிறப் பெனினும் அமையும். (உசு)

(அ. கை.)

இன்னும் யசுர்வேத மகாவாக்கியார்த்தத்தினன் மேற்கூறிய பரவஸ்து விற்குச் சுவகதாதிபேத மின்றெனலை யுணர்த்துகின்றது.

சுருதியினு ளேகமே வாத்துவித மென்னுஞ்
சொற்கிடையு ளேகமெனுஞ் சொல்லதனுக் கயிக்க
மரிதிலுண ரேவவெனு மிடைச்சொற்குத் தேற்ற
மத்துவித மெனுமொழிக்குத் துவிதவிலக் காகக்
கருதுபொருள் வருதலினு லிம்முறையே மாயா
கற்பனைகள் கடந்துநிர வயமாகி யென்றுந்
திரிதலில்சின் மயமாகு மொருபிரமந் தனக்குத்
தெரித்தசுவ கதமுதலா யினமூன்று மிலையே.

(இ. வ ர.) "சுருதியினு ளேகமே வாத்துவித மென்னுஞ் சொற்கிடையுள்" எ. து. யசுர்வேதத்திற் கூறிய ஏகமேவாத்வைதமென்னு மொழியில், "ஏகமெனுஞ்சொல்லதனுக் கயிக்க மரிதிலுண ரேவவெனு மிடைச்சொற்குத் தேற்றம்" எ. து. ஏக மென்னும் பதத்திற் கயிக்கியமும், அரிதிலுணரப்பட்ட ஏவ வென்னும் இடைச்சொல்லுக்குத் தேற்றமும் "அத்துவித மெனு மொழிக்குத் துவித விலக்காகக் கருது பொருள் வருதலினுல்" எ. து. அத்துவித மென்னு மொழிக்குத் துவிதத்திற்கு மாருகக் கருதற் கியைந்தபொருளு முறையே வருவதினுல், "இம்முறையே மாயாகற்பனைகள் கடந்து நிரவயமாகி" எ. து. இம்முறை நெறித்தாக மாயா கற்பிதங்களை யியல்பாகவே கடந்து அவயவ மெனல் சற்று மின்றி, "என்றுந் திரிதலில் சின்மயமாகு மொரு பிரமந் தனக்குத் தெரித்த சுவகத முதலாயின மூன்று மிலை" எ. து. தன்னிலையி னின்று மாருதென்று மொரு தகைத்தா விளங்குஞ் சின்மாத்திரமா நின்றுள்ள வொப்பற்ற பிரமத்திற்கு முன்னர்த் தெரிவித்த சுவகதமுதலிய மூன்றுபேதமு மில்லையென்றுணர்க எ. று.

ஏ அசை. ஏகத்துவமுமுவிடத்து அத்வைதமெனல் விவர்த்தமாமூடியு மாறுபற்றி, ஏவவென்னு மிடைச்சொ லிடையிற் றந்ததென்க. ஏவவெனல் ஏகாரத்தை; எனவே, ஏகமாதற் கியைதலே யத்துவிதமென்முயிற்று; ஆகவே, ஏகாரம் நிலைமொழி வருமொழிக் கிடையினின்று தேற்றப் பொருள் தரக்கண்டாம். இவர் கருத்தும் அதுவாதலின், ஏகமெனுஞ் சொல்லதனுக் கயிக்கியமும், ஏவவெனும் இடைச்சொற்குத் தேற்றமும் அத்துவிதமெனு மொழிக்குத் துவிதவிலக்காகக் கருதுபொருளும் வருதலினு லென்ருர். இம்மூன்றிடத்தும் எண்ணும்மைகள் எஞ்சி நின்றன. இவ்வாக்கிய நெறித்தாகவே யென்பார் இம்முறையே யென்ருர். மாயா கற்பனைகள் கடந்தென்றதனுல் விசாதிகத்தையும், நிரவயவமாகி யென்றதனுல் சுவகத பேதத்தையும், என்றுந் திரிதலில் சின்மயமாகுமென்றதனுல் சுசாதிகத்தையுங் கொள்க. கொள்ளவே, இம்மூன்றுமின்றிய பிரமமென் ருயிற்று, மரத்

திற் றோன்றிய பத்திர புட்ப பலாதிகட்கு வெவ்வேறு தன்மை யிருத்தல் போலச் சத்திற்றோன்றிய சக சீவ பரங்கட்கு வெவ்வேறு தன்மை யின்மையிற் சுவகதமும், மரத்திற்கினமாய மர மிருத்தல்போலச் சத்திற் கினமாகச் சக சீவ பரம் வேறின்மையிற் சுசாதியும், மரத்திற்குக் கல் மாறாயிருத்தல் போலச் சத்திற்கு மாறாகச் சக சீவ பரம் வேறின்மையின் விசாதியுமாகிய இம்மூன்று பேதங்களும் பிரமத்திற் கின்றென்க.

வினா:—சத்திற் றோற்றிய சக சீவ பரங்கட்குச் சடத்துவ கிஞ்சிக்ஞத்துவ சர்வக்ஞத்துவாதி பேதத்தன்மைக ளிருக்கச் சுவகத மின்றென்பதென்னை?

விடை:—சகமாதிகட்குச் சடத்துவாதித் தன்மை நுண்ணிய வறிவுளோர் கூறார். அஃதியாதினா லென்னிற் சடமாயிருப்பது சகம், கிஞ்சிக்ஞனா யிருப்பது சீவன், சர்வக்ஞனா யிருப்பது பரனென்னுமிடத்தி லிம்மூன்றினு மிருப்பது சத்தேயாதலின், இவற்றிற் சத்துத்தன்மையைக் காண்பதேயன்றி வேறு தன்மையைக் காண்கிலராதலிற் சுவகதபேத மின்றென்க.

வினா:—முற்கூறிய சத்தைப்போல இச்சக சீவ பரங்களினுஞ் சத்திருக்கச் சுசாதி யின்றென்ப தென்னை?

விடை:—அச் சத்தைப்போல வேறோர் சத்தென்பதின்றி அச் சத்தே யிருத்தலிற் சுசாதிபேத மின்றென்க.

வினா:—மாயா விகாரமான சக சீவ பரங்கள் தோன்றுதொட் டிருக்க, விசாதி யின்றென்ப தென்னை?

விடை:—அவையாவுஞ் சத்தா யிருந்து விளங்குதலின், விசாதி பேத மின்றென்க.

வினா:—அற்றேல் பிரமத்திற் சச்சிதாநந்தமென்னும் பேதம் விளங்கச் சுவகத மின்றென்ப தென்னை?

விடை:—சூரியனது அழகே பிரகாசம், அப்பிரகாசமே சூரியனாதல் போலச் சத்தினது தேஜசே சித்தும் அத்தேஜஸான சித்தே சத்தும் அவ்விருமையி னொருமையே யாநந்தமுமாய் வேறுபா டிறத்தலின் சுவகதபேத மின்றென்க.

வினா:—சத்தைப்போல வியாவகாரிகம், பிராதிபாசிகம், பாரமார்த்திகமென மூன்று சத்திருக்கச் சுசாதியின்றென்ப தென்னை?

விடை:—அங்ஙனமிருத்தல் சத்தொளியின் பிரதிபலனமேயன்றிச் சத்தன்றாதலிற் சுசாதிபேத மின்றென்க.

வினா:—அதீதப் பிரமத்தின் ஆநந்தானுபவம் நவநவமா யனுபவித்தலில் விசாதிபேத மின்றென்ப தென்னை?

விடை:—அது சச்சிதாநந்த வொருமையே சுவானுபவமெனத் தோன்றாத பேதவாதிகட் கங்ஙனந் தோன்றுவதன்றி, அவ்வனுபவமுள்ள அபேதவாதிகட் கங்ஙனந் தோன்றாதாதலின் விசாதிபேத மின்றென்க.

வினு—இவைகட்குப் பிரமாண முண்டோ ?

விடை:—அறிஞர்க் குலகா நந்தமய மென்பத ணும், "விளக்கு மிரவியும் மலருமுண்டாமுண்டாம் வீசொளியும் பகற்பொழுதும் விரையும் போலத் துளக்கமில் சித்துண்டாகி லுண்டாம் ஞாலந் தோற்றரவு மாத்திர மே சொரூபமாகுங், கிளர்த்த பரமார்த்தத்தா வில்லை" என்பதனுனும் "பொருகடலிற் றிரைமுதலாப் பிறந்தவெல்லாம் புனலாகி விளங்காமற் புழுதியாமோ, வொருபொருளாம் பிரமமாத்திரமே யல்லா லுபயமெனுங் கற்பனைப்பே ரொன்றுமில்லை" எனவு மருளிய வசிட்ட சம்மிதையினுனும், "சத்தேசித்தாகு மயலெனி லசத்தா மசத்தாணுற் சாக்ஷியெங்கே, சித்தே சத்தாகு மயலெனி லசித்தா மசித்தாணுற் சடங்களுக்குத் திதியுமில்லை, யொத்தே தோன்றிய சத்துஞ்சித்து நல்லசுகமாகு" மென்ற கைவல்ய நவநீதத்தினுனும், ஏகமென்னும் பதத்திணுற் சுவகதமும், ஏவ வென்னும் பதத்திணுற் சுசாதியும், அத்துவித மென்கிற பதத்திணுல் விசாதியு மின்றெ னுஞ் சுருதியினுனும், சர்வம் பிரமமயமென்கிற பிரமோபதேசத்தினுனும், "கசனுயர்சமாதி நீங்கி" என்ற கவியினுனும் "மேனியிற் புறத்தினுள்ளின் மேலொடு கீழ்திற்றிக்கில், வானில் வையகத்திலெங்கு மியானன்றி மற்றொ ன்றில்லை, யானிலாவிடமுமில்லை யெனதிடத்தியாது மில்லை, தானிகழ் பொருள்வேறில்லை, சச்சிதாநந்தமென்முன்" என்கிற கசமுனி சுவானுப வத்தினுனும், யாவுந் தன்மயமாய் விளங்குதலா லெப்போதுஞ் சுவகதாதி பேதம் பிரமத்திற் கின்றெனக.

வினு:—பர வியாபகத்துள் சக சீவ பரம் தத்தங் குணங்களோடு விள ங்கினதாக விஸ்வரூப தரிசனத்திற் கிருஷ்ணசுவாமி காண்பித்த தென்னை?

விடை:—முன்பு பாகியத்திற் பேதமாகக்கண்ட விசயனுக் கவை நீங்கு நிமித்தம் அகத்திற் பேதாபேதமா யிருப்பதைக் காண்பித்து அதற்கு மேல் அபேதமான பிரமஸ்வரூபத்தைக் காண்பிப்பதற்கே யன்றி வேறின் றெனக.

வினு:—அங்ஙனம் அயிக்க வஸ்துவை மேற் றரிசிப்பித்தற்குப் பிரமா ணமுண்டோ?

விடை:—அந்நூலிற்முனே "பிரமமானோர் பிரம நெருப்பிடைப், பிரம மாகிய மந்திரந்தன்னிணுற், பிரமமாய சருவுடன் பெய்துபின், பிரமமே யடைவா ரவர் பின்னுங்கே"வென்ற கவியினுனுங் காண்க.

வினு:—இச்சுவகதாதிபேத மொருவரு மொப்ப விலையோ?

விடை:—பரவியாபகத்திற் சீவர்கள் பின்னபின்னமா யிருக்கின்ற ரென்கிற விசிட்டாத்துவிதிகள் சுவகதமும், பரசிவ சமானமாத்மா வென் கிற விசிட்டாத்துவித பக்ஷங் கிஞ்சித்தொப்புக் கொண்டவர்கள் சுசாதியும்; பரம்வேறு, சீவர்கள் வேறு, அப்பரத்தினது அருளா லிச்சீவர்கள் தந்தங் குணங்களோடுஞ் சுகித்திருக்கின்முர்க ளென்கிற துவிதிகள் விசாதியு முண் டென இப்பேதவாதிக ளொப்புவ ரெனக.

வினா:—அவர்கள் அனுபவந்தா னியாது?

விடை:—நிஷ்கள ஸ்வரூபமான பர வாசுதேவ சமுகத்திற் சீவர்கள் அவ்வடிவமாயிருந்து அவனது அருளாற் பரமாநந்தம் அனுபவிப்பவரென்கிற விசிட்டாத்துவிதிக ளனுபவமும், நிஷ்கள ஸ்வரூபமான பரமசிவத்தினது பேராநந்தத்தை நிஷ்கள ஸ்வரூபமான ஆத்மாக்கள் அனுபவிப்பா ரென்கிற சிவசமானத்துவ மென்னும் விசிட்டாத்துவித ஏகதேசிக ளனுபவமும், நிஷ்கள ஸ்வரூபமான பர வாசுதேவ சமுகத்தில் ஆத்மாக்க ளவரவ ரெத்தன்மையரோ அவரவ ரத்தன்மையி லேற்றங் குறைவின்றி யுபாசிப்பதனால் அவர்கொடுத்த ஆநந்தத்தை யனுபவிப்பவ ரென்கிற துவிதிகள் அனுபவமுமா மென்க.

வினா:—இவர்களுக்கு இவ்வனுபவத்தால் முத்தியின்றோ?

விடை:—பரமாத்ம பேதமான பதமுத்தியேயன்றி யவைகள் ஏகமென்னும் அபேதமான அயிக்கியமுத்தி யின்றென்க. (உஎ)

(அ. கை.)

மேற்கூறிய பிரமத்தில் அவாந்தரமாகத் தோற்றலை அத்தியாரோபமெனவும், அதின் நிவிர்த்தியை அபவாதமெனவும் அவ்வவற்றிற்குரிய விலக்கணங்களால் விளக்கி, அதத்துவாவிருத்திமுதலிய மூன்றின் இலக்கணம் இனையவென இனித் தெரிவிப்பான் வேண்டி அவற்றின் நாமங்கள் இனையவென வுணர்த்துகின்றது.

அத்தியா ரோபமப வாதமென விரண்டா
யறைகுவர்கற் பிதமத்தி யாரோப முள்ள
சுத்தியூ டிலாதவிர சிதம்விளைத்தல் போலச்
சொற்பிரம சத்தினிலா வுலகதுகற் பித்த
லெத்திதுதான் வெள்ளியதின் றிப்பியெனல் போலோர்ந்
திறைமெய்ப்பொய் யுலகமெனத் தெளிதலப வாத
மெய்த்தபொரு ளறியுமிலக் கணமூன்று மவைதாம்
விளங்கதத்து வாவிருத்தி தடத்தமொடு சொரூபம்.

(இ. ரை.) அத்தியாரோபம் அபவாதமென விரண்டா யறைகுவர்" எ. து. அத்தியா ரோபமெனவும், அபவாத மெனவுஞ் சத்துக்கள் யுத்தியிரண்டெனக் கூறுவர். "கற்பித மத்தியாரோப முள்ள சுத்தியூடிலாதவிர சிதம் விளைத்தல்போலச் சொற்பிரமசத்தி னிலாவுலகது கற்பித்தல்" எ. து. கற்பிதமான அத்தியாரோப மெனப்படுவது உள்ள கிளிஞ்சலில் இல்லாத வெள்ளி யுள்ளதாகக் கற்பித்தல்போல அதிஷ்டானமாகக் கூறும் பிரம சைதன்யத்தில் இல்லாத வுலகத்தை யுள்ளதாகக் கற்பித்துக் கூறுதலாம். "எத்திதுதான் வெள்ளியதின் றிப்பியெனல்போ லோர்ந்திறைமெய் பொய் யுலகமெனத் தெளிதலபவாதம்" எ. து. இஃதெத் தன்மைத்தாமென விசா

ரிப்புழி வெள்ளியெனல் சற்றுமின்றிக் கிளிஞ்சலே யுள்ளதெனத் தெளிந்தாற்போலச் சுருதி யுத்தி யநுபவங் காரணமாக வோர்ந்து சைதன்யம் மெய், உலகம் பொய் என்றையந் திரிபறத் தெளிதலே அபவாதமெனப் படுவதாம். "மெய்த்தபொருளறியு மிலக்கணமூன்று மவை தாம் விளங்கத் தத்துவாவிருத்தி தடத்தமொடு சொரூபம்" எ து. இங்ஙனம் மெய்யாக விளங்கப்பெற்ற சைதன்யப்பொருளை யறியத்தக்க இலக்கண மூன்றும். அவையாவன:—விளங்கத்தக்க அதத்துவாவிருத்தியும், தடத்தமும், சொரூபமுமாம் எ. று.

தான், தாம் அசைகள். அதிகசம் ஆரோபமெனற்பாலது அத்தியாரோபமெனவும், அபகதம் வாதம் என்றபாலது அபவாத மெனவுமாயது வடமொழிச் சந்திபாலென்க, கற்பிதம் அத்தியாரோபமெனல் இருபெயரொட்டுப் பண்புத்தொகை. இங்கே விளைத்தலெனல் கற்பித்தலை. கற்பித்தலாவது ஒன்றை யொன்றாகக் கோடலையென்க. இலாதவென்பது கடைக்குறை. இருப்பதெனல் இசையெச்சம். அறிவு, தன்னைச் சக சீவ பரமாகக் கோடல் அறியாமைபற்றி யாதலால் அத்தியாரோப மெனவும், இங்ஙனங் கொண்ட சக சீவ பரத்தை யதோமுகமாதி ஊர்த்தமுக மிறுவா விசாரிப்புழித் தான்மாத்திரம் விளங்கல் விசாரத் தெளிவுபற்றி யாதலால் அபவாதமெனவுங் கொள்க. நான்கு காலத்துமுள்ளது கிளிஞ்சல்போலப் பிரமமும் நான்குகாலத்து முள்ளதென்புழி யிடையில் மூடமும், தெளிவும் எய்தியதால் வந்த பயன் விவர்த்தமெனக் காட்டத் தாஷ்டாந்திரத்தைத் திஷ்டாந்திரத்தால் விளக்கியதென்க. (உஅ)

(அ. கை.)

அதத்துவாவிருத்தி முதலிய இலக்கணமூன்றையும் விளங்கக்கூறி, சத்து சித்து ஆனந்த முதலிய பஞ்ச விலக்கணங்களின் நாமங்களை யினைய வென வுணர்த்துகின்றது.

ஆகமுத லனநேதி யதுசெய்து நின்ற
வாருயிரை யறிவித்த லதத்துவா விருத்தி
சாகைநுனி மதியுளதென் றுணர்த்தலிற்பூ தாதி
சகமாய காரணங்கொண் டறிவுணர்த்த றடத்த
மாகனலி விளங்குகதிர் சொருபனெனல் போலான்
மாவினிச சொருபமிது வெனவுணர்த்தல் சொருப
நீகடவுள் சொருபநிசஞ் சச்சிதா நந்த
நித்தியம்பூ ரணமாக நீநினைந்து கொள்ளே.

(இ. ரை.) ஆகமுத லனநேதி யதுசெய்து நின்ற வாருயிரை யறிவித்த லதத்துவா விருத்தி" எ. து. தூல தேகமுதற் பிரகிருதி யிறுவாகத் தத்துவங்களை யொவ்வொன்றாக நியதி செய்துகொண்டுபோய் அங்ஙனம் நியதி

செய்தற் குடன்படாது நின்ற ஆத்மா இனையதென விளக்குவித்தல் அதத்துவா விருத்தியெனப்படுவதாம்; "சாகைநுனி மதியுளதென் றுணர்த்தலிற் பூதாதி சகமாய காரணங்கொண் டறிவுணர்த்த றடத்தம்" எ. து. இம்மரத்தினது உயர்வான கிளையி னுச்சியில் மூன்றாம் பிறை யிருக்கின்றதெனக் காட்டுமாறுபோன்று பூதமுதற் சகம் இறுவாக் கிடந்துள்ள நிலைகளைக் காரணமாகக்கொண் டறிவு விளங்கக் காட்டல் தடத்தமெனப்படுவதாம்; "மாகனலி விளங்கு கதிர் சொரூபனெனல்போ லான்மாவி னிச சொரூப மிதுவென வுணர்த்தல் சொரூபம்" எ. து. சிறந்த சூரியன் பிரகாச கிரண வடிவனென்றாற்போல ஆன்மாவின் நிச வடிவஞ் சொப்பிரகாசமாகிய இந்நிலையதென விளக்கிக்காட்டல் சொரூபமெனப் படுவதாம். "நீகடவுள் சொரூபம் நிசஞ் சச்சிதாநந்த நித்தியம் பூரணமாக நீநினைந்துகொள்" எ. து. ஆதலின் நீ பிரமசொரூபமேயாம். உனது நிச வடிவம்: சத்து, சித்து, ஆனந்தம், நித்தியம், பூரணமாக விளங்குவதால் அதனை நீ சமாதியிடமாகச் சிந்தித் தறிந்துகொள்ளுதி எ. று.

ஏ அசை. தூலதேசமுதலிய தத்துவங்களை யாதலால் ஆகமுதலனவெனல் வினையாலணையும்பெயர். முதலனவென்றமையால் பிரகிருதி யிறுவாயென்றாம். நேதிசெய்தல் அல்ல அல்லவெனக் களைதலே. உயிரையென்னாது ஆருயிரை யென்றதனால் ஆன்மாவை யென் றுரைகொண்டாம். பிருதிவி தத்துவமுதல் நாத தத்துவம் இறுவாக் கிடந்தது சகமாதலானும், இஃதெவர்க்கும் பிரத்தியட்சமாகக் காணப்படுதலினானும், புகையைக் காரணமாகக்கொண் டக்கினியை யுணர்த்துமாறுபோன்று பூதாதி சகத்தைக் காரணமாகக்கொண் டல்லது அறிவை விளக்கல் கூடாமையின், 'பூதாதி சகமாய காரணங்கொண்டறிவுணர்த்தல்தடத்த' மென்றா ரெனினும் அமையும். ஏனைய அண்டங்களைச் சூரியனென்னாது இயற்கைப் பிரகாசவடிவமன்றாதல்பற்றி யாதலால் 'மாகனலி விளங்கு கதிர்ச் சொரூப' னெனப்பட்டது. அதுபோலச் சொப்பிரகாசமாக விளங்குதல் ஆன்மாவை யன்றி யெங்கணும் வேறின்றாதலால் 'ஆன்மாவின் நிசசொரூப மிதுவென வுணர்த்தல் சொரூப' மெனப்பட்டது. ஆகமெனக்காட்டி யாருயிரென்றதனால் கூடஸ்தனெனவும், பூதாதி சகமெனக் காட்டி அறிவென்றதனால் பிரமமெனவும், பிரகாச வடிவமே சூரியனெனக் காட்டி ஆன்மாவின் நிசவடிவை யுணர்த்தலால், ஐக்கியமெனவுங் கொள்க. ஆருயிரையும் பிரமத்தையும் விளக்கியது நிச்சயத்தாலும், ஆன்மாவை விளக்கியது பிரத்தியட்சத்தாலு மென்க. கடவுள் நீ யென்னாது நீ கடவுளெனல் பிரகட வுபதேசமென்க. அதத்துவியாவெனற்பாலது அதத்துவாவென்றாயது விகாரத்தாலென்க. தது பிரமம், அத்து சகத்து, வியாவிருத்தி நீக்கமெனக் கொள்க. (௨௯)

(அ. கை.)

ஆன்மா: சத்து முதலிய ஐந்திலக்கணங்களையு முடையதெனலே யிக்கவியி லுணர்த்துகின்றது.

மதித்தன்மதி யாமைநன வாதிகளிற் றனக்கோர்
வாதையிலா துண்டெனல்சத் தவத்தையனைத் தினுமே
யுதித்தவிட யங்களைநின் றறிந்திடுதல் சித்தா
முவப்பினுக்கு விடயமாந் தன்மையா நந்தந்
திதித்தசதோ திதநித்த மனத்தினஞ்சா தகமாந்
திறத்திறு லனைத்தினுஞ்சம் பந்தநிறை வெனவே
விதித்திடுக வுயிர்சச்சி தாநந்த மயமேல்
விளங்கியதி லவற்றுளா நந்தமெங்கு மெனினே.

(இ. ரை.) "மதித்தன் மதியாமை நனவாதிகளிற் றனக்கோர் வாதையிலா துண்டெனல் சத்து" எ. து. அறிவறியாமை பேதங்களிலும், நனவு முதலிய அவத்தைகளிலுஞ் சைதன்னியமாகிய தனக்கோர் வாதையும் இல்லாம லிருந்தபடி யிருக்கின்றதெனல் சத்தெனப்படுவதாம்; "அவத்தை யனைத்தினுமே யுதித்த விடயங்களை நின் றறிந்திடுதல் சித்தாம்" எ. து. எல்லா அவத்தைகளிலும் அவ்வவற்றிற் கியைந்தவாறு தோன்றி யொடுங்கும் விடயங்களை நின் றறிந்திடும் அவசரம்பற்றிச் சித்தெனப் படுவதாம்; "உவப்பினுக்கு விடயமாந் தன்மை யாநந்தந் திதித்த சதோதித நித்தம்" எ. து. பிரியத்திற்குப் பயனு நிற்கும் அவசரம்பற்றிய நிலை யாநந்தமெனப் படுவதாம்; நிலையாயுள்ள வென்றுஞ் சதோதயமாக விளங்கும் அவசரம் பற்றி நித்தியமெனப்படுவதாம்; "மனத்தி னஞ்சாதகமாந் திறத்தினு லனைத் தினுஞ் சம்பந்த நிறைவெனவே விதித்திடுக' எ. து. நமது மனதில் விஸ்மரணை காரணமாகப் பிரதிபலித்துக்கொண்டு வருஞ் சாதகத் திறத்தினுற் சமஸ்தத்தையுஞ் சம்பந்தித்துக்கொண்டு வரும் அவசரம்பற்றிப் பரிபூரண மெனப்படுவதாமென்று நிச்சயிப்பாயாக; "உயிர் சச்சிதாநந்த மயமேல் விளங்கியதில் அவற்றுள் ஆநந்த மெங்குமெனின்" எ. து. ஆன்மா சச்சிதாநந்தமுதலிய இலக்கண மயமெனக் கூறுதியேல், அவ்விலக்கணங்களுள் ஆநந்தமெனல் எவ்வுயிர்க் கண்ணும் விளங்காததற் கேதென்னை யெனின் எ. று.

ஏ அசை. அறிவறியாமைப்பகுதி யனேக அடுக்காக மேலுங் கீழும் நிற்பதினாலும், நனவு, நினைவு, கனவு, சுழுத்தி, மூர்ச்சை, மரணமுதலியவை யிருப்பதுபற்றி நனவாதிகளென்றமையானும், இவை தத்தமக்குள் மாறினும் இவற்றிற்கெல்லாம் அதிஷ்டானமா நின்றுள்ள சைதன்னிய மிருந்தபடி யிருப்பதாற் சத்தெனவும்; ஆங்காங்கு விளையுங் கற்பனைபேதங்களை யதுவதுவானதுபோ லாகாது, நின்றறியுந் தகைமைத்தாற் சித்தெனவும், சமஸ்த கற்பிதங்களுந் தனது பிரதிபலனமா நிற்க அவ்வவற்றி லெழும்பிரியம் அன்னியமெனக் கருதி லெங்ஙன மேற்கப்படும்? கூடாமையாற் றப்பிரியமே யெனப்படும். படுதல்பற்றி யாநந்தமெனவும், இங்ஙனம் நிகழ்தலுக்குக் காலவரையறை சற்றுமின்மையி னித்தமெனவும், ஆகாயம்போ

லவையுந் தன்னோடு சம்பந்திக்கின்றுந் தனது நிரந்தரத்தன்மைக் கிடையூ றின்றித் தாக்கற்று நிறைவா யிருத்தலிற் பரிபூரணமெனவுங் கோடற்கு மாறென்னை? இன்மைதலால் இங்ஙனங் கூறினரென்க. அனைத்தினமெனப் பாடங்கொண்டுரை கூறினும் அமையும். ஆமென்னும் ஆக்கவினைமுற்றை யேனைய நான்கிடத்து மொட்டுக. எங்குமெனலை எவ்வுயிர்பாலுமெனக் கொள்க. உயிர் சச்சிதானந்தமெனல் ஞாயம்பற்றியாதலா விவர்க்கு முடன் பாடாயிற்று இதுபற்றிப் பின்னர்க் கூறப்படு மேதுக்களாற் காண்க. (கூ0)

(அ. கை.)

உயிர் சத்து சித்தேனும் ஆநந்தம் நிகழாத தென்னையென்ற வினாவி ற்கு விடை யுணர்த்துகின்றது.

வெம்மையொளி யுருவாய வழல்விளக்கி லொளியே
விளங்கியிடும் புனலிடத்தில் வெம்மையே விரியும்
வெம்மையொளி யிரண்டுமெழும் விறகினிலவ் வகைபோல்
விமலசத்தொன் றேநிகழுங் கன்முதலா மவற்றின்
மென்மைதவிர் புத்தியது தமோகுணத்தின் மூட
விருத்தியினு மிராசதத்தின் கோரவிருத் தியினு
மெய்ம்மையொடு சித்தாகுஞ் சத்துவத்திற் சாந்த
விருத்தியினிற் சச்சிதா நந்தங்க டோன்றும்.

(இ - ள்.) "வெம்மையொளி யுருவாய வழல்விளக்கி லொளியே விளங்கியிடும் புனலிடத்தில் வெம்மையே விரியும்" எ. து. வெப்பமும் பிரகாசமுமே வடிவாயுள்ள அக்கினியானது விளக்கின்கண் பிரகாசமொ ன்றே மேலிட்டிருக்க விளங்கா நிற்கும். அவ்வக்கினியே வெந்நீரின்கண் உட்டணமொன்றே மேலிட்டிருக்க வியாபித்திருக்கும்; "வெம்மையொளி யிரண்டு மெழும் விறகினி லவ்வகைபோல்" எ. து. விறகின்கண் வெப்ப மும் பிரகாசமுமாகிய இரண்டும் மேலிட்டு நிற்கும். இங்ஙனமாய நிலைமை போல், "விமல சத்தொன்றே நிகழுங் கன்முதலாமவற்றில்" எ. து. பரிசு த்தமான சத்தெனவொன்றுமே கன்முதலானவைகளில் விளங்கா நிற்கும்; "மென்மைதவிர் புத்தியது தமோகுணத்தின் மூடவிருத்தியினும்" எ. து. கடினமாயுள்ள புத்தியாகிய தாமதகுணத்தின் மூடவிருத்தியின் கண்ணும், "இராசதத்தின் கோரவிருத்தியினு மெய்ம்மையொடு சித்தாகும்" எ. து. ராசதகுணத்தின் கோரவிருத்தியின் கண்ணுஞ் சத்துஞ் சித்துமாகிய விர ண்டுமே விளங்கும்; "சத்துவத்திற் சாந்தவிருத்தியினிற் சச்சிதாநந்தங்க டோன்றும்" எ. து சாத்துவித குணத்தின் சாந்தவிருத்தியின்கண் சத்து, சித்து, ஆநந்தமாகிய மூன்றுமே விளங்கும். எ. று.

அக்கினியானது தற்கிழமையாக வெப்பத்தையும் ஒளியையுந் தன்பா லுடையதேனும் விளக்கின் கண்ணும் புனலின் கண்ணும் ஒளியையேனும் வெப்பத்தையேனுந் தனித்தனி யுடைத்தாயிருந்து விறகின்கண் வெம்மை

யொளியிரண்டையுங் காட்டுமாறுபோன்று ஆன்மாவானது; தற்கிழமை யாகச் சத்து சித்தாநந்தத்தைத் தன்பாலியல்பாக வுடையதேனும் மூட விருத்தியிற் சத்தொன்றையும், கோரவிருத்தியிற் சத்து சித்திரண்டையும், சாந்த விருத்தியிற் சத்துசித்தாநந்த மென்னும் மூன்றையுங் காட்டுமென வறிக. அக்கினியானது தனது வெப்பத்தையும், ஒளியையும் விறகைப் போல் விளக்கின்கண்ணும் புனலின்கண்ணு மொருங்கு விளக்குமாயின் ஆன்மாவுந் தனது சச்சிதாநந்தமென்னு மூன்று குணங்களையும் சாந்த விருத்தியைப்போல் மூடவிருத்தியின் கண்ணுங் கோரவிருத்தியின் கண்ணும் ஒருங்குவிளக்கும். விளக்கின்கண்ணும் புனலின்கண்ணும் வெம்மை யொளி ஒருங்கு விளங்காததால் அக்கினியின் குற்றமாகுமா? அதுபோலக் கோரவிருத்தியின் கண்ணும், மூடவிருத்தியின் கண்ணுஞ் சச்சிதாநந்தம் ஒருங்கு விளங்காததால் ஆன்மாவின் குற்றமாகுமா! ஆகாதே விருத்தி பேதத்தால் மூன்றாகத் தோன்றுவதேயன்றி ஆன்மாவால் அன்றெனவு ணர்க. இங்கே கல்லென்றது மலையை. வளருந் தன்மை யிருத்தலினாலும் ஓரறிவுயிராகிய புல் பூண்டு மரங்களைப்போற் சரித்தலின்மையானும், விமல சத்தொன்றே நிகழுங்கன் முதலாமவற்றி னென்றார். முதலாமென் றதனால் புல் பூண்டு விருட்சமுதலியவற்றைக் கொள்க. அசரவுயிரென எவர்க்குந் தோன்றாமைபற்றிச் சத்தொன்றே நிகழுமென்றார். ஈரறிவுமு தல், ஐயறி விறுவாயுள்ளவை சரிக்குந் தன்மைத்தென்றால், சரிக்குந்தன் மை யில்லாத மலை புல் முதலியவற்றை யோரறிவுயி ரென்னலாகாதோ? அவற்றை மூடமென்றது இப்பி, சங்கு, எறும்பு, கறையான், தும்பி, வண்டு முதலியவைகளைப் பற்றியும், இவற்றைக் கோரவிருத்தி யென்றது, தஸ்மரணை சற்றுமின்றிய வானவர், மக்கள், நரகர், விலங்கு, புள் முதலியவற்றைப் பற்றியும், இவற்றைச் சாந்த விருத்தியென்றது சீவன் முத்தர் விதேக முத்தர்களைப் பற்றியு மென்க. (௩௪)

(அ-கை.)

முற்கூறிய சத்துமுதலிய ஐந்திலங்கணம்போலக் காணப்படும் ஐந்தி லக்கண மிருத்தலின், உயிர்கள் மயங்கா திருக்குமாறு போலிச்சத்து மூன் றென இக்கவியில் உணர்த்துகின்றது.

ஆதலினு லாநந்த மயமாமான் மாவே
யவைந்தினுக்கு முபாதியுள வவைமுறையே மொழியிற்
பேதமுறு சத்துமூன் றும்விவகா ரிகம்பின்
பிராதிபா திகம்பார மார்த்திகசத் தெனவே
மூதுணர்விற் சுழுத்தியிற்றான் றாநன வுற்று
முத்தியுறு மளவுமுறுங் கடாதிமுத லதுவாம்
போதுகன வினிற்றோன்றி யழிவதிடை யதுவாம்
பொன்றாத பிரமசத்தே யிறுதியதா மன்றே.

(இ, ரை.) "ஆதலினு லாநந்த மயமா மான்மா" எ. து. ஆகையால் ஆன்மா ஆனந்தமய மெனப்படும். "அவைந்தினுக்கு முபாதியுள வவை முறையே மொழியின்" எ. து. மேற்கூறிய சத்து சித்து முதலிய அவ்வைந்திலக்கணத்திற்கு முரணாகத் தோன்றுவன சிலவுள, அவற்றை முறையே மொழியுங்கால். "பேதமுறு சத்து மூன்றும் விவகாரிகம், பின்பிராதிபாதிகம், பாரமார்த்திக சத்தென" எ. து. மேற்கூறிய சத்துக்கு முரணுபுள்ள சத்து வியாவகாரிகம், பிராதிபாதிகம், பாரமாத்திகம் என மூன்றும். "மூதுணர்வில் சுழுத்தியிற் றோன்றாது நனவுற்று முத்தியுறுமளவுமுறுங் கடாதி முதலதுவாம்' எ. து. பகுத்துணர் வெனல் சற்றுமின்றிய சுழுத்தியவத்தையைப்போல, நித்தியா நித்திய வஸ்து முதலிய நிலைகள் சற்றுந் தோன்றாது மூடநனவுகொண்டு ஐக்கியமுததி யெய்து பரியந்தம் நேரிடுங் கடாதி முதலியவைகளை யுண்மையெனக் கோடல் வியாவகாரிக சத்தெனப் படுவதாம; "போதுகனவினிற் றோன்றி யழிவதிடையதுவாம், பொன்றாத பிரமசத்தே யிறுதியதாம்' எ. து. வந்து போதலை யியல்பாகவுடைய சொப்பனத்தைப் போலப் பிரதிபலித்தழிவதை யுண்மையாகக் கோடல் பிராதிபாதிக சத்தெனப் படுவதாம்; காரியப்பட்ட விடத்துந் தனக்கெனக் கேடொன்றிலாத மண்ணுலைப்போல, மாறின்றி விளங்கும் உணர்வுமயமா நிற்றலே பாரமார்த்திக சத்தெனப் படுவதாம் எ. று.

அன்று, ஏ அசைகள். அவ்வைந்தினுக்கு மென்பதில், வகரம் இடைக்குறை. விவகரிக்கப் படுதலை வியாவ காரிகமெனவும், பிரதிபலித்ததாகக் காண்டலைப் பிராதிபாசிகமெனவும், விருத்திசம்பந்த நீங்கி நிற்றலைப் பாரமார்த்திகமெனவுங் கொள்க. கடாதியென்னல் சத்த முதலியவைகளை. முதலது, இடையது, இறுதியதென்பவை விவகாரிக முதலிய மூன்றையுங் குறிக்கவந்த நேர்நிறை குறிப்பணி. சுழுத்தியில் கனவிலென்பவற்றை ஐந்தாம் வேற்றுமை யுவமை யுருபுகளாக்குக. அன்றேல் முரணும். எவ்வுயிரும் முத்தியுறுபரியந்தஞ் சுழுத்திபோற் றோன்றாது நனவுற்றுக் கடாதி விடயங்கட் குழலல் தனது யதார்த்த ஸ்வரூபம் இனையதெனத் தோன்றாமையினானும், உணர்த்தினுங் கேட்குந் தகைமை யின்மையினானு மென்க. பிறவிகடோறுங் காணப்படுந் தேகாதிப்பிரபஞ்ச மனைத்துங் கனவுபோற் றோன்றி யழிவதெனல் கனவுதோறுங் காணப்பட்டு மறைபவைக ளெங்ஙனமோ, அதுபோல நனவுதோறுங் காணப்பட்டு மறைபவைகள் சொல் மாத்திரமுந் தோற்றல் மாத்திரமுமா யிருப்பனவன்றி யதிஷ்டானமெனற்கும் உபாதானமெனற்குஞ் சற்றும் உடன்படாமையானும், அவற்றி லெழுஞ் சுகம் அப்போது மெய்போற் காணப்பட்டுப் பயனின்றி யமைதலானுமென்க.

(அ. கை.)

போலிச் சித்து நான்கின் இலக்கணம் இனையவெனக் கூறி மேல் ஆநந்த இலக்கணங் கூறுவான் வேண்டி, அவற்றின் நாமங்களை யினையவென வுணர்த்துகின்றது.

சீவனொடு சன்கூடத் தன்பிரம மென்னச்
சித்துநான் காங்கடநீர் கதுவுறும்வெண் மீன்வான்
றாவுபனி நீர்விம்ப வனுமிதா காசஞ்
சொல்கடா விச்சின்ன காசமொடு மாவான்
மேவுமிவை யவற்றினுக்குத் திட்டாந்த முறையாம்
விடயமொடு பிரமம்வா சனைமுக்கி யம்பின்
னேவுநிச மான்மாவோ டத்துவிதம் வித்தை
யெனுமிவற்றின் பெயராலெண் வகைப்படுமா நந்தம்.

(இ. ரை.) "சீவனொடீசன் கூடத்தன் பிரம மென்னச் சித்து நான் காம்" எ. து. சீவன், ஈசன், கூடஸ்தன், பிரமம் என்று சித்து நால்வகையாம்; "கடநீர் கதுவுறும் வெண்மீன் வான்றாவு பனிநீர் விம்பவனுமிதாகாசம்" எ. து. கடநீரிற் றோன்றும் வெண்மையான நட்சத்திரங்களை யுடைய ஆகாயமும், மோதாநின்ற குளிர்ந்த மேக ஜலத்திற் காட்டும் பிரதிவிம்பமாகிய அனுமானத்தால் அறியும் மேகாகாயமும்; "சொல்கடா விச்சின்ன காசமொடு மாவான் மேவுமிவை யவற்றினுக்குத் திட்டாந்த முறையாம்" எ. து. தார்க்கிகர்களாற் சொல்லப்பட்ட கடாகாயமும், மகாகாயமுமாகப் பொருந்திய இவை நான்கும் மேற்கூறிய சீவாதி நான்கினுக்குந் திட்டாந்தக் கிரமமாம்; "விடய மொடு பிரமம் வாசனை முக்கியம் பின்னேவு நிசமான்மாவோ டத்துவிதம் வித்தையெனு மிவற்றின் பெயரா லெண்வகைப் படு மாநந்தம்" எ. து. மேற்கூறிய ஆநந்தப் போலிகள் விடயம், பிரமம், வாசனை, முக்கியம், நிசம், ஆன்மா, அத்துவிதம், வித்தை எனக் கூறப்படும் இவற்றின் பெயர்களால் எண்வகைப்படும் எ. று.

கடநீரென்றதனால் இனம்பற்றிப் பனிநீரை மேகநீரென்றும். கதுவுறல் நீங்காது பற்றல். எனவே, ஆகாயம் நீங்காது பற்றலென்றாயிற்று. அனுமிதாகாச மென்றதனாற் பிம்பத்தைப் பிரதிபிம்ப மென்றும். கட கடத்துள் எனவும் அவிச்சின்னம் பின்னமின்றி நிற்றலெனவும் பொருடரலால் கடாவிச் சின்னமென் றாயிற்று. நான்காகாயமுந் திட்டாந்தமெனவே, நான்கு சைதன்யமுந் தாட்டாந்தமென் றாயிற்று. சீவன் முதலிய நான்கும் கடசலப் பிரதிபிம்பாகாய முதலிய நான்கும் நிரனிறையா நிற்றலின் நேர் நிரனிறையணி. எண் விதத்தோடு மொட்டவேண்டியது ஆநந்த மாதலால் இதனைக் கடைநிலைத் தீபமென்க. அவித்தையைக் கடமெனவும், அவித்தியா சம்பந்த கரணத்தைக் கடசலமெனவும், மாயையை மேகமெனவும், மாயா சம்பந்த கரணத்தை மேகசலமெனவும், சலசம்பந்த ஆகாய மிரண்டு போல அந்தக்கரண பிரதிபலன சம்பந்த சிதாகாயம் இரண்டையுஞ் சீவேசரெனவும், சல சம்பந்த மின்றி நிறைந்த ஆகாய மிரண்டுபோல அந்தக்கரண சம்பந்த மின்றி நிறைந்த சிதாகாயம் இரண்டையுங் கூடஸ்த பிரமமெனவும், இவற்றிற் கெல்லாம் அதிஷ்டானமா நின்றது ஏகாகாயம்போல

நான்கு சைதன்னியத்திற்கும் அதிஷ்டானமா நின்றது ஏக சிதாகாசமெனவுங் கொள்க. தன்னையேனும் அயலையேனும் அறியுந்தன்மை சற்று மில்லாமையானும், ஐயந்திரி பெய்தற்கு இது வினைமுத லாகாமையானுந் தூலவுடலை யோர் பொருளாக உபாதியெனக் கோடற்க. கொள்ளின் அனர்த்தமாக முடியும். கடத்தைப் போல்வது தூல தேகமெனின், கடம் உடைந்தவிடத்துக் கடாகாயமும், கடசலமும், கடசலப் பிரதிவிம்பாகாயமும் எங்ஙனமில்லையோ, அதுபோலத் தூலதேகம் மாய்ந்தவிடத்துக் கூடஸ்தனும் அந்தக்கரணமும் சிதாபாசனும் மாயவேண்டும். மாயுமெனின், தூலதேகம் மாய்வே முத்தியாகவேண்டும். (இஃதுடன்பாடெனின், சாதன சதுட்டய முதலிய நான்கும், இயம முதலிய வெட்டும், சரியை முதலிய நான்கும், சிரவண முதலிய ஐந்தும் மீக்கொண்டு முயல்வதால் யாதுபயன்?) இதற்கு மானிட சன்மத்திற்றான் முத்தியெனக் கூறுவ தென்னை? மானிட சன்மத்திலும், மூட விருத்தியிலும், கோரவிருத்தியிலு மல்லாது சாந்த விருத்தியிற்றானக்கிய முத்தி யெய்துவதெனக் கூறுவது மென்னை? இது பொருந்தாமையால் கடத்தைப்போலத் தூல வுடலென வியையுமெனக் கொள்ளின், பண்பு, தொழில், பயனெனப்படுஞ் சாதாரண தருமங்கட் கியையாது முரணுவ தென்னை? ஆதலின் பொருந்தாதென்க. (௬௬)

(அ. கை)

இனி ஆநந்தத்தைப்போற் காணப்படும் அஷ்டவித ஆநந்த இலக்கணங் கூறுவான்வேண்டி, இக்கவியில் சட்விதாநந்த இலக்கணம் இனையவென வுணர்த்துகின்றது.

மாதுமுதல் விடயவூ தியங்கடமிற் றோன்றி
வரல்விடய வாநந்தங் கண்படையிற் றோன்ற
லோதுபிர மாநந்தந் துயிறெளிவிற் றோற்ற
முடையதுதான் வாசனா நந்தங்கே டோடே
யாதலுமி ஞெதுமென் மதி தோன்றுதல்முக் கியமா
மாநந்த மஞெலயயோ கத்தினில்வந் துதித்த
லேதமறு நிசாநந்தம் பிரியவிட யத்து
ளியான்பிரிய னென்னத்தோன் றுதலான்மா நந்தம்.

(இ. ள.) "மாதுமுதல் விடய வூதியங்க டமிற்றோன்றிவரல் விடயவாநந்தம்" எ. து. ஸ்திரீமுதலிய விடயப் பிரயோசனங்களில் இயல்பாகத் தோன்றிவரும் பிரியமே விடயாநந்த மெனப்படுவதாம்; "கண்படையிற் றோன்ற லோது பிரமாநந்தம்" எ. து. மிக்க நித்திரையி லெழும் பிரியமே சொல்லாநின்ற பிரமாநந்த மெனப்படுவதாம்; "துயிறெளிவிற் றோற்ற முடையதுதான் வாசனாநந்தம்" எ. து. நித்திரைத்தெளிவி லெழும் பிரியமே வாசனாநந்தமெனப் படுவதாம்; "கேடோடேயாதலுமி ஞெதுமென் மதி தோன்றுதல் முக்கியமா மாநந்தம்" எ. து. விருப் பொழிதலும் விருப்

பெழுதலுமில்லாத வுபேட்சையென்னும் நிலைமைக் கியைந்த மதியிலெழும் பிரியமே முக்கியாநந்த மெனப்படுவதாம்; "மனோலய யோகத்தினில் வந் துதித்த லேதமறு நிசாநந்தம் பிரியவிடயத்து ளியான்பிரிய னென்னத்தோ ன்றுத லான்மாநந்தம்" எ. து. மனோ நாசத்திற் கியைந்த யோகாப்பியாசத் தில் வந்துதிக்கும் பிரியமே குற்றமற்ற நிசாநந்த மெனப்படுவதாம்; பிரிய மயமா நின்றுள்ள எவ்வெவ் விடயங்களினும் யானே பிரிய வடிவனெனத் தோன்றும் மயலிறந்த இன்பமே யாத்மாநந்த மெனப்படுவதாம் எ. று.

ஆமென்னும் ஆக்கவினைமுற்றை யேனைய ஐந்திடத்து மொட்டுக. நோ துன்புறலும், து இன்புறலுமாதலால் உபேட்சை யெனப்பட்டது. என்னை யன்றி யன்னியமில்லை யெனக்கண்டுழிப் பிரியமும் அங்ஙனமாமன்றோ? இதி லையமுறுவ தென்னை? (ருசு)

(அ. கை.)

ஏனைய இரண்டாநந்தங்களையும் நித்தியம்போற் காணப்படும் அபா வம் நான்கினையும் இனையவென வுணர்த்துகின்றது.

விரியுமுல கனைத்தும்பொய் மெய்ம்மைதா னென்னும்
விவேகத்திற் றோன்றுவதே யத்துவிதா நந்த
மரியமறை முடிவாகும் வாக்கியஞா னத்தா
லாதலது வித்தையா நந்தமென வறிக
வுரியனமுன் னின்மையொடு பின்னின்மை யன்றி [காந்
யொன்றினிலொன் றின்மையென்று மின்மையென நான்
திரியுமபா வங்களிவை நித்தியத்துட் புகாத
திறத்தனவாம் பூரணத்து முறுதனமூன் றாகும்.

(இ. ரை.) "விரியுமுல கனைத்தும்பொய் மெய்ம்மைதா னென்னும் விவேகத்திற் றோன்றுவதே யத்துவிதாநந்தம்" எ. து. வேறிடமின்றி யெங் கணும் விரிந்துள்ள வுலகமாகக் காணப்பட்ட அனைத்தும் பொய்யெனவும், சைதன்னியமாக விளங்குந் தானே மெய்ம்மையெனவும் அனுபவத்திற் றிர மாகக்கொண்ட விவேகத்திற் றோன்று மின்பமே யத்துவிதாநந்த மெனப் படுவதாம்; "அரியமறை முடிவாகும் வாக்கியஞா னத்தா லாதலது வித் தையா நந்தமென வறிக" எ. து. யாவராலுங் கணித்தற்கரிய வேதமுடிவா யுள்ள மகாவாக்கியங் காரணமாகச் செனித்த ஞானத்தாலுண்டாகும் ஆந ந்தமே வித்தையாநந்த மெனப்படுவதா மென வறிதி; "உரியனமுன் னின் மையொடு பின்னின்மையன்றி யொன்றினிலொன் றின்மையென்று மின் மையென நான்காம்" எ. து. மகான்களேற்றற் குரியனவாகிய பிராகபாவம், பிரத்தொம்சாபாவம், அன்னியோன்னியா பாவம், அத்யந்தாபாவம் என நித்தியப்போலி நான்கு வகைப்படும்; "திரியுமபாவங்களிவை நித்தியத்துட் புகாத திறத்தனவாம் பூரணத்து முறுதன மூன்றாகும்" எ. து. இங்ஙனம் மாறுந் தகையினவாகிய இந்த அபாவங்கள் நித்தியமெனப் படுவதோடு

சேர்தற் கியையாத தன்மை யுடையனவாய்ப் பூரண நிலைமைக் கியையாத பூரணப்போலிகள் மூன்றும் எ. று.

அனைத்து மென்றமிகையால் அயலாநின்றுள்ள பதவிக ளனைத்தையுங் கொள்க. அவைகள் பொய்யெனல் காரண காரிய மிறவாததா லென்க. மெய்ம்மைதானெனல் எவையுந் தானாக முடிவதானும், அவை தன்னி லெழுவதானு மென்க.

என்றும் பிரியவடிவா யிருத்தலின் ஆநந்தமும், ஒருகாற் பிரியமும் ஒருகாற் பிரிய மின்மையுமா யிருத்தலின், இவ்வெண்வகையும், ஆநந்தப் போலியெனவும், சதோதயமாய் விளங்குவதே நித்தியமெனவும், முன்னின் மையாதிய நான்கிடத்துந் தோற்றுதல் நித்தியப் போலியெனவுங் கொள்க.

நனவிலுள்ள வோர் விடயக் கூட்டரவிற் கூடுவோனாகிய வியாவகா ரிக சீவனையும், அவனாற் கூடப்படும் பொருளாகிய விடய வஸ்துக்களையும் அழித்துக்கொண் டெழாநின்ற பயனெதுவோ, அது விடயத்தை முன் னிட்டு வருதலால் விடயாநந்த மெனவும்;

சுழுத்தி நித்திரையிலுள்ள சூனியமான விடயக் கூட்டரவிற் கூடுவோ னாகிய பாரமார்த்திக சீவனும், கூடப்படும் பொருளாகிய சூனியமுங் கரைந் தவிடத் தெழாநின்ற பயனெதுவோ, அது நித்திரையை முன்னிட்டு வருத லாற் பிரமாநந்த மெனவும்;

நித்திரை தெளிந்துந் தெளியாவிடத்துச் சூனியமும் விடயமுங் கூடுங் கூட்டரவின் அவற்றைக் கரைத்துக்கொண் டெழாநின்ற பய னெதுவோ, அது வாசனையை முன்னிட்டு வருதலால் வாசனாநந்த மெனவும்;

சகல வஸ்துக்களிலுங் கூடும்போது பிரியாப்பிரிய மின்றிய உபேக்ஷா புத்தியிற் றோன்றும் பயனெதுவோ, அது சமத்துவத்தை முன்னிட்டு வரு தலான் முக்கியாநந்த மெனவும்;

யோகத்திற் காக்ஷியாகிய குறியைக் காண்பானாகிய மனஞ்சேர்ந் தொ டுங்கியவிடத்து அவ்விரண்டு மின்றி வரும்பய னெதுவோ, அது நிசத்தை முன்னிட்டு வருதலான் நிசாநந்த மெனவும்;

சீவனானவன் றன் பிரியத்தைத் தனாதி விடயங்களின்மேல் வைத்து அவைகளை யின்பமா யனுபவிக்கு மிடத்து அனுபவிப்பானும், அனுபவமு மாகிய இரண்டுமின்றி யுதிக்கும் பயனெதுவோ, அது சீவனை முன்னிட்டு வருதலால் ஆத்மாநந்த மெனவும்;

ஒன்றெனவும் இரண்டெனவும் அறிந்தனுபவிக்குமிடத்து அவ்விரண் டும் நீங்கிய அறிவினிடத் துதிக்கும் பயனெதுவோ, அது துவித நீக்கத்தை முன்னிட்டு வருதலால் அத்துவிதாநந்த மெனவும்;

மகாவாக்கியார்த்த நிச்சய மறிந்தவிடத்து அச்சொற் பொருளின்றி யுதிக்கும் பயனெதுவோ, அது விசாரஞானத்தை முன்னிட்டு வருதலால் வித்தையாநந்த மெனவுமாம்.

நிசாநந்த மென்பது சுவகீயாநந்தம். அஃதாவது தன்னுடையதான ஆநந்தம். எனவே, யிங்கு மனதைப்பற்றிவரலால் மானதாநந்தமென்பதே நிசாநந்த மென்பதாயிற்று. இங்ஙனங் கூறிய ஆநந்தங்க ளொன்றிற் கொன்று தாரதம்மியமாகியும் ஒன்றைமுன்னிட் டுதிப்பதாகியும் அங்ஙனம் உதித்தவிடத்து அவ்வஸ்துக்க ளின்மையாயினும் பின்னுந் தானுதித்த விடத்து அவ்வஸ்துக்களாகவே காண்கையால் அவை ஸ்வயாநந்த மாகா வென்க.

வினு:—இங்ஙனமாயின், உலகாயுதன் விடயாநந்தமே யாநந்தமெனக் கூறிய தென்னை ?

விடை:—ஆகாயத்திலுள்ள ஆதித்தனை யூர்த்தமுகமாய்ப் பார்க்கச் சத்தியில்லாதவனுக்குச் சலாகாயத்திற் றோற்றிய கற்பனுசூரியனை யதோ முகத்திற்காட்டி, அதுகாரணமாக வூர்த்தமுகத்திலுள்ள யதார்த்தம் வெளிப் படுத்துவதுபோல, விடயக்காட்சி யிறந்த பேரின்பம் உதியாத அபக்குவ னுக்கு இவ்விடயாநந்தமே பொருளெனக்கூறி, அதுகாரணமாக யதார்த்த மான ஸ்வரூபாநந்தம் வெளிப்படுமென்பது நோக்கியென்க.

வினு:—இனிச் சாமளாதிமதம் பிரமாநந்தமே யாநந்தமெனக் கூறிய தென்னை ?

விடை:—யாவுஞ் சூனியமாயவிடத் துள்ளபோதையே சுகமா நிற்ற லின் அதனை யடையும் நிமித்தம் யாவுஞ் சூனியமாய விடத்துள்ள சுழுத்தி யாநந்தமே பொருளெனக் கவுணமாகக் கூறியதென்க.

வினு:—இவ்வாநந்தம் ஆபாசமாய தென்னை ?

விடை:—சகலாவத்தையிற் றோன்றும் ஆநந்தஞ் சகலமேயாதல்போ லக் கேவலாவத்தையிற் றோன்றும் ஆநந்தமுங் கேவலமேயாதலினுலென்க.

வினு:—அதனைப் பிரமாநந்தமென்ற தென்னை ?

விடை:—பொய்யான தேகத்தில் மெய்யிருப்பதுகொண்டு அதற்கு மெய்யெனத் தானியாகுபெயராய் வந்ததுபோல, சர்வசூனிய மயானத்தி லுள்ள பிரமாநந்தம்போல், இத்தத்துவங்களடங்கின சூனியத்தினும் நித் திரை மயக்கத்தினும் இருத்தலின் இனிச்சுழுத்தி யாநந்தத்திற்கும் அந்நா மம்வந்த தென்க.

வினு:—அச்சர்வ சூனியத்தைப்போல இச்சூனியம் இருக்க இதிலுள்ள ஆநந்தத்திற்குத் தோஷம்வந்த தென்னை ?

விடை:—அச்சூனியம் "அண்டமெண் டிக்கெங்கண்ணு மடங்கச் சூனியமதாகக், கண்டுகொண் டிருக்கக் கண்ட கருத்தையு மறவேவிட்டா, லண்டமெண் டிக்கெங்கண்ணு மாய்நின்ற வாநந்தத்தைக், கண்டுகொண் டிருக்கும்வண்ணங் கணத்தில்வந் துதிக்குமன்றே" என்ற கவிப்படி யான ந்தமேலிட்டிருக்கும் இச்சூனியம் அவித்தையால் மறைப்புண்டிருக்குமாத லால் இங்ஙனமாயிற் றென்க.

வினா:—இனிச் சுத்தவாசனையாற் சத்துவாசனையும் இதனாற் சித்துவாசனையும் இதனால் ஆநந்தவாசனையும் இதனால் ஆநந்தாதீதமுமாயிருத்தலின் வாசனாநந்தமே யாநந்தமெனச் சிலநூல்களிற் கூறிய தென்னை?

விடை:—அசுத்த வாசனை நீங்க இதனாற் சுத்தவாசனையும். இதனாலுண்டான ஆத்ம விசாரணையாற் சித்துவாசனையும் இதனாலுண்டான சமாதியின் அனுபவ சம்ஸ்காரமும் இதனால் இயாவும் ஆநந்தமயமுமாமெனக் கருதிச் சாதனமாகக் கூறியதேயன்றி யதார்த்த மன்றென்க.

வினா:—இனி யிராகத்துவேஷமின்றிய உபேக்ஷாபுத்தியிற் றோற்றுகின்ற முக்கியாநந்தமே யாநந்தமெனச் சிலநூல்களிற் கூறிய தென்னை?

விடை:—காமக்குரோதாதிகள் நசித்தவிடத்து உண்டாய இன்பமே பேராநந்தமெனக் காட்டற்கென்க.

வினா:—அங்ஙனமாயின் இஃதாபாசமென்ற தென்னை?

விடை:—இராகத்துவேஷம் நீங்கியவிடந் தானாகத் தோன்றாது இவைகளை முன்னிட்டுத் தோற்றலின் இங்ஙனமாயிற் றென்க.

வினா:—இனி மனமொடுங்கிய யோகத்திலுண்டான நிசாநந்தமே யானந்தமென யோகநூல்களிற் கூறிய தென்னை?

விடை:—சங்கற்ப விகற்பங் கரைந்த சுத்தத்தி லெழும் பேராநந்தம் இஃதெனத் தெரிவிப்பான்கருதிக் கூறியதென்க.

வினா:—ஆயின் அஃது மனோலயமான விட மன்றோ?

விடை:—மனந் தனக்குப் பிரியவஸ்து எதுவோ அதிலடங்கும்; அது பொருளாகா தென்க.

வினா:—அஃதெங்ஙனம்?

விடை:—அம்மனம் விடயத்தி லடங்கினும் அடங்கும். பிரமத்தில்அடங்கினும் அடங்குமாதலின், தானுதித்தவிடத் தொடுங்கவேண்டுதலின் அஃதன் றென்க.

வினா:—அற்றேல் யோகத்தில் மனம் ஒடுங்கிய தென்றமையாற் குற்றமென்னை?

விடை:—ஞானபாதத்திற்குக் கீழ்ப்படி யோகமாதலினானும் அஃதோர் குறியில் அடங்கி நிற்குமாதலினானும் அக்குறி யேகதேச வஸ்துவாதலினானும் இஃதும் அஃதேயா மென்க.

வினா:—இனி யாத்மஞான சாத்திரங்களில் ஆத்மாநந்தமே யாநந்தமெனக் கூறிய தென்னை?

விடை:—ஆத்மா தனது பிரியத்தை விடயத்தின தென் றனுபவியாது தன தாகக்கண்டு அனுபவித்தலினா னென்க.

வினா:—அங்஫னமாயின் இஃதாபாசமென்ற தென்னை ?

விடை:—பிரிய விடயத்துள் யான் பிரியனெனக் கண்டும் பின்னும் அவ்விடயங்களை முன்னிட்டு வருதலின் அங்஫னமாயிற் றென்க.

வினா:—அற்றேல் தனாதி விடயங்கள் பிரியமாய் நிற்கின்ற தென்னை ?

விடை:—தனது பிரியத்தை யவைகள் மேல் வைத்தபோது அவை பிரியமாகவும், வெறுத்தபோது அவை வெறுப்பாகவும் ஒன்றும் வையாத போது உதாசின மாகவு மிருத்தலிற் றனது பிரியம் அவைகட் கிருத்தல் போலத் தோற்றிற் றென்க.

வினா:—இனிச் சுருதிகளிற்றுவித நீக்கத்தில் உதயமானது அத்துவிதா நந்த மென்ற தென்னை ?

விடை:—கூடஸ்த பிரம மென்ற நாமமும் அவைகளின் வியாப்பியம் வியாபகமென்ற ரூபமு மாகிய இத்துவித நீங்கிய விடத் துண்டாதலின் அஃதாமென் றறிவித்தற்கென்க.

வினா:—அங்஫னமாயின் இஃதும் ஆபாச மென்ற தென்னை ?

விடை:—பொய் மெய் யெனக் கண்ட விவேகத்திற் றோன்றல் ஆரோபித சம்பந்தமாதலால் அங்஫னமாயிற் றென்க.

வினா:—அற்றேல் இச் சட சித்து நீக்கந் துவித நீக்க மன்றோ ?

விடை:—இச்சட திருஷ்டியின்றிச் சித்தான கூடஸ்தபிரமாயிக்கியமே துவித நீக்கமாயிருத்தலின் அவை யாகாவென்க.

வினா:—இனி வேதாந்த சாத்திரங்கள் அனைத்தும் மகாவாக்கியத்திற் றோன்றிய வித்தியாநந்தமே யாநந்தமெனக் கூறியதென்னை ?

விடை:—அது நீ யானுயென்னும் பதத்தின் அருத்தமாகிய சுயஞ் சித்தில் உதயமான நிரதிசயாநந்தமே யஃதெனை அனுபவித்தற்கென்க.

வினா:—அங்஫னமாயின் இஃதும் ஆபாசமென்ற தென்னை?

விடை:—வாக்கியார்த்த விசாரணை செய்யும்போது உதயமும் அஃதின்றியபோது இன்மையுமா யிருத்தலின் அங்஫னமாயிற்றென்க.

வினா:—அற்றேல் இவ்வாநந்தங்களாற் பிரயோசனம் இன்றோ ?

விடை:—ஆடியிற் றோன்றிய ஆபாசமுகத்தால் யதார்த்த முகம்வெளிப்படுவதுபோல, இவ்வாநந்தங்களாற் சுயாநந்த வேத்தியம் வருதலிற் பிரயோசனமே யாமென்க.

வினா:—யாவற்கும் இங்஫னந்தானே ?

விடை:—ஆடியிற் சாயாமுகத்தைக் கண்ட பாலர்கள் அதுவே பொருளெனக் கரத்தாற் பற்றித் துன்புறும்; குமாரர்கள் அச்சாயையைக் கண்டவுடனே தனது யதார்த்தமுகத்தி லிருக்கின்ற மீசைமேற் கரம்பற்றி யின்புறுவர் இதுபோல, இவ்வாநந்தம் உதித்தபோது இதுவே பொருளெனக் கண்ட அபக்குவன் றுன்புறுவன்; பக்குவன் இது முன்னிலையாகத் தனது

சுயாநந்தத்தைக்கண் டின்புறுவனென்க. மேல் நித்தியம்போலத் தோற்றுஞ் சகமறிதற்கு முன்னும் பின்னும் இடையினும் எப்போதும் இன்மையென்கின்ற இந்நான்கு உத்தியினால் அந்நித்தியத்துட் புகாத அநித்தியமாமென்க.

வினா:—இச்சகம் இந்நான்கிடத்தும் அபாவமாயின் மேலிருக்கின்றதியாதோ?

விடை:—இந்நான்கிடத்தும் பாவமாயிருப்பது நித்தியமான பிரமமேயாதலின் அதுவே யிருக்கின்றதென்க.

வினா:—அற்றேல் இச்சகம் நித்தியமாகத் தோற்றுவதென்னை?

விடை:—தனது சாயை சலத்தில் அதோமுகத்தில் அபாவமாயிருந்துஞ் சுபாவமாய்த் தோற்றல்போல, நித்திய சாயையான சகமுங் கற்பிதமாகத் தோற்றும்போதே நித்தியம்போ லிருந்ததென்க.

வினா:—பிம்பரூபமாகப் பிரதி பிம்பந் தோற்றல்போலச் சித்ரூபமாகச் சகந் தோற்றாது வேறாகத் தோற்றுவதென்னை?

விடை:—ஆடியின் பேதத்தினால் ஆநநமும் வேறாகத் தோற்றுதல்போல, மாயாபேதத்தினால் அகிலமும் வேறாகத்தோற்றும். (ருகூ)

(அ. கை.)

பூரணமெனற்கு முரணாயுள்ள கால பரிச்சேதமுதலிய மூன்றின் இலக்கணம் இனையவென வுணர்த்துகின்றது.

உரைத்தவைதா மியாவையெனி னொருகாலத் துண்டின்
றொருகாலத் தெனுங்கால பரிச்சேத முடனே
தெரித்தவொரு தேயத்துண் டொருதேயத் திலையென்
றேயபரிச் சேதமுமொன் றாமாகா தென்னுங்
கருத்தில்வரு வத்துபரிச் சேதமுமா மென்னக்
கருதிடுக வினிச்சித்தின் விரிவாகு மெனமுன்
விரித்திடுமச் சீவாதி கட்குநா மாதி
விவகார கற்பனையீண் டெடுத்துமொழி குதுமால்.

(இ. ரை.) "உரைத்தவைதா மியாவையெனி னொருகாலத்துண்டின் றொருகாலத் தெனுங்கால பரிச்சேதமுடன்" எ. து. முற்கூறிய பூரணத்திற்கு முரணாயுள்ளவை யாவையெனின் ஒருகாலத்துண்டு, ஒரு காலத்தில்லையென்கிற காலபரிச்சேதமும்; "தெரித்தவொரு தேயத்துண் டொருதேயத்திலையென் றேயபரிச் சேதமும்" எ. து. இப்போது நாம் தெரிவித்த பொருள்கள் ஓரிடத்துண்டு, ஓரிடத்தில்லை யென்கிற தேச பரிச்சேதமும்; "ஒன்றா மாகாதென்னக் கருத்தில் வருவத்து பரிச்சேதமுமா மென்னக் கருதிடுக" எ. து. ஒன்றாகுமெனவும், ஒன்றாகாதெனவும், தன்மனதுக்கியையவரும் வஸ்து பரிச்சேதமுமாமென்று நினைத்திடுதி; "இனிச்சித்தின்

விரிவாகுமென முன்விரித்திடு மச்சீவாதிகட்கு நாமாதி விவகார கற்பனை யீண்டெடுத்து மொழிகுதும்'' எ.து. இனிமேல் சித்தினது விரிவாகுமென்று முன்னர் விரித்துக்கூறிய அந்தச் சீவசுவரர் முதலியவைகளுக்குப் பெயர் முதலிய விவகார கற்பனைகளை யிவ்விடத்தெடுத்துச் சொல்லுதும் எ. று.

ஆல் அசை. சொரூபமுதல் ஸ்தம்பபரியந்தம் இடைவிடாமல் நிறைந் திருப்பதே பூரண மெனவும், அதுபோலத் தோன்றுங் காலாதி பரிச்சேத மூன்றும் பூரணப்போலி யெனவுங் கொள்க. ஒன்றென்பதை யாகாதென்ப தோடுங் கூட்டிடுக. நாமாதி யென்றமையின் ரூபமுங்கொள்க. எனவே, நாம ரூபக் கிரியை யாயிற்று. விபுவைப்போலத் தோற்றுகின்ற காலமுந் தேசமும் வஸ்துவு மாகிய இம்மூன்றும் பரிச்சேதமே யன்றிப் பரிபூரண மாகா வென்க.

வினு:—அற்றேல் காலம் விபுவாய் அசஞ்சலமா யிருப்பதுமன்றி யத னிடத்து யாவுந் தோன்றி விளங்கி யழிவதனுல் அதுவே பிரமமெனக் காலப் பிரமவாதிகள் கூறிய தென்னை?

விடை:—அமைச்சை யரசனெனக் கண்டு அவனுல் அவ்வரசனைக் காண்பதுபோலக் காலத்தை விபுவெனக்கண்டு அதனுல் அதற்கு அதீத மான பூரணத்தைக் காண்பதற் கென்க.

வினு:—அற்றேல் காலத்திற்கு விபுவாதி குணங்களின்றே?

விடை:—தன் மாத்திரையினின் றேகதேசத்தில் ஆகாயம் உதித்தது போல, அதீதத்தினின் றேகதேசத்தி லுதித்த ஞெப்திக்கு முன்பின் னிப்போ தென்கின்ற கால மூன்றாதலினுனும், ஒன்றிரண்டு றில்லை யென்கின்ற பருவங்களாதலினுனும் ஒருபருவத்திற் றோன்றிய பொருண் மற்றோர்பரு வத்திற் றோன்றாமையானும் அதற்குப் பரிச்சின்னமே யன்றி விபுத்துவம் எங்ஙனமா மென்க.

வினு:—அற்றேல் இனித் தேயத்திற்கும் விபுத்துவம் இன்றே?

விடை:—யானைகண்ட குருடரைப்போலத் தான் கண்ட பூமி யெங்கு மிருக்கின்ற தென்பதே யன்றி மேல் ஆகாயமிருக்க எங்ஙனம் விபுத்துவம் வரும்? அன்றியும் ஒருதேயத் தன்மைபோல ஒருதேயத்தினும் ஒருதேயத்தி லுண்டாதல் ஒருதேயத்தினு மின்மையின் இதற்கும் அங்ஙனமேயாமென்க.

வினு:—அற்றேல், வஸ்துவுக்கும் விபுத்துவ மின்றே?

விடை:—அதற்குஞ் சமுதாயத்தில் விபுத்துவங் கூறியதே யன்றிப் பலவா யிருத்தற் கெங்ஙனம் விபுத்துவம் வரும்? அன்றியும் நாமத்தினும் ரூபத்தினும் மதுரத்தினும் பரிச்சின்னமே யிருத்தலின் இதற்கும் அங்ஙனமே யாமென்க.

வினு:—அற்றேல், இவைகட்கு விபுத்துவங் கற்பிப்பானேன்?

விடை:—தனி வஸ்துவிற்குப் பல வஸ்துக்களும் இவ்வஸ்துக்களுண் டாதற் காதாரமான தேயங்களும் இத்தேயங்க ளுண்டாதற் காதாரமான

காலங்களுமாகிய இவைகட் கொன்றற்கொன்று விசேடமானதையே விபுவாமெனக் கூறி, இவைகட் காதாரமான பூரணமே விபுவாமெனக் காண்பித்து அதன்மேல் இம்மூன்றும் பரிச்சின்னமென அறிவித்தற்கென்க.

வினா:—அற்றேல், அசத்து,சடம், துக்க,மநித்தம், கண்டமெனக் கூறிய அவ்வைந்திற்கும் ஆதாரமாய சத்து,சித்து, ஆநந்தம்,நித்தியம், பூரணமென்ற இவ்வைந்து தன்மையுடைய ஆத்மாவுக்கு அத்துவிதம் எங்ஙனங் கூடும்?

விடை:—அசத்தாதி யைந்து தன்மையுடைய திச்சகமெனத் தள்ளற் பொருட்டு இச்சத்தாதி குணங்களைக் கற்பித்ததே யன்றி யிதற்குச் சுபாவம் அன்றென்க. அஃதன்றியுஞ் சத்தில் நித்தியமுஞ் சித்தில் பூரணமும் அடங்கச் சச்சிதாநந்தமாம். இவற்றில் சத்து சித்தில் அடங்கச் சிதாநந்தமும், சித்து ஆநந்தத்திலடங்க ஆநந்த மொன்றுமே சேடிக்கும். இவ்வாநந்தமுஞ் சுயம்பிரகாசமாய்த் தானே யதீத ஞானமா நிற்கும். அங்ஙன மானவிடஞ் சுத்தப் பிரமமாதலால் அத்துவிதமே யாமென்க.

வினா:—அற்றேல், இப்பிரமத்திற்கு அவ்வைந்து தன்மையு மின்றோ?

விடை:—இன்றென்பதும் உண்டென்பதுங் கற்பித்துக் கூறுதலே யன்றி யிவை யவாங்மனோ கோசரமாதலிற் குருவாக்கியப்படி தன்னனுபவத்திற் காண்க.

பரிபூரணத்தைப்போல விளங்குங் காலாதி மூன்றின் இலக்கணங்களும் அவை பூரணத்தின் ஆபாசமென்பதுந் தெரிவித்துச் சுயஞ் சத்தாதி யைந்தின தொருமையாகிய ஆத்ம ஸ்வரூப மிஃதெனக் குறிப்பாற் றெரிவித்ததென்பது. (கூசா)

(அ. கை.)

மேற்கூறிய சீவன் முதலிய நான்கு சைதன்னியத்தின் அபிமான பரிபாய நாமங் கூறுவான் வேண்டி, சீவனுக்குக் கற்பிதமாக எய்திய விசுவ பரிபாய நாமங்கள் பதினொன்றையும் இக்கவியி லுணர்த்துகின்றது.

சாற்றரிய சீவபே தங்கண்முறை விசுவன்
  றைசதன்பின் பிராஞ்ஞனெனப் பகர்ந்திடுவ ரவருள்
வேற்றுமைசெய் தூலவுடல் வியட்டியபி மானி
  விவகாரி கன்புத்தி கதுவுறுசை தன்யன்
மாற்றரிய சிதாபாசன் விட்சேப ரூபன்
  வருபிரமாத் திருநுவல்கத் திருவொடுபோத் திருவே
தோற்றியிடும் விஞ்ஞான மயன்குடும்பி சரீரி
  தொம்பதமுக் கியன்முதலா யினவிசுவ னாமம்.

(இ. ரை.) "சாற்றரிய சீவ பேதங்கண்முறை விசுவன் றைசதன் பின் பிராஞ்ஞனெனப் பகர்ந்திடுவர்" எ. து. சொல்லற்கரிய சீவபேதங்களை யவ்வவற்றிற் குரிய காரண நெறிப்படி, விசுவன், தைசதன், பிராக்

ஞன் எனப் பெயர்தந்து அறிஞர் கூறுநிற்பர்; "அவருள் வேற்றுமைசெய் தூலவுடல் வியட்டியபிமானி விவகாரி கன்புத்தி கதுவுறுசை தன்யன் மாற் றரிய சிதாபாசன் விட்சேபரூபன்" எ. து. அம்மூவருள் வெவ்வேறு தன் மைகளைச் செய்கின்ற வியஷ்டி தூலவுட லபிமானியாகிய சீவனது வியவ காரிகன், புத்திகதுவுறு சைதன்யன், மாற்றற்கரியசிதாபாசன், விட்சேபரூ பன்; "வருபிரமாத் திருநுவல்கத் திருவொடுபோத் திருவே தோற்றியிடும் விஞ்ஞான மயன்குடும்பி சரீரி தொம்பத முக்கியன் முதலாயின விசுவனு மம்" எ.து. வழங்கி வருகின்ற பிரமாத்திரு, சொல்லப்பட்டகத்திரு, போத் திரு, தோற்றுநின்ற விஞ்ஞானமயன், குடும்பி, சரீரி, தொம்பதமுக்கியன் முதலாக வருபவைகள் விசுவபரியாய நாமங்களாம் எ. று.

ஏ அசை. வியவகாரிகன் முதலிய பதினொரு நாமங்களும், இவை போல்வன பிறவும் விசுவனெனற்குப் பரியாய நாமங்க ளெனப்படும். எல் லாத் தத்துவங்களோடும் விவகரித்தலின் வியவகாரிக னெனவும், அந்தக்க ரண பிரதி பலனுறுதலின் புத்திகதுவறு சைதன்ய னெனவும், கூடஸ்த சாயையாதலின், சிதாபாசனெனவும், விடயமாகப் பரிணமித்தலின், விட் சேப னெனவும், கரணங்களோடு கூடியறிதலின், பிரமாத்திருவெனவும், இவைக்கெல்லாங் கர்த்தாவா யிருத்தலின், கத்திருவெனவும், எவற்றையுந் தானனுபவித்தலின் போத்திருவெனவும், எவற்றையுந் தானறிதலின் விஞ் ஞானமயனெனவும், தேகமுதலியவற்றிற் சம்பந்தித் திருத்தலின் குடும்பி யெனவும், சரீரமே தானென்றிருத்தலின் சரீரியெனவும், நீ யென்னும்பத த்திற்கு வாச்சியப் பொருளாதலின் தொம்பத முக்கியனெனவுங் கூறியவா றுகாண்க. வில்லியென்றாற் போலத் தூலவுடல் வியட்டியபிமானியெனல் சீவனுக்காயிற்று. விசுவன், தைசதன், பிராக்ஞனெனல் மூன்றவஸ்தையி லுஞ் சீவனுக்குரிய அபிமான நாமங்களாதலாலும், இக்கவியில் விசுவனென ற்குப் பரியாய நாமங்கள் கூறுதலாலும், அபிமானியெனலை யிவற்று ளொ ன்றாக்கற்க. முதலாயின வென்றதனால் க்ஷேத்திரி, விஷயி முதலிய பிற வுங்கொள்க. வியாபித்திருக்குந் தன்மை விசுவனெனவும், தேஜஸ் சம்பந்த முடைமை தைஜசமெனவும், பிரக்ஞா சம்பந்தமுடைமை பிராக்ஞமென வும் காரண விடுகுறியாகப் பெயர்வந்தமை காண்க. இங்கே தேஜசெனல் அந்தக் கரணத்தை. (கூஎ)

(அ. கை.)

ஏனைய வபிமானி நாமங்களுக்குப் பரியாய நாமங்களும், ஆன்மாவின் மூன்றுவிதப் பெயர்களும் இனையவென வுணர்த்துகின்றது.

பெற்றவொரு சூக்குமமெய் வியட்டியபி மானி
பிராதிபா திகசீவன் சொப்பனகற் பிதனே
மற்றிவைதா முதலாய தைசதன்றன் பெயராய்
வழங்குறுவ காரணமெய் வியட்டியபி மானி

யுற்றவிரு மவித்தையோ பாதிகன்கா ரியமா
முபாதிகனென் பனமுதலாம் பிராஞ்ஞு மங்கள்
பற்றிவரு சீவான்மா வந்தரான் மாமேற்
பரமான்மா வெனப்படுமான் மாவிதமூன் றுகும்.

(இ. ரை.) "பெற்றவொரு சூக்குமமெய் வியட்டியபி மானி பிராதிபா சிகசீவன்சொப்பனசற் பிதனே மற்றிவைதா முதலாய தைசதன்றன்பெய ராய் வழங்குறுவ" எ. து. தனக்கு வாய்த்த வோர் சூக்குமவுடல் வியட்டி யபிமானியாகிய சீவனது பிராதிபாதிகன், சொப்பனகற்பிதன் இவைபோல் வனபிறவும் தைசத பரியாயநாமங்களென வழங்கப்படுவனவாம்; "காரண மெய் வியட்டியபிமானி யுற்றவிருமவித்தையோ பாதிகன் காரியமா முபாதி கனென்பன முதலாம் பிராஞ்ஞு நாமங்கள்" எ. து. காரணவுடல் வியட்டி யபி மானியாகியசீவனதுவாய்த்த மேலாய அவித்தையோபாதிகன் காரி யோபாதிகன் எனக்கூறப்படுவன முதலியவைகள் பிராக்ஞ பரியாய நாமங் களாம்; "பற்றிவரு சீவான்மா வந்தரான்மா மேற் பரமான்மா வெனப்படு மான் மாவித மூன்றுகும்" எ. து. இவை காரணமாக வருகின்ற சீவான்மா, அந்தரான்மா, மேலாகிய பரமான்மா எனப்படுவனவாகியவான்மா இவ் வாறு மூன்றுவிதப்படும் எ. று.

அவித்தையா உபாதிகன் எனல் அவித்தையோபாதிக னென்றுயது வடமொழி குணசந்தியா லென்க. இக்கவியில் தைசதனெனற்குப் பரியாய நாம மிரண்டும் பிராக்ஞனெனற்குப் பரியாயநாம மிரண்டும் வந்தவாறு கண்டு கொள்க. சாக்கிரவாசனை பிரதி பலித்தலின் பிராதிபாதிக சீவனெ னவும், நனவைக் கற்பித்தல்போலச் சொற்பனத்தைக் கற்பித்தலின் சொற்பன கற்பிதனெனவும் சுழுத்தியி லொன்றுந் தோற்றவில்லையெனத் தெரிந்து பின்னுணர்த்தற்கு, அங்கே தெரிவாயிருத்தலின் பிராக்ஞனெ னவு மாயிற்று. சுழுத்தியில் பிரக்ஞை தனித்து நின்றுந் தன்னைத்தா னுணர் தற்பால தன்றுமையானும் அங்ஙன முணராமை தூலசூக்குமப் பிரவாக த்திற்கு வித்தாயிருப்பதினுனும் காரணமெய்வியட்டி யபிமானியெனவும், அப்போது வித்தாசம்பந்த மன்றுதலால் அவித்தையோபாதிகனெனவும், அவித்தையி னின்று தானே காரியப்படுதற்கு விடாதியைந்து நிற்றலின் காரியோபாதிகனெனவுங் காரணவிடுகுறியாய்ப் பெயர் வந்தமைகாண்க. சொற்பனுவத்தையில் சோமசூரியாக்கினி யின்றித்தானே பிரகாசரூபமா யிருத்தலின் தைசதனென்றும், அங்கே தூலதேகத்தைப்போற் காண்பதை யானென் றபிமானித்தலின் சூக்குமமெய்வியட்டியபிமானியென்றும்பெயர் வந்தமைகாண்க. (சுஅ)

(அ. கை.)

மேற்கூறிய ஆத்மத்திரய விலக்கணம் இனைய வென வுணர்த்து கின்றது.

**வேறு.**

காய்ந்துள விரும்பு போலுடம் பாதி
கலந்துறு குடும்பமென் வழக்கிற்
சார்ந்துளன் சீவான் மாவெனப் படுவான்
றாமரை யிலையினீர்·போலத்
தோய்ந்துள குடும்பப் பெருவிவ காரந்
தோய்வில னந்தரான் மாவாம்
போந்துல கிற்குப் பரிதிபோற் சான்றாய்ப்
பொருந்தினோன் றன்பர மான்மா.

(இ. ரை.) காய்ந்துள விரும்பு போலுடம்பாதி கலந்துறு குடும்பமென் வழக்கிற் சார்ந்துளன் சீவான் மாவெனப்படுவான்'' எ. து. உலைக்களத்திற் காய்ந்து கொண்டிருக்கின்ற விரும்பைப்போலத்தூலதேகமுதலியவற்றோடு கலந்துள்ள குடும்பமென்னுமுலகவழக்கில் சேர்ந்திருப்பவன்யாவனோ, அவனே சீவான்மாவெனப் படுபவனாவன்; "தாமரையிலையினீர்போலத் தோய்ந்துள குடும்பப் பெருவிவகாரந் தோய்வில னந்தரான்மாவாம்" எ. து. தாமரையிலையின்கணுள்ள நீரைப்போலத்தான் சம்பந்தித்துள்ள குடும்பமாகிய பெரிய விவகாரத்திலிருந்தும் அவற்றோடு சம்பந்த முறாதவன் யாவனோ அவனே யந்தரான்மா வெனப்படுபவனாவன்; "போந்துலகிற்குப் பரிதிபோற்சான்றாய்ப் பொருந்தினோன்றன்பரமான்மா" எ. து. உலகத்திற்குச்சூரியனெங்ஙனமோ, அதுபோல வுலகத்தில் வந்து எவற்றிற்குஞ் சாட்சியாய் விளங்குபவன் யாவனோ அவனே பரமான்மா வெனப்படுபவனாவனெ. று.

இரும்பைக் காய்ச்சி யடிக்குமிடத்துத் தெப்பை யக்கினிக்குமாமாறுபோலத் தேகமுதலிய குடும்பத்தோடுகூடி விவரிக்குமிடத்து விளையுஞ் சுகதுக்கம் அவற்றோடு சார்ந்த ஆன்மாவுக்கு மாதலால், அந்த அவசரஞ் சீவான்மாவெனவும் தாமரையிலையோடு சம்பந்தமுற்றுந் தனக்குக் கிஞ்சித்து மில்லாத நீர்போலத் தேகமுதலிய பெரிய குடும்பத்தோடு சம்பந்தமுற்றும் அதுகாரணமாக வெய்தும் விவகாரத்தாக்கு அவ்வாறுநிற்கும் ஆன்மாவுக்குச்சற்றுமின்றாதலால் அந்தவவசரம் அந்தரான்மாவெனவும், அந்தரத்தி னின்று தன் கதி ருலகமெங்கும் பரவச்செய்யினும் அவ்வுலகத்தாலெய்தும் நயநட்டந் தனக்குச் சற்றுமின்றி யதிதூரமாகவுஞ் சாட்சியாகவும்விளங்குஞ்சூரியன் போலச் சிதாகாயத்தினின்று தனதந்தக்கரணம் உலகெங்கும் விவரிக்கச் செய்யினும் அவ்வுலகத்தாலெய்தும் நயநட்டந் தனக்குச் சற்றுமின்றி யுபாதித் திரியங்கட்கு அதிதூரமாகவுஞ் சாட்சியாகவும் விளங்குவது ஆன்மாவாதலால் அந்த அவசரம் பரமான்மாவெனவுங் கோடற்கியைதலின்இங்ஙனங் கூறியதென்க. ஆன்மாவொன்றேனும் இங்ஙனம் மூவிதமாக நிற்றல்போற் காணப்படுதலின் இதனை விளக்க மூவித வுவமை கூறியதென்க. சீவான்மா வெனல் யோகிகாறும், அந்தரான்மா வெனல் முமூட்சுகாறும், பரமான்மா

வெனல் விதேக முத்திகாறுமெனக் கொள்க. இதனை யேலாதார் ஆன்மத ரிசன மில்லாதார். எனவே, இஃதனுபூதிகாரணமாக விளக்கிய தெனப்பெ ற்ரும். யர இவ்விரண்டும் ஆசெதுகை. ஆதியென்றதனால் பெண்டு பிள்ளை முதலியவைகளைக் கொள்க. உபாதியை நாளெனல் சீவான்மா, எய்தியுஞ் சைதன்னியம் நானாகாமை அர்சரான்மா, ஆனவிடத்து அயலின்மை பர மான்மா வெனினு மமையும். இங்கே ஆன்மாவெனல் வியாபக விளக்கமா நின்ற ஞெப்தியை. போல்சார்ந்துளனெனவும்,போல்தோய்வில னெனவும், போல் பொருந்திஞே னெனவு முடிக்க. அக்கினிமயமாம் இரும்பென்பார் காய்ந்துள விரும்பென்ருர். உளவெனல் செயவென்னும் வாய்பாட்டுவினை யெச்சம்பற்றி. குடும்பப் பெருவிவகாரந் தோய்வில னென்றதனால் துறவற மென்னற்க. கொள்ளின் தாமரையிலை நீரென்னுமுவமை சாதாரண தர்ம த்தால் முரணும்.முருணுதலால் இல்லற மெனலே பெரும்பாலும் அமையும். இம்மூன்று கவியினது கருத்து. தொம்பத விலக்கியார்த்தந் தோன்று நிமித்தம் அதன் முக்கியார்த்தத்தை விரித்துக் கூறியதென்பது. (௬௬)

(அ. கை.)

ஆன்மாநல்வினைதீவினையாற் பிறவிகடோறு மொத்துண்ணுகிருனென் றும், விடாது பிறவிகடோறும் விரைந்து விரைந்து நுழைந்து நுழைந்து செல்லுகிருனென்றும் வழங்கும் வழக்கத்தை மறுக்க வுவமான பூர்வக மாகக் கூறுதலை யுணர்த்து கின்றது.

நீர்விழுந் தொருவெங் கதிர்தடு மாறி
நின்றதென் றுரைப்பது போலுங்
கார்விரைந் தோட வோடுகின் றதுதண்
கலைமதி யென்பது போலு
மோர்வருந் திரிவில் போதவான் மாவிற்
குடன்முத லாகிய வுபாதிப்
பேர்பெறுஞ் சீவ பாவனை யுலகப்
பெருவிவ காரமென் றறியே.

(இ. ரை.) "நீர்விழுந் தொரு வெங்கதிர்தடுமாறி நின்றதென் றுரைப் பது போலும்" எ. து வெப்பமுள்ள வோர் சூரியன் ஆகாயத்தினின்று நீரில் விழுந்து தத்தளித்துக்கொண்டிருக்கிருனென் றுலகத்தார்சொல்வது போலவும்; "கார்விரைந்தோட வோடுகின்றது தண்கலைமதி யென்பதுபோ லும்" எ. து. மேகம்விரைவி லோடக் குளிர்ந்த கலைகளையுடைய சந்திரன் விரைவிலோடு கின்ருனெனக் கூறுதல்போலவும் இருக்கும்; "ஓர்வருந்திரி வில் போதவான்மாவிற் குடன் முதலாகிய வுபாதிப் பேர்பெருஞ் சீவபாவ னை" எ. து. ஒதியு முணர்தற்கரிய வென்று மொருதகைத்தா நின்றுள்ள ஞானத்மாவிற்குத் தூலதேக முதலிய வுபாதித்திரியங் காரணமாக அபிமா னிப் பரியாயநாமங்களை யேற்ற சீவபாவனையெய்தியது; "உலகப்பெருவிவ

காரமென்றறி" எ. து. ஆதலால், பிரியவடிவ மென்று கருதியவுலகப் பெருவிவகாரப் பேற்றினு லிம்மயக்க மெய்திய தென்றறிதி எ. று.

• எ அசை.என்று மொருதகைத்தாநின்று விளங்கும்ஆன்மாவுக்குஉபாதித்திரியங் காரணமாகச் சீவபாவ மெய்தியதை விளக்க இவ் விரண்டுவமை கூறினு ரென்க. பிரதிவிம்பத்தை விம்பமெனக் கோடல்போல அநாத்மாவை யாத்மாவெனக் கோடலும், ஒன்றின்புடை பெயர்ச்சியைவேறென்றதாகக் கோடல்போல அநாத்மாவின் புடைபெயர்ச்சியை ஆத்மாவின தாகக்கோடலும் மயக்கமோ ? தெளிவோ? தெளிவெனின், பிம்ப சூரியன் நீர் விழுந்தலை தலும், சந்திரன் மேகத்தி னுழைந் தோடலும் மெய்யாகவேண்டும். கூடாதெனின் மயக்கமெனல் வேண்டும். இவ்வையந் தெளிதற்குப் பிரதி விம்பத்தையும் மேகவிரைவையும் நாடா திருக்கவேண்டும். அதுபோல அநாத்மவாகிய உபாதித்திரியத்தை நாடா திருக்கவேண்டும். நாடின் இவ்விரண்டுபெமானவும் பொருந்தும். எனவே, அதோமுகத்தைவிட்டு ஊர்த்தமுகத்தைக் கைப்பிடியென்றாயிற்று இதனால் ஆன்மா என்று மிருந்தபடி யிருக்கின்ற தெனலைக் காணுதும். போலுமெனவிரண்டையும் வினைமுற்றாக்கினுமமையும் இங்கே வோடவெனல் செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். திரிவிலென் றதனால் என்று மொருதகைத்தா நிற்றலென வுரைகொண்டாம். ஆன்மாவினியற்கைவடிவம்வேறன்றாதலின்போத ஆன்மாவென்றார். இங்கே போதமெனல் தன்னையும் அயலையும் உணருந்தகையதை. சீவபாவனையெனல் அயலைமாத்திரமுணருந் தகையதை யென்க. உலகப்பெருவிவகார மென்றது, அயலைப் பிரியவடிவமாகக் கோடல்பற்றியாதலா லொச்கும். விழுந்தென்ற மிகையால் வேறிடத்து நின்றெனக் கோடற்கியைதலின் ஆகாயத்தை வருவித்தாம். இதனது கருத்து. தொம்பதத்தின் வாச்சியார்த்த இலக்கணம் இலக்கியார்த்தமான கூடத்தனுக்கு வந்ததாகத் தோற்றுங் கற்பனையை யுணர்த்திய தென்பது. (சo)

(அ. கை.)

ஈசனுக்குப் பரியாயநாமம் அபிமானத்திரயத்தால் எய்தியது இத்துணையவெனக் கூறுவான்வேண்டி, இக்கவியில் அபிமானத்திரய நாமங்களையும் அவற்றுள் விராட்டிற்கு ஒன்றையும், இரணிய கருப்பற் கிரண்டி லொன்றையும் விளங்க வுணர்த்து கின்றது.

அருவிராட் புருட னிரணிய கருப்ப
　　னந்தரி யாமியென் றீசன்
றிரிவித மவருட் டேலவா கத்துச்
　　சமட்டியா கியவபி மானி
விரிவுறும் வைசுவா னரனெனன் முதலாம்
　　விராட்புரு டன்பெய ராகு
மருவுறு மிலிங்க மெனுமுடற் சமட்டி
　　மானிமாப் பிராணனே யன்றி.

(இ வை.) "அருவிராட் புருட னிரணிய கருப்ப னந்தரி யாமியென் றீசன்றிரிவிதம்" எ. து. ஈசனதபிமான நாமம் அரிய விராட்புருடன், இரணிய கருப்பன், அந்தரியாமியென மூவகையா நிற்கும்; "அவருடலேவிராகத்துச் சமட்டியாகிய வபிமானி விரிவுறும் வைசுவா னரனெனன முதலாம் விராட்புருடன் பெயராகும்" எ. து. அபிமானத்தில் மூவராகக் காணப்பட்டவருள் சமஷ்டி தூலதேக அபிமானியாகிய ஈசனது விராட்புருட பரியாய நாமம் வியாபித்த வைசுவானரனெனல் முதலியவையாம்; 'மருவுறு மிலிங்கமெனுமுடற் சமட்டி மானிமாப் பிராணனே யன்றி" எ. து. பொருந்திய சூட்சுமதேகஞ் சமஷ்டி யபிமானியாகிய ஈசனது மாப்பிராணனும், இஃதன்றி எ. று. பிருதிவி முதலிய அனைத்தையுந் தனதுருவாக்கோடலை விராட்புருடனெனவும், தூலக்கமாகப் பிரகாசிக்கின்ற அனைத்தையுந் தனது உதரத்துள் அடக்கிக் கோடலை இரணிய கருப்பனெனவும், ஆகாயம்போல் அகம்புறமற்ற நிலைகோடலை அந்தரியாமி யெனவுங் காரண விடுகுறியாகக் கூறினமை காண்க. பிருதிவி முதலியவெனல் அஷ்ட மூர்த்தங்களை. அபிமானியெனல் அபிமானித்தலா லென்க. திரிவிதமா மென்பதில் ஆக்கவினை முற்றெஞ்சியது. அவருளெனல் பலர்பாற் சுட்டாதலின் திரிவிதமெனலை மூவிதமாவரென முடிக்கினுமமையும். விரிவுறுமென்ற மிகையால் சீவனது வியாபகத்திற்கு வியாபகமா நிற்றலைப்பெற்றாம். பெறவே, விசுவத்திற்கு விசுவமென்றாயிற்று. சமஷ்டிபற்றி வந்ததாதலின், சமஷ்டியாகிய அபிமானியென்றார். இலிங்கவுடல் சூக்குமவுடல் இவை யொருபொருட்கிளவி. அன்றியெனலாற்குளகம். (சுக)

(அ. கை.)

முன்னிறுத்திய வேனைய வொன்றையும், அந்தரியாமிக்கு ஆறையுமினையவென இக்கவியில் விளங்க வுணர்த்துகின்றது.

சூத்திரான் மகனென் பெயர்முத லாகச்
சொற்றன ரிரணிய கருப்பற்
கேத்துகா ரணமா முடம்புறு சமட்டி
யெனுமபி மானியவ் வியத்தன்
வாய்த்தகா ரணமா முபாதிக னநந்த
மயன்பர தேவதை பரம
ஞர்த்ததற் பதமுக் கியார்த்தனென் பெயர்மு
னந்தரி யாமிபெற் றடுமே.

(இ. வை.) "சூத்திரான் மகனென் பெயர்முதலாகச் சொற்றன ரிரணிய கருப்பற்கு" எ. து. சூத்திரான் மகனு மெனக் கூறப்படும் பெயர் முதலானவை யிரணியகருப்பனுக்குப் பரியாயநாமங்களெனக் கூறுவரறிஞர்; "ஏத்துகாரணமா முடம் புறுசமட்டி யெனு மபிமானியவ்வியத்தன் வாய்த்தகாரணமா முபாதிகன்" எ. து. துதிக்கத்தக்க காரண சரீர சமஷ்டி யபிமானி

யாகிய ஈசனது அவ்வியத்தன் பொருந்திய காரணமா முபாதிகன்; "அநந் தமயன் பரதேவதை பரமனார்த்த தற்பதமுக்கியார்த்தனென்பெயர் முனந் தரியாமி பெற்றிடும்" எ. து. அநந்த மயன், பரதேவதை, பரன், பொருந் திய தற்பத முக்கியார்த்தன் என்கின்ற பெயர் முதலான வைகளை யந்தரி யாமி யென்னும் அபிமானிநாமம் பரியாயநாமங்களாகப் பெறும் எ. று.

ஏ அசை. யகரமும், ரகரமும் ஆசெதுகைகள். எனவே, இவ்வாறும் ஈசன தந்தரியாமி யென்னும் அபிமானியின் பரியாய நாமங்களாம். அவ்வி யத்தனெனல் இந்திரியங்களுக்கு விஷயமாகா தடங்கி நிற்றல்பற்றியும், கார ணமா முபாதிகனெனல் சகத்சன்மாதி காரணத்வ மேயுபாதியாக வுடைமை பற்றியும், அநந்தமய னெனல் முடிவின்றி வியாபித்திருத்தல் பற்றியும், பர தேவதையெனல் தேவுக்கெல்லா மகாதேவா யிருத்தல் பற்றியும், பரம னெ னல் மேலுக்கெல்லாம் மேலாயிருத்தல் பற்றியும், தற்பத முக்கியார்த்த னெனல் அது வென்னும் பதத்திற்கு வாச்சியார்த்தமா யிருத்தல் பற்றியுங் காரண விடுகுறியாய் வந்தன வென்க. இலிங்கமென்னு முடற்சமட்டி யபி மானி யெனல் சமட்டி சூக்கும சரீரத்தை யபிமானித்திருத்தலையும், மாப் பிராணனெனல் மகாமாருதமே மூச்சாயிருத்தலையும்,சூத்திரான் மகனெனல் எவற்றிற்குஞ் சூத்திரதாரியாநின் றவற்றை யசைப்பித்தலையும், காரணமா முடம்புறு சமட்டியபிமானி யெனல் சமட்டி காரண தேகத்தை யபிமானித் திருத்தலையும் விளக்குவதால் வந்தமை காண்க. ஆர்ந்தவெனல் ஆர்த்தவென் றுய தெதுகைபற்றி வந்த விகாரம். (சஉ)

(அ. கை.)

மேற்கூறிய ஈசனது அபிமான நிலைகளை யித்தகைத்தென விளக்கத் திருஷ்டாந்த முணர்த்துகின்றது.

சித்திரப் படமோர் பொருளொடுங் கூடாத்
　　திகழ்வினிற் றவுதமே யெனவு
நெய்த்தகூழ் வருடக் கடிதமே யெனவு
　　நீனிறத் திலாஞ்சனை யெனவும்
பத்தியோ வியஞ்சேர்ந் திரஞ்சித மெனவும்
　　படுதல்போற் பிரமமு மாயை
வைத்தகா ரியங்கள் கடந்துறு நிலையில்
　　வயங்குசித் தெனும்பெயர் புனைந்தே.

(இ. ரை.) "சித்திரப் படமோர் பொருளொடுங் கூடாத் திகழ்வினிற் றவுதமேயெனவும்" எ. து. சித்திரப் படமானது சித்திரமாக வோர் விகாரப் பொருளோடும் அமையாது தனித்து விளங்குமிடத்துத் தவுதபடமென்றும், "நெய்த்த கூழ் வருடக் கடிதமே யெனவு நீனிறத் திலாஞ்சனை யெனவும்" எ. து. பசைக்கூழ் தடவ அதனாற் கடிதபட மெனவும், நீலநிறத்தைத் தடவ

அதனு லிலாஞ்சன படமெனவும்; "பத்தியோ வியஞ்சேர்ந் திரஞ்சித மென வும் படுதல்போல்" எ. து. வரிசை வரிசையாகச் சித்திரம் வரையப்பட்டு, அதனு லிரஞ்சிதபட மெனவும் பெயர்பெறு மாறுபோன்று, "பிரமமு மாயைவைத்த காரியங்கள் கடந்துறு நிலையில் வயங்கு சித்தெனும் பெயர் புனைந்து" எ. து. பிரம சைதன்னியமும் மாயையைக் காரணமாகக் கொள் வதனுற் சான்ருேர்களால் அமைத்துவைத்த காரியமாகிய பாஞ்சபூத பௌ திகங்களைச் சற்றுந் தன்பாலில்லாது கடந்து நிற்கும் அவசர நிலையில் சித் தென்னும் நாமந் தரிக்கப்பெற்றுச் சதோதயமாக விளங்கும் எ. று.

ஏ அசை. இலாஞ்சனையெனல் உருவமைத்தற் கியைந்த அடையாளச் சின்ன மெனவும், இரஞ்சிதமெனல் சித்திரங்களை நிறைய வரைந்து மகிழ்த லெனவுங் கொள்க. கொள்ளவே சித்திற்குப் படமும், ஈசனுக்கு வெளுத்த படமும், அந்தரியாமிக்குக் கடித படமும், இரணிய கருப்பனுக்கு இலாஞ் சன படமும், விராட்டுக்கு இரஞ்சித படமுமென வுவமித்ததாகப் பெற்ரும். படமானது வெளுத்தவிடத்துத் தவுதமெனவும், துவரிட்டுக் கொட்டிய விடத்துக் கடிதமெனவும், ஓர் வர்ணத்தி லுருக்கள் தோன்ற அச்சுக்கட்டின விடத்து இலாஞ்சனை யெனவும், மன ரம்மிதமாகப் பலவித வர்ணங்கள் இடமறிந் தமைத்தவிடத்து இரஞ்சித மெனவும் பெயர் பெறுமாறு காண்க. இந்நால்விதக் கற்பிதங்கட்கு ஆதாரஞ் சுபாவபட மெங்ஙனமோ, அதுபோல விராட்டாதிய நால்விதக் கற்பிதங்கட்கும் ஆதாரஞ் சுயம் பிரமமெனக் காண்க. படுதல்போல் புனைந்தென முடிக்க. செய்த்த உரிச் சொல் லடியா கப் பிறந்த பெய ரெச்சம். அதில் யகர வொற்று ஆசெதுகை. மாயை காரி யங்க ளென்றதனுல் பாஞ்ச பூத பௌதிகங்க ளென்ரும். பிரமமு மென் பதி லும்மை உயர்வு சிறப்பு. எந்தெந்தப் பிறவிகள் எங்ஙன மெங்ஙனமாக வந்து மாறினும் எந்தெந்தச் சுக துக்கங்கள் எங்ஙன மெங்ஙனம் வந்து மாறினும் தானங்ஙனம் அங்ஙன மாவதுபோற் காணப்படினுந் தன்பாற் போக்குவரத்தாகிய சலனந் தினைத்துணையு மின்மையால், பிரமமும் மாயை வைத்த காரியங்கள் கடந்துறு நிலையில் சித்தெனும்பெயர் புனைந்து வயங்கு மென்ருர். (சங)

(அ. கை.)

அங்ஙனம் வயங்கும் பிரமம் இன்னின்ன ஏதுக்களால் இன்னின்ன பெயர் புனைந்து நிற்கு மெனலைத் தாஷ்டாந்தமாக வுணர்த்துகின்றது.

அகிலகா ரணமா மாயையை மருவி
யந்தரி யாமியாய் மாயை
சகலகா ரியமாஞ் சூக்கும வுடம்பு
சார்ந்துபொன் கருப்பனென் ருகி
விகலமி ரால வுடம்பினை மேவி
விராட்டென நிற்குமென் றறிவாய்

திகழுறு பிரமஞ் சித்திரப் படமேற்
சித்திர மியாதென வினவில்.

(இ. வை.) "அகிலகா ரணமா மாயையை மருவி யந்தரி யாமியாய்" எ. து. சமஸ்தத்திற்குங் காரணமா நின்றுள்ள மாயையோடு சம்பந்தித்து அந்தரியாமி யென்னும் பெயரை யுடையதாயும், "மாயை சகல காரியமாஞ் சூக்கும வுடம்பு சார்ந்து பொன் கருப்பனென்றாகி" எ. து. மாயையினது காரியமாகப் பலவாறாக நின்றுள்ள சூக்கும வுடலோடு சார்ந்து இரணிய கருப்ப னென்னும் பெயரை யுடையதாயும், "விகலமி றூல வுடம்பினை மேவி விராட்டென நிற்குமென் றறிவாய்" எ. து. குறைவிலாத தூல சரீரத்தைச் சார்ந்து விராட்டென்னும் பெயரை யுடையதாயும் நிற்குமென்று நீ யறிதி; "திகழுறு பிரமஞ் சித்திரப் படமேற் சித்திரம் யாதென வினவில்" எ. து. சதோதயமாக விளங்கா நின்ற பிரம சைதன்யஞ் சித்திரப் படம்போ லிருக்குமாயின் அப்போது சித்திரமெனப்படுவது யாதென்று மாணுக்கனே நீ கேட்பையாயின் எ. று.

அந்தரியாமி முதலிய மூன்றபிமானி நாமங்களைக் கூறியதால், மாயை சூக்கும வுடம்பு தூல வுடம்பாகிய இவற்றைச் சமட்டியெனக் கண்டாம். ஏனைய இரண்டு உடம்பு இனையவெனச் சிறப்பித்த அதனால் மாயையைக் காரண வுடம்பெனக் கொள்க. விகலமென்ற விதப்பானும் சமட்டியெனற் கியையும். இங்கே சமட்டி சூக்கும வுடலெனல் அபஞ்சீகிருத பஞ்சமகா பூதத்தை. காரியமெனலைத் தூல வுடலுக்கு மொட்டுக. பிரமமுஞ் சித்தெனும் பெயர் புனைந்து அந்தரியாமியாய்ப் பொன் கருப்பனென்றாகி விராட்டாய் நிற்குமென முடிக்கினும் அமையும். (சச)

(அ. கை.)

மேற் சித்திரம்யாதென்ற வினுவிற்கு உத்தரம் இனையவென வுணர்த்துகின்றது.

விரிஞ்சனே முதலாஞ் சேதன மோடு
வெற்பெழு வாயசே தனமாய்ப்
பரந்துள வுலகஞ் சித்திர மென்பர்
பரம்பொரு ளாமொரு பிரமத்
திருஞ்சடா சடமா முலகது தோற்ற
மெவ்வண மெனிற்படந் தன்னில்
வரைந்தபன் னிறமாக் குளிர்முதன் மாற்ற
வல்லன வலதுகிற் போலி.

(இ. வை.) "விரிஞ்சனே முதலாஞ் சேதன மோடு வெற்பெழு வாய சேதனமாய்ப் பரந்துள வுலகஞ் சித்திர மென்பர்" எ. து. பிரமன் முதலிய சித்துப் பொருள்களும், பர்வத முதல் பெரிய வுலக மிறுவாக் கிடந்த சடப்

பொருள்களுஞ் சித்திரமெனப் படுமென் றறிஞர் கூறுநிற்பர்; "பரம் பொருளாமொரு பிரமத் திருஞ்சடா சடமா மூலகது தோற்ற மெவ்வணமெனில்" எ. து. பரம் பொருளா நின்றுள்ள வொரு பிரமத்தில் சட சித்து சம்பந்தமாயுள்ள பெரிய வுலகங் காணப்படுங் காட்சி யெவ்வா றிருக்கின்றதெனக் கேட்கில், "படந்தன்னில் வரைந்த பன்னிறமாக் குளிர்முதன் மாற்ற வல்லனவல துகிற்போலி" எ. து. சித்திரப் படத்திற் பல வேறு வகை நிறத்ததா வரையப்பெற்ற வஸ்திரப் போலியானது குளிர் முதலிய வற்றை நீக்கற்கு வலியுள்ளன வல்ல எ. று.

விரிஞ்சன்முத லென்றமையின் சராசர வுயிர்களேயும், வெற்பெழுவா யென்றமையின் பாஞ்ச பூத பௌதிகங்களேயுங் கொள்க. சித்திரம் போல்வதிற் சித்திரமென்றார். குளிர் முதலெனல் வினையாலணையும்பெயர். துகில் போன் றிருத்தலின் துகிற்போலி யென்றார். இதனை பஞ்சதசப் பிரகரணத்திற் சித்திர தீபிகையிற் காண்க. சடமுஞ் சித்தும் மிசிரிம்பித் திருத்தலின் சடாசடமா மூல கெனப்பட்டது. உலகைத் தோற்றமென்றது தனக்கெனச் சொரூபமொன் றின்மைபற்றி. துகிற்போலி பயன்படுமேல் சராசரத் தோற்றம் பயன்படும். படத்தையன்றித் துகிற்போலி யுளதேல் சைதன்னிய வியாபகத்தையன்றி யுலகத்தோற்ற மென வுளதாம். என்று மின்மையின் இவ்வுவமை பொருந்து மெனற் கைய மென்னை ? இன்றுதலா லேற்றற்பாலதென்க. படநாட்டத்திற் சித்திர மின்றுதல்போல ஞெப்தி நாட்டத்தில் உலக மெங்ஙனந் தோன்றும்? சித்திரத்திற்குப் படம் ஆதாரமா யிருப்பது போலச் சகத்துக்கு ஞெப்தி யாதாரமா யிருத்தலின், வேறு பொரு ளெனக் கோடற்க. கொள்ளின் துக்காபாவத்துக் கிடமின்று. உலகத் தோற்றந் துகிற் போலியென முடிக்கினும் அமையும். (சுரு)

(அ. சை.)

மேற் கூறிய சைதன்யத்தில் சடாசடமாயுள்ள சகம் இங்ஙனமா யிருக்கின்றதென் றுணர்த்துகின்றது.

ஓர்வடி வாகிக் குளிர்முதன் மாற்று
 முண்மையாஞ் சித்திரப் படம்போன்
றார்வம தொருங்கே யகற்றிடற் கியைந்திங்
 கணிபெற நிற்பதோர் பிரம
மேர்பெற வரைந்த சித்திர மென்ன
 விருக்குமப் பரத்திலிவ் வுலகந்
தேர்வுறிற் றன்னைத் திரிபற வெங்குந
 திகழுமிந் நிலையது பின்னும்.

(இ. ரை.) "ஓர்வடி வாகிக் குளிர்முதன் மாற்று முண்மையாஞ் சித்திரப் படம் போன்று" எ. து. ஓர் வடிவாகக் காணப்பட்டு நின்று குளிர் முதலானவைகளை நீக்கத்தக்க மெய்யான அழகிய வஸ்திரத்தைப்போல, "ஆர்

வமதொருங்கே யகற்றிடற் கியைந் திங்கணிபெற நிற்ப தோர் பிரமம்'' எ. து அவாக்கள் அனைத்தையும் ஒருங்கே யகற்றற் கியைந்து இங்கே சத்து முதலிய பஞ்ச இலக்கணமும் அழகு பெறுமாறு நிற்கும் இயல்பினதாகிய வோர் பிரமமான திருக்கும்; "ஏர்பெற வரைந்த சித்திரமென்ன விருக்கு மப்பரத்தி லிவ் வுலகம்'' எ. து. அதற் கியைந்த இலக்கணம் அமையு மாறு வரைந்த சித்திரம் எங்ஙனமோ, அங்ஙனமே அந்தப் பிரமத்தில் இவ்வுலக மிருக்கும்; "தேர்வுறிற் றன்னைத் திரிபற வெங்குந் திகழுமிந் நிலையது பின்னும்'' எ. து. எவ்விடத்திலுந் தன்னைத்தா னேயந் திரிபற விசாரித்துத் தெளியி னிங்ஙனமாய நிலை யெவர்க்கும் விளங்கா நிற்கும். இஃதன்றியும் எ. று.

பிரமத்திற்குஞ் சகத்திற்கு முள்ள நிலை யினைய தெனக் காட்ட இவ் வுவமை கூறியது வேறிடத் தன்று, தன்னிடத்திலு மென்பார் தேர்வுறிற் றன்னைத் திரிபறவெங்குந் திகழு மிந்நிலைய தென்றார். வரைந்தது தன்னில் தானே யன்றி, பிறரா லன்றெனற் கபவாத நாட்டத்தாற் றெளிக. அஃதின் றேல் எவர்க்கு மரிது. அதனால் மதத்தரை யானை கண்ட குருட ரென்பார் மாறின்றி நிற்பதா லோர்வடிவாகி யென்றார். (சகூ)

(அ. கை.)

மேற் கூறிய ஈசனது சட்வித குணங்களும், சாமர்த்தியத் திறங்களும், பஞ்சகிர்த்திய நாமங்களும் இனையவென வுணர்த்துகின்றது.

இத்திறத் தீசன் முக்கிய குணங்க
ளெலாமறி தன்முத லனவாங்
கத்திருத் துவமோ டகத்திருத் துவம்பி
னந்நிதா கத்திருத் துவமே
யத்தன்மெய்ப் பிரபுத் துவவலி யாக்க
லளித்தல்போக் குதல்சம னந்தா
னெய்த்திட லகற்று மனுப்பிர வேச
மென்பன வீசனைந் தொழிலே.

(இ. ரை.) "இத்திறத் தீசன் முக்கிய குணங்க ளெலாமறிதன் முதலனவாங் கத்திருத்துவமோ டகத்திருத் துவம்பி னந்நிதா கத்திருத்துவம்'' எ. து. இத்தகைத்தாய நிலையினையுடைய ஈசனது முக்கியகுணங்களாவன சர்வக்ஞத்துவ முதலியனவாம். அவை கர்த்திருத்துவமும், அகர்த்திருத்துவமும், பின்னர் அந்நிதா கர்த்திருத்துவமும்; "அத்தன் மெய்ப்பிரபுத் துவவலி'' எ. து. ஈசனது மெய்ம்மையான பிரபுத்துவ வலிகளாம்; "ஆக்கலளித்தல்போக்குதல் சமனந்தா னெய்த்திட லகற்று மனுப்பிரவேசமென்பன வீச னைந்தொழில்'' எ. து. சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபாவம், அனுக்கிரகம் எனப்படுபவைக ளீசனது பஞ்சகிர்த்தியங்களாம் எ. று.

ஏ அசை. எலாமறிதல் முதலியன வென்றதனால் சர்வஞ்ஞத்துவம், சர்வேசுவரத்துவம், சர்வநியந்தரத்துவம், சர்வாந்திரியாமித்துவம், சர்வாத்மக்

த்துவம், சர்வசக்தியத்துவ முதலியவைகளைக் கொள்க. சர்வக்ஞத்துவ மெனல் சர்வாத்மாக்களினது அறிவை யறிதல்பற்றியும், சர்வேசுவரத்து மெனல் எவற்றிற்கும் மேலாயிருத்தல்பற்றியும், சர்வநியந்தரத்துவமெனல் எவற்றினுள்ளுஞ் சமத்துவமா யிருத்தல்பற்றியும், சர்வாந்திரியாமித்துவ மெனல் எவற்றிற்கும் உள்ளீடாயிருத்தல் பற்றியும், சர்வாத்மகத்துவ மெனல் சர்வசீவர்களாயிருத்தல் பற்றியும், சர்வசத்தியத்துவமெனல் எல்லாச் சத்தியையுந் தன்பாலுடைமை பற்றியும் வந்தன வென்க. கர்த்திருத்துவ மென்பது ஒன்றின் உபாதான விச்சா ஞானக் கிரியை யுடையவன் தன்மை; அகர்த்திருத்துவமென்பது அத்தன்மை நீங்கி நிற்றல்; அந்நிதா கர்த்திருத்துவ மென்பது ஒன்றை யொன்ருக்குபவன் றன்மை. பிரபுத்துவ மென்பது பிரபுவின் றன்மையெனக் கொள்க. இதில் யகரம் ஆசெதுகை. சமனம் திரோபாவம். எய்த்திடலகற்றும் அனுப்பிரவேசம்: பிறவிதோறும் எய்திடும் இளைப்பை யாற்றும் அனுக்கிரகம் எனப் பதப்பொருள்கொள்க. ஐந்து என்பதில் ஈறு கெட்டது.

அவித்தியா சம்பந்தமான ஆத்மாக்களை அதினின்றும் நீக்கி முத்தியை யடைவிப்பிக்கு நிமித்தந் தனுகரண புவன போகங்களைக் கற்பிதமாக வுண்டாக்கி, அச்சீவர்களின் இருவினைகளை ருசிப்பித்துப் புசிப்பித்து நசிப்பிக்கு நிமித்தஞ் சிருட்டி முதன் முத்திபரியந்தம் உயிர்க்குயிராயிருந் தசைப்பித்துக்கொண்டிருக்குந் தனது சாமர்த்தியமே கர்த்திருத்துவமும், இவைகளிற் கூடிக் கன்மானுசாரப்பிரகாரம் ஆத்மாக்கள் பிரேரிக்கும்படி பிரேரகஞ் செய்தும் அவற்றிற் பற்றின்றித் தனியே தானிருத்தலே அகர்த்திருத்துவமும், சிற்சத்தியின் நியமப்படி வழுவாமல் செய்யும் முறைமை யின்றிக் கடத்தைப் படமாகச் செய்வதுபோல, ஒன்றை மற்றென்றாகச் செய்யுஞ் சாமர்த்தியமே அந்நியதா கர்த்திருத்துவமுமென்க.

ஆத்மாக்களுக்குத் தனுவாதி கொடுப்பது சிருட்டியும், அவற்றினுள்ள சுக துக்க போகங்களைப் புசிப்பிப்பது திதியும், அப்போகானுபவங்களை நசிப்பிப்பது சங்காரமும், அங்ஙனம் நசிப்பித்த போகவாசனைகளை ருசுப்பிப்பது திரோபாவமும், அவ்வாசனையை நீக்கித் தெளிவிப்பது அனுக்கிரகமுமா மென்க.

அறிவை யுண்டாக்குதல் சிருட்டியும், அது மறைபடாது வளர்த்தல் திதியும், அதை மறைக்கு மாயையைக் கெடுத்தல் சங்காரமும், அம்மாயா வாசனை தோன்ருது மறைத்தல் திரோபாவமும், அவ்வறிவே பூரணமாக விளக்குதல் அனுக்கிரகமுமா மெனினும் அமையும்.

வினு:—இங்ஙனங் கூறிய குணங்களா லுண்டாகும் இருவினைகள் அவ்வீசனைச் சாராவோ?

விடை:—சூரிய சந்நிதானத்தில் நடக்கும் இருவினைகள் அவனைச் சாராவாறுபோல அனைத்தையுஞ் செய்துஞ் செய்யாதவனுதலின் இவனை யுஞ் சாராவென்க. (சஎ)

(அ. கை.)

நிரவயவமான பிரமம் பஞ்சகிர்த்தியம் இயற்றலைத் திருஷ்டாந்தபூர் வகமாக வுணர்த்துகின்றது.

நீங்கிய விகாரப் பிரமமா மீச
　　னிகழ்த்துமோ தொழில்பல வென்னிற்
பூங்கதி ரிச்சை யின்றியே வாரிப்
　　பொழிமழைக் கதிரினாற் பொழிந்தே
யாங்கதி னிழலாய்ப் பொருந்தியந் நிழலை
　　யலர்முகி லான்மறைத் தளித்துத்
தூங்கிம கரத்தால் வெங்கதி ரானீர்
　　தொலைத்ததைத் தன்னொடாக் குதல்போல்.

(இ. ரை.) "நீங்கிய விகாரப்பிரமமா மீசனிகழ்த்துமோ தொழில் பல வென்னில்" எ. து. அவயவமெனல் சற்றுமின்றிய பிரமமெனப்பட்ட ஈசு ரன் பஞ்சகிர்த்தியங்கள் எங்ஙனம் இயற்றுவனெனக் கேட்கில், "பூங்கதி ரிச்சை யின்றியே வாரிப் பொழிமழைக் கதிரினாற் பொழிந்து" எ. து. அழ கிய சூரியன் தானியற்றவேண்டுமென்னும் இச்சை சற்றுமின்றியே பொழி யத்தக்க தனது வருஷ கிரணத்தினால் ஆங்காங்கே சலத்தை வாரி மழை பெய்து, "ஆங்கதி னிழலாய்ப்பொருந்தி யந்நிழலை யலர்முகிலான் மறைத்து" எ.து.அங்ஙனம் பெய்தசலத்தில் தன்னைப்போலத் தானே சாயையாகப்பிரதி பலித்து,அங்ஙனம் பிரதிபலித்த தனதுசாயையை விரிவுற்ற தனது மேககிர ணத்தால் மறைத்து, "அளித்துத் தூங்கிமகரத்தால் வெங்கதி ரானீர் தொ லைத்ததைத் தன்னொடாக்குதல்போல்" எ. து. பொழிகின்ற தனது பனிக் கிரணத்தாற் பாதுகாத்து, அங்ஙனம் பாதுகாத்த நிழலைத் தனது உட்டண கிரணத்தால் அங்குள்ள நீரை யணுவணுவாகக் கிரகித்து வடியச் செய்து, தன்னொடிரண்டறக் கலத்தல் செய்யுமாறுபோன்று எ. று.

பூங்கதிர்: வாரி, பொழிந்து, பொருந்தி, மறைத்து, அளித்து, தொலை த்து, ஆக்குதல்போலென முடிக்க. இங்கே யீசனெனல், மாயா ரகிதனை. ஐந்தெனலைப்பலவென்றது,"ஒன்றல் லனபல தமிழ்நடை வடநூலிரண்டல் லனபலவென்றிசினோரே" யென்னுமிலக்கண மிருத்தலாலென்க. கடபட முளவேனும் மண்ணாலையன்றி யில்லாவாறுபோலச், சகசீவபரமுளவேனும் ஞப்தியையன்றி யில்லாமையால் 'நீங்கியவிகாரப்பிரமமாமீச' னென்றார். இங்ஙனமாய சோதனையில்லாதார் மதத்தராதலி னிதனையேற்பதெங்ஙனம்? ஏலாமையா லிது தள்ளற்பாற்றோ? அதிஷ்டான ஆரோபங்கட்கு முரணு தலின் ஏற்றற்பாற்றே. (சஅ)

(அ. கை.)

அதனைத் தாஷ்டாந்த பூர்வகமாக வுணர்த்துகின்றது.

போற்றிறை மாயா சத்தியோ டொன்றிப்
பொலிந்தசிற் பிரதானமா மதனாற்
சாற்றரு நிமித்த காரண னாகித்
தகுசடப் பிரதானமா மதனா
லாற்றுபா தான காரண னெனநின்
றாக்கிய புத்தியா திகளிற்
றோற்றுபு சீவ ரூபமாய் வினையாற்
சொற்றபோத் திருவென நின்றே.

(இ. ரை.) "போற்றிறை மாயா சத்தியோ டொன்றிப் பொலிந்தசிற் பிரதானமா மதனாற் சாற்றரு நிமித்த காரணனாகி" எ. து. யாவராலுந் துதிக்கத்தக்க அப்பிரமந் தனது கற்பித சத்தியாகிய மாயையோடு சம்பந்தித்து, விளங்காநின்ற தான் ஞானவடிவாதலானும், அந்தஞானமே யெவற்றிற்கும் மேலாயிருப்பதானும் இதுபற்றிச் சொல்லற்கரிய நிமித்த காரண னென்னும் பெயர்பெற்று, "தகுசடப் பிரதானமா மதனா லாற்றுபா தான காரணனெனநின் றாக்கியபுத்தியாதிகளிற் றோற்றுபு சீவரூபமாய்" எ. து. பின்னர் மூடமே தக்க முக்கிய காரணமாயிருக்கும் அவசரமாதலால் அதனோடு சம்பந்தித்துச் செய்தற் கியைந்த உபாதான காரணனெனப் பெயர் பெற்றுநின்று, அங்ஙனம் நின்ற தன்னால் ஆக்கப்பெற்ற புத்தி முதலியவைகளில் தானே சீவரூபமாகப் பிரதிபலித்து, "வினையினாற் சொற்றபோத்திருவெனநின்று" எ. து. அங்ஙனம் பிரதிபலித்த காரணமாகநின் றியற்றும் வினை யிரண்டாற் சொல்லப்பட்ட போத்திருவென நாமம் பெற்று நின்று எ. று.

இறை; ஒன்றி, நிமித்தகாரணனாகி, நின்று, தோற்றுபு, நின்றென முடிக்க. சிற்பிரதானமா மென்றதனால், மாயாசத்தியெனலைச் சிற்சத்தியெனக் கொள்க. கொள்ளவே, சடப்பிரதானமா மென்றதனால் அதுபற்றி யதனை மூட சத்தியெனப் பெற்றாம். பெறவே, ஞான சத்தியால் நிமித்த காரண னெனவும், மூட சத்தியால் உபாதான காரண னெனவும், பிரதிபலிப்பால் போத்திருவெனவுங் காரணவிகுதியாகப் பெயர்வந்தமை கண்டாம். உபாதான காரணமெனல் முதற் கருவியை. புத்தியெனல் பேத புத்தியை. ஆதியென்றதனால் அவித்தை, மாயை யென்பவற்றைக் கொள்க. தோன்றி முதலிய இறந்தகாலவினையெச்சம். ஐந்திற்கும் வினைமுத லிறையெனக்கொள்க. பிரமமே யிவ்வைந்து நிலையினதாமென்பது கருத்து. (சக)

(அ. கை.)

இங்ஙனமாக நின்ற பிரமம் பஞ்சகிருத்தியம் இயற்றுமுறை யிங்ஙனமென வுணர்த்துகின்றது.

நியமசத் தியினாற் போகபோத் திருவை
நியமஞ்செய் தருத்திர வுருவான்

மயமுறு மாயா காரியஞ் சிதைத்து
வந்தரு ளாரிய வுருவா
யயர்வுறு சீவன் றன்னையே தன்னோ
டயிக்கமாக் குவனென வறிக
வுயர்வுறு சமட்டி வியட்டியென் பவற்ரு
லுயிரிறை கட்குறும் பேதம்.

(இ. ரை.) "நியமசத் தியினுற் போகபோத் திருவை நியமஞ்செய்து" எ. து. நியாமக சத்தியினுற் போகத்திற்குரிய சீவர்களை நியமப்படி படைத்தளித்து, "உருத்திர வுருவான் மயமுறு மாயா காரியஞ் சிதைத்து" எ. து. உருத்திர சொரூபத்தினுல் மாயாமயமா நின்றுள்ள அதனது காரியங்களை யழித்து, "வந்தரு ளாரிய வுருவா யயர்வுறு சீவன் றன்னையே தன்னோ டயிக்க மாக்குவ னெனவறிக" எ. து. பின்னர்க் குரு மூர்த்தமாக எழுந்தருளி வந்து அனந்த பிறவிகளால் எய்ப்புற்ற மாணுக்கனது உயிரைத் தனது யதார்த்த வடிவத்தோடு ஏகமாக்கும்படி செய்வனென் றறிதி; "உயர்வுறு சமட்டிவியட்டியென்பவற்ரு லுயிரிறைகட்குறும்பேதம்" எ. து. இங்ஙனங் கூறிய வுயிர்கட்கும் பரனுக்கும் வந்த பேதம் மேலாகிய சமட்டி வியட்டி யென்பவைகளாலெனவறிதி எ. று.

செய்து, சிதைத்து, வந்து, ஐக்கிய மாக்குவனென முடிக்க. சோதனை ஞாயங்களா லாராயுமிடத்து எவற்றிற்குந் தனக்கெனச் சொரூப மின்ருய் முடிதலானும், மெய்போலக் காணப்படுவன அனைத்தும் ஒன்றன் கூட்டம், பலவி னீட்டம், திரிபினுக்க மாதலில் ஒன்ரு நிற்றலானும் 'மயமுறு மாயா காரிய'மென்ரு ரென்க. ஏனைய உயிர்களை யன்றென மறுக்க அயர்வுறென் றடைகொடுத் தொருமையிற் கூறப்பட்டது. நியம சத்தி யின்றியவிடத்து அரசிலா நகர்போல்வதினுனும், அவரவர் வினைக்களவாத் தனுவாதிகளைக் கொடுப்பித்துப் புசிப்பித்துத் தொலைப்பித்தல் செய்தலினுனும் இக்கருத்து நோக்கி நியமசத்தியென்ருர்.

பிரமத்திற்குச் சூரியனையும், மாயைக்கு வருஷ கிரண சலத்தையும், சீவேசுரர்களுக்குப் பிரதிவிம்பத்தையும், இரட்சித்தலுக்கு இமகிரணத்தையும், சங்கரித்தலுக்கு ஊஷ்ண கிரணத்தையும், திரோபவித்தற்கு மேக கிரணத்தையும், அனுக்கிரகித்தலுக்குப் பிரதிவிம்பத்தைத் தன்னிடத்திற் சேர்த்துக்கொள்ளுதலையு முவமித்ததென்க.

வினு:—இவ்வுவமைப்படி பஞ்சகிருத்தியத்திற் குவமேய மியாது?

விடை:—போற்றிறை யென்பது பிரம மெனவும், மாயா சத்தியோடொன்றி யென்பது மாயாப்பிரதிபலனுன வீசனெனவும், சிற்பிரதானமதனுலென்பது தனது காரண மறைவுபடாம லறிவு மேலிட் டிருத்தலெனவும், நிமித்த காரணனென்பது தனது காரணத்தை மறந்த சீவர்கட் கது

வெளிப்படு நிமித்தந் தனுகரணங்களைக் கொடுப்பதற் பொருட்டு நோக்கி ச் சிருஷ்டிக்கும் பிரம னெனவும், சடப் பிரதானமென்பது தானுண்டா தற் கேதுவா யிருந்த மாயை மேலிட் டிருத்த லெனவும், ஆற்றுபாதான காரண மென்பது அம்மாயா சம்பந்தத்திற்றேனே யுபாதான காரண மென வும், புத்தியாதிகளிற் றோற்றுபு சீவ ரூப மென்பது அவித்தியா புத்தியிற் றோற்றிய சீவர்களெனவும், நியமசத்தியினுற் போக போத்திருவை நியமஞ் செய்தென்பது நியமப்படி சீவர்களை விஷ்ணுரூபமா நின் றிரட்சித்த லென வும், உருத்திரவுருவான் மாயாகாரியஞ் சிதைத்தென்பது வித்தை யவித்தை முதலிய தோற்றங்களை யுருத்திர ரூபமாய்க் கெடுத்தல் சங்கரித்த லென வும், இவைக ளொன் றுந் தோன்று தடங்கி நிற்றல் மயேசுர ரூபமாய் மறை ப்பித்த லெனவும், வந்தரு ளாரிய வுரு வென்பது கற்பனை யிறந்த விடத் துண்டாகிய சுகபோதமெனவும், சீவன் றன்னையே தன்னோடையிக்க மாக்குவ னென்பது பிரமத்தோடு தன்னுடன்கூடச் சதாசிவ வுருவா யயிக்கியமா க்குவ னெனவுங் கொள்க. சீவேசுரர்களுக்குத் தநுவாதிய தோற்றம் சிரு ட்டி, அவற்றை யிரட்சித்தல் திதி, அவற்றைக் கெடுத்தல் சங்காரம், அவ்விஷய நீக்கம் திரோபாவம், அவர்களுக்குத் தத்சொரூபம் வெளிப் படுத்தல் அனுக்கிரகம். இவற்றில் மூன்று தேகத்திற்கும், இரண்டு தேகிக்கு மாக ஐந்தும் பஞ்சகிருத்தியமெனக்கொள்க.

வினு:—அற்றேல் இச்சிவ சீவர்க ளுபாதியோடுங் கூடினவ ரென முற்கூறி, யிங்ஙனந் தன்னோ டயிக்கிய மாக்கிக்கொள்வனென்ற தென்னை ?

விடை:—அவ்வீசனுக் கதிஷ்டான மானபிரமமும்,சீவனுக்கதிஷ்டான மான கூடஸ்தனும் ஏகமாய்க் கலத்தலினுலென்க.

வினு:—அற்றேல் அவையே சுயஞ் சித்தாகாவோ?

விடை:—அங்ஙனங் கலப்பதோ ருபாதியாதலி னுகாவென்க.

பிரமசந்நிதியில் மாயாப்பிரதி விம்பரான வீசுரன், அவித்தியாப் பிரதி பலனரான சீவர்களை முன்னிட்டவர்கள் தமது யதார்த்த ஸ்வரூபத்தை யடையும் பொருட்டும், தானும் அங்ஙனமே விளங்கும் பொருட்டும் பஞ்ச கிருத்தியஞ் செய்யுங் கிரம முணர்த்தியதென்க. (௫௦)

(அ. கை.)

முன்னர் சீவேச பேதஞ் சமட்டி வியட்டியா லென்று கூறியதை யுவ மான பூர்வகமாக விளங்க வுணர்த்துகின்றது.

மிகுமரப் பன்மை தண்டலை யெனல்போன்
மிகுமுயி ரெலாமுநா னெனுமோர்
தகுமபி மான மிறைசமட் டியதாந்
தனித்தனி மரப்பெயர் கொளல்போற்

பகுமுடன் றேறும் வேறுவே ருகப்
படுமபி மானமோர்ந் துரைப்பிற்
றெருகுமுயிர் வியட்டி யுருவமென் றுமேற்
றொம்பத விலக்கிய முரைப்பாம்.

(இ. ரை.) "மிகுமரப் பன்மை தண்டலை யெனல்போன் மிகுமுயி ரெலாமுநா னெனுமோர் தகுமபிமான மிறைசமட்டியதாம்" எ. து. மிக்க தொகையுள்ள மரக் கூட்டங்களைத் தோப்பெனக் கூறு மாறு போன்று, மிக்க தொகையுள்ள பலவேறு விகற்ப வுயிர்வகை யனைத்தும் நானேயென் னுந் தக்க அபிமானமே யீசனது சமட்டி வடிவமாம்; "தனித்தனி மரப்பெயர் கொளல்போல்" எ. து. தனித் தனியே யொவ்வோர் மரமும் வெவ்வேறு பெயர் கொள்ளுமாறு போன்று, "பகுமுடன் றேறும் வேறுவேருகப் படு மபிமானமோர்ந் துரைப்பிற் றெருகு முயிர் வியட்டி யுருவ மென்றும்" எ. து. வெவ்வேறு நின்றுள்ள உடல்கடோறும் வெவ்வேறு சேதனமாகக் காணப்படும் அபிமானமே யாதென வுணர்ந்துரைக்கு மிடத்து, மிக்க வுயிர் களின் வியட்டி வடிவமெனப் படுவதாம். "மேற் றொம்பத விலக்கியமுரைப்பாம்" எ. து. இனித் தொம்பத இலக்கியார்த்தம் இனையவென எடுத்துச் சொல்லுதும் எ. று.

சமட்டி இடுகுறி பொதுப் பெயர். வியட்டி இடுகுறி சிறப்புப் பெயர். தண்டலை தனித்தனி மரப்பெயர். உவமானம் சமட்டி வியட்டி; உவமேயம் தண்டலை யெனல்போல் சமட்டியதா மெனவும், மரப் பெயர் கொளல் போல் வியட்டி யுருவமென் றுமெனவுமுடிக்க. சர்வாத்மாவும் ஆரோபம், அதற் கதிஷ்டானமீசன். சீவர்க ளனைத்தினுள்ளும் இருப்பவன் ஈசுரனென வும், தனித்தனியே யிருப்பவன் சீவனெனவும், இவையே சமஷ்டி வியஷ்டி பேதமெனவுங் கொள்க.

வினு:—இங்ஙனமாயின் மிகவும் பேதமாமே?

விடை:—யானுந் தானுந் தனி பொய் யென்ற கவிப்படி சாலத்தைத் தவிரச் சோலையும், சோலையைத் தவிரச் சாலமும் எங்ஙன மின்றே, அங் ஙனமே ஜீவனைத்தவிர ஈசனும் ஈசனைத்தவிரச் சீவனும் இன்மையின் பேதம் போலத் தோற்றுவதன்றிச் சுபாவமா யஃதின்றென்க. (ருக)

(அ. கை.)

இதுகாறும் இருவரது வாச்சியார்த்தங் கூறி, இக்கவியில் தொம்பத இலக்கியார்த்தமாய கூடஸ்தனது பதினெருவித பரியாய நாமங்கள் இனைய வென வுணர்த்துகின்றது.

சீவனென் றிடுமூ வகையதிட் டானன்
சேதன னந்தரி யாமி

யாவலி னனுசந் தாத்திரு சுயஞ்சத்
தார்த்தனே டவிச்சின்ன சீவன்
றுவரும் பார மார்த்திகன் றுரியன்
சான்றினன் பிரத்திகான் மாவோ
டேவமி றொம்ப தத்திலக் கியார்த்த
னென்பகூ டத்தனு மங்கள்.

(இ. ரை.) "சீவ னென்றிடு மூவகை யதிட்டானன் சேதன னந்தரி யாமி" எ. து. சீவன் மூன்றவஸ்தையிலுந் தனக்கு வாய்த்த மூவகை யதிஷ்டானன், சேதனன், அந்தரியாமி, "ஆவலி னனுசந்தாத்திரு சுயஞ்சத்தார்த்தனே டவிச்சின்ன சீவன் றுவரும் பாரமார்த்திகன் றுரியன்" எ. து. விருப்பின்றிய அனுசந்தாத்திரு, சுயஞ் சத்தார்த்தன், அவிச்சின்ன சீவன், எட்டற்கரிய பாரமார்த்திகன், துரியன், "சான்றினன் பிரத்திகான்மாவோ டேவமி றொம்பதத் திலக்கியார்த்த னென்ப கூடத்த னுமங்கள்" எ து. சான்றினன், பிரத்திகான்மா, குற்றமற்ற தொம்பத லட்சியார்த்தன்முதலியவை கூடத்தனது பரியாய நாமங்களெனச் சத்துக்கள் கூறுவர் எ. று.

விசுவாதி மூன்றினுக்கும் அதிட்டானமா யிருத்தலின், மூவகை யதிட்டான னெனவும், அறிவே வடிவா யிருத்தலின் சேதனனெனவும், அகத்தினிறைந் திருத்தலின் அந்தரியாமி யெனவும், அவா வின்றி யெவற்றினும் அனுசந்தித் திருத்தலின் ஆவலி னனுசந்தாத்திரு வெனவும், தானே யுண்மைப் பொருளா யிருத்தலின் சுயஞ் சத்தார்த்த னெனவும், கடாகாயம் போல் தேகத்தால் வரைபட்டிருத்தலின் அவிச்சின்ன சீவனெனவும், யதார்த்தமா விளங்கலின் பாரமார்த்திக னெனவும், தானே சுயஞ் சித்தா விளங்கலின் துரிய னெனவும், எவற்றிற்குஞ் சாட்சியா விளங்கலின் சான்றின னெனவும், உபாதித் திரியங்கட்கு விலட்சணமா நிற்றலின் பிரத்திகான்மா வெனவும், நீயென்னும் பதத்தின் நிச்சயப் பொருளாதலின் தொம்பத இலக்கியார்த்த னெனவுங் கூறியவாறு காண்க. சத்துக்கள் தோன்றா வெழுவாய்.உபாதித் திரியங்கள் மாறினுந் தான் மாறா திருத்தலின் மூவகையெனலை யுபாதித் திரியமென்றும். (ருஉ)

(அ. கை.)

இது தற்பத விலக்கியார்த்த மான பிரமத்தின் ஆறுவித பரியாய நாமங்கள் இனையவென வுணர்த்துகின்றது.

ஈசனென் றிடுமூ வகையதிட் டான
னியம்பரு மொருபரப் பிரமம்
பாசமில் பரதத் துவம்பர மான்மா
படியிலா விசுத்தசித் தன்றிப்

பேசுதற் பதலக் கியார்த்தனென் பனமுற்
  பெறும்பரி யாயநா மங்க
டேசுறு பிரமந் தனக்கென வுரைப்பர்
  திருந்துநூ றெரிதரும் புலவர்.

(இ. ரை.) "ஈசனென்றிடு மூவகையதிட்டான னியம்பரு மொருபரப் பிரமம்" எ. து. ஈசன் மூன்றவத்தையிலுந் தனக்குவாய்த்த மூவகை யதிஷ்டானன் சொல்லற் கரிய ஒப்பற்ற பரப்பிரமம், "பாசமில் பர தத்துவம் பர மான்மா படியிலா விசுத்தசித் தன்றி" எ. து. பாசமிறந்த பரதத்துவம், பர மான்மா, குணாதீதமான விசுத்த சித்து, இவை யன்றியும், "பேசுதற்பதலக் கியார்த்த னென்பன முற்பெறும் பரியாயநாமங்க டேசுறு பிரமந் தனக் கென வுரைப்பர் திருந்துநூ றெரிதரும் புலவர்" எ. து. வேத முடிவிற் கூறுந் தற்பத லட்சியார்த்தன் எனக் கூறப்பட்ட இவைபோல்வன பிற வுஞ் சதோதயமா விளங்கும் பிரமத்திற்குத் தொன்று தொட்டு வழங்கும் பரியாய நாமங்களென்று திருத்தமான கலைகளனைத்தையுந் தேர்ந்த அறி வுடையோர் கூறுவர் எ. று.

விராட்டாதி மூன்றினுக்கும் அதிஷ்டானமா யிருத்தலின் ஈச னென் றிடு மூவகையதிட்டான னெனவும், ஒப்பற்ற பிரமமாதலின் ஒரு பரப்பிரம மெனவும், மாயா தீதமாதலின் பாசமில் பரதத்துவமெனவும், மாட்சிமை யான ஆன்மா வாதலின் பரமான்மா வெனவும், தாரதம்மியம் இறந்த பரி சுத்த சித்தாதலின் படியிலா விசுத்த சித்தெனவும், அது வென்னும் பதத் தின் நிச்சயப் பொருளாய் விளங்கலின் தற்பத இலக்கியார்த்த னெனவுங் கூறியவாறு காண்க. உபாதித் திரயங்கள் மாறினுந் தான் மாறா திருத் தலின் மூவகை யெனலை யுபாதித் திரயமென்றாம் என்பன இடைச் சொல்லடியாகப் பிறந்த வினையாலணையும் பெயர். (ருரு)

(அ. கை.)

முற்கூறிய கூடஸ்த பிரம மென்னுந் துவிதநாசம் இனையதென வுண ர்த்துகின்றது.

வடிவுறு பெயராற் குடமுத லாக
  மண்பல் வகைப்படு மதுபோற்
சுடுபசும் பொன்னே செய்கையாற் பலவாஞ்
  சுடரிழை யுருவுகொள் வதுபோற்
படியறுஞ் சித்தே முன்சொல்சீ வாதி
  பலவுமா மெனமுத லாக
விடலரு மறிஞர் நூல்பல திருக்கு
  விவேகமென் றியம்புறு மன்றே.

(இ. ரை.) "வடிவுறு பெயராற் குடமுதலாக மண்பல வகைப்படுமது போல்" எ. து. பலவேறுவகைப்பட்ட வடிவங்களுக் கியைந்த பெயர் கொண்டு பானை சட்டி முதலியவாக மண்ணொன்று பலவகைப்பட்டு நிற்ப தெங்ஙனமோ, அதுபோலவும், "சுடு பசும் பொன்னே செய்கையாற் பல வாஞ் சுடரிழை யுருவு கொள்வதுபோல்" எ. து. புடம் போட்ட பசிய பொன் னொன்றே வேலைத் திறத்தாற் பலவேறுவகைப் பட்ட பிரகாசம் பொருந்திய ஆபரண வடிவங்க ளாமாறு போன்றும், "படியறுஞ் சித்தே முன்சொல் சீவாதி பலவுமா மென முதலாக விடலரு மறிஞர் நூல் பல திருக்கு விவேக மென் றியம்புறும்" எ. து. இத்தகைய தெனக் கணித்தற் கியைந்த சுகுண மனைத்திற்கு முடன்படா திறந்து நின்ற சுயஞ் சைதன்ய மொன்றே முன்னர்க் கூறிய சீவன் முதலிய பல வேறு விகற்பங்க ளாகப் பரிணமித்த தெனத் தொன்று தொட்டு நீங்கற் கரிய ஆன்ம ஞானிகள் கணித் தியற்றிய ஞானநூ லனைத்துந் திருக்கு விவேக மெனக் கூறு நிற் கும் எ. று.

அன்று எ அசைகள். கட முதலிய விகாரங்கள் மண்ணை யன்றியும், கடக மகுடாதிய விகாரங்கள் பொன்னை யன்றியும் எங்ஙன மின்றோ, அது போலச் சக சீவ பர விகற்ப வடிவங்கள் ஞெப்தியை யன்றித் தினைத் துணையும் இல்லை யெனக் கூறியது புடை பெயர்ச்சி காரணம் நோக்கி யெ னின் கர்த்தா, கர்மம், கிரியை யகலா; அகலா விடத்துத் திரிபுடி யக லா; அகலா விடத்துப் பிறவிப் பெருக் ககலா; அகலா விடத்து மனோ நாசம் எங்ஙனம் வாய்க்கும்? வாய்த்தற் கிடஞ் சற்று மின்மையின் அதனை மறுத்து ஏகமேவாத்துவைதம் வாய்த்தற்கு உபாதான வுபாதேய காரண நோக்கி யென்க. சகத்துக் கஞ்சி யியற்றுவ தாதலின் யோக நெறித்து மன்று. அறிவே காரணகாரியமாமுடிதலின் ஞானநெறித்தாமென்க. (௫௪)

திருக்குவிவேக முற்றிற்று.

---

ஸ்ரீசற்குருவேநமஃ.

# திரிசியவிவேகம்.

(அ.கை.)

அறி வொன்றே யுபாதான வுபாதேய மெனற் கியைதற் பாலதானும், சத்துக்களையன்றி யதனைப் பாகுபடுத்தித் திருக்கு திரிசிய மெனப் பெயர் தந் தவ்வவற்றிற் குரிய விலக்கிய விலக்கணங்களை விளங்கக் கூறி யேகமேவாத்துவைத மென்னு மொழிக் கியையச் சுருதி யுத்தி யனுபவ முகத்தாலேயந் திரிபறக் காட்டுபவ ரின்மை யானும், இந்நூ லாசிரிய ரிங்ஙன மேலாக நின்றுள்ள நெறியை யெவர்க்குந் தெரிவிப்பான் வேண்டி யிரண்டியலாக வகுத்து, முன்னர் திருக்கு விவேக மெனவும், இசனைத் திரிசிய விவேக மெனவும் பெயர்தந் திக்கவியில் திருக்குவி னின்றுந் திரிசியந் தோன்றற் கேதுவாய மாயாசத்தியி னிலக்கண மினைய வென வுவமான பூர்வகமாக வுணர்த்துகின்றது.

வேறு.

இந்துவினை யநாதியடைந் ததைமுழுது மறையாம லிந்து
தன்ற, லந்திறனை யொளிர்வித்துக் கொள்களங்க மெனவெனையா
னறியே னென்னு, முந்துலக விவகாரந் தனிலுயிரை யடைந்த
தனை மூடா தென்று, மந்தவுயி ராலறியப் பட்டுமென றம்பிக்கு
மந்திரம்போல்.

(இ. ரை.) "இந்துவினை யநாதியடைந்ததை முழுது மறையாம லிந்து தன்ற லந்திறனை யொளிர் வித்துக்கொள் களங்கமென" எ. து. பூரண சந்திரனை யநாதிதொட்டு விடா தடைந் தந்தச் சந்திரனை முழுது மறைக்க வலியின்றி யந்தச் சந்திரனுற் றன தழகிய நிலைமையினை விளக்கு வித்துக் கொள்ளுங் களங்க மெங்ஙனமோ, அதுபோல, "என்னை யானறியே னென்னு முந்துலக விவகாரந்தனி லுயிரை யடைந் ததனை மூடாது" எ. து. என்னை யானறிந்தில னெனக் கூறற் கியைந்த பிரத்தியட்சமா நின்றுள்ள உலக விவகாரத்தினுல் அநாதிதொட் டுயிரை யடைந்து, அதனை மறைத்தற்குச் சற்றும் வலியின்றி, "என்று மந்த வுயிரா லறியப்பட்டு மனறம்பிக்கு மந்திரம்போல்" எ. து. எப்போதும் அந்த வுயிராகிய வுணர்வால் அறியப் பெற்று, அக்கினியினது உஷ்ணத்தைத் தம்பிக்கச் செய்யும் மந்திர சத்தி யெங்ஙனமோ அதுபோல நின்று எ. று.

அடைந்து, மூடாது, அறியப்பட்டு, மந்திர சத்திபோல் நின்று என முடிக்க. இக்கவி யினி வருங் கவிகொண்டு முடிவுபெறு மாதலால் மந்திரம் போலென வினை யெச்சமாக முடித்தார். மறையாம லெனல் தன்வினை

யாதலால் அதனைப் பிறவினை யாக்கற்கு மறைக்காம லெனினும் அமையும். இங்கே யிந்துபோல்வது ஆன்மா வாதலால் உயிரெனலே யான்மா வென்க. அவ்வான்மா சச்சிதாநந்த மெனற் கியையு மாதலின், அதனைப் பிரமமென லொக்கும். இந்து, அனல் இவ்விரண்டும் பிரமத்திற்கும்; களங்கம், மந்திரம் இவ்விரண்டும் மாயாசத்திக்கும் உவமை கூறியவாறு காண்க. (ருரு)

(அ.கை.)

இதுவுமது.

விளங்குறுமான் மாவுருவு மல்லாம லான்மாவின் வேறாத்
தோன்றா துளங்கொள்வியோ மாதிகா ரியங்கடமைத் தோன்றா
வா றொடுக்கி நின்று, துளங்கலக டிதகட னு சாமர்த்தி யாகியுமே
தோன்றா நின்ற, வளங்கடரு காரணமா மதுவாகுந் திரிசியமா
மாயா சத்தி.

(இ. ரை.) "விளங்குறு மான்மாவுருவு மல்லாம லான்மாவின் வேறாத் தோன்றா துளங்கொள் வியோமாதி காரியங் கடமைத் தோன்றாவா றொடுக்கி நின்று" எ. து. சதோதயமாக விளங்கும் ஆத்ம சொரூப மல்லா மலும், அவ்வான்மாவிற்கு வேறு பொருளாக நின்று தோற்றாமலும் உள்ள த்திற் கோடற் கியைந்த ஆகாய முதலிய தனது காரியங்களை வேறாகத் தோன்ற வொட்டாது தன்பா லடக்கி நின்று, "துளங்க லகடித கடனு சாமர்த்தி யாகியுமே தோன்றாநின்ற வளங்கடரு காரணமா மதுவாகுந் திரி சியமா மாயா சத்தி" எ. து. எவர்க்கும் விளக்கமா நின்றுள்ள கடனுகடன சாமர்த்திய முடையளாயுங் காணப்பட்டு, நாற்கதிகளா நின்றுள்ள வளங்க ளைத் தருதற்குக் காரணமா நிற்பது யாதோ, அதுவே திரிசிய மெனத் தக்க மாயா சத்தி யெனப் படுவதாம் எ. று.

அல்லாமல், தோன்றாது, ஒடுக்கி, நின்று, தோன்றா காரணமா மது மாயா சத்தி யென முடிக்க. சத்த னென்பதற்கு வெதிருத்தம் சாமர்த்தி சத்தி என்றிருத்தலால் மாயையைப் பெண்பா லாக்கினும். ஆதியென்றதனால் ஏனைய நான்கு பூதத்தையும் அண்ட பிண்டங்களையுங் கொள்க.

மந்திரசத்தி யக்கினியி னுஷ்ணத்தை முழுதும் ஸ்தம்பனஞ் செய் யின் அக்கினி யோராதாரத்தைப் பற்றிப் பிரகாசிப்பது கூடாது; அங்ஙன மின்றிப் பிரகாசித்தலின் அச் சத்தியை யுடைய மாந்திரிகனுக்கு மாத்திரங் கற்பனையாகக் கிஞ்சித்துத் தோற்றினதே யன்றி வேறின்று. அஃது சுபாவ மாய்ப் பிரகாசித்துக் கொண் டிருப்பதுபோல, மாயா சத்தி பிரம சுபாவ மான சிற் சத்தியை முழுது மறைக்கின் பிரம ஞானம் பிரகாசிப்பது கூடா மையின், அங்ஙன மின்றிச் சொரூப முதல் ஸ்தம்ப மீறாய யாவினிடத் தும் பூரணமாய்ப் பிரகாசித்தலின், அம்மாயா சத்தியை யுடையவனுக்கே கிஞ்சித்துக் கற்பிதமாய் மறைந்ததுபோலத் தோற்றினதேயன்றி, பிரமம் சுபாவமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்குமெனக் கொள்க.

பூச்சாயை யானது சொப்பிரகாசமாய் விளங்குஞ் சந்திரனிடத்திற் றோற்றி, அதனை மறையாமற் றான் விளங்குவது போல, பிரமப் பிரகாசத் திற் சங்கற்ப ரூபமான மாயை யானது அதனை மறைக்காமல் அதனிட மாய் விளங்கிக் கொண்டிருக்கு மென்பார்: இந்துவினை யநாதி யடைந்து அதை முழுதும் மறையாமல் இந்து தன்னால் அந்திறனை யொளிர்வித்துக் கொள் களங்க மெனவும், கண்ணைப்போல அனைத்தையும் அறிகின்ற சித் தாகிய அறிவு தன்னைத்தானென அறியாததே யறியாமை யென்பார்: எனை யானறியே னென்னும் மூர்த்தலக விவகார மெனவும், அவ்வறியாமை யறிவி னிடத் திருந்து அதனை மறையாமல் அதனாற் றான் விளங்குகின்ற தென் பார்: உயிரை யடைந்து அதனை மூடா தென்றும், அந்த வுயிரா லறியப் பட்டெனவும், அக்கினியின்து உஷ்ணத்தை மந்திர சத்தியினால் அதனு ளடக்குவது போலப் பிரம சுபாவமான சிற் சத்தியை யதனுள் அடக்கிற் றென்பார்: அனல்தம்பிக்கும் மந்திரம்போ லெனவும், அம்மாயை யப்பிரம மாகவும் அதற்கு வேறாகவு மிரா தென்பார்: விளங்குறும் ஆன்மா வுருவு மல்லாமல் ஆன்மாவின் வேறாத் தோன்றா தெனவும், பிரமத்திற் கெதிரி ட்ட சங்கற்பமாகிய கண்ணாடியில் இயல்பாய்த் தோற்றுகின்ற அப்பிரமச் சாயை கண்ணாடியா லுண்டாக்கித் தோற்றுகின்ற தென்றதுபோல மாயை யாற் சகலமுந் தோற்றுகின்ற தென்பார்: உளங்கொள் வியோமாதி காரி யங் கடமைத் தோன்றா வெனவும், இங்ஙனங் கூடாத காரியங்களைக் கூட்டுவிப்பதாகக் காட்டும் வல்லபமுடைய தென்பார்: அகடித கடனா சாமர்த்தி யெனவும், சர்வானர்த்தங்களுக்குங் காரண மென்பார்: வளங் கடரு காரணமா மெனவும், இவ்வல்லப முள்ளதே மாயாசத்தி யென்பார்: அதுவே திரிசியமா மாயாசத்தி யெனவுங் கூறினார்.

வினா:—அதிரிஸ்யமான மாயா சத்தியைத் திரிஸ்யமென்ற தென்னை?

விடை:—வித்துவானது சத்தி அவன் வித்தை செய்யுங் காரியத்திற் றெரிவதுபோல் பிரமத்தினது மாயாசத்தி பிரபஞ்ச ரூபத்திற் காட்டு நிமி த்தந் திரிசியமா மாயாசத்தி யென்றா ரென்க. இன்னும் பூச்சாயா களங்க மானது கலாநிதியி னிடத்தி லிருத்தல்போலத் தோற்றி யதனை மறையா மல் அதனாற் றான் விளங்குவதுபோல் அதீதப் பிரம ஸ்புரணம் அவ்வதீத மாகவே விளங்க, அதை யறியே னென்ற அறிவி னறியாமை யவ்வறிவும் ஆகாமல் அதற்கு வேறுமாகாமல் அவ்வறிவினிடத் திருப்பதுபோலத் தோ ற்றி யவ்வறிவை மறையாமல் அதனாற் றான் விளங்குவ தன்றியுந் தான் வெளிப்படாது தனக்காதாரமான திருக்குவின் சத்தியைக் கொண்டு ஆக முதலிய திரிசியங்க ளென்னும் பொய்ப் பொருள்களை மெய்போலத் தோ ற்றுவிக்கும் மாயாசத்தி யொன்றுண் டென் றவாந்தரமாகச் சுருதி யங்கீ கரித்த தென்க.

வினா:—அற்றேல் முன் சுத்தப் பிரமத்திற்குச் சுவகதாதி பேதம் இன் றென்று கூறிய சுருதி இவண் இங்ஙனம் அங்கீகரித்த தென்னை?

விடை:—இம்மாயா காரியங்களில் நிற்பவர்கள் அவற்றினின்று நீங்கும் நிமித்தம் அதை விசாரித்து என்றும் இன்றென்பது தோன்றற் கென்க.

வினு:—அங்ஙனமாயின் வேதாந்தி யொருவன் நிற்க ஏனையோர் யாவரும் இம்மாயையை நித்திய மெனக் கூறுவ தென்னே ?

விடை:—இம்மாயையின் யதார்த்தம் வெளிப்படாமையினு லென்க.

வினு:—அற்றேல் இம்மாயையின் உண்மைதான் யாதோ ?

விடை:—தனக்கென ஒருருவம் இல்லாமையே யாமென்க.

வினு:—அற்றேல் மாயையின் உண்மை தெரியாத மதங்கள் அதற்கு அதீதமான முத்தியின் இலக்கணங் கூறுவ தென்னே ?

விடை:—மதங்கள் மாயைக் குட்பட்ட பத முத்தியைக் கூறுவதே யன்றி, அதற் கதீதமான பர முத்தியைக் கூறுவது அன்றென்க.

வினு:—அற்றேல் மதங்கள் அற்பப் பிரயோசனமான பத முத்திகளை முக்கியமாகக் கூறுதற்கு வேதஞ் சம்மதித்த தென்னே ?

விடை:—யாதும் இன்றிய ஆதுலர்க்கு யாதேனும் உள்ளவன் ஆக்கவானென்பது லவுகீக சம்மத மாதல்போல, சுகமென்ப தொன்று மின்றிய பேதைகட்குக் கிஞ்சித்து சுகத்தைக் கொடுக்கும் பதமுத்திகளைக் கூறுதலும், சக்கிரவர்த்திச் செல்வமுள்ள பெருமன்னனுக் கோர் தேசாதிபதியான குறுநிலமன்னன் தாரித்திர னென்பதுபோல, பரமுத்தியான மோக்ஷசாம்பிராச்சியம் பெற்ற மகதைசுவரியவானுக்கு இப்பதமுத்தியான சொற்ப ஐசுவரியவான் தாரித்திரனெனக் கூறுதலும் வேதசம்மதமேயாமென்க.

அக்கினி பிரகாசத்தோடு கூடி யிருக்க அதன் குணமான உஷ்ணத்தைத் தன்வயமாக்கிக் கொள்ளும் மந்திர சத்தியைப்போல, பிரமம் தனதருளோடும் பிரகாசித்திருக்க அதனுல்லாசமான சித்து விலாசத்தைத் தன்வசமாக்கிக்கொண் டிருத்தலும், பிரமத்தைத் தவிரத் தாமொரு பொருளுந் தனக் கோர் சுதந்தரமு மின்றி, அதன் பிரதிபலனச் சாயையாகிய சீவேசுர சகத்திற்குக் காரணமாயு மிருக்கின்ற மாயா சத்தியின் இயல்பை விளங்கக் கூறியதென்க. (ரு௬)

(அ. கை.)

முன்னர்ச் சத்துமுதலிய பஞ்ச இலக்கணங்களால் திருக்கை விளக்கிய வாறுபோன்று இக்கவியில் அசத்துமுதலிய பஞ்ச இலக்கணங்களால் மாயா சத்தி யினையதென வுணர்த்துகின்றது.

அனையதொரு மாயையிலக் கணமசத்து சடந்துக்க மநித்தங் கண்ட, மெனுமிவற்றுண் முயற்கோடு முதலசத்து சடவுருக்கல் லெழுவாய் புத்தி, தனையடையுங் கோரமொடு மூடவிருத் திகடுக் கந் தபுமெய்யாதி, முனமுரைசெய் யநித்தங்கண் டங்கால பரிச் சேத முதலவாகும்.

(இ. ரை.) "அனையதொரு மாயையிலக்கண மசத்து சடந் துக்க மநித் தங் கண்டமெனு மிவற்றுண் முயற்கோடு முத லசத்து" எ. து. அத்தகைய தாகிய வோர் மாயா சத்தியி னிலக்கணமாவன:—அசத்து, சடம், துக்கம், அநித்தம், கண்டம் என்னும் இவை யைந்தாம். இவற்றுள் அசத்தெனல் முயற்கோடு முதலியவை போல்வதாம்; "சடவுருக்கல் லெழுவாய் புத்தி தனை யடையுங் கோரமொடு மூடவிருத்திக டுக்கம்' எ. து. சட மெனல் உருவா நின்றுள்ள கல் முதலியவை போல்வதாம்; துக்கமெனல் புத்தியை வந்தடையுங் கோர விருத்தி மூட விருத்திகளின் றன்மையாம்; "தபுமெய் யாதி முனமுரைசெய் யநித்தங் கண்டங் கால பரிச்சேத முதலவாகும்' எ. து. அநித்தமெனல் முன்னர்க் கூறிய மெய்யல்லாத பிராகபாவமுதலிய வை போல்வதாம்; கண்டமெனல் கால பரிச் சேத முதலியவற்றை யேற் பது போல்வதாம் எ. று.

ஆகுமென்னும் ஆக்க வினைமுற்றை ஏனைய நான்கிடத்து மொட்டுக. ஆதலின் இது கடை நிலைத் தீபம். அசத்து முதலிய ஐந்தையுங் கூறி யவ ற்றி னிலக்கணங்களை நிரையே கூறினமையால் இது நேர்நிர னிறை யணி. இத்திரிசியத்தை யுற்று விசாரணைசெய்து பார்க்குமிடத்து இல்லாமையால் அசத்தும், தனக்கென வோரறிவின்மையிற் சடமும், இன்பம்போலத் தோ ற்றி யழிதலிற் றுக்கமும், இருப்பதுபோலத் தோற்றி யழிதலின் அநித்த மும், பின்னமயமா யிருத்தலிற் கண்டமுமா மென்க.

வினு:—இவ்வைந்து தன்மையும் மாயைக்கேயென்றால் அதன் காரிய மாய சகத்திற் கின்றோ?

விடை:—காரணாதநந்நியத் காரியமென்ற நியாயத்தாற் காரணத்தி லுள்ளது காரியத்திற்கு முண்டெனக் கொள்க.

இம்மாயை யநாதியே மித்தையென்பது தோன்ற அசத்தாதி யைந்தின் இலக்கண முணர்த்திய தென்பது கருத்து. (நிஎ'

(அ. கை.)

இவையன்றியும் மாயைக்குரிய ஒன்பதுவித தன்மைகளையும், மூன்று வித ஞானங்களையும் இக்கவியி லுணர்த்துகின்றது.

பின்னமோ டசத்துசா வயமுமெதிர் மறையுமவை பிரிந்து
தம்மின், மன்னியவு மொழிந்தநிர்வாச் சியமாகு நவவிதமம் மாயை
யெய்து, முன்னலருஞ் சுருதிசம் பந்தமுத்தி சம்பந்த முலோக
பந்த, மென்னவரு ஞானங்கண் முறையேயம் மாயைபடு மியல்பு
கூறின்.

(இ. ரை.) "பின்னமோ டசத்து சாவயமு மெதிர்மறையு மவைபிரி ந்து தம்மின் மன்னியவு மொழிந் தநிர்வாச்சியமாகு நவவிதமம் மாயை யெய்தும்" எ. து. பின்னமும், அசத்தும், சாவயவமும், இவற்றிற் கெதிர்

மறையாய அபின்னமும், சத்தும், நிரவயவமும், அவைகள் வெவ்வேறாகப் பிரிந்து தம்முள் கலப்பனவாய பின்னாபின்னமும், சதசத்தும், சாவயவ நிர வயவமுமாகக் கூறிய வொன்பதுவித குணத்தையும் அநிர்வாச்சியமா நின் றுள்ள மாயையானது தனக்கியல்பாகப் பெறும். "உன்னலருஞ் சுருதி சம் பந்த முத்திசம்பந்த முலோகபந்த மென்னவரு ஞானங்கண் முறையே யம் மாயை படுமியல்பு கூறின்" எ. து. கணித்தற்கரிய சுருதிசம்பந்தம், யுத்தி சம்பந்தம், உலோக சம்பந்தமென வழங்கிவரு ஞானங்கள் முறையே யம் மாயைக் குண்டாகு மியல்பைக் கூறுமிடத்து எ. று.

இம் மூன்றும்மையும் எண்ணும்மை. ஞானமெனலைத் தனித்தனிச் சுருதி முதலிய மூன்றோடு மொட்டுக. சாவயவமென்பது சாவயமெனச் கடைக்குறையும், சம்பந்தமென்பது பந்தமெனத் தலைக்குறையுமாய் வந் தன. ஞானங்க ளென்ற பன்மை சுருதியாதி மூன்றிற்குங் கூட்டுக.

பிரமவிசாரத்தின்கண் ஆத்ம தரிசன நிமித்தம் அநாத்ம நியதி களையும் போது திரிசிய மனைத்தும் வேறுபட் டிருத்தலிற் பின்னமும், அது சமாதி யில் நில்லாமையின் அசத்தும், அது முன் அவயவமாகத் தோற்றலிற் சாவ யவமும், சமாதியின்கண் ணின்றெழுந்த தனதறிவிற்கு அத்திரிஸ்யங்களி னது உருவாக விளங்கலின் அபின்னமும், அவ்விடத்து அத்திரிஸ்யங்கள் அறி வாய் நிற்றலின் சத்தும், அங்ஙனம் அதற்கோ ருருவமின்மையின் நிரவயவ மும், சாதனத்தில் வேறாகவுஞ் சாத்தியத்தி லொன்றாகவு மிருத்தலிற் பின் னாபின்னமும், அங்ஙனமே கற்பனையிற் சத்தும் யதார்த்தத்தில் அசத்துமாக இருத்தலிற் சதசத்தும், சகசத்திற் கண்டே கல்லானதுபோலப் பிரமமே யாவுமாக விளங்கலிற் சாவயவ நிரவயவமுமாகிய இவைகளாமெனவும், அல்ல வெனவும், வசனிக்கப்படாதாதலின் இம்மாயை யநிர்வசனீய நவப்பிரகார மெனவுங் கூறினார். இம்மாயை அசத்தியமாயினுஞ் சத்தியமான பிரமசந்நி தானத்திலுண்டாதல் இத்தன்மையெனத் தெரிவித்ததென்க. (ருஅ)

(அ. கை.)

மேல் சம்பந்தஞான மூன்றென்றார்; அவற்றின் றன்மைகளையும், தமமாதிய பஞ்சநாமங்களையும் இனையவென வுணர்த்துகின்றது.

விண்ணின்மல ரெனத்துச்ச மேயெனவு மிப்பிவரு வெள்ளி
போல, வெண்ணுமநிர் வாச்சியமா மெனவுமுயிர் போனித்த மெ
னவு நிற்கு, முண்ணிலவு தமமாயை மோகமுடனவித்தை பொய்ம்
மையுருவி யென்றே, நண்ணுமிவை மாயாபஞ் சகமாகு மென
வறிஞர் நவில்வ ரன்றே.

(இ. ரை.) விண்ணின்மல ரெனத்துச்ச மேயெனவு மிப்பிவரு வெள்ளி போலவெண்ணுமநிர் வாச்சியமா மெனவுமுயிர் போனித்த மெனவுநிற்கும்" எ. து: மாயாசத்தியானது ஆகாய தாமரைபோல்வதின் துச்சமெனவும், சுத்தி கா ரசிதம் போல்வதின் சத்துக்களால் மதிக்கத்தக்க அநிர்வாச்சிய மெனவும்

ஆன்மாவைப்போல் நிரந்தரமாகக் காணப்படுதலின் நித்தமெனவும் பெயர் பெற்று நிற்கும். "உண்ணிலவு தமமாயை மோகமுட னவித்தை பொய்ம் மை யுருவியென்றே நண்ணுமிவை மாயா பஞ்சகமாகுமென வறிஞர் நவில்வர்" எ. து இங்ஙனமாக வன்றியும் யாவரதுள்ளத்தினுந் தங்கி யிருப்பதால் தமம், மாயை, மோகம், அவித்தை, பொய்யுருவியெனப் பெயர்பெற்று நிற்கும். இவ்வேதுக்களால் இவ்வைந்தும் மாயாபஞ்சகமாமென அறிஞர் கூறு நிற்பர் எ. று.

அன்று ஏ அசைகள். என்றே யென்பதில் ஏகாரம் தேற்றம். பொய்ம்மையுருவி யென்பதை வடநூலார் அநிர்தாத்மிகை யெனக் கூறுவர். மாயை சுருதி சம்பந்தமாய் விசாரிக்கிற் ககனகுசுமம்போல இன்மையாதலிற் றுச்சமெனவும், உத்தி சம்பந்தமாய் விசாரிக்கிற் சுத்திகாரசிதம்போல உண்டின்றென்று தாதலின் அநிர்வாச்சியமெனவும், உலக சம்பந்தமாய் விசாரிக்கின் ஆத்மாவைப்போல் உள்ளதாகத் தோற்றலின் நித்தியமெனவுங் கூறினர்.

(அ. கை.)

முன்னர்த் தொகுத்துக் கூறிய மாயாபஞ்சக இலக்கணங்களை யினைய வென வகுத் துணர்த்துகின்றது.

சீவசே தனமறைத்துத் தமமயலா கியவுலகத் திறத்திற் கெ
ல்லா, மேவுகா ரணமாகி மாயைவிப ரிதஞானம் விளைத்து மோக,
மோவவுணர் வழித்தவித்தை சத்தின்வே றாகிப்பொய் யுருவி யா
கும், வீவிலா மாயையிதற் கிருதருமஞ் சங்கோச விகாச மென்
றாம்.

(இ. ரை.) "சீவசே தனமறைத்துத் தமமயலாகிய வுலகத் திறத்திற் கெல்லா மேவுகாரணமாகி மாயை விபரிதஞானம் விளைத்துமோகம்" எ. து. மாயாசத்தியானது ஆன்மஞானத்தை மறைத்துத் தமமெனவும், ஆன்மாவுக் கயலா நின்றுள்ள சகமாதிமூன்றின் நிலைகளுக் கெல்லாந் தான் இயைந்த காரணமாநின்று மாயை யெனவும், ஒன்றையொன்றாக வுணரும் விபரீத ஞானத்தை விளைத்து மோகமெனவும், "ஓவவுணர் வழித்தவித்தை சத்தின்வேறாகிப் பொய்யுருவியாகும்" எ. து. ஒழியுமாறு உணர்வை யழித்து அவித்தை யெனவும், உண்மைக்கு மாறாக நின்று பொய்யுருவி யெனவும் பெயர்பெற்று நிற்கும். "வீவிலா மாயை யிதற்கிருதருமஞ் சங்கோசவிகாச மென்றாம்" எ. து. அழியாது நித்தியம்போற் காணும் இந்த மாயாசத்திக்குச் சங்கோச மெனவும், விகாச மெனவும் இரண்டு தருமம் உளவாகக் காணும் எ. று.

மறைத்து, காரணமாகி, விளைத்து, அழித்து, பொய்யுருவியாகி; தமம், மாயை, மோகம், அவித்தை, பொய்யுருவி எனப் பெயர்பெற்று நிற்குமென முடிக்க. இது நேர் நிர னிறை யணி. சங்கோசம் குவிதல், விகாசம் விரிதல். அசத்து, பொய்யுருவி, துச்சம் என்பன வொருபொருட் கிளவி

யாயினுங் கிஞ்சித்து தாரதம்மியம் இருத்தலின் அவ்வதோன்ற ஆங்காங்கு கூறினர். இம்மாயை யிரவியை யெழிலி மறைத்ததுபோல ஆத்ம ஞானத்தை யேகதேசத்தின் மறைத்ததுபோலத் தோற்றுவிக்கும் அந்தகார மாதலின தமசெனவும், தன்னை மறந்தவிடத்துப் பிரபஞ்சமாகத் தோற்றுவித்தற் கேதுவாகலின் மாயையெனவும், குற்றியை மகனென்றதுபோலச் சிவத்தை ச்சகமாகத் தோற்றுவித்தலின் மோகமெனவும், தன்னை யறியேனென்ற தன்மை யறிவாயிருந்தும் அதனைத் தோற்ருமற் கெடுத்தலின் அவித்தை யெனவும், இங்ஙனஞ் செய்வதற் கேதுவான வுருவந் தனக்கென வொன் றின்மையின் பொய்யுருவி யெனவுங் கூறினர்.

வினு:—இந்துவினை யென்ற கவியில் மறையாதென்ற மாயை யிங்ஙனம் மறைத்ததென்ற தென்னை?

விடை:— சந்திர னுருவங் களங்கத்தின் அளவெவ்வளவோ, அவ்வளவு மறை பட்டதாகத் தோற்றல்போல, ஆத்மஞான வியாபகத்தில் ஏகதேச மான மாயை யெவ்வளவோ, அவ்வளவு மறைபட்டதுபோலத் தோன்றின தேயன்றி வேறின்றென்க. (சூo)

(அ. கை.)

மேற்கூறிய சங்கோச விகாச தர்மங்களின் இலக்கணம் இனையவென வும், மாயைக்கு வேறிரண்டு குணங்களின் நாமம் இனையவெனவும் உணர் த்துகின்றது.

விரிந்துபட மோவியங்கள் பலதிகழ்த்திக் குவிந்தொடுக்கும் விதமே போல, வரந்தைதரு மாயையுந்தன் விகாசதரு மத்தினு லகிலங் காட்டிப், பரந்தவைகள் சங்கோச தருமத்தா லடக்குமெ னப் பகர்வர் மாயைக், கிருந்தகுண மிரண்டுளவில் சுதந்திரமுஞ் சுதந்திரமு மென்ன வன்றே.

(இ. ளை.) "விரிந்துபட மோவியங்கள் பலதிகழ்த்திக் குவிந்தொடுக் கும் விதமேபோல" எ. து. படமானது தான் விரிந்து தன்பாலடங்கிய பல வேறு விகற்ப சித்திரங்களை விளங்கக் காட்டி மீண்டுங் குவிந் தொடுக்கிக் காட்டும் விதமெங்ஙனமோ அதுபோல, "அரந்தைதரு மாயையுந்தன் விகாசதரு மத்தினு லகிலங்காட்டிப் பரந்தவைகள் சங்கோச தருமத்தா லடக்குமெனப் பகர்வர்" எ. து. இன்பம்போலக் காட்டித் துன்பத்தைத் தர ற்பாலதாகிய மேற்கூறிய மாயாசத்தியும் தனது விகாச தருமத்தினுல் விரி ந்து சமஸ்த வுலகங்களையுங் காட்டி, அங்ஙனங்காட்டியதாற் காணப்படும் விரிவாய வுலகங்களைத் தனது சங்கோச தருமத்தினு லொடுக்கிக் காட்டு மெனச் சத்துக்கள் கூருநிற்பர். "மாயைக் கிருந்தகுண மிரண்டுள வில்சுத ந்திரமுஞ் சுதந்திரமு மென்ன" எ. து. இவையன்றியும் மாயைக்கு இயல்பா நின்றுள்ள குணங்கள் சுதந்திரத்துவ மென மெனவும், சுதந்திரத்துவமெ மெனவு மிரண்டுள்ளனவாம் எ. று.

அன்று ஏ அசைகள். மாயையும் என்பதி லும்மை இறந்ததுதழீஇய வெச்ச வும்மை. பட மானது திகழ்த்தி யொடுக்கிக் காட்டுமாறு போன்று மாயையும் விரித்துக்காட்டி அடக்கிக் காட்டுமென முடிக்க. யதார்த்தமான படத்தில் வன்னங்களாற் கற்பிதமா யமைத்த சித்திரங்களே விகசிதமாய் விளங்கல்போல, சுயஞ் சித்திற் கற்பிக்கப்பட்ட சராசரங்களே விகசித்தலின், ஈண்டு மாயைக்குச் சித்திரப்படத்தை யுவமித்தாரென்க. இச்சகமாகிய காரி யந் தோற்றற்கு இம்மாயை யொரு சார்பு காரணமாதலின் அதன் விரிவு ஒடுக்கமே சகத்தின் உதிப்பும் ஒடுக்கமு மாமென்க. (கூக)

(அ. கை.)

முன்னர் மாயைக்கு இரண்டுகுணம் வேறுளவென்பதை விளங்க வுணர்த்துகின்றது.

பொய்யாகிச் சத்துருவப் பொருளின்வே றாகியொரு பொருளாய்த் தோற்றல், செய்யாமை யாலுளதில் சுதந்திரஞ்சான் றூய வொரு சேத னன்பா, லுய்யாத சீவாதி யாக்குதலாற் சுதந்திரமு முளது மாயை, மெய்யான தலதென்றல் விசும்பலர்போ லில்லை யென விளம்பலன்றே.

(இ. ரை.) "பொய்யாகிச் சத்துருவப் பொருளின் வேறாகி யொரு பொருளாய்த்தோற்றல்செய்யாமையாலுளதில்சுதந்திரம்" எ து. தனக்கெனச் சொரூப மொன்றின்றாய் மெய்ப்பொருளாகிய பிரமத்தினின்றும் வேறாகி, தானொரு முதலாகித் தோற்றல் செய்யாமையால் சுதந்திர ஈனத்துவமும், "சான்றாய வொரு சேதனன்பா லுய்யாத சீவாதி யாக்குதலாற் சுதந்திரமு முளதுமாயை" எ து. சாட்சியாக நின்றுள்ள ஒப்பற்ற பரமாத்மாவினிடத் தில் அறியாமையினின் றுய்தற் கிடம்பெறாத சீவன்முதலியவைகளை விளை வித்தலாற் சுதந்திரத்துவமு மாகிய இவ்விரண்டையு முடையது மாயை யாம். "மெய்யான தலதென்றல் விசும்பலர்போ லில்லையென விளம்பல ன்று" எ. து. அம்மாயையென்பது மித்தையெனச் சொல்லப்படுதல் ககனா ரவிந்தம்போல் முற்றும் இன்றெனச் சொல்லப்படுவதன்று எ. று.

ஏ அசை. சகமாதியை நோக்குங்கா லுளதாயும், யாது சொரூப மென நோக்குங்கால் இலதாயுங்காணப்படுதலின் இவ்விரு தர்மத்தையுமாயாசக்தி யேற்றற்கு முரணின்றென்க. இல் சுதந்திரமென்பதில் எண்ணும்மை யெஞ் சியது. பிரமத்தைத்தவிரத் தனக்கென வோர்செய லில்லாமையாற் சுதந்திர மின்மையும், அப்பிரம சத்தையைக் கொண் டியாவையுங் கற்பித்தலிற் சுத ந்திரமு முளவென்க. (கூ௨)

(அ. கை.)

முன் பொய்யென்ற மாயையின் விருத்தித்திரயம் இவையவென் றுணர்த்துகின்றது.

புலனில்கனுக் கரியாதி போற்றேன்றி விசாரிக்கிற் பொன்று மெய்யா, நிலவுதல்செய் சுத்தசத்து வடிவமா மாயையொடு நிகழ்த்துகின்ற, மலினசத்து வடிவமா மவித்தைதமப் பிரதான வடிவ மாகு, நலமில்பிர கிருதியென விருத்திமூன் றுடையதுமுன் னவின்ற மாயை.

(இ. ரை.) "புலனில் கனுக் கரியாதி போற் றேன்றி விசாரிக்கிற் பொன்றும்" எ. து. ஐம்புல வுணர்வின்றிய கனவின் கட்டோன்றிய யானை முதலியவைக ளெங்ஙனமோ, அது போலச் சக சீவ பர முதலியவைகள் மாயையின்கட் டோன்றி யங்ஙனந் தோன்றியவைகளை யையந் திரிபறவிசாரிக்கிற் சற்றுமிலதாக அழியும். "மெய்யா நில்வுதல் செய் சுத்தசத்து வடிவமாமாயை யொடு நிகழ்த்துகின்ற மலின சத்து வடிவமா மவித்தை" எ. து. மெய்போல எவர்க்கும் விளக்குவிக்குஞ் சுத்த சத்துவ வடிவமான மாயையும், அதனேடொன்றாகச் சொல்லப்பட்ட அசுத்த சத்துவ வடிவமான அவித்தையும், "தமப்பிரதான வடிவாகு நலமில் பிரகிருதியென விருத்தி மூன்றுடையது முன்னவின்ற மாயை" எ. து. தமப் பிரதான வடிவமாய நலமிழந்த மூலப் பிரகிருதியுமெனக் கூறப்படும் இம் மூன்று விருத்திகளையும் முன்னர்க் கூறிய மாயாசத்தியானது தன்பாலுடையதாகக் காணப்படும் எ. று.

கரியாதி யென்றமையால் புலி முதலியவைகளைக் கொள்க. மாயை, அவித்தை, பிரகிருதி, இம்மூன்றையும் விருத்தித் திரயமெனக் கொள்க. தஸ்மரணைக் கிடம்பெருமையின் நலமிலென் றடை கொடுத்தார். விசாரிக்கிற் பொய்யா முடிதலின் மெய்யா நிலவுதல் செய் யென்றார். விருத்தியென்பதைச் சுத்த சத்துவாதி மூன்றிடத்துங் கூட்டுக. எனவே, சுத்த சத்துவ வடிவ மாயாவிருத்தியெனவும், மலின சத்துவ வடிவ அவித்தியா விருத்தியெனவும், தமப் பிரதானவடிவு விருத்தி யெனவுங் கொள்க. மாயையின் சத்துவத்தில் மூன்றும், ரஜஸில் மூன்றும், தமஸில் மூன்றுமாக ஒன்பதாய் விரிந்தது விருத்தியென்க. (கூகூ)

(அ. கை.)

மாயையின் சத்துவாதி குணங்களிற் சக சீவ பரங்களின் உற்பத்தி கூறுவான் வேண்டி, சுத்த சத்துவ மாயையில் ஈசன் தோன்றும் இயல்பு இனையதென வுணர்த்துகின்றது.

மாயைவருசுழுத்திலயங்களினத்தியாசயிக்கமாயிற்றுண்மை
யாயபிரமத்தினனவொடுபடைப்பினிதுபேதவவத்தையெய்து
மேயவதிற்பிரமசைதனியம்விம்பித்திட்டதுவேவிளங்குஞானந்
தூயசைதன்னியமேபதியிறையென்றிடநிற்குந்துணிவிதாமே.

(இ. ரை.) "மாயை வரு சுழுத்தி லயங்களி னத்தியாசயிக்க மாயிற்று" எ. து. மாயையானது இடைவிடாது மாறி மாறி வருகின்ற சுழுத்திய

வத்தையிலும், சர்வ சங்கார காலங்களிலும் அயிக்கமானதுபோல் அத்தியா சமாகக் காண்பதெங்ஙனமோ, அதுபோல, "உண்மையாய பிரமத்தி னன வொடு படைப்பி னிது பேத வவத்தை யெய்தும்" எ. து உண்மையாகின் றுள்ளசைதன்னியத்திற் சாக்ராவத்தையிலும் படைப்புக்காலத்திலும் இந்த மாயையானது இங்ஙனமாய பேத அவத்தைகளை யடைந்ததாகக் காணும் "மேயவதிற் பிரம சைதனியம் விம்பித்திட்டதுவே விளங்கு ஞானந் தூய சைதன்னியமே பதி யிறை யென்றிட நிற்குந் துணிவிதாமே" எ. து. இந் நிலையதாக வாய்த்த அந்தமாயையிற் பிரம சைதன்யமானது பிரதிவிம்பிக்க அங்ஙனம் பிரதிபிம்பித்த சாயையே ஞானவடிவாக விளங்கும். பரிசுத்த சைதன்யமே பதியெனவும், இறையெனவும் எவருங் கூறும்படியாக நிற் கும். இதுவே துணிவெனப் படுவதாம் எ. று.

ஆகாய வியாபகத்தில் அணுத்துவ ஏகதேச விடத்திற் காற்றெழுந் தெங்கணும் வியாபித்து மோதி யடங்குவது போல்வதின், பிரமத்தில் மா யை பேதஅவத்தை யெய்தி யயிக்கமாயிற்றென்றார். சுழுத்தி லயம். நனவு படைப்பு. இவை நேர் நிரனிறை. சுழுத்தி நனவு சீவ சைதன்யத்திலும், லயம் படைப்பு ஈச சைதன்யத்திலு மெனச் சேர்க்க. பேதமென்பது பிரம வியாபகத்தில் மாயை கிஞ்சித்து வேறுபடுதல். இவ்வி யுண்டாகும் யாவை க்கும் மேலாயிருத்தலின் ஈசனெனவும், இங்ஙன முண்டாகின்ற யாவைக் குங் கர்த்தாவா யிருத்தலின் பதியெனவும், அவை யனைத்தையும் பிரேரகப் படுத்தலின் இறையெனவுங் கொள்க.

மாயையானது உண்மையான பிரமத்துடனே யத்தியாச ஐக்கியமா யடங்கிக் கிஞ்சித்து வெளிப்படும்போது அதற்கே சுத்தசத்துவ மாயாவிருத் தியெனவும், இந்நிருமலத் துதித்த பிரமப் பிரதிபலனச் சாயை நிருமலமாய் விளங்கலின் அதுவே சர்வஞ்ஞத்துவாதி குணவிசிஷ்டஞன ஈசனெனவு மாம். (கூச)

(அ. கை.)

மேற்கூறிய மலின சத்துவாவித்தையிற் சீவர்கடோன்று மியல்பினைய தென வுணர்த்துகின்றது.

வேறு.

அப்பரற் குபாதி யாகி யமோககா ரணியா மாயை
பொய்ப்புறு மவித்தை யெண்ணிற் போத்திரு பசுவென் றோது
மொப்பருஞ் சீவர்க் கெல்லா முபாதியாய் மோகஞ் செய்யு
மெய்ப்புறு பகுதி பாச மெனச்சம குணமா நின்று.

(இ.ரை.) "அப்பரற் குபாதியாகி யமோக காரணியா மாயை" எ. து. மாயையென்பது முற்கூறிய பரனுக்கு உபாதி வடிவா நின்று மோகரகித காரணியா நிற்கும்; "பொய்ப்புறு மவித்தை யெண்ணிற் போத்திரு பசு வென்றோது மொப்பருஞ் சீவர்க்கெல்லா முபாதியாய் மோகஞ் செய்யும்"

எ. து. பொய்யெனற் கியைந்த அவித்தையென்ப தெண்ணிறந்த போத்திரு வெனவும்,பசுவெனவுஞ், சொல்லத்தக்க வொப்பில்லாத சீவர்களுக்கெல்லா முபாதியாக நின்று மோகத்தைச் செய்யாநிற்கும்; "எய்ப்புறு பகுதி பாச மெனச் சமகுணமா நின்று" எ. து. இளைக்கத்தக்க மூலப் பிரகிருதியானது போக்கியாத் மகத்துவத்தினுற் பாசமெனக் கூறப்பட்டுக் குணத்திரயசமா னவத்தையா நின்று எ. று.

காரணமெனற்பாலது காரணியென்றுயது சுத்த மாயாசத்தியை நோக்கியென்க. போத்திருவெனல் அநுபவிப்பவனை. அவித்தையை யுபாதியெனல் மயக்குந் தகைமை பற்றியும், உபாதி யமோககாரணியெனல் மயக்கம் விளைவியாமை பற்றியுமென்க. இவ்விரண் டேதுக்களால் சர்வஞ்ஞத்துவ முதலிய குணங்களும் கிஞ்சிஞ்ஞத்துவ முதலிய குணங்களும் வந்தமை காண்க. அதோமுகத்திற்கும் ஊர்த்தமுகத்திற்கு மியைந்துநிற்பது வேறின்மையின், சீவர்களுக் கொப்பருமென் றடைகொடுத்தார். குணத்திரியத்திற் குப் பகுதி சமமாநிற்றலின், சமகுணமா நின்றென்றார். பகுதிக்கு ஏய்ப்புறு வென் றடைகொடுத்தது அளவிறந்த பிறவிகளைத் தந்து இளைப்பை யுண்டாக்குந் தகைமை பற்றியென்க. ஏனைய பாசங்கள் பகுதிபோல்வ தன்று மையின், பகுதி பாசமெனப்பட்டது. வித்தைக்கு அவித்தை வேறின்மை யின் பொய்ப்புறு மவித்தையென்றார். (கூ௫)

(அ. கை.)

முற்கூறிய தமப்பிரதான ரூபமான பிரகிருதியிற் காலதத்துவந் தோன் றும் இயல்பு இனையதென வுணர்த்துகின்றது.

அவித்தையின் விம்பித் துள்ள வாருயிர் நுகர்ச்சிக் காகத்
துவக்குறு காரி யங்க டோற்றிட வெதிர் குறித்த
வுவப்புறு மீசனோக்க மாத்திரத் துற்ற லர்ந்து
பவப்படு கால மாகி யதுகொடு பரிணமித்து.

(இ.ரை.) "அவித்தையின் விம்பித்துள்ள வாருயிர் நுகர்ச்சிக் காகத் துவக்குறுகாரியங்க டோற்றிட" எ. து. முன்னர்க் கூறிய அவித்தையினிடத்திற் பிரதிபிம்பித்த நிறைந்த வுயிர்களின் போகானுபவ நிமித்தம் உடலுக் கியைந்த காரியங்க ளெவையோ, அவை யனைத்தும் உண்டாகுமாறு, "எதிர்குறித்த வுவப்புறு மீசனோக்க மாத்திரத்துற்றலர்ந்து" எ. து. தனக் கெதிராகச் சங்கற்பித்த ஆனந்த வடிவமான ஈசன் நோக்கின மாத்திரத்தி னுடனே யெங்கணும் பரவி, "பவப்படு காலமாகி யதுகொடு பரிணமித்து" எ. து. பவத்திற்கியைந்த காலதத்துவமாகி யதுகாரணமாக மாறுபட்டு எ. று.

துவக்கு காரண ஆகுபெயர். நுகர்ச்சிக்கியைந்த காரியம் சத்தபரிசாதி களை. இவை யனைத்துஞ் சடமாதலி னெதிரென்றார். உவப்புறு மீசனென்

றது அன்பருக் கினிமைபற்றியென்க. பால் தயிராதலைப் பரிணமித்தலென் ருர். காலமாயதும் பரிணமித்ததும் பகுதியென்க. பிரதிபிம்பித்தலே விம் பித்தலெனல் மரூஉ. வித்தையாப் பிரதி விம்பரான ஈசுரன் தனது கடா க்ஷத்திருல் அவித்தையாப் பிரதி விம்பரான சீவர்கள் மயக்கம் நீங்கத் தனுவாதிகளைக் கொடுக்கும் நிமித்தங் காலதத்துவ முண்டாயிற் றென்பது கருத்து. (கூகூ)

(அ. கை.)

மகதத்துவத்தின் உற்பத்தியுங் குணமும் இனையவென வுணர்த்துகின் றது.

இருமக தத்து வந்தா னெனநிற்கு மதுதா னீர்பெய்
தரும்விதை முளையா மன்முன் போலிரா தாதல் போலக்
கருவெனும் பகுதி யோடாங் காரமு மாகா மற்பொய்
யுரமுறு நிருவி கற்ப வுருநடு வவத்தை யாகும்.

(இ.ரை.) "இருமக தத்துவந்தா னெனநிற்கு மதுதா னீர்பெய் தரும் விதை முளையாமன் முன்போ லிராதாதல்போல" எ. து. பெரிதாகிய மக தத்துவ மெனக்கூறப்பட்டு நிற்கும் அந்நிலையது நீர்விட்ட விதையானது முளையாமலும், முன்போவிராமலும் எங்ஙனமாநிற்குமோ அதுபோல, "கரு வெனும்பகுதியோடாங்காரமுமாகாமற் பொய்யுரமுறுநிருவிகற்பவுருநடுவவ த்தையாகும்" எ. து. கருப்பம்போல்வதாகிய மூலப்பிரகிருதியு மாகாமல் அகங்காரதத்துவமுமாகாமல் கற்பிதஞான சம்பந்தமுள்ள நிர்விகற்பவடிவ மான மத்தியகத அவத்தை யெனப்படுவதாம் எ. று.

தனததிஷ்டானநிலை மறந்ததாற் பொய்யுர மெனப்பட்டது. உதார ணம் என்னை நானறியே னெனல். கருப்பம் போல்வதின் பகுதியைக் கரு வென்ருர். திரிகுணமாக விரியாமையின் நிருவிகற்பமெனப்பட்டது. பிர கிருதிக்கு விதையையும், மகதத்துவத்துக்கு ஊறினவிதையையும், அகங்கா ரத்திற்கு அங்குரவிதையையும் உவமித்ததென்க. நடுவென்றமையின் முதற் பிரகிருதியும் ஈற்றில் அகங்காரமுங் கொள்க. விதை நீரின் உப்பின் அங்கு ராதி விருக்ஷமுண்டாதற் கேதுவாதல்போலப் பிரகிருதி யுன்முகத்தான் மகதத்துவமாதல் அகங்காராதி சகமுண்டாதற் கேதுவென்க. (கூஎ)

(அ. கை.)

மேற்கூறிய அகங்கார தத்துவத்தில் உதித்த குணத்திரயநாமம் இனை யவென வுணர்த்துகின்றது.

கொன்மக தத்து வத்திற் குணபேத முறுப்பொய் ஞான
மன்சவி கற்பமாக வருமுத லத்தி யாச
மென்முத லாங்கா ரந்தோன் றிடுகுணஞ் சத்து வந்தான்
பின்வரு மிராச தஞ்சொற் பெருந்தமோ குணமென் ருகும்.

(இ. ரை.) "கொன்மக தத்துவத்திற் குணபேத முருப்பொய் ஞான மன்சவி கற்பமாக" எ. து. பெரும்பாலும் மகதத்துவத்திற் குணபேதமுற்று மிகவும் மித்தையா ஞானத்திஞல் விகற்பவடிவமாக, "வருமுத லத்தியாச மென்முத லாங்காரந் தோன்றிடுகுணம்" எ. து. வருகின்ற முதலத்தியாச் மெனக்கூறு முதலகங்காரத்தில் தோன்றுகின்ற குணங்கள், "சத்துவந் தான் பின்வரு மிராசதஞ் சொற்பெருந் தமோகுணமென்றாகும்" எ. து. சாத்துவிதம், பின்தொடர்ந்துவரு மிராசதம், பெரிதாகச்சொல்லப்பட்ட தாமதமெனப் பெயர்பெறுவனவாம் எ. று.

கொன் மன் னென்பன இடைச்சொற்கள். உறுவென்பது செய்யா வென்னும் வினையெச்சம். சவ்விகற்பமாதலின் பொய்ஞானமென்றார். ஒன்று மற்றொன்றாகத்தோற்றுவ தத்தியாசம்.

விருட்சத்துக்கு அங்குர முதலாவதுபோலச் சகத்தோற்றத்திற் ககங் கார முதலாதலின் இவ்வகங்காரத்தை முதலென்றார். (சுஅ)

(அ.கை.)

முன்னர்க்கூறிய திரிவித குணங்களி னுருவங்களும், இவை காரண மாக வந்த அவற்றின் நிரைப்பெயர்களும் இனையவென வுணர்த்துகின்றது.

உரைப்பருஞ் சத்து வாதி யுருவங்கள் பிரகா சம்பின்
புரைப்பிர விருத்தி மோக மென்குவர் புகல்கு ணங்க
ணிரைப்பெயர் தான்வை காரி நிகழுந்தை சதம்பூ தாதி
விரிப்பருங் குணங்கண் மூன்றுந் தருவமேல் விளம்ப லுற்றாம்.

(இ. ரை.) "உரைப்பருஞ் சத்துவாதி யுருவங்கள் பிரகாசம் பின் புரைப்பிர விருத்திமோக மென்குவர்" எ. து. சொல்லற்கரிய சாத்துவித முதலிய குணங்களின் வடிவங்கள் பிரகாசமும், பின்னர்க் கூறப்படும் பிர விர்த்தியும், மோகமுமெனச் சத்துக்கள் கூறாநிற்பர். "புகல்குணங்க ணிரைப்பெயர்தான் வைகாரி நிகழுந்தைசதம் பூதாதி" எ. து. இங்ஙனங் கூறிய குணத்திரியங்களின் முறைப்பெயர்கள்: வைகாரி, விளங்காநின்ற தைசதம், பூதாதி யென்ப்படுவனவாம். "விரிப்பருங் குணங்கள் மூன்றுந் தருவமேல் விளம்பலுற்றாம்" எ. து. விரிவாகச் சொல்லற்கரிய இம்மூன்று குணங்களுந் தருவனவற்றை யினிச்சொல்லுதும் எ. று.

சத்துவாதி தருவ வினையாலணையும் பெயர். குணங்கள் நிரைப்பெய ரென்றது சத்துவப் பிரகாசத்தில் வைகாரியும், ரஜசின் பிரவிருத்தியிற் றைசதமும், தமசின் மோகத்திற் பூதாதியு மெனக்கொள்க. விதையின்கண் உதித்த அங்குரமே மூன்றிதழானதுபோல மகதத்துவத்தி லுதித்த அகங் காரமே முக்குண மாயிற்றென்க. (சுகூ)

(அ.கை.)

முன்னர்க் கூறிய தனித்தனி குணங்களினின் றுதிக்குந் தத்துவங்கள் இனையவென வுணர்த்துகின்றது.

சத்துவ குணத்திற் றோன்றுந் தயங்குமுட் கரண நான்கும்
புத்தியிந் தியங்க ளைந்தும் போந்துதித் திடுமிராச
தத்தில்வாக் காதி யைந்துந் தரும்பிரா ணாதி யைந்து
மத்தமோ குணத்திற் றோன்று மகல்விசும் பாதி பூதம்.

(இ. ரை.) "சத்துவ குணத்திற் றோன்றுந் தயங்குமுட் கரண நான்கும் புத்தியிந்தியங்களைந்தும்" எ. து. சாத்துவித குணத்தில் விடாதுழலுகின்ற அந்தக் கரணங்க ணான்கும், ஞானேந்திரியங்க ளைந்து முதிக்கும், "போந்துதித்திடு மிராசதத்தில் வாக்காதி யைந்துந் தருபிராணாதியைந்தும்" எ. து. இராசதகுணத்தில் வாக்கு முதலிய கன்மேந்திரியங்களைந்தும், உடலுக்கியைந்த பிராணாதிவாயுக்களைந்தும் வந்துதிக்கும்; "அத்தமோகுணத்திற் றோன்று மகல்விசும் பாதிபூதம்" எ. து. அந்தத் தாமதகுணத்தில் எங்கணும் வியாபித்த ஆகாயமுதலிய பஞ்ச பூதங்களுதிக்கும் எ. று.

புறம்பு இன்மையின் அகல்விசும்பென்றார். பஞ்சீகரித்தென்றதனால் விசும்பாதி பூதமெனலை யபஞ்சீகிருதமாச்சுக. அன்றேல் முரணும். கரண நான்கென்பன: மனம், புத்தி, சித்தம், ஆங்காரமும்; புத்தியிந்தியங்களைந் தென்பன: செவி, மெய், கண், நா, மூக்கும்; வாக்காதி யைந்தென்பன: வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தமும்; பிராணாதி யைந்தென்பன: பிராணன், அபானன், உதானன், வியானன், சமானனுமாம். இப்பத்தொன்பதுஞ் சூக்குமதேகமும்; விசும்பாதி பூதமென்பன: விண், காற்று, அக்கினி, அப்பு, மண் இவ்வைந்துந் தூலபூதமுமா மெனக்கொள்க. (எO)

(அ. கை.)

அங்ஙனம் பஞ்சீகரித்த பூதத்தினின்று உலகமாதலும், அந்தக்கரணங்கள் சேட்டித்தலும், அவற்றிற்கு அதிதேவதைகளா நிற்றலும் இனையவெனவுணர்த்துகின்றது.

அப்பெரும் பூதம் பஞ்சீ கரித்துல காகி நிற்குஞ்
செப்பிய கரண நான்கின் செயல்கடா நினைத்த லந்தப்
பொய்ப்பொரு ளெணிதன் மானம் புரிதல்சிந் தித்த றிங்க
டிப்பிய நான்மு கன்கேத் திரிபுராந் தகன்றே வன்றே.

(இ. ரை.) "அப்பெரும் பூதம் பஞ்சீகரித் துலகாகி நிற்கும்" எ. து. முன்னர்க்கூறிய அபஞ்சீகிருத பஞ்சபூதந் தூலமாகப் பஞ்சீகரித் துலகாகி நிற்கும். "செப்பியகரண நான்கின் செயல்கடா நினைத்தலந்தப் பொய்ப் பொரு ளெணிதன் மானம் புரிதல் சிந்தித்தல்" எ - து. முன்சொல்லிய மனமுதலிய நான்கு கரணங்களின் செயல்களாவன: அந்தப்பூதாதி மித்தையாப்பொருளை நினைத்தலும், நிச்சயித்தலும், அபிமானித்தலும், சிந்தித்தலுமாம். "திங்கடிப்பிய நான்முகன் கேத்திரி புராந்தகன் தேவு" எ, து.

இவற்றின் தேவதைகளாவன: சந்திரனும், சிறந்த பிரமனும், விட்டுணுவும் உருத்திரனுமாம் எ - று.

அன்று ஏ அசைகள். தனக்கெனச் சொரூபமொன்றின்மையின் பூதாதிகளைப் பொய்ப்பொருளென்றார். கரணநான்கின் செயல்கள் தேவு எனவே மனதிற்குச் சங்கற்பித்தலும் சந்திரனும்; புத்திக்குத் துணிதலும் பிரமனும்; சித்தத்திற்குச் சிந்தித்தலும் விஷ்ணுவும்; அகங்காரத்திற்கு அபிமானமும் உருத்திரனுமாம். பஞ்சீகரித்தலென்பது: தன்மாத்திரையின் றமோகுண பூதங்களை யொன்றிரண்டாகப் பகுத்து அதின் முற்பாதி யைந்தை நிறுத்திப் பிற்பாதி யைந்தில் ஒவ்வொன்றை நந்நான்காக்கி யிவற்றை முற்பாதியில் தன் அமிசம்விட்டு மற்றவைக்கு இவ்விருபதையுங் கொடுக்க ஸ்வயாமிசம பாதியும் ஏனைய் அமிசம் பாதியுஞ் சேர்ந் தொன்றுதலே. (எக)

(அ. கை.)

இந்தக் கரணங்கட்குத் தானமும் ஞானேந்திரிங்கட்குப் புடைபெயர்ச்சியும் அதிதேவதைகளும் தானமும் இனையவென வுணர்த்துகின்றது.

இக்கர ணங்க டான மிதயஞா னேந்தி யங்கட்
குய்க்குறு தொழிலாங் கேட்ட லுறல்காண்ட லுண்டன் மோத்த
றிக்குமா ருதமே நன்மித் திரனுயர் வருண ணோடு
தக்கசு வினியாந் தெய்வந் தானங்கா தாதி யாமே.

(இ. ரை.) "இக்கர ணங்கடான மிதயஞா னேந்தியங்கட் குய்க்குறு தொழிலாங் கேட்டலுறல் காண்ட லுண்டன் மோத்தல்" எ. து. இந்த மனமுதலிய அகக்கரணங்கட்குத் தானம் இருதயமாம். ஞானேந்திரியங்கட்கியைந்த தொழிலாவன; கேட்டல், பரிசித்தல், பார்த்தல், புசித்தல், முகர்தலாம். "திக்குமாருதமே நன்மித்திரனுயர் வருணனோடு தக்கசுவினியாந் தெய்வந் தானங்காதாதியாம்" எ. து. அதிதேவதைகளாவன: திக்கும், காற்றும், நல்ல சூரியனும், சிறந்தவருணனும், தகுந்த வசுவினியுமாம். தானமாவன: காது முதலியனவாம் எ - று.

ஏ அசை. உய்க்குறுமென்பதில்யகரவொற்றுசெதுகை. தக்கஅசுவினியெனற்பாலது தக்கசுவினி யென்றுயது விகாரம். ஆதியென்றதனால் மெய், வாய், கண், மூக்கைக் கொள்க.

கரணங்களென்னும் பன்மை கூறித் தானம் இதயமென நடுநிலையைக் கூறினமையிற் புத்திக் கஃதும் மனதிற்குக் கண்டமும், சித்தத்திற்கு நாபியும், அகங்காரத்திற்குச் சர்வாங்கமுமாமெனவும்; காதாதியென்றது: மெய், கண், நா, மூக்கெனவும்; ஞானேந்திரியங்கட்குத் தொழில், தெய்வம், தானமெனவே, நிரலே சுரோத்திரத்திற்குக் கேட்டலும், திக்கும், காதும்; தொக்குவிற்கு உறலும், மாருதமும், மெய்யும்; சட்சுவுக்குக் காண்டலும், மித்திரனும், நேத்திரமும்; சிங்குவைக்கு உண்டலும், வருணனும், நாவும்; ஆக்கிராணத்திற்கு மோத்தலும், அசுவினியும், மூக்குமாமெனக்கொள்க. (எ௨)

(அ. கை.)

மேற்கூறிய ஞானேந்திரியங்களின் உட்டொழிலும், கன்மேந்திரியங்களின் புறத்தொழிலும் இனையவென வுணர்த்துகின்றது.

**வேறு.**

புத்தியிந்தி ரியங்கடா முணருவதாம் விடயம்
புறமெனவே யுள்ளுமுணர்ந் திடுஞ்செவிகள்புதைப்பி
னுய்த்தபிரா ணாதியொலி கேட்கையன்ன திகளை
யுண்ணும்போ தழல்குளிர்ச்சி யறிதல்விழி மூடின்
மெத்துமக விருளறித லுற்கார திகளின்
விளங்குசுவை கந்தமறிந் திடன்முறையே யாகும்
வைத்தகரு மேந்திரியத் தொழிலுரைத்த னடத்தல்
வழங்கல்விட லானந்தித் திடுதலென வறியே.

(இ. ரை.) "புத்தியிந்தி ரியங்கடா முணருவதாம் விடயம்புறமெனவே யுள்ளுமுணர்ந்திடும்" எ. து. அறியுந்தகையினவாகிய ஞானேந்திரியங்களைந்தும் எங்ஙனம் புறம்பிலுள்ள விடயங்களை யறியுமோ, அதுபோல அகத்திலுமறியும். எங்ஙனமெனின், "செவிகள் புதைப்பினுய்த்தபிரா ணாதியொலி கேட்கை யன்னாதிகளை யுண்ணும்போ தழல் குளிர்ச்சி யறிதல் விழிமூடின் மெத்துமக விருளறித லுற்காராதிகளின் விளங்குசுவை கந்தமறிந் திடன் முறையே யாகும்" எ. து. காதுகளைமூடியவிடத்து இயல்பாகவே உசுவாச நிசுவாசங்களைச் செலுத்தும் பிராணன் முதலிய பஞ்சவாயுக்களின் சத்தங்களைக்கேட்டலும், அன்னபானாதிகளை யுண்ணுமிடத்து உட்டணசீதங்களை யறிதலும், கண்களைமூடியவிடத்து நுட்பமா நின்றுள்ள அகவிருளையறிதலும், கார்ப்புமுதலியவற்றிற் சனிக்குஞ்சுவையறிதலும், வாசனையறிதலு மேற்கூறிய முறையின்வண்ணமாம். "வைத்தகருமேந்திரியத் தொழிலுரைத்த னடத்தல் வழங்கல்விடலானந்தித்திடுதலெனவறி" எ. து. முன்னர் நிரையே நிறுத்திவைத்த கன்மேந்திரியங்களைந்தின் சேட்டைகளாவன: வாக்கால் வசனித்தலும், காலால்நடத்தலும், கையால் இடுதலேற்றலும், பாயுருவால் மலசல விசர்ச்சனஞ்செய்தலும், உபஸ்தத்தால்ஆனந்தித்தலுமாமென வறிதி எ. று.

ஏ அசை. உரையிற் கோடலென்னு முத்தியால் சீதோஷ்ணாதியென்றமையின் வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, திண்மை, நொய்மை, சீர்மை, சர்ச்சரை என்னும் எட்டு ஊறுகளையும்; இருளென்றமையின் ஒளி, வெண்மை, முதலிய பஞ்சவர்ணங்களையுங் கொள்க. ஒலிகேட்கை காதும், அழல் குளிர்ச்சியறிதல் தொக்கும், இருளறிதல் விழியும், சுவையறிதல், நாவும், கந்தமறிதல் மூக்கு மெனவே முறையே யென்றமையாற் கொள்க. இராசதத்தில் வாக்காதியைந்துமென முன்னர்க் கூறியிருப்பதால் வைத்த

கருமேந்திரியத் தொழிலென்றார். சுவை கந்தமென்றதனால் நாவையும் மூக்கையும் வருவிக்க. அவ்வவற்றின் புடை பெயர்ச்சியை யுணர்த்தியதால், வாக்காதிகளைந்தையும் வருவித்தாம். உய்த்தவென்பதில் யகரம்ஆசெதுகை. கருமேந்திரியமென்றது தொகுதியொருமை. பிராணதியென்றமையின், வியான, அபான, சமான உதானனையுங் கொள்க. முறையே யென்றமையின், அகத்தில் வியானவாயுவினாற் சத்தத்தையும், பிராண வாயுவினாற் பரிசத்தையும், அபானவாயுவினால் ரூபத்தையும், சமானவாயுவினால் ரசத்தையும், உதானவாயுவினாற் கந்தத்தையும் அறியுமென்பதாயிற்று. அன்னாதியென்றமையின் பானமுதலிய வுணவுகளையும், உற்காராதி யென்றமையின்வாந்தி யேப்பங்களினால் இதயகண்டங்களிற் கரித்தல் கார்த்தலையுங் கொள்க. (எகூ)

(அ. கை.)

முன்னர்க்கூறிய கன்மேந்திரியங்களின் அதிதேவதைகளும், அவற்றின் ஸ்தானங்களும் அவற்றால் விளையுந் தாபத்திரயங்களும் இவ்வதிதேவதைகளே யீசனுக்கு மூன்றவத்தைகளு மாமெனலுநிரையே வுணர்த்துகின்றது.

அங்கிமக பதியிரவி மிருத்தியு பிரசேச
 னதிதெய்வம் வாய்முதலாங் கோளகங்க டான
மிங்கிவைக ளுட்கரண மிருவகையுந் திரிய
 மென்னவரு பதினன்கு மத்தியான் மிகமாங்
தங்குமிவற் றுருவிடய மாதிபவு திகமாந்
 தருமதிதே வதையாதி தெய்வீக மாமிப்
புங்கவரே யிந்திரியம் விராட்புருடற் கதுமெய்
 பொன்கருப்பற் கதுமறைப்பா மந்தரியா மிக்கே.

இ. ரை. "அங்கிமக பதியிரவி மிருத்தியுபிரசேசனதிதெய்வம்" எ.து. அக்கினியும், தேவேந்திரனும், சூரியனும், யமனும், பிரசாபதியுங் கன்மேந்திரியங்கட்கு அதிதேவதைகளாம்; "வாய்முதலாங் கோளகங்கடானம்" எ.து. வாக்குமுதலிய கோளகங்களே யவ்விந்திரியங்கட் கிடமாம்; "இங்கிவைகளுட்கரணமிருவகையிந் திரிய மென்னவருப்தினன்கு மத்தியான் மிகமாம்" எ. து. இங்கே கூறிய விவைகளுக்குள் அந்தக்கரண நான்கும், ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் பத்துமென வழங்கிவரும் பதினன்கு மாதியாத்மீகமாம்; "தங்குமிவற்றுருவிடய மாதிபவு திகமாம்" எ. து. இங்ஙனந் தங்கிய இவைகளுக்குரிய விடயங்க ளாதிபௌதிகமாம்; "தருமதிதேவதை யாதிதெய்வீகமாம்" எ. து தக்க சந்திரன் முதலிய பதினன்கு தேவதைகளே யாதிதெய்வீகமாம்; "இப்புங்கவரே யிந்திரியம் விராட்புருடற்கு" எ. து. இத்தேவர்களே விராட்புருடனுக் கிந்திரியங்களாம். "அதுமெய் பொன்கருப்பற்கு" எ. து. இரணியகருப்பனுக்கு அவ்விந்திரியங்களே சூக்குமதேகமாம்; "அதுமறைப்பா மந்தரியாமிக்கு" எ. து. அந்தத்தேகமே யந்தரியாமிக்குத் தமோரூபமான ஆவரணமாம் எ. று.

ஏ அசை. கோளகம் இடம். உற்று விடயம் சம்சயாதி பதினொன்கை. முற்கூறிய கன்மேந்திரியங்கட்குத தெய்வமும் தானமுமெழின்றது: நிரலே வாக்கிற்கு அங்கியும் வாயும், பாதத்திற்கு மகபதியுங் காலும், பாணிக்கு இரவியுங் கையும், பாயுருவிற்கு மிருத்தியுவுங் குதமும், உபஸ்தத்திற்குப் பிரசாபதியுங் குய்யமுமாம். உரையிற் கோட லென்னு முத்தியால் விடயம் பதினொன்காவன : சம்சய, நிச்சய, சாஞ்சல்ய, அபிமான; சத்த, பரிச, ரூப, ரச, கந்த; வசன, கமன, தான, விசர்க்க, ஆநந்தங்களாம். சம்சயாதி நான்கும் ஒரு பொருளிடத்தில் வைத்து விடயம் பதினொன்றெனக் கூறுவாருமுளர். அகக்கரணம் பதினொன்கிற்குந் தனித் தனியே விடயங்களிருத்தலின் அங்ஙனங் கூறுதல் மரபன்றென்க. விடயங்களை நுகர்தற்கு இந்திரியங்களை யியக்குஞ் சந்திராதியருக்குத் தேவாம்ச மிருத்தலின் அதி தேவதை யெனவும், இவைகள் சகமாகிய தூலவிடயங்களை யறிதற் கிடமாயிருத்தலின் விராட்புருடனுக்கு இந்திரியங்களெனவும், அவ்விந்திரியங்கள் அவ்விடயங்கட்குக் காரணமான சூக்குமமா யிருத்தலின் பொன் கர்ப்பர்க்கு அது மெய் யெனவும், இவைக ளொன்றுந் தோன்றுமற் காரணமான தமசில் அடங்கி யிருத்தலின் மறைப்பாம் அந்தரியாமிக்கெனவுங் கூறினர். எனவே, யீசனுக்குத் தூலாதி மூன்று தேகமு மாயிற்று. (எச)

(அ. கை.)

தச வாயுக்களின் இலக்கணங் கூறுவான் வேண்டிப் பிராணுதி சத்த வாயுக்களின் இலக்கணம் இனையவென வுணர்த்துகின்றது.

நின்றிதயந் தனையடைந்து பிராணனுசு வாச
நிசுவாச மியற்றுமபா னன்குதத்தி னூற்றுச்
சென்றொழிய மலசலங்க ளொழித்தலுறுஞ் சமானன்
சேர்ந்துந்தி யன்னரச முறுப்பனைத்தும் பகுக்கு
மென்றுமுதா னன்களமுற் றுற்கார மபுரியு
மிருநதங்க மெங்கும்வியா னன்பரிக்கு முடம்பைக்
குன்றுதலி னுகன்சோம் பாவித்தல் விளைக்குங்
கூர்மனல் விக்கலொடு தேக்குவரு மன்றே.

(இ. ரை.) "நின் றிதயந்தனை யடைந்து பிராண னுசுவாச நிசுவாச மியற்று மபானன் குதத்தி னூற்றுச் சென்றொழிய மலசலங்க ளொழித்தலுறும்" எ. து. பிராணவாயுவானது இதயஸ்தானத்திற் றங்கிநின்று உசுவாச நிசுவாசங்களைச் செய்யாநிற்கும்; அபானவாயுவானது குதஸ்தானத்திலடைந்து தேகத்தினின்று நீங்க மல சலங்களை நீக்கிக்கொண்டிருக்கும்; "சமானன்சேர்ந்துந்தியன்ன ரசமுறுப்பனைத்தும் பகுக்கு மென்றுமுதானன் களமுற்றுற்காரம் புரியும்" எ. து. சமான வாயுவானது நாபிஸ்தானத்தினின்றுண்ட அன்னரசத்தை யவயவமுழுவதும் வியாபிக்கச்செய்யும்;உதானவாயு

வானது கண்ட ஸ்தானத்திற் றங்கி யெப்போதும் வாந்தி பண்ணும்படியாகச் செய்யும்; "இருந் தங்க மெங்கும் வியானன் பரிக்கு முடம்பைக் குன்றுதலி னுகன் சோம்பாவித்தல் விளக்குங் கூர்மனுல் விக்கலொடு தேக்கு வரும்" எ. து. வியானவாயுவானது சர்வாங்கமும் வியாபித்துநின்று தேகத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும்; சற்றுஞ்சுருங்காத நாகவாயுவானது சோம்பலையுங் கொட்டாவியையும் விளைத்துக்கொண்டிருக்கும்; கூர்மனென்னும் வாயுவினுல் விக்கலு மேப்பமு முண்டாகும் எ. று.

அன்று ஏ அசைகள். பிராணன் இயற்றும், அபானன் ஒழித்தலுறும், சமானன் பகுக்கும், உதானன் உற்காரம்புரியும், வியானன் பரிக்கும், நாகன் விளைக்கும், கூர்மனுல் வருமெனமுடிக்க. உசுவாச நிசுவாசமெனல் காற்றை வாங்கலும் விடுத்தலுமெனக் கொள்க. (எரு)

(அ. கை.)

முன் னிறுத்த முறையால் ஏனைய மூன்று வாயுக்களின் இலக்கணம் இனையவென வுணர்த்துகின்றது.

தும்மலுட னிருமல்வருங் கிரிகரனு னகுதல்
சொல்லுதலாந் தேவதத்த னுற்சோக ராக
மென்மைதருந் தனஞ்செயனத் தனஞ்செயனும் வாயு
வியனுயிர்போ யைந்நாளின் வீங்கிவெடித் தகலு
மிம்மையினு காதிபுற வாயுக்க ளைந்தா
யிசைத்திடுங்கன் மேந்திரியங் கட்கவைசேட் டிக்குந்
தன்மையாம் பிராணுதி பஞ்சவா யுக்க
டாமியக்கும் விடாமன்ஞா னேந்திரியங் களையே.

(இ. ரை.) "தும்மலுட னிருமல் வருங் கிரிகரனு னகுதல் சொல்லுதலாந் தேவதத்தனுற் சோகராக மென்மை தருந் தனஞ்செயன்" எ. து. கிரிகரனென்னும் வாயுவினுல் தும்மலு மிருமலு முண்டாகும்; தேவதத்தனென்னும் வாயுவினுல் நகைத்தலும் பேசுதலு முண்டாகும்; தனஞ்செயனென்னும் வாயுவினுல் துன்ப இன்பங்கள் மெல்ல விளையும்; "அத்தனஞ்செயனும் வாயு வியனுயிர்போ யைந்நாளின் வீங்கி வெடித்தகலு மிம்மையினு காதி புறவாயுக்க ளைந்தா யிசைத்திடுங்கன்மேந்திரியங்கட் கவைசேட்டிக்கும்" எ. து. அந்தத் தனஞ்செயனென்னும் வாயுவானது நிறைந்த வுயிர்நீங்கிய வைந்தா நாளிற் சரீர நீங்கிக் கபாலம் வெடித்து இச்சரீரத்தி னின்று நீங்கும்; நாகன்முதலிய புறவாயுக்களானவை யைந்தெனக் கூறப்படுங் கன்மேந்திரியங்களுக்கு ஆதாரமா நிற்பதால் அவை யசையும்; "தன்மையாம் பிராணுதி பஞ்சவாயுக்கடா மியக்கும் விடாமன் ஞானேந்திரியங்களை" எ. து. தத்தம் இயல்பின் நிற்பனவாகிய பிராணன் முதலிய பஞ்ச வாயுக்களும் ஞானேந்திரியங்க ளைந்தையும் விடாம லசைத்துக்கொண்டிருக்கும் எ. று.

ஏ அசை. இரண்டாமடியிலும் நான்காமடியிலும் னகரவெதுகை வந்தது மெல்லின வெதுகை பற்றியென்க. என்னை ? "வருக்க நெடிலினம் வந்தாலெதுகையு மோனையுமென் றுருக்கப்பெயரா னுரைக்கப்படு" மென்றிலக்கண மிருப்பதனு லென்க. நாகாதி புற வாயுக்க ளெனவே பிராணுதி யந்தர வாயுக்களெனவும், மேற்கூறும் வயிரம்பனுதிய அக வாயுக்களெனவுமாம். ஆகவே, புறம்பிலுள்ள கன்மேந்திரியங்களைச் சேட்டிப்பித்தலின் நாகாதியைப் புறவாயுக்களெனவும், இடையிலுள்ள ஞானேந்திரியங்களை யசைப்பித்தலின் பிராணுதியை யந்தர வாயுக்களெனவும், அகத்தினுள்ள அந்தக்கரணங்களை யசைப்பித்தலின் வயிரம்பனுதியை யகவாயுக்களெனவுங் கொள்க. (எசு)

(அ. கை.)

வைரம்பன் முதலிய பஞ்சவாயுக்களின் ரெழில்களும், பஞ்சபூதங்களின் ரெழில்களும், தர்மங்களும், அதிதேவதைகளும் இனையவென வுணர்த்துகின்றது.

சாற்றின்வயி ரம்பன்முக் கியன்பிரபஞ் சனனந்
தரியாமி யொடுமகாப் பிராணனெனும் பெயர்கொள்
காற்றிவைகள் சீவசம் பந்தமா யேயுட்
கரணங்க ளியக்கியிடு மண்முதலேந் திற்கும்
பாற்றிகழும் வியாபாரம் பொறைபிண்டி கரணம்
பாகமொடு விரகமிடங் கொடையாகுந் தருமம
மாற்றலுறு திண்மைநெகிழ் வழற்சிபரி வெளியா
மயனெடரி யரனீசன் சதாசிவன்றே வதைகள்.

(இ. ரை.) "சாற்றின் வயிரன்பன் முக்கியன்பிரபஞ்சன னந்தரியாமியொடு மகாப் பிராணனெனும் பெயர்கொள் காற்றிவைகள்" எ. து. சொல்லுமிடத்து வயிரம்பன், முக்கியன், பிரபஞ்சனன், அந்தரியாமி, மகாப்பிராணனென்னும் பெயர்களைக்கொண்ட இந்த வாயுக்கள், "சீவசம்பந்தமாயேயுட்கரணங்க ளியக்கியிடும்" எ. து. சீவனுடன் சம்பந்தப்பட்டு அந்தக் கரணங்களைந்தையும் இயக்கிவிக்கும். "மண்முத லேந்திற்கும் பாற்றிகழும் வியாபாரம் பொறை பிண்டி கரணம் பாகமொடு விரக மிடங்கொடையாகும்" எ. து. மண்முதலிய பஞ்சபூதத்திற்கும் அவ்வவற்றி னிடமாக நிகழுந் தொழில்கள் : பொறுத்தலும், பிண்டிகரித்தலும், அன்னபானுதிகளைப் பாகமாக்கலும், ஈரத்தை யுலர்த்தலும், சமஸ்தத்திற்கும் இடங்கொடுத்தலுமாம். "தரும மாற்றலுறு திண்மை நெகிழ்வழற்சி பரிவெளியா மயனெடரி யரனீசன் சதாசிவன்றேவதைகள்" எ. து. அவற்றின் றர்மங்கள் : மிகவும் வலியுள்ள கடினமும், நெகிழ்ச்சியும், வெப்பமும், பரிசமும், வெளியுமாம். இவற்றிற் கதிதேவதைகள் : பிரமனும், விஷ்ணுவும், உருத்திரனும், மகேசனும், சதாசிவனுமாம் எ. று.

மண்முதலைந்திற்கு கிரையே வியாபாரமும், தருமமும், தேவதைகளுந் தனித்தனி வந்தமை காண்க. பரிசம் பரியெனக் கடைக் குறை யாயிற்று. வயிரம்பனுதிய பஞ்சவாயுக்கள் ஜீவசம்பந்தமா யுட்கரணங்களை யியக்கியிடு மென்றது: உள்ளத்தை வயிரம்பனும், மனதை முக்கியனும், புத்தியைப் பிரபஞ்சனனும், சித்தத்தை யந்தரியாமியும், அகங்காரத்தை மகாப்பிராண னும் அசைப்பித்தலாம். மண்முதலைந்திற்கும் வியாபாரம், தருமம், தேவதை யென்றது: கிரலே மண்ணிற்குப் பொறுத்தலும், வன்மையும், அயனும்; நீரிற்குப் பிண்டிகரித்தலும், நெகிழ்ச்சியும், அரியும்; தீக்குப் பாகித்தலும், அழற்சியும், அரனும்; காற்றிற்கு உலர்த்தலும், பரிசித்தலும், மகேசனும்; விண்ணிற் கிடங்கொடுத்தலும் வெளியும் சதாசிவனுமாம். இவற்றி லுற்பத் திக்கிரமப்படி யுள்ளமுஞ்சேர்த்து அந்தக்கரண மைந்தெனக்கூறியது (எஎ)

(அ. கை.)

அப்பஞ்ச பூதங்களின் குணங்களுந் திரிபுடியின் இலக்கணங்களும் இவையெவன வுணர்த்துகின்றது.

கந்தமுத லாயினவே குணங்களவை தம்முட்
  ககனத்திற் கொலியொன்றே வளிக்கிரண்டே றுடனே
யந்தழலுக் கொளியொடுமூன் றறற்கிரத மொடுநான்
  கைந்துமண மொடுபுவிக்கென் றறிகதிரி புடிகண்
மூந்துஞா திருஞான ஞேயமா மிவற்றின்
  மூலவகங் காரஞ்சேர் சீவசை தன்னிய
நந்துஞா திருமனத்திற் கதுவறிவு ஞான
  நவின்றபவு திகவிடய ஞேயமென வறியே.

(இ. ரை.) "கந்தமுதலாயினவேகுணங்களவைதம்முள்" எ. து. கந்த முதலாகச் சொல்லப்பட்ட ஐந்துமே அப்பஞ்சபூதத்தின் குணங்களாம், அக்குணங்களுள், "ககனத்திற் கொலியொன்றே வளிக்கிரண் டேறுடனே யந்தழலுக் கொளியொடுமூன் றறற் கிரதமொடு நான்கைந்து மணமொடு புவிக் கென்றறிக" எ. து. ஆகாயத்திற் கொலியொன்றும், காற்றிற்குச் சத்த பரிச மிரண்டும், அழகிய அக்கினிக்குச் சத்த பரிச வொளி மூன்றும், தண்ணீருக்குச் சத்த பரிச வொளி ரசம் நான்கும், மண்ணிற்குச் சத்த பரிச வொளி ரச கந்தம் ஐந்துமென விசாரித்தறிதி. "திரிபுடிகண் மூந்து ஞா திரு ஞான ஞேயமா மிவற்றுள்" எ. து. திரிபுடிகளாவன: முதலிலுள்ள ஞாதிருவும் ஞானமும் ஞேயமுமாம். அவைகளில், "மூல வகங்காரஞ்சேர் சீவ சைதன்னிய நந்து ஞாதிரு மனத்திற் கதுவறிவு ஞானநவின்ற பவுதிக விடய ஞேயமென வறி" எ. து. மூல அகங்காரத்தோடு சம்பந்தித்த சீவ போதமே குன்றாத ஞாதாவும், அந்தக்கரண பிரதிபலன சைதன்னியமே ஞானமும், முன்னர்க் கூறிய பூத பவுதிக விடயமே ஞேயமுமாமென அறிதி எ. று.

ஏ அசை. சத்த பரிசாதிகளில் ஆகாயத்திற் கொன்றும், காற்றிற்கு இரண்டும், அக்கினிக்கு மூன்றும், சலத்திற்கு நான்கும், மண்ணிற்கு ஐந்துமென்றாயின. அறிவானும், அறிவும், அறிபடு பொருளுந் திரிபுடியெனக்கொள்க. பூதமும், அறிபடுபொருளாதலின் பவுதிகத்தோடு பூதத்தையும் வருவித்தாம். அறிபடுபொருளை விடயமென்றார். (எஅ)

(அ. கை.)

பூத முதற் பிரம மிறுவாயுள்ள இருபத் தொன்பது தத்துவங்களையும் இனையவென வுணர்த்துகின்றது.

ஈங்குமன மிருபத்து நான்காவ தாகு
மிருபத்தைந் தாவதுதான் மூலவகங் கார
மாங்கதனை யடைதலுறு சிதாபாச சீவ
னறையினிரு பத்தாறு மவன்மாயை மருவு
மோங்கொளியா மீசனிரு பத்தேழா மவனவ்
வுயிர்முதலாந் துரியனிரு பத்தெட்டா மவனு
நீங்கலரு மீசனதிட் டாத்திருவாம் பிரம
நிகழ்த்தினிரு பத்தொன்ப தாவதுவா மன்றே.

(இ. ரை.) "ஈங்குமன மிருபத்து நான்காவதாகு மிருபத்தைந்தாவது தான் மூலவகங்காரம்" எ. து. இவ்விடத்தில் மனமானது இருபத்துநான் காந் தத்துவமாம்; மூலவகங்காரமானது இருபத்தைந்தாவது தத்துவமாம்; "ஆங்கதனை யடைதலுறு சிதாபாச சீவ னறையினிருபத்தாறுமவன்" எ. து. அந்த மூல அகங்கார சம்பந்தமுள்ள சிதாபாச சீவனுனவன் சொல்லுமிடத் திருபத்தாறுவது தத்துவமாவன்; "மாயை மருவுமோங்கொளியா மீசனிரு பத்தேழாமவ னவ்வுயிர் முதலாந் துரிய னிருபத் தெட்டா மவனும்" எ. து. மாயாசம்பந்தமுள்ள மிக்கபிரகாசரூபமான ஈசன் இருபத்தேழாவது தத்துவ மாவன்; அந்த வுயிருக்கு அதிஷ்டானமா நின்றுள்ள கூடஸ்தன் இருபத் தெட்டாவது தத்துவமாவன்; "நீங்கலரு மீச னதிட் டாத்திருவாம் பிரம நிகழ்த்தினிருபத்தொன்பதாவதுவாம்" எ. து. நீங்கற்கரிய ஈசனுக்கு அதிட் டானமாநின்றுள்ள பிரமத்தைப்பற்றிச் சொல்லுமிடத்து இருபத்தொன்ப தாவது தத்துவமாம் எ. று.

அன்று ஏ அசைகள். மூலாங்காரத்தின் சத்துவத்திற் கரணம் நான்கும், ஞானேந்திரியம் ஐந்தும் ஆக வொன்பதும், இரஜசின் வாயுவைந்துங் கன்மேந்திரியமைந்தும் ஆகப் பத்தும், தமசின் பூதம் ஐந்தும் இவ்விருபத்தினன்கின் முதன்மையான மனமும் இவற்றைத்தானென் றபிமானித்திருக்கும் அகங்காரமும் அதற்காதாரமான சீவனும் அதற்கு வியாபகமான ஈசனும் இவ்விரண்டிற்கு அதிஷ்டானமான கூடஸ்தனும் பிரமமுமாக இருபத்தொன்பதுந் தத்துவமாமென்க.

வினா.—இங்ஙனமாயின் ஏனைய நூல்களிற் சத்துவத்திற்பத்தும், இராஜசிற் பத்தும், தமசிற்பதினொன்றும், இவைகட்குக் காரணமான அவித்தை, வித்தை, சீவன், ஈசன், பிரமம் ஐந்துமாக முப்பத்தாறெனக் கூறியதென்னை ?

விடை:—இந்நூலாசிரியர் சத்துவத்தி னுதித்த பத்தில் முன் னுதித்த ஞானமொன்றை யகங்காரத்தி லடக்கி யொன்பதெனவும், இராஜசி லுதித்த பத்தும் பத்தேயெனவும், தமசிலுதித்த பதினொன்றில் அஸ்தி, மாமிசம், சருமம், நரம்பு, உரோமம், மச்சை யென்கின்ற ஆறையும் இவற்றின் காரணமாய பஞ்சபூதத்தில் அடக்கியும், முன்னீக்கிய ஞானத்தை யகங்காரான் மாவெனச் சேர்த்தும், அவித்தை வித்தை யிரண்டையுஞ் சீவேசுவரரி லடக்கியும், பிரமத்தைக் கூடஸ்தரென விரித்தும் ஆக இருபத்தொன்பதெனக் கூறினரென்க.

வினா:—இந்நூலின் முற்கூறிய வாயுக்கள் பதினைந்தைப் பின்னைந்தாகக் கூட்டிய தென்னை ?

விடை:—நாகாதியென்ற புறவாயுக்களைந்தையும் பிராணாதி யைந்திலும், வயிரம்பணாதிய வாயு ஐந்தையுஞ் சீவனிலும் அடக்கியதாலென்க.

வினா:—அற்றேல், வயிரம்பணாதிய வாயுக்களைச் சீவனில் அடக்கியதென்னை ?

விடை:—இவ்வைந்தும் விராட்புருடனது பஞ்சவாயுக்களாதலிற் சீவசம்பந்தமா யிருந்ததென்க.

வினா:—அற்றேல், இத்தத்துவங்க ளடங்கியவிடத் துள்ள சீவனிடத்திருக்கின்ற தெங்ஙனம் ?

விடை:—இருபத்துநான்கு தத்துவங்க ளொடுங்கிய சுழுத்தி யவத்தையிற் பிராணன் அசைதல் அனுபவமிருத்தலினானும், பிராணனுமல்லவென்ற சசிவன்னபோதக் கவியினானும் இருக்கின்ற தெனக்காண்க.

வினா:—அங்ஙனமாயின் இச்சீவனிடத்து இவ்வாயு எங்ஙன மிருக்கின்றது

விடை:—சீவனுக்குச் சங்கற்பரூபமான அந்தக்கரணங்களை யசைப்பித்தலின் அவனது ஜீவசத்தியாயிருக்கின்றதென்க. இதனால் இப்பிராணன் அன்றென்பது தோன்ற மகாப்பிராணனென நாமம் வந்தது.

முற்கூறிய சீவர்கட்கு அவித்தையினீக்கமும் வித்தையினாக்கமு முண்டாகும் நிமித்தம் அதற்குச் சாதனமாகக் காலமுதற் பௌதிக மீறாய தத்துவங்க ளீசுரனது கிருபாதிருஷ்டியினால் அவாந்தரமாக வுண்டாயிற்றென்க.

(அ. கை.)

முன்னர்க்கூறிய சிருஷ்டிகள் இருவிதமாமென வுணர்த்துகின்றது.

தெரித்தகா ரியத்தோற்ற மிருவகையாங் கிரம
சிருட்டியுக பற்சிருட்டி யெனமூலப் பகுதி
விரித்தமக தத்வமக முந்தன்மாத் திரையும்
விளங்குசத்தப் பிரகிருதி யொடுபஞ்ச பூத
முரைத்தவற்றிற் பிரமாண்ட பிண்டமுத லாய
வுலகுதயந் தான்கிரம சிருட்டிநிறை கடலின்
மருத்துவசத் தலையாதி போற்சிவத்தின் மாயா
மயநாம வுருவநிகழ் வேயுகபற் சிருட்டி.

(இ. ரை.) "தெரித்தகாரியத்தோற்ற மிருவகையாங் கிரம சிருட்டி யுக பற்சிருட்டியென" எ.து. முன்னர்த்தெரிவித்த மாயாகாரியத்தோற்றங் கிரம சிருஷ்டி யுகபற் சிருட்டியென விருவகையா நிற்கும். "மூலப்பகுதி விரித்த மகதத்வ மகமுந் தன்மாத்திரையும் விளங்கு சத்தப் பிரகிருதி யொடு பஞ்ச பூதம்" எ.து. மூலப்பகுதியும், அதினின்று விரியப்பெற்ற மகதத்துவமும், அகங்காரதத்துவமும், பஞ்சதன்மாத்திரையும், விளங்குகின்ற சத்தப்பிரகி ருதியும், தூலபஞ்சபூதமும், "உரைத்தவற்றிற் பிரமாண்ட பிண்டமுதலாய வுலகுதயந்தான்கிரமசிருட்டி" எ.து. இங்ஙனங் கூறியவற்றினின்றெழுந்த பிரமாண்டமும், பிண்டமும் இவைபோல்வன பிறவுமாநின்றுள்ள வுலகத் தோற்றமே கிரமசிருட்டியெனவும், "நிறைகடலின் மருத்துவசத் தலையாதி போற் சிவத்தின் மாயாமயநாம வுருவநிகழ்வே யுகபற்சிருட்டி" எ.து.பெரிய கடலின்கண் காற்று வசத்தா லெழும் அலை முதலியவைக ளெங்ஙனமோ, அங்ஙனமே சிவத்தின்கண் மாயைகாரணமாக வெழு மதின்மயமாநின்றுள்ள நாமரூபப் பிரபஞ்ச வொருங்கெழுச்சியே யுகபற்சிருட்டியெனவும் பெயர் பெறும் எ. று.

தெரித்த விரித்த வென்பன பிறவினைகள். காரியத்தோற்ற மென்பத னாற் சகத்தை வருவித்தாம். பிரமாண்ட மென்பது பஞ்ச பூதாகாரமாய உலகமுதலிய யாவுஞ் சேர்ந்தொன்றாயிருக்கும் அண்டமனைத்துங் கூடியது. பிண்டமென்பதுஅவற்றிற் சஞ்சரிக்கப்பட்ட பஞ்சபூதகாரியமான பௌதிக வடிவமான தேகங்களாம். பிரமாண்டத்தைப் புவன போகமெனவும், பிண் டத்தைத் தனுகரணமெனவுங் கொள்க. அவற்றை யண்டத்தினுள்ள வுலக பேதங்களைப் பிண்டித்த பொருளென்பாரு முளர். அங்ஙனங் கூறுதல் சீவர் கட்குத் தேகாதி தத்துவந் தோன்றினமையானும் அவர்க்கே பிரதானமா யிச்சிருட்டி வந்தமையானுங் குற்றமாமென்க. பிரகிருதிமுதற் பிருதிவி பரி யந்தம் ஒன்றின்பின் னொன்றடைவாக வுதித்தல் கிரமசிருஷ்டியும் ஒருங்கே யுதித்த லுகபற் சிருஷ்டியுமாமென்க. (அ0)

(அ. கை.)

நிர்விகாரமான பிரமத்தில் விகாரமாநின்றுள்ள சகமாதிமூன்றும் எங் ஙனந் தோற்றினவெனற்கு உத்தரங் கூறுகின்றது.

சுருதிசித்த மாதலினு லிவையுடன்பா டாகுந்
தூயபரப் பிரமமாம் விகாரமிலா விறையாற்
றருதலெங்ஙன் காரியங்கள் சடப்பகுதி யென்னிற்
றாளிலாக் கதிர்ச்சிலேயி லிச்சையிலா தெழுந்த
பரிதியினு லழல்வரல்போற் பரசிவனுன் மூலப்
பகுதியிடை மகதாதி காரியங்கள் வரற்குக்
கருதின்முரா ணிலையாகு மெனப்புகல்வ ரறிஞர்
காரியங்க டோற்றுதனுல் வகையவையீண் டுரைப்பாம்.

(இ. ரை.) "சுருதி சித்த மாதலினு லிவை யுடன்பா டாகும்" எ து. வேதசம்மதமாதலால் இவ்விருவகை சிருட்டியும் எமக்கு முடன்பாடாகும். "தூயபரப்பிரமமாம் விகாரமிலா விறையாற் றருத லெங்ஙன் காரியங்கள் சடப்பகுதி யென்னில்" எ. து. பரிசுத்த பிரமமெனப்படும் நிர்விகார சிவத்தினுல் மாயாகாரியங்களாயுஞ் சடரூபமாகவும்நின்றுள்ள சகமாதி மூன்று பிரிவுக ளெங்ஙனந் தரப்பட்டன வென்னில், "தாளிலாக் கதிர்ச் சிலேயி லிச்சையிலா தெழுந்த பரிதியினு லழல்வரல்போற் பரசிவனுன் மூலப்பகுதியிடை" எ. து. புடைபெயர்ச்சி யின்றிய சூரியகாந்தக் கல்லில் இச்சா எத்தனமின்றி யுதித்த பூதசூரியனுல் அக்கினி சனிக்குமாறுபோன்று, பரமசிவனுல் மூலப்பகுதியினிடத்தில், "மகதாதி காரியங்கள் வரற்குக் கருதின் முரணிலேயாகுமெனப் புகல்வரறிஞர்" எ. து. மகதத்துவமுத லுல கீருய காரியங்கள் சனித்தற்கு யோசிக்குமிடத்து யாதொருதடையு மில்லேயாமென்று சத்துக்கள் கூறுநிற்பர். "காரியங்கடோற்றுதனுல் வகையவை யீண் டுரைப்பாம்" எ. து. மாயாகாரியங்கள் தோற்றுதல் நான்கு வகைப்படும்; அவற்றை யிங்கே யெடுத்துரைக்குதும் எ. று.

சுத்த மாயையிற்றேன்றும் ஈசனுக்குச் சூரியனேயும், மூலப்பகுதிக்குச் சூரியகாந்தக் கண்ணுடியையும், சகத்திற் கழலேயும் உவமித்ததென்க. (அக)

(அ. கை.)

இங்ஙனமாய சிருட்டி நன்குவிளங்குமாறு நான்குவகை திருஷ்டாந்தங்கள் இனேயவென வுணர்த்துகின்றது.

விருத்திபரி ணுமமா ரம்பம்விவர்த் தகமாம்
விரிந்தபடங் குடிபாவம் பாறயிரா கார
முரைத்தனுறு தந்துபட நியாயம்வன் பழுதை
யுரகவுரு முறையவற்றின் றிட்டாந்த மாகும்
வருத்துகபி றரவங்கந் திருவநகர் குற்றி
மகன்கனவிந் திரசாலஞ் சுத்திகா ரசிதந்
தெரித்தவிவை முதலனவாந் திரிதலின்மெய்ப் பொருளிற்
றிரிந்திடுபொய்ப் பொருளதுகற் பிதமாதற் குவமை.

(இ. ரை.) "விருத்தி பரிணாம மாரம்பம் விவர்த்தகமாம்" எ. து. விருத்தி, பரிணாமம், ஆரம்பம், விவர்த்தகமென நான்காம். "விரிந்தபடங் குடிபாவம் பாறயிராகாரமு ரைத்தலுறு தந்துபட நியாயம் வன்பழுதை யுரகவுரு முறையவற்றின் றிட்டாந்தமாகும்" எ. து. விரிந்தவஸ்திரமே வீடுருவமாநிற்றலும், பாலே தயிர்வடிவாநிற்றலும், சொல்லுகின்ற நூலே வஸ்திரரூபமாநிற்கு ஞாயமும், வலிய பழுதையே பாம்புருவா நிற்றலுமாகிய இவையே யவற்றின் திட்டாந்தமுறைகளாம். "வருத்துகயிறரவங் கந்திருவநகர் குற்றி மகன் கனவிந்திரசாலஞ் சுத்திகா ரசிதந் தெரித்தவிவை முதலனவாம்" எ. து. நடுங்கவிக்கும் ரச்சுசர்ப்பமும், கந்தர்வநகரமும், கட்டையிற்கள்ளனும், சொப்பனமும், இந்திரசாலமும், கிளிஞ்சலில் வெள்ளியுமாகத் தெரிவித்த விவைமுதலியவைகளாம். "திரிதலில் மெய்ப்பொருளிற் றிரிந்திடுபொய்ப் பொருளதுகற் பிதமாதற் குவமை" எ. து. மாறுதென்றுமொருதகைத்தா நின்றுள்ள மெய்ப்பொருளாகிய பிரமத்தி லதுவே மாறுகத்திரிந்துள்ள பொய்யாகிய சகத்து கற்பிதமெனத் தெரிவித்தற்குக் கூறிய வுவமைகள் எ. று.

இவ்விருத்தியாதி நான்குபேதமும் பிரமத்திற் சகமுண்டாகும் பேதங்களுக்குத் திட்டாந்தமெனக் காண்க. முறையென்றதனால் விருத்தி படம் வீடாதலும், பரிணாமம் பால் தயிராதலும், ஆரம்பம் தந்து படமாதலும் விவர்த்தகம் ரச்சு சர்ப்பமாதலுமாம். வருத்துமென்றது பிராந்தியினாற் பயகம்பனதியுண்டாதல். திட்டாந்தம் உவமை ஒருபொருட் கிளவி. (அஉ)

(அ. கை.)

உண்மையான பிரமத்தில் இன்மையான சக சீவ பரந் தோற்றுமாயின் அந்தப்பிராந்தி யாருக்கு வருமென்ற வினாவிற்கு விடை யினையதென வுணர்த்துகின்றது.

பொய்ப்பொருள்கற் பிதமாயிற் றவிகாரி யாகப்
பொருந்துமுயி ரிடத்தெனின்முன் பிராந்தியார்க் கென்
லொப்பில்சதி பதிரதிமா லுருவச்சொற் பனந்தா [னி
னொருமுனிவன் பாலுதிப்பி னதனாலங் கவனுக்
கெப்பழுது மிலாததுபோற் சான்று[illegible]ன் மாவி
லிலங்குகுண வுருவமாம் பகுதியினான் மருளு
மெய்ப்பரிய ஞாதிருவும் பிராந்திஞா னமும்பொய்
விடயமே யமும்வரினு மவற்கிடையூ றிலையே

(இ. ரை.) "பொய்ப்பொருள் கற்பிதமாயிற் றவிகாரி யாகப் பொருந்துமுயிரிடத் தெனின்முன் பிராந்தியார்க் கென்னில்" எ. து. பிருதிவி முத லாதத்துவமிறுவாக்கிடந்த பொய்ப்பொருளாகிய தத்துவங்க ளென்றும் நிர்விகாரியாக விளங்கிக்கொண்டிருக்கும் ஆன்மாவினிடத் தெங்ஙனங்

கற்பிதமாகவுதித்த தெனின், முற்கூறிய பிராந்தியானது யாருக்கென வினு வரும். அங்ஙனம்வரின், "ஒப்பில் சதி பதி ரதிமா லுருவச்சொற்பனந்தா னொருமுனிவன் பாலுதிப்பி னதனலங் கவனுக் கெப்பழுது மிலாதது போற் சான்ருமான்மாவி லிலங்குகுண வுருவமாம் பகுதியினல் மருளும்" எ. து. நிகரில்லாத கற்புடைத் தலைவியுந் தலைவனுங்கூடி யநுபவிக்கும் ரதிகாங்கிசை யென்னு முருவமாக வோர்சொப்பனமான தோர்யோகீசுவர னிடத்தி லுதிக்குமாயின் அச்சொப்பனத்தால் அங்ஙனமாக நின்றுள்ள வந்தயோகீசுவரனுக்கு யாதோர்கலக்கமு மில்லாதமையுமாறு போன்று, என்றுஞ் சாட்சியாநின்றுள்ள ஆன்மாவினிடத்தில் விளங்காநின்ற குண ரூபமாநின்றுள்ள மூலப்பிரகிருதியினல் மருளத்தக்க, "மெய்ப்பரியஞாதிரு வும் பிராந்திஞானமும் பொய்விடய ஞேயமும் வரினு மவற்கிடையூறிலை" எ. து. மெய்மையிழந்த ஞாதாவும், பிராந்திஞானமும், மித்தியாவிஷய மான ஞேயமுந் தானேவரும். வரினும், அந்த ஆன்மாவாகிற புருஷனுக்குக் கலக்கஞ் சற்றுமில்லை எ. று.

ஏ. அசை. யோகீசுவரனுக்குத் தன்பா லெழுந்த மோகசொப்பனத் தாற் சற்றுங் கலக்க மில்லாவாறுபோன்று ஐயந்திரிபின்றி விளங்கும் ஆன் மாவுக்குத் தன்பாலெழுந்த பிராந்தி திரிபுடியாற் சற்றுங் கலக்க மில்லை யென்பது கருத்து. யகர வெதுகை யிரண்டும் ஆசெதுகை. இலாதது போல் இலையென முடிக்க. சகசநிஷ்டையையுடைய யோகிக்கு இச்சாக்கி ரத்திற் பிராரத்தவசமா யெவ்வித அனுபவம் வந்தாலும் அவற்றைத் தனது பிரமாநந்தமாய் அனுபவித்தலின் இவ்வுவமானங் கூறியதென்க. ஆயின வென்னும் பன்மை ஆயிற்றெனல் பன்மை மயக்கம். உயிர் அவிகாரியென் றதனுற் கூடஸ்தனும். ஆகவே, அஃதே பிரமமென்பதாயிற்று. முனிவன் போல ஆத்மா, கனவைப்போலச் சங்கற்பம், சதிகேளி மயக்கம்போலத் திரிபுடிகள். (அரு)

(அ. கை.)

சீவர்கள் மறைப்பை நீங்குவான்வேண்டி யுண்டாய சகசிருட்டியிற் சீவகற்பிதம் இனையவென வுணர்த்துகின்றது.

இறைவனற் ருேன்றியமா யாமயமா முலக
மிருந்தபடி யிருக்குந்தன் வடிவினு லதனுண்
மறைவிலாச் சீவபுத்தி விருத்திகற் பிதமா
மற்ருெருபோக் கியவடிவ மேவிருப்பு விடயம்
வெறுவிதாம் வெறுப்புவிட யத்தினெடு நொதுமல்
விடயமெனத் திரிவிதமா மவையாவை யென்னின்
முறையின்வனி தாதிபுலி யெழுவாய்வீழ் துரும்பு
முதலனவா மெனமொழிவர் முற்றுமுணர்ந் துடையோர்.

(இ. ரை.) "இறைவனாற் றோன்றியமா யாமயமா முலக மிருந்தபடி யிருக்குந்தன் வடிவினு லதனுள்" எ. து. பரமசிவனாற் கற்பிதமாகச் சனித்த மாயாமயமா நின்றுள்ள வுலகந் தனது கற்பிதவடிவினால் முன்னிருந்தவா றெங்ஙனமோ, அங்ஙன மிருந்தபடியிருக்கும்; அங்ஙனமாய உலகத்தினுள், "மறைவிலாச் சீவபுத்தி விருத்திகற்பிதமா மற்றொருபோக்கியவடிவ மேவிருப்பு விடயம் வெறுவிதாம் வெறுப்புவிட யத்தினொடு நொதுமல் விடயமெனத் திரிவிதமாம்" எ. து. மறைவுக் குடன்படாத சீவனது புத்தி விருத்தியிற் கற்பிதமாகவெழுந்த வேறொருபோக்கிய வடிவமே பிரியவிஷயமும், அதற்கு மாறாய வெறுப்புவிடயமும், உபேட்சாவிடயமுமெனத் திரிவிதமாநிற்கும். "அவை யாவையென்னின் முறையின் வனிதாதி புலியெழுவாய் வீழ்துரும்புமுதலனவாமென மொழிவர் முற்றுமுணர்ந் துடையோர்" எ. து. அந்தத் திரிவிதமானவை யாவையெனின், முன்னிறுத்த முறையே பொன்முதலியனவும், புலிமுதலியனவும், வீழ்கின்ற துரும்பு முதலியனவுமாமென முற்றுமுணர்ந்த சத்துக்கள் சொல்லுவர் எ. று.

நொ துன்பப்படு, து உண் என்பன புணர்ந்து நொதுமலென்றாயது. ()

(அ. கை.)

ஈசுவர சிருஷ்டியி னொருமையுஞ் சீவசிருஷ்டியின் பன்மையும் இனைய வென வுவமானபூர்வகமாக வுணர்த்துகின்றது.

ஈசனிரு மிதமான வேகாகா ரமும்பி
னெய்துமுயிர் கற்பிதமாம் பலவாகா ரமுமோர்
தேசவிட யத்துறுதற் கெவ்வாறிங் கென்னிற்
றிட்டாந்த மீசனிரு மிதமணியா திகடாம்
பேசிலொரு தகையாய்ப்போத் திருபுத்தி தன்கற்
பிதநாலு விதத்தினு லவைதமைப்பெற் றோனுக்
காசைவிட யமதாகிப் பெறாற்குவெறுப் பாகி
யரியதுற விக்குபேட் சாவிடய மாமே.

(இ.ரை.) "ஈசனிருமிதமான வேகாகா ரமும்பி னெய்துமுயிர் கற்பிதமாம் பலவாகாரமு மோர்தேசவிடயத்துறுதற் கெவ்வாறிங் கென்னில்" எ. து. ஈசுவரசிருஷ்டியான ஏகாகாரமும், அதின்பின்ன ருயிர் கற்பிதமாக எய்திய நாலுவித போகாகாரமும் ஓர்தேசவிடயத்தில் அடைதற் கேதிங் கெவ்வாறென்னில், "திட்டாந்த மீசனிரு மிதமணியாதிகடாம் பேசிலொருதகையாய்" எ. து. இதுபற்றிக்கூறுந் திட்டாந்தமாவது: ஈசுவர கற்பிதமாயுள்ள இரத்தின முதலியவைகள் பேசுங்கா லொரேபிரகாரமாயும், "போத்திருபுத்திதன் கற்பித நாலுவிதத்தினு லவைதமைப் பெற்றோனுக் காசைவிட யமதாகி" எ. து. சீவனது புத்தி விகற்பங்கள் பலவாறாச் சிதைந்து நிற்குங் காரணத்தால் அந்த இரத்தினாதிகளை யடைந்தவனுக்கும் பிரிய வஸ்துக்களாயும், "பெறாற்கு வெறுப்பாகி யரியதுறவிக் குபேட்சா விடய

மாம்'' எ. து. ஞானங் காரணத்தாலவை யடையப் பெறுதோனுக் கவை யப்பிரியவஸ்துவாயும், மிக்க நிஷ்காமியம் வாய்த்தோனுக் கிவை யிருதகை யதாயுநிற்கும் எ. று.

தாம் ஏ அசைகள். மணியாதிகள், ஒருதசையாய், ஆசை விடயமதாகி, வெறுப்பாகி உபேட்சாவிடயமாகி நிற்குமென முடிக்க. விடயமெனலை வெறுப்பாகியெனற்குங் கூட்டுக. மணியாதியவை ஈசுவர சிருட்டியென வும், இவற்றில் எய்திய விருப்பு வெறுப்பு உபேட்சையாகிய மூன்றுஞ் சீவ சிருட்டியெனவுங் கொள்க. (அரு)

(அ. கை)

இன்னும் இவ்விருவகை சிருஷ்டிகள் இங்ஙனமாகவும் நிற்குமெனலை யுணர்த்துகின்றது.

அப்பொருடா னேவிளங்கித் தோன்றுறுதற் கின்னு
மறைதுமோர் திட்டாந்தந் தோன்றியவோர்மாது
மெய்ப்பரிசோர் திறமாகப் போத்திருக்கள் புத்தி
விருத்திகற் பிதத்தினாற் றாதைக்கு மகளாய்த்
தப்பில்கொழு நற்குக்கா தலியாகி மகற்குத்
தாயாகி மாதுலற்கு மருகியா யிருப்ப
ளிப்பரிசு விடயமெலா மிறைவனிரு மிதமு
மிலங்குயிர்கற் பிதமுமென விருதிறத்துற் றிடுமே.

(இ. ரை.) ''அப்பொருடானேவிளங்கித் தோன்றுறுதற் கின்னு மறைதுமோர் திட்டாந்தம்'' எ. து. அந்த ஈசுவரசிருட்டிகளி லொன்றே யெவர்க்கும் விளக்கமாகத் தோன்றும்வண்ணம் இன்னும் ஓர் திஷ்டாந்தங் கூறுதும். ''தோன்றியவோர்மாது மெய்ப் பரிசோர் திறமாகப் போத்திருக்கள் புத்திவிருத்திகற்பிதத்தினால்'' எ. து. ஈசுவரசிருஷ்டி காரணமாக வுதித்த வொருஸ்திரீ, தனது தேகத்தன்மை யொரேபிரகாரமாக விருக்க, சீவர்க ளின் பேதபுத்தி விகற்பத்தால், ''தாதைக்கு மகளாய்த் தப்பில் கொழுநற் குக் காதலியாகி மகற்குத் தாயாகி மாதுலற்கு மருகியா யிருப்பள்'' எ. து. தனது தந்தைக்கு மகளாயும், குற்றமற்ற தனது நாயகனுக்கு மனைவியா யும், தன்மகனுக்குத் தாயாயும், தன்மாமனுக்கு மருமகளாயும் இருப்பள். ''இப்பரிசு விடயமெலா மிறைவனிரு மிதமு மிலங்குயிர்கற் பிதமுமென விருதிறத்துற்றிடும்'' எ. து. இவ்வாறே சகல விடயங்களு மீஸ்வரசிருஷ்டி யென்றும், இலங்காநின்ற சீவசிருஷ்டியென்று மிருதிறத்ததாக நிற்கும் எ. று.

ஏ அசை. மாது, மகளாய், காதலியாகி, தாயாகி, மருகியாய் இருப்ப ளெனமுடிக்க. இதனைமறுக்க யெவர்மதமேனு மென்செய்யும். பெண்வடி வம், ஈஸ்வரசிருட்டி யெனவும்; புத்திரியாதிய பேதவிகற்பங்க ளவ்வடி

வுக்கு வந்தது சிவசிருட்டியெனவுங் கோடற்கு மாறென்னை ? இன்றுமை யால் மறுக்கற்க. மறுப்பார் தம்மை யாயாதார். அவர்கள் மதஸ்தரெனற்கு ஐய மென்னை ? இன்றுமையாற் றம்முள் முரணுவர். மெய்ப்பரிசென்பதில் யகரம் ஆசெதுகை. )அசு)

(அ. கை.)

இது காறும் இருவகைச் சிருட்டிகளையுங் கூறி யினி சாஸ்திரம் இனை யவென வுணர்த்துகின்றது.

அண்ணனிரு மிதபிரபஞ் சந்தான்வா திப்ப
தல்லாமை யானுநூ லாசிரிய நெறியால்
நண்ணலறு மூத்திசா தனமாகுந் தன்ற
னழுவவொண்ணு மையினானு மனையதுதா னிற்க்
வெண்ணரிய சீவகற் பிதமாய வவைதா
மிருபிரபஞ் சங்கள்சாத் திரத்தொடசாத் திரமாங்
கண்ணுமசாத் திரப்பிரபஞ் சத்திறனு மிரண்டாங்
கழறிற்றீ விரமந்த மெனவவையீண் டுரைப்பாம்.

(இ. ரை.) "அண்ணனிருமித பிரபஞ்சந்தான் வாதிப்ப தல்லாமை யானு நூலாசிரிய நெறியா னண்ணலரு முத்திசா தனமாகுந் தன்ற னழுவ வொண்ணு மையினானு மனையதுதா னிற்க" எ. து ஈசுவரசிருஷ்டியாகிய பிரபஞ்சமெனப்படுவது உயிர்களை வருத்தற்பாலதன்றுமையானும், சுவா னு பவ நெறித்தாலன்றிச் சுருதி குரு நெறித்தால் அடைதற்கரிய முத்திக்குச் சாதனமாக நிற்குந் திறத்தானும், உலகந் திரிசியமாதலின் எவரும் இதனைக் கடக்க வொண்ணுமையினானும் அந்தக் காரியம் இருக்கட்டும். "எண்ணரிய ஜீவகற் பிதமாய வவைதா மிருபிரபஞ்சங்கள் சாத் திரத்தொ டசாத் திர மாம்" எ. து. எண்ணி யளவிடுதற்கரிய சீவகற்பித மெனப்படுபவை : சாத் திரப் பிரபஞ்சம், அசாஸ்திரப் பிரபஞ்சமென விருகூறு டையனவா நிற்கும். "கண்ணுமசாத்திரப் பிரபஞ்சத்திறனு மிரண்டாங் கழறிற்றீவிரமந்தமென வவையீண் டுரைப்பாம்" எ. து. வருத்தற்கிடமாய அசாஸ்திரப் பிரபஞ்ச மென்பது : சொல்லுமிடத்துத் தீவிரமெனவும், மந்தமெனவும் இருகூறதா நிற்கும். இனி யவற்றை ஈண்டுரைக்குதும் எ. று.

உயிர்கள் அவாவாவிடத்துச் சுகதுக்கங்களில் வதைத்தல் செய்யாமை யும், தான் அசத்து, சடம் துக்கமெனவும், தனக்கு வெதிருத்தமான சச்சிதா னந்தப் பொருளிருக்கின்றதெனவும் காட்டி, தன்னைவிட்டு அதனை நாடற் குத் தான் சாதனக் கருவியா நிற்றலும் இயற்கையாகத் தன்பாலுடைமை யின் உலகை யிங்ஙனங் கூறினரென்க. (அ௭)

(அ. கை.)

இவ்விருவகையின் இலக்கணம் இனையவென வுணர்த்துகின்றது.

சீவபர விசாரணையே யுரைத்தலரி தாஞ்சாத்
திரப்பிரபஞ் சங்காமா திகளேதீ விரமுங்
காவலுறு சாதிகரு மாதிகமொ டேதான்
கருதுமனக் கற்பிதமே மந்தமசாத் திரத்தின்
மேவுறுமிவ் விருதிறமு மாருயிர்மெய்க் காட்சி
விரோதிகளா தலின்ஞானம் பயிறற்கு முன்ன
ரோவுவசாத் திரப்பிரபஞ் சந்தான்மெய்ஞ் ஞான
வுதவியா யான்மகாட் சியின்பின்விடு வதுவாம்.

(இ. ரை.) "சீவபர விசாரணையே யுரைத்த லரிதாஞ் சாத்திரப் பிரபஞ்சம்" எ. து. சீவேசரதிலக்கணங்களை விசாரித்துக்கொண்டிருத்தலே தனக்கு வசனமாக நிற்றல் சாஸ்திரப் பிரபஞ்சமெனப்படும்; "காமாதிகளே தீவிரமுங் காவலுறுசாதி கருமாதிகமொடேதான் கருதுமனக் கற்பிதமே மந்த மசாத்திரத்தின் மேவுறு மிவ்விருதிறமும்" எ. து. காமக்குரோதாதிகள் வயத்தில் நிற்பதே தீவிரப் பிரபஞ்சமும், விதிக் கடங்கிய வருணாசிரம தன்மமுதலியவற்றோடு தாமுடன்பட்டுச் சங்கற்பிக்கும் மனக்கற்பிதமே மந்தப் பிரபஞ்சமுமாதலி னிவ்விருதிறத்தையே கூறப்படுவது அசாத்திரப் பிரபஞ்சமெனப்படும். "ஆருயிர்மெய்க் காட்சி விரோதிக ளாதலின் ஞானம் பயிறற்கு முன்னரோவுவ" எ. து. தீவிரம் மந்தம் என்னும் இவ்விரண்டும் ஆத்ம தரிசனத்திற்கு விரோதமா யிருத்தலின், ஞானாப்பியாசஞ் செய்தற்கு முன்னரே நீக்கற்பாலனவாம். "சாத்திரப் பிரபஞ்சந்தான் மெய்ஞ்ஞான வுதவியா யான்மகாட்சியின்பின் விடுவெதுவாம்" எ. து. சாஸ்திரப் பிரபஞ்ச மெனப்படுவது உண்மைஞானம் வாய்க்குமளவும் உதவியாக நின்று ஆத்ம தரிசனம் வாய்த்தபின்னர் நீங்கற்பாலதாம் எ. று.

எனவே, சாஸ்திரப் பிரபஞ்சமே முக்கியமெனப் பெற்றாம். மந்த மென்பதிலும்மை யெஞ்சியது. சாத்திரம் தானாய் விளங்கும் யதார்த்தமாகிய ஆத்ம லாபமான பேரின்பத்தையடையும் உத்தியாதிய கூறல்; அசாத்திரம் புறம்பாயுள்ள கற்பிதமாகிய அநாத்ம லாபமான சிற்றின்பத்தை யடையும் உத்தியாதியகூறல்; தீவிரமென்றது வனிதாதிபோக சம்பத்தின்மேற் காமிப்பது; மந்தமென்றது வருணாச்சிரம தர்மப்படி சொர்க்காபேக்ஷையாற் செய்யுங் கருமம். தானாகிய பிரமத்தில் அத்தியாசமாகத் தோற்றிய மூலாஞ் ஞானத்தினாற் றோன்றாத தன்னை யதார்த்தமாகத் தரிசிக்கு நிமித்தஞ் சீவர்களுடைய அவித்தியாநாசத்தின் பொருட்டு ஈசுரானுக்கிரகத்தினாலுண்டான சரீரத்தினின்றும் இச் சநந மரணப் பிரவாக ரூபத்திற்கேதுவான காமாதிகளாகிய தீவிரத்தை நீக்கி மேற்செய்யுங் கர்மங்களின் மனுஷாநந்தமாதிய சுகங்களை யனுபவிக்கும் பதப்பிராப்திகட் கேதுவாகுங் கர்மரூபமான மந்தத்தை நீக்கி, மேல் நிஷ்காமமான சற்கிருத்தியங்களினாற் சித்த சுத்தியும் அதனாற் சாதன சதுஷ்டயமும் ஒண்டாதலின், தீவிர மந்தங்களை

யுடைய அசாத்திரப் பிரபஞ்சம் ஞானம் பயிறற்கு முன்னம் ஒவுவவெனவும், இச்சாதனத்திறற் பரமாத்ம விசாரம் பிறந்ததஞன் மனனமும் அதனுல் நிதித்தியாசனமும் அதனுற் சமாதியுங் கூடினவிடத்தில் அங்ஙனம் விசாரித்த விசாரம் நீங்கலிற் சாத்திரப் பிரபஞ்சம் மெய்ஞ்ஞான வுதவியாய் ஆன்ம காட்சியின்பின் விடுவவெனவுங் கூறினர். இவ்விரண்டும் விடுவதாயினும் அசாத்திரம் ஆன்ம லாபத்தைக் கொடாமலுஞ் சாத்திரம் அதைக் கொடுத்தும் நீங்கு மாதலின், இச்சாத்திரப் பிரபஞ்சம் முமூட்சுக்கள் முக்கியமாக விரும்பத்தக்கதாயிற்று.

வினு :—ஆத்மதரிசனத்துக்கு விரோதமான தீவிரம் மந்தம் இரண்டையுமுடைய அசாத்திரப் பிரபஞ்சத்தை விடத்தக்கதுதான்; ஏனைய ஒன்றையெற்றினுக்கு விடத்தக்கது?

விடை :—பரமாத்ம விசாரணையால் ஆத்ம சரினமாயினும் அதற்கதிஷ்டானமான கூடஸ்த பிரமாயிக்கியத்தில் இவ்விரு தன்மையும் நீங்குமிடத்து அதை விசாரிக்குஞ் சாத்திரப் பிரபஞ்சம் நீங்குதலாலெலன்க. (அஅ)

(அ. கை.)

சீவனுக்கு மூன்றுபாதியும், எட்டத்தியாசமும், ஐந்தவத்தையுங் கூறுவான் வேண்டி, இக்கவியில் மூன்று பாதிகளின் நாமங்களும், அவற்றிலொன்றின் இலக்கணமும் உணர்த்துகின்றது.

தீவிரமந் தங்களுயிர் காட்சியுற்ற பின்னுந்
　　திகழ்முத்தி பெறற்பொருட்டு விடுவனவென் றறிக
பாவமுறு மவிச்சின்னோ பாதிபதி விம்போ
　　பாதியுட னத்தியா சோபாதி யெனவே
மேவுமுபா திகளொருமூன் றுளவவற்றை முறையே
　　விளம்பியிடிற் சுழுத்தியுரு வாமவித்தை தானே
யாவரண வவிச்சின்னோ பாதியாம் பிரத்தி
　　கான்மாவிற் கதனதுகா ரியமாம்புத் தியினில்.

(இ. ரை.) "தீவிரமந் தங்களுயிர் காட்சியுற்றபின்னுந் திகழ்முத்தி பெறற்பொருட்டு விடுவனவென் றறிக" எ. து. தீவிரமும் மந்தமுமாகிய இவ்விரண்டையும் ஆத்ம தரிசனம் வாய்த்த பின்னும் விளங்காநின்ற ஐக்கிய முத்தியடைதற்கு விடத்தகுவனவாமென் றறிக. "பாவமுறு மவிச்சின்னோ பாதிபதி விம்போ பாதியுட னத்தியாசோபாதி யெனவே மேவுமுபாதிகளொரு மூன்றுள" எ. து. பாவித்தற்கியைந்த அவிச்சின்னோபாதி, பதிவிம்போபாதி, அத்தியாசோபாதி என் றேற்றற்கியைந்த உபாதிகள் மூன்றுள்ளனவாம். அவற்றை முறையே விளம்பியிடிற் சுழுத்தியுருவாமவித்தைதானே யாவரண வவிச்சின்னோபாதியாம் பிரத்திகான்மாவிற் கதனது காரியமாம் புத்தியினில்" எ. து. அவற்றைக் கிரமமாகச் சொல்லுமிடத்துச் சுழுத்திவடிவமா நின்றுள்ள வவித்தையே யாவரணமெனப்படு மவிச்

சின்னோபாதியாம். பிரத்தியகாத்மாவிற் கதனது காரியமா நின்றுள்ள புத்தியின்கண் எ. று.

தான் ஏ அசைகள். அவிச்சின்ன உபாதி அவிச்சின்னோபாதியெனவும், பதிவிம்ப உபாதி பதிவிம்போபாதியெனவும், அத்தியாச உபாதி அத்தியாசோபாதி யெனவும், நிலைமொழியீற்று அரமும், வடமொழி முதலின் உகர முங் கெட்டுக் கமலபத்திரோதகம்போல ஓகாரமாதல் வடநூல் விதிப்படி குணசந்தியாமென்க.

வினு:—ஞானப்பியாசத்துக்குமுன் அசாத்திரப் பிரபஞ்சமும், ஆத்ம தரிசனத்திற்குப் பின் சாத்திரப் பிரபஞ்சமும், முத்தியின்கண் இவ்வுபயப் பிரபஞ்சமும் விடுமென்றதில் ஞானப்பியாசத்திற்கு முன்னே யசாத்திரப் பிரபஞ்சத்தை விடவேண்டுமென்றது அதுபகையாதலின் விடத்தக்கது தான். ஆத்ம தரிசனத்திற்குப் பின் சாத்திரப் பிரபஞ்சத்தின் லட்சியார்த்தம் வெளிப்படுதலின் அதன் வாச்சியார்த்தந் தானே விடத்தக்கதுதான். இவ்வுபயமும் முத்திபெறற்பொருட்டு விடவேண்டுமாயின், ஆத்ம தரிசனம் வேறு, முத்தி வேறோ? (அகூ)

விடை:—ஆத்ம தரிசனஞ் சீவன் முத்தியெனவும், நிகழ்முத்தி யென்பது விதேக முத்தியெனவும் இச்சீவன் முத்தியே விதேகமுத்தியா மெனவுங் கொள்க.

(அ. கை.)

ஏனைய இரண்டுபாதிகளின் இலக்கணமும், நான்கத்தியாசங்களின் நாமங்களும் இனையவென வுணர்த்துகின்றது.

பற்றியவான் மாபதிவிம் பித்திடுத ளூனே
பதிவிம்போ பாதியாம் புத்திகத மாய
முற்றுசுக துக்கங்க ளுயிர்நுகர்தல் போல
முயலுதலே யத்தியா சோபாதி யாகு
முற்றவத்தி யாசவிலக் கணமதுவே றொன்றை
யொன்றாகக் கருதலிப்பி வெள்ளியது போல
மற்றதுநால் வகைப்படுமா மித்தையுட னிதர
மற்றிதரே தரஞ்சத்தி யங்களினு லன்றே.

(இ. ள.) "பற்றியவான் மாபதிவிம் பித்திடுத ளூனே பதிவிம்போ பாதியாம்" எ. து. தங்கிய ஆத்மாவானது பிரதிவிம்பித்தலே பிரதிவிம்போ பாதியாகும்; "புத்தி கதமாய முற்றுசுக துக்கங்களுயிர் நுகர்தல் போல முயலுதலே யத்தியாசோபாதியாகும்" எ. து அந்தக்கரண சம்பந்தமாக வாய்த்த மிக்க சுக துக்கங்களை யநுபவிக்குமாறுபோன்று ஆத்மா விடாது முயற்சிப்பதே யத்தியாசோபாதி யென்பதாம். "உற்றவத்தியாசவிலக்கண மதுவேறொன்றை யொன்றாகக் கருதலிப்பி வெள்ளியதுபோல" எ. து.

இங்ஙனம் எய்திய அத்தியாசவிலக்கணமெனல் கிளிஞ்சலை வெள்ளியெனக் கருதுமாறுபோன்று ஒன்றை மற்றொன்றாகக் கருதலாம். "மற்றது நால் வகைப்படுமா மித்தையுட னிதர மற்றிதரேதரஞ் சத்தியங்களினால்" எ. து. அந்த அத்தியாசமானது மித்தையாத்தியாசம், இதராத்தியாசம், இதரே தராத்தியாசம், சத்தியாத்தியாசம் என நான்கு வகைப்படும் எ. று.

அன்று ஏ அசைகள். இப்பி வெள்ளியதுபோலெனலை மித்தையாத்தி யாச முதலிய நான்கிற்குங் கொள்க. சுழுத்தி யவத்தையிற் பிராக்ஞனாகக் கட்டுண் டிருத்தலின் ஆவரணவிச்சின்னோபாதி யெனவும், அந்தக்கரணப் பிரதிபலனாகிக் கனவில் தைஜதனாக அதைப் பார்த்திருத்தலின் பிரதி விம்போபாதியெனவும், மனோகற்பிதத்தாலுண்டான துக்கரூபமான விட யங்களைச் சுகம்போலக் கருதி நனவின்கண் ணடைதற்கு விசுவனாக முயலு தலின் அத்தியாசோபாதி யெனவும் ஆத்மாவிற்கு அவாந்தரமாக வந்தது போலத் தோற்றினவென்க. (கூ0)

(அ. கை.)

முற்கூறிய அத்தியாச இலக்கணம் இனையவென வுணர்த்துகின்றது.

நெருப்பினொடு புணர்ச்சியாற் புனற்கழற்சி வரல்போ
 னித்தமுறு மான்மசந் நிதியதனின் முறையே
சரிப்பினொடு காண்டனினை வுறலறிதல் வரலாற்
 றகுந்தூல மெய்மித்தி யாத்தியா சந்தா
னிரிப்பருமிந் தியங்களே யிதராத்தி யாச
 மிதரேத ராத்தியா சங்கரண மாகுந்
தரிப்பரிய மூலவகங் காரமது தானே
 சத்தியாத் தியாசமெனச் சாற்றுவர்தக் கவரே.

(இ. ரை.) "நெருப்பினொடு புணர்ச்சியாற் புனற்கழற்சிவரல்போ னித் தமுறு மான்ம சந்நிதியதனின் முறையே சரிப்பினொடு காண்ட னினைவுற லறிதல் வரலால்" எ. து. அக்கினி சம்பந்தத்தாற் சலத்துக் குட்டணத் தன்மை வருமாறெங்ஙனமோ, அதுபோலச் சதோதயமாக விளங்கும் ஆன்ம சந்நிதியில் முறையே போக்குவரத்தும், காணுதலும், நினைத்தலும், அறித லும் வருதலினால், "தகுந் தூலமெய்மித்தியாத்தியாசந்தா னிரிப்பரு மிந்தி யங்களே யிதராத்தியாச மிதரேதராத்தியாசங் கரணமாகும்" எ. து. தக்க தூலசரீரமே மித்தியாத்தியாசமாமெனவும், நீக்கற் கரிய இருவகை யிந்திரி யங்களே இதராத்தியாசமாமெனவும், அந்தக்கரணங்களே இதரேதராத்தி யாசமாமெனவும், "தரிப்பரிய மூலவகங்கார மதுதானே சத்தியாத்தியாச மெனச்சாற்றுவர்தக்கவர்" எ. து. நிலைத்தற்கரிய மூலஅகங்காரமே சத்தியாத் தியாசமாமெனவுஞ் சத்துக்கள் கூறுநிற்பர் எ. று.

ஏ அசை. இக்கவி நேர் நிர னிறையணி. தூலமுதலிய நான்கின்சேட் டைகளை ஒவ்வொன்றாகத் தெரிவித்ததேனும் அவ்வவற்றிற்குரிய பலவற்றை

யுங் கொள்க. பஞ்ச அங்கம் பஞ்சாங்கமென வந்ததுபோல, மித்திய அத்தியாசம் மித்தியாத்தியாசமெனவும், இதர அத்தியாசம் இதராத்தியாசமெனவும், சத்திய அத்தியாசம் சத்தியாத்தியாசமெனவும் வந்தது தீர்க்கசந்தியும், தேவ இந்திரன் தேவேந்திரனென்றாற்போல, இதர இதரமென்பது நிலைமொழி யீற்று அகரமும் வருமொழி முதலின் இகரமுங் கெட்டு ஏகாரந் தோன்றி இதரேதரமென வந்தது குணசந்தியுமாமென்க. முறையே யென்றமையிற் சரிப்பு தூலதேகத்திற்கும், காண்டல் இந்திரியங்களுக்கும், நினைத்தல் அந்தக்கரணங்களுக்கும், அறிதல் மூல அகங்காரத்திற்கும் எனக்கொள்க. கூடஸ்தனது சந்நிதியை யடுத் திருத்தலால் அகங்கார முதலிய நான்கிற்கும் இத்தொழில்க ளுண்டாயினவென்க. எனவே, இவைகட் கோரறிவு தனியே யின்றென்பதுபெற்றாம். நித்தியமான ஆத்மா அநித்தியமான தேக சம்பந்தமாய் அதன் சரித்தலாதியின் றொழிலைத் தனதாகப் பாவித்தலின் மித்தியாத்தியாசமெனவும், தனக்கு வேறாய இந்திரியங்களின் றொழிலைத் தனதாகக் காண்டலின் இதராத்தியாச மெனவும், மனமாதியவற்றை யானெனதெனச் சங்கற்பிக்குஞ் சங்கற்பத்தைத் தனதாகப் பாவித்தலின் இதரேதராத்தியாசமெனவும், தானல்லாததைத் தானாகக்கருதும் அகங்காரத்தைத் தானாக அறிதலின் சத்தியாத்தியாசமெனவுங் கூறினார். அத்தியாசோபாதியி லுண்டான நான்கத்தியாசத்தின் இலக்கணம் உணர்த்தியதென்க. (கூக)

(அ. கை.)

அகங்கராத்மாவிற் குள்ள ஏனைய நான்கில் மூன்றத்தியாசங்களின் இலக்கணம் இனையவென வுணர்த்துகின்றது.

ஆங்காரான் மாவிற்கு நானெனலாற் கயிற்றி
　　னரவமென நிருபாதி காத்தியா சந்தா
ஞங்கார வியலான்மா விற்குநான் கருத்தா
　　வாமெனலாற் சிவப்புவலம் போற்சோபா திகமா
மீங்காகுங் கரணதரு மான்மாவிற் கிச்சா
　　மியநானென் றிருத்தலினா லலைபுனலிற் புக்க
வீர்ங்கதிரின் விம்பமெனத் தத்தருமாத் தியாச
　　மெனவுரைப்பர் நான்குடும்ப வானெனநிற் கையினால்.

(இ-ரை.) "ஆங்காரான்மாவிற்கு நானெனலாற் கயிற்றி னரவமென நிருபாதி காத்தியா சந்தான்" எ. து. அகங்காரான்மாவிற்கு நானென்னுந் தன்மை வருவதால் ரச்சு சர்ப்பம்போல நிருபாதிகாத்தியாச மெனப்படுவதாம்; "ஆங்கார வியலான்மாவிற்கு நான் கருத்தாவா மெனலாற் சிவப்பு வலம்போற் சோபாதிகமாம்" எ. து. படிகத்திற் பற்றிய சிவப்புப்போல அகங்காரத்தை யியல்பாகவுடைய ஆத்மாவிற்கு நான் கர்த்தா வென்னுந் தன்மை வருவதாற் சோபாதிகாத்தியாச மெனப்படுவதாம்; "ஈங்கா

கும் கரணதரு மான்மாவிற் கிச்சாமியநானென் றிருத்தலினு லலைபுனலிற் புக்க வீர்ங்கதிரின் விம்பமெனத் தத்தருமாத்தியாசமெனவுரைப்பர் நான் குடும்பவானென நிற்கையினுல்'' எ. து. அலைகளையுடைய சலத்திற் பிரதி பலித்த குளிர்ச்சிபொருந்திய சந்திரவிம்பத்தைப்போல இவ்விடத்தி லெழுந்த அந்தக்கரண பரமாத்மாவிற்கு இச்சாமியம் அகமென்றிருப்பதால் தத்தருமாத்தியாச மெனப்படுவதாமெனச் சத்துக்கள் கூறுநிற்பர்; நான் குடும்பவானென் றகங்கொண்டு நிற்றலால் எ. று.

நிருபாதிகாத்தியாசம் கயிற்றரவுபோலவும், சோபாதிகாத்தியாசம் படிகத்திற் காணுஞ் சிவப்புப்போலவும், தத்தருமாத்தியாசம் சலப்பிரதிவிம்பம் போலவும் நிற்குமென வுணர்க. (கூஉ)

(அ. கைக)

ஏனைய ஓர் அத்தியாசத்தின் இலக்கணமும் ஐந்தவத்தைகளினுமமும் இனையவென வுணர்த்துகின்றது.

மைந்தர்முத லாயினு ருடனுன்மா விற்கு
மண்ணுலகிற் பஃறியத்தர் விவகார மெனவே
யந்தமுறுஞ் சம்பந்த மாத்திராத் தியாச
மாமென்ப ரிவ்வத்தி யாசங்க டம்மா
னந்துநிர் விகாரியான் மாவென்னப் பெற்று
நவிறருமைந் தவத்தையுள வவையாவை யென்னிற்
றொடர்ந்தமுறு நனவொடுசொப் பனஞ்சுழுத்தி துரியந்
துரியாதீ தந்தானு மவற்றியல்பு மொழிவாம்.

(இ. ரை.) "மைந்தர் முதலாயினு ருட னுன்மாவிற்கு மண்ணுலகிற் பஃறியத்தர் விவகாரமெனவே யந்தமுறுஞ் சம்பந்த மாத்தி ராத்தியாசமா மென்பர்'' எ. து. கப்பலி லிருப்போர் விவகாரத்தைப்போலப் பூமியிற் புத்திரர் முதலானவருடன் சம்பநதித்திருப்பதினுல் ஆத்மாவிற்கு அழகிய சம்பந்த மாத்தி ராத்தியாசமெனப் படுவதா மெனச் சத்துக்கள் கூறு நிற்பர். "இவ் வத்தியாசங்கடம்மா னந்து நிர்விகாரி யான்மாவென்னப் பெற்றும்'' எ. து. இங்ஙனங் கூறிய இவ் வெட்டத்தியாசங்களினுற் குறை வின்றி நிறைந்த ஆன்மாவை நிர்விகாரியா மெனக் காணப் பெற்றும். "நவி றருமைந்தவத்தையுள வவையாவையென்னிற் றொடர்ந்தமுறு நனவொடு சொப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதந்தானு மவற்றியல்பு மொழிவாம்'' எ. து. சத்துக்களாற் சொல்லப்பட்ட ஐந்தவைத்தைகள் வேருக வுள்ளன. அவை யாவையெனக் கேட்கில் விடாதுதொடர்ந்துவரும் சாக்கிரமும், சொப்பனமும், சுழுத்தியும், துரியமும், துரியாதீதமுமாம். அவற்றின் றன்மைகளை யினிக்கூறுதும் எ. று.

வினு:—இங்ஙனங் கூறிய அகங்காரான்மா யாது?

விடை:—ஆன்ம சந்நிதியில் அகங்காரான்மா, அகங்காரவிய லான்மா, கரணதரு மான்மா, அகங் குடும் பான்மா ஆகிய நான்கு மாம். கரண தரும் ஆன்மா வென்றலின் ஈற்றி லுள்ள ஆன்மாவை யிந்திரிய தரும் ஆன்மா வெனக் கொள்க. எனவே, கன்மேந் திரியங்களை யங்ஙனந் தூல தேக மென்றலின் இவற்றின் முன்னைய இரண்டுந் தருமி யெனவும், பின்னைய இரண்டுந் தரும மெனவுமாம். இவ்வத்தியாசங்கள் தனது சந்நிதி சத்தை யினற் றேற்றினுந் தான் அதிற் சம்பந்த மின்றி யிருத்தலின், ஆத்மா நிருவிகாரி யெனலாம். அவற்றின் சம்பந்தங்களைத் தானறிந்து கொண்டிரு த்தலிற் சமுசாரம் ஆத்மாவிற் கெனினு மமையும். கூடஸ்தனது இச்சா யெத்தனமின்றி யவனது சந்நிதியின் இயல்பாக நான்கத்தியாசமும், அகங் கார சம்பந்தமாக நான்கத்தியாசமும் ஆகிய இவ்வெண்வகை அத்தியாசங்க ளும் அவாந்தரமா யுண்டானது போலத் தோற்றிய வென்க. (கூரு)

(அ. கை.)

மேற்கூறிய ஐந்தவத்தைகளுள் சாக்கிராவஸ்தையின் இலக்கணம் இனையவென வுணர்த்துகின்றது.

பெருந்தூல வைம்பூத மீரைந்திந் திரியம்
பிராணபஞ் சகமொடுநாற் கரணமிவை யுருவா
மருந்தூல சரீரத்திற் சாத்துவித குணமோ
டகாரவெழுத் தரிதெய்வம் விழியிடமே யாக
விருந்தாகு மிதயமல ரட்டதள கதியில்
விசுவசீ வனும்விராட் டிறையுமொருங் கடைந்து
வருந்தாவில் விடயங்கள் கரணமனைத் தானு
மருவிநுகர்ந் திடுதல்சாக் கிரமதா மன்றே.

(இ. ரை.) "பெருந்தூல வைம்பூத மீரைந் திந்திரியம் பிராண பஞ்சக மொடு நாற்கரண மிவை யுருவா மருந் தூல சரீரத்தில்" எ. து. பெரிதாகிய ஸ்தூல பூதம் ஐந்தும், ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் பத்தும், பிரா ணன் முதலிய வைந்து வாயுக்களும், மன முதலிய நான்கு கரணங்களும் ஆகிய இவைகளே யோர்வடிவமாநின்றுள்ள அரிய தூல சரீரத்தில், "சாத்து வித குணமோ டகாரவெழுத் தரி தெய்வம் விழி யிடமே யாக விருந்தாகு மிதயமல ரட்டதள கதியில்" எ. து. சாத்துவிதகுணமும், அகாரவெழுத் தும், தெய்வம் விஷ்ணுவும் ஆகிய இவற்றிற் கிடங் கண்ணாக நிற்கப் பொரு மையா நின்றுள்ள இருதயமாகிய எட்டிதழ்க் கமலத்தில், "விசுவ சீவனும் விராட்டிறையு மொருங்கடைந்து வருந்தா வில்விடயங்கள் கரணமனைத் தானு மருவி நுகர்ந்திடுதல் சாக்கிரமதாம்" எ. து. விசுவனென்னு நாமமு ள்ள சீவனும், விராட்டென்னு நாமமுள்ள ஈசனும் ஒருங்கே கூடி நின்று, பல முயற்சிகளால் வருந்தி, வனிதாதி விஷயங்களை யெல்லாக் கரணங்க ளாலுங் கூடி யனுபவித்தலே சாக்கிராவஸ்தை யெனப்படுவதாம். எ. று.

அன்று ஏ அசைகள். கதி இடம். கரணம் அனைத்தானு மென்றமை யின் அந்தக்கரணம் பிராண பஞ்சகத்தோடுங் கூடி ஞானேந்திரியங்களி னின்றுங் கன்மேந்திரியங்களால் விடயங்களை யனுபவித்தல். விழி யிட மென்றது அதனுள்ளிருக்கும் பாவை வடிவான ரூபமெனக் கொள்க. முற் கூறிய சான்ருகிய ஜீவாத்மா தூலசரீரத்தினுள்ள இருதயகமலத்தில் விசுவ நாமத்தோடும், விராட்டெனுங் கூடி யிருந்து, நேத்திர ஸ்தான முன்னிலே யிற் சகல விடயானுபவங்களை யிந்திரியங்களாற் புசிப்பது சாக்கிராவத்தை யென்க. (கூச)

(அ. கை.)

சொப்பனவஸ்தையின் இலக்கணம் இனையவென வுணர்த்துகின்றது.

பஞ்சபூ தமுஞ்சித்த புத்தியினின் ருெழிந்த
பதினேழின் மயமாஞ்சூக் குமதனுவி னின்று
விஞ்சுரசோ குணமுகர வெழுத்ததிதெய் வந்தான்
விரிஞ்சனிடங் களமாக நல்லிதய மென்னுங்
கஞ்சமலர்க் கன்னிகா கதியிறை சதனுங்
கனககர்ப் பனுமருவி நனவின்வா தனையை
நெஞ்சமெனுங் கரணத்தா லனுபவிக்கை தானே
நிகழ்ந்திடுஞ்சொப்பனமென் றுநிகழ்த்துவர்மூ தறிஞர்.

(இ. ரை.) "பஞ்சபூதமுஞ் சித்தபுத்தியினின் ருெழிந்த பதினேழின் மயமாஞ் சூக்குமதனுவி னின்று" எ. து. பஞ்சமகாபூதமும், சித்தமும், புத் தியுமாகிய இவ்வேழினின்றும் நீங்கிய பதினேழின் மயமா நின்றுள்ள சூக் கும சரீரத்தி லிருந்து, "விஞ்சு ரசோகுண முகரவெழுத் ததிதெய்வந்தான் விரிஞ்சனிடங் களமாக நல்லிதயமென்னுங் கஞ்சமலர்க் கன்னிகாகதியில்" எ. து. ஏனைய ராசத குணமும், உகரவெழுத்தும், அதிதெய்வம் பிரமனுமா கிய இவர்க்கிடங்கண்டமாநிற்க, நல்ல இதய மென்னுந் தாமரைப்பூப் பொ குட்டில், "தைசதனுங் கனக கர்ப்பனும் மருவி" எ. து. தைசத னென்பவ னும், இரணிய கருப்ப னென்பவனு மொருங்கே கூடி நின்று, "நனவின் வாதனையை நெஞ்சமெனுங் கரணத்தா லநுபவிக்கை தானே நிகழ்ந்திடுஞ் சொப்பனமென்று நிகழ்த்துவர் மூதறிஞர்" எ. து. மனமென்னும் அந்தக் கரணத்தினுல் அநுபவிப்பதே நிகழாநின்ற சொப்பனுவஸ்தை யெனச் சத் துக்கள் கூறுநிற்பர் எ. று.

நின்ருெழிந்த பதினேழென்பன மனமும், அகங்காரமும், பிராணபஞ் சகமும், தசேந்திரியமு மெனவும், இடங் களமென்பது அதனுள்ளிருக்கும் மனமெனவுங் கொள்க.

முற்கூறிய சான்ருகிய அந்தராத்மா சூட்சுமதேகத்தினுள்ள இருதய கமலப் பொகுட்டிற் றைசதனு யிரணிய கருப்பனேடுங் கூடிக் கண்டஸ்

தான முன்னிலையில் வாசனைவிடயங்களை மனதினாற் புசிப்பது சொப்பனாவத்தை யென்க. (கூரு)

(அ.கை.)

சுழூத்தியவத்தையின் இலக்கணம் இனையவென வுணர்த்துகின்றது.

மேய்ந்துதிரி பார்ப்படக்கி யுறங்களகு போல
விரிந்தகா ரியங்களையுட் கொண்டுவா தனையோ
டாய்ந்தவான் மாசிரயத் தவத்தையற விருக்கு
மரும்பகுதி மயமாங்கா ரணவுடம்பிற் றமமே
யேய்ந்தகுண மகரவெழுத் தரன்றெய்வ மிதய
மிடமாத்தத் கமலமலர்ப் பொகுட்டுநடுக் கதியி
லோர்ந்தபிராஞ் ஞனும்பரனு மாய்ப்பிரமா நந்த
முறுமாயா விருத்தியெனு நுண்கரணந் தன்னால்.

(இ. ரை.) "மேய்ந்து திரி பார்ப்படக்கி யுறங் களகு போல" எ. து. பலவாறாகச் சென்று மேய்ந்து திரியுங் குஞ்சுகளைச் சிறகிலடக்கி நித்திரை செய்யும் பெண்பட்சியைப்போல, "விரிந்தகாரியங்களை யுட்கொண்டு வாதனையோ டாய்ந்த வான்மா சிரயத்தவத்தை யறவிருக்கு மரும்பகுதி மயமாங் காரண வுடம்பில்" எ. து. பலவாறாக விரிந்த விருத்தி பேத காரியங்களை யுள் ளடக்கிக்கொண்டு, அந்தச் சாக்கிராதி வாசனையுடன் அந்நிலையதாக ஆய்வுற்ற ஆன்மாவின் அனுசாரத்தில் ஏனைய இரண்டவத்தைகளும் மாறும் படி யிருக்கின்ற அரிதாகிய பிரகிருதிமயமா நின்றுள்ள காரண சரீரத்தில், "தமமே யேய்ந்தகுண மகரவெழுத் தரன்றெய்வ மிதயமிடமாத் தத்கமல மலர்ப்பொகுட்டு நடுக்கதியில்' எ. து. இயைந்த தாமதகுணமும், அகரவெழுத்தும், தெய்வ முருத்திரனும் ஆகிய இவற்றிற் கிடமிதயமாநிற்க, அந்தத் தாமரைப்பூவினது நடுப்பொகுட்டின்கண், "ஓர்ந்த பிராஞ்ஞனும் பரனுமாய்ப் பிரமாநந்தமுறு மாயா விருத்தியெனு நுண் கரணந் தன்னால்" எ. து. அந்நிலையை யங்கே யுணர்ந்து நின்றுள்ள பிராஞ்ஞ னென்பவனும், அந்தரியாமி யென்பவனும் ஒருங்கே கூடி மாயாசம்பந்த விருத்தியென்னும் நுண்ணிய கரணவிருத்தியினாற் பிரமாநந்தத்தை யநுபவிக்கும் எ. று.

ஓர்ந்தவென்பதில் ரகரவொற்று இனவெதுகை. மேய்ந்துதிரி பார்ப்படக்கி யுறங் களகென்றமையின் அளகு பெண் கோழியாயிற்று. அவத்தையெனப் பொதுவாகக் கூறினமையின் ஈரவத்தையெனவுங் காரண தேகத்தைச் சுட்டிவருதலிற் பகுதியை யவித்தையெனவுங் கூறினும். இதயவிடமென்றது அதனுள்ளிருக்கும் நுண்கரணமெனக் கொள்க. மாயா விருத்தியெனும் நுண்கரணமென்றது அவித்தையான் மறைபட்டு மெலிந்துநின்ற வித்தை; எனவே, சுழூத்தியின் அவித்தையினானும், கனவின் மனத்தினானும், நனவிற் கரணங்களினானும் புசித்தலாம். பிரமாநந்தமென்றது அவித்தைகளனைத்தும் இறந்து அவற்றால் வராநின்ற துன்பங்கள் நீங்கிய விடத்துள்ள சுகம்.

முற்கூறிய சான்ருகிய பரமாத்மா காரண தேகத்தி லுள்ள பிராஞ்ஞு ஞய் அவ்வியாகிருதனென்னும் பரனேடுங்கூடி யிதயகலப்பொகுட்டு மத்தியில் இதயமுன்னிலேயிற் பிராஞ்ஞுஞ விருத்தியிஞல் ஆனந்தமனுபவிப்பதே சுழுத்தியவத்தையென்க. (கூசு)

(அ. கை.)

ஏனைய துரியந் துரியாதீதமென்னும் இரண்டிலக்கணங்களேயும், தாவரங்களேற்றற்பாலதாய அவத்தையினேயும் இனேயவென வுணர்த்துகின்றது.

அனுபவித்தல் சுழுத்தியா மிந்நனவா திகண்மூ
வவத்தையொடு முத்தரும முப்புரமுத் தானம்
பினுமுத்தெய் வங்களெனும் பரியாய நாமம்
பெறவுரைத்த சாக்கிரத்தே தத்கமல மழிந்து
மனவழக்கந் தவிர்ந்துபரந் தனேச்சிந்தித் திடலே
வருதுரிய மப்பரமான் மாவின்மன மடங்கன்
முனமுரைத்தல் செய்துரியா தீதமெனப் புகல்வர்
மொழிந்தவற்றுட் டாவரங்கள் பெறுதலிருட் சுழுத்தி.

(இ. ரை) "அனுபவித்தல்சுழுத்தியாம்" எ. து. இங்ஙனம் பிரமானந்தத்தை யநுபவித்தற்கியைந்தது சுழுத்தியவஸ்தையெனப்படுவதாம். "இந்நனவாதிகண் மூவவத்தையொடு முத்தரும முப்புர முத்தானம் பினுமுத்தெய்வங்களெனும் பரியாயநாமம் பெறவுரைத்த சாக்கிரத்து" எ. து. இங்ஙனங் கூறிய சாக்கிரமுதலிய மூன்றவத்தைகளும், மூன்று தருமங்களும், சாக்கிரமுதலிய மூன்றுதநுக்களும், அவற்றிற்குரிய தானங்களும், இவையல்லாத பிரமன்முதலிய முத்தெய்வங்களுமெனக் கூறற்கியைந்த பரியாய நாமங்க ளேற்கவுரைத்த சாக்கிராவஸ்தையில், "தத்கமல மழிந்து மனவழக்கந் தவிர்ந்து பரந்தனேச் சிந்தித்திடலே வருதுரிய மப்பர மான்மாவின் மன மடங்கன் முன முரைத்தல்செய் துரியாதீதமெனப் புகல்வர்" எ. து. முற்கூறிய கமலம் நீங்கி மனேவழக்கமுந் தவிர்ந்து பிரமத்தைத் தியானிப்பதே தொன்றுதொட்டுவருந் துரியமெனப்படுவது; அப்பரமான்மாவினிடத்தில் மனது லயிப்பதே முன்னர்க் கூறிய துரியாதீதமெனப்படுவதெனச் சத்துக்கள் சொல்லுவார்கள். "மொழிந்தவற்றுட் டாவரங்கள் பெறுத லிருட்சுழுத்தி" எ. து. இங்ஙனங் கூறிய ஐந்தவத்தைகளுள் விருட்சமுதலியவைக ளேற்றற்பாலது இருள்மயமாநின்றுள்ள சுழுத்தியவத்தையாம் எ-று.

ஏ அசை. துரியனில் சீவேசுரரையும், அதீதத்திற் கூடஸ்த பிரமத்தையுங்கொள்க. எற்றினுக் கென்ருல் நனவில் விசுவ விராட்டையும், கனவில் தைசத இரணிய கருப்பனேயும், சுழுத்தியிற் பிராஞ்ஞனேயும் பரனேயுங் கூட்டினதாலென்க. சாக்கிராதிமூன்றை மூன்றவத்தையெனவும், அவைமூன்று

தன்மையாயிருத்தலின் முத்தருமமெனவும், மூன்றுதேகமாயிருத்தலின் முப்புரமெனவும், இருதயங் கண்டம் நேத்திரமென மூன்றிடமாயிருத்தலின் முத்தானமெனவும், மும்மூர்த்திகளா யிருத்தலின் முத்தெய்வங்களென வும், இங்ஙனங்கூறிய கேவலசுழுத்தியாதிய மூன்றுமுதலிய யாவும் நீங்கிய விடந் தத்கமலமழிந்து மனவழக்கந் தவிர்ந்ததெனவுங் கூறினார். தத்கமலம் அழிந்ததென்றது கேவல சுழுத்தி நிகழும் இதயத்தை நீங்கி யச்சுழுத்தியில் நனவாதி யாவினிடத்தும் நிகழ்தலே.

முற்கூறிய சான்றாகிய ஞானாத்மா அவத்தாத்திரய விவகாரம் யாவு மின்றி விலட்சணமானவிடத் துள்ள சீவசைதன்னியனைப் பிரத்தியேகாத் மனைக்கூடிச் சாக்கிர சுழுத்தியென்னுஞ் சமாதியிற் சின்மாத்திரமா யனுப விப்பதே துரியாவத்தை யெனவும், சான்றாகிய ஆநந்தாத்மா இவ்வறியுந் தன்மை யனைத்தும் நீங்கினவிடத்துள்ள கூடஸ்தனைப் பரமாநந்தத்தைக் கூடி யாவுந் தன்மயமாகச் சகத்தில் அனுபவிப்பதே துரியாதீத அவத்தை யெனவும் விளக்கியதென்க. (கூஎ)

(அ. கை.)

தேவர்முதலிய அறுவரடையும் அவத்தைகள் இவையென வுணர்த்து கின்றது.

விலங்குமுத லனபெறுவ சுழுத்தியொடு கனவாம்
விண்ணவர்க்கு நனவுநரர்க் கம்மூன்று மாகுங்
கலங்கலறு மருளர்க்குத் துரியம்வர யோகி
கட்குவரு வதுதுரியா தீதமுதன் மூன்று
மலங்கலுறு மனிதர்க்குத் தமிற்றாமே தோன்றி
வருபந்த மாமேனை யிரண்டுமியோ கத்தா
லிலங்குமுத்தி சாதனமா மவைகளிலொன் றினிலொன்
றிலாமையினாற் காலதே சங்கணிய மம்பொய்.

(இ. ரை.) "விலங்குமுதலனபெறுவ சுழுத்தியொடு கனவாம் விண் ணவர்க்கு நனவு நரர்க் கம்மூன்றுமாகும்" எ. து. மிருக முதலியவைகள் அடையற்பாலன சுழுத்தியுங் கனவுமாம்; தேவர்களுக்குச் சாக்கிரமும், மனிதர்களுக்குச் சாக்கிர முதலிய மூன்றுமாம்; "கலங்க லறு மருளர்க்குத் துரியம் வர யோகிகட்கு வருவது துரியாதீதம்" எ. து. சஞ்சல மற்ற வுன் மத்தனுக்குத் துரியமும், மேன்மையான யோகிகளுக்கு வரற்பாலது துரியா தீதமுமாம். "முதன்மூன்று மலங்கலுறு மனிதர்க்குத் தமிற்றாமேதோன்றி வரு பந்தமா மேனையிரண்டுமியோகத்தா லிலங்கு முத்திசாதனமாம் எ.து. சுக துக்கத்தால் மொத்துண்டு நிற்கும் மனிதர்களுக்குச் சாக்கிரமுதலிய மூன்றுந் தம்மிற்றாமே தோன்றிவருகின்ற பந்தசாதனமாயிருக்கும். துரியந் துரியாதீதமாகிய ஏனைய விரண்டும் யோகங் காரணமாகச் சதோதயமாக விளங்கும் முத்திசாதனமாநிற்கும். "அவைகளி லொன்றினிலொன் றிலா

மையினுற் காலதேசங்க ணியமம் பொய்" எ. து. இவ்வைந்தவத்தைகளுந் தத்தமக்குள் ஒன்றி லொன் றில்லாமையினுற் கால தேச வஸ்துக்களின் நியமம் பொய்யாகமுடியும் எ. று.

இனந் தழுவி வஸ்துவென்முரம். விலங்குமுதலென்றமையின் பறவையும் ஊர்வனமும் சல ஜந்துக்களுங் கொள்க. மருளரென்றது ஒருதெய்வ வயப்பட்டவன். எனவே, அறிவின் வயப்பட்டு அதுவாய் நின்ற துரிய ஞயிற்று. முற்கூறிய பஞ்சாவத்தைகளுள் பரிசவறிவு ஒன்றையுடைய தாவர வுயிர்கட்கு மற்ருென்றுந் தோன்முதிருத்தலின் அவைகட்குச் சுழுத்தி யொன்றே யெனவும்; பரிச மிரத விரண்டறிவும் நீரில் வாழும் நத்து முதலிய வுயிர்கட்கும், பரிசமிரசங்கந்தமாகிய மூன்றறிவுஞ் செல்லுமுதலிய வூர்வன வுயிர்கட்கும், பரிச மிரசங் கந்த முருவாகிய இந்நான்கறிவும் வண்டாதி யுயிர்கட்கும், சத்தமாதி ஐயறிவும் நடப்பன பறப்பனவாகிய பசு பக்ஷி முதலிய வுயிர்கட்கும், கனவைப்போலத் தோற்றிய நினைவு சுழுத்தியைப்போல மறைதலின் இந்நான்கு வகுப்பிற்குஞ் சொப்பனஞ் சுழுத்தி யிரண்டே யெனவும்; ஐந்தறிவையுடைய தேவர்கட்குத் தோற்றிய நினைவு மறையாதிருத்தலின் அவர்கட்கு நனவொன்றே யெனவும்; இவ்வைந்தறிவையுமுடைய மானிட வுயிர்கட்குத் தோற்றிய நினைவு ஒருகாற் றெரிவாயிருத்தலின் நனவும், ஒருகாற் ருேன்றியுந் தோன்முதிருத்தலிற் கனவும், ஒருகாற் ருேன்றியுந் தோன்முதிருத்தலிற் சுழுத்தியு மாகும் ஆதல்பற்றி மூன்றே யெனவும்; மருளர்க்கு ஆசான் அனுக்கிரகம் பெற்று ஆத்ம விசாரணையின் உதயமான அறிவு சொப்பிரகாசமாய் விளங்கலிற் றுரிய மொன்றே யெனவும், வரயோகிகட்கு அங்ஙனந் தோன்றியது அறிவாநந்தமா யதீதப்பட்டிருத்தலிற் றுரியாதீதமொன்றே யெனவும், முன்மூன்றவத்தையும் ஆன்மாவை மறைக்கு மெனவும், மேலிரண்டவத்தையும் ஆத்மாவை வெளிப்படுத்து மெனவுங் கொள்க.

வினு:—இங்ஙனமாயின் தேவர் முதலிய அறுவகையாரும் நிற்க, மனிதரொருவர்க்கே யிம்மூன்றவத்தை வந்த காரண மென்னை?

விடை:—தேவர்களுக்குச் சாக்கிராவத்தையினில் நினைவன்றி மறைப்பின்மையினுனும், ஏனைய ஐந்திற்கும் மறைப்பன்றி நினைவின்மையினுனும், மானிடர்க்கு அவ்விரண்டு மிருத்தலினுனும், இவ்விரண்டும் நீங்கியவிடம் முத்தியடைதற்கு ஆதாரமாதலினுனும் வந்தனவென்க.

வினு: —அற்றேல், முப்பத்தாறு தத்துவங்களோடுங் கூடி விவகரிப்பது சாக்கிரமெனவும், இவற்றில் அஸ்திமுதற் பதினென்று நிற்க, ஏனைய இருபத்தைந்து தத்துவங்களோடும் விவகரிப்பது சொப்பனமெனவும்; இவற்றில் மனமுதலிய விருபது நிற்க, ஏனைய ஐந்து தத்துவங்களோடும் விவகரிப்பது சுழுத்தியெனவும், இவற்றில் வித்தை யவித்தை யிரண்டு நிற்க ஏனையு மூன்று தத்துவங்களோடும் விவகரிப்பது துரியமெனவும், இவற்றில் ஜீவன் ஈசன் இரண்டுமெல்லாத ஏனைய பிரமமொன்றும் விவகரிப்பது துரியாதீத

கஎ

மெனவுங் கொள்க. இவ்வைந்தவத்தையும் மானிட வுயிர்கட்குச் சமுதாயத்தின் நித்தியப் பிரளயம்போலத் துயிலினும் விழிப்பினும் நியதிப்படி யனுபவமிருக்கச் சுரோத்திரியனுக் கிரண்டும், விராத்திரியனுக்கு மூன்றுமெனக் கூறிய தென்னை ?·

விடை:—மானிட வுயிர்கட்கு இவ்வைந்தவத்தை யுளவாயினும் விராத்திரியன் அறியாமையின் மூன்றவத்தையிற் சஞ்சரிக்கு மிடத்து அவ்விரண்டும் இவற்றின் அடங்கிநிற்றலின் இவர்கட்கு அம் மூன்றேயெனவும், சுரோத்திரியன் அறிவினால் இவ்விரண்டினுஞ் சஞ்சரிக்கு மிடத்து அம்மூன்றும் இவற்றில் அடங்கிப் போதலின் இவர்கட்கு இரண்டே யெனவுங் கூறிய தென்க.

இவ்வைந்தவத்தையையும் நீக்கும் நிமித்தம் இவைகளின் இலக்கணமும் இவற்றையடைந்தவர்கள் இலக்கணமும் உணர்த்தியதென்க. (கூஅ)

(அ. கை.)

இவ்வைந்தவத்தைகள் இடைவிடாது தத்தமக்குள் மாறி நிற்பினும் அங்ஙன மாகாது பிரமம் ஒரு தகைத்தா நிற்றலேயும், நனவு கனவுகளைப் போலச் சுழுத்தியின்கண் அறிவு விளங்கவில்லையே யென்ற வினாவிற்குத் தகும் விடையையும் இனையவென வுணர்த்துகின்றது.

சொற்றவவத் தைகளிலனு சூதனு யறியுந்
துரியனே யுளனனவு கனவிலறி வுண்மை
பெற்றனமச் சுழுத்தியினிற் பெறலுரைப்பி னெழுந்து
பிறிதொன்று மறியாது சுகத்துறங்கி னேனென்
றுற்றதிரு நினைவுமனு பவஞ்சுழுத்தி யதனி
லுறுதுவரா தெனுமருத்தா பத்தியினாற் பொருள்கண்
முற்றுமடக் கிருள்விழிகாண் குதலெனக்கா ரியங்கண்
முழுதையுமுங் கொண்டபே ரவித்தையிரு ளினையும்.

(இ. ரை.) "சொற்ற வத்தைகளி லனுசூதனு யறியுந் துரியனே யுளனனவு கனவி லறி வுண்மைபெற்றனம்" எ. து. மேற்கூறிய பஞ்சாவத்தைகளினும் நீங்காமல் நிற்போன் கூடஸ்தன் ஒருவனேயாம். சாக்கிரத்திலுஞ் சொப்பனத்திலும் அறிவுண்மையெனலை யையந்திரிபின்றி யேற்கப் பெற்றனம், "அச்சுழுத்தியினிற் பெறலுரைப்பி னெழுந்து பிறிதொன்று மறியாது சுகத் துறங்கி னேனென் றுற்றது" எ. து. மேற்கூறிய சுழுத்தியவத்தையிலும் அந்தச் சைதன்ய மிருப்பதாக ஏற்கப் பெறுவதைப்பற்றிச் சொல்லுமிடத்து, ஒருவன் நித்திரையைவிட்டெழுந்து வேறொன்றுங் காணமற் சுகமாக நன்குறங்கினேனென்று சொல்லப் போந்தது. "இருநினைவுமனுபவஞ் சுழுத்தியதனி லுறுது வராதெனு மருத்தாபத்தியினால்" எ. து. இருவித

மான நினைப்பும் அனுபவமுஞ் சுழுத்தியின்கண் இல்லாமல் வராதென்னுந் திஷ்டாருத்தாபத்தியினால், "பொருள்கண் முற்றுமடக்கிருள் விழி காண்குதலெனக்காரியங்கண் முழுதையுமுட்கொண்ட பேரவித்தை யிருளினையும்" எ. து. சமஸ்த பொருள்களையுந் தன்பா லடக்கிய இருளை விழிகள் காணுமாறுபோன்று, மாயா காரியங்கள் அனைத்தையுந் தன்பாலடக்கிக்கொண்ட பெரிதாகிய அவித்தையென்னு மிருளையும் எ. று.

துரியனே என்பதிலுள்ள ஏகாரம் தேற்றம். அநுசூதம் நீங்காமை. எனவே, பரிபூரணமெனப் பெற்றும். அவத்தைகடோறும் ஆங்காங்கு நிகழ்வதைச் சாட்சியாக நின்று காண்டலின், துரியனே யுளன், நனவு கனவில் அறிவுண்மை பெற்றனமென்றார். (கககூ)

(அ. கை.)

சுழுத்தியில் மனோவிர்த்தி சகாயமின்றிச் சுவாநுபவந் தோற்றலின் அங்கே யறிவுளதென்பதற்கு ஐயமின்றென வுணர்த்துகின்றது.

அந்தவவித் தையினதுசூக் குமவிருத்தி தன்னி
லலையுமரத் திலையிடையின் வெண்ணிலாத் துளிபோல்
வந்திலங்கி யடங்குநிசா நந்தகூற் றினையும்
வருகரணுந் தராபேட்சை யின்றியே யான்மா
முந்துரைசெய் சுழுத்தியினி லனுபவிக்கை யாலே
மொழிந்ததனி லறிவுளதா மேதுமறி யாமை
நந்துசுகத் துறங்கினே னெனற்கேது விடய
ஞானமிலா மையுங்குடும்ப நிவர்த்தியுமா முறையே.

(இ. ரை.) "அந்தவவித்தையினது சூக்கும விருத்தி தன்னி லலையுமரத் திலையிடையின் வெண்ணிலாத் துளிபோல் வந்திலங்கி யடங்கு நிசானந்த கூற்றினையும்" எ. து. மேற்கூறிய அவித்தையினது சூக்கும விருத்தியிற் காற்றினால் அலைந்துகொண்டிருக்கும் மரத்தினது இலைகளி னிடை யிடையே வந்து தோற்றும் வெண்ணிலாவின் றுளிகளைப்போல வுதித்து விளங்கி யடங்கு நிசாநந்த கூறுபாட்டினையும், "வருகரணுந்தராபேட்சை யின்றியே யான்மா முந்துரைசெய் சுழுத்தியினி லனுபவிக்கை யாலே மொழிந்ததனி லறிவுளதாம்" எ. து. வராநின்ற மனங் காரணமாக ஓரபேட்சையின் முந்தி யாத்மாவானது முற்கூறிய சுழுத்தியவத்தையின்கண் அநுபவித்துக்கொண்டு வருதலால் முன்மொழிந்த சுழுத்தியவத்தையின்கண் ஸ்திரமாக அறிவுண்டா யிருக்கின்றதாம். "ஏதுமறியாமை நந்துசுகத்துறங்கினேனெனற்கேது விடய ஞான மிலாமையுங் குடும்ப நிவர்த்தியுமா முறையே" எ. து. அவ்விடத்து யாதொன்றும் அறியாது மிக்க சுகத்துட னுறங்கினேனெனக் கூறுதற்குக்காரணம் முறையே விஷயஞான மின்மையுங் குடும்ப பார நிவர்த்தியுமாம் எ. று.

அநுபவித்தலுக்குச் செயப்படு பொருள்கள் அவித்தை யிருளினையும், ஆனந்தக் கூற்றினையு மெனக் கொள்க. இங்கே யேது மறியாமை யெனலை எதிர்மறை வினையெச்சமாக்குக. நந்தல் வளர்தல். சூக்கும விருத்தி யென்றது சுழுத்தியவத்தையிலுள்ள பிராஞ்ஞன் றொழில். குடும்ப நிவர்த்தி துக்கரூபமாகிய பந்த நீக்கம். நிசாநந்தக் கூற்றென்பது பிரமானந்தாமிச லேசமெனல். இதனைச் சமாதியின்கண் நவநவமாய் விளங்கும் ஆநந்தமெனினும் அமையும். முறையே யென்றமையின் விடயஞானமின்மை யறியாமைக்கும் குடும்பநிவர்த்தி சுகத்துறங்கினே னென்பதற்குங் கொள்க. (௧௦௦)

(அ.கை.)

உயிர் சச்சிதானந்த மெனலை யுவமானபூர்வகமாக வுணர்த்துகின்றது.

மன்றசுழுத் தியிலதற்குக் கரியாவா நந்த
 மயவுயிருண் டெனவொருவ ராகிலுமாண் டறிந்தே
னென்றலில தேதுகா ரணமெனிலோர் பொருளை
 யெடுப்பநீர் மூழ்கினே னுண்டுளதென் பதுமேற்
சென்றலது புகலவொணா ததுபோலக் கருமச்
 செயலினா லெழுந்துதுணை யாங்கரணங் கூடி
னன்றியதி லறிந்தபொருள் கூறொணா தாகு
 மாதலினா லுயிர்சச்சி தாநந்த வொளியாம்.

(இ. ரை.) "மன்ற சுழுத்தியி லதற்குக் கரியா வானந்த மய வுயிருண்டென லொருவராகிலு மாண்டறிந்தே னென்றலில தேதுகாரணமெனில்" எ. து. மிக்க சுழுத்தியவத்தையின்கண் அதற்குச் சாட்சியாக ஆனந்தமயமா நின்றுள்ள ஆன்மா வுண்டெனக் கூறுதல், ஒருவராகிலும் அவ்விடத் தறிந்தேனென்று சொல்லாமைக்குக் காரணம்யாதெனில்,"ஓர் பொருளை யெடுப்ப நீர்மூழ்கினே னுண்டுள தென்பது மேற்சென்றலது புகல வொணாததுபோல" எ. து. தவறி விழுந்த வொரு பொருளை யெடுக்க வேண்டி நீரில் மூழ்கினேன், அவ்விடத்திருக்கின்ற தென்பதைக் கரையிற் சென்றல்லாமற் சொல்லக்கூடாமை யெங்ஙனமோ, அதுபோல், "கருமச் செயலினா லெழுந்து துணையாங் கரணங் கூடினன்றி யதிலறிந்த பொருள் கூறொணா தாகு மாதலினா லுயிர் சச்சிதாநந்த வொளியாம்" எ. து. ஓர் கருமங் கருதி யதைச் செய்யவேண்டுமென்னுஞ் சங்கற்பத்தினால் எழுந்திருந்து, அதற்குத் துணைக்கருவியாக நின்றுள்ள அந்தக்கரண சம்பந்தத்தினாலன்றி, அந்நீரில் அறிந்த பொருளைச் சொல்லக்கூடாததாகும்; ஆகையால் ஆத்மா சச்சிதாநந்தசொப்பிரகாச வடிவினதாம் எ. று.

தோன்றுந்தோற்றுதெனப் பாடமோதுதலு முள. கரணங் கூடினன்றி யதில் அறிந்த பொருள் கூறொணாதென்றமையின், கூடத்தன் அறிவு மயமாமென்பது பெற்றாம். முற்கூறிய ஐந்தவத்தையின் இடையிலுள்ள சுழுத்தியினும் அறிவுண்டென விளக்கி யிவற்றை யறிகின்ற விசுவ தைசத பிராஞ்ஞ

சீவன் சாக்ஷி யென்கிறதற்கு இம்முறையே யிவைகட்கு அதிஷ்டானமான சத்து, சித்து, ஆனந்தம், நித்தியம், பூரணமென்னும் ஐந்து தன்மையு முடையதே யாத்மாவெனவும், இவற்றிற் கெதிர்மறையாய் ஐந்து தன்மையு முடையதே யனாத்மா வெனவுந் தோன்ற விளக்கியதெனக் காண்க.

வினு:—அற்றேல், துரியத்தினுள்ள சீவனையும் அதீதத்தினுள்ள சாக்ஷியையும் இங்ஙனங் கூறலாமோ?

விடை:—சொற்ற அவத்தைகளில் அனுகூதனை யறியுந் துரியனே யுளனென்னுமிடத்து உளனென்பது நித்தியமும், அனுகூதனென்பது பூரணமுமாக விளங்கலினானும்; இச்சீவனுக்கு நித்தியத்துவமும், இச்சாட்சிக்குப் பூரணத்துவமும் இருத்தலினானுங் கூறலாம்.

வினு:—அற்றேல், ஆன்மாவுக்கு இவ்வைந்து தன்மையுங் கூறலாமோ?

விடை:—உயிர் சச்சிதாநந்த வொளியாமெனவும் அசத்தாதி யைந்தும் நீங்க வந்த சத்தாதி நாமமே யன்றிச் சுபாவம் அன்றெனவு முற்கூறியிருக்கின்றதே யுத்தரமா மென்க.

இவ்வைந்தவத்தையும் அநாத்மாவெனவும் இவற்றை யறிவது கற்பிதாத்மா வெனவும், இவை யாவுமா யவை யல்லாத சொப்பிரகாசமே யாத்மா வெனவும் விளக்கிய தென்க. (கoக)

(அ. கை.)

பஞ்ச கோசங்களின் நாமமும் அவற்றின் மூன்றிலக்கணங்களும் இனையவென வுணர்த்துகின்றது.

அன்னமொடு பிராணன்மனம் விஞ்ஞான மிக்க
வாநந்த மயமாமைங் கோசமுள வவைதாஞ்
சொன்னமுறை சுக்கிலசோ ணிதத்ததாய் நின்ற
தூலவுடம் பன்னமய கோசஞ்சூக் குமமெய்
மன்னலுறு பிராணனும்வாக் காதியுமே பிராண
மயகோச மனமுஞா னேந்தியமும் புணரிற்
பன்னுமனோ மயகோசந் துரியன்சிற் சாயை
பதிதலொடு லோகாந்த சூந்தமே போன்று.

(இ. ரை.) "அன்னமொடு பிராணன் மனம் விஞ்ஞான மிக்க வாநந்த மயமா மைங்கோசமுள" எ. து. அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், மிக்க ஆனந்தமயம் எனக் கோசங்கள் ஐந்துளவாம். "அவைதாஞ் சொன்னமுறை சுக்கில சோணிதத்ததாய் நின்ற தூல வுடம் பன்னமய கோசம்" எ. து. அவ்வைந்தாவன:—மேற்கூறிய முறைப்படி சுக்கில சுரோணிதத்தை யுடையதாகித் தடிப்புற்று நின்ற தூல சரீரமே அன்னமய கோசமெனப் படுவதாம், "சூக்குமமெய் மன்னலுறு பிராணனும் வாக்காதியுமே பிராணமய கோசம்" எ. து. சூக்கும சரீரத்தில் நிலைபெற்

றுள்ள பிராணவாயும், வாக்கு பாணி முதலிய கன்மேந்திரியங்களுமே பிராணமயகோச மெனப்படுவதாம்; ''மனமு ஞானேந்தியமும்புணரிற் பன்னுமனோ மயகோசம்'' எ. து. மனதும், ஞானேந்திரியங்களும் ஒன்றாக் கூடுமிடத்துச் சொல்லப்பட்ட மனோமய கோசமெனப் படுவதாம்; ''தூரியன் சிற்சாயை பதிதலொடு லோகாந்த குந்தமே போன்று'' எ. து. பிரத்திய காத்மாவினது சைதன்யச் சாயையானது புணர்ச்சியோடு இரும்பை நுனியிலுடைய ஈட்டியைப்போல எ. று.

எஞ்சிய ஆமென்னும் ஆக்க வினைமுற்றை நான்கிடத்தும் ஒட்டுக. குந்தமென்றது வருஞ் செய்யுள் முதலிலுள்ள அகங்காரத்திற் குவமித்தல். அஃதொருவ னிடமாய் வருவதுபோலக் கூடஸ்தனால் அறிவு தோன்று மென்க. கோசமென்றது உறை. அஃது கட்க முதலியவைகளை மறைப்பதுபோல இவ்வைந்துங் கூடத்தனை மறைத்து நிற்றலால் அங்ஙன முருவகித்தது. (கO௨)

(அ. கை)

ஏனைய இரண்டு கோசங்களின் இலக்கணமும் அறிவீனரது கொள்கையும் இனையவென வுணர்த்துகின்றது.

இருந்தவகங் காரமுஞா னேந்தியமுங் கூடி
 யிசைத்தலுறும் விஞ்ஞான மயகோச மாகும்
பொருந்துகா ரணதேக ரூபாவித் தையுந்தாம்
 புகல்விடய தரிசனசா மீப்பியசை யோகந்
தரும்பிரிய மோதமொடு பிரமோத மென்னத்
 தக்கவையு மானந்த மயகோச நானென்
றரந்தைதரும் விஞ்ஞான மயகோச வடிவா
 மாங்காரந் தனையான்மா வென்பாறி விழந்தோர்.

(இ. ரை.) ''இருந்த வகங்காரமு ஞானேந்தியமுங் கூடி யிசைத்தலுறு விஞ்ஞானமய கோசமாகும்'' எ. து. தங்கி நின்ற அகங்காரமும், ஞானேந்திரியங்களும் புணருங்காற் சொல்லப்பட்ட விஞ்ஞானமய கோசமெனப்படுவதாம்; ''பொருந்து காரண தேக ரூபாவித்தையுந்தாம் புகல்விடய தரிசன சாமீப்பிய சையோகந்தரும்'' எ. து. பொருந்திய காரண சரீரவடிவாயுள்ள அவித்தையும்,சொல்லுகின்ற வனிதாதி விடயக்காட்சியும், அவற்றோடு சமீபித்தலும், அவற்றைப் புணர்தலுமெனப் பொருடருகின்ற, ''பிரிய மோதமொடு பிரமோதமென்னத் தக்கவையு மானந்தமய கோசம்'' எ. து. பிரியமும், மோதமும், பிரமோதமும் எனக் கூறத்தக்கவைகளும் ஆனந்தமய கோச மெனப்படுவதாம். ''நானென் றரந்தைதரும் விஞ்ஞானமய கோச வடிவாமாங்காரந்தனை யான்மாவென்ப றறிவிழந்தோர்'' எ. து. துன்பத்தை விளைவிக்கத்தக்க விஞ்ஞானமயகோசவடிவாயுள்ள அகங்காரத்தை நானென்றுகூறும் ஆன்மாவெனப் புத்தியீனர் கூறுகிற்பர் எ. று.

அவித்தையும் என்னத்தக்கவையும் ஆனந்தமய கோசமென முடிக்க. விடயதரிசனம் சமீபம், சையோகம் பிரியம், மோதம் பிரமோதம், என நிரனிறையாகப் பொருடருதலின், இது நிரனிறையணியாம். தாம் அசை. அவித்தையானது விடயதரிசனத்தில் உதிக்கும் பிரியமும், சாமீப்பியத்தில் உதிக்கும் மோதமும், சையோகத்தில் உதிக்கும் பிரமோதமுமாகிய இம்மூன்றுடன்கூடின் ஆநந்தமயகோசமாம். அவற்றுள், அந்தக்கரண விருத்தி யடங்கி நிற்றலின் அவித்தையெனவும், அங்ஙனமுள்ள சுகத்தை யறிதலின் பிரியமெனவும், அச்சுகஞ் சமீபமா யிருத்தலின் மோதமெனவும், அச்சுகத்தோடுங் கூடிநிற்றலின் பிரமோதமெனவும் வந்தனவெனக் கொள்க. அறிவிழுந்தோரென்றது பாரமார்த்திக கூடத்த ரிலக்கணந் தெரியாது கற்பிதமான அகங்காரத்தையே யாத்மாவெனக் கொள்ளுஞ் சிலமதஸ்தரை. அவரில் இங்ஙனங் கொள்ளுவோர் சைவசித்தாந்தி யென்பாருமுளர். அங்ஙனங் கூறினும் அமையும். ஆநந்தமயகோசத்துக்கு அதீதமாகிய ஆத்மா விஞ்ஞானமய கோசத்துக் குரித்தாகிய அகங்காரம் ஆகாமையின் அங்ஙனங் கூறுவார் ஆத்மஞான மில்லாதவரெனக் காண்க.

பிரமத்தைத் தரிசிப்பிக்குநிமித்தம் அதனைமறைக்கும் பஞ்சகோசத்தை நீக்கவேண்டி யவற்றின் இலக்கணம் உணர்த்தியதென்க. (கoரு)

(அ. கை.)

அகங்கார மானது கற்பிதாத்மாவென் றறிவிப்பான் வேண்டித் தூல முதல் மனமீருய தத்துவங்களையறியுஞ்சத்தி சுயமாய் அதற்கின்றென வுணர்த்துகின்றது.

நீலகுண விசேடமொடுற் பலவிசே டியந்தா
னிகழ்தரவேத் தியமாதல் போலிளைத்தே னெனினுன்
றூலதனு வொடுங்கேட்ப னெனெனிலிந் தியத்துஞ்
சூழ்வனெ னெனிற்கரண முடனும்வேத் தியமாய்ச்
சாலவுயர் தூரியனிற்கை யாலேயாங் காரந்
தானுன்மா வன்றுகி லசேதனவாங் காரஞ்
சீலமொடு புறவிடைய மறிவதென் னெனிலூ
சிக்கலின்முன் னூசிசேட் டித்திடுதல் போலும்.

(இ. ரை.) "நீலகுண விசேடமொ டுற்பல விசேடியந்தா னிகழ்தர வேத்தியமாதல்போல்" எ. து. நீலகுணமாகிய விசேடத்தோடு புஷ்பமென்னும் விசேஷியமானது விளங்க வெளிப்படுத்துமாறுபோன்று, "இளைத்தேனெனி னுன் றூலதனுவொடுங் கேட்ப னெனெனி லிந்தியத்துஞ் சூழ்வ னெனிற் கரணமுடனும் வேத்தியமாய்ச் சால வுயர் தூரிய னிற்கையாலே யாங்காரந்தா னுன்மா வன்றுகில்" எ. து. யானிளைத்துவிட்டே னென்றால் தூலசரீரத்தோடும், யான் கேட்பே னென்றால் ஞானேந்திரியத் தோடும், யான் யோசிப்பேனென்றால் அந்தக்கரணத்தோடும், பிரத்தியட்சமாய் மிகவு

மேலாக விளங்கிய ஆன்மா வென்போன் இருக்கப் பெறுதலால் அகங்காரம் ஆன்மாவெனப்படுவதன்று. அங்ஙனமாயின், "அசேதன வாங்காரஞ் சீலமொடு புறவிடய மறிவ தென்னெனி லூசிக்கலின்முன் னூசி சேட்டித் திடுதல்போலும்" எ. து. அறிதலிழந்த அகங்காரமானது நேராகத் தனக்கன்னியமாயுள்ள விஷயங்களை யறிவா னேனெனக் கேட்பையாயின், காந்தக் கல்லின்முன் இருப்பூசியானது எங்ஙனஞ் சேட்டிக்குமோ அதுபோலுமென வறிக எ. று.

"சினைவினை சினையொடு முதலொடுஞ் செறியும்" என்பதினால் யானினைத்தேனென்பதுமுதலிய மூன்றும் வந்தவாறு காண்க. துரியனுக்கு உற்பலமும் அகங்கார சம்பந்தமான தூலாதிசட்கு நீலநிறமும் உவமித்ததென்க. வேத்தியம் வெளியாய்க் காண்குதல். அகங்காரம் ஆன்மா அன்றென்றமையின் துரியனே ஆத்மா வென்பதாயிற்று. துரியனே தனுவாதி தத்துவங்களைச் சாட்சியா யறிந்து நிற்றலின் அவனே யாத்மாவெனவும், அகங்காரம் அங்ஙனம் அறியாமையின் அநாத்மாவெனவுங் காண்க.

வினா:—அங்ஙனமாயின் புறவிடயங்களை யறிவதெங்ஙனம்?

விடை:—அவனது சந்நிதான விசேடத்தாலென்க.

வினா:—அற்றேல், ஆத்மாவிற்கும் அநாத்மாவிற்கும் விடயங்களை யறியுந்தன்மை யொன்றென்றால் இவர்கட்குப் பேத மென்னை?

விடை:—ஆகாயமானது பிருதிவியாதிய நான்குபூதத்தினுங் கூடியிருந்துங் கூடாமல் அதற்குஞ்சாக்ஷியாயிருப்பதுபோலச் சின்மாத்திரமான ஆத்மாவானது தனுவாதி விஷயங்களோடுகூடி அதன் றொழில்களை அறிந்தும் அவற்றிற் சம்பந்தப்படாமற் சாக்ஷியாயறிவதும், மாணிக்க சாயை பற்றின படிகம் அச்சாயையைத் தனதாகக் காட்டல்போல, ஆத்மாவினது பூரணமான சிற்சாயையிற் கிஞ்சித்தமிசம்பெற்ற அகங்காரம் விடயங்களிற் சம்பந்தமா யவற்றிற் சுகதுக்கங்களைத் தானறிவதுபோலக் காட்டுதலாம். கேட்பனெனென்றமையின் பரிசிப்பன், காண்பன், உண்பன், மோப்பனென்னும் ஞானேந்திரியங்களுடனும், இந்தியமெனப் பொதுவாகக் கூறினமையின் வசனிப்பன், கமனிப்பன், கொடுப்பன், ஆநந்திப்பன், விசர்ச்சிப்பனென்னுங் கன்மேந்திரியங்களுடனும், சூழ்வனெனென்றமையின் நிச்சயிப்பன், சிந்திப்பன், அபிமானிப்பனென்கிற அந்தக்கரணங்களுடனுங் கூடி, அவற்றின் குணகுணங்களுக்கு விலட்சணமாயிருந்து அறிவது துரியனென்பது பெற்றாம். (கoச)

(அ. கை.)

அகங்காரமானது பிரமப்பிரகாசங் காரணமாக விடய ஞானத்திற் சுழன்று சுழுத்தியில் அடங்குநிலைமை யினையதென வுணர்த்துகின்றது.

வெயிலினிடைக் காட்டுபடி மக்கலமுண் மனையை
விளக்குதல்போ லேதுரியன் றன்றிருச்சந் நிதியி

ஙியலுறுதற் சைதன்யப் பதிவிம்பந் தன்பா
லெய்தலும்பெற் றிடுதலினு லச்சடவாங் காரம்
பயில்விடய வுணர்வினெடு நனவுகன வுழன்று
பகர்சுழுத்தி தனிலடங்கு மவ்வழக்க முரைப்பிற்
செயிர்தருமாங் காரமடங் குறுசுழுத்தி தன்னிற்
செறியவித்தை யுட்சுவருந் துயிற்கதவு மின்றி.

(இ. ரை.) "வெயிலினிடைக் காட்டு படிமக்கல முண்மனையை விளக்குதல்போல்" எ. து. சூரிய சந்நிதானத்திற் காட்டப் பெற்ற கண்ணுடி யானது அறை வீட்டை விளக்குமா றெங்ஙனமோ, அதுபோல, "தூரியன்றன் றிருச் சந்நிதியி னியலுறு தற்சைதன்யப் பதிவிம்பந் தன்பா லெய்தலும்" எ.து. ஆன்மாவினது சிரேஷ்டமாகிய சந்நிதானத்தில் நிகழுந் தனது சைதன்யப் பிரதிவிம்பமானது தன்பாலடையப்பெறவும், "பெற்றிடுதலினு லச்சடவாங்காரம் பயில்விடய வுணர்வினெடு நனவுகனவுழன்று பகர்சுழுத்தி தனி லடங்கு மவ்வழக்க முரைப்பில்" எ. து. அங்ஙனம் பெற்ற அதனுற் சடமா நின்றுள்ள அந்த அகங்காரமானது நிகழும் விடய வுணர்ச்சி காரணமாக நனவு கனவுகளிற் பலவா றுழன்று சொல்லப் பட்ட சுழுத்தியின்கணொடுங்கி நிற்கும்; அவ்வாறுன நெறியைச் சொல்லு மிடத்து, "செயிர்தருமாங்கார மடங்குறு சுழுத்திதன்னிற் செறி யவித்தை யுட் சுவருந் துயிற் கதவு மின்றி" எ. து. காமாதிகளை விளைவிக்கத்தக்க அகங்காரமானது ஒடுங்கத்தக்க சுழுத்தி யவத்தையில் திடமாகிய அவித்தை யென்னும் உட் சுவரும் நித்திரையென்னுங் கதவுமில்லாமல் எ. று. (கoரு)

அவித்தை யுட்சுவரும் துயிற் கதவும் உருவகம்.

(அ. கை.)

இன்னும் அகங்காரத்தின் நிலைமையினை யுணர்த்துகின்றது.

நடுக்கமறு தீபமாத் தனைத்தானே விளக்க
னவில்பிரத்தி கான்மாவின் சோதியாம் பின்னர்த்
தொடக்கிவரு காலகரு மாதிசமீ ரணனுற்
றுயிற்கதவந் திறந்திடவவ் வவித்தையது தன்னி
லடுக்குமுத லவத்தைமக தத்துவமாந் தெற்றி
யடுத்திருந்தாங் காரமெனும் வெண்பளிக்கு மணிதான்
படைத்தலருந் துரியசுடர்ப் பதிவிம்பம் பதியப்
பட்டுமுனம் போற்சீவ னென்னவே நின்று.

(இ. ரை.) "நடுக்கமறு தீபமாத் தனைத்தானே விளக்க னவில் பிரத்தி கான்மாவின் சோதியாம்" எ. து. அசைவற்ற தீபத்தைப்போலத் தன்னைத் தானே விளக்கிக்கொள்ளுதல் முற்கூறிய பிரத்திகாத்மாவினது சொப்பிரகாசமாகும். "பின்னர்த் தொடக்கி வரு கால கருமாதி சமீரணனுற் றுயிற்

கதவந் திறந்திட" எ.து. பின்பு விடாமற் ஹொடர்ந்து வருகின்றகால கரும முதலியவைகள் மகாப்பிராணனென்னும் வாயுவினால் நித்திரையென்னுங் கதவைத்திறக்க, "அவ்வவித்தையது தன்னி லடுக்குமுத லவத்தை மக தத் துவமாந் தெற்றி யடுத்திருந் தாங்காரமெனும் வெண் பளிக்கு மணிதான்" எ. து. முற்கூறிய அவித்தையில் அடுத்திருந்த முதலவித்தை யென்னும் மக தத்துவமாகிய வாசற்படியிற் சேர்ந்திருந்த அகங்காரமென்னும் வெண்பளிங் குக் கல்லானது, "படைத்த லருந் தூரிய சுடர்ப் பதிவிம்பம் பதியப்பட்டு முனம்போற் சீவனென்னவேநின்று" எ. து. செய்தற்கரிய ஆத்மப் பிரகாச மானது பிரதிவிம்பிக்க அதனை யமையப்பெற்று முன்போலச் சீவனென்று சொல்லும்படியாகவே யிருந்து எ. று.

தீப மெனல் உவமை. மக தத்துவமாந் தெற்றி, அகங்கார மென்னும் வெண் பளிக்கு மணி இவை யுருவகம். கருமாதியென்றதனால் இச்சையும், ஞானமுங் கூட்டுக. எனவே, உயிர்களினது இச்சா ஞானக் கிரியைகளென் பனவாம். சமீரணனென்றது சீவசம்பந்தமான மகாப்பிராணன். முதல வத்தை மகதத்துவ மென்றமையின், இதற்குக் காரணமான அவித்தை மூலப்பிரகிருதியென்பது பெற்றாம்.

வினா:—அதை யிச்சுழுத்தியிற் கூறலாமோ?

விடை:—இங்ஙனம் பிரமத்வைதயே கூடத்தனாகக் கூறுதலின் அதில் ஆரோபித கிரமப்படி பிரகிருதியாதிய மூன்றையுங் கூறினாரென்க.

வினா:—சுழுத்தியில் மகாப்பிராண னிருக்கின்ற தெங்ஙனமோ?

விடை:—அவித்தையில் அடங்கியிருந்த அறிவின் புடைபெயர்ச்சியே காற்றுதலினானும், அதுவே ஜீவசம்பந்தமா யிருத்தலினானும், அதுவே யுள்ளி ருந்து துயிற் கதவத்தைத் திறப்பதற்கும் அடைப்பதற்கும் ஏதுவாயிருத்தலி னானும், பண்டித பாமர சாதாரணமாய்ச் சுழுத்தியவத்தையிற் பிராணனி ருக்கின்ற அனுபவத்தினானும் அச்சுழுத்தியிற் பிராணன் உண்டென்பத ற்கு ஐயமின்றென்க. (கoசு)

(அ. கை.)

இதுவுமது.

சொற்பனமா நடுமனையை விளக்கியே பொறியாஞ்
 சுருங்கையினிற் போந்தநன வெனுமுன்றில் விளக்கு
முற்பகருங் காலகரு மாதிசமீ ரணனுன்
 மூடலுமத் துயிற்கதவங் காரியவாங் கார
நற்படிக மணியவித்தை தனிலடங்கச் சென்று
 நனவுகன வெனுமுன்றி னடுமனைக ளிருளாத்
தற்படிக மணிக்கதவு மறிவொளிதன் முதலாந்
 தனித்துரிய விளக்கையடைந் தேகமா மன்றே.

(இ. ரை.) "சொற்பனமா நடுமனையை விளக்கியே பொறியாஞ் சுருங் கையினிற் போந்து" எ. து. சொப்பன மென்னும் நடுவீட்டை விளங்கச் செய்து, ஐம்பொறியென்னும் பலசணிவாயிலாக வெளிப்பட்டு, "நனவெனு முன்றில் விளக்கு முற்பகருங் காலகருமாதி சமீரணனுன் மூடலு மத்துயிற் கதவம்" எ. து. சாக்கிரமென்னும் முற்றத்தில் விளக்குகின்ற முற்கூறிய கால கருமாதிகள் மகாப்பிராணனால் அந்த நித்திரைக் கதவை மூடவும், "காரிய வாங்கார நற்படிக மணி யவித்தைதனி லடங்கச் சென்று" எ. து. மக தத்துவ காரியமாகிய அகங்காரமென்னு நல்ல படிகக்கல்லான தவித்தை யிடத் தடங்குமாறு சென்று, "நனவு கனவெனு முன்றி னடுமனைக ளிரு ளாத் தற்படிக மணிக்கதவு மறிவொளிதன் முதலாந் தனித்துரிய விளக்கை யடைந்தேகமாம்" எ. து. சாக்கிர சொப்பன மென்னும் முற்றம் நடுவீடு முதலியவைகள் இருளாகும்வண்ணந் தானகிற படிகக் கல்லிற் பிரதிபலித்த தனக்கு முதலாயுள்ள ஞானப்பிரகாசத்தையுடைய ஒப்பற்ற ஆத்மப் பிரகா சத்தையடைந்து ஏகமாகவிளங்கும் எ. று.

அன்று ஏ அசைகள். சொப்பனமா நடுமனை, பொறியாஞ் சுருங்கை, நனவெனு முன்றில், துயிற் கதவம், அகங்கார நற்படிக மணி இவை யுருவக அலங்காரம். விளக்கி, போந்து, சென்று, அடைந்து, ஏகமாமென முடிக்க. ஆத்மாவின் சிற்சாயை தங்கியவிடத்து அவைபோலத் தோற்றிய அகங்கார மானது, அவத்தாத்திரயங்களிற் சஞ்சரித்து அவற்றில் அடங்கும்போது தானவத்தையிலும் தான்பெற்றிருந்த சிற்சாயை அதன்காரணமான ஆத்மா வினிடத்திலும் அடங்கு மென்க. (கOஎ)

(அ. கை.)

ஆத்மாநாத்ம இலக்கணம் இனையவென வுணர்த்துகின்றது.

இத்திறமிங் ககமினது பாவாபா வங்க
 ளிலங்குநன வாதிகளி னவிகார மாகி
யுய்த்துணரு முயிர்வேறென் றிருத்தலினு லென்று
 முரைத்தவக மான்மாவன் றெனவறிக புறம்பு
வைத்தவிட யங்கடமக் கான்மாவாய்ப் பரமான்
 மாவிற்கு வேத்தியமா தலிற்சடா சடமா
யத்தமதின் முன்பின்போ லொளியிலதா மகந்தைக்
 காகஞ்சிற் சாயையான் மாவுடனும் புணர்ச்சி.

(இ.ரை.) "இத்திற மிங்ககமினதுபாவாபாவங்க ளிலங்கு நனவாதிகளி னவிகாரமாகி" எ. து. இங்ஙனம் இங்குள்ள அகங்காரத்தின் அறிவறியாமை விளங்குகின்ற சாக்கிர முதலிய அவத்தையின்கண் விகார முடையதாகி, "உய்த்துணரு முயிர்வேறென்றிருத்தலினு லென்றுமுரைத்த வகமான்மா வன்றெனவறிக" எ. று. சென்றறியும் பிரத்தியேகாத்மாவென ஒன்றிருப்ப தினுல் முற்கூறிய அகங்கார மெப்போதும் ஆத்மா அல்லவென்று நீயறிந்தி

டுதி. "புறம்பு வைத்த விடயங்க டமக் கான்மாவாய்ப் பர மான்மாவிற்கு வேத்திய மாதலில்" எ. து. புறம்பாக வைக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு ஆன்மாவாகவும், பிரத்தியேகான்மாவிற்கு அறிபடுபொருளாகவும் இருக்கப் பெறுதலின், "சடாசடமாயத்தமதின் முன்பின்போ லொளியிலதா மகந் தைக் காகஞ் சிற்சாயை யான்மாவுட னும்புணர்ச்சி" எ.து. சட சித்தாயுங் கண்ணாடிக்கு முன்பின்போல விஸ்மரணையுளதாயும், தஸ்மரணையிலதாயும் நிற்கின்ற அகங்காரத்திற்குத் தூலதேகத்தோடுஞ் சிற்சாயையோடும் ஆத்மா வோடுந் தாதாத்மியமுளவாம் எ. று.

உய்த்துணரு மென்பதில் யகர வொற்று ஆசெதுகை. ஆம் புணர்ச்சி யெனவே தாதாத்மியத் திரயமெனப் பெற்றாம். ஆடிக்கு முன்பு ஒளியும், பின்பு இருட்டுமாதல்போல் அகங்காரத்திற்கு முன்பு சித்தும், பின்பு சடமு மாம். ஆகவே, இவ்வகங்காரஞ் சித்திற்குச் சடமுஞ் சடத்திற்குச் சித்துமாத லிற் சிற்சட வடிவமென்க.

வினு:—அற்றேல், ஒருபொருள் இருதன்மை யடையுமோ?

விடை:—அத்தம்போ விருக்குமென்க.

வினு:—அற்றேல், கண்ணாடியின் பின் இரதப் பூச்சினுல் இருட்டு வந்த தன்றிச் சுபாவ மன்றே?

விடை:—இவ்வகங்காரத்திற்கு முன்பு சிற்சாயாவொளியும் பின்பு சட சாயா மலினமும் இருத்தலின் அங்ஙனமாயிற்றென்க.

வினு:—அற்றேல், முன் சடமெனக் கூறிப் பின் சிற்சடமெனக் கூற லாமோ ?

விடை:—சடமாயிருந்த ஆடிக்குச் சூரிய னுளியை வாங்கி யிருளை விளக்குந் தெளிவொன் றிருப்பதுபோல, இவ்வகங்காரஞ் சட மாயினுங் கூடஸ்த னுளியைவாங்கி விடயங்களை விளக்குதலின் இங்ஙனங் கூறலா யிற்றென்க. ஒளி அறிவும், இலது அறியாமையுமெனக் கொள்க.

முன், பின், ஒளி, இல தெனும் இந்நான்கும் உம்மைத்தொகை.

சாக்கிராதியவத்தைகளில் விகாரத்தோடுஞ் சஞ்சரிக்கும் அகங்காராதி யவத்தைகட்கு விலட்சணனுயிருந்து அறியுந் துரியனே ஆத்மாவெனவும் அங்ஙனஞ் சட சித்து ரூபமாய்ச் சஞ்சரிக்கும் அகங்காரம் கற்பிதாத்மா வெனவும், அவன் சஞ்சரிக்குஞ் சாக்கிராதி யவத்தைகள் அநாத்மா வென வுந் தெரிவித்ததென்க. (கOஅ)

(அ. கை.)

முன்னர்ச் சடசித்தென்ற அகங்காரத்திற்கு வருஞ் சம்பந்தங்களினுல் தாதாத்மத் திரயம் உணர்த்துகின்றது.

வெப்பினே னுனெனலாற் சிற்பதிவிம் பந்தான்
மேவுமாங் காரசம் பந்தத்தாற் றூல

மெய்ப்படுவ வெம்மைமுத லனவறிதல் கரும
விளைவாகிக் கருமசமா நானறிந்தே னெனலாற்
றப்பரிய சிற்சாயை யுடனவ்வாங் கார
சம்பந்தஞ் சிருட்டிமுதன் முத்தியள வாகப்
பொய்ப்பரிசி னியல்பாகு நான்கருத்த னெனலாற்
புணர்ச்சியிலான் மாவினுட னிணையதின்சம் பந்தம்.

(இ. ரை.) "வெப்பினே ஞெனலாற் சிற் பதிவிம்பந்தான் மேவும்" எ. து. யானிச்சையுடையனென் றிருத்தலால் ஞானப் பிரதிவிம்பயுத்தனும், "ஆங்கார சம்பந்தத்தாற் றூல மெய்ப்படுவ வெம்மை முதலன வறிதல் கரும விளைவாகிக் கருமசமா நானறிந்தே னெனலாற் றப்பரிய சிற்சாயை யுடன்" எ. து. அகங்கார சம்பந்தமாக நிற்றலாற் றூலதேக சம்பந்தமா யிருத்தலாம்; உட்டண முதலியவைகளை யறிதற் கியைந்த கருமத்திற்கு விளைவாகி நிற்றலாற் கன்மஜ தாதாத்மிய மெனப்படுவதாம்; யானறிந்தே னென் றநுபவ மிருத்தலாற் கெடாத சிற்சாயை சம்பந்தத்ததாம்; "அவ் வாங்கார சம்பந்தஞ் சிருட்டிமுதன் முத்தியளவாகப் பொய்ப்பரிசி னியல் பாகும்" எ. து. அந்த அகங்கார சம்பந்தஞ் சிருட்டிமுதன் முத்திகாறும் மெய்யாக நிற்றலிற் சகஜ தாதாத்மிய மெனப்படுவதாம்; "நான் கருத்த னெனலாற் புணர்ச்சியி லான்மாவினுட னிணையதின் சம்பந்தம்" எ. து. நான் கர்த்தாவென்பதினுல் அசங்கமான பிரத்தியேகாத்மாவினுடன் அவ் வகங்கார சம்பந்த மிருத்தலால் எ.று.

தாதான்மிய மென்பது ஒன்றுபடல். சிற்சாயை தங்கிய அகங்காரமானது நானிச்சாரூபி யென்பதனிலிருந்து தூலசம்பந்தத்தினுல் அதன் கன்மமான சீதோஷ்ணுதி சுக துக்கங்களை யறிதலே கன்மஜ தாதாத்மியமெனவும், அவ்வகங்காரமானது சீவனுடன்கூடி நானறிந்தேனென்பது இயல்பாயிருத்தலிற் சகஜ தாதாத்மியமெனவும், அவ்வகங்காரம் ஆத்ம சம்பந்தத்தினுல் நான் கருத்தாவென் றறிவது பிரமையாதலிற் பிராந்திஜ தாதாத்மிய மெனவுங் கூறினுர்.

அகங்கார சம்பந்தமான இத் தாதாத்மியத் திரயங்களால் இவ்வகங்காரம் ஆத்துமா அன்றென்பதை யுணர்த்தியதென்க. (கoக)

(அ. கை.)

முன் இந்துவினையென்ற கவிமுதல் இதுகாறும் மாயையினுல் உண்டாய திரிசியங்களின் இலக்கணங்களைப் பகுத்தறிகின்ற திரிசியவிவேகம் இவ்வளவெனக் கூறி, மேல் இத்திரிசியத்தை நீக்கும் நிமித்தம் இவற்றைச் சங்கிரகமாகச் சுருக்கி யாத்மாவில் ஆகந்துகமாகத் தோற்றின அஞ்ஞான முதலிய ஏழவத்தையின் இலக்கணங் கூறுவான் றெடங்கி, இச்செய்யுளில் அவ்வேழவத்தையின் நாமம் உணர்த்துகின்றது.

இசைப்பிலது பிராந்திசன் னியமாகு மென்னு
மிவைமுழுதுஞ் செப்புதிரி சியவிவே கந்தான்
மிசைப்புகல்வ வஞ்ஞான மாவரண மிக்க
விட்சேபம் பரோட்சமப ரோட்சஞா னம்பின்
வசைப்படுத லுறுஞ்சோக நிவர்த்தியதன் மீது
வருநிரங் கிசதிருத்தி யெனுமவித்தை யேழுந்
திசைப்புறுத லுறுஞ்சீவர்க் காவனவா மிவற்றின்
றிறமனைத்து முறைபிறழா தினியெடுத்து மொழிவாம்.

(இ. வை.) "இசைப்பிலது பிராந்தி சன்னியமாகு மென்னு மிவை முழுதுஞ் செப்பு திரிசிய விவேகந்தான்" எ. து. சொல்லுமிடத்து அந்தச் சம்பந்தமே பிராந்தி சன்னிய தாதான்மிய மெனப்படும். இங்ஙனமாகக் கூறிய இவை முழுவதுஞ் சொல்லுகின்ற திரிசியவிவேகமெனப் படுவதாம். "மிசைப்புகல்வ வஞ்ஞான மாவரண மிக்கவிட்சேபம் பரோட்ச மபரோட்ச ஞானம் பின் வசைப்படுதலுறுஞ் சோகநிவர்த்தி" எ. து. மேலே சொல்லப் படுவன: அஞ்ஞானமும், ஆவரணமும், மிக்க விட்சேபமும், பரோட்சஞான மும், அபரோட்ச ஞானமும், பின்னர்க் குற்றத்தை யடைகின்ற துக்கத்தி னின்று நீங்குதலும், "அதன் மீது வரு நிரங்கிச திருத்தியெனு மவித்தை யேழுந் திசைப்புறுத லுறுஞ் சீவர்க் காவனவாம்" எ. து. அதற்குமே லுண் டாகுந் தடையற்ற ஆனந்தமும் என்கின்ற அவத்தைகளேழுமாம். இவ்வே ழுந் திகைத்தலே யியல்பாகவுடைய சீவர்களுக் காக வேண்டுவனவாம். "இவற்றின் றிறமனைத்து முறைபிறழா தினியெடுத்து மொழிவாம்" எ. து. இவற்றின் றன்மைக ளனைத்தையும் ஒழுங்காக இனி யெடுத்துச் சொல்லு தும் எ. று.

திகைப்பெனல் திசைப்பென்றாயது எதுகைநோக்கி வந்த விகாரம். அம்சமென்பது அங்கிசமென்றாயது தென்மொழி பற்றியென்க.

வினா:—அங்ஙனந் திரிசியவிவேகமெனக் கூறி இவண் அவத்தையென வேறு பிரித்த தென்னை?

விடை:—இந்நூல் திருக்கு திரிசியமென்னும் இரண்டில் திரிசியத்தின் அபிப்பிராயமான அஞ்ஞானவரண விட்சேபத்தையும், திருக்குவின் அபிப் பிராயமான அபரோட்சாதி மூன்றையும் இத்திரிசியத்தை விடுதற்குந் திருக் குவைப் பற்றுதற்கும் ஏதுவாக மத்தியி லுள்ள பரோட்ச ஞானமுமான ஏழ வத்தையும் பற்றுதலும் விடுதலுமாதலின் இவற்றையுந் திரிசியத்தி லடக்கிக் கூறினரேனும் இவை மலினவத்தையை நீக்குஞ் சுத்தாவத்தை யெனத் தோன்றப் பிரித்தாரென்க. (ககo)

(அ. கை.)

மேற்கூறிய சத்தாவத்தையினுள் அஞ்ஞானம் ஆவரணமென்பவற்றின் இலக்கணம் இனையவென வுணர்த்துகின்றது.

புன்னெறிகொள் குடும்பியாய் வலியறுமோர் சித்துப்
போலியாஞ் சீவனுயர் சுருதிவிசாரத்தின்
முன்னமொரு தன் சொருப மாகியபே ரொளியா
முதற்றுரிய நிலையறியா திருந்திடலஞ் ஞானம்
பின்னொருகா லுயிரியல்பு கூறுமிடத் தின்று
பிரத்திகான் மாத்தோன்றா தெனுங்கலக்க மிரண்டும்
பன்னியவஞ் ஞானகா ரியமாகு மென்னப்
பகர்தருமா வரணமென்பர் பலகலைகற் றுணர்ந்தோர்.

(இ. ரை.) "புன் னெறிகொள் குடும்பியாய் வலி யறு மோர் சித்துப் போலியாஞ் சீவனுயர் சுருதிவிசாரத்தின் முன்ன மொரு தன்சொருப மாகிய பேரொளியா முதற் றுரிய நிலை யறியா திருந்திட லஞ்ஞானம்" எ. து. அற்பநெறிக் கியைந்த சமுசாரத்தை யுடையவனுய்த் தன்னைத்தான் உணர்தற்கு வலி யற்ற வோர் சித்துப்போலியா நின்றுள்ள சீவ னுனவன் பிரபல சுருதி விசாரணை யடைவதற்கு முன்ன ரொப்பற்ற தனது யதார்த்த சொருபமா நின்றுள்ள சுயம் பிரகாசமாகிய மேலாய துரிய நிலையை யறியாதிருப்பதே யஞ்ஞானமெனப் படுவதாம்; "பின்னொருகா லுயி ரியல்பு கூறுமிடத் தின்று பிரத்திகான்மாத் தோன்றாதெனுங் கலக்க மிரண்டும்" எ. து. பின்னொருகாலத்தில் ஆன்ம இலக்கண மொருவர் இனையதெனக் கூறுமிடத்து அஃதில்லையென்றும், அந்தப் பிரத்தியகாத்மா உண்டெனிற் றோன்றாதாவென்றும் எய்துங் கலக்கமாகிய நாஸ்தி நபாதியாகிய இரண்டும், "பன்னிய வஞ்ஞான காரியமாகு மென்னப் பகர்தரு மாவரணமென்பர் பலகலை கற்றுணர்ந்தோர்" எ. து. முற்கூறிய அஞ்ஞான காரியமாகுமென்று சொல்லத்தக்க ஆவரணமெனச் சகல கலை தேர்ந்துணர்ந்த வல்லோர் கூறாநிற்பர் எ. று.

இன்றெனலை நாஸ்தியெனவும், தோன்றாதெனலை நபாதியெனவுங் கொள்க. இவ்விரண்டையும் ஏற்கப்பாலது ஆவரணமெனப் பெறும். (கககூ)

(அ. கை.)

நிறுத்தமுறையான் ஏனைய விட்சேபமுதலிய மூன்றின் இலக்கணம் இனையவென வுணர்த்துகின்றது.

கருத்தனுமொண் கருமபலப் போத்திருவுந் தானுய்க்
கருதியுடம் பபிமானி யாஞ்சீவன் றானே
யுரைத்தலரும் விட்சேபஞ் சுருதிகுரு வுண்மை
யுரையாலுண் டெபிரெனவே யறிதலசத் தென்று
நிரைத்தமுத லாவரண நிவர்த்தகமாம் பரோட்ச
நீபிரம மெனும்வேத மொழிவிசா ரத்தால்
வரத்துரியன் றானெனவே வறிந்திடுத லபாவா
வரணநிவர்த் தகமாகு மபரோட்ச ஞானம்.

(இ. ரை.) "கருத்தனு மொண் கரும பலப் போத்திருவுந் தானுய்க் கருதி யுடம் பபிமானியாஞ் சீவன் றானே யுரைத்தலரும் விட்சேபம்" எ. து. கர்த்தாவும், ஒள்ளிய கருமபலத்தை யநுபவிக்கும் போக்தாவுந் தானெனவே நினைத்துத் தூலவுடம்பை யபிமானிக்கும் அபிமானியாகிய சீவன் றானே யெனக் கூறுநிற்றல் அரிதாகிய விட்சேபமெனப் படுவதாம். "சுருதி குரு வுண்மை யுரையா லுண் டெயிரெனவே யறித லசத் தென்று நிரைத்த முத லாவரண நிவர்த்தகமாம் பரோட்சம்" எ. து. பிரபல சுருதியி னுண்மை யுரையானுஞ் சற்குருவி னுண்மை யுரையானும் பிரத்தியகாத்மா வுண் டென வுண்மையாகவே யறித லசத்தென்று முன்னர்க் கூறிய முதலாவர ணமானது நிக்ரகமாகத்தக்க பரோட்சமெனப் படுவதாம். "நீ பிரமமெனு வேதமொழி விசாரத்தால் வரத் துரியன் றானெனவே யறிந்திடுத லபாவ வரண நிவர்த்தகமாகு மபரோட்ச ஞானம்" எ. து. நீயே பிரமமென கூறும் பிரபல சுருதிமொழியை விசாரிக்கும் விசாரத்தாற் பிரத்தியகாத்மா தானென்று அநுபூதி வரத் தெளிந்திடுதலே முன்னர் அபாவமெனக்கூறி இரண்டாம் ஆவரணமானது நிக்ரகமாகத்தக்க அபரோட்ச ஞானமென படுவதாம் எ. று.

முதலாவரணமெனலால் இரண்டாவதாவரணமெனக் கூறினும். அசத் தாவரணமெனலை நாஸ்தி யெனவும், அபாவாவரணமெனலை நபாதி யெ வுங் கொள்க. ஆமென்னும் ஆக்கவினைமுற்றை மூன்றிடத்தும் வருவிக் ஞானமென்பதைப் பரோக்ஷத்துடனுங் கூட்டினும். பரோக்ஷ ஞானத்தா நாஸ்தியும், அபரோக்ஷஞானத்தால் நபாதியுமாய ஆவரணம் நீங்கிற்றென்க

நீ பிரமமெனும் வேதமொழி யென்பது: நீயே பிரமம், பிரமமே நீயெ ன்றவிடத்துள்ள தேற்றேகாரத்தில் அவ்விருதன்மையு நீங்கிச் சுயம்பிரகாச ஞன ஆத்மனே தானென விளங்கும் அத்துவித ஸ்வரூபமாம். (ககஉ)

(அ. கை.)

ஏனைய இரண்டு அவத்தைகளின் இலக்கணம் இனையவென வுணர் த்துகின்றது.

துரியநிலை யடைந்ததற்பி னுன்கருத்த னுன்போத்
திருவென்னுஞ் சீவவுருத் துக்கமகன் றிடுத
லரியதெனு மச்சோக நிவர்த்தியாஞ் செய்தே
யடைதலுறு பலனனைத்து மடைந்தனமென் றமைதல்
பரிவினிரங் கிசதிருத்தி யிரண்டுமப ரோட்ச
பலமாகு மறிவுருவா மான்மாவிற் கென்றுந்
தெரியுமப ரோட்சமுள தாதலினு லவற்குச்
சேர்த்தலெவ்வா றஞ்ஞான முதலனவிங் கென்னில்.

(இ. ரை) "துரியநிலை யடைந்ததற்பி னுன்கருத்த னுன்போத்திரு வென்னுஞ் சீவ வுருத் துக்க மகன்றிடுத லரியதெனு மச்சோக நிவர்த்தி"

எ. து. ஆன்ம சாட்சாத்கார நிலையை யுள்ளவாறடைந்து, அதன்பின்னர் நான் கன்ம கருத்திரு, நான் கன்ம பலப் போத்திரு வெனக் கூறுஞ் சிதாபாச வடிவமான துக்கத்தினின்றும் நீங்குதலே களைதற் கரியதெனத் தக்க துக்க நிவர்த்தி யெனப்படுவதாம்; "யாஞ் செய்தே யடைதலுறு பல னனைத்து மடைந்தனமென் றமைதல் பரிவி னிரங் கிசதிருத்தி" எ. து. யாமரிய தவங்களைச் செய்து அடைதற்கியைந்த பயனனைத்தையு மடைந்து பதைப் பற்றிருந்தனமென் றமைதிபெறலே துக்கமற்ற தடையற்ற ஆனந்த மெனப்படுவதாம்; "இரண்டு மபரோட்ச பல மாகும்" எ.து. இங்ஙனங் கூறிய இவ்விரண்டும் அபரோட்ச ஞானத்தின் மேலாய பயனெனப் படுவதாம்; "அறிருவா மான்மாவிற் கென்றுந் தெரியு மபரோட்ச முளதாதலினு லவற்குச் சர்தலெவ்வா றஞ்ஞானமுதலன விங்கென்னில்" எ. து. ஞானமே வடிவாளங்கும் பிரத்தியேகாத்மாவிற் கெப்போதுந் தன்னைத்தா னுணரத்தக்க யபரோட்ச ஞானம் இயல்பாக உண்டாயிருத்தலினுல் அவ்வான்மாவிற்கு அஞ்ஞானமுதலிய வேழும் இங்குவர்தடைதற் கேதென்னைகொலோ வெனத் தகட்பையாயின் எ. று.

ஏ ஈற்றசை. சோகமென்றது கூடஸ்தன் இல்லையென்ற துன்பம்.

அவாங்மனோகோசரமாய்த் தானேதானய் விளங்கும் அதீதமான கூடத்தன் தனது லீலா விபூதியினுல் எவ்விடத்தும் அது வதுவாய் விளங்குந் தன்னை யறியும் நிமித்த முண்டான சங்கற்பம் அந்தர் முகத்தை நோக்கியுதிற் சுரையாது பகிர்முக நோக்கத்திற் றனது நிரதிசயம் வெளிப்படாமையை யானறியேனென்ற சங்கற்பத்துக்கு முன்னுள்ளவிடம் அஞ்ஞானமும், அது விசாரத்தாற் றேடுமிடத்து அவ்வதீதம் இவ்விருத்திக் கெட்டாமையான் இல்லையெனக் காண்ப தாவரணமும், அவ்வனுபவம் விளங்கவில்லையே யென வருந்தி விரிகின்ற விருத்தியை யுடையது விட்சேபமும், ஆசிரியனுல் அந்நிரதிசயம் இருக்கின்றதெனக் கூறும் உத்தியினுன் அமர்ந்திருக்குமிடத்து முன் னில்லையென்ற மயக்கம் நீங்கி யிருப்பதாக நிச்சயிப்பது பரோக்ஷமும், அவ்வாசிரியன் சுருதி யுத்தி யனுபவத்தால் வெளிப்படுத்துமிடத்து, முன் றோன்றுநின்ற மயக்கம் நீங்கித் தானகக் காண்பது அபரோக்ஷமும், இவற்றுன் முன்னில்லை யென்றதனுல் வந்த கர்த்திருத்துவ போக்த்திருத்துவமாதிய துன்பங்களீங்குவதே சோகநிவிர்த்தியும்,இவ்விடத்திற் றனக்குத் தானே யுள்ள இன்பஞ் விளங்குவது நிரங்கிச திருத்தியுமாமென்க. (ககூ)

(அ.கை.)

முற்கூறிய உவமேயும் போதமாம்படி யிவ்வவத்தைகள் வந்தகாரணம் நன்றாக விளக்கவேண்டு மென்ற வினவை நோக்கி யுவமான பூருவமாகக் கூறுவான் றொடங்கிய அஞ்ஞானதி நான்கவத்தையின் இலக்கண முணர்த்துகின்றது.

கடந்துநதி பதின்மர்தமை யெண்ணுங்கா லொருவன்
　　கண்டுநவ புருடரைப்பத் தாமவன்ரு னெனவே
யடைந்தறியா திருத்தலே யஞ்ஞானம் பத்தா
　　மவனிலைகா ணப்படா னென்னுமிரு பிராந்தி
யிடும்மைதரு மாவரண நதியுளவ னிறந்தா
　　னெனுந்துக்கம் விட்சேபம் வேறொருவன் மொழியாற்
கிடந்ததொரு துறக்கமென வுளனெனவே யறிதல்　　[ம்.
　　கிளர்ந்தவவு னிலையென்ற லொடுபகைத்தல் பரோட்ச

(இ. ளை.) "கடந்து நதி பதின்மர்தமை யெண்ணுங்கா லொருவன் கண்டு நவபுருடரைப் பத்தாமவன்ருனெனவே யடைந்தறியா திருத்தலே யஞ்ஞானம்" எ. து. பத்துப்பேரோர் பிரவாகமான வாற்றைக் கடந்தக் கரையில் தம்மைத்தாம் எண்ணுங்கால் அவர்களிலொருவன் ஒன்பதுபேரை யெண்ணிக் கண்டு பத்தாவது புருடன் தானெனவே தெளிவுற் றறியாது தறிபோ னிற்றலே யஞ்ஞான மெனப்படுவதாம், "பத்தாமவனிலை காணப் படானென்னு மிரு பிராந்தி யிடும்மைதரு மாவரணம்" எ. து. பத்தாவா னில்லையென்னு நாஸ்திகமும் இருந்தாற் காணப்படானெ வென்னு நபாதிக முமாகி இவ்விரண்டு மயக்கமுந் துன்பத்தையே தரத் தகுந்த வாவரண மெனப் படுவதாம், "நதியுளவன் இறந்தானெனுந் துக்கம் விட்சேபம்" எ. து. இவ்வாற்றில் அவ னிறந்து விட்டா னென்னுந் துக்கமே விட்சேப மெனப்படுவதாம், "வேறொருவன் மொழியாற் கிடந்ததொரு துறக்கமென வுளனெனவே யறிதல் கிளர்ந்த வவ னிலையென்றலொடுபகைத்தல் பரோட்சம்" எ. து. வழிபோக்கனாகிய வொருவனது மொழியினால் இம்மை துக்க மயமென்று கலக்க முற்றோன் துக்கமற்ற மறுமை சுவர்க்க மொன்றுள தென்று அறிந்தாற்போலப் பத்தாவான் உயிரோடு இங்கிருக்கின்ருனென்று அறிந்துகொள்ளுதலே முற்கூறிய பத்தாவான் இல்லை யென்பதனோடு முரணுயுள்ள பரோட்சமெனப் படுவதாம் எ. று.

அஞ்ஞான முதலிய நான்கும் ஆக்கவினை யெஞ்சி நின்றன.　　(ககச)

(அ. கை.)

ஏனைய மூன்றிற்கும் உவமானங் கூறுகின்றது.

சங்கைநவ புருடரொடு முறையெண்ணி நீயே
　　தசமனெனத் தனைத்தானே யிருந்தபடி யறித
லிங்குவரு தசமன்கா ணப்படா னெனலோ
　　டிகலும பரோட்சமா நதியிலிறந் தனனென்
றங்குவரு துயரகறல் சோகநிவர்த் தியதா
　　மடைந்ததன தியனிலையிற் சுகித்திருத்த ருனே
துங்கநிரங் கிசதிருத்தி யெனவறிக வினிமேற்
　　றொல்வேத வாக்கியமாம் விசாரமெடுத் துரைப்பாம்.

(இ. ரை.) "சங்கை நவபுருடரொடு முறையெண்ணி நீயே தசமனென்னத் தனைத்தானே யிருந்தபடி யறிதல்" எ. து. ஐயத்தை யுடைய ஒன்பது புருடரோடு முறையே யெண்ணி நீயே பத்தாவா னெனக் கூற, அவன் தனைத்தானே யிருந்தபடி யிருந்தறிதலே, "இங்குவரு தசமன் காணப்படா னெனலோ டிகலு மபரோட்சம்" எ. து. இப்போ திங் கெண்ணிக்கையில் அகப்பட்ட பத்தாவா னிருந்தாற் காணப்படானா வென்பதனோடு மாறா யுள்ள அபரோட்ச மெனப்படுவதாம்; "மாநதியி லிறந்தனனென் றங்கு வரு துயரகறல் சோகநிவர்த்தியதாம்" எ. து. பெரு நதியிற் பத்தாவா னிறந்தனனென் றதுகாரணமாக ஆங்கெழுந் துக்கம் போதலே துக்கநிவர்த்தி யெனப் படுவதாம்; "அடைந்த தன திய னிலையிற் சுகித்திருத்த ருனே துங்க நிரங்கிச திருத்தி யெனவறிக" எ. து. தனக்கு வாய்த்த தனது சுபாவ நிலையிற் சுகித்திருத்தலே மேலாய தடையற்ற வானந்த மெனப்படுவதா மெனத் தெரிந்திடுதி. "இனிமேற் றொல் வேத வாக்கியமாம் விசார மெடுத் துரைப் பாம்" எ. து. இனி மேல் பழைய வேத மகாவாக்கியங் காரணமாக எழும் பரமாத்மாயிக்கிய விசாரணையை யாமெடுத்துரைக்குதும் எ. று.

தசமனென்பது ஆன்மா. ஏனைய ஒன்பதும் விசுவன், தைசதன், பிராஞ்ஞன், வைசுவானரன், சூத்திரான்மா, அந்தரியாமி, சிற்சொலிதை, பொற்பு விசாந்தன், பிரசாபத்தியனுமாம். வேறொருவனென்றது ஆசிரியன். அஞ்ஞானம் தன்னைமறந்த அறியாமை. ஆவரணம் முழுதுந் தெரியாமன் மறைத்தல். விட்சேபம் அவன் இறந்தானென்றதனால் வருந்துன்பம். பரோட்சம் இருக்கின்றானென்கின்ற நிச்சயம். அபரோக்ஷம் பிரத்தியட்சமாய்க் காண்பது. துக்கநிவர்த்தி மரித்தா னென்றதனால் வருந் துன்ப நீக்கம். நிரங்கிச திருத்தி மரித்தானென்றவனைக் கண்டதனால் வந்த சுகம்.

வினா:—ஈற்றவை மூன்றும் அவத்தையாய தென்னை?

விடை:—ஏனைய நான்கும் நீங்கியவிடத்து உதித்ததாதலி னென்க.

தசமனுக்கு முன்னும் பின்னும் இன்றி விசாரணாகாலத்தில் அவாந்தரமாக இவ்வவத்தைகள் தோன்றி நீங்கினதுபோல, ஆன்மாவிற்கும் இங்ஙனமே தோன்றி நீங்கிற்றென்பது. (ககரு)

(அ.கை.)

முற்கூறிய ஏழவத்தைகளில் ஆசிரியர் முகமாய்ச் செய்யுஞ் சுருதி விசாரத்திற் பரோட்சஞானத்தா லுண்டான ஆன்ம நிச்சயத்தை யபரோட்சமாய் விளக்குவான் கருதி, வேதங்களின் முடிவான மஹா வாக்கியங்களின் இலக்கணங் கூறுவான்றொடங்கி, இச்செய்யுளில் மூன்று வாக்கியங்களின் இலக்கணம் உணர்த்துகின்றது.

விரிந்தவிதி நிடேதஞ்சித் தார்த்தபோ தகமா
வேதவாக் கியமூன்று திறனாகு மவற்றுள்

வருந்திமக முதலனசெய் கென்றல்விதி விடுக
மதுபானு திகளென்கை நிடேதம்விதி யின்றித்
திருந்துசிவ வுயிரயிக்கப் பொருடனையே தெருட்டல்
சித்தார்த்த போதகவாக் கியமாகு மென்னப்
பொருந்துமறை நான்கினுநான் குளவாஞ்சித் தார்த்த
போதகமா கியமகா வாக்கியங்க ளன்றே.

(இ. ள.) "விரிந்த விதி நிடேதஞ் சித்தார்த்த போதகயா வேத வாக்கியமூன்று திறனுகு மவற்றுள்" எ. து. விரிவா யுள்ள விதியெனவும், நிடேதமெனவும், சித்தார்த்த போதக மெனவும் வேதவாக்கிய மூன்று திறத்தனவா நிற்கும். அம்மூன்றனுள், "வருந்தி மக முதலியன செய் கென்றல் விதி விடுக மதுபானுதிக ளென்கை நிடேதம்" எ. து. மிகவும் வருந்தி யாக முதலியவைகளைச் செய்திடுதியெனக் கூறலே விதிவாக்கிய மெனப்படுவதாம்; மதுமாமிச முதலியவைகளை யேற்றலை விடுகவெனக் கூறலே நிடேதமெனப்படுவதாம்; "விதியின்றித் திருந்து சிவ வுயி ரயிக்கப் பொருடனையே தெருட்டல்" எ. து. திரிசிய விருப்பகன்றுழி விதிகடந்து பரமாத்மாயிக்கப் பொருளை மயங்காவாறு தெளிவித்தலே, "சித்தார்த்த போதக வாக்கியமாகு மென்னப் பொருந்தும்" எ. து. சித்தார்த்த போதக வாக்கியமெனப் படுவதாமென் றமைந் திருக்கும். "மறை நான்கினும் நான் குளவாஞ் சித்தார்த்த போதகமாகிய மகாவாக்கியங்கள்" எ. து. நான்கு வேதங்களினுஞ் சித்தார்த்த போதக மாகிய மகாவாக்கியங்கள் நான்குள்ளனவாம் எ. று.

அன்று ஏ அசைகள். சித்தார்த்தபோதகம் நிச்சயப்பொருளை விளக்குதல். எனவே, கூடஸ்த பிரமாயிக்கியத்தைக் கூற வந்த மகா வாக்கிய மென்க. இங்ஙனங் கூற வந்த மறை நான்கிலும் நான்குளவாஞ் சித்தார்த்த போதக மகாவாக்கியமெனவே; இருக்கு, யசுர், சாமம் அதர்வண மென்னும் நான்கு வேதங்களினும் முறையே பிரஞ்ஞானம் பிரமம், அகம் பிரமாஸ்மி, தத்தொமசி, அயமான்மாப் பிரம மென்ற இவையே யந்நான்கென்க.

வினு:—அற்றேல், இங்ஙனம் கூறிய வேதம் விதி நிஷேதமான கருமத்தையுங் கூறியதென்னை?

விடை:—அக்கருமங்களில் சிறுமையும் ஞானத்தின் பெருமையுந் தோன்ற அவற்றை நீக்கி யிதனை யடைதற்கென்க.

வினு:—யாகாதிகளை விதிப்படி செய்க வென்ற விதி வாக்கியங் கருமமாம். மதுபானுதிகளை விடுகவென்ற நிஷேத வாக்கியம் எங்ஙனங் கருமமாம்?

விடை:—விலக்குக வென்றதும் ஓர் விதி யாதலின் அஃதுங் கருமமேயாயிற்றென்க.

வினு:—அற்றேல், இவ்வேதங் கருமம் பத்தி ஞானமென மூன்றுகாண்டமாகக் கூறி, இவண் இரண்டாகக் கூறுய தென்னை?

விடை:—இவ்விரண்டிற்கும் நடுவா யிருந்த பத்திக்குத் தனக்கென வோ ருருவ மின்றி, அவ்விரண்டிற்குங் கருவியாய்க் கருமத்தைச் சேரின் அதையும், ஞானத்தைச் சேரின் அதையும் விளக்கலால் அதை யவற்றினடக்கிக் கூறியதென்க. (ககரு)

(அ. கை.)

முற்கூறிய வேதங்களிற் சாமவேதத்தின் முடிவிற் கூறுஞ் சித்தார்த்த போதகமான தத்தொமசியென்னும் மஹாவாக்கியமும் அதன் இலக்கணங்களும் விளங்க வுணர்த்துகின்றது.

உரைத்தவையுட் சிறந்ததுநற் சாமமறை புகலு
மோங்குதத்தொ மசிமகா வாக்கியமங் கதற்குப்
பரத்தலுறு தற்பதந்தொம் பதமொடசி பதமாய்ப்
பதமூன்றுஞ் சிவமுயிரங் கவற்றயிக்க முறையே
யருத்தமென லாம்பதமே பதார்த்தமொடு வாக்கி
யார்த்தங்க டமக்குச்சம் பந்தமுறை மூன்றும்
விரிக்கிலவை தாஞ்சாமா னதிகர ணம்பின்
விசேடவிசே டியம்மிலக் கணமொடிலக் கியமாம்.

(இ. ள்.) "உரைத்தவையுட் சிறந்ததுநற் சாமமறை" எ. து. முற்கூறிய நான்கு வேதங்களினுள் மேலாகச் சிறப்புற்றது நல்ல சாம வேதமெனப்படுவதாம்; "புகலு மோங்கு தத்தொமசி மகாவாக்கியம்" எ. து. சொல்லத்தக்க மேலாய தத், தொம், அசி யெனல் மகாவாக்கியமெனப் படுவதாம்; "அங்கதற்குப் பரத்தலுறு தற்பதந் தொம்பதமொ டசிபதமாய்ப் பதமூன்றும்" எ. து. அவ்வாக்கியத்திற்கு விரிவாயுள்ள தற்பதந் தொம்பத மசிபதமெனப் பதமூன்றாகும்; "சிவமுயி ரங்கவற் றயிக்க முறையே யருத்த மெனலாம்" எ. து. அப்பதங்கட்குப் பிரமமும், கூடஸ்தனும், அவ்விரண்டின் அயிக்கியமுமாகிய இம்மூன்றும் முறையே யருத்தமெனப் படுவதாம். "பதமே பதார்த்தமோடு வாக்கியார்த்தங்க டமக்குச் சம்பந்த முறை மூன்றும்" எ. து. பதமும், பதப்பொருளும், வாக்கியார்த்தமு மாகிய இம்மூன்றிற்கும் முறையே சம்பந்த மெனல் மூன்று வகைப்படும். "விரிக்கி லவை தாஞ் சாமானதிகரணம் பின் விசேட விசேடிய மிலக்கணமொ டிலக்கிய மாம்" எ. து. பகுத்துக் கூறுங்கால் அவை சாமானதிகரணம், பின்னர் விசேடண விசேடியம், இலக்கண விலக்கியங்களாம் எ. று.

முறையே யருத்த மென்றமையின் தற்பதத்திற்குச் சிவமும், தொம் பதத்திற்கு உயிரும், அசிபதத்திற்கு அயிக்கியமுங் கொள்க. சாமானதிகரண சம்பந்த மென்பது தத்தொமென்ற துவிதபதஞ் சம்பந்தமா யிருத்தலின் சமானமும், இவ்விரண்டும் அசிபதமா யிருத்தலின் அதிகரணமும், இம்மூன்று பதமும் ஒன்றாய்ச் சம்பந்தித்திருத்தலின் சம்பந்தமுமாம். விசேடண விசேடிய சம்பந்தமென்பது பர சிவரின் றற்கிழமையை விசேடித்தல்

விசேடணமும், அவ்விசேடணத்தின் ஒருமையான ஆறு யென்னும் பொரு ளாய்க் காண்பது விசேடியமும், இப்பொருண் மூன்று மொன்ருய்ச் சம்பந் தித்திருப்பது சம்பந்தமுமாம். இலக்கண விலக்கிய சம்பந்தமென்பது: இம் மூன்று பொருளும் ஏகமாயிருத்தல் இலக்கணமும், ஏகமென்பதின்றிச் சுய மாய் விளங்குவது இலக்கியமும், அங்ஙனம் ஏகமென்றுஞ் சுயமென்றும் பிரிவின்றிச் சம்பந்திப்பதே சம்பந்தமுமாம். கூடஸ்தப் பிரமாயிக்கியம் போதமாம்படி கரதலாமலகம்போல விளங்கக்கூறுதலின் 'உரைத்தவையுட் சிறந்தது நற்சாமமறைபுகலு மோங்கு தத்தொமஸி மகா வாக்கியம்' என்ருர். முறைமூன்ரு மென்றமையின் தத்தொமஸியென்ற பதங்கட்குச் சாமானுதி கரணிய சம்பந்தமும் அது நீ யாயின வென்னும் பதார்த்தங்கட்கு விசேஷண விசேஷிய சம்பந்தமும், இப்பதார்த்த முள்ள வாக்கியார்த்தங்கட்கு இலக் கண விலக்கிய சம்பந்தமுமாம்.

சாமவேத மகாவாக்கியத்தின் பதமும் பதார்த்தமும் வாக்கியார்த்தமு மாகிய இம்மூன்றிற்குமுள்ள சம்பந்தமும் அதனுலுண்டாய பரமாத்மாயிக்க மான அத்துவித ஸ்வரூபமுமே பிரயோசன மென்க. (கக௭)

(அ. கை)

முற்கூறிய மஹாவாக்கியத்தின்கண் முன் னுள்ள இரண்டு பதத்தின் இலக்கணம் உணர்த்துகின்றது.

அறைதலுறு பதார்த்தங்கட் கிருபொருளிங் குளவா
மவைவாச்சி யார்த்தமிலக் கியார்த்தமென வவற்றுண்
முறைமைதரு விராட்புருடன் முதலாகி நின்ற
மூவுருவ வீசனுமப் பிரமமுமொன் ருகிப்
பிறிதலற நிற்புழிதற் பதத்திற்கெய் துறுவ
பெயர்வாச்சி யார்த்தமுக்கி யார்த்தமபி தார்த்த
நெறிகொள்விசு வாதிகளுந் துரியனுமொன் ருகி
நிற்புழிதொம் பதத்திற்கு வருமம்மூ வகையும்.

(இ. ரை.) "அறைதலுறு பதார்த்தங்கட் கிருபொரு ளிங்குளவா மவை வாச்சியார்த்த மிலக்கியார்த்தமென" எ. து. முற்கூறிய பதப்பொருள் இர ண்டிற்கும் இரண்டருத்தங்க ளுள்ளனவாம்; அவைகள் வாச்சியார்த்த மிலக் கியார்த்த மென்பன. "அவற்றுள் முறைமைதரு விராட் புருடன் முதலாகி நின்ற மூவுருவ வீசனு மப்பிரமமு மொன்ருகிப் பிறிதலற நிற்புழி" எ. து. அவ்விரண்டு பதார்த்தங்களுள் முறையாகச் சொல்லுகின்ற விராட்புருடன் முதலாகி நின்ற மூவுருவாகிய வீசனும் அந்தப் பிரமமும் ஏக மாகிப் பேத மற்று நிற்குங்கால், "தற்பதத்திற் கெய்துறுவ பெயர் வாச்சியார்த்த முக்கி யார்த்த மபிதார்த்தம்" எ. து. தற்பதத்திற் கெய்துவன வாகிய பெயர்கள் வாச்சியார்த்தம், முக்கியார்த்தம், அபிதார்த்த மென்பனவாம். "நெறிகொள்

விசுவாதிகளுந் துரியனுமொன்ருகி நிற்புழி தொம்பதத்திற்கு உரு மம்மூவ கையும்'' எ. து. அதுபோல நெறியாகக் கொள்ளப்பெற்ற விசுவன்முதலிய மூன்றுருவ சீவர்களுங் கூடஸ்தனும் ஏகமாகி நிற்குங்காற் ரெம்பதத்திற்கு வருவனவாகிய பெயர்கள் வாச்சியார்த்த முதலிய மூன்றுமாம் எ. று.

பிரமமுந் துரியனு மென்பதனல் அதிஷ்டானத்தை வருவிக்க. வாச்சி யார்த்தம்: வாசகப்பொருள். மூக்கியார்த்தம் இவ்வாசகப்பொருளின் குண த்தி னிலக்கணப்பொருள். அபிதார்த்தம்:இவ்விலக்கணப் பொருளே விராட் டாதி நாமமாய்த் தோற்றல். மூக்கியார்த்தம் அபிதார்த்தமென்பன வாச்சி யார்த்தத்தின் பேதங்களாம். இவை பிரம கூஸ்தர்களுக்கு ஆபாச மாகத் தோற்றிய உபாதி நாமங்கள்.

பிரமசந்நிதானத்தின் ஈசுரன் விராட்டாதி மூன்றினுடன்கூடிச் சிருஷ் டியாதிய தொழில்களைச் செய்வதும் கூடஸ்த சந்நிதானத்திற் சீவன் விசு வாதி மூன்றினுடன்கூடி யிராகத் துவேஷங்களால் விஷயங்களைப் புசிப் பதும் வாச்சியார்த்தமெனத் தெரிவித்த தென்க. (ககஅ)

(அ. கை.)

முற் கூறிய இரண்டு பதங்களின் இலக்கியார்த்த இலக்கணம் இனைய வென வுணர்த்துகின்றது.

தற்பதத்தி னுக்குவிராட் புருடாதி யகன்ற
 தனிநிருபா திகப்பிரம மேயிலக்கி யார்த்தஞ்
சொற்பரவு சோதிததற் பதார்த்தமென நிற்குந்
 தொம்பதத்திற் குற்றவிசு வாதிகளின் வேறும்
பொற்பினிரு பாதிகமாந் துரியனிலக் கியார்த்தம்
 பொருந்துறுசோ திததொம்ப தார்த்தமென வாமவ் .
விற்பரவு மிலக்கணைவிட் டதுவும்விடா ததுவும்
 விட்டுவிடா ததுவுமென மூவகையா மன்றே.

(இ - ள்.) "தற்பதத்தினுக்கு விராட் புருடாதி யகன்ற தனி நிருபா திகப்பிரமமே யிலக்கியார்த்தஞ் சொற்பரவு சோதித தற்பதார்த்தமென நிற் கும்" எ. து. முற்கூறிய தற்பதத்திற்கு விராட்புருடன் முதலிய மூன் று மகன்று நின்ற ஒப்பற்ற நிருபாதிகப் பிரமமே இலக்கியார்த்த மெனவும், யாவராலுந் துதிக்கப் பெற்ற சோதனைக் கியைந்த தற்பதார்த்தமெனவும் பெயர்பெற்று நிற்கும்; "தொம்பதத்திற் குற்ற விசுவாதிகளின் வேறும் பொற்பி னிருபாதிகமாந் துரிய னிலக்கியார்த்தம் பொருந்துறு சோதித தொம் பதார்த்த மெனவாம்" எ. து. மேற்கூறிய தொம்பதத்திற் கியைந்த விசுவன் முதலிய மூன்றிற்கும் மாறுயுள்ள சொப்பிரகாசத்தோடு நிருபாதிக மும் வாய்த்த கூடஸ்தனே யிலக்கியார்த்தமெனவும், பொருந்திய சோத னைக் கியைந்த தொம்பதார்த்தமெனவு நிற்கும். "அவ்விற்பரவு மிலக்கணை

விட்டதுவும் விடாததுவும் விட்டுவிடாததுவு மென மூவகையாம்" எ. து. அந்தப் பிரகாசம் பொருந்திய விலக்கணையாவது விட்டதெனவும், விடாத தெனவும், விட்டுவிடாத தெனவும் மூவகையாக நிற்கும் எ. று.

அன்று ஏ அசைகள். இலக்கியார்த்தம் இலச்சணையால் அறியும் உண்மைப் பொருள். எனவே, அது நீ யென்னும் பதங்கட்கு இலக்கியப் பொருள் பிரம கூடஸ்த ராதலின் இலக்கியார்த்த மெனவும், அப் பதங்களைச் சோதனை செய்த விடத்துச் சேடித்து நிற்றலின் சோதித தத் தொம்பதார்த்தங்களெனவும் நாமங்கள் வந்தன. இவை பரசீவர்களின் யதார்த்தமாயுள்ள நிருபாதிக நாமங்களைச் சொல்லுதலாம். தேகாதி தன்மைகளை விட்டுச் சீவனை லட்சியிப்பதால் விட்டவிலக்கணை யெனவும், சர்வ தத்துவாதி தன்மைகளை விடாமல் ஈசனை லட்சியிப்பதால் விடாத விலக்கணையெனவும், இவைகட் காதாரமாயு மியாவுமாயும் விளங்காநின்ற பிரம கூடஸ்தரை விட்டும் விடாமல் அத்துவிதத்தை லட்சியிப்பதால் விட்டு விடாத விலக்கணை யெனவுமாம்.

விராட்டாதி நான்கு உபாதியும் நீங்கிய பிரமத்தையும், விசுவாதி நான்கு உபாதியும் நீங்கிய கூடஸ்தனையும் பிரத்தியட்சமாய்க் காண்பது இலக்கியார்த்த மெனத் தெரிவித்த தென்க. (ககக)

(அ. கை.)

மூன் மகாவாக்கியத்திற்கூறிய வஸ்து நிச்சயத்தைப் பின்னும் ஸ்திரப்படுத்துவதற்காக வற்புறுத்திச் சொல்லிய மூன்றிலக்கணங்களை யுதாரண பூருவகமாகக் கூறுவான் ஒருடங்கிச் செய்யுளின் மூன்றுதாரணமும் அவற்றின் இரண்டின் இலக்கணங்களும் உணர்த்துகின்றது.

கங்கையினி லிடைச்சேரி மருவலுறுஞ் சொல்லுங்
கவன்குந்த மொடுசோயந் தேவதத்த னெனுஞ்சொல்
லிங்கிவைக ளுதாரணமா மவற்றினுக்குக் கங்கை
யெனுமொழிநீர் வடிவாந்தன் முக்கியார்த் தத்தைத்
தங்குமிடைச் சேரிதனக் கிடமாகா மையினாற்
றணந்து கரை காட்டுந்தன் முக்கியார்த் தத்தைத்
துங்கமுறு குந்தமொரு விடாமற்குந் தத்தைச்
சுமப்பவனைக் காட்டுமென வுணர்ந்திடுக துணிந்தே.

(இ.ரை.) "கங்கையினி லிடைச்சேரி மருவலுறுஞ் சொல்லுங் கவன் குந்தமொடு சோயந் தேவதத்த னெனுஞ் சொல் லிங்கிவைக ளுதாரணமாம்" எ. து. கங்காநதிக்கண் இடைச்சேரி யிருக்கின்றதென்னும் வசனமும், செல்கின்ற குந்தமென்னும் வசனமும் சோயந் தேவதத்தனெனப்படுவனவாம். "அவற்றினுக்குக் கங்கையெனு மொழி நீர்வடிவாந் தன்முக்கியார்த்தத்தைத் தங்கு மிடைச்சேரிதனக் கிடமாகாமையினாற் றணந்துகரை

காட்டும்'' எ. து. அவ்வுதாரணங்கட்குக் கங்காநதி யென்னுஞ் சொல்லா னது சலவடிவாநின்றுள்ள தனது முக்கியார்த்தத்தைப் பொருந்திய இடை ச்சேரிக் கிடமாகப் பெருமையின் அதனை விட்டுக் கரையைக் காட்டாநிற் கும். "தன்முக்கியார்த்தத்தைத்துங்கமுறு குந்தமொழிவிடாமற் குந்தத்தைச் சுமப்பவனைக் காட்டுமென வுணர்ந்திடுக துணிந்து'' எ. து. சிறப்புற்ற குந்த மென்னுஞ் சொல்லானது தனது முக்கியார்த்தத்தை விடாமற் றன்னைச் சுமப்பவனைக் காட்டாநிற்கும் எனத் தெளிவுற் றுணர்ந்திடுதி எ. று.

ஏ அசை. கங்கை யென்னுமொழி தன் முக்கியார்த்தத்தைத் தணந்து கரைகாட்டு மெனவும், குந்த மென்னுமொழி தன்முக்கியார்த்தத்தை விடா மற் குந்தத்தைச் சுமப்பவனைக் காட்டு மெனவு முடிக்க.

கங்கையென்பது தேகாதிப் பிராந்துன் ஈறுய ஒன்பதிற்கும், இடைச் சேரியென்பது இவற்றை நீங்கிய சீவனுக்கும், குந்தமென்பது விராட்டாதி யந்தரியாமி யீறுய ஒன்பதிற்கும், இவற்றை விடாமல் நின்ற குந்ததாரியை ஈசனுக்கும், சோ வென்பது அவனென்னும் ஈசனுக்கும், அயமென்பது இவ னென்னுஞ் சீவனுக்கும், தேவதத்தனென்பது அத்துவிதத்திற்கும் உவமித் ததாம். இவ்வுதாரணங்கள் காரண காரியோபாதிகளிற் சம்பந்த மான பர சீவர்களை வெளிப்படுத்தும் நிமித்தம் இவ்விரண் டிலக்கணையான வுவமா னத்தில் வாச்சியார்த்த லட்சியார்த்த இலக்கணமுணர்த்தியது. (கஉ0)

(அ. கை.)

முன்னிறுத்த முறையான் மூன்ருவது இலக்கணையின் இலக்கணங் களை யுவமான பூர்வகமாக வுணர்த்துகின்றது.

முன்னமொழி தருஞ்சோயந் தேவதத்த னென்னு
மொழியுண்முத லவனென்னு மொழியிறந்த காலந்
தன்னில்வரு தேசவயோ விசிட்டனுந் தேவ
தத்தனைக்காட் டிடுமிவனென் மொழிநிகழ்கா லத்தி
லுன்னவரு மவையுடைய தேவதத்தன் றன்னை
யுணர்த்திடுமிவ் விருத்ததரு மப்பொருள்க ளிரண்டு
மன்னுதல்செய் யயிக்கமுரு மையினுலப் பொருட்கண்
வருவிருத்த தருமங்க ளனைத்தினையும் விட்டே.

(இ. ரை.) "முன்ன மொழிதரு சோயந்தேவதத்த னென்னு மொழி யுண் முதலவ னென்னுமொழி யிறந்தகாலந்தன்னில் வரு தேச வயோவிசி ட்டனுந் தேவதத்தனைக் காட்டிடும்'' எ. து. முன்னர்க்கூறிய சோயந்தேவ னென்னும் மொழியுள் முதற்கணுள்ள அவனென்னும்மொழி யிறந்தகாலத் தில் வருகின்ற தேசமும், வயதி லுயர்ந்தவனு மாகிய புருஷனையே காட்டி விடும்; "இவனென்மொழி நிகழ்காலத்தி லுன்னவரு மவையுடைய தேவதத் தன் றன்னை யுணர்த்திடும்'' எ. து. இவனென்னும் இரண்டாம் மொழியா

னது, நிகழ்காலத்தில் உன்னற் கியைந்த அந்தத் தேசத்தையும், அந்த வய தையுமுடைய புருஷனையே காட்டிவிடும். "இவ்விருத்த தருமப் பொருள்க ளிரண்டு மன்னுதல்செய் யயிக்க முருமையிறு லப்பொருட்கண் வரு விருத்த தருமங்க ளனைத்தினையும்விட்டு" எ. து. இந்தப் பேத தன்மங்களை யேற்றற் கியைந்த இவ்விரண்டு பொருள்களும் நிலைபெற்ற அயிக்கியத்துக் குடன்படாமையினுல் அப்பொருள்களினிடத்தில் வராநின்றபேத தர்மங்க ளனைத்தையும் ஒழித்து எ. று.

ஏ அசை. முதலவ னென்றதனுல் பின்னவனெனக் கொள்க. சோவெ ன்னும் பதத்திற்கு அவனெனவும், அயமென்னும் பதத்திற்கு இவனென வுங் கொள்க. விருத்த மென்பது வேறுபாடுடையது. அது வென்னும் ஈச னுக்குச் சோ தேவதத்த னெனவும், நீ யென்னுஞ் சீவனுக்கு அயந் தேவ தத்தனெனவும் உவமித்த தென்க. இது விட்டு விடாத இலக்கணை யான வுவமானத்தின் வாச்சியார்த்த இலக்கண முணர்த்தியது. (கஉக)

(அ. கை.)

மூன்ருும் இலக்கணையின் இலக்கியார்த்தம் இனையவென வுணர்த்து கின்றது.

விருத்தமறு தருமமாந் தேவதத்தன் றனையே
விடாதுகொளி னவனிவனே யிவனவனே யென்னுந்
தெரித்தலரி தாயதா தான்மியங்கூ டுறுமாற்
றேரினிதை விட்டுவிடா விலக்கணையி னுடுதா
னருத்தவிலக் கணைபாகத் தியாகவிலக் கணையென்
றறைதலினு லிதுவேதத் தொம்மசிவாக் கியத்திற்
குரைத்திடுவ ருதாரணமா யுரியதென வுண்மை [பாம்.
யுணர்ந்துடையோ ரஃதெவ்வா றெனின்முறையேயுரைப்

(இ. ரை.) "விருத்தமறு தருமமாந் தேவதத்தன் றனையே விடாது கொளி னவனிவனே யிவனவனே யென்னுந் தெரித்த லரிதாய தாதான் மியங் கூடுறும்" எ. து. பேதங்களுக் கிடம்பெருத தர்மத்தை யுடைய புரு ஷனையே விடாது பற்றில் அப்புருடன் இப்புருடனே யெனவும், இப்புரு டன் அப்புருடனே யெனவுங் கோடற் கியைந்த யாவராலும் அறிவித்தற் கரிய ஐக்கியமானது வந்து கூடும். "தேரி னிதை விட்டுவிடா விலக்கணையி னுடுதா னருத்த விலக்கணை பாகத்தியாக விலக்கணை யென் றறைதலி னுல்" எ.து. ஆராய்ந்துணருமிடத்து இதனைவிட்டுவிடாத இலக்கணையென வும், அருத்த இலக்கணையெனவும், பாகத்தியாக இலக்கணை யெனவுங் கூறுதலினுல், "இதுவே தத்தொமசி வாக்கியத்திற் குரைத்திடுவ ருதா ரணமா யுரியதென வுண்மை யுணர்ந்துடையோ ரஃதெவ்வா றெனின் முறையே யுரைப்பாம்" எ. து. மெய்ம்மை யுணர்ந்த சத்துக்கள் தத்துவ

மசி வாக்கியத் ற்கு இதுவே தக்க உதாரணமெனக் கூறுநிற்பர். அஃதெங்ஙனமெனக் கேட்பையாயின், முறையே யதனைக் கூறுதும் எ. று.

ஆல் : அசை. அறைதலிறு லெனற் கெழுவாய் மறை யெஞ்சியது' விட்டுவிடாத இலக்கணை, அருத்த இலக்கணை, பாகத்தியாக இலக்கணை யென்பன வொருபொருட் கிளவி. வேடங்களை விட்டுப் புருடனை விடாமற் கொள்ளு மிடத்து அவ்வேடத்தோடும் புருடனை யொன்றாகக் காணுதலின் விட்டுவிடாத இலக்கணை யெனவும், அதன் பொருளை மாத்திரங் காட்டுதலின் அருத்த விலக்கணையெனவும், இவ்விருத்த தருமமாகிய பாகுபாட்டை நீக்குதலின் பாகத்தியாக இலக்கணையெனவுங் கொள்க. இஃது உவமானங் கூறிய விட்டுவிடாத இலக்கணையின் இலக்கியார்த்தம் உணர்த்தியது. (கஉஉ)

(அ. கை.)

முற்கூறிய மஹாவாக்கியத்தின் யதார்த்த ஸ்வரூபத்தை லட்சியிக்கும் நிமித்தம் அதிற்கூறிய மூன்றுபொருளை மூன்று இலக்கணையால் வெளிப்படுத்துவான் கருதி முன்பு அவன் இவனென்கின்ற பேத தன்மத்தை நீக்கிப் பின்பு அவனே யிவன் இவனே யவனென்கிற அபேத தன்மத்தை விளக்குவித்த உவமானப்படி யுவமேயத்தின் வாச்சியார்த்தம் விளங்க உணர்த்துகின்றது.

தற்பதவாச் சியார்த்தமென லெலாமறிதன் முதலாஞ்
 சட்குணங்கொள் பரோட்சனுஞ் சிவன்றனையே யுணர்த்து
முற்பகருந் தொம்பதமுக் கியமெனல்சிற் றுணர்வு
 முதலாய வீனகுண விசிட்டவப ரோட்சக்
கற்பிதசீ வனையுணர்த்து மிம்முரண்கொள் பொருட்கே
 கத்துவங்கூ டாமையினிவ் விருபொருளு மடையும்
பற்பலவாம் பரோட்சமுட னபரோட்ச மாகப்
 பகைத்ததரு மத்திறங்க ளனைத்தினையும் விட்டே,

(இ. ரை.) "தற்பத வாச்சியார்த்தமென லெலாமறிதன் முதலாஞ் சட்குணங்கொள் பரோட்சனுஞ் சிவன்றனையே யுணர்த்தும்" எ. து. தற்பதத்தின் வாச்சியார்த்த மெனப்படுவது' சர்வஞ்ஞத்துவ முதலிய ஆறுகுணங்களையுந் தனக் கியல்பாகக் கொண்ட பரோட்சனாகிய சிவனையே யுணர்த்தாநிற்கும்; "முற்பகருந் தொம்பத முக்கியமெனல் சிற்றுணர்வு முதலாய வீனகுண விசிட்ட வபரோட்சக் கற்பித சீவனை யுணர்த்தும்" எ. து. முன்னர்க் கூறிய தொம்பத வாச்சியார்த்த மெனப்படுவது: கிஞ்சிஞ்ஞத்துவ முதலிய ஈன குணங்களின் மேலாய அபரோட்ச னெனப்படுங் கற்பிதாத்மாவாகிய சீவனையே யுணர்த்தாநிற்கும்; "இம்முரண்கொள் பொருட் கேகத்துவங் கூடாமையி னிவ்விருபொருளு மடையும்" எ. து. மாறாயுள்ள இவ்விருவகைப் பொருட்கும் ஐயிக்கியஞ் சாதித்தல் கூடாமையின் இவ்

விருவகைப்பட்ட பொருளும் அடைதற் கியைந்த, "பற்பலவாம் பரோட்ச முட னபரோட்சமாகப் பகைத்த தருமத்திறங்கள் அனைத்தினையும் விட்டு" எ. து. பற்பல பேதமாயுள்ள பரோட்ச முடன் அபரோட்சமாக மாறுகப் பெற்ற தர்மத்தின் நிலைகளனைத்தையும் ஒருங்கே விட்டு எ. று.

ஏ அசை. சிவன்றனையே யென்றதனால் சீவனையே யென்றும். ஈன குண விசிட்ட னென்றதனால் மேலாஞ் சட்குணங்கொள் விசிட்டமென்க் கொள்க. அபரோட்ச கற்பித சீவ னென்றதனால் பரோட்ச நிர்விகற்ப சிவ னென்றுமாயிற்று. சர்வஞ்ஞத்துவ முதலிய சட்குணங்களுக்கு மாறுயவற் றைச் சிற்றுணர்வு முதலாய ஈன குணமெனக் கொள்க. சகத்திற்குக் கார ணன் ஒருவன் உண்டென நிச்சயிப்பதால் ஈசனைப்பரோட்சமெனவும், காரி யமாய தூல தேகத்தோடும் விடயங்களை யனுபவிப்பது காட்சியா யிருத்த லின் சீவனை யபரோட்ச மெனவும், கிஞ்சிஞ்ஞத்துவ சர்வஞ்ஞத்துவாதி விருத்த தருமங்கட்கு அயிக்கங் கூடாமையின் 'இம்முரண்கொள் பொரு ட்கு ஏகத்துவங் கூடா' தெனவும், முற்கூறிய சர்வஞ்ஞத்துவ கிஞ்சிஞ்ஞத் துவ குணங்களான விருத்தாமிசத்தை நீக்கவேண்டு மாதலின் 'பற்பலவாம் பரோட்சமுடன் அபரோட்சமாகும் பகைத்த தருமத்திறங்கள் அனைத்தினை யும் விட்டே' யெனவுங் கூறினார். இஃது தற்பத தொம்பதத்தின் வாச்சி யார்த்த பேதமான சீவேசுரர்களுக்கு ஏகத்துவங் கூடாதென்னும் இலக் கணம் உணர்த்தியது. (கஉ௬)

(அ. கை.)

முற்கூறிய மகாவாக்கியத்தின் இலக்கியார்த்தங்கள் இனையவென உணர்த்துகின்றது.

இகலிலா வறிவுமாத் திரமாகி நின்ற
விலக்கியமாப் பிரமகூ டத்தவுயிர் கொள்ளிற்
புகரிலா வதுவிதுவே யிதுவதுவே யென்னப்
பொருந்துதா தான்மியம்வந் துறுமெனவே யறிக
பகரிலா வசிபதமிவ் விலக்கியார்த் தத்திற்
பரோட்சவப ரோட்சங்கண் மாயாகற் பிதமென்
றுகவிலா துலக்கியார்த்தியுறு பேதமாமிம் முறையா
லொன்றுகு மறிவேயுண் டெனல்வாக்கி யார்த்தம்.

(இ. ளை.) "இகலிலா வறிவுமாத் திரமாகி நின்ற விலக்கியமாப் பிரம கூடத்த வுயிர் கொள்ளில்" எ. து. அங்ஙனம் விட்டதனால் முரணெய்தற்கு இடம் பெறாத அறிவு மாத்திரமாக மிஞ்சி நிற்கப் பெற்ற இலட்சியார்த்த மாகப் பிரமத்தையும் பிரத்தியேகாத்மாவையும் ஏற்குமிடத்து, "புகரிலா வது விதுவே யிதுவதுவே யென்னப் பொருந்து தாதான்மியம் வந்துறு மெனவே யறிக" எ. து. குற்றமற்ற பிரமங் கூடஸ்தனேயெனவும், கூடஸ் தன் பிரமமே யெனவும் ஏற்றற்கியைந்த ஐக்கிய நிலைமை வந்தடையு

மென்றே விசாரித் தடைடு. "பகரிலா வசிபதா மிவ் விலக்கியார்த்தந்திற் பரோட்ச வபரோட்சங்கண் மாயா கற்பிதமென்று" எ. து. சொல்லற்கரிய அசிபதமானது இங்ஙனங் கூறியலட்சியார்த்தத்தில் பரோட்சம் அபரோட்ச மென்னப்பட்ட இவ்விரண்டையும் மாயா கற்பித மென்று, "உக விலா துணர்த்தி யுறுபதமா மிம்முறையா லொன்ருகு மறிவே யுண்டெனல் வாக்கியார்த்தம்" எ. து. மாறின்றி யுணர்த்தி நிற்றற் கியைந்த நிலைமை யினதாகும் இங்ஙனம் இருப்பது நோக்கி யிவ்வாருய நெறியினுல் அறிவு ஒன்றே யுண்டெனக் கணிப்பது முற்கூறிய மகாவாக்கியார்த்த மெனப் படுவதாம் எ. று.

இவ்வைந்து கவிகளினுல் மகாவாக்கியத்தின் லட்சியார்த்தம் வெளிப் படுத்துவா னுதலிய மூன்று இலக்கணையினுல் உவமான வுவமேயப்படி தூல முதலியவற்றிற் சம்பந்த மான காரிய வுபாதிகளை விட்டு, அவத்தாத் திரய விலட்சண மான சீவ துரியங் கடந்து அதீதமாய் நிற்பது கூடஸ்த னெனவும், விராட்டு முதலியவற்றுட் சம்பந்த மான கார ணோபாதிகளை விட்டு, அவற்றிற் காதார மான பர துரியமுங் கடந்து அதீதமாய் நிற்பது பிரம மெனவுங் கூற வந்தது இக் கூடஸ்த பிரம ஐக்கியமான அத்துவித ஸ்வரூபமே பொருளெனக் காட்டற் கென்க. அதின் சம்பந்தமியாதெனின் கங்கைக்கண் ணுள்ள இடைச்சேரி சத்திக்கின்ற தென்னு மிடத்தில் அக் கங்கை சத்திக்குமா வென்று அதன் கரையிலுள்ள இடைச்சேரியின் சத்த மென்று காண்பதுபோல, தூலாதிகளாற் றெரிவிக்கின்றதென்ற வசனத் தில் சடமான தேகாதிகள் தெரிவிக்குமாவென் றதனை விட்டு அதனிடமா யிருந்த சீவன் றெரிவிக்குமெனக் காண்பது விட்ட இலக்கணை யெனவும், குந்தஞ் செல்கின்ற தென்னில் அக்குந்தந் தனியே செல்லுமா வென்று அதனை விடாமற் குந்தத்தைச் சுமப்பவனைக் காண்பதுபோல, ஞானஞ் செல்கின்ற தென்னின் அது தனியே செல்லுமா வென்று அதனை விடா மல் அதற் காதாரமான இன்புருவமாகிய ஈசனைக் காண்பது விடாத விலக் கணையெனவும்; சோயந் தேவதத்த னென்பது, சோ அவனென்னும் ஈச னே, அயம் இவனென்னுஞ் சீவன், தேவதத்த னென்பதில் இவ்விரண்டின் ஐக்கியமான வஸ்து, இத்தேவதத்தனை யவ்விரண்டிடத்துங் கூட்டிச் சோ தேவதத்தனென்னின், அங்ஙன முதயகாலத்திற் காசித்தலத்தில் இல்லறத் தோடுங் கூடி யிருந்தவன்போல, விராட்டாதியவற்றிற் கூடி யிருந்த ஈச னும், அயந் தேவதத்த னென்னின் இங்ஙனம் அர்த்த சாமத்திற் சிதம் பரத்திற் றுறவோடுங் கூடியிருந்தவன் போலத் தூலாதிகட்கு விலட்சண மாயிருந்த சீவனும் வாச்சியார்த்த மாகவும், உதயார்த்த சாம மென்னுங் காலமும், காசி சிதம்பர மென்னுந் தேசமும், துறவி கிரகஸ்த னென்னும் வேடமுமாய இவ்விருத்த தருமங்களை விட்டு இவ்விரண்டு காலத்தும் இவ் விரண்டு தேசத்தும் இவ்விரண்டு வேடத்தும் இருந்து அவ்விருத்தமான அவனே யிவன், இவனே யவனென்னு மொருபுருடனைக் காண்பதுபோல,

அனுக்கிரகஞ் செய்தல் அதை யடைதலென்னுங் காலமும், அகிலாண்டம் அண்டமென்னுந் தேசமுஞ் சமஷ்டி வியஷ்டி யென்னும் வேடமுமாய இவ்விருத்த தருமங்களை விட்டு அவ்விரண்டு காலத்தும் இரண்டுதேசத்தும் இரண்டு வேடத்துமுள்ள அவிருத்தமான அப்பிரமமே இக்கூடஸ்தன், இக் கூடஸ்தனே யப்பிரமமென ஏகமானவிடத்துத் தன்னை விடாமல் அவை களைத் தனது தேஜசாய் விட்டிருத்தல் இலக்கியார்த்தமாகவுங் காண்டலின் இதனை விட்டுவிடாத இலக்கணை யெனவுங் கொள்க.

வினு:—அற்றேல், இவ்வாக்கியார்த்த விசாரம் இங்ஙனங் கூறிய இரு வர்களில் யாவர்க்கு?

விடை:—சீவர்க்கு.

வினு:—அற்றேல், சீவன் தொம்பதத்தை விசாரித்து அதனால் நீக்க வேண்டிய தூலாதி யவத்தைகள் அனைத்தையும் நீக்கி யதனுடன் றனது சங்கற்பமும் நீங்க நின்றவிடத்திற் சேடித்த கூடஸ்தனே தானாகவிளங்க, மேலிவனுக்குத் தற்பத விசாரம் யாதுக்கு?

விடை:—இவன் அந்தர்முகத்தில் தூலாதி யவத்தைக ளனைத்தையும் நீக்கின சீவன்: தனக்கு மேல்நின்ற கூடஸ்தனில் அதீதமாய் அதன் மயமா நிற்பினும் சீவ கூடஸ்த மத்தியிலுள்ள வித்தையாரூபமான பிரகிருதி நீங் காமல் அடங்கிநிற்கும். அங்ஙனம் நின்று பாகியப்படும்போது அவ்வவத்தை கள் தோன்றும். ஆதலின் அப்பிரகிருதி நசிக்கும் நிமித்தந் தற்பதசோதனை யும் பண்ணவேண்டிற்றென்க.

வினு:—அங்ஙனஞ் செய்யாவிடின் என்னை?

விடை:—பிரகிருதி நசிப்புஞ் சுவானுபவ விலாசமும் மறையுமென்க.

வினு:—அங்ஙனம் மறைதற்குப் பிரமாண முளதோ?

விடை:—சொரூபாநந்தத்தில் "தொம்பதத்தி லுபாதிகெடச் சொரூப மதா மதுவே தொன்மையதாந் தற்பத சோதனை செயவும்வேண்டும், தம்ப வுடன் மூன்றினுக்குஞ் சீவனுக்கு முதலாய்ச் சாற்று தன்மாத்திரைப் பகுதி தானுமிருப்பதினு, னம் பரிபூரணமறைந்து ஞானமின்றி முனம்போ லுடுமுயி ராதலினுனதனருட்படியே, யிம்பருபாதியும்போய் நிருபாதிகமா மதனு லெப்பொரு ளப்பொருளாகி யிருப்பது தன்னியல்பே" என்பதனுற் காண்க.

வினு:— அற்றேல் இங்ஙனந் தற்பத விசாரத்தாற் சீவர்க்குப் பய னென்னை?

விடை:—முன்பு தொம்பத விசாரத்தா லந்தர்முகத்திற் றூலாதி கற் பனு வத்தைகள் சம்பந்தமான வாச்சியார்த்த சொரூப ஜீவத்துவம் நீங்கி லட்சியார்த்தப் பிரத்தியகாத்ம ஸ்வரூபமான கூடஸ்த னனது போலத் தற்பத விசாரத்தாற் பாகியத்தினுள்ள விராட்டாதி யாகத் தோற்று மவத் தைகளின் சம்பந்தமான வாச்சியார்த்த ஸ்வரூபமாகிய ஈசத்துவம் நீங்கி

அலட்சியார்த்தமான பிரமமாய்அது விது வென்னுந் துவிதம்நீங்கி யத்துவித சுத்த சைதன்னியனை நிரதிசயானந்தமாயும் பிரகிருதி முதலிய யாவுந் தனது சிற்பிரகாசமாயும் அகம்புறமின்றிய சுவானுபவமாயும் விளங்கவே யென்க.

வினு:—அற்றேல், இவ்விசார மீசன் செய்யாதிருந்த காரணமென்னை? அவனும் விராட்டாதிய காரணோபாதியிற் கட்டுப்பட்ட டிருப்பதை விசாரித்தல்லவா அவ்வுபாதிகளை நீக்கி மேனின்ற பிரமத்தைத் தரிசித்து அதில் அதீதமாகவேண்டும்? அங்ஙனம் விசாரியாமற் பிரமமாகின்ற தெங்ஙனம்?

விடை:—அவ்வீசன் மாயைமுதலிய அவத்தைகளிற் கூடியிருக்கினுஞ் சீவர்களைப்போல மறைப் பின்மையின் அங்ஙனங் கூடாது. அவைகட்கு அதீதமான பிரமத்தைத் தரிசித்து, அதுவாக விளங்குவனுதலால் அவனுக்கு இவ்விசாரம் வேண்டுவ தின்றென்க.

வினு:—அற்றேல், இம்மாயாப் பிரதிவிம்பராய் விராட்டாதிய அவத்தைகளைப் பெற்ற ஈசன் பிரம விசாரஞ் செய்யாது எங்ஙனம் மாயையை நீக்கிப் பிரமத்தை யடைவான்?

விடை:—சுத்த மாயையிற் பிரதிவிம்பிக்கும் போதே மறைப் பின்றித் தனக்கு ஆதாரமான பிரமத்தைத் தரிசித்தே யிருந்தானென்க.

வினு:—அற்றேல், அவன் மாயையால் மறைபடவில்லையோ?

விடை:—கண்முன்னின்ற கண்ணுடி நேரே தடையாயிருக்கினும் அதனுன் மறைவுபடாமல் எப்பொருளும் விளங்கத் தோற்றுவதுபோலச் சுத்த மாயை நின்மல மாதலின் அதிற் கூடி யிருக்கினும், பிரம தரிசனத்துக்குத் தடையின்மையின் கூடாதவனேயாமென்க.

வினு:—அற்றேல், இத்தடையின்மை கட்புலனுக்கே யன்றிக் கைபரிசத்திற் கின்றாயதுபோல, இச்சுத்தமாயை பிரமத்தை யறிதற்குத் தடையின்றே யன்றி யனுபவத்திற்குத் தடைதானே.

விடை:—அவ்வனுபவம் ஆகத்திற் கின்றி யறிவிற்கே யாதலினுனும், அவர்கள் நித்தியமுத்தரென்று சுருதி சொல்லுகையினுனும் அவர்கட்குத் தடையே யின்றென்க.

வினு:—இங்ஙனங் கூறிய சுருதிகள் ஓரிடத்தில் மாயா சகிதனெனவும் ஓரிடத்தில் மாயா ரகித னெனவுங் கூறிய தென்னை?

விடை:—மாயாப் பிரதிவிம்பராய் அதுகருவியாகச் சிருஷ்டியாதிகளைச் செய்தலிற் சகிதனெனவும், அம்மாயையின் யதார்த்த ஸ்வரூபந் தெரிந்து அதன் வய மாகாதிருத்தலின் ரகிதமெனவுங் கூறினவென்க.

வினு:—அம்மாயையோடு கூடியிருந்தும் அதன் வயப்படவில்லை யென்பதற்கு மேற்கோள் உளதோ?

விடை:—கைவல்ய நவநீதத்தில்' 'அச்சுவத்தமென் றொருமரம் அதிலிரண்டரும் பறவைகள்வாழும், நச்சுமங்கொருபறவை யம்மரக்கனி நன்று

நன்றெனத் தின்னு, மெச்சு மங்கொரு பூறவை தின்றதென வியங்கியப் பொருளாக, வைச்சுமாமறை சீவனை யீசனை வகுத்தவா றறிவாயே." என்னுங் கவியிற் காண்க.

வினு:—அற்றேல், இம்மகாவாக்கிய விசாரஞ்சீவனுக்கு வேண்டுவதும் ஈசனுக்கு வேண்டாததும் யாது காரணத்தாலோ?

விடை:—சீவன் றனது காரணத்தை மறந்தமையானும், ஈசன் மறவாமையானுஞ் சீவனுக்கே வேண்டிற்றெனக.

வினு.—அற்றேல், இச்சீவனுக்கே மகாவாக்கியார்த்த விசாரமென்முல் அதற்கு முன் பினுள்ள அனுபவத்தை விளக்கவேண்டுமே?

விடை:—அவாங் மனேகோசரசுயஞ் சைதன்னிய நிரதிசய சுகானுபவேத்தியமே வேதம் மொழிந்த சச்சிதானந்தம் போலப் பர சீவ சகததாகத் தோற்றும்; அங்ஙனந் தோற்றலையே ஆகமங்கள் நிசமெனக் கூறலின் அது காரணமாக மதங்களனைத்தும் அனுஷ்டித்துவரும். இவற்றில் ஆனந்தமென்பது பரம், சித்தென்பது சீவன், சத்தென்பது சகம். இவற்றின் நடுநிலையாநின்ற சுகாநுபவ சங்கற்ப ரூபமான சீவன் அச்சுகத்தில் உதித்து அதில் விளங்கி யதில் அடங்கித் தனது மறைப்பினின்று நீங்கித் தெளிதலின் அச்சுக வடிவான ஈசனுக்கே பஞ்ச கிர்த்தியமெனவும், அதற்கு முன்னிலை சீவனெனவும், அவனனுபவத்திற்குச் சகத்தெனவும் வந்தன. அங்ஙன முள்ள சீவன், தனது சுகானுபவ நிமித்தம் ஸ்புரணரூபமாய் அனுபவிக்கப் பகிர்முகப்பட்டுச் சத்துப்போலத் தோற்றுஞ் சகத் விஷயத்திற் சுகிக்க வரும்போது சநநமும் அதில் அடங்கும்போது மரணமும் எய்துமாதலின், நல்வினை தீவினை சொர்க்க நரகமாதிய பலவாற்முல் வருந்துவது சீவரே யன்றி ஈசன் அன்மும். இங்ஙனம் வருந்துவது தனது அந்தரங்கமான சுகத்தை நாடியே விஷயத்தை யனுபவித்தலால் அச்சுக முண்மையின்றித் தோற்றன் மாத்திரமாய்த் தோன்றி மறையும். அங்ஙனந் தோன்றும்போது சுகமும், மறையும்போது துக்கமுமாகக் காண்டலின் இச்சுக துக்கமென்னுஞ் சநந மரணப் பிரவாக ரூபமான சாகரத்தில் வீழ்ந்தலைவன். அங்ஙனம் அலையும் போது இவனது யதார்த்தத்தைத் தெரிவிக்கும் நிமித்தம் அநாதியாக விளங்கிய நாத ரூபமான வேதமானது சுகமென்னும் ஈசனைத் தற்பதமெனவும், சித்தென்னுஞ் சீவனைத் தொம்பத மெனவும், அவ்விரண்டின தொருமையாய வஸ்துவை யசிபதமெனவும் மகாவாக்கியமாகப் பகுத்துக் கூறியதென்க.

வினு:—இச்சத்தே சகத்தென்பதற்கும், இவ்வாக்கியானுபவம் இச்சீவனுக்கே யென்பதற்கும் மேற்கோ ளுளவோ?

விடை:—"விளக்கு மிரவியு மலரு முண்டா முண்டாம் வீசொளியும் பகற்பொழுதும் விரையும் போலத், துளக்கமில் சித் துண்டாகி லுண்டாஞாலந் தோற்றரவு மாத்திரமே சொரூபமாகுங், கிளர்த்த பரமார்த்தத்தாலில்லையென்னக் கேட்டலுமே பாற்கடல்போற் கெம்பீரத்தா, வளக்கரி

தாய்ச் சீதளமா யமலமாகி யற்புதமா நின் மொழியென் றண்ணல் சொல்வான்'' என்னும் வாசிட்டக்கவியினுனும், "ஆனந்தோப் பிரமமெனு மிரண்டாம் வாக்கியத்தி லகண்டாகார, வாநந்தம் பிரமமாய்த் துன்பறியா வின்பமாமாதலாலே, யாநந்த மாநந்தி யெனும் வடிவ மிரண்டுமெற வளவிலாத, வாநந்தஞ் சீவனிடத்தாதலால் வாக்கியத்தி னயிக்கங் கூடு'' மென்னும் மகா வாக்கியக் கவியினுனுங் காண்க.

வினு:—இம்மகாவாக்கிய ரூபமான சச்சிதானந்தமே பிரமாதி ஸ்தம்ப பரியந்தமும் நிறைந்திருக்கின்றதென லெங்ஙனம் ?

விடை:—இச் சச்சிதானந்தா தீதமாகிய சுத்தப் பிரமந் தத்விலாசத்தினுற் றன்னை நோக்குதற்கு உன்முகமாய விடத்து அவ்வின்பந் தானுயிருக்கும். அஃ தவ்வறிவிற் கெட்டாமற் பகிர்முகமாய விடத்து எதிரிட்டுத் தோன்றிய விடயமாகவும், அதை யனுபவிக்க வந்த அறிவே விருத்தியாகவும், இங்ஙனம் பிரிவுபட்ட விடத்திற் றோன்றுத சத்தே மூலாஞ்ஞானமாகவும் இருக்கும். முற்கூறிய அறிவினுள் ஆநந்தமும் ஆநந்தத்துள் அறிவும் பிரதிபலித் தேகதேசத்திற் பிரகிருதிமுதற் பிண்ட பரியந்தங் கற்பிதமாகத் தோன்றிநின்றன. இவற்றிற்கு ஆதாரமான அறியாமையும் ஆங்காங்கு மறைத்து நிற்கும். இம்மறைப்பால் எய்துஞ் சிற்றறிவையும் அதனுல் அனுபவிக்குஞ் சிற்றின்பத்தையு முடைய சீவன் தனது பூர்வ கன்ம நிஷ்காம புண்ணிய பரிபாகத்தினுற் சித்தசுத்தியும் அதனுற் சாதன சதுட்டயமும் அதனுற் சற்குரு கடாட்சமும் எய்தப்பெற்று அதனுல் ஆத்ம விசாரஞ் செய்யத் தொடங்கி, முன் பிரதிபலித் திறங்கிய விடய ஞானத்தில் அனுபவித்துக்கொண்டிருந்த விடயானந்த ரூபமான தூலாதி மூன்று சரீரமும் மித்தையெனக் கண்டு அவற்றை நீக்கிய விடத்து ஆங்காங்கு ஒன்றற்கொன் றதிகரிப்பாய் வியாபித்திருந்த விசுவாதி மூன்றறிவையும் அதனுல் அனுபவிக்குஞ் சிற்றின்பங்களையுங் கண்டு, அப்பால் தூரிய அறிவையும் அதனுல் அனுபவிக்கும் பேரின்பத்தையுங் கண்டு அவற்றி னொருமையைக் கூடஸ்தனென அகத்தில் தெளிந்ததே தொம்பத விசாரமாதலினுனும், இவற்றால் அவித்தையா ரூபமான படிவங்கள் நீங்கி முற்கூறிய கூடஸ்தன தொருமையாய சித்ரூபமாகிய விராட்டாதி மூன்று சரீரத்தையும் அவத்தையெனக் கண்டு அவற்றை நீக்காமல் நீக்கி யாங்காங் கொன்றற்கொன்று அதிகரிப்பாய் வியாபித்திருந்த வைசுவானரனுதிய இம்மூன்றறிவையும் அதனுல் அனுபவிக்கும் ஆநந்தத்தையுங் கண்டு அப்பாற் பர துரியமான அறிவையும் அதனுல் அனுபவிக்கும் பரமாநந்தத்தையுங் கண்டு அவைக ளொருமைப்படலைப் பிரமமெனப் புறத்திற் றெளிந்ததே தற்பத விசாரமாதலினுனும், இவற்றான் மாயையும் வித்தையாரூபமான படிவங்க ளனைத்தையும் நீங்கிய இச்சீவனே யவித்தை நீங்கின வித்தையாரூபமான ஈசனுவனெனத் "துரியமாகிய போத மோர் துளக்கமற் றனைத்தின், கரியதா யிருந் திடம் பர நனவெனக் கண்டேன்'' என்று சசிவன்ன போதங் கூறுவதால் அது வென்னும் பிரமமே

நீ யென்னுங் கூடஸ்தனும், நீ யென்னுங் கூடஸ்தனே யது வென்னும் பிரமமு மெனக் கலப்பதே யசிபத விசாரமாதலினானும், இவற்றாற் பிண் டாண்டங்களுங் கிஞ்சிக்ஞத்துவ சர்வக்ஞத்துவங்களும் இவற்றான் ஒருமை தோன்றாமற் செய்த மூலாஞ்ஞானமுமான இத்துவிதம் நீங்கிய விடத்து எழுந்த நிரதிசயானந்த விளக்கமே யுண்மையான அத்துவித ஸ்வரூப மாத லினானும், இதுவே முத்துரியமுங் கடந்த குரு துரிய மாதலினானும், அங் ஙனம் விளங்குதல் முற்கூறிய ஜீவனது யதார்த்த சொரூபமாதலினானும் இவனுக்கே மகாவாக்கிய விசாரமும் அதனாலுள்ள நிரதிசயாநந்தானுபவமு மாமெனக் காண்க.

இவ்வைந்து கவிகளின் கருத்து முற்கூறிய வுவமான வுவமேயப்படி பரமாத்மாயிக்கமாக வியைந்த அத்துவித சுயஞ் சைதன்னியமே யாவுமாய் விளங்குகின்றதென்பது. (கஉச)

(அ. கை.)

முற்கூறிய மஹாவாக்கியார்த்தம் எஞ்ஞான்றுஞ் சுபாவ சித்தமான அத்துவிதமாக விளங்க, மத்தியிற் சீவேச கூடத்த பிரமமாகப் பிரிந்தும் ஒருமையுமான கற்பனை யாகந்துகமாய்த் தோற்றி நீங்கிற்றென்பதற்கு உவ மானம் உணர்த்துகின்றது.

தூயதத்தொ மசிமகா வாக்கியத்தி னாலே
  துரியபரற் குளதேகத் துவமென்கை கடாதி
யாயவுபா திகளகற்றி விசும்பொன்றே யெனவு
  மகற்றிமனி தத்தன்மை யிராமனைநீ தானே
மாயவன்கா ணெனவுங்கன் னனைவேடு கழித்து
  மகன்குந்திக் கெனவுமொரு தசமனைமாய் துயரம்
போயகல வொழித்துநீ யேதசம னெனவும்
  புகலுதல்போற் சுபாவசித்த மாகுவதே யன்றி.

(இ. ரை) "தூய தத்தொமசி மகாவாக்கியத்தினாலே துரிய பரற் குள தேகத்துவ மென்கை" எ. து. பரிசுத்தமான தத்தொமசி மகா வாக்கியத்தி னால் கூடஸ்த பிரமத்திற்கு உரியது ஐக்கிய மென்பது. "கடாதியாய வுபா திகளகற்றி விசும்பொன்றே யெனவும்" எ. து. கடமுதலியவாகவுள்ள உபா திகளெனப்பட்டவைகளை யொருங்கே யொழித்து ஆகாயம் ஒன்றே யென வும், "அகற்றி மனிதத்தன்மை யிராமனை நீ தானே மாயவன்கா ணென வும்" எ. து. மனிதத்தன்மையை நீக்கி யிராமனை நோக்கி நீயே விஷ்ணு வெனவும், "கன்னனை வேடுகழித்து மகன் குந்திக் கெனவும்" எ. து. கர்ன மகாராஜனை நோக்கி யவனது வேடுத்தன்மையை நீக்கிக் குந்திமாதேவி புத்திரன் நீயேயெனவும், "ஒரு தசமனை மாய்துயரம் போயகல வொழித்து நீயே தசமனெனவும் புகலுதல்போற் சுபாவ சித்தமாகுவதேயன்றி" எ. து. பத்தாவானை நோக்கி வருத்துகின்ற துன்பம் நீங்குமா றொருங்கே யொழி

த்துப் பத்தாவா னெனவுந் தெரிவிப்ப தெங்ஙனமோ, அதுபோல மூரணு ரூத சுபாவசித்தமா நிற்பதே யன்றி வேறென்னையுளது? எ. று.

வேறென்னை யுளதெனல் ஒழி யிசை. கட மென்றமையின் அதனுள் ளிருக்கும் ஆகாயமும், ஆதியென்றமையின் கடசலப் பிரதிவிம்பாகாயமும், மகாகாயமும், மேகசலப் பிரதிவிம்பாகாயமுங் கொள்க. சுபாவசித்த மென்றது சுபாவம் இயற்கை, சித்தம் நிசம். எனவே, பிரம்மத்திற் சீவேசுரராகப் பிரிந்ததும், விசாரத்தினு லொன்றுபட்டதும் இயல்பாகவே யின்றென்க. அன்றியு மென்பது அன்றி யென வும்மை தொக்கு நின்றது. அவ்வும்மை மேற் கூறுவதைக் காட்டுஞ் சுய ஆகாயத்திற்குக் கடாகாயமாதிய நான்கு உபாதியும் வந்ததும் நீங்கியதும், திருமாலுக்கு இராமனென்னும் மனிதத் தன்மை வந்ததும் நீங்கியதும், கன்னனுக்கு வேடத்தன்மை வந்ததும் நீங்கியதும், பத்தாவானுக்கு மரித்தான் இருந்தானென்னும் உபாதி வந்ததும் நீங்கியதும் எங்ஙனஞ் சுபாவமாயின்றே அங்ஙனமே சுயஞ் சைதன்னியத்திற் சீவேசுரபேதம் வந்ததும் நீங்கினதுமின்றிச் சுயமாகவே யாவுந் தற்பிரகாசமாய் விளங்குகின்றதெனக் காண்க.

வேதாந்தத்திலுள்ள மஹா வாக்கியார்த்த நிச்சயமான பிரம ஸ்வரூபத்திற்கு இவ்வுபாதிகள் வந்ததும் போனதுமின்றி யென்றுஞ் சதோதயமாய் விளங்குகின்றதே யதார்த்தமென்பது. (கஉரு)

(அ. கை.)

மூன் மகாவாக்கியத்தாற் கூறிய பேதாபேதமென லின்றிய அத்துவித வஸ்துவின் சுபாவசித்தமே சுருதி சம்மதமெனத் தோன்றப் பேதாபேத மான அர்த்தவாதமுதல் ஏகாதச வாதங் கூறுவான் ரூெடங்கி, இச்செய்யுளிற் சடுவித பேதவாத முணர்த்துகின்றது.

ஒருமலர்க்குத் துறக்கமெனல் போன்முத்தி விருப்ப
முதவருத்த வாதமெழிற் பதுமையைத்தே வெனல்போ
லிருமைதரு முபாசனு பரமனிதன் றன்னை
யிந்திரனென் பதுபோலத் துதிபரமா ளினையே
யருமரசென் பதுபோல வுபசாரி கந்தா
னக்கினிமா ணவகனெனும் வாக்கியமே போல
வுரிமைதரு சகுணசா திரிசமிது கோவி
னுடம்பெண்ணைப் போற்சாதி வியத்தியா மன்றே.

(இ. ரை.) "ஒருமலர்க்குத் துறக்கமெனல்போன் முத்தி விருப்பமுத வருத்தவாதம்" எ. து. மிக்க அன்போடு அருச்சிக்கும் ஓர் மலருக்குச் சுவர்க்கம் வாய்க்குமெனல் எங்ஙனமோ, அதுபோல முத்தி விருப்பம் வாய்க்குமெனல் அருத்தவாத மெனப்படுவதாம்; "எழிற் பதுமையைத் தேவெனல் போ லிருமைதரு முபாசனுபரம்" எ. து. விசித்திரமாக அமைத்த விக்கிரகத்தைத் தேவதையாகக் கோடலெங்ஙனமோ அதுபோலக் கோடற்பாலது சிறப்புள்ள உபாசனுபரவாத மெனப்படுவதாம்; "மனிதன்றன்னை யிந்திர

னென்பதுபோலத்துதிபரம்'' எ.து. ஓர் மனிதனைத்தனக்குப் பயன்வேண்டித் தேவேந்திரனெனத் துதிக்குமாறு போன்று துதிக்கற்பாலது துதிபர வாத மெனப்படுவதாம்; ''ஆளினையே யருமரசென்பதுபோல வுபசாரிகந்தான்'' எ. து. அடிமையையே மேலாய அரசனெனக் கூறுமாறெங்ஙனமோ, அது போலக் கூறற்பாலது உபசாரிக வாதமெனப்படுவதாம்; ''அக்கினி மாணவக னெனும் வாக்கியமேபோல வுரிமைதரு சகுணசாதிரிசம்'' எ. து. இப்பிரம சாரி நெருப்பெனக்கூறு மூலகவசனம் எங்ஙனமோ, அதுபோல வசனித் தற்பாலது உரிமையாயுள்ள சகுண சாதிரிசவாதமெனப்படுவதாம்; ''இது கோவினுடம் பென்கைபோற் சாதிவியத்தியாம்'' எ. து. இத்தேகமானது பசுவினுடம்பெனக் கூறுமாறெங்ஙனமோ, அதுபோலக் கூறற்பாலது சாதி வியத்திவாத மெனப்படுவதாம் எ. று.

அன்று ஏ அசைகள். சகுண சாதிரிச மென்றது சகுணம் குணம், சாதிரிசம் ஒப்பு. எனவே, ஒன்றின் குணத்தை மற்றொன்றினதாக ரூபகப் படுத்தல். சாதி வேற்றுமை. வியத்தி ஒற்றுமை. அபேக்ஷித்தலால் அடையக் கூடாத வஸ்துவை ஈசுரனுடைய இயல்பான சொரூபத்தில் ஒரு புஷ்பார்ச் சனை செய்தால் அதற்கே சொர்க்க பலங் கிடைக்குமென்ற கன்மகாண்ட வசனம்போல, ஒருவனுக்கு நிராசையினாலுண்டான முத்தி விருப்பத்தினால் அடையலாமென்ற அருத்தவாதமும், சிந்திக்கப்படாத வஸ்துவை யொரு விக்கிரகத்தினிடத்திற் றனது பிரியத்தை வைத்து அன்போடும் உபாசிக் கும் உபாசனையே தேவதாரூபமாய்த் தன திஷ்டப் பிராப்தியைத் தருவது போல, எதிரிட்ட வஸ்துக்களைத் தனதுருவமாகச் சிந்தித்தலின் அச்சிந்தனை யால் அடையலாமென்ற உபாசனாபரவாதமும், புகழ்தற் கடங்காத வஸ்து வை மனிதனைத்தேவனாகத் துதிக்கின் அத்தேவனாவதுபோலச், சீவனைச் சிவ மாகத் துதித்தலிற் சீவனே சிவமாக அடையலாமென்ற துதிபர வாதமும், பெருமை சிறுமை யின்றிய வஸ்துவை ஆளை யரசனென்பதுபோல அடி யார்களாகிய சீவர்கள் அடிகளாகிய சிவமாக வுபசரித்துக் கூறுதலால் அடையலாமென்ற உபசாரிக வாதமும், உருவகப்படாத வஸ்துவை யக்கி னியை மாணவக னென்பதுபோல, சிவத்தின் குணத்தைச் சீவனிடத்திற் காண்பித்து அதனால் அடையலாமென்ற சகுண சாதிரிசவாதமும், உறுப்பில் லாத வஸ்துவை யலைதாடி முதலிய அவயவங்கள் கோவின் வடிவமாக விளங்குதல்போல, சீவேசுரசகத்துக்கள் சிவத்தின் அவயவங்களாய் விளங்க லால் அடையலாமென்ற சாதிவியத்திவாதமும் இனையவென்க.

வினா:—இங்ஙனங் கூறுதற்கு மேற்கோளுளவோ ?

விடை:—நிரலே ''காலான முதற்பூமி கைவந்தால் முத்தியுங் கைவந்த தாமே'' எனவும், ''ஐயமின்றித் தெய்வவுருத் தியானித்தா லதுவாம்'' என வும், ''சீவன் சிவலிங்கமாகு மவர்க்கே பாவங்கள் போகும் பறந்து'' எனவும், ''ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங் கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகி லவர்கண்டீ ரியாம் வணங்குங் கடவுளாரே'' எனவும், ''உயிர்

சச்சிதானந்த வடிவாம்" எனவும், பலபொழுதுங் கண்மூடிச் சமாதியிருந் தான் விழித்துப்பார்த்தபோது பல வடிவாஞ் சராசர சித்திரங்க ளெல்லாந் தோன்று மொரு படமானுனே" எனவும் உரைத்ததனுற் காண்க. (கஉசு)

(அ. கை.)

முன் னிறுத்த முறையான் ஐந்துவித அபேத வாதங்களின் இலக்கணம் உணர்த்துகின்றது.

கடத்தொடுமட் கநநியமென் வாக்கியமே போலக்
காரியகா ரணநீலோற் பலமெனும்வாக் கியம்போல்
விடுப்பில்குண குணிதயிர்பாற் கபேதமெனல் போல
விகாரமே வாரிகணங் கட்கேக மெனல்போ
லடுத்தவஞ்சாஞ் சிகம்விம்பப் பதிவிம்பங் களினுக்
கயிக்கமெனல் போல்விம்பப் பதிவிம்ப வாத
மெடுத்துணரி லெனவிங்ங னபேதபர மாக
விசைப்பனவெல் லாஞ்சுருதி விரோதமென வறியே.

(இ. ரை.) "கடத்தொடு மட் கநநியமென் வாக்கியமேபோலக் காரிய காரணம்" எ.து. கடத்துடன் மண்ணிற்கு ஏகத்துவம் வாய்க்குமெனக் கூறும் வசனம் எங்ஙனமோ, அதுபோல வாய்க்கும் வசனம் காரிய காரண வாதமெனப் படுவதாம்; "நீலோற்பலமெனும் வாக்கியம்போல் விடுப்பில் குணகுணி" எ.து. நீலோற்பல மென்னும் வாக்கியம் எங்ஙனமோ, அது போல, வாய்த்தற்கியைவது பேதியாத குணகுணி வாதமெனப் படுவதாம்; "தயிற் பாற் கபேத மெனல்போல விகாரம்" எ. து. தயிருக்கும் பாலுக்கும வாய்ப்பது அபேதமெனக் கூறுமா றெங்ஙனமோ, அதுபோல, வாய்த்தற் கியைவது விகாரவாத மெனப்படுவதாம்; "வாரி கணங்கட் கேகமெனல்போ லடுத்த வஞ்சாஞ்சிகம்" எ. து. சல மானது அலையாதி கணங்கட்கு ஏகத்துவம் வாய்க்குமெனல் எங்ஙனமோ, அதுபோல, வாய்த்தற்பாலது அம்சாம்சிக வாதமெனப்படுவதாம்; "விம்பப் பதிவிம்பங்களினுக் கயிக்கமெனல் போல் விம்பப் பதிவிம்பவாதம்" எ. து. விம்பப் பிரதிவிம்பங்களுக்கு ஏகத்துவம் வாய்க்குமெனல் எங்ஙனமோ, அதுபோல, வாய்த்தற்பாலது விம்பப் பிரதிவிம்ப வாதமெனப்படுவதாம்; "எடுத்துணரிலென விங்ங னபேத பரமாக விசைப்பன வெல்லாஞ் சுருதி விரோத மென வறி" எ. து. இங்ஙனமாக எடுத்துணருமிடத்து அபேத நிலையாகக் கூறப்படுவன அனைத்துஞ் சுருதிக்கு விரோதமாக முடியுமென வறிதி எ. று.

ஏ அசை. இப்பதினொன்றுஞ் சுருதி விரோதமென் றமையான், முற் கூறிய நான்குஞ் சுருதி சம்மதமென ஆயிற்று. ஆதார ஆதேய ரகிதமான வஸ்துவிற்கு அதனை யமைத்துக்கூறுகின்ற காரண காரியவாதமும், பண்பு பண்பிரகிதமானவஸ்துவிற்கு அதனையமைத்துக் கூறுகின்ற குணகுணிவாத

மும், அவிருத்த விருத்த ரகித வஸ்துவிற்கு அதனை யமைத்துக் கூறுகின்ற அம்சாம்சிக வாதமும், ஒன்றிற் கூடி மற்றொன்றாகத் தோற்றாத வஸ்து விற்கு அதனை யமைத்துக் கூறும் விம்பப் பிரதி விம்பவாதமும் பொருந்தா வென்க. இவ்வைந்தும் வாதமும் பேதத்திற்கு அபேதஞ் சாதித்தல். காரண மாகிய மிருத்திகையினைக் காரியமாகிய கடமாகச் சொல்லுதல் காரண காரிய வாதமும், குணமாகிய நீலநிறம் குணியாகிய உற்பலத்தில் இருக்கிறதென்று சொல்லுதல் குணகுணிவாதமும், ஒன்றின் றன்மை கெட மற்றொன்றாகச் சொல்லுதல் விகாரவாதமும், அமிசியான சலம் தன்னமிசம் அலையாகச் சொல்லுதல் அமிசாம்சவாதமும், விம்பமாகிய சூரியன் சலத்திற் பிரதி விம்பமாகக் காட்டுதல் விம்பப்பிரதிவிம்பவாதமும் இங்ஙனமாக விவை களை யபேதத்துவம் பேசினும் அறிதற்கதீதமான வஸ்துவை யறிந்து அதில் அதீதமாகும் நிமித்தஞ் சாதனமாகக் கற்பித்துக் கூறினதேயன்றி யதார்த்த மன்றாதலிற் சுருதி விரோதமென்றார்.

வினா:—அற்றேல் அதீதமான யதார்த்தம் அறிதலான கற்பனைக்கு எங் ஙனங் கிடைக்கும்?

விடை:—பலகறை தேட இரத்தினங் கிடைத்தது போற் கிடைக்கு மென்க.

வினா:—இங்ஙனங் கிடத்தல் விடயம்; அது இதுவன்றே?

விடை:—ஒன்றைத் தேட வொன்று கிடைத்தல்போல, அறிதலைத் தேட அதீதங் கிடைத்ததென்க.

வினா:—அற்றேல் தேடினது கிடைக்குமேயன்றித் தேடாதது எங்ஙனங் கிடைக்கும்?

விடை:—தேடல் பொருள் நயத்தைப் பற்றியாதலிற் பலகறை நயத் திற்கு இரத்தினத்தின் நய மளவின்மையாதல்போல, அறிதல் இன்ப நயத் தைப்பற்றியாதலின் இவ்வறிதல் இன்பத்திற்கு அதீத இன்பம் அளவின்மை யின் அவ்வின்பந் தேடாத தேட்டத்தாற் றானே வருமென்க.

வினா:—அற்றேல் சுவானுபவத்திற்குப் பிரயோசனமின்றிய வாதங் களைச் சுருதி கூறிய தெற்றினுக்கு?

விடை:—கட வுபாதி நீங்கின கடாகாயத்திற்கும், மகாகாயத்திற்கும் அயிக்கம் வருவதுபோல, மூலாஞ்ஞானம் நீங்கின கூடஸ்தனுக்கும் பிரமத் திற்கும் அயிக்கஞ் சொல்லும் நிமித்தங் கடாகாய மடாகாய மெனக் கூறின தாலென்க.

வினா:—மெய்யான விம்ப சூரியனிடத்திற் சலவுபாதி நீங்கினபோது அதிற் பொய்யாகத் தோன்றிய பிரதிவிம்ப சூரியன் அயிக்கிய மாகவில்லை யோ?

விடை:—சலவுபாதி நீங்கவே, அக்கற்பனை சூரியனும் நீங்கல் மாத்தி ரமே யன்றி யயிக்கியமாக வில்லையென்க. ஆயினும், வேறு தோன்றாத பிர

யோசனத்தைக் கருதி யயிக்கியங் கூறியதுபோலப் பிரமத்திற்குஞ் சகத்திற்கும் அயிக்கியங் கூறினதே யன்றி, இச்சகந் தோன்றற்குக் காரணமான மாயை பிரதிவிம்ப சூரியன் றோன்றற்குக் காரணமான சலம் விம்ப சூரியன் கிரணத்திற் சோஷித்ததுபோலப் பிரமப்பிரகாசத்திற் சோஷிக்கிற் பிரமமே சுபாவமாக விளங்குமென்பது தோன்றக் காரணமான பிரமங் காரியமான சகம்போலத் தோற்றிற்றெனக் கற்பனை அயிக்கியங்கூறல், யதார்த்த அயிக்கியந் தோன்றற்கே பூருவபட்சமாகச் சுருதிகூறினதே யன்றிச் சித்தாந்தபட்சமாக வன்றென்க.

யதார்த்தத்திற்கும் யதார்த்தத்திற்கும் அயிக்கியமே யன்றி, யதார்த்தத்திற்குங் கற்பனைக்கும் அயிக்கிய மின்மையாற் சுருதிவிரோதமெனக் கூறியதென்க. (கஉஎ)

(அ. கை.)

பூருவபட்சமாகக் கூறிய சுருதிவாக்கியத்தினுற் சித்தாந்தமாகிய முத்தியெங்ஙனங் கூடுமென்ற வினவிற்கு உவமான பூருவகமாகக் கூடுமென்பதற்கு உத்தரமுணர்த்துகின்றது.

அவ்வகிலங் கட்கெல்லாம் பொய்ம்மையே புகலு
மரியதாம் வேதாந்த பக்கமதி லினைய
வெவ்வமறு சுருதிவிசா ரத்தினு லுண்மை
யெனுமுத்தி கூடுமென லெவ்வாறிங் கென்னி
லவ்வியமென் சொப்பனமா தனைவினுன் மெய்ம்மை
யாயவீ ரியவொழிவுங் கற்பிதமாம் வடிவிற்
செவ்வியவொண் கடவுள்வழி பாட்டினு லிட்டஞ்
சேர்தலும்போ னூலுணர்வான் முத்தியுஞ்சித் திக்கும்.

(இ. ளை.) "அவ் வகிலங்கட் கெல்லாம் பொய்ம்மையே புகலு மரியதாம் வேதாந்த பக்கமதில்" எ. து. திரிசியரூபமாயுள்ள அந்தப் பிரபஞ்சங்கள் அனைத்திற்கும் மித்தையெனலையே பிரதிவாதிக்கும் அரிய வேதாந்த பட்சத்தில், "இனைய வெவ்வ மறு சுருதி விசாரத்தினு லுண்மை யெனு முத்தி கூடுமென லெவ்வாறிங்கென்னில்" எ. து. இத்தகைத்தாய குற்றமற்ற பிரபல சுருதி விசாரணையினுல் உண்மையாகிய முத்தி கைகூடுமெனக் கூறுதல் எவ்வா றிங்கு ஏற்கப்படுமெனக் கேட்பையாயின், "அவ்வியமென் சொப்பன மாதனைவினுன் மெய்ம்மையாய வீரியவொழிவும்" எ. து. தனக்கெனச் சொரூப மில்லையெனப்படுஞ் சொப்பன ஸ்த்ரீயைக் கூடுவதினுல் உண்மையாய இந்திரியம் விடுதலும், "கற்பிதமாம் வடிவிற் செவ்விய வொண் கடவுள் வழிபாட்டினு லிட்டஞ் சேர்தலும்போ னூலுணர்வான் முத்தியுஞ் சித்திக்கும்" எ. து. கற்பனையாக இயற்றிய விக்கிரகங்களில் அவற்றைச் செம்மையாய வொள்ளிய கட வுளாகப் பாவித்துச் செய்யும் வந்

தனை வழிபாட்டினால் அவரவர்க் கியைந்த இட்ட பலப்பிராப்தி வாய்த்தலும் எங்ஙனமோ, அதுபோலச் சுருதிவிசாரத் தேர்ச்சி ஞானத்தினால் முத்தியுந் தடையின்றி வாய்க்கும் எ. று.

முத்தியு மென்பதி லும்மை இறந்தது தழீஇய வெச்சம். அவியமென் பது அவ்வியமென எதுகை நோக்கி வந்தது. அ நீக்கம், வியம் வடிவம். எனவே, பொய்வடிவமாயிற்று. பொய்யான பெண்ணைக் கூடின் மெய் யான வீரியமும், பொய் வடிவத்தைத் தேவென வுபாசித்தலின் மெய்யான இஷ்டப் பிராப்தியும் உண்டாவதுபோல, சித்தின் இலக்கணம் வெளிப் படுத்தும் அவிப்பிராயம் உட்கொண்ட சுருதி சடத்தினிலக்கணம் வெளி யாகக் கூறினும் அதன் கருத்தை யுணரும்போது அதன் அந்தரங்கமான சித்தே வெளிப்படுமென்க.

வினா:—அற்றேல், சுருதி கற்பித்துக் கூறிய பொய்யினாலாய மெய்யும் பொய்யாக வேண்டுமே யன்றி மெய்யாதற் கேதென்னை?

விடை:—பொய்யான சொப்பன சிங்கத்தால் மெய்யான சாக்கிரம் உண்டாவதுபோல மெய்யே யாயிற்றென்க. இதற்கு மேற்கோள்: "சுத்தி யில் வெள்ளிபோலத் தோன்றிய தோற்றமான, சத்தியும் பொய்யே யென் முற் சத்தி சாதனமா வந்த, முத்தியும் பொய்யாமென்னின் மோக நித்திரை விலங்கா, னித்திரை தெளியுமாபோ னிருவாண நிலை மெய்யாமே" என்ற கைவல்யநவநீதத்தாற் காண்க.

சுருதி கூறிய கற்பிதத்தினும் யதார்த்தாம்சமே விளங்கலின் அதில் வெளிப்படும் பிரயோசனமும் யதார்த்தமே யாமென்பது. (கஉஅ)

(அ. கை.)

இங்ஙனஞ் சுருதியினால் ஞானமுண்டாயினும் அதற்கு முரணான அஞ் ஞானதி மூன்றின் இலக்கணமும் அவற்றை நிவர்த்திக்குஞ் சிரவணாதி மூன் றின் நாமமும் உணர்த்துகின்றது.

அருமையெனு முத்திவிலக் காகமூன் றுளவா
மஞ்ஞான மையம்விப ரீதமென வவற்றுட்
பிரமமல னென்கை யஞ்ஞான நானப்
பிரமமோ வலனோவென் றிடலையஞ் சுருதி
வருமினிய யுத்திகளா னன்பரமா யினுமுன்
வளர்சீவ பாவமுண்டென் குதல்விபரீ தந்தான்
றருமுறையி லஞ்ஞான திகட்குமுரா னைகுஞ்
சவணமொடு மனனநிதித் தியாசனங்க ளன்றே.

(இ. ரை.) "அருமையெனு முத்திவிலக்காக மூன்றுளவா மஞ்ஞான மையம் விபரீதமென". எ. து. அடைதற்கு மிக்க அருமையெனக் கூறும் முத்திக்கு விரோதமாக அஞ்ஞானம், சந்தேகம், விபரீதமென மூன்றுள

வாம் ; "அவற்றுட் பிரமமல னென்கை யஞ்ஞானம்" எ. து. அம்மூன்ற னுள் அஞ்ஞானமெனப்படுவது யான் பிரமசொரூபம் அல்லன் எனக் கூறுத லாம் ; "நானப்பிரமமோ வலனோ வென்றிடலையம்" எ. து. சந்தேகமெனப் படுவது யான் அந்தப் பிரமமோ, அல்லனோ வெனக் கூறுதலாம் ; "சுருதி வரு மினிய யுத்திகளா னுன் பரமாயினு முன்வளர் சீவ பாவ முண்டென் குதல் விபரீதந்தான்" எ. து. சுருதி காரணமாக வரு மினிய யுத்திகளால் யான் பிரமமென ஏற்கப்படுமாயினும் தொன்றுதொட்டு வளர்ந்துவருஞ் சீவ பாவ முண்டெனக் கொள்ளுதலாம். "தருமுறையி லஞ்ஞானாதிகட்கு முர ணாகுஞ் சவணமொடு மனன நிதித்தியாசனங்கள்" எ. து. இங்ஙனங் தரற் கியைந்த முறைமைப்படி அஞ்ஞானமுதலிய மூன்றிற்குஞ் சிரவணம், மன னம், நிதித்தியாசன மெனப்படுபவைகள் மாறாயுள்ளனவாம் எ. று.

அன்று ஏ அசைகள். முரணாகு மென்றதனால் நேர் நிரனிறையெனக் கொள்க. இக்கவி முதல் கஉஉ கவி வரையுஞ் சிரவணத்தைப் பற்றியது. முறையி னென்றமையின் சவணம் அஞ்ஞானத்தையும், மனனம் ஐயத்தை யும், நிதித்தியாசனம் விபரீதத்தையும் விலக்குமெனக் கொள்க. (கஉகூ)

(அ. கை.)

முற்கூறிய சிரவணாதிகளின் இலக்கணம் இனையவென வுணர்த்து கின்றது.

சூதகா திகளினிடைச் சுருதிவிசா ரத்தாற்
றுணிவுதோன் றுதலெனவே சிவமொடுயி ரயிக்க
மோதுமா ரணமொழியின் றாற்பரியங் கேட்கை
யுயர்சவணங் கேட்டபொரு ளுத்தியிற்சிந் தித்த
றீதின்மா மனனமவற் றாற்றுணிந்த பொருளிற்
சித்தமசை வறவிருத்த னிதித்தியா சனந்தான்
மேதையா கியசவண ஞானத்தா லான்மா
மெய்ம்மையா முக்கியத்தாற் சவணமங்கியெனலாம்.

(இ. ரை.) "சூதகாதிகளினிடைச் சுருதி விசாரத்தாற் றுணிவு தோன் றுத லெனவே" எ. து. ஆசௌச முதலியவற்றில் சுருதியிற் கூறுங் கர்ம காண்ட விசாரத் திடத் தியானத் தெளிவு எங்ஙனந் தோன்று மது போல, "சிவ மொடுயி ரயிக்கமோது மாரண மொழியின் றாற்பரியங் கேட்கையுயர் சவணம்" எ. து. சீவேசுவர ஐக்கியத்தையே பிரதிவாதிக்கும் பிரபல சுருதியின் மிக்க தாற்பரியத்தை வழுவுறாது கேட்டல் மேலாய சிரவண மெனப்படுவதாம்; "கேட்டபொரு ளுத்தியிற் சிந்தித்த றீதின் மாமனனம்" எ. து. இங்ஙனங் கேட்ட பொருளை யுத்தியினான் யோசித்தல் குற்ற மற்ற மேலாய மனன மெனப்படுவதாம்; "அவற்றாற் றுணிந்த பொருளிற் சித்த மசைவற விருத்த னிதித்தியாசனந்தான்" எ. து. இவ்விரண்டால் ஐயந்திரி

பறத் துணிவுற்ற பொருள் யாதோ அதிற் சித்தம் அசைவற இருக்கச் செய்தல் நிதித்தியாசன மெனப் படுவதாம், "மேதையாகிய சவண ஞானத்தாலான்மா மெய்ம்மையா முக்கியத்தாற் சவண மங்கி யெனலாம்" எ. து. மேலாய சிரவணஞானத்தாலும், ஆன்மாவே யுண்மையாமெனக் கொள்ளும் முக்கிய ஞானத்தாலுஞ் சிரவணத்தை யங்கியெனக் கூறலாம் எ. று.

சுருதி ஆரண மெனல் ஒன்றுயினும் இடம் நோக்கிக் கர்ம காண்ட மெனவும், ஞானகாண்ட மெனவுங் கொள்க. உம்மை யிரண்டு மெஞ்சி நின்றன. சிரவணத்திற்கு அங்கியை யுவமித்தார். அங்கி யென்பது அங்கங்களையுடையது. எனவே சவணம் அங்கியும், ஏனைய இரண்டும் அங்கங்களுமாம். இவற்றை மேற்கூறுப. சன்மாந்திரப் பழக்கத்தினுற் கற்பிதமாகிய சடங் கிஞ்சித்துத் தோற்றத்தால் தான் சித்தென்பதை மறப்பது அஞ்ஞானமும், இதனைக் கெடுப்பது இச்சடத்தைக் காண்பவன் சித்தே யென்னுங் கேள்வியே சவணமும், இக்கேள்வி யிருந்தும் அடிக்கடி சடந் தேற்றலால் நான் சித்தோ அலனோ வென மயங்கல் ஐயமும், இதனைக் கெடுப்பது முன்னுள்ள சித்துத் தானென்னக் கண்டு அதைச் சிந்தித்திருக்கின்றதே மனனமும், இச்சிந்தனத்தாலுண்டாய சித்துத் தானுயினும் முற்கூறிய சக சீவ பரமுண்டெனக் காண்குதல் விபரீதமும், இதைக் கெடுப்பது முன்சிந்திப்பினுதித்தது தானுகிய சித்தே யாவுமாய் விளங்குகின்றதென்றறிந்ததே தெளிவான நிதித்தியாசனமுமாம்.

சுவானுபவத்திற்கு விலக்கான அஞ்ஞானுதிகள் வரின் அவற்றை யாங்காங்கு சிரவணுதிகளின் அனுஷ்டானத்தினுற் கெடுக்கவேண்டு மென்பது.

(அ. கை.)

முற்கூறிய சிரவணுதி மூன்றனுள் சிரவணமே முக்கியமெனத் தோன்றவும், ஏனைய இரண்டுங் கவுணமெனத் தோன்றவும் உவமான பூர்வகமாக அவ்விரண்டின் இலக்கணங்களை யுணர்த்துகின்றது.

ஏனையவோ ரிரண்டுமதன் றுணையெனலா லங்க
மெனலாகு மஃதெவ்வா றெனிற்பொருள்க டிகழ்த்து
மானதோர் சுடரசைவிற் கருமவளி யின்று
மாதலினுல் வளிதடுக்குந் திரையெனலா மனன
மேனிமிர்வான் றிரிதூண்டி யொளிர்வித்தல் போலும்
விளம்புநிதித் தியாசனமென் றறிந்திடுக தெரிந்து
மோனையா மெனவுரைத்த சவணத்திற் குள்ள
முறையிலறு வகையிலிங்க தாற்பரிய முரைப்பாம்.

(இ. ரை.) "ஏனைய வோரிரண்டு மதன் றுணையெனலா லங்கமெனலாகு மஃதெவ்வா றெனில்" எ. து. மற்ற மனன நிதித்தியாசன மெனப்படும் இரண்டும் அந்தச் சிரவணத்தின் றுணையெனக் கூறுதலால் அங்கமென

படுவதாம்; அஃதெங்ஙனமெனக் கேட்கின், "பொருள்க டிகழ்த்து மானதோர் சுடரசைவிற் கருமவலி யின்ஞு மாதலினல் வளி தடுக்குந் திரையெனலா மனனம்" எ. து. இருளிற் கிடக்கும் பொருள்களை விளக்குவிக்குந் தர்மமான தோர் தீபத்துக் குண்டேனும், அஃதலையுமிடத்து அதனை நிறுத்தத்தக்க தொழில் வன்மை தன்பா லில்லையெனக் கூறப்படுதலால் அத்தீபத்தை யலையப் பண்ணுங் காற்றைத் தடுக்கத்தக்க திரையைப்போலச் சொல்லப்படுவது மனனமெனப் படுவதும், "மேனிமிர்வான் றிரி தூண்டி யொளிர்வித்தல்போலும் விளம்பு நிதித்தியாசனமென் றறிந் திடுக" எ. து. நன்ஞுகப் பிரகாசிக்கும்படி திரியைத் தூண்டிப் பிரகாசிக்கச் செய்வதுபோலும், முன்னர்க் கூறிய நிதித்தியாசன மெனப்படுவது மெனத் தெரிந்திடுதி. "தெரிந்துமோனையாமென வுரைத்த சவணத்திற்குள்ள முறையி லறுவகையிலிங்க தாற்பரிய முரைப்பாம்" எ. து. இங்ஙனந் தெரிந்து முதலிலுள்ளதாகச் சொல்லிய சிரவணத்திற் குண்டான முறைமைப்படி யறுவித லிங்க தாற்பரியத்தைக் கூறுதும் எ. று.

மனனம் திரையெனலாம். நிதித்தியாசனம் ஒளிர்வித்தல் போலுமென முடிக்கினு மமையும். எழுவாய் மோனை முதலென்பன ஒருபொருட்கிளவி. முற்கூறிய சிரவணத்தில் உதயமான ஞானத்தைத் தீபமாகவும், அத்தீபம் புறவிருத்தியான காற்றினு லணையாமல் அகவிருத்தியினுற் சிந்திக்கும் மனனமாதிய காப்பே திரையாகவும், அந்த ஞானதீபத்தைச் சதோதயமாகப் பிரகாசிப்பிக்குந் தெளிவாகிய நிதித்தியாசனமே தூண்டுகோலாகவுமுவமித்தல். அரணியாற் கடைந் தெடுத்த அங்கியா னேற்றிய தீபம்போல ஆகமுதலிய அவத்தைகளை நீக்கினவிடத்துள்ள அத்துவிதப் பிரகாச சுயஞ்சைதன்னியஞ் சிரவணத்தினு லாதலி னஃதை யங்கி யெனவும், இங்ஙனமுண்டான சிற்பிரகாச தீபந் துவிதவாதத்தால் அணையாமற் றற்சிந்தனமாகிய திரையாற் றடுக்குதலால் அதுவே மனனமும், அச்சிற் பிரகாசத்தைத் தெளிவாகிய தூண்டுகோலால் நன்ஞுய் விளங்கச் செய்தலால் அது நிதித்தியாசனமுமாம். இவ்விரண்டும் அச்சிரவணத்திற்குச் சகாயமாதலால் அங்கமெனலாயிற்று.

இது சிரவணுதிகளின் விசேடண விசேடியங் கூறியதென்பது. (கஅக)

(அ. கை.)

முன் முக்கியமெனக் கூறிய சிரவணத்திற்குச் சடுவித லிங்க தாற்பரியங் கூறுவான் ருெடங்கி, இச்செய்யுளின் உபக்கிரமம் உபசங்கார மாகிய பிரதம லிங்கத்தின் இலக்கண முணர்த்துகின்றது.

அவைகளுபக் கிரமமுப சங்கார முடனே
யப்பியா சம்பினபூர் வதைபலமோ டுற்ற
நவிலருத்த வாதமுற் பத்தியென லாகு
நற்சிருட்டி முன்சகமெய்ப் பரமாயிற் றென்றுஞ்

சிவமதற்குச் சுவகதா திகளிலையென் றகண்டஞ்
செப்புவதே யுபக்கிரமஞ் சகஞ்சிவத்தின் மாய்த்துப்
பவமகலத் துரியற்குப் பிரமமுட னயிக்கம்
பகர்ந்தத்து விதங்கூற லுபசங்கா ரந்தான்.

(இ. ரை.) "அவைக ளுபக்கிரம முபசங்காரமுடனே யப்பியாசம் பின பூர்வதை பலமோடுற்ற நவி லருத்தவாத முற்பத்தி யெனலாகும்" எ. து. முற்கூறிய சட்வித லிங்கமாவன: உபக்கிரமம், உபசங்காரமோடு, அப்பியாசமும், அபூர்வதையும், பலமும், அதற்கடுத்துச் சொல்லும் அர்த்தவாதமும், உற்பத்தியும் எனப்படுவனவாம்; "நற்சிருட்டிமுன் சக மெய்ப் பரமாயிற்றென்றுஞ் சிவ மதற்குச் சுவகதாதிக ளிலையென் றகண்டஞ் செப்புவதே யுபக்கிரமம்" எ. து. நல்ல சிருட்டிக்குமுன் உலகமானது உண்மையான பிரமசொரூபமா யிருந்ததென்றும், அந்தப் பிரமத்திற்குச் சுவகதாதி மூன்று மில்லையென்றும் பூரணத்துவஞ் சாதிப்பதே யுபக்கிரம மெனப்படுவதாம்; "சகஞ் சிவத்தின் மாய்த்துப் பவமகலத் துரியற்குப் பிரமமுட னயிக்கம் பகர்ந் தத்துவிதங்கூற லுபசங்காரந்தான்" எ. து. உலகத்தைச் சிவத்தின்கண் அதுவாகக் கரைத்துப் பிறவிக்கட லகலுமாறு கூடஸ்தனுச்கும் பிரமத்துக்கும் ஐக்கியங் கூறி யத்துவிதஞ் சாதிப்பதே யுபசங்காரமெனப்படுவதாம் எ. று.

சிருட்டிக்கு முன் பின் எப்போதுஞ் சத்தாகத்தோன்றி விளங்குவதே யுபக்கிரமமும், இங்ஙனந் தோன்றிய சத்தி னம்சமாகச் சக சீவ பரங்களைக் கரைப்பதே யுபசங்காரமுமாம்.

அத்துவிதத்தி லுண்டாகிய ஸ்மரணம் உதித்து விளங்கி யொடுங்குமிடத்தும் அவ்வத்துவித ஸ்வரூபமாகவே விளங்குமென்பது. (கஙு௨)

(அ. கை.)

ஏனைய ஐந்தனுள் நான்கின் இலக்கணம் உணர்த்துகின்றது.

கூறுமிவை யிரண்டுமோ ரிலிங்கமென வறிக
கூடத்த னேபிரம மெனமறித்து மறித்துந்
தேறவுரைத் திடலப்பி யாசமாந் துரியன்
றிகழ்பிரமா ணுதீத னென்கையபூர் வதையாம்
பாறினுயி ரொன்றறித லெலாமறித லென்கை
பலம்பிரத்தி கான்மவுரு வாம்பிரமந் தனக்கு
மாறரிய வைந்தொழில்கத் திருத்துவஞ்செப் புறுதல்
வயங்கருத்த வாதமென மதித்திடுக தெரிந்தே.

(இ. ரை.) "கூறு மிவை யிரண்டு மோரிலிங்க மென வறிக" எ. து. முன்னர்க் கூறிய இவையிரண்டும் ஓரிலிங்கமென அறிந்திடுதி. "கூடத்தனே

பிரமமெென மறித்துமறித்துந் தேறவுரைத்திட லப்பியாசமாம்'' எ. து. கூட ஸ்தனே பிரமமென்று மீண்டும் மீண்டுந் தெளிய வுணர்த்துவது அப்பியாச மெனப்படுவதாம்; ''துரியன் றிகழ் பிரமாணுதீத னென்கை யபூர்வதை யாம்'' எ. து. தேகியென்போன் விளங்காநின்ற அஷ்டவிதப் பிரமாணங்க ளுக் கப்பாற்பட்டவ னென்பது அபூர்வதை யெனப்படுவதாம்; ''பாறி லுயி ரொன்றறித லெலா மறித லென்கை பலம்'' எ. து. பேதமின்றி விளங்கு மோருயிரை மாத்திரங் காரண காரியமிறந்து விசாரிக்கத்தக்கவா றுணர்தல் சமஸ்த வுயிர்களேயும் விசாரித்துத் தெளிந்தது போலுமெனக் கோடல் பலமெனப்படுவதாம்; ''பிரத்திகான்ம வுருவாம் பிரமந் தனக்கு மாறறிய வைந்தொழில் கர்த்திருத்துவஞ் செப்புறுதல் வயங்கருத்த வாதமென மதித் திடுக தெரிந்து'' எ. து. கூடஸ்த சொரூபமாக விளங்கும் பிரமத்திற்கு இடையில் நீங்காத பஞ்சகிருத்தியங்களேயும், கர்த்திருத்துவத்தையும் உள வாகச் சாதித்தலே விளங்காநின்ற அருத்தவாத மெனப்படுவதா மெனத் தெரிந்து மதித்திடுதி எ. று.

ஏ அசை. ஐம்ப தென்முற்போல ஐந்தொழி லென் ருயிற்று. சாம வே தத்திற் பிரத்திகான்மாவே பிரமமென வொன்பதுதரம் போதித்தலேக் கூட ஸ்தனே பிரமமென மறித்தும் மறித்துந் தேற வுரைத்திடல் அப்பியாச மென்ருர். முற்கூறிய வண்ணம் யாவுஞ் சின்மாத்திரமாகச் சிந்திக்குமிடத் திற் சக சீவ பரந் தோன்றின் அதின் சுபாவமே யிங்ஙனந் தோன்றுவ தெ னக் கண்டு அவற்றை யதுவேயெனப் பழகுவதே யப்பியாசமெனவும், இங் ஙனம் அப்பியாசித்த அச்சித்தில் அதீதமாதலே யபூர்வதையெனவும், இத் துரியாதீதம் யாவுமாய் நிறைந்திருக்கின்றமையால் அதனை யறிதல் யாவை யும்அறிந்ததாதலே பலமெனவும்; இங்ஙனம் விளங்கிய சத்தனுக்கும்,அதின் சத்தியாகிய சக சீவ பரங்களுக்குஞ் சிருட்டியாதி கர்த்திருத்துவஞ் சொல் லுவதே யருத்தவாத மெனவுமாம்.

முதற்கட் சொன்ன இலிங்கத்தால் நிச்சயித்த பொருளினை ஐயந் திரி பின்றி யனுபவமாக அனுஷ்டித்தற்கும், அங்ஙனம் அனுபவித்த பொருளில் அதீதமாதற்கும், அவ்வதீதமே யாவுமாய் விளங்குதற்கும் அங்ஙனம் விளங்கு தலே மாகர்த்திருத்துவ மென்பதற்கும் இந் நான்கு இலிங்கமும் வந்தன வென்பது. (கஙங)

(அ. கை.)

முன் னிறுத்தமுறையான் உற்பத்தி யிலிங்க இலக்கணங் கூறி, மேல் மனனத்துக்குச் சகாயமான உத்திமுதன் மூன்றிலக்கணங் கூறுவான் ருெ டங்கி முன் உத்தியின் இலக்கணம் உணர்த்துகின்றது.

கடத்தினுக்கு மண்ணினையு நூற்குலண்டு தனையுங்
காரணமென் பதுபோலப் பிரமமே முன்னம்
படைத்தசகத் காரணமென் கின்றதுற் பத்தி
பகருத்தி தருக்கமனு மானமிவை மூன்று

மடுத்துவரு மனனசக காரிகளா மவற்று
ளாருயிர்க ளனேகம்வியா பகமெனவே கூறுந்
தடுப்பரிய சாங்கியமே முதலாய மதத்துட்
சாற்றுமுயி ரெலாமுடம்பு தொறும்புணர்ச்சி யுறலால்.

(இ. ரை.) "கடத்தினுக்கு மண்ணினையு நூற்குலண்டு தனையுங் கார ணமென்பதுபோல" எ. து. கடோபாதிக்கு மண்ணையும், நூலுக்குக் கோச காரப் புழுவையும் உபாதானமெனக் கூறுமாறு போன்று, "பிரமமே முன் னம்படைத்த சகத் காரணமென்கின்ற துற்பத்தி" எ. து. முன்னர்ப் படை த்த பிரமமே சகத்திற்கு முதற்காரணமெனக் கூறுதல் உற்பத்தி யெனப் படுவதாம். "பகருத்தி தருக்க மனுமான மிவைமூன்று மடுத்துவரு மனன சககாரிகளாம்" எ. து. சொல்லப்பட்ட யுக்தி, தருக்கம், அனுமான மென்ன ப்பட்ட இம்மூன்றுஞ் சிரவணத்திற்குப் பின்னர் அடுத்து வரும் மனனத் திற்குத் துணைக்கருவிகளாம். "அவற்றுளாருயிர்க ளனேகம் வியாபக மெ னவே கூறுந் தடுப்பரிய சாங்கியமே முதலாய மதத்துள்" எ. து. மேற் கூறிய மூன்றனுள் நிறைந்த சீவர்கள் அனேக மெனவும், ஏகமெனவும் வாதித்துக்கொண்டிருக்கு மிதனால் யாவராலுந் தடுத்தற்கரிய சாங்கியமத முதலிய பலமதங்களுள், "சாற்று முயிரெலா முடம்பு தொறும் புணர்ச்சி யுறலால்" எ. து. சொல்லப்பட்ட எல்லாவகைப்பட்ட வுயிருந் தனித்தனி தேகங்கடோறுஞ் சம்பந்தப்பட்டிருப்பதால் எ. று.

இது குளகம். இவ்வுவமானங்களால் உபாதானமெனக் காட்டப் பிர மமேயெனல் தேற்றம். இதுமுதல் இரண்டு கவியும் மனனத்தைப்பற்றி யது. உற்பத்தி உண்டாதல். ஆகவே, இங்ஙனம் உண்டாதற்கு உபாதான காரணம் பிரமமென்பதாயிற்று.

வினா:—இங்ஙனம் இருக்க இச்சகத்திற்கு உபாதானகாரணம் மாயை யென்று சிலர் கூறுவதென்னை?

விடை:—சுத்தியில் இரசிதம் புத்தி மயக்காற் றோற்றல்போலப் பிரமத் திற் சகத்துற்பத்தி மாயாமயக்காற் றோற்றலினென்க.

வினா:—அற்றேல், இவர் இங்ஙனங் கூறிய காரண மென்னை?

விடை:—இச்சகஞ் சச்சிதாநந்தாம்ச மாதலின் இதற்குக் காரணம் பிரமமெனக் கூறினாரென்க. எனவே, அவரது திருஷ்டிக்குச் சகம் நாம ரூபமாதலினாலும், இவரது திருஷ்டிக்குச் சச்சிதாநந்தாம்ச மாதலினாலும் இங்ஙனம் வந்ததென்க. கடத்திற்கு உபாதான காரணம் மிருத்திகையும் அம்மிருத்திகையிற் கடமாதற்குப் பக்குவமுள்ள சத்தியு மென்பவைபோல வாம் காரண காரியங்கட்கு ஒன்றற்கொன்று சம்பந்தங்களைக்காட்டி யவை கட்கு அதீதமான பிரமத்தை யாறுலிங்கத்தாற் றரிசிப்பித்தலென்க.

முற்கூறிய சிரவணத்தினால் உதயமான ஆத்ம சொரூபம் ஆதிமத்தி யாந்த ரகிதமா யெக்காலத்தும் ஒருபடித்தாய்ச் சதோதயமாக விளங்கு மென்பதைச் சடுவிதலிங்க தாற்பரியத்தால் விளக்குவித்த தென்பது. (கஙச)

(அ. கை.)

இதுவுமது.

இந்தவுடம் பிவற்கேயாம் போகசா தனமற்
றேனோர்க்கன் றெனிற்போகத் திதிபுகலொ ணாதாம்
வந்தவுடம் பெத்திறத்து மிவன்வினையால் வரலான்
மற்றவற்கே யெனின்வினையு மெவர்க்குமிலை யோதான்
முந்தையுடம் பபிமானத் தாற்செய்வினை யிவற்கே
முற்றுமெனி னவ்வபிமா னமுமுந்தை யுடலசே
ரந்தவுயி ரனைத்திற்கு மிலையோதா னிவ்வா
றனவத்தை நீக்கலரி தநேகவுயி ரெனலால்.

(இ. ரை.) "இந்தவுடம் பிவற்கேயாம்" எ. து. இந்தத் தேகம் இவனுக்கே யுரித்தாகும், "போகசாதன மற்றேனோர்க் கன்றெனில்" எ. து. இத்தேகத்தால் அனுபவிக்கும் போகசாதனம் இவனுக்கேயன்றி யேனையோர்க் காகாதெனில், "போகஸ்திதி புகலொணாதாம்" எ. து. நிலையின்மையின் போகத்தின் நிலைமை யிவ்வரையறையுடைதெனச் சொல்லக் கூடாததாம், "வந்தவுடம் பெத்திறத்து மிவன் வினையால் வரலான் மற்றிவற்கே யெனின்" எ. து. வாய்த்த தேகம் எவ்விதத்தான் நோக்குமிடத்தும் இவன் முன்ன ரியற்றிய வினை காரணமாக வருவதினால் அந்த வினை யிவனுக்கே யுரித்தாமெனின், "வினையு மெவர்க்கு மிலையோதான்" எ. து. அங்ஙனமாய வினையும் யாருக் கிருந்து யாருக் கில்லை? எவர்க்கு மில்லையோ? "முந்தையுடம் பபிமானத்தாற் செய் வினை யிவற்கே முற்றுமெனின்" எ. து. பூர்வ சன்ம வுடம்பை யானென் றபிமானித்த அபிமானங் காரணமாக முன்னர் இயற்றிய வினை யிவனுக்கே வாய்க்குமெனக் கூறின், "அவ்வபிமானமு முந்தையுடல்சே ரந்தவுயி ரனைத்திற்கு மிலையோதான்" எ. து. அங்ஙனமாய அபிமானமும் பூர்வ சன்ம வுடலைச் சேர்ந்த வுயிர்க ளனைத்திற்கும் இல்லையோ? "இவ்வா றனவத்தை நீக்கலரி தனேக வுயி ரெனலால்" எ. து. உயிர்கள் அனேகமெனக் கூறலால் இங்ஙனமே யனவத்தா தோடம் வந்தே தீரும், அதனைத் தடுப்பதுஎவர்க்குமரிது எ. று.

மற்று தான் அசைகள். அநாதி யுயிரெனப் பாடமோதுவாரு முளர். போக ஸ்திதி, போக்கிய வஸ்து பொசிப்பத னிலைமை. இலையோ வென்ற எதிர்மறை யோகாரம் இருக்கு மென்பதைக் காட்டும். அனவத்தை முடிவு பெறாமை. (கஙரு)

(அ. கை.)

இதுவுமது.

செப்பரிய வேகான்ம பக்கத்திற் போகத்
திதியிலையென் றநேகான்ம பக்கமது கொளினு
மிப்பரிசு மிகுபோகத் திதிகூடா தாயிற்
றிச்சங்கை யிருமதத்து மொக்குமே யென்னிற்

பற்பலவி லேகான்ம பக்கமதில் விம்பப்
பதிவிம்ப நியாயத்தாற் கரணவசை வாதி
மெய்ப்பரிய பலதிறத்தா லெண்ணிறந்த போக
விளைவுகூ டுதலெளிதென் றுதலுத்தி யாமால்.

(இ. ரை.) "செப்பரிய வேகான்ம பக்கத்திற் போகத் திதியிலையென் றனேகான்ம பக்கமது கொளினு மிப்பரிசு மிகு போகத் திதி கூடா தாயிற்று" எ. து. சொல்லுதற்கரிய ஏகான்ம பக்ஷத்திற் போக ஸ்திதியான தில்லையென்று அநேகான்ம பக்ஷத்திற் கொண்டாலும் இந்தத் தன்மை மிக்க போக ஸ்திதியை யேற்கக் கூடாதாயிற்று. "இச்சங்கை யிரு மதத்து மொக்குமே யென்னில்" எ. து. இங்ஙனமாக வந்த சங்கைகள் முற்கூறிய இரண்டு மததிலும் ஒத்துவருமே யெனக்கேட்கில், "பற்பலவி லேகான்ம பக்கமதில் விம்பப்பதிவிம்ப நியாயத்தாற் கரண வசைவாதிமெய்ப்பரிய பல விதத்தால்' எ. து. பலவேறு கூறுபாடுகளில்லாத ஏகான்மபக்ஷத்தில் விம்பப் பிரதிவிம்ப ஞாயத்தாலும் அகக் கரண புறக் கரண அசைவாதிகளை மெய் யென் றேற்றற்கரிய பலவித ஏதுக்களாலும், "எண்ணிறந்த போகவிளைவு கூடுத லெளி தென்றுத லுத்தியாம்" எ. து. அளவிறந்த போக விளைவெய்த லெளிதெனக் கூறுதலே யுத்தியெனப்படும் எ. று.

ஆல் அசை. றகர வொற்று இன எதுகை, யகரவொற்று ஆசெதுகை. கொளினுமென்பதிலும்மை இழிவுசிறப்பு. ஆன்மா சாங்கியத்தில் ஏகமெனவும், ஏனைய மதத்தில் அநேகமெனவுங் கூறுப. அவற்றுள் சரீரங்கடோறுங் கூடியிருத்தலின் ஆத்மா ஏகமாம். அங்ஙனமாயின் இத்தேகம் இவனுக்கே சுகத்தைக் கொடுப்பதன்றி மற்றவர்களுக்குக் கொடாமையால் ஆத்மா அநேகமேயாம். ஆயின், அப்போகத்திற்கு நிலை சொல்லக் கூடாமையால் ஆன்மா ஏகமேயாம். இவன் கன்மத்திற்கு ஈடாய தேகம் வருதல் இவனுக்கே போகமென்பதனால் ஆத்மா அநேகமேயாம். யாவர்க்குங் கன்ம மிருப்பதனால் ஆத்மா ஏகமேயாம். இவன் அபிமானத்தாற் செய்த கன்மம் இவனுக்கே வருதலால் ஆன்மா அநேகமேயாம். இவ்வபிமானம் இத்தேகங்களி னுள்ள ஆத்மாவுக் கெல்லாம் இருத்தலின் ஆத்மா ஏகமேயாம் என்றவிடத்து ஒன்றும் முற்றுப் பெறுது அநவத்தா தோஷ முண்டா மென இவற்றை நீக்கி யேகான்ம பக்கத்திற் போகமில்லையென்று அநேகான்ம பக்கத்தைக் கொள்ளினும் முற்கூறிய வண்ணம் இதற்கும் போகஸ்திதி யில்லையென வரும். அங்ஙனம் வரின் இவ்விருபட்சத்திற்கும் ஒக்குமாயினும் ஏகான்மபக்கத்தில் விம்பமாகிய ஆத்மாவானது கரண சலத்திற் பிரதி விம்பமாய் நானாவிதமாயிருத்தலிற் பலவிதமான போகானுபவம் எளிதிற் கூடுமெனவும், பிரதிவிம்பம்போல அநேகான்மபக்கமும் விம்பம்போல ஏகான்ம பக்கமுமாதலான் இவ்வநேகான்ம பக்கங் கற்பிதமெனவும், ஏகான்மபக்கம் யதார்த்தமெனவுங் கண்டு அதனை நீக்கி யிதை யொப்புதலே யுத்தியெனக் காண்க.

முற் கூறிய பிரம ஸ்வரூபத்திற்கு என்றும் இடையூ றின்றித் தானே தானாய் விளங்கு மென்பதற்கு ஐய மின்றிக் காக்கும் நிமித்தம் உண்டான மனனத்திற்குள்ள யுத்தியானது ஒன்று அநேகமென்னும் ஐயத்திற்குப் பகை யாக வரிக்குமென்பதை யறிவித்ததென்பது. (கஙசு)

(அ. கை.)

முற் கூறு தொழிந்த தர்க்க அனுமானம் இரண்டுங் கூறிற் பெருகு மென நிறுத்தி, மேல் நிதித்தியாசனத்திற்கு உருவமான மந்திரயோக முத லிய ஐந்தையுங் கூறுவான் றொடங்கி யவற்றின் நாமங்க ளுணர்த்து கின்றது.

தருக்கவனு மானவிலக் கணங்கடா மிசிரா
சாரியர்கண் முதலானோர் கண்டனா திகளில்
விரித்தமைத லாலிதுதான் சுவானுபவ நூலாய்
விளங்குதலா லீண்டுரைப்பிற் பெருகுமெனுங் கருத்தா
லுரைக்கிலமந் திரயோகம் பரிசயோ கம்பின்
னுயர்பாவ யோகமுட னபாவயோ கந்தான்
றெரித்தமகா யோகமெனு மிவைகளோ ரைந்துந்
திகழ்கின்ற நிதித்தியா சனவடிவ மாமால்.

(இ. ரை.) "தருக்க வனுமான விலக்கணங்கடா மிசிராசாரியர்கண் முதலானோர் கண்டனாதிகளில் விரித்தமைதலால்" எ. து. தருக்கம், அனு மானம் என்னும் இவ்விரண்டின் இலக்கணங்களை அருஷமிசிராசிரியர்கள் முதலினோர் அளவுகண்டு கண்டன முதலியவைகளில் வெளிப்படத் தெரி வித்திருப்பதினாலும், "இதுதான் சுவானுபவ நூலாய் விளங்குதலா லீண்டு ரைப்பிற் பெருகுமெனுங் கருத்தா லுரைக்கிலம்" எ. து. இந்நூல் சுவாநு பூதி நிலையை மாத்திர முரைத்தற் கியைந்த நூலாய் விளங்குதலாலும் இங்கே யவற்றைச் சொல்லின் மிக்கு விரியு மென்னுங் கருத்தாலும் இவற் றைக் கூறுகிலம். "மந்திர யோகம் பரிசயோகம் பின்னுயர் பாவ யோக முட னபாவ யோகந்தான் றெரித்த மகாயோகமெனு மிவைகளோ ரைந் தும்" எ. து. மந்திரயோகம், பரிசயோகம், உயர்வாகிய பாவயோகம், அபா வயோகம், மயக்கங்களைத் தெரிவித்த மகாயோகம் எனப்படும் இவைகளைந் தும் "திகழ்கின்ற நிதித்தியாசன வடிவமாம்" எ. து. விளங்காநின்ற நிதித் தியாசன வடிவமெனப் படுவனவாம் எ. று.

ஆல் அசை. சுவாநுபவமெனல் தன்னைத்தா னுள்ளவாறு தரிசித்தலை. இவ்வைந்தும் நிதித்தியாசன வடிவ மெனலால் அங்கமெனப் பெற்றாம்.

(அ. கை.)

மேற்கூறிய பஞ்சயோக விலக்கணம் இனையவென வுணர்த்துகின்றது.

ஓங்காரா திகளனுசந் தானத்தாற் பரத்தி
னுள்ளமடங் குதலேமந் திரயோக மதனோ
டெங்காகு மனபவன மொன்றாய்மூ லத்தி
னிருஞ்சுழினை வழிசென்று சென்னிநடு விருந்த
தேங்கான்ம வொளியின்மனோ லயமாதல் பரிசஞ்
சிரந்துறக்கஞ் செவிதிசைக ளிருசுடர்கள் விழிதீப்
பாங்காய முகமுந்தி விசும்புநிலம் பதமாம்
பரமனுரு வாயவிராட் புருடவடி வெனினும்.

(இ. ரை.) "ஓங்காராதிக வனுசந்தானத்தாற் பரத்தி னுள்ள மடங்குதலே மந்திரயோகம்" எ. து. பிரணவ முதலிய மந்திரங்களை யிடைவிடாது தக்கவாறு சிந்தித்தலாற் சிவோதயமா யதின்கண் மனம் ரமித்தலே மந்திர யோக மெனப் படுவதாம்; "அதனோ டெங்காகு மன பவன மொன்றாய் மூலத்தி னிருஞ் சுழினை வழி சென்று சென்னி நடு விருந்த தேங்கான்ம வொளியின் மனோ லயமாதல் பரிசம்" எ. து. அந்த மந்திரயோகத்தோடு இங்கே விவகரிக்கும், மனமும் பிராணவாயுவுங் ஒன்றாய்க் கூடி மூலாதாரத்திற் சிறந்த சுழிமுனை மார்க்கமாகச் சென்று சிரசின் மத்தியி லிருந்த வியாபகமான ஆத்மப் பிரகாசத்தில் மனமசையாது லயித்திருப்பதே பரிசயோக மெனப்படுவதாம்; "சிரந் துறக்கஞ் செவி திசைக ளிரு சுடர்கள் விழி தீப் பாங்காய முக முந்தி விசும்பு நிலம் பதமாம் பரமனுருவாய விராட் புருடவடி வெனினும்" எ. து. சிரசு சுவர்க்கமும், காது திக்குகளும், இருவிழிகள் சூரிய சந்திரர்களும், நெற்  கண் அக்கினியும், இவைகளிருத்தற்குப் பாங்காக அமைந்த முகமும், நாபி ஆகாயமும், பாதம் நிலமுமாக அமைந்த இவை பரம சொரூபமாக விளங்கிய விராட்புருடனுக்கு வடிவமெனக் கூறினும் எ. று.

இது குளகம். விராட் புருட வடிவ மென்றது பூமி யந்தர சொர்க்கங்களை யவயவமாக வியாபித்துநின்ற பேருருவை. (கஙஅ)

(அ. கை.)

இதுவுமது.

அன்றியள வறுபெருந்தோட் படைபணியோ டுற்ற
வண்ணல்வடி வெனினுநினைந் தவயவங்க டம்மி
லொன்றொன்றாய் விடுத்துநின்ற வவயவிமாத் திரமா
யுண்மையாம் பிரமத்தின் மனமடங்கல் பாவஞ்
சென்றணவுங் கரணமுறு வொருபிரமந் தன்னிற்
சிந்தையடங் குதலபா வம்படைப்பி லொழிவி
றன்றெரித றெரியாமை யிடத்தினோர் பரிசாய்த்
தன்வடிவாம் பிரமத்தின் மனமிறன்மா யோகம்.

(இ. ரை.) "அன்றி யளவறு பெருந் தோட் படை பணியோ டுற்ற வண்ணல் வடிவெனினு நினைந் தவயவங்க டம்மில்" எ. து. இவ்வாறன்றி யும் அளவிறந்த பெரிய புஜங்களேயும், அவைகட்கியைந்த ஆயுதங்களேயும், ஆபரணங்களேயும் தனக்கு அலங்காரமாகப் பொருந்திய பரமசிவத்தின் வடிவென விவற்றைக் கூறினும் இதுகாறும் நினைப்பூட்டி வந்த அவயவங் களில், "ஒன்ருென்ருய் விடுத்து நின்ற அவயவிமாத்திரமா யுண்மையாம் பிரமத்தின் மனமடங்கல் பாவம்" எ. து. ஒவ்வொன்ருகச் சோதனையால் நியதிகளைந்து மிஞ்சிநின்ற அவயவிமாத்திரமாகவும் யதார்த்தமாகவும் விளங் கும் பிரம சொரூபத்தில் மனம் லயிப்பதே பாவ யோக மெனப்படுவதாம்; "சென்றணவுங் கரண முருெ வொரு பிரமந் தன்னிற் சிந்தை யடங்குதல் பாவம்" எ. து. இங்ஙனஞ் சென்று அடையாநின்ற மனத்தால் எட்டொ ணுத ஒப்பற்ற பிரமத்தின் மனுே லயமாதலே யபாவ யோகமெனப் படுவ தாம்; "படைப்பி லொழிவி றன்றெரித றெரியாமை யிடத்தி னேர்பரி சாய்த் தன்வடிவாம் பிரமத்தின் மனமிறன் மாயோகம்" எ. து. சிருட்டி காலத்தும், சங்காரகாலத்தும், ஞானகாலத்தும், அஞ்ஞானகாலத்தும் ஓர் படித்தாக நின்று தானே தானுக விளங்கும் பிரமத்தின்கண் மனுேலய மாதலே மகாயோக மெனப்படுவதாம் எ. று.

அண்ணல் வடி வென்றது பரமன் உருவை. எனவே, விராட்டாதிய ஜீவேசுர சகங்களே யவயவங்களாக வுடையது. அவயவியென்றது இவ்வவ யவங்களே யுடையவனே. எனவே, அவைகளே நீக்கித் தனியே நிற்பவன். கரணமுருெ ஒரு பிரமமென்றது அவாங்மனுேகோசரமான சுத்த சைதன்னி யத்தை. பிரணவானுசந்தானத்தாற் பிரம முதய மாதலின் மந்திர யோக மெனவும், இடை பிங்கலைகளே யடைத்துச் சுழிமுனே மார்க்கத்திற் சென்று மூலாதார முதல் ஆக்கினே யீருன தானங்களிலுள்ள தேவதைகளோடுங் கூடி மேற் பிரமாநந்தத்தி னுள்ள பிரமத்தோடுங் கலத்தலிற் பரிச யோக மெனவும், ஜீவேசுர சகங்க ளனைத்தையும் அவயவமாகக் கண்டு அவைகளே நீக்கின விடத்துள்ள அவயவியைப் பிரமமாகப் பாவித்தலிற் பாவயோக மெனவும், அங்ஙனம் பாவிக்கு மனதிற்கு அகோசரமான விடத்துள்ள பிர மத்திற் பாவனுதீதமாய் நிற்றலின் அபாவயோகமெனவும், சங்கற்பம் உதித் தொடுங்கின விடத்தும் அறிவறியாமை யிடத்தும் ஒரு தன்மையாய் விளங் கும் பிரமமே தானுய் விளங்கலின் மஹாயோகமெனவுங் கூறினர்.

வினு:—இங்ஙனங் கூறிய ஐந்தினுலும் ஒவ்வொன்றினும் பிரமத்தை யடைதலின் இவைகட்குத் தாரதம்மியம் வந்ததென்னே?

விடை:—ஒன்றென்ப தின்றி யாவுமாய் நிறைந்திருக்கின்ற பிரமம் இவ்வட்சரத்தின் அடங்கி நின்று வெளிப்பட்டதெனக் கண்டமையானும், அங்ஙனம் நிறைந்துள்ள பிரமம் இத்தேகாக்கிரத்தின் வெளிப்பட்டதாகத் தரிசித்தமையானும், அவயவங்களே நீக்கின விடத்துள்ள அவயவியைப் பார்க்கும் பாவனையால் உதயமா மென்றமையானும், அப்பாவனே யிறந்து

அதீதமாய் விளங்குமென்றமையானும், மனம் உதித்தவிடத் தொடங்கின் உண்மை விளங்குகின்ற தென்றமையானும், இவ்வைந்திற்கும் ஏகதேசமான தோஷங்களும் இவை யொன்றற்கொன் றறிவு வியாபித்துவருதலின் உயர்வு தாழ்வான தாரதம்மியங்களும் உண்டாகும். இம்முன்னிலைகளியாவு மின்றிச் சிந்திக்கு மனதின்கண் நிறைந்திருக்கின்ற சுத்த சைதன்னியமே யெங்கும் நிறைந்திருக்கின்ற தென்னும் அத்துவித வஸ்துவே முக்கியமெனவும், ஏனைய ஐந்துயோகங்களுங் கவுணமெனவும் வந்தமையாலெனக.

இவைகளில் மந்திரயோகத்திற் பிரமம் உதித்ததென்பதற்கு மேற்கோள் பிரமகீதை: "தீமரந்தொறுமடைந்தழிவுறுதுதெரிவா, காமைநின்றரணியால்வடிவுகாணுமதுபோ, லாமுடம்பிலழிவினறிமறைகின்றவமல, ஞேமெனும்பொரு ளுணர்ந்திட வுடம்பில் வெளியாம்" என்பதனானும், பரிசயோக மென்பதற்குதாரணம் வாதவூரர் புராணம்: "முக்குணம்புலனைந்துடனடக்கிமூலவாயுவையடைத்திருவழியைச், சிக்கெனும்படியடைத்தொருவழியைத்திறந்து தாண்டவச்சிலம்பொலியுடன்போய்த்,தக்கவைந்தெழுத்தோரெழுத்துருவாந்தன்மைகண்டவர் தகும்பெருவெளிக்கே, புக்கழுந்தினரெமதுருப்பெறுவர் புவியில்வேட்டுவனெடுத்தமனபுழுப்போல்" என்பதனானும், பாவயோகமென்பதற்குதாரணம் வாசிட்டம்: "கரையறுபரமாகாசங்கதித்தறப் பருத்தகண்டம், புரையறு மதன்கீழெல்லையற்ற விண் பொற்றுட்கஞ்ச, நிரைபயின்முடிவி றிக்கு நீண்டற வுயர்ந்ததோள்க, ளுரையுயிர் நாறு லோகமொளிகொளாயுதங்களாமே" என்பதனானும்,அபாவ யோகம் என்பதற்குதாரணம் சுருதி சாரம்: "தனித்தசுவானுபவாதீதம் பிரமோகமே தாற்றுனவனுயிருப்பதுஞ் சங்கற்பத்தானு, மனித்தமென விட்டிடிற் சூனியமாதலானு மது மறவாவிடி னினைவா யழிதலானு, மினித்தநிட்டை சாதகமாயிருத்தலானுமேதுமல்லமூடமென்றே யியம்பலானுந், தொனித்தசுபாவமுங்கடந்த வதீதந்தானே சுயம்பிரகாசம் மெனவே சொல்வர்தாமே" என்பதனானும், மஹாயோகமென்பதற் குதாரணம் ஞானவாசிட்டம்: "ஆங்கதுவே யதீதபதமாதலாலே யதுகிஞ்சி லன்றெங்கு மதுவே யாகும், பாங்குறு வீடென் றும்பருலகி னில்லை பாதலத்திற் பூதலத்திற் பார்க்கி லில்லை, வீங்கிய வாசைகளெல்லா மிறந்தகாலை விரிந்தமன மிறப்பதுவே வீடென்றோது, மோங்கிய வீடெனக்குள தென்றுள்ளே யெண்ணமுண்டாகின் மீண்டுமன முற்பவிக்கும்" என்பதனானும், "சகத்தான துதயலய மாகின்ற தெவ்விடமோ வவ்விடத்தின் மனோலய மாகுவதே மஹாயோகம்" என்ற பிரமாநந்த விவேக சமுத்திர மென்னும் நூலினானுங் காண்க.

இவ்வைந்து யோகமும் நிதித்தியாசனத்துக் கங்கமாகவும், சட்சமாதிக்கு அனுகூலமாகவுங்கண்டு இவற்றிற்கு அதீதமான பொருளைச் சகசத்தில் அனுஷ்டிக்கும்படியாகக் கூறினாரென்பது. (கநுகூ)

(அ. கை.)

முற்கூறிய சிரவணாதி மூன்றினுக்குஞ் ஷட்லிங்காதி மூன்று பொருளினாற் பிரமானுபவ முண்டாயினும் அதற்கு இடையூறான பிரதிபந்தம் மூன்

றுண்டெனக் கூறுவான் றொடங்கி, அவற்றின் நாமமும் பூதப்பிரதிபந்த இலக்கணமும் உணர்த்துகின்றது.

பகர்ந்தவுயி ருண்மைவிலக் காகவரும் பூதப்
　　பதிபந்தம் வர்த்தமா னப்பதிபந் தம்பி
னிகழ்ந்தவா காமியப் பதிபந்த முத்தி
　　நேயமொடு துறந்துகுரு பரனையறிந் தடைந்து
மகிழ்ந்துசவ ணாதிசமுற் றிடினுமுன் னுகர்ந்த
　　வனிதாதி விடயசுக வாதனையாற் றினமும்
புகுந்துமன நிலைகலக்கி யுயிருண்மை யுறுமற்
　　போக்கியிட றனைப்பூதப் பதிபந்த மென்பர்.

(இ. ரை.) "பகர்ந்த வுயிருண்மை விலக்காக வரும் பூதப் பதிபந்தம் வர்த்தமானப் பதிபந்தம் பினிகழ்ந்த வாகாமியப் பதிபந்தம்" எ. து. பூதப் பதிபந்தம், வர்த்தமானப்பதிபந்தம், பின்னர் நிகழும் ஆகாமியப் பதிபந்தங் களெனப்படுபவை முன்னர்ச் கூறிய ஆன்மாவி னுண்மை நிலைக்கு மாறாக வாராநிற்கும். "முத்திநேயமொடு துறந்து குருபரனை யறிந்தடைந்து மகிழ்ந்து சவணாதிக முற்றிடினும்" எ. து. முத்தி யடைய வேண்டு மென்னும் மிக்க அவாவோடு துறந்து தக்க குருபரனை யறியவேண்டிய இலக்கணங் களா லறிந்தடைந்து மனமகிழ்ந்து சிரவணமுதலியவற்றைத் தீரத் தெளியப் பெறினும், "முன்னுகர்ந்த வனிதாதி விடய சுக வாசனையாற் றினமும் புகுந்து மனநிலை கலக்கி யுயிருண்மை யுறுமற் போக்கிடறனைப் பூதப்பதி பந்த மென்பர்" எ. து. முன் அனுபவித்த பெண் முதலிய விஷயங்களி லுண்டாகிய சிற்றின்ப வாசனையால் நாள்தோறும் அகத்தில் புகுந்து மனதி னது நிலையைக்கலக்கி உயிர் தனதுண்மை நிலையை யடையாவாறு போகும் படி செய்தலைப் பூதப் பதிபந்தமென அறிவுடையோர் கூறுநிற்பர் எ. று.

துறந்து, அறிந்து, அடைந்து, மகிழ்ந்து, உற்றிடினும் என முடிக்க.()

(அ. கை.)

ஏனைய இரண்டு பிரதிபந்தங்களின் இலக்கணம் உணர்த்துகின்றது.

மடிவிடையா சத்தியபி மானமொடு குதர்க்க
　　மறுகிடுஞ்சிற் றினஞ்சேர்தல் சபலத்து வாதி
யடைதலின்மெய் தெரிந்துமுயி ருண்மையுறு தழித்த
　　லதுவாகும் வர்த்தமா னப்பதிபந் தங்காண்
விடலரிய சநகமின்னுஞ் சிலவடைந்தா லன்றி
　　விடாதுபிர மாதியுல கிச்சையெனுந் தோட
மொடுமருவி மறைப்பொருளை யுணர்ந்திடினு மான்ம
　　வுண்மையுறு தழித்தலா காமபதி பந்தம்.

(இ. ரை.) "மடிவிடையாசத்தி யபிமானமொடு குதர்க்க மறுகிடுஞ் சிற்றினஞ் சேர்தல் சபலத்துவாதி யடைதலின் மெய்தெரிந்து முயிருண்மை யுரு தழித்த லது வாகும் வர்த்தமானப் பதிபந்தங் காண்" எ. து. மாறற் கியைந்த விடய விச்சையும், அபிமானமும் முறை பிறழ்ந்து வாதித்தலும் முறை பிறழத்தக்க அற்பவினத்தோடு சேர்தலுமாகிய இவற்றாற் சாபல்ய முதலிய விழி குணங்களை யடைதற்கு இடம் பெறலின் முன்ன ருண்மை தெரிந் திருந்தும் இப்போது அவ்வுண்மையை யுயி ரடையாவா றழித்தல் யாதோ அதுவே வர்த்தமானப் பதிபந்தமெனப்படுவதாம்; "விடலரிய சநந மின்னுஞ் சில வடைந்தாலன்றி விடாது பிரமாதி யுலகிச்சையெனுந் தோட மொடு மருவி மறைப்பொருளை யுணர்ந்திடினும்" எ. து. விட்டு நீங்கற்கரிய சநநங்களை யின்னுஞ் சிலவெடுத்தாலன்றிச் சத்தியலோகமுதலிய வுலகின் கண் வைத்த விச்சை யென்னுந் தோடம் விடா தவற்றோடு கூடிப் பிரபல சுருதியி னுண்மைப்பொருளை யுணர்ந்தாலும், "ஆன்ம வுண்மையுரு தழித்த லாகாம பதிபந்தம்" எ. து. அவ்வாபாச நிலைமை ஆன்மா வானது தனது உண்மை நிலையை யெய்தாவா றழித்தலே ஆகாமியப் பதிபந்தமெனப் படுவதாம் எ. று.

ஆறு மெனலை ஏனைய விடத்து மொட்டுக. பூதப் பிரதிபந்தம் : ஆத்ம தரிசனமாகியும் முன்னனுபவித்த விடயானுபவத்தைச் சிந்தித்தல் ; வர்த்த மானப் பிரதிபந்தம்: இப்போது காட்சிப்பட்ட விஷயங்களில் இச்சையுண் டாதல் ; ஆகாமியப் பிரதிபந்தம்: மேல் வரும் விடய லாபங்களைக் கருதி நிற் றல். இவையே, இறந்தகாலம் எதிர்காலம் நிகழ்கால மென்பனவாம். சபல மென்பது : நிலையி ன்றி மின்போலத் தோன்றி மறைதலை. எனவே, சித்தம் ஒருநிலையில் நில்லா து சஞ்சலப்படுதல். குருமுகமாய் ஆத்ம விசாரஞ் செய்யு மிடத்து, முன் னனுபவித்த விடய வாசனை தாக்கி மனங் கலங்குவது பூதப் பிரதிபந்தமும், அங்ஙனம் விசாரித்த மெய் யுணர்வை யிப்போது விடயா சத்தியாதிகளாற் கெடுப்பது வர்த்தமானப் பிரதிபந்தமும், இன்னுஞ் சில பிறப் பெடுத்துப் பெரும் போகங்கள் அனுபவித்தா லல்லது இச்சை விடா தென்கிற சங்கற்பம் வஸ்து நிச்சயந் தெரிந்தும் அஃதாகவொட்டாமற் செய்வது ஆகாமியப் பிரதிபந்தமுமாம். பிரதிபந்தம் தனக்கு வேறாக நின்று பந்திப்பது.

பூதாதிப் பிரதிபந்தங்கள் சிரவணாதி யனுசந்தானத்தினா லுண்டான வுண்மை ஞானத்தை யறிந்தும் அதை யாகவொட்டாமல் இடையூறு செய் வதை நீக்குதற்காக வுணர்த்தியதென்பது. (க௯௪)

(அ. கை.)

முன்னர்க் கூறிய பிரதிபந்தங்கள் மூன்றிற்கு மாறாய ஞான முதலிய மூன்றையும் அவற்றின் நாமங்களையும் ஞானத்திற் கியைந்த காரணாதி மூன் றின் இலக்கணங்களையும் இனையவென வுணர்த்துகின்றது.

பந்தமவை மூன்றினையுங் கடந்திடுவான் பயில்வ
　　பகர்ஞான வயிராக முபரதியா மவற்றில்
வந்தணுகு மிலக்கணங்கா ரணமொடுதான் சொரூப
　　மருவுகா ரியமெனவே தனித்தனிஞா னக்கு
முந்துசவ ணாதிகமே காரணமான் மாவு
　　மூலவகங் காரமும்வே றுக்குதலே சொரூப
நந்துமகங் காரகத மயற்குத்தான் கரியாய்
　　நணுகுதலே காரியமென் றறைகுவர்மூ தறிஞர்.

(இ. ரை.) "பந்த மவை மூன்றினையுங் கடந்திடுவான் பயில்வ பகர் ஞான வைராக முபரதியாம்" எ. து. அந்தப் பந்தங்கள் மூன்றையுங் கடக்கவேண்டியவாறு கடப்பான்வேண்டி முயலத்தகுவன : சொல்லப்பட்ட ஞானம், வைராகம், உபரதி எனப் படுவன மூன்றும். "அவற்றில் வந்தணுகு மிலக்கணங் காரணமொடுதான் சொரூப மருவு காரிய மெனவே தனித்தனி" எ. து. அம்மூன்றில் தனித்தனியே காரணம், சொரூபம், பொருந்திய காரியமென்று இலக்கணமாக வந்தமையும். "ஞானச்கு முந்து சவணாதிகமே காரண மான்மாவு மூலவகங்காரமும் வேறுக்குதலே சொரூபம்" எ. து. ஞானம் அடைதற்கு முதன்மையா நின்றுள்ளன சிரவணமுதலிய மூன்றுமாதலால் அவையே காரணமெனப் படுவனவாம்; ஆத்ம சொரூபமும் மூல அகங்காரமும் வேறெனப் பகுத்துக்காட்டலே சொரூபமெனப் படுவதாம்; "நந்து மகங்காரகத மயற்குத் தான் கரியாய் நணுகுதலே காரியமென் றறைகுவர் மூதறிஞர்" எ. து. சன்மந்தோறும் வளர்ந்து வரும் அகங்காரசம்பந்தமான பிராந்திக்கு ஆன்மா சாக்ஷியாக நின்று விளங்குவதே காரியமெனப் படுவதாமெனச் சத்துக்கள் கூறுநிற்பர் எ. று.

சவணாதி யென்றதனான் மனன நிதித்தியாசனமுங் கொள்க. ஞானத்திற்குச் சவண மனன நிதித்தியாசன விசாரணையே காரணமும், அவற்றால் அநாத்ம சம்பந்தமின்றி யாத்மாவைத் தனியே தரிசித்தல் சொரூபமும், அநாத்ம சம்பந்தமான அறியாமைக்குத் தான் சாட்சியாய் விளங்குவதே காரியமுமாம்.

இங்ஙனங் கூறிய விசார ஞானத்தினால் ஆகாமியப் பிரதிபந்தம் நீங்குமென்பது. (கசஉ)

(அ. கை.)

முன் னிறுத்தமுறையான் ஏனைய இரண்டிற்குங் காரணாதி மூன்றின் இலக்கணம் உணர்த்துகின்றது.

வேண்டும்வயி ராக்கியத்திற் குற்றவனி தாதி
　　விடயத்தி னிலையாமை முதலாய குற்றங்

காண்டலது காரணமெத் திறத்தானு மதனைக்
கழன்றிடுதல் சொரூபமபின் புருமைகா ரியமா
மாண்டவுப ரதிக்கியமா திகளேகா ரணஞ்சூழ்
மனமொடுங்கல் சொரூபமாம் புறக்கருமந் தன்னின்
மீண்டுபுகு மயலறுதல் காரியமென் றிசைப்பர்
விளம்பலுறு ஞானுதி கட்கவதி மொழிவாம்.

(இ. ரை) "வேண்டும் வயிராக்கியத்திற் குற்ற வனிதாதி விடயத்தி னிலையாமை முதலாய குற்றங்காண்டலது காரணம்" எ.து. எவரும் வேண்டற்பாலதாகிய வைராக்கியத்திற்கு எங்கணுமுள்ள மாதர்முதலிய விடயங்களில் இயலபாக அமைந்த நிலையாமைமுதலிய குற்றங்களையே முக்கியமாகக் காணுதல் யாதோ, அதுவே காரணமெனப் படுவதாம்; எத்திறத்தானு மதனைக் கழன்றிடுதல் சொரூபம்' எ. து. எவ்விதத்தாலேனும் அக்குற்றங்களை நீக்க முயலுதல் சொரூபமெனப்படுவதாம், "பின்புருமை காரியமாம்" எ. து. பின்னர் எப்போதும் அது வராமற் காப்பது காரிய மெனப்படுவதாம், "மாண்ட வுபரதிக் கியமாதிகளே காரணம்" எ து. சிறந்த வுபரதிக்கு இயம நியமாதிகளை விடாது செய்தலே காரண மெனப் படுவதாம்; "சூழ் மனமொடுங்கல் சொரூபமாம்" எ. து. அநர்த்தங்களையே பலனுக விடாதனுபவிக்கக் கருது மனதொடுக்கமே சொரூப மெனப்படுவதாம்; "புறக் கருமந்தன்னின் மீண்டு புகு மயலறுதல காரியமென்றிசைப்பர்" எ. து. முன்னரொழித்த பகிர் முக விவகாரத்தில் முன்போல மறுபடியுஞ் செல்லு மயக்கம் அணுவணுமாக நீங்குதலே காரியமெனப்படுவதா மெனச் சத்துக்கள் சொல்லுவார்கள். "விளம்பலுறு ஞானுதிகட் கவதி மொழிவாம்" எ. து. மேலாகச் சொல்லத்தக்க ஞானமுதலிய மூன்றிற்கு முள்ள அவதிகளைச் சொல்லுதும் எ. று.

வனிதாதி யெனவே பஞ்சணை, சௌக்கிய போசனம், கந்தம், வஸ்திரம், ஆபரணம், தயிலம், தாம்பூலமும், நிலையாமையெனவே எதிரிட்டுத் தோற்றும் விடயங்க ளியாவும் அநித்தியமாதலும்; இயமாதிகளெனவே நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதியும், ஞானுதியெனவே வயிராசமும், உபரதியுங் கொள்க. புறத்தொழிலாகிய விடயத்திற் செல்லுஞ் சரியை கிரியைகள். அவதி யென்பது அளவு. முற்கூறிய வைராக்கியத்திற்கு விடயங்களிற் றோஷதிருஷ்டிவருவதே காரணமும் அங்ஙனமுண்டான விடய வாசனை நீக்குதலே சொரூபமும், அங்ஙனம் நீக்கினவிடயத்திற் பின்னிச்சை பிறவாததேகாரியமுமாம். உபரதிக்கு அட்டாங்கயோகஞ் செய்வதே காரணமும், அவற்றில் மன மொடுங்குதலே சொரூபமும், முன்னீக்கின கருமங்களிற் றிரும்ப மயக்கம் வாராததே காரியமுமாம்.

இங்ஙனங் கூறிய வைராக்கியத்தினல் வர்த்தமானப் பிரதிபந்தமும், உபரதியினற் பூதப்பிரதிபந்தமும் நீங்குமென்பது. (கசரு)

(அ. கை.)

நிறுத்தமுறையான் ஞானாதிகட்கு மூன்றவதியின் இலக்கணங்களை யுணர்த்துகின்றது.

தக்கதே கான்மபா வம்போலப் பிரமந்
 தானென்னுந் திண்மைஞா னத்தினுக்கா மவதி
மிக்கபிர மாதிபதந் துரும்பெனவே நினைத்தல்
 விளம்புவயி ராக்கியத்திற் கவதிசுழுத் தியன்போற்
றொக்ககரு மங்களனைத் தினையுநினை யாமை
 தோன்றுமுப ரதிக்கவதி யாகுமிவை மூன்றும்
புக்கொருவ னடைந்திடுமே லிதுமுன்னம் விடாது
 புரிந்தமா தவத்தின்வலி யென்றறிக தெரிந்தே.

(இ. ரை.) "தக்க தேகான்ம பாவம்போலப் பிரமந் தானென்னுந் திண்மை ஞானத்தினுக்கா மவதி" எ. து. இயைந்த தேகத்தையே யான் மாவாகப் பாவித்த பாவம் போலப் பிரமத்தையே தானெனப் பாவிக்குந் திடமே ஞானத்திற்கு அவதியாகும்; "மிக்க பிரமாதி பதந் துரும்பெனவே நினைத்தல் விளம்பு வயிராக்கியத்திற் கவதி" எ. து. மேலாய சத்திய லோக முதலிய பதப் பிராப்திகளைத் துரும்பாக நினைத்தலே சொல்லப்பட்ட வைராக்கியத்திற்கு அவதியாம்; "சுழுத்தியன்போற் றொக்க கருமங்களனைத் தினையு நினையாமை தோன்று முபரதிக் கவதியாகும்" எ. து. பல விகற்ப மாயுள்ள சேட்டைகள் அனைத்தையுஞ் சுழுத்தி யவத்தையி லிருப்பவனைப் போல நினையாமலிருத்தலே தோன்றப்பட்ட வுபரதிக்கவதியாகும். "இவை மூன்றும் புக்கொருவ னடைந்திடுமே லிது முன்னம் விடாது புரிந்த மாத வத்தின் வலி யென்றறிக தெரிந்து" எ. து. இங்ஙனங் கூறிய இவை மூன் றையும் ஒருவன் பக்குவத்திற் கியைந்தவாறு புகுந்து அடைவனாயின் இந்த நிலைமை ஜன்மாந்தரங்களிற் றனிடைவிடாது செய்த மகாதவத்தினது பலமென் றாராய்ந்துணர்தி எ. று.

ஏ அசை. பிரமாதி பதமென்றமையின் பிருதிவி லோக பதப்பிராப்தி பரியந்தமுங் கொள்க. அஞ்ஞான காலத்திற் றேகந் தானாயிருப்பதுபோலப் பிரமந் தானாய் விளங்குதல் ஞானத்திற்கும், பதப்பிராப்திக ளனைத்தினையுந் துரும்பாக வுபேக்ஷித்தல் வைராக்கியத்திற்கும், கருமங்கள் அனைத்தினும் மனம் எழாமையே யுபரதிக்கும் அவதிகளாம்.

ஞானாதி மூன்றினிலைமையின் அளவு கூறிய தென்பது. (கசச)

(அ. கை.)

முற்கூறிய ஞானாதிகளின் பலம் இனைய வெனவும், அவற்றுள் ஞானமே முக்கியமெனவும், ஏனைய இரண்டுங் கவுணமெனவும் உணர்த்து கின்றது.

குறையகலும் வயிராக முபரதியா மிரண்டுங்
கூடிஞா னங்கூடா தாயின்முத்தி யரிதா
முறுமினிய மிசையுலக பதங்கிடைக்கு ஞான
மொன்றுமடைந் தவையிரண்டு மிலேயேனு நிற்க
முறியுமர நெடும்பணையோன் விழநினைவின் றேனு
முறியவிழல் போலவே தேகாந்த மதனிற்
பெறுவனுயர் முத்தியினை யுடற்கமைந்த வினையாற்
பிறந்திடுந்துக் கானுபவ முளதாத றிண்ணம்.

(இ. ரை.) "குறை யகலும் வைராக முபரதியா மிரண்டுங் கூடி ஞானங் கூடாதாயின் முத்தி யரிதாம்" எ. து. சகல குறைகளுந் தீரத்தக்க வைராகம் உபரதி யென்னப்பட்ட இரண்டும் வாய்த்து ஞானமாத்திரம் வாய்க்காவிடின் ஐக்கியமுத்தியடைத லரிதாகும். "உறுமினிய மிசையுலக பதங் கிடைக்கும்" எ. து. அரிதேனும் எளிதில் வாய்க்கத்தக்க இம்மைக்கு மேலாய இனிய சத்தியலோக முதலிய பதப்பிராப்திகள் கிடைக்கும். "ஞான மொன்று மடைந் தவையிரண்டு மிலேயேனு நிற்க" எ. து. ஞான மாத்திரம் அடைந்து அவை யிரண்டையும் அடைகில னேனும் இருக்கட்டும். "முறியு மர நெடும் பணையோன் விழ நினைவின்றேனு முறிய விழல்போல வே தேகாந்த மதனிற் பெறுவ னுயர் முத்தியினை" எ. து. முறிந்து விழற் பாலதாகிய மரத்தின் நீண்டகிளையில் ஏறி நிற்போன் விழுவதற்குத் தனக் கிச்சையின்றேனும் மரம் முறிந்துவிழ அதனோடு தானுக்க விழுதல்போலத் தேகாந்தத்தின் மேலாய ஐக்கிய முத்தியைத் தப்பாம லடைவன். ஆயினும் "உடற்கமைந்த வினையாற் பிறந்திடுந் துக்கானுபவ முளதாத றிண்ணம்" எ. து. வந்த வுடலுக் கியைந்த வினை காரணமாகத் தானே வருந் துக்கத் தை யநுபவிக்கும் அனுபவம் வாய்க்கு மென்பது சத்தியமே எ. று.

ஏ. அசை. பணை பிராரத்த தேகத்திற்கும், விழல் முத்தி யடைதற்கும் உவமித்தல். 'தேகாந்த மதனிற் பெறுவனுயர் முத்தி' யென்றமையின் சத்தியோ முத்தியெனவும், 'உடற்கமைந்த வினை' யென்றமையின் சஞ்சிதாகாமியம் நீங்கின பிராரத்த வினை மாத்திரமெனவும், 'துக்கானுபவ முளதாத றிண்ண' மென்றமையின் பிராரத்தத்தால் வருஞ் சுகதுக்கம் அனுபவிப்ப னெனவும் பெற்றாம். பெறவே வைராக உபரதி யில்லாதவன் சுக துக்கம் அனுபவிப்பா னென்பதும், இச்சுக துக்கங்கள் புசித்து நீங்குவதேயன்றி மேல்வினைவிற்கு ஏதுவாகா வென்பதுங் கண்டாம்.

வைராக முபரதிகட்குப் பதப் பிராப்தியே பலமன்றி முத்தி யின்றெ ன்பதும், ஞானமொன்றிற்கு முத்தியே பலமென்பதும், இம்மூன்றுங் கூடி யிருக்கிற் சுக துக்க மின்றிச் சத்தியோ முத்தனுவனென்பதுமாம். (கசரு)

(அ. கை.)

சிரவணுதி மூன்றினல் உதயமான ஞானம் அபரோட்ச மாதற்கு ஏது வான சமாதி கூறுவான் றொடங்கி அதற்குச் சாதனமாயுள்ள ஞானபூமி

களின் எழின் நாமும் அவற்றின் இரண்டின் இலக்கணமும் உணர்த்து கின்றது.

சாற்றரிய சுவேச்சைவிசா ரணைதனுமா னசிசத்
வாபத்தி யசஞ்சத்தி பதார்த்தாபா வனையே
மேற்றுரிய காமியெனு மிவற்றினைமூ தறிஞர்
விளங்குசத்த ஞானபூ மிகளென்ப ரவற்றுட்
டோற்றிடுநான் மூடனு யிருந்தகா ரணமென்
சுருதிகுரு வாலறிவ லெனநினைதல் சுவேச்சை
மாற்றரிய சுருதிகுரு வாற்சிறிது தோன்றும்
வைராகத் துறுதல்சதா சாரவிசா ரணையே.

(இ. ரை.) "சாற்றரிய சுவேச்சை விசாரணை தனுமானசி சத்வாபத்தி யசஞ்சத்தி பதார்த்தாபாவனையே" எ. து. சொல்லற்கரிய சுவேச்சை, விசாரணை, தனுமானசி, சத்வாபத்தி, அசம்சத்தி, பதார்த்தா பாவனை, "மேற்றுரியகாமியெனு மிவற்றினை மூதறிஞர் விளங்கு சத்த ஞான பூமிகளென்பர்" எ. து. மேலாய துரியகாமி யென்னப்பட்ட இவைகளைப் பேரறிவை யுடைய சத்துக்கள் விளங்கா நின்ற ஞான பூமிக ளேழெனக் கூறுவர். "அவற்றுட் டோற்றிடு நான் மூடனு யிருந்த காரணமென் சுருதி குருவா லறிவலென நினைதல் சுவேச்சை" எ. து. அவ்வேழு பூமிகளுள் உண்மை போற் றோற்றுகின்ற என்னை யானறியாமல் மூடனுயிருந்த காரணம் யாதாலோ? யாதுபற்றியோ? அதனைச் சுருதியினுலுங் குருவினுலும் ஆராய்ந் தறிவனென்று நினைப்பதே சுவேச்சை யெனப் படுவதாம்; "மாற்றரிய சுருதி குருவாற் சிறிதுதோன்றும் வைராகத்துறுதல் சதாசார விசாரணை" எ. து. நீக்கற்கரிய சுருதிகுருவினுற் கிஞ்சித்துத் தோன்றும் வைராக்கியத்தா லெய்துவதாகிய சதாசாரப் பிரவிர்த்தியே விசாரணை யெனப் படுவதாம் எ. று.

ஏ அசை. ஞானபூமியென்பது ஞானம் விளைதற் கேதுவான ஸ்தானம். ஆலென்பது சுருதியினுங் கூட்டிஞம். நிஷ்காம புண்ணிய பரிபாகத்தாற் சுதந்தரமா யுதித்த ஞானம் அவ்வியத்தமா யிருந்து அதைக்கொண்டு விடய ங்க ளியாவையுந் துக்கமெனக் கண்டும் தத்தரிசனம் வியத்தப் படாதிரு ந்த தியாது காரண மென்பார் தோற்றிடு நான் மூடனு யிருந்த காரணமெ ன்னெனவும், இவ்வறியாமையை நீக்கும் ஏதுவைக் கொண்டு நீக்கக் கருதினு னென்பார் சுருதி குருவா லறிவ லெனவும், அங்ஙன முள்ள துக்கத் தை நீக்கிச் சுகத்தை விரும்பினு னென்பார் சுவேச்சை யெனவும், மஹா வாக்கியத்தினுலும் பிரமோபதேசத்தினுலும் விளங்கும் பரம சுகஞ் சிறிது உதயமாமென்பார் சுருதி குருவாற் சிறிது தோன்றுமெனவும், அதனுற் பிர மாதிபதந் துரும்பாகத் தோன்றும் நிராசையுண்டாமென்பார் வைராகத் துறுத லெனவும், அதனுல் ஆத்மாநாத்ம விவேகஞ் செய்து அநாத்மாவை

நீக்கி யாத்மாவைப் பூரணமாக விசாரித்தானென்பார் சாதாசார விசாரணை யெனவுங் கூறினார். (கசசு)

(அ. கை.)

ஏனையவற்றுள் நான்கின் இலக்கணம் உணர்த்துகின்றது.

மருவலுறு சுவேச்சைவிசா ரணைவலியால் விடய
வலியறுத ருன்றனுமா னசியவற்றின் பயில்வால்
விரவுநன வாயவுல கினைக்கனவென் றெண்ணி
மெய்த்தவான் மாவுண்மை கருதல்சத்வா பத்தி
பரவலுறு முலகுதோன் ருதுசுழுத் தியன்போற்
பகரறிவு மாத்திரையாய் நிற்றலசஞ் சத்தி
யொருவிவா சனையனைத்து மிகுதுயிலோன் போல
வுயிராநந் தத்தொடுங்கல் பதார்த்தாபா வனையாம்.

(இ. ரை.) "மருவலுறு சுவேச்சை விசாரணை வலியால் விடயவலி யறுதருன் றனுமானசி" எ. து. முன்னர் வாய்த்த சுவேச்சை விசாரணை யென்னும் இரண்டின் வலிமையால் விடய வலிமை நசித்தல் யாதோ, அதுவே தனுமானசி யெனப் படுவதாம். "அவற்றின் பயில்வால் விரவு நனவாய வுலகினைக் கனவென் றெண்ணி மெய்த்த வான்மா வுண்மை கருதல் சத்வாபத்தி" எ. து. அம்மூன்றின் அப்பியாச வலியால் மிசிரிம்பித் துள்ள சாக்கிரப் பிரபஞ்சத்தைக் கனவாக நினைத்து யதார்த்தமான ஆன்மாவின துண்மை வடிவம் யாதோவென அதனைக் காணக் கருதல் சத்துவாபத்தி யெனப்படுவதாம். "பரவலுறு முலகு தோன்ருது சுழுத்தியன்போற் பகரறிவு மாத்திரையாய் நிற்ற லசஞ்சத்தி" எ. து. நீக்க மின்றிப் பரவிய வுலகென்பது சற்றுந் தோன்ருது சுழுத்தி யவத்தை யுடையவனைப் போலச் சொல்லப்பட்ட அறிவுமாத்திரமாக நிற்றல் அசம்சத்தியெனப் படுவதாம். "ஒருவி வாசனை யனைத்து மிகுதுயிலோன்போல வுயிரானந்தத்தொடுங்கல் பதார்த்த பாவனையாம்" எ. து. பூர்வ விடயவாசனையனைத்தையும் நீக்கி, யதிக நித்திரை யுடையோனைப்போல, ஆன்மாவானது தன தானந்தத்தி லொடுங்குவதே பதார்த்தாபாவனை யெனப்படுவதாம் எ. று.

உலகைச் சங்கற்பவடிவெனக் காட்ட. நனவாய வுலகென்ருர் வேறின் மையின் ஆன்மாவை யானந்த மென்ருர். ஆமெனலைக் கடைநிலைத் தீப மாக்குக. விடயவலி யறுதல் விடயாசத்தி நீக்கம். நீங்கவே, மனஞ் சிறுகு மெனக் கொள்க. கருதல், நிற்றல், ஒடுங்கலென்பன ஒரு பொருளைக் குறித்தேயாம்.

முற்கூறிய இரண்டு பூமியின் அப்பியாச முதிர்ச்சியினு லென்பார் சுவேச்சை விசாரணை வலியாலெனவும், அதனுல் விடய அவாவிற்குச் சீரணம் வர்ததென்பார் விடய வலி யறுதலெனவும், அதனுல் மனம் அணுத்

துவமாய்க் குறுகிய தென்பார் தனுமானசி யெனவும், இங்ஙனம் அறிவு வளர்தலும் மனஞ் சிறுகலுமாகப் பழகி வருதலெ ல பார் அவற்றின் பயில் வாலெனவும் அதனுற் சாக்கிரத்தில் நிச்சயமாகத் தோற்றப்பட்ட திரிசியங்கள் சொப்பனத்தைப்போல மித்தையாகக் காண்பானென்பார் நனவாயவுலகினைக் கனவென் றெண்ணி யெனவும், இங்ஙனம் எண்ணிய விடத்து ஆத்மசத்தைத் தரிசித்தானென்பார் மெய்த்த ஆன்மா வுண்மை கருதல் சத்வாபத்தியெனவும், இவ்வனுபவத்திறை சொப்பனப் பிரபஞ்சம் மனதேயெனக் கண்டவிடத்து அச்சொப்பனந் தோன்ருது மனமாத்திரமாய் நிற்பதுபோல முன் கனவெனக் கண்ட வுலகங் காண்பாளுகிய திருக்கு மாத்திரமாய் நிற்கு மென்பார் உலகு தோன்ருது சுழுத்தியன்போற் பகரறிவு மாத்திரையாய் நிற்றல் அசம்சத்தி யெனவும், இங்ஙனம் நிற்றலே வாசனக்ஷயமாய்ப் பிரமாநந்தம் வெளிப்படு மென்பார் ஒரு வித வாசனையனைத்தும் மிகு துயிலோன்போல வுயிராநந்தத் தொடுங்கலெனவும், இப்போதாநந்தமான விடத்துச் சர்வமுந் தன்மயமாய் விளங்குமென்பார் பதார்த்தாபாவனை யெனவுங் கூறினர். கஙஎ கவி முதல் இதுகாறும் நிதித்தியாசனத்தைப் பற்றியது. (கசஎ)

(அ. கை.)

மற்ருென்றின் இலக்கணத்தையும், இனிச் சமாதிவகுப்பின் பெயரையும் இனையவென வுணர்த்துகின்றது.

உண்டிலையென் ஞமலகங் கிருதிநிரங் கிருதி
யுருமலறி வுருவாய வத்துவித பதத்துட்
கண்டதொரு வறுங்குடம்போ லுட்புறஞ்சூ னியமாங்
கதிதுரிய காமியா முபரதியை யடைந்து
கொண்டிலக லுறுதிரிசி யானுவே தம்பின்
கூறலுறு சத்தானு வேதநிரு விகற்ப
மெண்டருசட் சமாதிகளாம் புறமொடக மென்னு
மிருபேதமடைந்தவற்றைமுறையினிவண்மொழிவாம்.

(இ. ரை.) "உண்டிலை யென்னும லகங்கிருதி நிரங்கிருதி யுரும லறிவுருவாய வத்துவித பதத்துள்" எ. து. உண்டென்றும் இல்லை யென்றுஞ் சொல்லாமல் அகவிவகாரத்தையும் புறவிவகாரத்தையும் நிக்ரகித்து அறிவே வடிவா நின்றுள்ள அத்துவித பதத்தினுள், "கண்டதொரு வறுங் குடம்போலுட்புறஞ் சூனியமாங் கதி துரிய காமியாம்" எ. து. அனுபவமாகக் கண்டது ஓர் வறுங் குடம்போல அகம் புறமென்பதின்றிச் சூனியமா நின்றநிலையாதோ, அதுவே துரிய காமி யெனப் படுவதாம்; "உபரதியை யடைந்து கொண் டிலகலுற திரிசியானுவேதம் பின் கூறலுறு சத்தானுவேத நிருவிகற்பம்" எ. து. இங்ஙனமாய வுபரதியை யடைந்துகொண்டு விளங்காநின்ற திரிசியானுவித்தம், பின் கூறப்பட்ட சத்தானுவித்தம், நிர்விகற்ப மெனற்

கியைந்த, "எண்டரு சட்சமாதிகளாம் புறமொடகமென்னு மிருபேத மடை ந்தவற்றை முறையி னிவண் மொழிவாம்" எ. து. புறம் அகமென்னும் இரண்டு பேதத்தால் எண்ணத்தக்க சட்சமாதிகளாகிய இவற்றை யடைவனுதலின் இவைகளை முறையே யிவ்விடத்தெடுத்துக் கூறும் எ. று.

பொருள் நோக்குபற்றி அடைந் தென்பதை யடைவனுதலி னென்றும். நிரகங்கிருதி யென்பது நிரங்கிருதியெனக் கெடுதல் விகார மாயிற்று. புறமொ டகமென்றமையிற் புறத்தின் மூன்றும், அகத்தின் மூன்று மாகச் சட்சமாதியாம். இவ்வனுசந்தானந் திரிசியத்தை யனுசரித்து வருதலால் திரிசியாநுவேத மெனவும், திருக்குவான சத்தை யனுசரித்து வருதலால் சத்தானுவேதமெனவும், இவ்விரண்டையும்அனுசரியாமற் சுவயமாய் விகற்பமின்றிச் சச்சிதாநந்தமாய் வருவது நிருவிகற்பமெனவும், திரிசயத்திற் றன்னைக் காண்பது புறமெனவும், தேகாதி யகக்கரணத்திற் றன்னைக் காண்பது அகமெனவுங் கொள்க.

முற்கூறிய சிற்சுவானுபவத்தினால் சத்தசத்தெனவும், பாகியாந்தரமென்பன முதலிய பேத மியாவுமின்றிச் சின்மாத்திரமான அத்துவித ஸ்வரூபத்தைத் தவிர மற்றொன்று மில்லாததே துரியாதீத மென்பார் துரியகாமியாமெனவுங் கூறினார்.

சரிதையாதி மூன்றுங் கடந்த ஞான பாதத்திற்குச் சாதனமான சுவேச்சை, விசாரணை, தனுமானசி யென்கின்ற மூன்றும் அப்பியாசபூமியெனவும்; சத்துவாபத்தி, அசம்சத்தி, பதார்த்தாபாவனை, துரியமென்கின்ற நான்கும் அனுபவ பூமியெனவும், இவற்றி னிரலே பிரமவித்து, பிரமவரன், பிரமவரியான், பிரமவரிட்ட னெனல் சீவன் முத்தர்களது தாரதம்மியங்களெனவும், இன்னும் இவ்வனுபவமாகிய புருடனுக்கு முற்கூறிய மூன்று பூமியுஞ் சாக்கிரமும், நான்காம் பூமி சொப்பனமும், ஐந்தாம் பூமி சுழுத்தியும், ஆறும் பூமி துரியமும், எழாம் பூமி துரியாதீதமு மெனவுங் கொள்க. இவைகள் அப்பியாசத்திற் றாரதம்மியமாத லன்றியும் அனுபவத்தினுந் தாரதம்மிய மிருப்பதைக்கண் டிவ்வவதிகட்கு அதீதமாகவேண்டி யிஞ்ஞான பூமியின் இலக்கணங்களை யுணர்த்தியதென்பது. (கசஅ)

(அ. கை.)

மேல் நிறுத்த முறையானே புறச்சவ்விகற்ப சமாதியின் இலக்கணம் உணர்த்துகின்றது.

கடாதிவிட யத்தினிலொன் றினைக்குறித்து நாம
 கற்பனையோ டுருவமெனு மாயையதன் றிறத்தைத்
தடாதுவிடுத் தத்திபா திப்பிரிய மென்னுஞ்
 சச்சிதா நந்தமாம் பிரமத்தின் றிறத்தை
விடாதனுசந் தானஞ்செய் திடுதலே புறத்து
 மெய்த்திரிசி யானுவே தப்பெயர்கொள் கின்ற

கெடாததொரு சவ்விகற்ப சமாதியென லாகும்
கிளர்ந்தபுறச் சத்தானு வேதமது கிளப்பில்.

(இ. ரை.) "கடாதி விடயத்தினி லொன்றினைக் குறித்து நாமகற்பனை யோ டுருவமெனு மாயை யதன் றிறத்தைத் தடாது விடுத்து" எ. து. கட முதலிய விடயங்களி லொன்றைக் குறித்துக்கொள்ளும் நாமமும், கற்பனை யும், உருவமும் என்னும் மாயா காரியங்களையும், அம்மாயையையும் அதின் வலியையும் தடையின்றி விடுத்து, "அத்திபாதிப் பிரியமென்னுஞ் சச்சிதா னந்தமாம் பிரமத்தின் றிறத்தை விடாதனுசந்தானஞ்செய் திடுதலே" எ. து. அத்திபாதிப் பிரியமென்னத்தக்க சச்சிதானந்த சொரூபமாகிய பிரமத்தின் யதார்த்த நிலையை விடாது அனுசந்தானஞ் செய்து வருதலே, "புறத்து மெய்த் திரிசியானு வேதப் பெயர் கொள்கின்ற கெடாத தொரு சவ்விகற்ப சமாதி யெனலாகும்" எ. து. புறத்தின் மெய்யான திரிசியானுவித்தப் பெய ரைக் கொள்கின்ற வென்றுங் கெடாததாகிய வொப்பற்ற சவ்விகற்ப சமாதி யெனப்படுவதாம். "கிளர்ந்த புறச் சத்தானு வேதமது கிளப்பில்" எ. து. முற் கவியிற் கூறிய புறச் சத்தானுவித்தத்தைக் குறித்துச் சொல்லுமிடத் தில் எ. று.

காணப்பட்ட திரிசியங்களின் மாயையின் றன்மையான நாம ரூபத் தை நீக்கிப் பிரமாம்சத்தால் யதார்த்தமாக விளங்கிய சச்சிதாநந்தமாய்ப் பழகவேண்டுமென்பார் கடாதிவிடயங்களில் அனுசந்தானஞ் செய்தலென வும், அங்ஙனஞ் செய்தல் பாகியத்திலென்பார் புறத்தெனவும், அஃது திரி சியத்தை யனுசரித்து வருதலென்பார் திரிசியானு வேதமெனவும், அங்ங னஞ் செய்தல் விடயங்களின் வேறுபாடென்பார் சவ்விகற்ப சமாதியென வுங் கூறினார்.

புறம்பிலுள்ள விடயங்களின் நாமரூப திருஷ்டியின்றிச் சச்சிதானந்த திருஷ்டியாகப் பழகவேண்டுமென்பது. (கசகூ)

(அ. கை.)

மேல் நிறுத்தமுறையால் ஏனையவற்றுட் புறச்சத்தானுவித்த முதலிய மூன்று சமாதியின் இலக்கணம் இனையவென வுணர்த்துகின்றது.

சச்சிதா நந்தவுரு வாகுவதே பிரமந்
தானெனவே தியானித்த லதுவாகுமென்க
விச்சமா திகள்பயின்ற வலியினாற் றோன்று
மிரும்பிரமா நந்தநிலை தனின்மனஞ்சென் றொடுங்கி
நிச்சலமா யலையில்கடல் போலிருத்தல் புறத்து
நிருவிகற்ப சமாதியா மனேகதகா மாதிக்
கச்சமறு கரிதானென் றெண்ணுதலுட் டிரிசி
யானுவே தப்பெயர்கொள் சவ்விகற்ப சமாதி.

(இ. ரை.) "சச்சிதானந்த வுரு வாகுவதே பிரமந் தானெனவே தியானித்த லது வாகு மென்க" எ. து. சச்சிதானந்த சொரூபமாக விளங்குவதியாதோ, அதுவே பிரமமெனப்படலால் அதனைக்கண்டு அது தானென்றே விடாது தியானித்தலே முற் கூறிய சத்தானு வித்தமா மெனக் கொள்க. "இச்சமாதிகள் பயின்ற வலியினாற் றோன் று மிரும் பிரமானந்த நிலைதனின் மனஞ் சென் றொடுங்கி" எ. து. இங்ஙனமாய இச்சமாதிகளில் இடைவிடாது பயின்றுவந்த வலியினிலைமையால் எழும் மேலாயபிரமாநந்தநிலையில் மனமானது சென்றொடுங்கி, "நிச்சலமா யலையில் கடல்போ லிருத்தல் புறத்து நிருவிகற்ப சமாதியாம்" எ. து. யாதோர் சேட்டையுமின்றி நிஸ்தரங்கம்போ லமைதிபெற் றிருப்பதே புறத்து நிருவிகற்ப சமாதியெனப் படுவதாம். "மனோகத காமாதிக் கச்சமறு கரிதானென் றெண்ணுத லுட்டிரிசியானுவேதப் பெயர் கொள் சவ்விகற்பசமாதி" எ. து. மனதிலுள்ள காமக்குரோதாதிகளைப் பற்றிக் கலங்கும் அச்சமறற்பாலதாகிய சாட்சியே தானென்றெண்ணுதல் அகத்திரிசியானுவித்தமெனப் பெயர்கொண்ட சவ்விகற்ப சமாதியெனப் படுவதாம் எ. று.

முன் அனுசந்தித்துவந்த சச்சிதாநந்தமே பிரம சத்தென அனுசந்தித்து வருதலே புறச் சத்தானு வேதமெனவும், இவற்றால் உதயமான ஆநந்தத்தின் மனங் கரைந்து நிற்றல் புறத்து நிருவிகற்ப சமாதி யெனவும், இத்தேகாதி யந்தக்கரணங்களால் வருங் காமக் குரோதாதிகளின்சேட்டைக்குத் தான் சாட்சியாய்க் காண்பதை மனோகத காமாதிக்குக் கரிதானெனவும், இஃதகவிடயத்தில் அனுசந்தானமாதலின் உட்டிரிசியானுவேதமெனவும், அது தனக்கு வேறுபாடாயிருத்தலின் உட்சவ்விகற்ப சமாதியெனவுங் கூறினார்.

சச்சிதாநந்தமே பிரமமாகவும் அதனால் உதயமான பிரமாநந்தத்தில் மனங் கரைவதும் அகத்திலுள்ள சகல தத்துவங்களுக்குந் தான் சாட்சியாயிருப்பதுமாகவும் பழகவேண்டுமென்பது. (கஙo)

(அ. கை.)

அகச் சத்தானுவேத முதலிய இரண்டு சமாதிகளின் இலக்கணம் உணர்த்துகின்றது.

சங்கமறு சச்சிதா நந்தவொளி யுருவந்
தானெனச்சிந் தித்திடலுட் சத்தானு வேதம்
பொங்குறுதன் னனுபூதி ரசந்தோன்று மதனாற்
புகன்றதிரி சியஞ்சத்த மெனுமிரண்டு மகன்றே
யிங்கசைவி றீபமெனப் பந்தமற விருத்த
லிலங்குமக நிருவிகற்ப சமாதியிவ்வா றனுந்
தங்கலற வொழுகுமியோ கிக்குமன மெங்கே
சரிக்குமாண் டாண்டெலாஞ் சமாதியென லாமே.

(இ. ரை.) "சங்கமறு சச்சிதானந்த வொளி யுருவந் தானெனச் சிந்தித்திட லுட்சத்தானுவேதம்' எ. து. அசங்கமா நின்றுள்ள சச்சிதானந்த சொப்பிரகாச வடிவமே தானெனச் சிந்தித்திடுதல யாதோ, அதுவே யகச் சத்தானு வித்தமெனப்படுவதாம்; "பொங்குறு தன்னனுபூதி ரசந் தோன்று மதனாற் புகன்ற திரிசியஞ் சத்தமெனு மிரண்டு மகனறு" எ. து. மேலிடுகின்ற தன தனுபூதி ரசந் தோன்றுங் காரணத்தான் முற் கூறிய சத்தானுவித்தந் திரிசியானுவித்த மெனப்படும் இரண்டும் ஒருங்கே யகன்று, "இங் கசைவி நீபமெனப் பந்தமற விருத்த விலங்கு மக நிருவிகற்ப சமாதி"எ.து. இங்கே யசை வில்லாத தீப மெங்ஙனமோ, அங்ஙனமே பந்த சம்பந்த மற்றிருத்தலே விளங்காநின்ற அக நிருவிகற்ப சமாதி யெனப்படுவதாம். "இவ் வாறுனுந் தங்க லற வொழுகு மியோகிக்கு மன மெங்கே சரிக்கு மாண்டாண்டெலாஞ் சமாதி யெனலாம்" எ. து. இங்ஙனமாய ஆறு வித சமாதியினுலும் யாதொன்றினும் பற்றுதலற வொழுகும் யோகீசுவரனுக்கு அவன் மனம் எங்கெங்கு செல்லுகின்றதோ, அந்தந்த இடமெல்லாஞ் சமாதியெனக்கூறலாம் எ. று.

ஏ அசை. சங்கத் தியாகமாய்த் தனித்து விளங்கிய சச்சிதாநந்தமே யாத்மா வெனவும், இச்சிந்தனம் அகத்தில் அனுசரித்து வருதல் அகச் சத்தானு வேதமெனவும், அவற்றாலுண்டான ஆத்மாநந்தத்தின் முன் பழகின இரண்டும் நீங்கி மனங்கரைந்து நிச்சலமாய் நிற்பதே அக நிருவிகற்ப சமாதி யெனவும், இவற்றான் இவன் மனம் ஆனந்த வடிவமாய் நிற்றலின், சஞ்சரிக்கும் ஆண்டாண்டெல்லாஞ் சமாதியெனவுங் கூறினர்.

வினு:—திரிசியானுவேதத்திற்குஞ் சத்தானுவேதத்திற்குஞ் சவ்விகற்ப சமாதியென வொன்றாய்ச் சொல்வ தியாதினல் ?

விடை:—நாம ரூபமான திரிசியத்தை விகற்பித்துச் சச்சிதாநந்தத்தைக் கிரகித்தலினுலும் சச்சிதாநந்தமே பிரமமெனச் சிந்திக்கும் பேத மிருத்தலினுலும் இவ்விரண்டிற்கும் ஒரே நாமம் வந்ததென்க.

ஆன்மா ஆனந்த வடிவ மென்றதற்கு மேற் கோள்: "மன நிறைந் திடினமுதமாய் நிறைந்திடும்வையந், தனதுதாட்செருப்புலகெலாந் தோன் றுஞ் சுந்தரம்போல்" என்னும் வாசிட்டக் கவியினுலுங் காண்க.

புறச் சத்தானுவித்த சமாதி மூன்றுந் தற்பத சோதனையாம். அவற்றில் முன்னைய இரண்டும் வாச்சியார்த்தமான ஈசனையும், பின்னைய ஒன்றும் லட்சியார்த்தமான பிரமத்தையும் விளக்கும். அகச் சமாதி மூன்றுந் தொம்பத சோதனையாம். அவற்றின் முன்னைய இரண்டும் வாச்சியார்த்தமான ஜீவனையும், பின்னையவொன்றும் லட்சியார்த்தமான கூடஸ்தனையும் விளக்கும். இவ்விரண்டும் அசிபதத்தின் வாச்சியார்த்தமெனவும் இவற்றின் அயிக்கமான அத்துவிதஸ்வரூபமே லட்சியார்த்தமெனவும் இங்ஙனம் அனுபவ முள்ளவனே சதா சமாதியை யுடையவனு மென்பது. கசஎ கவி முதல் இதுகாறுஞ் சமாதியைப் பற்றியது. (கஉகக)

(அ. கை.)

முற்கூறிய சமாதிகளால் அனுபவமான ஞானத்திற்குப் பல முன் பொது வாகக் கூறினதன்றி யதன் சிறப்பைத் துக்காபாவமுத னன்காகத் தொகுத்தும் அவற்றில் முதலொன்றை நான்காக வகுத்துங் கூறுவான்றொடங்கி, அவற்றின் நாமமும் அவைகளில் துக்கானுபவந் தோன்ற இகலோக துக்க இலக்கணமும் உணர்த்துகின்றது.

தக்கமா ஞானபல நான்குதுக்கா பாவஞ்
சருவகா மாப்தியொடு கிருதகிருத் தியமே
தொக்கபிராப் திப்பிராப் பியங்களெனு மிவற்றுட்
சொல்லியதுக் காபாவ மிகபரத்தா லிரண்டாம்
பொய்க்குமோர் தூலவுடம் பெழிலொழிதீ நாற்றம்
புகுபிணிகண் முதலனவுங் காரியதே கத்து
மிக்ககா மாதிபுங்கா ரணத்தினிலவ் வாதி
வியாதிகட்கு வித்தாம்வா சனையுமிகத் திடும்பை.

(இ. ரை.) "தக்க மா ஞான பல நான்கு துக்காபாவஞ் சருவ காமாப்தி யொடு கிருத கிருத்தியமே தொக்க பிராப்திப் பிராப்பியங்க ளெனு மிவற்றுள்" எ. து. தகுந்த மேலாய பலன் நான்குளவாம். அவை: துக்காபாவம், சர்வகாமாப்திகம், கிருதகிருத்தியம், மிகுந்த பிராப்திப் பிராப்பியமென்பன. இவ்வாறு கூறியவற்றுள், "சொல்லிய துக்காபாவ மிக பரத்தா லிரண்டாம் பொய்க்கு மோர் தூல வுடம் பெழிலொழி தீ நாற்றம் புகு பிணிகள் முதல னவும்" எ. து. முற்கூறிய துக்காபாவமென்பது: இகமும் பரமும் என்னும் ஏதுக்களால் இரண்டு விதமா யிருக்கும். அவற்றுள் நசிக்கத்தக்க ஓர் தூல வுடம்பினில் குரூபத்துவமும், துர்க்கந்தமும், இடைவிடாது வந்துகொண்டிருக்கும் வியாதிகளும் இவை போல் வனவும், "காரிய தேகத்து மிக்க காமாதியுங் காரணத்தினி லவ்வாதி வியாதிகட்கு வித்தாம் வாசனையு மிகத் திடும்பை" எ. து. சூட்சும தேகத்தின் மிகுந்த காமக் குரோத முதலியவைகளும், காரண தேகமாகிற அவித்தையில் அங்ஙனமாகக் கூறிய ஆதிவியாதிகளுக்குப் பீசமாகின்றுள்ள பூர்வவாசனையுமே யிகலோக துக்கமாம் எ. று.

பொய்க்குமென்பது ஆசெதுகை. ஆமென்பது எஞ்சி நின்றது. துக்காபாவம் துக்கமின்மை, சர்வகாமாப்தி யாவினும் நிறைந் திருக்கின்ற சுகத்தையடைதல், கிருதகிருத்தியம் செய்யவேண்டிய சாதனங்களனைத்துஞ் செய்துமுடிந்தது, பிராப்திப்பிராப்பியம் அடையவேண்டிய பொருளையடைதல். துக்காபாவம் இகபரத்தால் இரண்டென்றமையின் துக்கமும் அங்ஙனமேயிரண்டாயின. பிணிகள் முதலன வென்றமையின் வாத பித்த சிலேத்துமங்களாலும், விஷ ஸ்பரிச முதலனவற்றிற்குக் கீறிப்பாய்ச்சல் முதலியவற்றாலுந் தூலத்திற்கு வருந் துன்பங்களும், காமாதி யென்றது இராகத் துவேஷ

ங்களாற் சூக்குமத்திற்கு வருந் துன்பங்களும், வித்தாம் வாசனை யென்றது இவ்விரண்டிற்குங் காரணமான வாசனையாற் காரணத்திற்கு வருந் துன்பங்களுமெனக் கொள்க. கொள்ளவே, இத்தூலாதி மூன்றுதேகங்களால்வருந் துன்பங்களே யிகலோக துக்கங்களாயின.

இக லோக துக்காபாவம் வருவிப்பான் கருதி இவ்வித துக்கம் நீங்கும் நிமித்தம் இம் மூன்று சரீரங்களால் வருந் துன்பங்களைத் தரிசிப்பித்த தென்பது. (௧௫௨)

(அ. கை.)

இகலோக துக்காபாவமும், பரலோக துக்கமுமாகிய இவ்விரண்டின் இலக்கணம் இனையவென வுணர்த்துகின்றது.

மித்தையெனு மாயாகா ரியவுடம்பா திகளின்
வேறாய துரியஞா னத்தின்மே லாக
வைத்தவொரு போகபோத் திருக்களிலா மையினன்
வரஞானிக் கவ்விடும்பை மூன்றுமிலா திருத்தல்
பொய்த்தவிக லோகதுக்கா பாவமென லாகும்
புண்ணியம்வந் தென்றுபோம் பாவமென நின்ற
சித்தமுறு சிந்தனையே பரலோக துக்கந்
தெரியினெனப் புகன்றிடுவர் திருக்கறுநல் லறிஞர்.

(இ. ரை.) "மித்தை யெனு மாயா காரிய வுடம் பாதிகளின் வேறாய துரிய ஞானத்தின் மேலாக வைத்த" எ. து. மித்தை யெனக் கூறத் தகும் மாயா காரியமாகிய தூல வுடல் முதலியவைகளி னின்று மாறாயுள்ள துரிய ஞானத்தினும் மேலாக வைத்துள்ள, "ஒரு போக போத்திருக்க ளிலாமை யினன் வர ஞானிக் கவ் விடும்பை மூன்று மிலா திருத்தல் பொய்த்த விக லோக துக்காபாவ மெனலாகும்" எ. து. ஒரு போகமும் அதனை யனுபவிக்கும் போக்தாக்களும் வேறின்மையின் மேலாய ஞானவானுக்கு அந்தத் துக்கங்கள் மூன்று மில்லாதிருத்தலே பொய்யா நின்றுள்ள இக லோக துக்காபாவ மெனப்படுவதாம். "புண்ணியம் வந் தென்று போம் பாவ மென நின்ற சித்த முறு சிந்தனையே பரலோக துக்கந் தெரியினெனப் புகன்றிடுவர் திருக் கறு நல் லறிஞர்" எ. து. புண்ணியமும் பாவமுமாகிய இவ்விரண்டும் என்று வந்து என்றுபோமோ வெனக் கவலையுற்றுநின்ற சித்தத்திற் றங்கிய ஆலோசனையே விசாரிக்குமிடத்துப் பரலோக துக்கமென ஐயந் திரிபற்ற நல்ல சத்துக்கள் கூறுநிற்பர் எ. று.

வேதாந்தி யொழிய ஏனையோர் மாயையை யுண்மை யெனக் கோடலின் அதை மறுக்க மித்தையெனும் மாயையென்றார். அம்மாயையின் உபாதேயமாகிய பூதபௌதிகங்களை யெக்காலத்தும் மித்தை யெனற்கு முரண் என்னையென விளக்க 'மாயாகாரிய வுடம்பாதிகளின் வேறாய துரியஞானம்' என்றார். பொய்த்த என்பதில் யகரம் ஆசெதுகை.

வினா:—பரலோக துக்கத்தைக் குறித்து வந்த பாவ வெறுப்பும் புண்ணிய விருப்பும் துன்ப மாவானேன்?

விடை:—இங்ஙனம் இவற்றைக் குறிக்கும் போதே வருமோ, வாராதோ வென மனதிற்கு ஐய மாதலினாலும், அங்ஙனங் கிடைப்பினும் அது மிக்க துக்கத்தைப்போலத் தூலத்திற்குச் சுரமாதி நோய்களினாலும், சூட்சுமத்திற்குக் காமநோயாதி வனிதாதி போகங்களினாலும், காரணத்திற்கு ஆதிவியாதியாதிய வாசனைகள் நிறைந்திருப்பதினாலும் துன்பமே யாயிற்றென்க.

வினா:— அற்றேல் வனிதாதி போகங்களை யனுபவிக்கும் இன்பமுந் துன்பமாயின தென்னை?

விடை:—துக்க ரூபமான விஷய இன்பமுந் துக்கமேயன்றி மற்றொன்றாகாமையாற் றுக்கமேயாமென்க.

துன்ப வடிவமான சரீரத்திரயங்களையும் அவற்றை யனுபவிக்கும் அகங்காரான்மாவையும் நேதிகளைந்து, மேற்சேடித்திருந்த பிரத்தியகான்ம ஸ்வரூப சுகத்திலிருப்பதே யிகலோக துக்காபாவமெனவும்; இம்மையிற் செய்த பாவம் எங்ஙனம் நீங்கும், மறுமைக்கு வேண்டிய புண்ணியம் எங்ஙனம் உண்டாகுமெனக் கருதிச் சர்வப் பிராயச்சித்த முதற் செய்வதனோடுந் தேகாந்தத்திற் பரலோகத்தை விரும்பி வருந்துவதே பர லோக துக்கமெனவும் உணர்த்தியதென்பது. (௧௫௯)

(அ. கை.)

ஏனைய பரலோக துக்காபாவம் இனையவென உணர்த்துகின்றது.

ஞானநிலை யடைதலுந் தாமரையிலையி னீர்போன்
ஞானியிரு வினையுமுறா மையினாலிந் தனத்திற்
றீநணுகு மனலில்விற கிலாததுபோற் கருமச்
செயலிலவ னுமவனி லஃதிரா மையினான்
மானழலுண் வனத்திலுறா ததுபோல ஞான
மயனைவினை யாவுமுறா மையினாலச் சிந்தை
தானவனி லெழாதிருத்த றனையுரைப்பர் மேலோர்
தக்கபர லோகதுக்கா பாவமென வன்றே.

(இ. ரை.) "ஞான நிலை யடைதலுந் தாமரையிலையி னீர்போன் ஞானி யிருவினையு முறாமையினால்" எ. து. ஆத்ம ஞானத்தை யடைந்த மாத்திரத்தில் தாமரை யிலையில் நீர் எங்ஙனமோ, அதுபோல, ஞானவான் நல்வினை தீவினை யென்னும் இரண்டையு முறப் பெறாமையினாலும், "இந்தனத்திற் றீநணுகு மனலில் விறகிலாததுபோற் கருமச் செயலி லவனு மவனி லஃதிராமையினால்" எ. து. விறகில் அக்கினி யிருக்கும், அக்கினியிலோ விறகு

கிஞ்சித்து மிராது எங்ஙனமோ அதுபோல, கன்மானுஷ்டானங்களில் அவனிருப்பவன், அவனிடத்திலோ அந்தக் கன்மானுஷ்டானங் கிஞ்சித்துமிராது, இங்ஙனமாய ஏதுவினாலும், "மானழலுண் வனத்தி லுறாததுபோலஞானமய னை வினையாவு முறாமையினால்" எ. து. தீப் பற்றியெரியும் வனத்தில் மிருகங்கள் எங்ஙனம் நிலையுறாவோ, அது போலச் சற்றுங் கலக்க முறாது அறிவே வடிவா விளங்குபவனை யெவ்விதமான வினையுங் கிட்ட அணுகாமையினாலும், "அச்சிந்தைதா னவனி லெழா திருத்தறனை யுரைப்பர் மேலோர் தக்க பரலோக துக்காபாவமென" எ. து. அந்தப் பரலோக சிந்தை யவனிடத்தில் எழா திருக்கும் நிலையைச் சத்துக்கள் அடையத்தக்க பரலோக துக்காபாவமெனக் கூறுநிற்பர் எ. று.

அன்று ஏ அசைகள். சிந்தைதானெனலைச் சிந்தையேயெனத் தேற்றமாக்கினுமமையும். இனவெதுகையாதலின் தீ நணுகுமென்றார். உறாமையினால், இராமையினால், உறாமையினால் அவனில் அச்சிந்தை யெழாதென முடிக்க. பரலோக மெஞ்சினின்றதைக் குறிக்க அச்சிந்தையென்றார். ஞானிக்குக் கமல பத்திரத்தையும், அக்கினியையும், வனத்தையும்; வினைக்குச் சலத்தையும், விறகையும், மானையும் உவமித்த தென்க.

வினா:—இங்ஙனங் கூறிய வினைகள் எங்ஙனம் நீங்கின?

விடை:—அக்கினியினால் எரிக்கப்பட்ட விறகு அவ்வக்கினி மயமாய் நீங்கினதுபோல, முன்னுள்ள சஞ்சித வினை ஞானத்தால் எரிக்கப்பட்டு ஞானமயமாய் நீங்கிற் றென்க.

வினா:—பின்னுள்ள ஆகாமியத்தான் வரும் வினைகள் நீங்குவ தெங்ஙனம்?

விடை:—காடாக்கினியா யெரிகின்ற வனத்தில் மிருகாதிகள் உண்டாதலும் வருதலும் இன்றாயதுபோல, ஞானமயமாய்ப் பிரகாசிக்கின்ற சத்துக்களிடத்தில் அவ்வினைகளுண்டாதலும் வருதலு மின்றென்க.

வினா:—அற்றேல் அவ்வினைகள் எரியுமென்றும் வாராவென்றுங் கூறினமையின் அதற் கோர் சொரூப முண்டோ?

விடை:—அவைகள் தனது தொழிலேயன்றி யவைகட்கு ஓர் சொரூபமின்றென்க. அவை தனது தொழிலாதலின் றனது சங்கற்பம் நீங்கவே யவை நீங்குமெனவும், அந்நீக்கமே ஞானவியாபகமாய் விளங்கு மெனவும், அங்ஙனம் விளங்கலே யிவ்வினைகள் உண்டாகாமைக்கு ஏதுவெனவுங் காண்க.

வினா:—பிராரத்த வினை யனுபவித்தே தீரவேண்டுமென்றது என்னை?

விடை:-அவ்வினை ஞானோதயமாதற்கு முன்னரே யமைத்ததா லென்க.

வினா:—அற்றேல், அதினாலுண்டாகும் வினைகள் நீங்குவ தெங்ஙனம்?

விடை:—அவ்விருவினைகளும் இவனைப் புகழ்வார்பால் ஒன்றும், இகழ்வார்பால் ஒன்றுமாக நீங்குமென்க.

வினா:—அற்றேல் இவை யிங்ஙன மிருக்க வினைகளை யொரு முதலாக நினைத்து இவனை நீங்கிற் புறத்திற் சேருமெனச் சிலர் கூறுவ தென்னை?

விடை:—அவ்வினை பரிபூரண ஸ்வரூபமான தன்னிடத்தில் ஏகதேச சங்கற்பத்தா லுண்டான தெனறறிந்து அவற்றைத் தனது நிருவிகற்பத்தாற் கரைக்கத் தெரியாத சிற்றறிஞர் அங்ஙனங் கூறுவரென்க.

இங்ஙனங் கூறிய புண்ணிய பாவமாகிய இருவினைகளும் நீங்கின விடத்து அவற்றிற் சிந்தை யெழாது சின்மாத்திரமாய் விளங்குகின்றதே பரலோக துக்காபாவமெனவும், இந்நான்கினுற் றுக்க நிவர்த்தியான சுகத்தி விருப்ப னெனவுங் கூறியதென்பது. (கசரு)

(அ. கை.)

மேல் நிறுத்த முறையாற் சர்வகாமாப்தியின் இலக்கணம் உணர்த்துகின்றது.

எல்லாவாழ் வினையுமுறுஞ் சார்வபவு மாதி
யிரணியகர்ப் பாந்தமாய் மேன்மேல்வேண் டுற்ற
நல்லாநந் தங்களெலாம் பற்றிலா வறிஞ
னணுகுதலான் ஞானங்கொண் டறிசிவத்தின் கூறாய்த்
தொல்லாநந் தங்களெலா நிற்கையினு லவற்குத்
துவமிலகண் டாநந்த சித்திதோன் றுதலே
பொல்லாத வினைப்பகையைக் கடந்தபெருந் தவர்கள்
புகன்றிடுவர் சர்வகா மாப்தியென வன்றே.

(இ. ரை.) "எல்லா வாழ்வினையுமுறுஞ் சார்வ பவுமாதி யிரணியகர்ப் பாந்தமாய் மேன் மேல் வேண் டுற்ற நல்லாநந் தங்க ளெலாம்" எ. து. பலவேறு விதமா விகற்பித்துநின்ற சமஸ்த வாழ்வுகளையும் அடைதற் பாலவாகிய சார்வபூமன் முதல் இரணிய கருப்பன் இறுவாக மேன் மேல் வேண்டுற்று நின்ற சற் குணோத்தரமான ஆநந்தங்க ளனைத்தையும், "பற் றிலா வறிஞ னணுகுதலான் ஞானங்கொண் டறிசிவத்தின் கூறாய்த் தொல்லாநந் தங்களெலா நிற்கையினுல்" எ. து. இருவகைப் பற்றுங் கழன்ற ஞானவானடைந்திருப்பதினும் மெய்யுணர்வு காரணமாகக் கொண் டறியத்தக்க சிவத்தின் கூறாக முன்னர்க் கூறிய ஆநந்தங்க ளனைத்து நிற்கையினுனும், "அவற்குத் துவமி லகண் டானந்த சித்தி தோன்றுதலே" எ. து. அந்த ஞானவானுக்கு இரண்டற்ற அகண்டாநந்த சித்தி யுதிப்பதே, "பொல்லாத வினைப் பகையைக் கடந்த பெருந் தவர்கள் புகன்றிடுவர் சர்வ காமாப்தியென" எ. து. சர்வ காமாப்தியா மென்று பொல்லாத வினைப் பகையினின்று கடந்த பெருந் தவத்தை யுடைய சத்துக்கள் கூறுநிற்பர் எ. று.

அன்றி ஏ அசைகள். நணுகுதலால் நிற்கையினால் தோன்றுத லென முடிக்க. ஆத்மாநந்தம் பிரமாநந்த மெனலைத் துவமென்றார். சார்வ பவு மாதி இரணியகர்ப்பாந்த மென்றது துவாதச ஆநந்தங்களாம். அவையா வன: மனுஷாநந்தம், மனுஷகந்தர்வாநந்தம், தேவகந்தர்வாநந்தம், பிது ராநந்தம், ஆசானசதேவாநந்தம, கருமதேவாநந்தம், தேவாநந்தம், இந்திரா நந்தம், பிரகஸ்பதியாநந்தம், பிரசாபதியாநந்தம், விராட்டாநந்தம், இரணிய கர்ப்பாநந்தங்க ளென்பன.

பிரசாபதியை விராட்டி லடக்கி யேகாதசமாகக் கூறுவது முண்டு. சார்வபூமன் முதற் பிரகஸ்பதி யீறாய ஒன்பதுஞ் சீவர்கள் அனுபவிக்கும் ஆநந்தங்களும், ஏனைய மூன்றும் ஈசுரர்கள் அனுபவிக்கும் ஆநந்தங்களுமாம். சிவத்தின் கூறென்பது பிரமாநந்த சமுத்திரத்தில் இவ்வாநந்தங்க ளனைத் துந் தரங்க புற்புத பேன திவலைகளாம். இவ்வாநந்தங்க ளனைத்துந் தானா யிருக்கின்ற ஞானி: இப்பிரமாம்சமான ஆநந்தங்களனைத்திற்கு மதீதமான நிரதிசயாநந்தமாய் நிற்றலின், அகண்டாநந்த சித்தியையுடையவ னென்ப தாயிற்று. ஈசரில் அந்தரியாமியைக் கூறு தொழிதல் மேற் பிரமத்திற்கு அடுத்தபடியாய் நிற்றலினானென்க.

கிஞ்சிக்ஞத்துவஞ் சர்வக்ஞத்துவங்களி லுண்டான ஆநந்தங்களனைத் தையுந் தன தம்சமாகக் கண்டு அவற்றிற்கு அதீதமான நிரதிசயாநந்தமா யிருததலே சர்வகாமாப்தி யென விளக்கியதென்பது. (கடுரு)

(அ. கை.)

மேல் நிறுத்த முறையாற் கிருத கிருத்தியத்துவ இலக்கணம் இனைய வென வுணர்த்துகின்றது.

தத்துவஞா னத்திற்கு முன்னமீங் கடையத்
தக்கவிட்டம் பெறவநிட்ட வொழிவிற்கு வேண்டி
வைத்தவுழ வாதிகளுந் துறக்கமுதல் பெறற்கு
மகமுதலா யினவுமுத்தி சாதனமா ஞான
சித்தியுற மிகுசவணு திகமுமறி ஞர்க்குச்
செய்வனவாந் தத்துவஞா னத்தின்பின் குடும்ப
புத்தியொடு பலபோகத் திச்சையிலா மையினாற்
புகன்றவுழ வாதிதொழி லியாவுமிலை யாமால்.

(இ. ரை.) "தத்துவ ஞானத்திற்கு முன்ன மீங்கடையத்தக்க விட்டம் பெற வநிட்ட வொழிவிற்கு வேண்டிவைத்த வுழவாதிகளும்" எ. து. தத் துவ ஞானம் அடைதற்கு முன்னரே யிங்கடையத்தக்க தன திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கும், இஷ்டம் இல்லாதவைகளை யொழித்தற்கும் வேண்டி, இவை காரணமாக ஏற்படுத்திய வுழவுத் தொழில் முதலியவைக ளும், "துறக்கமுதல் பெறற்கு மக முதலாயினவும்" எ. து. சுவர்க்காதி பத

விகளை யடைதற் கியைந்த யாகோபாசனாதிகளும், "முத்தி சாதனமா ஞான சித்தியுற மிகு சவணாதிகமும்" எ. து. முத்திக்குச் சாதனமாயுள்ள அயிக்கிய ஞானம் வாய்ப்பான் வேண்டி மேலாய சிரவண முதலியவைகளை யியற்றலும், "அறிஞர்க்குச் செய்வனவாந் தத்துவஞானத்தின்பின்" எ. து. அறிவுடையவர்களுக் கியற்றற்பாலனவாகிய தத்துவஞானம் வாய்த்த பின்னர், "குடும்ப புத்தியொடு பலபோகத் திச்சையிலாமையினாற் புகன்ற வுழவாதி தொழிலியாவுமிலையாம்" எ. து. குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டுமென்னும் புத்தியும் பலவாறாய போகங்களில் வைக்கும் இச்சையுஞ் சற்று மில்லாமையால் அதுகாரணமாக முன்னர்க் கூறிய வுழவுமுதலிய தொழிலனைத்தும் இல்லையாமென அறிதி எ று.

ஆல் அசை. உழவாதிகளும், மகமுதலாயினவும், சிரவணாதிகளும் தத்துவஞானம் வாய்த்தபின்னர் அறிஞர்க்கு வேண்டுவதின்மையின் உழவாதி தொழில் யாவு மிலையென்றார். உழவாதியென்றமையால் வாணிப கோபாலனமாதிகளும், மகமுதலனவென்றமையின் உபாசனையும் திரிவேணி சங்கமத்தில் மரித்தல் முதலானவைகளும், சவணாதியென்றமையின் மனன நிதித்தியாசன சமாதியுங் கொள்க. யாவும் இலை யென்றது வருணாசிரம தருமங்களான விதி நிடேத ரூபமாகிய கன்மங்களை. (௪௫௬)

(அ. கை.)

இதுவுமது.

வந்துசிறு சாளரத்திற் றோற்றுபர மாணு
வான்கதிரின் மிகுமொளியிற் றோற்றிடா வாபோ
னந்தலுறு சிற்றறிஞன் விடயமாங் கரும
ஞானியிடை தோன்றாமை யாலியற்றத் தக்க
முந்துமக முதலனவிங் கிலைபிரமா னந்த
முதலுண்மை யெய்தலாற் சவணாதி யெல்லாஞ்
சிந்தையுற வியற்றுமள வாகுமதா லிதுவே
செப்பியவக் கிருதகிருத் தியத்துவமென் றறியே.

(இ. ரை.) "வந்து சிறு சாளரத்திற் றோற்று பரமாணு வான் கதிரின் மிகுமொளியிற்றோற்றிடாவாபோல" எ. து ஆகாயத்தினின்றிறங்கிச் சிறிய பலகணி துவாரத்திற் றோற்றுகின்ற பரமாணுக்கள் வான சூரியனது மிக்க வொளியில் தோற்றாதிருப்ப தெங்ஙனமோ, அதுபோல, "நந்தலுறு சிற்றறிஞன் விடயமாங் கரும ஞானியிடை தோன்றாமையா லியற்றத் தக்க முந்து மகமுதலன விங்கிலை" எ. து நசித்தற்கியைந்த அற்ப அறிவினனது விடய பலங் காரணமாக எய்துங் கருமங்கள் ஞானவானது சந்நிதியிற் றோன்றாமையினால் இயற்றற்பாலனவாகிய முதலி னின்றுள்ள யாகாதி கிருத்தியங்கள் இவனுக்கில்லையாம். "பிரமாநந்த முதலுண்மை யெய்தலாற் சவணாதி

யெல்லாஞ் சிந்தையுற வியற்றுமளவாகும்'' எ. து. பிரமானந்தமுதலிறுவா க்கிடந்த நிரதிசயானந்தமாகிய வுண்மையை யுடைந்திருப்பதிறுற் சிரவண முதலிய வெல்லா வுழைப்புகளுஞ் சிந்தையிற் றெளியுமாறு இயற்றுபரியந் தம் வேண்டுவதாகும். ''அதா லிதுவே செப்பிய வக்கிருதகிருத்தியத்துவமெ ன்றறி' எ. து. அக்காரணத்தால் இங்ஙனங் கூறியநிலையே முன்னர்க் கூறிய அந்தக் கிருத கிருத்திய மெனப்படுவதா மென் றுராய்ந் தறிதி எ. று.

ஏ. அசை. பரமாணுக்கள்போற் கருமங்களும், சூரியப்பிரகாசத்தைப் போல ஞானியுமென வுவமித்தவாறு காண்க. சிற்றறிஞ னெனவே, பேரறி வையுங் கூட்டி ஜீவேச சருமமெனக் கொள்க. ஞானி யென்றது இப்பேத ஞான மின்றிய சுத்த சைதன்னியத்தை யுடையவனே. சிந்தையுற இயற்று மள வென்றது : சிரவணாதியான சாதநங்கள் சாத்தியமாகிற பரியந்தமே யன்றி மேல்வெண்டுவ தின்றெனல்.

இகபோக நிமித்தந் தேக யாத்திரைக்கு வேண்டிய வழுவாதிகளும், பர போக நிமித்தம் இலிங்கதேக யாத்திரைக்கு வேண்டிய யாகாதிகளும், நிரு வாண சுக நிமித்தம் ஆத்ம யாத்திரைக்கு வேண்டிய சிரவணாதிகளும், ஞான முண்டான பின்பு யாவுந் தன் மயமாய் விளங்கலின், இவை யனைத்துஞ் செய்துஞ் செய்யாமற் சுயமாய்ப் பிரகாசித்தலால் இதுவே கிருதகிருத்தியத் துவ மென்பது. (கஙஎ)

(அ. கை.)

முன் னிறுத்தமுறையான் நின்றுள்ள பிராப்திப் பிராப்பிய இலக்கண மும், சாட்சாத்காரம் இருவகைத்தாயதின் நாமங்களும் இனையவென வுணர்த்துகின்றது.

முற்றவுறு விசிட்டபுண் ணியபரிபா கந்தான்
முத்திவிருப் பரியகுரு வழிபாடு பெருநூல்
வெற்றிதரு சவணாதி யறிவறியா மைகளின்
விவேகமிகு மஞ்ஞான வழிவொடுதன் னுண்மை
பெற்றுசமு சாரதுக்க நிவர்த்திநிசா நந்தப்
பேறெய்த லேபிராப் திப்பிராப் பியமாம்
பற்றுமுயர் முத்திவகை யிரண்டாகு மவைதாம்
பகர்சீவன் முத்தியொடு விதேககைவல் யம்.

(இ.ரை.) ''முற்றவுறு விசிட்ட புண்ணிய பரிபாகந்தான் முத்தி விருப் பரிய குரு வழிபாடு'' எ.து. முடிநத மேலாய புண்ணிய பரிபாசமும் அதனல் எழும் முத்தி விருப்பமும், அரிதாகிய குருவுக்கு வழிபாடு செய்தலும், ''பெரு நூல் வெற்றி தரு சவணாதி யறிவறியாமைகளின் விவேகம்'' எ. து. பிரபல சுருதி யேற்றலும், வெற்றி தரற்பாலவாகிய சிரவணாதிகளும், ஞானாஞ் ஞானங்களின் நிலைமையை யுணரத்தக்க விவேகமும், ''மிகு மஞ்ஞான

வழி யொடு தன் னுண்மை பெற்று" எ து. பெருகிய அஞ்ஞான நாசமும், தன துண்மை ஞானமும் எய்தப் பெற்று, "சமுசார துக்க நிவர்த்தி நிசா னந்தப் பேறெய்தலே பிராப்திப் பிராப்பியமாம்' எ. து. அதனாற் சமுசார துக்க நிவர்த்தியும் நிசானந்தப் பேறும் ஒன்றன்பின் னொன்முக எய்தலே பிராப்திப் பிராப்பிய மெனப்படுவதாம். "பற்று முயர் முத்தி வகை யிரண் டாகு மவைதாம் பகர் சீவன் முத்தி யொடு விதேக கைவல்யம்" எ. து. பின் னர்ப் பற்றத்தக்க மேலாய முத்திவகை யிரண்டாக நிற்கும்; அவை சொல்ல ப்பட்ட சீவன் முத்தியும், விதேக முத்தியு மெனப்படுவனவாம் எ. று.

புண்ணிய பரிபாகம், முத்திவிருப்பு, குரு வழிபாடு, பெருநூல், சவ ணுதி, அறிவறியாமைகளின் விவேகம், அஞ்ஞான அழிவு, தன்னுண்மை ஞானப் பேறு, சமுசார துக்க நிவர்த்தி, நிசானந்தப் பேறு எய்தலே பிராப்தி ப் பிராப்பியமா மென முடிக்க. சீவன் முத்தி: சீவன் சிவமாக விளங்குதல். விதேக கைவல்லியம் நாம ரூப ரகிதமான ஞான வடிவமாதல்.

புண்ணிய பரிபாகமுதற் சம்சார துக்க நிவர்த்தி யீருய தசவித பதங் களை யடைந்து அவற்றை நீக்கி நிரதிசயாநந்தத்தை யடைதலே பிராப்திப் பிராப்பிய மென்பது. (கடுஅ)

(அ. கை.)

இங்ஙனம் ஞான பலம் பெற்ற மகான்கள் இருதிறத்த ராவ ரெனக் கூறுவான் வேண்டி, முதல் சீவன் முத்தன் இலக்கணம் இனையவெண வுணர்த்துகின்றது.

அறிவுடையோர்க் ககமான்மா வொடுவருசம் பந்த
மகறலினற் பிறருடல்போற் றன்னுடலந் தனிலு
முறுதிதரு மபிமான மின்மையே யாகி
யுண்ணுமனு பவவொப்பால் வருபிரா ரத்த
வறுநுகர்வுண் டாஞ்சுழுத்திப் பாலாதி போல
மந்தானு சந்தான மாதலிற்றே காதி
செறியபிமா னங்கழன்றுங் கடமுநித்துஞ் சுழலுந்
திகிரிபோல் வாதனையா லுறல்சீவன் முத்தி.

(இ. ரை.) "அறிவுடையோர்க் ககமான்மாவொடு வரு சம்பந்த மகறலி னல்" எ. து. மகான்களுக்கு யான் ஆன்ம சொரூப மென்ற விளக்கத்தோடு முன்னர்வந்து கொண்டிருந்த அஞ்ஞானசம்பந்தம் அணுஅணுவாய் அகன்று வருதலினல், "பிறருடல்போற் றன்னுடலந்தனிலு முறுதிதரு மபிமானமி ன்மையேயாகி" எ. து. பிறருடலின்கண் தமக் கபிமான அழுத்தம் எங்ங னம் இன்றே, அதுபோலத் தமது உடலின்கண்ணும் ஸ்திரமான அபி மானஞ் சற்றுமில்லாமல், "உண்ணுமனுபவவொப்பால் வரு பிராரத்த வறு நுகர் வுண்டாஞ் சுழுத்தி பாலாதி போல் மந்தானுசந்தானமாதலின்" எ. து.

எல்லார் போலும் உண்ணும் அனுபவ வொப்பமைதியால் வரற் கியைந்த பிராரத்துவமாகிற வறிய அனுபவந் தன்பா லுடையதாகும்; உடைய தாயினும் அது சுழுத்திபோலும், குழந்தை முதலியவைகள் போலுந் தன்பாற் றினைத் துணையுந் தோன்றாது மந்தமாய் அனுஷ்டிக்கு நிலைமையதாதலின், "தேகாதி செறி யபிமானங் கழன்றுங் கடமுதித்துஞ் சுழலுந் திகிரிபோல் வாதனையா லுறல் சீவன் முத்தி" எ. து. தேகமுதலியவற்றில் மிக்கு அழுந்திய அபிமானம் அகன்றேவிடும், அகலினுங் கடம் உதித்தபின்னருஞ் சுழலாநின்ற சக்கரம்போலப் பூர்வவாசனைகாரணத்தாற் கிஞ்சித்துத் தங்கி நிற்றல் சீவன்முத்தி யெனப்படுவதாம் எ. று.

இன்மையேயாகி, அபிமானங் கழன்றும், வாதனையா லுறல் சீவன் முத்தியென முடிக்க. தேகோகமெனலை மறுக்க அகம் ஆன்மாவென்றார். ஒவ்வொருவருக்கும் அயலுடம்பில் அபிமானஞ் சற்றும் எங்ஙனமின்றோ, அதுபோலத் தமதுடலின் கண்ணும் இன்மையைத் தன்னுடலந் தனிலும் உறுதி தரும் அபிமானம் இன்மையே யாகி யெனப்பட்டது. ருசி பற்றியன்று, உதராக்கினி வதைக்கெனக் காட்ட வறு நுகர்வுண்டா மென்றார். அகறலினு லென்றமையின் இருதயக் கிரந்தி வருவிக்கப்பட்டது. பாலாதியென்றமையின் உன்மத்தனையுங் கொள்க. மந்தம் கூர்மை யின்மை. அனுசந்தானம் அப்பியாசித்தல். எனவே, யாவும் மித்தையென நீக்கியும் பிராரத்தம் புசித்து நீங்கவேண்டி விடய வாசனைகளைப் பகுப்பின்றிக் காடாக்கினியைப்போல அனுபவிப்பது. வாசனை யென்பது முன் னனுபவித்த சமஸ்கார சேடம். அதுவும் இத்தேகம் ஒழிகின்ற பரியந்தம் வாசனை யிருப்பதுபோலத் தோற்றல். எனவே, சஞ்சிதாகாமியம் நீங்கின பிராரத்தமெனவும் அதுவுங் குலாலன் றிகிரி கடமெடுத்த விடத்துங் கிஞ்சித்துத் தானே சுழன்று நிற்பது போலவுமாம்.

வினு:—ஆகவே, மாயை நசிக்கின் அதன் காரியமான தேகம் நசிக்க வேண்டுமே?

விடை:—நசித்தே யிருக்கின்றது.

வினு:—எங்ஙனம்?

விடை:—ஞானோதயமானபோதே யவித்தியாரூபமான காரண தேகம் நசித்தேயிருக்கின்றது.

வினு:— அற்றேல், அது நசிக்கின் அதன் காரியமான தூலதேகமிருக்குமோ?

விடை:— தத்தமான படங் காற்று வருளவும் இருப்பதுபோல ஞானாக்கினியினுல் தத்தமான இத்தேகம் பிராரத்த நீக்கம் வருமளவும் இருக்குமென்க.

சுவானுபூதியைப்பெற்று அங்ஙனம் அடைந்த சுக வடிவத்தோடுங் கூடித்தேகாபிமானமின்றிச் சுகித்திருப்பவனே சீவன்முத்தனென்பது. (௧௬௯)

(அ. கை.)

நிறுத்தமுறையான் ஏனைய விதேகமுத்தியின் இலக்கணம் உணர்த்தி யின்னுஞ் சீவன்முத்தன் இலக்கணம் எவர்க்கும் நன்கு விளங்குமாறு எடுத் துணர்த்துகின்றது.

பரமமா ஞானந்தோன் றுதலுமே கதிர்முன்
    பாயிருள்போ லஞ்ஞானத் துடனதன்கா ரியமாம்
புரமுதலா யினவனைத்து மகன்றிடுத ருனே
    புகலரிய விதேககைவல் லியமென் றிசைப்ப
ருரமுறுமிங் கிதுவாகா சீவன்முத்தி யுளதென்
    றுரைப்பதெவ்வா றெனிற்கயிற்றி னரவமயக் கொழிந்தும்
வருமதன்கா ரியமாகும் பயகம்ப ஞதி
    மருவுதல்போன் ஞானத்தா லஞ்ஞானங் கெடினும்.

(இ. ரை.) "பரமமா ஞானந் தோன்றுதலுமே கதிர்முன் பாயிருள் போல்" எ. து. மேலாய் ஞான சூரியன் உதித்த வுடன் பூத சூரியன்முன் எங்கணும் பரவிய இருளெங்ஙன்மோ அதுபோல, "அஞ்ஞானத்துட னதன் காரியமாம் புரமுதலாயினவனைத்து மகன்றிடுதருனே புகலரிய விதேக கைவ ல்லியமென் றிசைப்பர்" எ. து. தான் அலதைத் தானென்றுணரும் மரு ளும், அது காரணமாக அதன்காரியமா வந்துதிக்குந் தேக முதலிய அனைத் தும் ஒருங் ககல்வதுவே சொல்லற் கரிய விதேக கைவல்லியமென் றறிஞர் கூறுநிற்பர். "உரமுறு மிங்கிதுவாகா சீவன் முத்தியுளதென் றுரைப்ப தெவ் வாறெனில்" எ. து. இங்கே திடமாகப் பொருந்திய விதேகமுத்தி நிலை யினதாகாத சீவன்முத்தியொன் றுளதென் றுரைப்பது எங்ஙனம் ஏற்கப்படு வதெனில், "கயிற்றி னரவ மயக் கொழிந்தும் வரு மதன் காரிய மாகும் பய கம்பஞதி மருவுதல்போன் ஞானத்தா லஞ்ஞானங் கெடினும்" எ. து. பழுதையில் அதுவே பாம்பாகத் தோற்றிய மயக்கமொழிந்தும் அதுகாரண மாக வரற்கியைந்த அதன் காரியமாக நின்றுள்ள பயம் நடுக்க முதலியவை கள் அகலாது எங்ஙனம் வருமோ, அங்ஙனமே ஞானகதப் பிரத்தியட்சத் தால் அஞ்ஞானங் கெடினும் எ. று.

கதிரென்றமையின் பரமமா ஞானமெனலை ஞான சூரிய னென்றும். ஞானத்திற்குச் சூரியனும், அஞ்ஞானத்திற்கு இருளுங் கயிற் றரவமும், பிராரத்தத்திற்குப் பயகம்பஞதியும் உவமித்தல்.

சூரியப்பிரகாசத்தின் முன் அந்தகாரம் அதன்மயமாவதுபோலச் சிற்பிர காசத்தின்முன் ஜக சீவ பரம் அதன்மயமாய் விளங்குவதே விதேகமுத்தி யென்பது. (௧௮௦)

(அ. கை.)

பிரமஞானம் எய்தியும் பிராத்ததேகமிருப்பது சாம்பிரதாயம் விருத்தி யாதற்கென வுணர்த்துகின்றது.

அதன்றுகா ரியமாகு முடம்பாதி நிற்கு
மதனனும் பிரமஞா னந்தோன்றும் பொழுதே
சிதைதருமஞ் ஞானமுட னுடம்பொழியு மாயிற்
றிகழ்பிரம வித்தியா சம்பிரதா யத்தின்
·கதியொழியு மதனனும் பரசிவனாற் பிரமன்
கமலனு னுயர்பிரசா பதியவனுன் மனுவற்
புதமனுவான் மனிதருணர்ந் தனரெனவே முறைமை
புகல்சுருதி விரோதமா மதனனு மன்றே.

(இ. ரை.) "அதனது காரியமாகு முடம்பாதி நிற்கு மதனனும்"எ.து. அஞ்ஞானத்தினது காரியமா நின்றுள்ள தேக முதலியவைக ளிருப்பதினனும், "பிரமஞானந் தோன்றும் பொழுதே சிதைதரு மஞ்ஞானமுட னுடம் பொழியு மாயில்" எ. து. பிரம ஞானம் உதய மாயபோதே யஞ்ஞானம் நசிக்கும்; அவ்வஞ்ஞானத்துடன் தேக ஸ்மரணையு மொழியும். அங்ஙனம் ஒழியில், "திகழ் பிரமவித்தியா சம்பிரதாயத்தின் கதி யொழியு மதனனும்" எ. து. விளங்காநின்ற பிரம வித்தையின் சாம்பிரதாய நிலைமை யொருவருக்குந் தெரியா தொழியும் ஏதுவினனும், "பரசிவனாற் பிரமன் கமலனு னுயர் பிரசாபதி யவனுன் மனு" எ. து. பரம சிவனாற் பிரமனும், அந்தப் பிரமனால் மேலாய பிரசாபதியும், அந்தப் பிரசாபதியால் மனு வென்போனும், "அற்புத மனுவான் மனிதருணர்ந்தன ரெனவே முறைமை புகல் சுருதி விரோதமா மதனனும்" எ. து. அந்த அற்புதமான மனுவினால் மனிதர்களுணர்ந்தாரென் றிவ்விதமாய சாம்பிரதாய நிலைமையைச் சொல்லுஞ் சுருதிக்கு விரோதமாய் முடியும் ஏதுவினனும் எ. று.

அன்று ஏ அசைகள் அதனனுமெனக் கூறிய இம்மூன் றேதுவால் சீவன்முத்தன் உடம்போடு கூடியிருக்க வேண்டுமென்றாயிற்று. (கசுக)

(அ. கை.)

சீவன் முத்தித்தன்மை யண்டாதற்கு ஒருவாறு ஏதுவாயுள்ள சஞ்சித முதலிய மூன்றுவினையும் நீங்கற் கியைந்த இலக்கணம் இனையவென வுணர்த்துகின்றது.

செஞ்ஞானிக் குரித்தாகு நற்சீவன் முத்தி
சித்தித்தற் குற்றபிரா ரத்தவா தனையோ
டஞ்ஞான விலேசசற் பாவவுடன் பாட்டா
லாகநிலை யுஞ்சீடர்க் குபதேசா திகமு
மெஞ்ஞான்றுங் கிடைத்திடுமா லிச்சீவன் முத்தற்
கிரிதருசஞ் சிதமங்கி புகுமுளிபுற் போல
மெய்ஞ்ஞானத் தீர்ப்பிரா ரத்தநுகர்ந் தொழியு
மேல்வினைகூ டாதனதி காரியா தலினல்.

(இ. ரை.) "செஞ்ஞானிக் குரித்தாகு நற் சீவன் முத்தி சித்தித்தற் குற்ற பிராரத்த வாதனையோடு" எ. து. ஐயந் திரிபற நன்குணர்ந்த ஞான வானுக் குரித்தா யிருப்பது நல்ல சீவன் முத்தி யெனப்படுவதாம், அந்தச் சீவன் முத்தி வாய்ப்பதற்கு இயைந்த பிராரத்த வாசனையோடு, "அஞ்ஞான விலேச சற்பாவ வுடன்பாட்டா லாகநிலையுஞ் சீடர்க் குபதேசாதிகமு மெஞ் ஞான்றுங் கிடைத்திடும்" எ. து. அஞ்ஞானச் சுருக்கமும் ஞானப்பெருக்க மும் எவரும் ஏற்கத்தகுந்த வுடன்பாட்டால் தேகமிருக்கவேண்டு மெனலும், அதுபற்றிச் சீடர்களுக்கு உபதேசிக்க வேண்டுமெனலும் எப்போதும் இவ் வாய் மொழி யாவரிடத்துங் கிடையாநிற்கும்; "இச்சீவன் முத்தற் கிரிதரு சஞ்சித மங்கிபுகு முளிபுற்போல மெய்ஞ்ஞானத்தால்" எ. து. இங்ஙனமாய சீவன் முத்தனுக்குரிய சஞ்சித வினையானது அவனிடத்து விளங்காநின்ற மெய்ஞ்ஞானத் தீயினால் அக்கினியில் விழுந்த நுட்ப மாகிய வுலர்ந்த புல் எங்ஙனமோ, அதுபோல எரிந்துவிடும். "பிராரத்த நுகர்ந் தொழியு மேல் வினை கூடா தனதிகாரி யாதலினால்" எ. து. பிராரத்த வினையானது அநுப வித்தே தீரற்பாலது; இனி வினையும் ஆகாமிய வினையோ, இந்தச் சீவன் முத்தன் இனிப் பிறத்தற்கு அதிகாரி யல்லனாதலின் றன்பால் அடையக் கூடாது எ. று.

ஆல் அசை. ஞானி யென்னாது செஞ்ஞானி யென்றது ஐயந் திரிபற லைக் காட்டற் கென்க. இலேசம் அற்பமாதல். இதனால் சீவன் முத்தனது தேகம் அவனது பிராரத்துவத்தையும், இச்சந்ததி வளர்ந்துய்தற்குரிய நிலை யையுங் காட்டப் பெற்றும். முற்செய்யுளினுள்ள ஆனுருபிற்குச் சீடர்க்கு உபதேசாதிகமும் எஞ்ஞான்றுங் கிடைத்திடுமென்பது பயனிலை. அஞ் ஞான லேச மென்றமையிற் சற்பாவ மிகுதி வருவிக்கப் பட்டது. சீவன் முத்தி சித்தித்தற்கென்பது ஏனையோர்க்கும் அதுசித்திக்கும் நிமித்தம். உப தேசாதியென்றமையின் பிரமத்தியானமுங்கொள்க. பிராரத்த வாசனையாற் கிஞ்சித் காலந் தேகமிருப்பதும், அஞ்ஞான லேசத்தாற் சீடனை மரபிற் செல்லச் சிட்சித்தலும், சற்பாவமென்றதால் பிரமத்தியானஞ் செய்தலுஞ் சீவன் முத்தனுக் குண்டென்க. எஞ்ஞான்றுமென்பது ஜீவன்முத்தி யுள்ள பரியந்தமாம். ஆகவே, ஜீவன்முத்தனுக்கே விதேகமுத்தியாமென்க.

மாயாகாரியமான தேகம் இருப்பதுபோலத் தோற்றிய ஜீவன் முத்த னுக்குப் பூரணஞானத்தாற் சஞ்சிதமும், புசித்தலாற் பிராரத்தமும், பிரமா னுசந்தானத்தினால் ஆகாமியமுமாகிய இம்மூன்று வினையும் நசிக்குமென் பது. (கசூஉ)

(அ. கை.)

பிராரத்துவ கன்மத்தைத் தரற்கியைந்த சஞ்சித வினையானது இனித் தேகத்தைத் தரற்பாலதன்றோ வென்ற வினாவிற்கு உத்தரம் உணர்த்து கின்றது.

பெற்றவுயர் ஞானத்தா லொழிந்தவினை தானே
　　பிராரத்த போகத்தை யளிக்குமெனி லதுமே
லுற்றவுட லுற்பத்தி தனையுமியற் றுறுமென்
　　றுரைப்பில்வறு விதைநுகர்ச்சிக் கன்றியே முளைக்க
மற்றதுதான் காரணமன் றதுபோல ஞான
　　மடிகரும நுகர்ச்சியினு னேயொழிவ தாகி
யற்றமுறும் பிறவிமேல் விளைத்திடுதற் கேது
　　வாகாதென் றியம்பிடுவ ரறிவறிதக் கவரே.

(இ. ரை.) "பெற்ற வுயர் ஞானத்தா லொழிந்த வினை தானே பிராரத்த போகத்தை யளிக்கு மெனில்" எ. து. தான் அடைந்த மேலாகிய ஐக்கிய ஞானத்தால் நசித்த சஞ்சிதவினையே மீண்டும் பிராரத்துவத்தாலெய்தும் போகத்தைத் தருமெனக்கூறில், "அது மேலுற்ற வுடலுற்பத்தி தனையுமியற் றுறுமென் றுரைப்பில்" எ. து. அப்பிராரத்துவ வினை காரணமாக வரும் ஆகாமிய வினையானது மேல் தன்னால் வரற்பாலதாகிய தேகோற்பத்தியையும் வரச் செய்யுமே; அங்ஙனம் வரச் செய்யுமெனக் கூறுதியேல், "வறுவிதை நுகர்ச்சிக் கன்றியே முளைக்க மற்றதுதான் காரண மென்றது போல" எ. து. வறுத்த விதையானது உண்ணற்கு யோக்கியதையேயன்றி முளைத்தற்கு யோக்கியமாகாத காரணம் எங்ஙனமோ, அது போல, "ஞான மடி கரும நுகர்ச்சியினனே யொழிவதாகி யற்றமுறும் பிறவி மேல் விளைத்திடுதற் கேது வாகா தென் றியம்பிடுவ ரறிவறி தக்கவர்" எ. து. ஞானத்தினால் நசிக்கத்தக்க பிராரத்துவ கன்மத்தை யநுபவித்தலினால் மேலாகாமிய வினை வருதற்கு இடம் பெறாமல் நசிக்கும்; அதனால் இனிப் பிறவியை விளைத்திடுதற்குத் தான் காரணமாகாதென்று தன்னைத் தான் அறியத்தக்க சத்துக்கள் கூறுநிற்பர் எ. று.

ஏ அசை. சஞ்சிதத்திற்கு வறுத்தவிதையை யுவமிக்கவே யதன் வாசனு சேடம் பிராரத்தமென் றுயிற்று. இதனது கருத்து சஞ்சித வினை நசித்தற்கிடம்பெறலின் மேலாகாமியவினை எங்ஙனம் வரற்கிடம்பெறும்? பெறாமை யாற் பிராரத்த வினை யநுபவித்தே தீரவேண்டு மென்பது. (கசு)

(அ. கை.)

பெத்தனுக்கும் முத்தனுக்கும் பிராரத்துவம் இருப்பினும் முத்தனுக்கு மறைப்பின்மையால் இனி யெய்தாதெனலை யுணர்த்துகின்றது.

அறைந்தநுகர் வினையதுதா னுலோகயாத் திரைக
　　ளதிகரியா துறுநரர்க்கே யோருடம்பு தன்னிற்
செறிந்துநுகர் வாமவற்றி னதிகிருத ராகிச்
　　சிறந்தமா புருடர்க்குத் தசசங்கை யுடம்பி

னுமறைக்தலது தீர்ந்திடா தெனினுமறைப் பின்றி
யுறுதலா லொருவனுக்கிங் கிளமைமுதற் பேதம்
பிறந்திடினு மவனுக்கோ ருடம்பேயாய் நின்ற
பெற்றிபோ லாருமென வுணர்ந்திடுவர் தெரிந்தே.

(இ. ரை.) "அறைந்த நுகர்வினைபதுதா னுலோக யாத்திரைக ளதிகரி யாது" எ. து. முற்கூறிய பிராரத்துவ வினையானது உலோக நடைகளில் அதிகரியாமல், "உறுநரர்க்கே யோருடம்பு தன்னிற் செறிந்து நுகர்வாம்" எ. து. பிறழாது தன்னிலே கண்டு நிற்கும் மனிதருக்கே யோருடம்பிற்றானே மிக்க அநுபவித்தற் குரியதாம். "அவற்றி னதிகிருதராகிச் சிறந்த மாபுருடர்க்குத் தச சங்கை யுடம்பி னுறைந்தலது தீர்ந்திடா தெனினும்" எ. து. அவ்வுலக நடைகளின் மிசகுடையவராகிச் சிறப்புற்று நின்ற மநு வியாசாதிய மகான்களுக்குப் பத்தென்னுங் கணக்குள்ள தேகங்களிற் சேர்ந் தனுபவித்தா லன்றி வினை யொழியா தெனக் கூறினும், "மறைப் பின்றி யுறுதலா லொருவனுக் கிங்கிளமை முதற் பேதம் பிறந்திடினும்" எ. து. தன்னை மறைக்கும் மறைப்பெனல் சற்று மின்றிச் சதோதயமாக விளங்க லால் அங்ஙனமாய ஒருவனுக்கு இளமை முதல் வயோதிகம் இறுவாக் கூறும் பேதம் உதித்திடினும், "அவனுக் கோருடம்பேயாய் நின்ற பெற்றி போ லாகுமென வுணர்ந்திடுவர் தெரிந்து" எ. து. அம்மகா புருஷனுக்கு ஒருடம்பே யாநின்ற தன்மை யெங்ஙனமோ, அதுபோல்வ தாகுமெனச் சுருதி யுத்தியாற் றெரிந்து அனுபவத்தால் உணர்ந்திடுதி எ. று.

ஏ அசை. எனவே, தனதனுபவ சாட்சாத்கார நிலையினின் றகலா ரெனப் பெற்றாம். பெறவே, தனதுடல் பேத பருவ முணராரெனக் கண் டாம். லௌகிக நடையுள்ள மானிடர்க் கோர் ஜன்மத்தினும், வைதிக நடை யுள்ள தேவாம்சமான வியாசாதி ரிஷிகளுக்குத் தச ஜன்மத்தினும் பிராரத்த கன்மம் அனுபவித்து நீங்கு மாயினும் இவர்களுக்கு வருகின்ற தறியாமல் அனுபவிப்பதும் அவர்கட்கு வருவதறிந் தனுபவிப்பதுமா மென்க.

வினா:—அற்றேல் பிராரத்தம் ஓர் ஜன்மத்திற்கு அமைத்ததே யன்றித் தச சன்மத்திற்கு அமைத்த தென்பதற்கு மேற்கோ ளுளவோ?

விடை:—விஷ்ணுவிற்கு ஓர் பிராரத்தந் தசாவ தாரத்தி னீங்குதலே யா மென்க.

ஓர் ஜன்மத்திற்குந் தச ஜன்மத்திற்கும் பிராரத்த கன்மம் ஒன்றாய் அமைத்திருக்கின்ற தென்பதைத் தெரிவித்த தென்பது. (கசுச)

(அ. கை.)

ஞானங் கருமத்துக்கு உட்பகையா நிற்கப் புசிப்பு எங்ஙனங் கூடுமெ ன்ற வினாவிற்குத் உத்தரம் உணர்த்துகின்றது.

விடயங்க ளனைத்தினுக்கும் பொய்ம்மைசா திக்கு
மெய்ஞ்ஞானந் தனக்குமவைக் குண்மைசா திக்கு
முடலினுகர் வினைக்குமொன்றற் கொன்றுவிரோ தமதா
யுண்மையினுன் ஞானிக்கு நுகர்வெங்ங னென்னிற்
கெடுகனவு முதலவற்றுண் மைதுனு திகளாங்
கேடினுகர் வாதல்போற் பிராரத்த போக
விடயங்க ளுண்மையா மலதாகா தென்னும்
விதியின்மை யானுகர்வு முணர்வுமுர ணுவால.

(இ. ரை.) "விடயங்க ளனைத்தினுக்கும் பொய்ம்மை சாதிக்கு மெய்ஞ்ஞானந் தனக்கும்" எ. து. விடயமெனப் படுபவைக ளனைத்திற்கும் நித்தியத்துவ மென்றே சாதிக்கும் உண்மை ஞானத்திற்கும், "அவைக் குண்மை சாதிககு முடலி னுகர் வினைக்கு மொனறற் கொன்று விரோதமதா யுண்மையினுன் ஞானிக்கு நுகர் வெங்ஙனென்னில்"எ. து. அவ்விடயங்களுக்குச் சத்தியத்துவஞ் சாதிக்கின்ற தேகங் காரணமாக அநுபவிக்கும் பிராரத்துவ வினைக்கும், ஒன்றற் கொன்று விரோதமா யிருப்பது உண்மையாக விளங்கலின், ஞானவானுக்குப் பிராரத்த வினையை யநுபவித்தல் எங்ஙனங் கூடுமெனக கேட்பையாயின், "கெடு கனவு முத லவற்றுண் மைதுனுதிகளாங் கேடி னுகர் வாதல்போல்" எ. து. கணத்திற் றோன்றி யழியுஞ் சொப்பன முதலியவற்றுள், ஆலிங்கன முதலியனவாகக் கூறுங் கெடுத லில்லாத போகாநுபவம் வாய்த்தல்போல, "பிராரத்த போக விடயங்க ளுண்மையா மல தாகா தென்னும் விதி யின்மையா னுகர்வு முணர்வு முரணு" எ. து. பிராரத்த போக விடயங்க ளுண்மையாக முடிவதே யன்றி யாகா தென்கின்ற நியமம் இன்மையின், பிராரத்வ வினையும், மெய்யுணர்வும் விரோத மாகாவாம் எ. று.

ஆல் அசை. உடல் இருக்குமளவும் உணவு வேண்டுதலின் இங்ஙனங் கூறினு ரென்க. கனவுமுத லென்றமையின் இந்திரசாலமும், மைதுனுதி யென்றமையின் சொர்க்காதி தோற்றங்களும், முரணு வென்றமையின் ஞானிக்குப் பிராரத்த போகமும் உண்டெனக் கொள்க.

மித்தையான சொப்பன வனிதையினிடத்தும் இந்திரசால வித்தையினிடத்தும் நிசமான மைதுனமுஞ் சொர்க்காதி தோற்றமுங் காண்பதனுல் விரோத மில்லாததுபோல, இன்மையான பிராரத்தத்திற்கும் உண்மையான ஞானத்திற்கும் விரோத மின்மையாற் பிராரத்த போகஞ் சீவன் முத்தன் அனுபவித்துத் தீர்வ துண்மையே யென்பது. (கசூரு)

(அ. கை.)

ஞானோதயத்திற் சகங் காணுதிருக்கப் பிராரத்துவம் எங்ஙனம் நுகர்வ தென்ற வினுவிற்கு இருவகைப் பிரமையால் விடை பகர்வான் வேண்டி

யிங்கே நிருபாதிகப் பிரமையின் இலக்கணம் இனைய வென வுணர்த்து கின்றது.

வந்தமய லொழிந்தளவே யிப்பியிடை வெள்ளி
　　மாய்தல்போ லறிவினு லஞ்ஞானங் கெடலு
மிந்தவுல கதுதோற்ற மேயிலா மையினு
　　லெங்ஙனமாம் வினைப்போக நுகர்ச்சியெனி லிப்பி
தந்தவிர சிதநிருபா திகப்பிரமை யாகுந்
　　தன்மையினு லுணர்ந்தளவில் வெள்ளியுரு வொழியும்
பந்தமுறு மிதுசோபா திகமாகு மதனுற்
　　பகர்ந்ததுபோ லன்றுமற் றெங்ஙனெனி லுரைப்பாம்.

(இ. ரை.) "வந்தமய லொழிந்தளவே யிப்பி யிடை வெள்ளி மாய்தல் போ லறிவினு லஞ்ஞானங் கெடலும்" எ. து. இடையில் வந்த பிராந்தி யொழிந்த அக்கணமே கிளிஞ்சில் காரணமாக எய்திய வெள்ளிப் பிராந்தி யெங்ஙனங் காணு தொழியுமோ, அதுபோல விசார ஞானத்தினுல் அஞ் ஞானங் கெட்ட அக்கணமே, "இந்த வுலகது தோற்றமே யிலாமையினு லெங்ஙனமாம் வினைப்போக நுகர்ச்சி யெனில்" எ. து. இந்த வுலகமெனல் சற்றுமே காணப்படுத லில்லை; இல்லாதிருக்க எங்ஙனம் பிராரத்துவபோக நுகர்தற் கியையு மெனக் கேட்கில், "இப்பி தந்த விரசித நிருபாதிகப் பிர மையாகுந் தன்மையினு லுணர்ந் தளவில் வெள்ளி யுருவொழியும்" எ. து. நமது பிராந்தி காரணமாகக் கிளிஞ்சில் தந்த வெள்ளி யெனல் நிருபாதிக ப் பிரமை யெனப் படுவதாம். இங்ஙனமாய குணங் காரணமாக விசாரித் துணர்ந்த அக்கணமே வெள்ளி யென்கின்ற பிராந்தி வடிவ மொழிந்து விடும். "பந்தமுறு மிது சோபாதிகமாகு மதனுற் பகர்ந்ததுபோ லன்று மற் றெங்ஙனெனி லுரைப்பாம்" எ.து. அங்ஙன மாகாது பந்தமுறற் கியைந்த இச்சகத்து சோபாதிக மெனப் படுவதாகும். அக்காரணத்தால் இது முன் னர்க் கூறிய நிருபாதிகம் போல்வ தன்றும். அஃதெங்ஙன மெனக் கேட் கின், இனிச் சொல்லுதும் எ. து.

தோற்றமே யிலாமையி னென்ற தேற்றேகாரம் சகத்து இல்லவே யில்லை யெனக் காட்டிற்று. நிருபாதிகம் உபாதி யின்மை. எனவே, சகத் தோற்றம் இன்மை யெனவும், சோபாதிகம் உபாதி யிருத்தல்போலத் தோ ற்றுத லெனவும் பெற்றாம். (௧௬௬)

(அ. கை.)

சோபாதிகப் பிரமையின் இலக்கணம் இனைய வென வுவமான பூர்வக மாக வுணர்த்துகின்றது.

தடத்தினுயர் கரையினமர் வோன்றடத்துப் புனலிற்
　　றுனதோ முகமாக விருப்பதுபொய் யென்றே
படைத்ததெளி வுளமொடிருப் பினுமதோ முகமாம்
　　படிவந்தோன் றுதல்போல மூலவகங் கார

மடுத்துவரு சீவபா வாதிகமே மித்தை
யறிதுரியன் றானெனவே யுணரினுஞ்சீ வாதி
தொடுத்தவுல குறுதலினாற் சீவன்முத்தன் றனக்குத்
துய்க்கும்வினைப் போகவிவ காரமுடன் பாடாம்.

(இ. ரை.) "தடத்தி னுயர் கரையி னமர்வோன் றடத்துப் புனலிற்றா னதோ முகமாக விருப்பது பொய் யென்றே" எ. து. ஓர் தடாகத்தின் உயர்ந்த கரையில் இருப்போன் தடாக ஜலத்திற் றான் றலை கீழதாக இருக்கக் காண்பது பொய் யெனவே, "படைத்த தெளி வுளமொடிருப்பினு மதோ முகமாம் படிவந் தோன்றுதல் போல" எ. து. தான் கொண்ட தெளிந்த சித்தத்தோ டிருப்பினும் நீரில் அதோமுகமாகக் காணுந் தனது வடிவம் நீங்காது தோன்றுதல் எங்ஙனமோ அது போல, "மூல வகங்கார மடுத்து வரு சீவ பாவாதிகமே மித்தை யறிதுரியன்றானெனவே யுணரினும்"எ.து. மூல அகங்காரங் காரணமாக அதனை யடுத்து வருகின்ற சீவ பாவமுதலியவைகளே முழுது மித்தை, அவை தானல்ல, விலட்சணமாக நின்றறியுங் கூடஸ்தன் றானென்றே யையந் திரிபற வுணரினும், "சீவாதி தொடுத்தவுல குறுதலினாற் சீவன் முத்தன் றனக்குத் துய்க்கும் வினைப் போக விவகார முடன் பாடாம்" எ. து. சீவ பாவ முதலியவைகள் சம்பந்தித்த வுலகெனப்படுவது காணப்பட்டுக் கொண்டிருத்தலாற் சீவன்முத்த னென்போனுக்கு அநுபவித்தற்கு இயைந்த பிராரத்தாநுபவ போகத்தை யேற்று விவகரிப்ப துடன்பாடாம் எ. று.

தடாகச் சாயை பொய்யாயினும் நீங்காது நிற்றல்போல, தேகாதிப் பிரபஞ்சம் பொய்யாயினும் நீங்காது நிற்றலின் பிராரத்துவம் அகலாதென்பது கருத்து.

சீவபாவாதிகமென்றமையின் விகற்பமுங் கொள்க. எனவே, சங்கற்ப விகற்பம் மித்தையென்பதாயிற்று.

வினா:—சுத்தியில் இரசிதப் பிராந்தி நீங்கின மாத்திரத்திற் பின் அந்த மயக்கந் தோன்றாததுபோல, ஞானம் உதித்தமாத்திரத்தின் அஞ்ஞானம் அழிதலின் அதன் காரியமான சகத்தோற்றமும் அதன் போகமும் எங்ஙனம் உண்டாகும்?

விடை:—இரசிதப் பிராந்தி நிருபாதிகப் பிரமையாதலின் நீங்கும். இச் சகஞ் சோபாதிகப் பிரமையாதலின் நீரின்கண் தான் அதோமுகமா யிருத்தல் மித்தையெனத்தெரிந்தும் அத்தோற்ற நீங்காததுபோலச் சித்துருவமாகிய தான் சக சீவ பரமாய்த் தோற்றுதல் மித்தையெனத் தெரிந்தும் அவை நீங்காமற் றோற்றலின் பிராரத்தப் புசிப்பு இருத்தற்கு ஐயமின்றென்க.

நிருபாதிகப் பிரமையாகிய சுத்திகாரசிதந் தோற்றல் மாத்திரமேயன்றிப் பிரதிபலியாமையின் இங்ஙனம் அதை நீக்கிச் சோபாதிகப் பிரமை சலத்திற் பிரதிபலித்தசாயை அச்சலமுள்ளபரியந்தந் தோற்றுதல்போல மாயா

ப் பிரதிபலனஞ் சகத்தாதலினானும் அஃதுள்ளமட்டும் இஃதுந் தோற்றுவத ஞானும் அஃதும் பிராரத்தமுடிவில் நீங்குதலினானும் அப்பிராரத்தானுபவத் தை யையமின்றி யங்கீகரிக்கவேண்டுமென்பது. (௧௬௭)

(அ. கை.)

பிராரத்துவபோகம் அனுபவிக்குஞ் சீவன் முத்தனுக்கு எய்தற்பாலவாகிய மைத்திரியாதி நான்கு குணங்களின் இலக்கணம் இனையவென உணர்த்துகின்றது.

சீவன்முத்தர்க் குரியனவா மயித்திரியே கருணை
திகழ்முதித முபேட்சையெனுஞ் சற்குணங்க ளவற்றுண்
மேவுறுசற் புருடரொடு நட்புமயித் திரியா
மெலிதருதுக் கிகளிடத்தி னிரக்கமே கருணை
யோவறுநற் புண்ணியர்பால் விருப்பமே முதித
முவப்புவெறுப் பிரண்டுமிலா துலகிலவ மியற்றும்
பாவிகளை விடுதலே யுபேட்சையென வறிக
பயனைந்து சீவன்முத்தர்க் குளவவையீண் டுரைப்பாம்.

(இ. ரை.) "சீவன் முத்தற் குரியனவா மயித்திரியே கருணை திகழ் முதித முபேட்சையெனுஞ் சற்குணங்க ளவற்றுள்" எ. து. மைத்திரி, கருணை, விளங்காநின்ற முதிதம், உபேட்சை என்னுஞ் சற்குணங்கள் நான்குஞ் சீவன் முத்தர்களுக்கே யெய்தற் பாலனவாம்; அந் நான்கனுள், "மேவுறு சற்புருடரொடு நட்பு மயித்திரியா மெலி தரு துக்கிகளிடத்தி விரக்கமே கருணை" எ. து. அரிதிற் கிடைக்குஞ் சன்மார்க்கர்களோடு நட்பு புரிதலே மைத்திரியெனப் படுவதாம்; மிகவும் வருந்துகின்ற விசன முறுவாரிடத்து இயல்பாக இரக்க முறுதலே கருணை யெனப்படுவதாம்; "ஓவறு நற் புண்ணியர்பால் விருப்பமே முதித முவப்பு வெறுப்பிரண்டு மிலாதுலகி லவ மியற்றும் பாவிகளை விடுதலே யுபேட்சை யெனவறிக" எ. து. இடையில் விடாது இயற்றும் நல்ல புண்ணியவான்களிடத்தில் வைக்கும் விருப்பமே முதித மெனப்படுவதாம்; விருப்பு வெறுப் பெனப்படும் இரண்டும் இல்லாமல் உலகின்கண் தீங்கையே விடாதியற்றும் பாவிகள்பால் அணுகாமையே யுபேட்சையெனப் படுவதாமென அறிதி. "பய னைந்து சீவன் முத்தர்க்குள வவை யீண் டுரைப்பாம்" எ. து. இவை யன்றியுஞ் சீவன் முத்தர்களுக்கு ஐந்துபயனுளவாம்; அவற்றை யீங்கெடுத்துச் சொல்லுதும் எ. று.

தேற்றேகாரத்தையும் ஆமென்னும் ஆக்கவினைமுற்றையும் இல்லாவிடத்துக் கூட்டிப் பொருள் கொள்க. இலாது விடுதலெனமுடிக்க. எந்தக் காரணத்தாலேனு மெனக் குறிக்க மெலிதரு துக்கிகளென்றார். நற்புண்ணியர்பால் விருப்பம் வைத்தால் இனி மேன்மேற் செல்லும் நெறிக்குரியராதல் பற்றியென்க.

சத்துக்கள் தன துருவமா நிற்றலின் அவரிடத்து நீங்காத அன்பே மயித்திரியும், பவக்கடலிற் சுழல்வாரை நோக்கி யேஞே வாளா துக்கிக்கின் ருர்கள், இவர்க் கென்று இத்தீங் கொழியுமென்னும் இரக்கமே கருணையும், ஈசுராற்பணமாகச் செய்யும் புண்ணியரிடத்தில் அவர்நோக்குச் சித்தசுத்திக் கேதுவாய் அகமுகப்படுங் குறியால் வரும் விருப்பமே முதிதையும், இராகத் துவேஷங்களாற் சுக துக்கங்களை யனுபவிக்கும் பாவிகளைத் துரும்பென விருப்பு வெறுப்பின்றி விடுதலே யுபேட்சையும், இந்நான்கும் உலோகானுக் கிரக நிமித்தமாகச் சீவன் முத்தனிடத்தில் நிகழுமென்பது. (௧௬அ)

(அ. கை.)

சீவன் முத்தர்க்குரிய பயன் ஐந்தின் இலக்கணம் இனையவென வுணர்த்துகின்றது.

ஞானரக்கை தவஞ்சகல சம்வாத முடனே
நவிறுக்க வொடுக்கமொடு சுகாவிற்பா வந்தா
ஞனவற்றுண் மருவும்வா சனையழிவு மனத்தி
னடக்கங்க ளாற்புத்தி நிருமலமா யிருத்தன்
ஞானரக்கை மனம்பொறிகட் கொருமையே தவமாம்
ஞானியென வுலகமெலாம் வழிபடல்சம் வாத
மானமனக் கிலேசமற லேதுக்க வொடுக்க
மவற்றிஞற் பந்தமறல் சுகாவிற்பா வந்தான்.

(இ. ரை.) "ஞான ரக்கை தவஞ் சகல சம்வாத முடனே நவி றுக்க வொடுக்கமொடு சுகாவிற் பாவந்தா ஞனவற்றுள்" எ. து. அப்பய னைந்தாவன: ஞானரட்சை தவம் சகல சம்வாதம் சொல்லப்பட்ட துக்க நிவர்த்தி சுகாவிற் பாவமாம்; இங்ஙனமாய ஐந்தனுள், "மருவும் வாசனை யழிவு மனத்தி னடக்கங்களாற் புத்தி நிருமலமா யிருத்தல் ஞானரக்கை" எ. து. எவர் பாலும் எய்தும் வாசனு நாசமும், மனதை யடக்கும் இயமாதி யேதுக்களாற் புத்தி நிருமலமா யிருத்தலுமே ஞான ரட்சை யெனப் படுவதாம்; "மனம் பொறிகட் கொருமையே தவமாம்" எ. து. மனதிற்கும் ஐம்பொறி கட்கும் ஏகாக்கிரக முறுவதே தவமெனப் படுவதாம்; "ஞானியென வுலக மெலாம் வழிபடல் சம்வாதம்" எ. து. இவன் உண்மையான ஞானவா னென வுலகிலுள்ளோ ரனைவரும் வந்து வழிபடுதலே சம்வாத மெனப் படுவதாம், "ஆன மனக்கிலேச மறலே துக்க வொடுக்கம்" எ.து. அஞ்ஞான த்தா லெய்தற்பாலவாய மனக்கிலேசங்க ளொருங்குஅகறலே துக்க நிவர்த்தி யெனப் படுவதாம்; "அவற்றிஞற் பந்தமறல் சுகாவிற்பாவந்தான்" எ. து. இங்ஙனமாய அந்நான் கேதுக்களாற் பந்த மனைத்தும் ஒருங்கு அகறலே சுகாவிற்பாவமெனப் படுவதாம் எ. று.

தேற்றேகாரத்திஞல் ஆமென்னும் ஆக்கவினை முற்றை இல்லா விடத்து வருவித்துரை கொள்க.

உலகமென்பது அஃதுடையவர்மேல் நிற்றலின் ஆகுபெயர். எலாமென்றது ஆபால பண்டித ரெனக் கொள்க. உலக மெனப் பொதுவாசக் கூறினமையின் மூவுலக மெனினும் அமையும். மனக் கிலேச மென்றது அஸ்மதாதி பஞ்சக் கிலேசமாம். சுகாவிற்பாவ மென்றது சுகம் பிரகாசமா யுண்டாதல். வாசனுட்சயமான மனது தத்துவ ஞானத்திற் கரைந்து நிற்றலே ஞான ரக்ஷையும், அம்மனம் இந்திரியங்சட்கு ஒருமையால் அபரோட்ச ஞானத்தை நாடி நிற்றலே தவமும், இங்ஙனஞ் செய்தல் மெய்த் தவமென வுலகோர்வழிபடலே சம்வாதமும், இவற்றான் மனோ துன்பம் இன்மையே துக்க வொடுக்கமும், அதனாற் சகல பந்தமும் நீங்கி நித்தியாநந்த முண்டாதலே சுகாவிற்பாவமுமாம். (௧௬௬)

(அ. கை.)

இவையன்றியுஞ் சீவன்முத்தனுக்குரிய தச வித அடையாள இலக்கணமும் அவன தருள் பெற்ற மாணக்கர் முதலிய நால்வர் நாமங்களும் இனைய வென வுணர்த்துகின்றது.

குறிகளோர் பத்துளவா ஞானமயற் கவைதாங்
குரோதமின்மை வயிராக மைம்பொறிக ளடக்க
லறமுதவு சமைதமையே சனப்பிரியத் துவமே
யலோபமொடு கொடையபய நிருமதமென் றறிக
நெறிமருவு சீடரொடு பத்தருதா சீனர்
நிலையில்பா விகளென்னு நால்வகையோ ரிடத்து
முறையினனுக் கிரகம்வந் துறுமருள்கொள் சீவன்
முத்தனெ லென்பவரை முறையினெடுத் துரைப்பாம்.

(இ. ரை.) "குறிகளோர் பத்துளவா ஞான மயற் கவைதாங் குரோதமின்மை வைராக மைம்பொறிக ளடக்கல்" எ. து. ஞானமே வடிவாயுள்ள சீவன் முத்தனுக்கு இயைந்த குறிகள் பத்தாம்; அவையாவன: குரோதம் இன்மையும், வைராக்கியமும், பஞ்சேந்திரியங்களையடக்குதலும், "அறமுதவு சமை தமையே சனப்பிரியத்துவமே யலோபமொடு கொடை யபய நிருமதமென்றறிக" எ. து. நன் னெறிகளையே தரற்பாலனவாகிய சமையும், தமையும், யாவர்க்கும் பிரியமாகக் காண்கையும், லோபகுண மின்மையும், உதாரத்துவமும், நிர்ப்பயமும், அகங்கார மின்மையு மென அறிதி. "நெறி மருவு சீடரொடு பத்த ருதாசீனர் நிலையில் பாவிகளென்னு நால்வகையோரிடத்தும்" எ. து. சன்மார்க்க குண மெய்திய சீடர்களும், அன்பர்களும், உதாசீனரும் ஒழுங்கி னிலையுறாத பாவிகளும் எனப்படும் நால்வகையோரிடத்தும், "முறையி னனுக்கிரகம் வந்துறு மருள்கொள் சீவன் முத்தனெ லென்பரவை முறையி னெடுத் துரைப்பாம்" எ. து. அருள் கூர்ந்த சீவன் முத்தனால் அவரவர்க்கியைந்த நெறியின் வண்ணம் அநுக்கிரகம் வந்தெய்துமென

ச்சத்துக்கள் கூறுநிற்பர்; அவற்றைக் கிரமப்படி யீண்டெடுத்துச் சொல்லு தும் எ. று.

சத்துக்கள் தோன்று வெழுவாய். ஏ எனல் இரண்டும் எண்ணும்மைப் பொருள் தரநின்றது. தனக்கு வேறான வஸ்து வொன்றின்மையிற் குரோத மின்மையும், தன்னைத் தவிரப் பிரியவஸ்து ஒன்றின்மையின் நிராசையுற் றிருப்பதே வைராக்கியமும், பொறிகளை விடயங்களிற் செல்ல வொட்டா மல் மெய்யுணர்விற் செலுத்துவதே ஐம்பொறிக ளடக்கலும், அகத்திற் கற்பனை யெழாம லடக்கி யதார்த்தத்திற் செலுத்துவதே சமையும், புறத்திற் றிரிசியத்தில் எழவொட்டாமல் அவற்றினுள்ள சத்தில் நிறுத்துவதே தமை யும், மகான்கள் சங்கத்திற் கூடி ரமித்திருத்தலே சனப்பிரியத்துவமும், தற் பிரியத்தைச் சீவ ரடையவேண்டு மென்கின்ற அன்பிருத்தலின் அலோப மும், தனக்குள்ள வஸ்துக்க ளியாவையும் விரும்பினோர்பாற் கொடுத்துவிடு வதே கொடையும், சம்சார துக்க பயத்தினாற் சரணாகதி யடைந்தவனைக் காக்குந் தன்மையே அபயமும், தனது நிச்சயம் இங்ஙன மென மதித்திருந் துஞ் செருக்கின்மையே நிருமதமுமா மெனக் கூறினார்.

சீவன் முத்தனது ஸ்வரூபந் தெரிந்தடையும் நிமித்தம் அவர தடை யாளங்களைக் கூறின தென்பது. (கஎ0)

(அ. கை.)

சீவன் முத்தனாற் சீடன் முதவிய நால்வரும் எய்தும் பிரயோசன இல க்கணம் இனைய வென வுணர்த்துகின்றது.

தெரிவரிய சீவன்முத்தன் றனைநம்பு மதனாற்
சீடர்க்கு முத்தியுமன் பொடுவழிபா டதனைப்
புரியுமுயர் பத்தர்க்கு நல்வினையு மவன்றன்
புனிதமுறு சரிதமது கண்டவுதா சீனர்க்
குரியபுண் ணியலயமு மவன்றன்வடி வினைக்கண்
ணுறுதன்முத லானவற்றாற் பாவிகட்குப் பாவ
விரிவுமுறு மென்பரகர்த் தாதருக்கா தியினா
லெங்ஙனெனின் முத்தனாற் பிரமோப தேசம்.

(இ. ரை) "தெரி வரிய சீவன் முத்தன் றனை நம்புமதனாற் சீடர்க்கு முத்திபு மன்பொடுவழிபா டதனைப் புரியு முயர் பத்தர்க்கு நல்வினையும்" எ. து. இனையதென யாவரானும் உணர்தற்கரிய சீவன்முத்தன் சிவவடிவ மாக நம்புங்காரணத்தால் அவனை யடுத்த சீடர்களுக்கு ஐக்கமுத்தியும், மிக்க அன்போடு வந்தனை வழிபாட்டை யிடைவிடாது புரியும் உயர்ந்த பத்தர் ளுக்குச் சற்கிருத்தியமும், "அவன்றன் புனித முறு சரிதமது கண்டவுதா சீனர்க் குரிய புண்ணியலயமும்" எ. து. அச்சீவன் முத்தனது பரிசுத்தமான சரித்திரத்தை வாசித்துணர்ந்த வுதாசீனர்களுக்கு அம்முத்தனுக்குரிய புண் ணிய நாசமும், "அவன்றன் வடிவினைக் கண்ணுறுதன் முதலானவற்றாற் பாவிகட்குப் பாவவிரிவுமுறு மென்பர்" எ. து. அச்சீவன்முத்தனது உருவ

த்தைப் பார்த்தல் முதலியவற்றாற் பாவிகளுக்குப் பாவ விருத்தியும் உண்டா மெனச் சத்துக்கள் கூறுநிற்பர். "அகர்த்தா தருக்காதியினு லெங்ஙனெனின் முத்தனுற் பிரமோபதேசம்" எ. து. யாதியற்றினுங் கர்த்திருத்துவம் எய்த ப் பெறுத சீவன் முத்தனல் தருக்க முதலியவற்றைக் கொண்டு பிரமோப தேசம் எய்தல் எங்ஙனம் வாய்க்கு மெனின் எ. று.

சீடர்க்கு முத்தியும், பத்தர்க்கு நல்வினையும், உதாசீனர்க்குப் புண்ணிய லயமும், பாவிகட்குப் பாவவிரிவு முறுமென முடிக்க.

உதாசீன மென்பது உபேக்ஷை யெனக் கொள்க. கொள்ளவே, சத்து க்களின் பரிசுத்த நடையைக் கண்டும், வழிபடா திருத்தலின் அஃதவமான மாதலிற் பூருவ புண்ணிய க்ஷய முண்டா மென்க. தருக்காதி யென்றமை யின், வேதாந்த வாக்கிய சத்திய தாற்பரிய அனுகூல தர்க்க திருஷ்டாந் தாதிகளின் நயத்தின் புரசுரமுங் கொள்க.

தீவிரதர பக்குவத்தால் இவரே நம்மை யிரட்சிக்கத் தக்கவரென நம் பிச் சரணுகதியை யடைந்து இவரது அனுக்கிரகமாகிய பிரமோப தேசத்தி னுற் பிரமமே தானுக நிற்றலிற் சீடர்க்கு முத்தியும், பிரிவில்லாத அன்பி னுல் இவரே நாம் அடையத்தக்க கதியை யடைவிக்கத் தக்கவரென வழி பாடுடைய பத்தர்களுக்கு ஈசுரார்ப்பணமாகச் செய்யும் நல்வினையும், அவ ரது சரித்திரத்தினுல் விளங்கிய பரிசுத்த நடையைக் கண்டுஞ் செல்வச் செருக்கினுல் ஓர் லட்சிய மில்லாதவர்களுக்குப் புண்ணிய க்ஷயமும், அவ ரது வடிவை நேரே தரிசிக்கும்போது அவர் கடாக்ஷந் தங்கலிற் பாவிகட்கு ப் பாவ விரிவும் உண்டாமெனக் கூறினுர்.

வினு:—முன் னனுக்கிரக மெனக் கூறிப் பின் தரும க்ஷயமான நிக்கிர கம் வரலாமோ?

விடை:—காமிய தருமத்தா லுண்டான ஐசுவரிய மமதையால் மகான் களை லட்சியஞ் செய்யாது அவமதிப்புச்செய்ய நேரிடும்; அதனுல் புண்ணிய நசிப்புவரும்; வரின் பின் அன்புண்டாதற் கேதுவாதலின் அஃதுங் கிருபை யே யெனக் கொள்க.

சீவன் முத்தனை யடைந்தவர்களின் பக்குவத்திற்குத் தகுந்த பயனுண் டாதலைக் கூறிய தென்பது. (கஎக)

(அ. கை.)

அகர்த்துருத்துவமுள்ள சீவன் முத்தனுல் மகா வாக்கியார்த்தத்துக்கு அநுகூலமாயுள்ள திருஷ்டாந்த மாதியவற்றான் வெளிப்படுத்தும் பிரயோச னத்தோடும் உபதேசம் எங்ஙனமாமென்ற வினுவிற்கு உத்தர முணர்த்து கின்றது,

மறைப்பகலு மொருபிரம சொரூபமா தலினுன்
மகிழ்ச்சிவெறுப் பிலாவீசற் கனுக்கிரகஞ் செயவு
மொறுப்புறவும் வரும்வினையி னுேராலத் தொழில்க
ளுறுதல்போற் சாதகர்தம் பக்குவமே தத்தாற்

சிறப்புறுநல் லுபதேசா திகண்ஞானிக் கெய்துஞ்
செப்பியவிவ் விலக்கணமொ டிராதுபல முறையாற்
றுறப்பிலருட் சீவன்முத்த ரிருப்பதென்கொ லென்னிற்
றுணிவுதோன் றுறமுதுநூ றொகுத்தபரி சுரைப்பாம்.

(இ. ரை.) "மறைப்பகலு மொரு பிரம சொரூப மாதலினால் மகிழ்ச்சி வெறுப்பிலா வீசற் கநுக்கிரகஞ் செயவு மொறுப்புறவும் வரும்வினையினோரா லத்தொழில்களுறுதல்போல்" எ. து. மறைப்பென லுறப்பெறாது சதோதயமாக விளங்கும் ஒப்பற்ற பிரமசொரூபமா நிற்றலின் விருப்பு வெறுப்புக்குட்படாத மாயாரகித ஈசனுக்குச் சற்கிருத்திய முடையோரானுக்கிரகஞ் செய்தலுந் தீவினையுடையோரால் வெறுப்புச்செய்தலும்ஆகிய தொழில்கள் எங்ஙனம் வாய்க்குமோ அதுபோல, "சாதகர்தம் பக்குவபேதத்தாற் சிறப்புறு நல் லுபதேசாதிகண் ஞானிக் கெய்தும்" எ. து. அப்பியாசிகளுடைய பக்குவபேத காரணங்களாற் சிறந்த நல்ல அநுக்கிரகஞ் செய்தன் முதலியவைகள் சீவன்முத்தனுக்கு வாய்க்கும். "செப்பிய விவ்விலக்கணமொடிராது பல முறையாற் றுறப்பி லருட் சீவன்முத்த ரிருப்ப தென்கொ லென்னில்" எ. து. இவ்வாறுகூறிய இலக்கணங்களோடு அழியாத அருளையுடைய சீவன் முத்தர் நில்லாது பலவேறு விகற்ப நெறியால் இருப்ப தென் கொண்டோ அஃதறிகிலனெனக் கேட்கில், "துணிவு தோன்றுற முதநூ றொகுத்த பரி சுரைப்பாம்" எ.து. ஸ்திரமானநிச்சயந் தோன்றுமாறு பழமையாய வேதாந்த சாஸ்திரங்கள் தொகுத்துக் கூறியதன்மையை யிங்கே சொல்லுதும் எ. று.

எனவே, ஈசனைப்போல ஞானியும் அவரவர் பக்குவத்துக் கியைந்தவா றழிப்ப னென்றாயிற்று.

இராகத் துவேஷ மின்றிச் சுவயம்பு வடிவமான ஈசனுக்குச் சீவர்கள் நல்வினை தீவினையைக் குறித்து அவர்கட்கு அனுக்கிரக நிக்கிரகம் உண்டாவதுபோல விருப்பு வெறுப்பின்றிச் சுயஞ் சைதன்னியசொரூபமாகவிளங்குகின்ற ஜீவன்முத்தனுக்கு ஆத்மாக்களின் பக்குவ தாரதம்மியங்களைக் குறித்துச் சிக்ஷை ரக்ஷைக் கிரமமான உபதேசாதிக ளுண்டாதற்கு ஐய மின்று என்பது. (கஎஉ)

(அ. கை.)

சீவன் முத்தன் ஒரு படித்தா யிராமற் பல விதமா யிருப்ப தியாதினாலென்ற வினாவை நோக்கிப் பிராரத்த சம்ஸ்காரம் நான்கினால் வந்ததெனக் கூறுவான் றொடங்கி அவற்றின் நாமமும் அவற்றின் மூன்றின் இலக்கணமும் உணர்த்துகின்றது.

வந்தணையும் பிராரத்த வாசனைதீ விரமே
மத்தியமந் தஞ்சுத்த மெனவொருநான் காகும்
பந்தமறு ஞானியா யினும்போகத் தழுந்திப்
பசுப்போலத் தன்மகிழ்ச்சி மாத்திரையா யிருத்தன்

மூந்துரைசெய் தீவிரம்போ கச்சிறப்புற் றிடினு
மொழியான்ம தற்பரனாய் விநோதமே புரிந்து
மைந்தரென விருத்தன்மத் தியம்போக மனைத்து
மாற்றிமிது னம்போலா நந்தமுறன் மந்தம்.

(இ. ரை.) "வந்தனையும் பிராரத்த வாசனை தீவிரமே மத்திய மந்தஞ் சுத்தமென வொரு நான்காகும்" எ. து. வந்தனைதற் பாலவாகிய பிராரத்துவ வாசனை யெனல் தீவிரம், மத்தியம், மந்தம், சுத்தம் என நான்காம். "பந்தமறு ஞானியாயினும் போகத் தழுந்திப் பசுப்போலத் தன் மகிழ்ச்சி மாத்திரையா யிருத்தல்" எ. து. பந்த மற்ற ஞானவானா யிருக்கினும் போகத்தின்கண் அழுந்திப் பசுவைப்போல ஆத்மாநந்த மாத்திரமாயிருத்தல், "மூந்துரைசெய் தீவிரம்" எ.து.முன்னர்க்கூறிய தீவிரமெனப்படுவதாம்; "போகச் சிறப்புற்றிடினு மொழி யான்ம தற்பரனாய் விநோதமே புரிந்து மைந்தரென விருத்தன் மத்தியம்" எ. து. விடய போகங்களில் மீக்குற்று நிற்பினும் முன்னர்க் கூறிய ஆத்ம ஸ்வரூபனா யெவர்க்கும் இனிய விநோதங்களையே செய்து பாலரைப்போல இருத்தல் மத்தியமெனப்படுவதாம்; "போகமனைத்து மாற்றி மிதுனம்போ லானந்த முறன் மந்தம்" எ. து. சகல போகங்களும் ஒருங்கே யொழித்து மிதுனம்போல நிசானந்தம் உற்றிருத்தல் மந்தமெனப் படுவதாம் எ. று.

மிதுன மென்பது சுரத லீலையி லுண்டாகும் விஷயாநந்தமெனக் கொள்க. ஜீவன் முத்தன் சுகதுக்கங்களின் மூழ்கி யிருப்பினும் முன்பின் உணராது தற்பிரியம் விடாமல் அனுபவித்தலிற் பசுவைப்போ லெனவும், விடய போகங்கள் விசேடமா யுண்டாயினுந் தான் அவைகட்குச் சாட்சியா யிப்போகங்களை விளையாட்டாகப் பார்த்திருத்தலிற் பாலரைப்போ லெனவும், வராநின்ற போகங்க ளனைத்தையும் மித்தையென நீக்கினவனும் நீக்கப்படு பொருளு மின்றித் தன் னின்ப மாத்திரமா யிருத்தலின் மிதுனம்போ லெனவும் உவமித்ததென்க. (களஅ)

(அ. கை.)

மற்ற நான்காவதன் இலக்கணமும் இந் நான்கின லெய்தும் பயனும் இனையவென வுணர்த்துகின்றது.

உலகவழக் ககன்றுநிரு பாதிகான் மாவி
லுற்றதற் பரனாகிப் பரமுத்த னெனவே
யிலகுசுகத் துடனிருத்தல் சுத்தவா சனையா
மென்பரிந்நால் வகையாகுங் கருமவா சனையாற்
றலைமைகொண் முத்தர்கள்வேறு வேறாய வொழுக்கஞ்
சாரினுஞ்செந் நெறிகோண நெறிபெறுமா நதிக
ளலைகடலிற் புகுதல்போன் முடிவினின்மெய்ப் பரமா
யமர்தருநன் முத்திசுக மொருபரிசென் றறியே.

(இ. வை.) "உலக வழக் ககன்று நிருபாதிகான்மாவி லுற்ற தற்பரனு
கிப் பரமுத்தனெனவே யிலகு சுகத்துடனிருத்தல் சுத்த வாசனையா மென்
பர்" எ. து. உலகங் காரணமாக வழங்கும் லவுகிக தர்மங்களி னின்று நீங்கி
நிருபாதிகமா நின்றுள்ள பரமான்மாவி னிடத்திற் பொருந்திய ததேக சித்த
னாய்ப் பரமுத்தனைப் போலச் சதோதயமாக விளங்கும் பரம சுகத் திருத்த
லே சுத்த வாசனையெனப் படுவதாம் எனச் சத்துக்கள் கூறாநிற்பர். "இந்
நால் வகை யாகுங் கரும வாசனையாற் றலைமைகொண் முத்தர்கள் வேறு
வேறாய வொழுக்கஞ் சாரினும்" எ. து. இங்ஙனங் கூறிய நால்வகை யென
ப்படும் பிராரத்துவ கன்ம சமஸ்காரத்தால் மேன்மையுற்ற சீவன்முத்தர்கள்
பலவேறு வகைப்பட்ட ஒழுக்கத்தி னிற்பினும் செந்நெறி கோணநெறி பெ
று மாநதிக ளலைகடலிற் புகுதல்போல்" எ. து. நேராகவுங் கோணலாகவுஞ்
செல்லு நிலைக ளெய்தற்பாலவாகிய பெரிய நதிகள் அலைகளையுடைய சமுத்
திரத்தில் விழுத லெங்ஙனமோ அதுபோல, "முடிவினின் மெய்ப் பரமா
யமர்தரு நன் முத்தி சுக மொருபரி சென்றறி" எ. து. பிராரத்வ முடிவில்
உண்மையான பிரமசொரூபமாக அமர்ந்திருக்கின்ற நல்ல மோட்ச இன்பம்
ஓர் படித்தா மென்றறிதி எ. று.

ஏ அசை. யாவுமாய் விளங்காநின்ற பிரமாநந்தத் திருத்தலிற் பர முத்த
னைப்போ லெனவும், முத்தர்க ளென்னும் பன்மை பிரம வித்து, பிரம
வரன், பிரம வரியான், பிரம வரிட்டனெனவும், வேறு வேறாய வொழுக்க
மென்பது அவர்கள் அனுஷ்டான தாரதம்மியமெனவும், விவகாரங்களினாற்
போகங்களிற் கூடினுந் தற்பிரியத்திற் றீவிரமா யுற்றிருத்தலிற் பிரம வித்த
னுக்குத் தீவிரவாசனையெனவும், அவ்விவகாரங்களினுள்ள போகங்களைத்
தினுக்கும் மத்தியனாயிருந்து சாட்சியா யறிதலிற் பிரம வரனுக்கு மத்திய
வாசனையெனவும், அவ்விவகாரபோகங்கள் அனைத்தும் நீங்கிப் பரமசுகத்தின்
மந்தகதியா யடங்கிநிற்றலிற் பிரமவரியனுக்கு மந்தவாசனையெனவும், வாச
னாட்சயத்திற் றத்துவ ஞானமானது பரிசுத்தமாய் விளங்கலிற் பிரமவரிட்ட
னுக்குச் சுத்தவாசனையெனவுங் கொள்க.

குரு முகமாய் விசாரிக்கும் ஆத்ம ஞான விசாரத்தால் நித்தி யாநந்த
போதமுதயமாயினும் பிராரத்த தேக சம்பந்தத்தினால் அப்பியாச தாரதம்மி
யங்கள் இருக்கினும் அனுபவமாகிய முத்தி பல மொன்றே யென்பது தோ
ன்ற விகாசமாய் விளங்க வுணர்த்தியதென்பது. (௱௭௪)

(அ. கை.)

முன்னர்க் கூறிய அப்பியாசத்தின்கணுள்ள பிராரத்தவாசனை நான்
கும் மூன்றுவிதமாக அநுபவித்துத் தீரு முறைமை யினையவென வுணர்த்து
கின்றது.

இச்சையுட னநிச்சைபிற ரிச்சையெனு மிவற்று
லியம்பலுறு பிராரத்த மூன்றுவகைப் படுமா
லச்சுரர்க ளானும்விலக் குதற்கரிய வாகு
மபத்தியஞ்செய் திடறனக்கே கேடெனவிங் கறிந்தும்

வைச்சுமது புரிவித்த விச்சைசெய்யே னெனினு
மன்னவர்தம் மாணைபோற் செய்வித்த லநிச்சை
யிச்சையநிச் சைகளின்றி யிருந்துமய லோரா
லின்பதுன்ப நுகர்வித்தல் பிறரிச்சை வினையாம்.

(இ. ரை.) "இச்சையுட னநிச்சை பிறரிச்சையெனு மிவற்றா லியம்ப லுறு பிராரத்த மூன்றுவகைப்படும்" எ. து. இச்சையும், அநிச்சையும், பிற ரிச்சையும் எனப்படும் இம்மூன்றாற் சொல்லற் கியைந்த பிராரத்துவங்கள் மூன்று வகையாக நிற்கும்; "அச்சுரர்களானும் விலக்குதற் கரிய வாகும்" எ. து. அந்தத் தேவர்களானும் இவற்றைத் தடுத்தற்குக் கூடாதனவா யிரு க்கும். "அபத்தியஞ் செய்திடறனக்கே கேடென விங்கறிந்தும் வைச்சுமது புரிவித்த விச்சை" எ. து. பத்தியந் தவறுதல் தனக்கே கேடெய்துமென இங்கறிந்தும் அதனை மதியாது மதுமாமிசாதி யுண்ணச் சம்மதிக்கச் செய் தல் இச்சாபிராரத்துவமும், "செய்யே னெனினு மன்னவர்த மாணைபோற் செய்வித்த லநிச்சை" எ. து. அங்ஙனங் கோடற் குடன்படே னெனக் கூறினும் அரசன் ஆக்கினையால் எங்ஙனங் கோடற் கியைய வேண்டுமோ அதுபோல வுடன்படச் செய்வித்தல் அநிச்சா பிராரத்துவமும், "இச்சை யநிச்சைக ளன்றி யிருந்து மயலோரா லின்ப துன்ப நுகர்வித்தல் பிறரி ச்சை வினையாம்" எ. து. இச்சாபிராரத்துவம் அநிச்சாபிராரத்துவஞ் சற்று மின்றி யிருந்தும் அன்னியரா லின்ப துன்பம் அனுபவிக்கச் செய்தல் பிறர் இச்சாபிராரத்துவமுமாம் எ. று.

ஆல் அசை. தான் இவற்றையனுபவிக்கக்கூடாத காரியமென நன்றாய்த் தெரிந்திருந்தும் அதன்படி நில்லாமல் அனுபவிக்க வருவது இச்சையென வும், தனக் கிச்சையின்றாயினும் அவற்றை அனுபவிக்கச் செய்வது அநிச்சை யெனவும், தனக்கு அவ்விரண்டும் இன்றாயினும் பிறர் அன்புக்காக அனுப விக்கப்படுவது பிறரிச்சையெனவுங் காண்க.

விருப்பு வெறுப்பு உபேக்ஷையான விவைகளாற் பலாத்காரமாக அனு பவித்துத் தீர்வது பிராரத்த கன்மங்களாமென்பது. (௧௭௫)

(அ. கை.)

முற்கூறிய பிராரத்த கன்மங்களுள்ள ஜீவன் முத்தர்கள் நடை பல வாயினும் அவர்களுண்மை யொன்றேயென வற்புறுத்தற்கு உவமான பூருவ மாக வுணர்த்துகின்றது.

இப்பரிசு மூவகையாம் பிராரத்த வினைவா
லெண்ணில்பல வொழுக்கமாஞ் சீவன்முத்தர்க் கிந்த
மெய்ப்பொருளை வசிட்டனொ ரதன்றுருவா சன்சீர்
வியாதனொடு சுகன்வாம தேவனருட் சனக

ஞொப்பரிய பரதனெழிற் கௌதமனே முதலா
யுளர்வருத்த ஞபேத முணர்த்தலுறு மிங்ஙன்
றுப்புதவு பிராரத்தங் கொளினஞ்ஞா னிக்குஞ்
சுத்தனுக்கும் வேறுபா டெங்ஙனெனின் மொழிவாம்.

(இ. ரை.) "இப்பரிசு மூவகையாம் பிராரத்த விளைவா லெண்ணில் பல வொழுக்கமாஞ் சீவன் முத்தர்க்கு" எ. து. பிராரத்த கன்ம விளைவி ஞல் இங்ஙனங் கூறிய தன்மை மூன்று வகையாநிற்கும்; இஃதன்றியுஞ் சீவன் முத்தர்களுக்குப் பலவேறுவகைப்பட்ட ஒழுக்கங்கள் அளவில்லன வா யிருக்கும். "இந்த மெய்ப் பொருளை வசிட்ட ஞரதன் றுருவாசன் சீர் வியாதனெடு சுகன் வாமதேவ னருட்சனக ஞெப்பரிய பரத னெழிற் கௌ தமனே முதலாயுளர்" எ. து. இங்கே கூறி வந்த உண்மைப் பொருளை வசி ஷ்டன், நாரதன், துருவாசன், கீர்த்தி பொருந்திய வியாசன், சுகன், வாம தேவன், அருளை யுடைய சனகன், ஒப்பிடற் கரிய பரதன், அழகிய கௌத மன் முதலாயினோர் உடையவராவர். "வருத்தஞபேத முணர்த்தலுறு மிங் ஙன் றுப்புதவு பிராரத்தங் கொளின்" எ. து. இங்ஙனம் வர்த்தித்து வருந் தாரதம்மிய பேத முணர்த்தற் கியைந்த போகமா யுள்ள பிராரத்துவத்தை யிவ்வாறு கொள்ளின், "அஞ்ஞானிக்குஞ் சுத்தனுக்கும் வேறுபா டெங்ங னெனின் மொழிவாம்" எ. து. அஞ்ஞானிக்கும் ஞானவானுக்கும் வேறு பாடு எங்ஙன முளவாமெனின் அதனை மொழிகுதும் எ. து.

முத்தியைப்பெற்ற ஞானவான்கள் சீவன்முத்தித் தன்மையோடு நானு விதமான நடைகளையுடையவர்களாய் விர்த்தியையடைந்து வருவதற்கு வசி ட்ட முனியாதிய பெரியோர்களை மேற்கோளாக வெடுத் துணர்த்திய தென் பது. (கஎசு)

(அ. கை.)

அங்ஙனம் விஞவிய பேதத்திற்கு உத்தர முணர்த்துகின்றது.

மண்ணுலகில் விராத்தியர் சுரோத்தியர் தமக்கு
மறையொழிதன் மொழிதலா லன்றியுணன் முதலா
யெண்ணவருஞ் செயலான்வே றிலாமையது போல
விதயபந்த முறலொழித லாலன்றிப் போக
முண்ணுநிலை யதனலஞ் ஞானமுடை யோர்க்கு
முணர்வுமய மாய்நின்ற சீவன்முத்தர் தமக்கு
நண்ணிவரு வேறுபா டிலையெனவே நவில்வர்
ஞானநூல் பலவுணர்ந்த நல்லுணர்வி னவரே.

(இ. ரை.) "மண்ணுலகில் விராத்திரியர் சுரோத்திரியர் தமக்கு மறை யொழிதன் மொழிதலா லன்றி" எ. து. உலகின்கண் விராத்திரிய ரென்போ ருக்குஞ் சுரோத்திரிய ரென்போருக்கும் வேதாத்தியயன மின்மையாலும்

உண்மையாலுமே பேத முளவாமன்றி, "உணன் முதலா யெண்ணவருஞ் செயலான் வேறிலாமையதுபோல" எ. து. உண்டல் உறங்கல் முதலியவாக எண்ணிடற் கியைந்த முயற்சிகளால் வேறுபா டெங்ஙன மின்றே, அது போல, "இதய பந்த முற லொழிதலா லன்றி" எ. து. இதயத்தின்கண் விடாதுநின்றுள்ள பந்தநிவர்த்தியாற்பேதமுறுதலேயன்றி, "போக முண்ணு நிலை யதனு லஞ்ஞான முடையோர்க்கு முணர்வுமய மாய்நின்ற சீவன்முத்தர் தமக்கும்" எ. து. சுக துக்க போகமாகிய பிராரத்துவ கர்மத்தை யனுபவிக்கும் நிலையினால் அஞ்ஞானமயமா நின்றோருக்கும், ஞானமயமாய் விளங் குஞ் சீவன்முத்தர்களுக்கும், "நண்ணிவரு வேறுபாடிலையெனவே நவில்வர் ஞான நூல் பல வுணர்ந்த நல்லுணர்வினவர்" எ. து. உண்டாய் வருகின்ற வேறுபாடு சற்றுமில்லையென்றே யான்ம சாஸ்திரமா நின்றுள்ள பலவற்றை யும் நன்குணர்ந்த மெய்யுணர்வுடைய சத்துக்கள் கூறுநிற்பர் எ. று.

ஏ அசை. மறையொழிதல் மொழிதலென்றதை நிரைநிரையாய் மறை ஒழிதலை விராத்திரியருடனும் மொழிதலைச் சுரோத்திரியருடனுங் கூட்டுக. விராத்திரிய னென்பவன் அனுலோமப் பெண்ணிற்கும் பிரதிலோம ஆணு க்கும் பிறந்தவன், அனுலோமப்பெண் கீழாயபீசத்திற்கும் மேலாயயோனிக் கும் பிறந்தவள். பிரதிலோமன் மேலான பீசத்திற்குங் கீழான யோனிக்கும் பிறந்தவன், சுரோத்திரிய னென்பவன் பிரமோபதேசத்தைக் கேட்கும் அந் தணன்.

பெத்தனுக்கும் முத்தனுக்கும் அகம்பாவம் நீங்கலும் ஓங்கலுமேயன்றி மற்றச் செய்கைகளினாற் பேதமின்றென்பது. (கஎஎ)

(அ. கை.)

சீவன் றனது கற்பிதவொழிவிற்குச் சம்மதித்துப் பிரமமாதற்கு உடன் படுமோ வென்ற வினாவிற் கியைந்த உத்தர முணர்த்துகின்றது.

தத்துவஞா னத்தினான் பிரமமடைந் திடுமேற்
　　றறுகண்வரிப் புலிகண்டோன் போற்சீவத் துவந்தா
னத்தலையே யழிந்திடுமா தலினாலச் சீவ
　　னழிவுதனக் குடன்படுமோ வெனிற்கடவு டன்மைக்
குய்த்தவா தரவினாற் கங்கைமுத லவற்று
　　ளொழிப்பதனுக் கிசைவர்நரத் துவமதுபோ லென்றும்
பொய்த்தலிலாத் துரியவடி வாம்பிரமத் துவத்திற்
　　பொருந்தத்தன் கேட்டினுக்கிங்குடன்படுஞ்சீவன்றான்.

(இ. ரை.) "தத்துவ ஞானத்தினாற் பிரம மடைந்திடுமேற் றறுகண் வரிப்புலிகண்டோன்போற் சீவத்துவந்தா னத்தலையே யழித்திடுமாதலினால்" எ து உண்மைஞான விளக்கத்தினாற் பிரமசொரூபம் வாய்க்குமாயின் கோப க்கண்களையும் வரிகளையுமுடைய புலியைக் கண்டோ னெங்ஙன மாவனோ அதுபோலச், சீவத்துவமானது அக்கணமே நசித்துவிடும்; ஆகையால், "அ

ச்சீவனழிவு தனக் குடன்படுமோ வெனில்'' எ. து. அந்தச் சீவன் றனது கற்பனை நாசத்துக் குடன்படுமோவெனக் கேட்கில், ''கடவுடன்மைக் குய்த்த வாதரவினாற் கங்கைமுதலவற்று ளொழிப்பதனுக் கிசைவர் நரத்துவ மது போல்'' எ. து. தேவத் தன்மை யடைதற்குச் செலுத்தற் கியைந்த மிக்க ஆசையினாற் கங்கை யமுனைமுதலிய நதிகளில் மானிடத்தன்மையை ஒழிப்பதற் கெங்ஙன முடன்படுவரோ அதுபோல, ''என்றும் பொய்த்த லிலாத் துரிய வடிவாம் பிரமத்துவத்திற் பொருந்தத் தன்கேட்டினுக் கிங்குடன்படுஞ் சீவன்தான்'' எ. து. எப்போதும் நசியாமல் ஒரு தகைத்தா விளங்குஞ் சிற்சோதிவடிவாயுள்ள பிரமத்தன்மையில் பேதமின்றி நிற்கச் சீவனானவன் றனது கற்பனை நாசத்துக்கு இவ்விடத்துடன்படும் எ. று.

கங்கைமுதலென்றமையின் யமுனை சரஸ்வதி கூடிய திரிவேணி சங்கமமெனக் கொள்க. தன் கண்ணினாற் றன துருவத்தைக் காண்பதுபோலத் தற்பிரக்ஞையாற் றன்னைக் கண்டமைவானென்பார் தத்துவ ஞானத்தினாற் பிரமமடைந் திடுமெனவும், ஆணவத்தைக் கெடுக்குங் கொடிய நோக்கென்பார் தறுகண்ணெனவும்,சமாதியின்கண் நவநவமா யுதயமான அனுபவமென்பார் வரியெனவும், சீவன் றனக் காதாரமான சிவத்தைப் பார்க்கச் சிவந் தனக்காரோபமான சிதாபாசனைப்பார்க்க இவ்விருபார்வையும் ஒத்தவிடத்து அவ்விரு தன்மையும் நீங்கிச் சுயஞ் சைதன்னியமாய் அதனாற் சங்கற்ப நாசம் வருமென்பார் புலிகண்டோன்போற் சீவத்துவம் அத்தலையே யழிந்திடுமெனவும், சங்கற்பந் தன தழிவான அநீதத்திற் குடன்படுமோ வென்பார் சீவ னழிவு தனக் குடன்படுமோ வெனவும், மண்ணின்கண் மனித வேடம் பூண்டவன் விண்ணின்கண் தேவவேடம் பூணும் நிமித்தங் கங்கை யாதியின் இத் தேகத்தை விடுவதுபோலச் சீவ வேடம் பூண்ட துரியன் றனது யதார்த்த வடிவமாகிய பிரம ஸ்வரூபத்தை யடையும் நிமித்தங் கற்பிதரூபமான சீவ சிதாபாசத்துவத்தைச் சமாதியாதி யவற்றினால் ஒழிக்க விரும்பினா லென்பார் கடவுட் டன்மைக் குய்த்தஆதரவினாற் கங்கை முதலவற்றுள் ஒழிப்பதனுக்கு இசைவர் நரத்துவம்போ லெனவும், பரமாத்மா யிச்கமான பரதத்துவந் தானாகித் துவிதம் நீங்கினா னென்பார் பொய்த்த லிலாத் துரிய வடிவாம் பிரமத்துவத்திற் பொருந்தத் தன் கேட்டினுக்கு அங்கு உடன்படுஞ் சீவன்றானெனவுங் கூறினார்.

வினா:—தேக அழிவைச் சீவன் அழிவாக உவமானத்திற் கூறிய தென்னை ?

விடை:—தேகியைக் காணாது தேகத்தைத் தானெனக் காண்பதா லென்க.

வினா:—சீவன் றனது லாபத்திற்கு உடன்படுமென்னாது தனது கேட்டிற்கு உடன்படுமென்ற தென்னை ?

விடை:—சங்கற்பஞ் சத்திற் கரைதலே சித்தாய் விளங்கலினாலென்க.

சீவ சிதாபாசன் றனது அவிருத்தாம்சமான சுயஞ் சித்தை நோக்கின விடத்திற் றனது விருத்தாம்சமான சகல கற்பனைகளும் நீங்குமென்பது. ()

(அ. கை.)

இங்ஙனங் கூறிய சீவன் முத்தர்க்கு முன்னுள்ள ரிஷிகளைப்போலச் சாபானுக்கிரக சாமர்த்தியங் காண்கிலமே; இவர்களை ஞானியென்றது எங்ஙனமென்ற வினாவிற்கு உத்தரம் உணர்த்துகின்றது.

வாதரா யணன்முதலோர் போற்சாப முடனே
மற்றருள்செய் வலியுடையோன் றத்துவஞா னத்தோ
னேதிலா னலனெனினவ் வலிதவத்தின் பலமா
மிலங்குதத் துவஞான பலமன்று மாயின்
மாதவமே ஞானத்திற் கேதுவெனுஞ் சுருதி
வழக்கினூற் றவமிலர்க்குத் தத்துவஞா னந்தா
னேதெனிலாஞ் சாபாதிக் குச்சகா மியமே
யேதுநிட்கா மியதவஞா னத்தினுக்கென் றறியே.

(இ. ரை.) "வாதராயணன் முதலோர்போற் சாபமுடனே மற்றருள் செய் வலியுடையோன்" எ. து. வியாசர் முதலிய ரிஷிகளைப்போலச் சாபமும் அதற்கு எதிர்மறையாய அனுக்கிரகமு மென்னப்பட்ட சாமர்த்திய முடையவனே, "தத்துவஞானத்தோ னேதிலா னலனெனி லவ்வலி தவத்தின் பலமாம்" எ. து. மெய்யுணர்வுடையவனுவன் இவற்றுள் ஏதுமில்லாதவன் ஞானி யல்லனெனக் கூறில், அந்தச் சாமர்த்தியந் தவத்தினது பலமாகமுடியும். "இலங்கு தத்துவஞான பலமன்றுமாயின் மாதவமே ஞானத்திற் கேதுவெனுஞ் சுருதி வழக்கினூற் றவ மிலர்க்குத் தத்துவ ஞானந்தானேதெனில்" எ. து. சதோதயமாக விளங்கும் மெய்யுணர்வின் பலனல்லவாகும். இங்ஙனமாயின், மெய்யுணர்வு உதித்தற்கு ஏது மகத்தான தவமேயெனக் கூறுஞ் சுருதி நெறி காரணத்தாற் றவமில்லாதவர்களுக்கு மெய்யுணர்வு எங்ஙனம் வாய்க்குமெனக் கேட்கில், "ஆஞ் சாபாதிக்குச் சகாமியமே யேது நிட்காமிய தவ ஞானத்தினுக் கென் றறி" எ. து. வாய்த்தற்பாலவாகிய சாபானுக்கிரகங்கட்குக் காரணம் காமியத்தவ மெனவும், மெய்ஞ்ஞானத்திற்குக் காரணம் நிட்காமியத் தவமெனவும் அறிந்திடுதி எ. று.

ஏ அசை. ஏதெனலைத் தவமிரண்டினுக்கு மொட்டுக. சகாமியமென்பது சொர்க்காதி போகங்களை யனுபவிக்க விரும்புவதும், நிட்காமியமென்பது அவ்விச்சையின்றித் தன்னிடத்து அமைந்து நிற்பதுமாம்.

வினா:—சித்தி யுள்ள சாபானுக்கிரக சாமர்த்தியங் காமியத் தவத்தின் வலியேயன்றி ஞானத்தின் வலியல்லவென்றால் இதற்குத் தவம் ஏதுவெனச் சுருதி கூறிய தென்னை?

விடை:—ஞானத்திற்கு நிட்காமியத் தவம் ஏதுவாதலினென்க.

வினு:—இந்நிட்காமிய தவத்திற்கு அவ்வலிமை யின்றுய தென்னை ?

விடை:—இது ஞானேதயத்தில் நசிப்பதால் இதற்கு அவ்வளவு சத்தி யில்லை யென்க.

வினு:—சாபாதிக்குங் காமியம் ஏதுதானே; அதற்கு அவ்வலி வந்த தென்னை ?

விடை:—அக்காமியஞ் சித்தியையுண்டாக்கித் தான் நீங்காமல் விருத்தியடைந்து வருதலினு லென்க.

வினு:—அற்றேல் அச் சித்தியினுல் இம் முத்திக்குப் பிரயோசன மின்றே ?

விடை:—கோசரம் அகோசரத்திற்கு எங்ஙனம் பிரயோசனமாமென்க. ஞானமாத்திரம் பெற்ற சீவன் முத்தனுக்குச் சாபானுக்கிரக சாமர்த்தியம் மேற் சநநமரணத்திற்கு ஏதுவாகலின் அது வேண்டுவதின்றென்பது.

(அ. கை.)

ஞானத்தான் முத்தி பெற்றிருக்கும் வியாசாதி மஹா ரிஷிகளுக்கு இச்சித்திவந்த காரண மியாதென்ற வினுவிற்கு உத்தர முணர்த்துகின்றது.

வேதவியா சாதிகட்கு ஞானம்வலி யிரண்டு
மேவுமே யெனிலவர்கட் கிருதவமு முளவா
மாதலினு லவ்விரண்டு மாகுமொரோர் தவமே
யாயினெவ்வொன் றேயடையு மதனுன் மாறின்றும்
மேதையாஞ் சாபாதி வலியிலர்க ளாகி
விதியிறத் துவஞானி களைக்கிரியா நிட்ட
ரோதுவார் நிந்தையெனி னவர்தமக்கு விடயத்
துழல்பவரா னிந்தையா தலிற்குறைவின் றுமால்.

(இ. ரை.) "வேத வியாசாதிகட்கு ஞானம் வலி யிரண்டு மேவுமே யெனில்" எ. து. வியாசர் முதலிய ரிஷிகளுக்கு முத்தி சித்தி யெனப்படும் இவ்விரண்டு நிலையும் வாய்த்திருந்தனவே யாது காரணத்தாலோ வெனக் கேட்கில், "அவர்கட் கிருதவமு முளவா மாதலினு லவ்விரண்டு மாகு மொரோர் தவமேயாயி னெவ்வொன்றே யடையு மதனுன் மாறின்றும்" எ. து. அந்த வியாசர் முதலிய ரிஷிகளுக்கு மேற்கூறிய இரண்டு தவமும் உள்ளனவாம்; ஆதலினுல் அவற்று லெய்தும் பலம் இரண்டும் அவர்கட்கே யாகும். ஒவ்வொரு தவம் ஒவ்வொருவருக்கே யாயின், ஒவ்வொரு பலனே வந்து வாய்க்கும். அந்தக் காரணத்தால் விரோதமில்லையாம், "மேதையாஞ் சாபாதி வலியிலர்களாகி விதியி றத்துவ ஞானிகளைக் கிரியாநிட்ட ரோதுவார் நிந்தையெனின்" எ. து. சிரேஷ்டமாகிய சாபாநுக்கிரக வல்லமை யில்லாதவர்களாய் விதி நிடேதங் கடந்துள்ள சீவன்முத்தர்களைக் கன்மாநுஷ்டர்க ணிந்தை செய்வார்க ளெனக் கேட்கில், "அவர் தமக்கு விடயத்

துழல்பவரா னிந்தை யாதலிற் குறைவின்றாம்'' எ. து. அந்தக்கன்மிகளுக்கு விடயத்தின்கண்ணே மாறாதுழலும் நிர்மூடர்களால் நிந்தைவரு மாதலின் அதனால் மகான்களுக்குக் குறைவில்லையாம் எ. று.

ஆல் அசை. விதியென்றதனால் நிடேதம் வருவித்தாம்.

வினா:—ஞானிகட்கு இக்காமியத் தவம் இன்றென்ப தென்னை ?

விடை:—தனக்கு வேறாய் அநித்தமாயுள்ள சிவலோகாதி பதத்தை யடைய விருப்பமின் றாதலினானுந் தனக்கு வேறின்றாய்த் தானே தானாய் விளங்கு மிடத்து ஒன்றுவேண்டுதலும் ஒன்று தள்ளுதலு மின்மையாதலி னானு மென்க. காமியத் தவத்தாற் சித்தியும் நிஷ்காமியத் தவத்தான் முத்தி யும் வருமாயினும்முத்தியின்றிய சித்தியோர்க்குச்சாபானுக்கிரக சாமர்த்திய முண்டாயிருந்தும் பிறர்க்கு விநோதமாய்த் தனக்குப் பய னின்றி யிருத்த லின், இந்திரசால முதலான வித்தை செய்வோனாகவும், சித்தி யின்றிய முத்தியோர்க்குச் சாபானுக்கிரக சாமர்த்தியம் இன்றாயினும் பிறர்க்கு விநோதமின்றித் தனக்குப் பயனாயிருத்தலின் இவன் வித்தையைப் பார்க் குஞ் செல்வனாக விருத்தலின் ஈவோரில் ஏற்போர் அதிகமாகார்போல் முத்தியுள்ள ஞானவானுக்குச் சித்தியுள்ளோர் சமானாதிக மாகாரென்க.

வினா:—அங்ஙனமாயின் முத்திமாத்திரம் பெற்ற ஞானிக்கு இச்சித்தி முத்தியும் பெற்றவர்க ளதிகரலரோ?

விடை:—தனக்கெனவின்றிப் பிராரத்தத்தினாற் சாபானுக்கிரக சாமர் த்தியமுண்டாம். அவையுண்டானவிடத்து அகம்பாவ மிருத்தலினானும் அவ் வகம்பாவம் இவர்கட்கு இன்மையினானும் அதிகராகாரென்க

வினா:—அங்ஙனமாயின் யாவரும் அவர்களை முக்கியமாகக் கூறுவ தெற்றினுக்கு?

விடை:—சீவர்கள் வேதத்தினுள்ள மஹாவாக்கிய நிச்சயம் உண்மை யாகக்கொண்டு முத்தியையடையுநிமித்தம் அவ்வாக்கியார்த்த நிச்சயத்தைச் சுருக்கிச் சொல்வதில் விசுவாசந் தோன்றி யச்சாபானுக்கிரக சாமர்த்தியத் தினாற் பயமுண்டாம். அதன் வழி யொழுகவேண்டி யீசுர நியதிப்படி வந்த வர்களாதலினா லென்க.

வினா:—அற்றேல் இச்சாபானுக்கிரக சாமர்த்திய மில்லாத ஞானிகளை யஃதுடைய கன்மிகள் தூஷிப்பார்களே ?

விடை:—அவர்களை விடயமோகத்தை யுடையோர் தூஷித்தலினால் அக்கன்மிகளுக்கு ஓர்குறைவின்றாயதுபோல, இக்கன்மிகள் தூஷிப்பினால் ஞானிக்கோர் குறைவு மின்றென்க.

இச்சித்திகள் ஈசுரனுடைய வல்லப மாதலின் இவை யுள்ளவர்களைத் தேவத் தன்மையாக நம்பி யவர்களால் விதிக்கப்பட்ட விதிப்படி யுயிர்க ளொழுகவேண்டி, அவர்கட்கு இவ்விநோதமாயுள்ள சாபானுக்கிரக சாமர்த் தியம் ஈசுரானுக்கிரகத்தினா லுண்டாயிற்றென்பது. (கஅ0)

(அ. கை.)

முற் கூறிய ஜீவன் முத்தன் பிராரத்த வசத்தாற் பலவித நடையை யுடையவனானாலும் அது அவனது சித்துவிலாசமாகக் காணவேண்டுமென வுணர்த்துகின்றது.

உலகிறந்த சீவன்முத்த னுகர்வினைவா சனையா
　　லுண்பொருள்கள் பலகவர்ந்து மவுனமே யுற்றும்
பலதிறங்கண் மொழிந்துமுப தேசநெறி புரிந்தும்
　　பரிதவித்து மகிழ்ந்துமிக வேடங்கள் புனைந்துங்
கலைதுறந்து முடையுடுத்துங் கல்விபல பயின்றுங்
　　கல்லாது மாதர்முயக் கிடையுற்று மிவ்வா
றுலகிறந்த நடையுறினு மருள்விளையாட் டென்றே
　　யவன்றனைநம் புகவைய மொருசிறிது முறுமல்.

(இ. ரை.) "உலகிறந்த சீவன்முத்த னுகர்வினை வாசனையா லுண் பொருள்கள் பலகவர்ந்து மவுனமே யுற்றும்" எ. து. லௌகிக நடை வைதிக நடையெனல் சற்றும் உள்ளத்தின்க ணின்றிய சீவன் முத்த னென் போன் றன்னாற் கொண்ணுத பிராரத்துவ கன்ம சம்ஸ்காரத்தால் அநுபவிக் கின்ற வஸ்துக்களைப் பலவாகக் கிரகித்தும், மவுனமாக விருந்தும், "பலதி றங்கண் மொழிந்து முபதேச நெறிபுரிந்தும் பரிதவித்து மகிழ்ந்து மிகவேட ங்கள் புனைந்தும்" எ. து. நவநவமாக விளங்கும் அனுபூதித் திறங்களைப் பல பலவாக எடுத்துச் சொல்லியும், உபதேசித்தற் கியைந்த நெறிகளைச் செய் தும், பிறவி நோய்க்காக விசன முற்றும், அந்நிய மின்மை பற்றி மகிழ்ந்தும், மிகவும் பலவேறு விகற்ப வேடங்களைப் புனைந்தும், "கலை துறந்து முடை யுடுத்துங் கல்வி பல பயின்றுங் கல்லாது மாதர் முயக்கிடை யுற்று மிவ்வா றுலகிறந்த நடையுறினும்" எ. து. வஸ்திரந் தரித்தல் சற்றுமின்றியும், அத னையுடுத்தும், பலவேறாய கல்விகளிற் பயிற்சியுற்றும், யாதொன்றுங் கல் லாது மாதர்கள்பாற் புணர்ச்சி வேண்டி அவர்களை யகலா திருந்தும் எனக் கூறப்படுவன வாகிய இங்ஙனம் அளவிறந்த நடக்கைகளில் நிற்பினும், "அருள் விளையாட்டென்றே யவன்றனை நம்புக வைய மொரு சிறிது முறு மல்" எ. து. இவையனைத்துங் கிருபா விநோத லீலையென்றே சந்தேகஞ் சற்றும் எய்தாமல் அந்தச் சீவன் முத்தனைச் சிவசொரூபமென்றே நம்புவா யாக எ. று.

ஏ தோற்றம் இங்குள்ள வும்மையனைத்தும் எண்ணும்மை.

சீவன்முத்தனாற் செய்யப்பட்ட பலவிதமான நடைகள் உலோகானுக் கிரகமாகவேயன்றி அவற்றால் அவனுக் கோர் பலாபல மின்மையின், அந்ந டைகளை யாத்மவுல்லாசமென்றே காணவேண்டுமென்பது. (கஅக)

(அ. கை.)

விதேகமுத்தன் இலக்கணமும் அதனை யடைதற்கு ஏதுவான நித்திய கரும முதலான அனுஷ்டான மரபு இருபதாகக் கூறுவான் றொடங்கி நித்திய கருமமாதியவாறும் உணர்த்துகின்றது.

என்றுமெவ் விடத்தினுமோ ருடம்புமுரு தொன்று
யிருந்தசச்சி தாநந்த சிவசொருப மாத
னன்றிதரு விதேககைவல்லியமென் றிசைப்பர்
நவின்றவிதை யெய்துமா றெவ்வாறிங் கென்னிற்
பொன்றலினித் தியகருமா னுட்டான மதனாற்
புண்ணியமப் புண்ணியத்தாற் பாவமொழி வதனாற்
குன்றலறு சித்தசுத்தி யதனாற்பொய்க் குடும்பக்
குற்றநெகிழ் வதனான்மெய்த் துறவுதுற வதனால்.

(இ. ரை.) "என்று மெவ்விடத்தினு மோருடம்பு முரு தொன்று யிருந்த சச்சிதாநந்த சிவ சொருபமாத னன்றி தரு விதேக கைவல்லிய மென்றிசைப்பர்" எ. து. எந்தக்காலத்திலேனும் எவ்விடத்திலேனும் எழுவகைத் தோற்றத்தில் யாதோருடம்பு மாகாமற் பேத மின்றி யொன்று யிருந்த சச்சிதானந்த சிவ சொருப மாதலே யெவற்றினும் மேலாய நன்றி தருகின்ற விதேக கைவல்லியமெனச் சத்துக்கள் கூறுநிற்பர். "நவின்ற விதை யெய்துமா றெவ்வா றிங்கென்னில்" எ. து. இங்கே சொல்லிய இந்த விதேகமுத்தி நிலையை யிங் கெய்து மார்க்கம் எங்ஙனமெனக் கேட்கின், "பொன்றலி னித்திய கருமானுஷ்டான மதனாற் புண்ணிய மப்புண்ணியத்தாற் பாவ வொழி வதனாற் குன்ற லறு சித்த சுத்தி யதனாற் பொய்க் குடும்பக் குற்ற நெகிழ் வதனான் மெய்த் துறவு துறவதனால்" எ. து. உயிர்கள் வழிபடற்கு என்றும் நசியாது நின்றுள்ள நித்திய கன்மானுஷ்டானமும், அக்கன்மானுஷ்டானத்தாற் புண்ணியமும், அப்புண்ணியத்தாற் பாவ நாசமும், அப்பாவ நாசத்தால் என்றுஞ் சுருங்காத சித்தசுத்தியும், அந்தச் சித்தசுத்தியாற் பொய்யாகிய குடும்பத்தால் விளைந்த பந்தத் தளர்ச்சியும், அந்தப் பந்தத் தளர்ச்சியால் மெய்த் துறவு பூணலும், அந்த மெய்த் துறவு பூணலால் எ. று. இது முதற் பின்னர் மூன்று கவியுங் குளகம்.

கால தத்துவ மென்பார் என்றுமெனவும், சகல புவன போகங்களும் என்பார் எவ்விடத்தினுமெனவும், சராசரவுயிர்களாகிய பௌதிகமென்பார் ஒருடம்பெனவும், இவையாவு மின்றென்பா ருருதெனவும், பரிபூரணமா யிருந்ததென்பார் ஒன்றுயிருந்தெனவும், காலத்திரயத்திலும் அழிவின்றி நித்தியமாயிருந்த தென்பார் சத்தெனவும், ஆதி மத்தியாந்த ரகித சதோதயமாய் விளங்குமென்பார் சித்தெனவும், தடையற்ற நிரதிசயாநந்தமென்பார் ஆநந்த மெனவும், மூன்றும் பிரிவின்றி யொன்றுய் மங்களகரமாய் விளங்குகின்றதே பிரம மென்பார் சிவ சொரூப மெனவும், அதுவே யுண்மையானதென்பார் ஆதலெனவும், அதுவே யதீதபதமான முத்தி யென்பார் விதேக கைவல்லிய மெனவுங் கூறினார். விதேகமுத்தியென்பது தேகஞ் சின்மாத்திரமாதலே. எனவே, சீவன் முத்தியிற் சீவன் சிவமாய் விளங்குவதுபோலப் பிராரத்தானுபவநீக்கத்திற் றேகந் தேகியின் தேஜசா யானந்தமாத்திரமாய்ச் சேடித்துநிற்பதென்க.

வினா:—அற்றேல் உலகரைப்போல ஞானவான்களுக்கும் உயிர் பிரியவும் அங்ஙனம் பிரிந்த தேகத்தைத் தகனஞ் செய்யவுங் கண்டிருக்கின்றோமே; அங்ஙனமாக எங்ஙனம் பூரணமாயிற்று?

விடை:—பஞ்சபூத பௌதிகங்கள் பூரணமாக விளங்க இத்தேகமாத்திரமாக விளங்கவில்லை இஃதும் அங்ஙனமே விளங்குமென்க.

வினா:—அற்றேல் இச்சகம் பூரணதிருஷ்டியாய்ப் பார்க்கிற் பூரணமாய்த் தோன்றுவதேயன்றிப் பூரணமாய்க் கரையாததுபோலத் தேகமும் அங்ஙனம் பார்க்குமிடத்து அதுவாய்த் தோற்றுவதேயன்றி அதுவாய்க் கரையவில்லையே.

விடை:—அஸ்தியாதிய கடினரூபமாயுள்ள இத்தேகம் ஓர் சித்தியினாற் பரமாணுரூபமாய்ப் பந்தனம் பண்ணின வீட்டின்கணின்று வெளிப்படுதல் போலச் சைதன்னிய சிந்தனையாற் றேகஞ் சைதன்னிய ரூபமாதற்குச் சந்தேகமென்னையென்க.

வினா:—அற்றேல் இங்ஙனமாயின் அதற்குப் பிரமாணமுண்டோ?

விடை:—பாரதத்தில் வியாச வசிஷ்டாதிய மஹாரிஷிகளும், இகத்தில் ஆசாரிய சுவாமிகள் முதலியோரும் இன்னும் மாணிக்கவாசக சுவாமிகளும் தேக சேடமின்றிச் சோதியாய்க் கரைந்தாரென்பதும் இன்னும் அல்லமாப் பிரபுதேவர் ஜீவன் முத்தித் தசையிற்றானே கோரக்கர் கட்கம் பரிசியாமற் சாயையா யிருந்தாரென்பதும் இன்னும் அநேகமு முண்டென்க.

வினா:—அற்றேல் யாவரும் ஏன் அனுஷ்டிக்கவில்லை?

விடை:—கிஞ்சிக்ஞத்துவமான ஜீவன் சர்வக்ஞத்துவமுள்ள சிவத்தைச் சிந்தித்து அது நீ யென்னும் பகுப்பறச் சுத்த சைதன்னிய மாதற்கே சிருட்டி தொடங்கி யிதுகாறும் வருந்தும் வருத்தத்திற்கு அளவின்மையாயிருத்தலினானும், இச்சடத்தைச் சித்தாகக் கரைத்தற்குள்ள வருத்தம் இவ்வளவென மட்டிடக் கூடாமையாலும், எவரும் அனுஷ்டிக்கும்படி சுருதிகள் சொல்லாமையாலும், ஆசிரியரும் நிரந்தரமாய் அநுஷ்டிக்கச் சொல்லவில்லையாதலாலும் ஏகதேசத்தில் உண்டென்க.

வினா:—இனிச் சீவன்முத்தியில் விதேகமுத்தித் தன்மையும் விதேகமுத்தியிற் சீவன்முத்தித் தன்மையும் உண்டென்பது எங்ஙனம்?

விடை:—சீவன்முத்தித் தன்மையாயிருந்து உபதேசாதிகள் செய்யுமிடத்துந் தேகமின்றிச் சாயைமாத்திரமாயிருந்த அல்லமாப்பிரபுதேவர்போல இருப்பது சீவன்முத்தியின் விதேகமுத்தியெனவும், விதேகமுத்தித் தன்மையாற் பரிபூரணமாயிருந்துஞ் சக சீவ பரங்களை யியக்காமல் இயக்குவிக்கும் பரமேசனைப்போல இருப்பது விதேக முத்தியிற் சீவன் முத்தியெனவுங் கொள்க.

விதேகமுத்தித்தன்மை யிஃதென விளங்கக் கூறியது. (கஅஉ)

(அ. கை.)

நிறுத்தமுறையான் முத்தி விருப்பமாதிய பதினொருவித மரபுணர்த்து கின்றது.

முத்திவிருப் பதனானே புறக்கரும வொடுக்க
மொழிந்ததனால் யோகநிலை முயற்சியது தன்னாற்
பொய்த்தலறு துரியவிழை வத்துரிய விழைவாற்
புகலருமா வாக்கியவா ராய்ச்சியத னானே
யத்துவித ஞானமத னாலவிச்சை நாச
மதனாற்பொய்த் துவிதமயக் கழிதலத னானே
மெத்துசுக துக்கநினை வழிவதனால் விருப்பு
வெறுப்பறுத லதனாலொண் விதிவிலக்கோய் வதனால்.

(இ. ரை.) "முத்திவிருப் பதனானே புறக் கரும வொடுக்க மொழிந்த தனால் யோக நிலை முயற்சி யது தன்னால்" எ. து. முத்தி விருப்பும், அந்த முத்தி விருப்பால் புறக்கரும நாசமும், அந்தப்புறக் கரும நாசத்தால் யோக நிலையை யடைதற் கியைந்த முயற்சியும், அங்ஙனமாய முயற்சியால், "பொய்த்த லறு துரிய விழை வத்துரிய விளைவாற் புகலரு மாவாக்கிய வாராய்ச்சி யதனான்" எ. து. என்றும் நசியாத ஆத்மப்பிரியமும், அவ்வாத்மப் பிரியத்தால் சொல்லற்கரிய மகாவாக்கிய வாராய்ச்சியும், அவ்வாராய்ச்சியால், "அத்துவித ஞான மதனா லவிச்சை நாச மதனாற் பொய்த்துவித மயக் கழித லதனான்" எ. து. அத்துவித ஞானமும், அவ்வத்துவித ஞானத்தால் அவித்தையா நாசமும், அந்த வவித்தையா நாசத்தால் பொய்யான துவித மயக் கொழிதலும், அந்தத் துவித மயக் சொழிவால், "மெத்து சுக துக்க நினைவழி வதனால் விருப்பு வெறுப்பறுதல தனா லொண் விதி விலக் கோய் வதனால்" எ. து. எவரும் மெச்சுகின்ற சுக துக்க நினை வொழிவாதலும், அவ்வொழிவால் விருப்பு வெறுப்பொழிதலும், அவ்வொழிவால் ஒள்ளிய விதிவிலக்குக் கெய்ப்புகாண்டலும், அங்ஙனம் எய்ப்புகாண்டலால் எ. று.

ஏகார மூன்றும் அசை நிலைகள்.

(அ. கை.)

முன் னிறுத்த முறையால் இருவினையாதிய மூன்றின் இலக்கணமும் இவ்விருபது சோபானத்திற்கும் அதீதமான விதேக கைவல்லிய இலக்கணமும் உணர்த்துகின்றது.

வினையிரண்டு மகறலத னாற்றேக பாவ
விச்சித்தி யதனானே பாசமெலா மொழிதல்
பினையறைந்த வதனானே பராபரமாய் முடிவாய்ப்
பெயர்சாதி குறிபெறு தொன்றாகி வாக்கு

மனமிறந்து நித்தியா நந்தமய மாகி
மறுவிலா விதேககை வல்லியம்வந் தெய்து
மெனவறிந்து துணிந்திடுக சுருதிகுரு பரனு
லின்பவீ டடையுநெறி விரும்புறுமுத் தமரே.

(இ.ரை.) "வினை யிரண்டு மகற லதனாற் றேக பாவ விச்சிந்தி யத னானே பாசமெலா மொழிதல் பினை யறைந்த வதனான்" எ. து. நல்வினை தீவினை யெனனும் இரண்டு வினையும் நாசமெய்தலும், அந்த நாசத்தால் தேகான்ம புத்திநீங்கலும், அந்நீக்கத்தால் பாசம் அனைத்தும் ஒருங்கொழித லும், முடிவிற் கூறிய இந்தப் பாசவொழிவால், "பராபரமாய் முடிவாய்ப் பெயர்சாதி குறிபெறா தொன்றாகி வாக்கு மனமிறந்து" எ. து. பராபரமாக வும், எவற்றிற்கும் முடிவாகவும்; இன்னபெயர், இன்னசாதி, இன்ன குறி எனப் பெறாது ஏகமாகவும், மனோவாக்குக் கெட்டாது, "நித்தியாநந்த மய மாகி மறுவிலா விதேக கைவல்லியம் வந்தெய்துமென வறிந்து துணிந் திடுக" எ. து. நித்தியாநந்த மயமாகவும் விளங்குங் களங்கமற்ற விதேக கைவல்லியம் வந்து வாய்க்குமென்று தீர்ப்பாக வறிந்து தெளிதி, "சுருதி குரு பரனு லின்ப வீடடையு நெறி விரும்புறு முத்தமர்" எ. து. இது சுருதி குருவாற் பேரின்ப வீடடைதற்கு நெறித்தாதலின் இதனைச் சத்துக் கள் விரும்பா நிற்பர் எ. று.

ஏகார மூன்றும் அசை நிலைகள்.

உதயபூருவம் ஐந்து கடிகைக்குள்ளான உஷத் காலத்தில் விழித்துச் சுசியோடுங் கூடத் தான் வழிபடு கடவுள் வணக்கத்தோடும் விதிப்படி மல சல வுபயத் துவார சுத்திசெய்வதே சவுச விதியெனவும் மேற் றந்த தாபன சப்தத் துவார சுத்திசெய்வது தந்த தாபன விதியெனவும், தீர்த்தத்திற் படி ந்து மனோசரீர சுத்திசெய்வது ஸ்நானவிதி யெனவும், மூன்று சுத்தியோடு தான் சிவசொரூபமாக விபூதிதரிப்பது அனுஷ்டான விதியெனவும், பிரண வாதி மந்திரங்களால் உருவேற்றுவது சபவிதியெனவும், பூத சுத்தி முதலிய பஞ்ச சுத்திகளோடுந் தான் சிவசொரூபமா யிருந்து சோடசவுபசாரத்தோடு சிவத்தைப் பூசிப்பது பூசாவிதி யெனவும், மேற் பிராண பலியோடுங்கூட ஆத்ம திருப்தி பண்ணுவிப்பது போஜன விதியெனவும் ஆகிய சப்த விதிக ளும் இங்ஙன மபரான காலத்திலுஞ் செய்கின்றது மிடையிற் றியான பரனு யிருப்பதுமாதலின் நித்திய கருமானுஷ்டானமெனவும், இவ்வனுஷ்டானஞ் சற்கருமமாய்த் தூய்தான புண்ணிய விசேடமாதலிற் புண்ணியமாமென வும், அத்தூய்மையாற் பாவகருமஞ் சேர்தற்கு இடமின்மையிற் பாவவொழி வெனவும் அதன் நீக்கம் நிருமலமாதலிற் குன்றலறு சித்த சுத்தியாமென வும், அச்சித்த சுத்தியின் விடயத்தின் உண்மை தெரிதலிற் பொய்க்கும் பக் குற்ற நெகிழ்வா மெனவும், அத்தோஷ திருஷ்டியினுல் ஒன்றினும் பற் றின்மையின் மெய்த்துறவா மெனவும், அவ்விரத்தி சுகவேதுவா யிருத்த

லின் முத்திவிருப்பமா மெனவும், அம்முத்தி விருப்பம் அகமுகத்திற் சார்ந்து பாகிய கன்ம மொடுங்கலிற் புறக் கரும வொடுக்கமா மெனவும், அவ்வொடுக்கம் மனோநிக்கிரகத்தை நாடலின் யோகநிலை முயற்சியா மெனவும், அம்முயற்சி தனித் திருப்பதை நாடலிற் பொய்த்த லறு துரிய விழைவா மெனவும், அத்துரிய மிஃதென அறியும் பரமாத்ம விசாரஞானம் வேண்டுதலிற் புகலரு மாவாக்கிய ஆராய்ச்சியா மெனவும், அவ்விசாரம் அபேதமாதலின் அதன்சாரமான அத்துவித ஞானமாமெனவும், அவ்வத்துவித ஞானம் அபரோட்சமாதலின் அவித்தியா நாசமாமெனவும், அவித்தையா நாசத்தில் அக மித மென்னும் பிராந்தி நீங்கலிற் றுவிதமயக் கொழிதலாமெனவும், அவ்வொழிதலில் இன்ப துன்பம் நீங்கலிற் சுக துக்க நினைவொழிவாமெனவும், அவ்வொழிதலின் இராகத்துவேஷ மின்மையின் விருப்பு வெறுப்பறுதலெனவும், அது நீங்கவே யிது செய்யத்தக்கது செய்யத்தகாத தென்னுஞ் சங்கற்ப விகற்ப மின்மையின் விதிவிலக் கோய்வாமெனவும், இவற்றுற் சொர்க்க நரக மின்மையின் வினை யிரண்டும் நீங்குமெனவும், இந்நீக்கத்தில் நாம ரூப பாவனை யின்மையிற் றேகபாவ விச்சிந்தியாமெனவும், இவ்விச்சிந்தியினால் அவாவனைத்தும் அன்பாய்க் கரைதலிற் பாச மெலாமொழிதலெனவும், அப்பாசமாகிய மூலாஞ்ஞானம் நசித்தவிடத்திற் பரமாகிய ஈசுரத்தன்மையும் அபரமாகிற சீவத்தன்மையு நீங்கி யானென்னும் பிரமகூடஸ்த அயிக்கமான அத்துவித சொரூபமாதலிற் பராபரமெனவும், இவ்வத்துவித பதத்திற்குமே லொருபதமு மின்மையின் முடிவாமெனவும், இதற் கோருருவ மின்மையிற் பேர் பெறா தெனவும், இஃதொன்றின் அம்சமாகாமையிற் சாதி பெறா தெனவும், இஃதிங்ஙன மிருக்குமென ஓர் அடையாள மின்மையின் குறிபெறா தெனவும், இஃதெங்கும் பரிபூரணமாக நிறைந்திருத்தலின் ஒன்றாகியெனவும், இதை வாக்கினாற் றுதிக்கத்தொடங்கின் அத்துதி முடிவு பெறாது அதிற் கரைதலின் வாக்கிறந்த தெனவும், இதை மனதினாற் சிந்திக்கத் தொடங்கின் அச்சிந்தனத்தின் மனம் அதுவாய்க் கரைந்துபோதலின் மனமிறந்த தெனவும், இங்ஙன மியாவுங் கரைந்த விடத்து நிரதிசயாநந்தமாய் நிறைந்து நிற்றலின் நித்தியாநந்த மயமாகியெனவும், இக்களங்கங்க ளனைத்தும் நீங்கித் தானே தானாய் விளங்கலின் மறுவிலா விதேக கைவல்லிய மெனவுங் கூறினார்.

இங்ஙனம் விதேக கைவல்லியத்தை யடையும் நிமித்தம் நுதலிய நித்திய கருமானுஷ்டான முதற் பாசம் ஈறாய மரபு இருபதில் முன்னைய எட்டும் பாகிய சாதனமெனவும், இடையின் மூன்றும் ஆந்தரிய சாதன மெனவும், மேலொன்றுஞ் சாத்திய மெனவும், ஏனைய எட்டும் நீங்கல் சாதன சாத்திய மெனவுங் கொள்க.

வினா:—இவற்றில் வஸ்து நிச்சயம் உபக்கிரமத்திலாவது உபசங்காரத்திலாவது கூறாது மத்தியிற் கூறிய தென்னை ?

விடை:—அவ்வஸ்து சர்வதோமுகமாயிருந்து யாவுமாய் விளங்குதல் அனுபவமாதலினுனும், சுருதிகள் மத்தியகத ஸ்வரூபமென விளம்புதலினுனும், விசாரத்தில் ஒன்றிற் சார்பில்லாது நடுநிலையாய் விளங்குதலினுனும், சாதனத்தில் ஆசிரியர் உபதேச அனுஷ்டானத்தில் யாவிற்குஞ் சாட்சியாய்க் காண்கையினுனும், சாத்தியத்தில் யாவும் பரிபூரணமாய் விளங்குதலினுனும் மரபினும் மத்தியகதமே கூறினுரென்க.

வினு:—இங்ஙனங் கூறிய மரபிற் சீவன் முத்தித் தன்மையைக் கூறாது விதேக கைவல்லியத்தை மாத்திரங் கூறிய தென்னே ?

விடை:—சீவன் முத்தியே விதேக முத்தியாதலி னென்க.

வினு:—அற்றேல், அஃதிரண்டாகக் கூறுவ தென்னே ?

விடை:—தத்தபட மென்னு மிடத்திற் படத்திற்கு நாம ரூபம் இருப்பதுபோலத் தோற்றுவது மாத்திரமே யன்றி, அஃதின்மைபோல, ஞானத்திற் றேகபாவ நீங்கியும் இருப்பதுபோலத் தோற்றுவதுமாத்திரமேயன்றி யஃதில்லாமையால் அத்தோற்றத்தைச் சீவன் முத்தியெனவும், அது நீங்கினதே விதேக முத்தி யெனவும் நாவை நாவென்முற்போலக் கூறினுரென்க.

அதி தீவிர பக்குவவான்கள் விதேக முத்தியை யடையுஞ் சோபான மரபு இங்ஙனமெனவும், இங்ஙனம் அதை யடைந்த ஸ்வானுபவ உல்லாசம் இனைய தெனவும் உணர்த்திய தென்பது. (கஅச)

(அ. கை.)

இந்நூற் பெருமையையும் இதை யடையத்தக்க அதிகாரியின் இயல்பையும் உணர்த்துகின்றது.

வேதமுத லாகியநூ லனைத்தினுஞ்சொற் பொருளை
விளங்கியிடக் கரதலா மலகமெனக் காட்டிப்
போதமய மாகியபே ராநந்தத் தழுத்தும்
பொருவிகந்த விந்நூலை முத்திபெறற் குரிய
சாதனநான் கினையுமடைந் தெவரானு மென்றுந்
தடுப்பரிய பிறவிநோய் தணிப்பதனுக் கெண்ணி
யாதரவி னருட்குரவன் றனைத்தேடி யுருகு
மன்புடையோர் தமைக்காணி னளித்திடுக வுவந்தே.

(இ. ரை.) "வேதமுத லாகியநூ லனைத்தினுஞ் சொற்பொருளை விளங்கியிடக் கரதலாமலகமெனக்காட்டி" எ. து. வேதமுதலாயுள்ள எல்லாநூல்களிலுஞ் சொல்லப்பட்ட பொருள்யாதோ, அதனை எவர்க்கும் நன்குவிளங்குமாறு உள்ளங்கை நெல்லிக்கனிபோற் காட்டி, "போதமயமாகிய பேராநந்தத் தழுத்தும் பொருவிகந்த விந்நூலை" எ. து. ஞானமயமாய் விளங்கும்

பேராநந்த நிலையில் ஆழ்த்தத்தக்க ஒப்பற்ற இந்த ஞானசாஸ்திரத்தை "முத்திபெறற்குரிய சாதன நான்கினையு மடைந்தெவரானு மென்றுந் தடுப்பரிய பிறவிநோய் தணிப்பதனுக் கெண்ணி" எ. து. ஐக்கியமுத்தி யெய்தற்குரிய சாதன சதுஷ்டயங்களை யடையுமாறடைந்து யாவராலேனும் என்றுந் தடுத்தற்கரிய பிறவிநோய் தொலைப்பதற் கெண்ணமுற்று, "ஆதரவினருட்குரவன்றனைத் தேடி யுருகு மன்புடையோர் தமைக்காணி னளித்திடுகெ வுவந்து" எ. து. மிக்க ஆசைகொண்டு கருணைக்கடலாகிய ஞானசாரியனை எங்கணுந் தேடி மனமுருகுகின்ற அன்புடைய மாணுக்கர் யாவரோ அவர்களைக்காணின். மிக்க மகிழ்வுகொண்டு தந்திடுதி எ. று.

ஏ அசை. பொருளை காட்டி அழுத்தும் இந்நூலெனவும், அடைந்து எண்ணி தேடி உருகு மன்புடையோ ரெனவு முடிக்க.

தீவிரதரப்க்குவமுள்ள சாதனசதுஷ்டய சம்பன்னனான அதிகாரிக்கே யிச்சுவானுபவநூல் பிறந்தமையின் அவனுக்கே யிந்நூல் உரித்தென்பதை யுணர்த்திய தென்பது. (௧௮௫)

## வேதாந்தசூளாமணி

## மூலமுமுரையும் முற்றுப்பெற்றது.

ஸ்ரீசற்குருவேநமஃ.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| கச | உஎ | அறைப்படுதலை | அறையப்படுதலை |
| உக | ஙஎ | னெனவங் | னெனவும் |
| ரு0 | ச | விசிட்டாத்துலிதிக | விசிட்டாத்துவிதிக |
| ருச | சு | விவர்க்கு . | விவர்க்கு |
| ,, | ஙசு | புனவின் | புனலின் |
| சுசு | உச | பாய | யாய |
| ,, | உரு | பரிபாய | பரியாய |
| சுகூ | ககூ | பொருந்திேனேன் | பொருத்திஞேன் |
| எஉ | கூ | தேகஞ் | தேகச் |
| கூஅ | கச | ஏய்ப்புறு | எய்ப்புறு |
| க0உ | கக | மிசம | மிசம் |
| க0ச | கஎ | யுந்திரிய | யிந்திரிய |
| ககரு | ஙசு. | தவனுக்கும் | தவனுக்குப் |
| ககஅ | ஙஎ | ஒண்மதலின் | உண்டாதலின் |
| கககூ | கஉ | சரின | தரிசன |
| கஉ0 | ரு | அரமும் | அக்ரமும் |
| கஉஅ | கங | சகத்தில் | சகசத்தில் |
| கங0 | கசு | வத்தைகளி | வவத்தைகளி |
| கஙக | உஎ | நிசாநந்த | நிசாநந்தக் |
| ,, | உகூ | ஓரபேட்சையின | ஓரபேக்ஷையின்றி |
| கஙகூ | ஙசு | எ. று. | எ. து. |
| கசங | சு. | மவித்தை | மவத்தை |
| ,, | ஙசு | வறிந்திடுதெ | யறிந்திடுதெ |
| கசச | ஙரு | சேர்த்த | சேர்த |
| கரு0 | கச | பரமாத்யா | பரமாத்மா |
| கருக | கூ | கூஸ்தர் | கூடஸ்தர் |
| கருஉ | க0 | சர்வதத்துவாதி | சர்வஞ்ஞத்துவாதி |
| ,, | உக | ஞெடங்கிச் | ஞெடங்கியிச் |
| ,, | உகூ | குத்தமொரு | குத்தமொழி |
| கருரு | க | வாக்கியத்ற்கு | வாக்கியத்திற்கு |
| கருஎ | உச | சுபப்பவனே | சுமப்பவனே |
| கருகூ | க | அலட்சி | இலட்சி |

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| கசுசு | க | கூறுகின்ற | விகார வாதமும் ஒன்றே பலவும் ஆகாத வஸ்துவிற்கு அவை அமைத்துக் கூறுகின்ற |
| ,, | சு | கட்டுப்பட்ட | கட்டுப்பட் |
| கசுசு | ச | இவ்வைத்தும் | இவ்வைந்து |
| ,, | கஅ | கிடத்தல் | கிடைத்தல் |
| ,, | உக | தேடாது | தேடாதது |
| சஎ0 | கரு | தேற்றலால் | தோற்றலால் |
| கஎ௫ | சு | மற்றவற்கே | மற்றிவற்கே |
| கஅகூ | உ | வருதவெ பார் | வருதலேன்பார் |
| ,, | கஉ | ஒருவித | ஒருவி |
| ககூ0 | ச | கூறும் | கூறுதும் |
| ககூ௫ | ௫ | இவவித | இவ்வித |
| ககூஅ | கக | கச௫ | க௫ச |
| உ00 | கசு | வருஞ்சிரம | வருஞ்சிரம |
| உ0க | கரு | வழுவாதி | வுழுவாதி |
| உ0ரு | ருரு | வருளவும் | வருமளவும் |
| உ0ச | ருசு | பிராத்த | பிரார்த்த |
| உகச | உஉ | லென்பவனை | லென்பரவை |
| உஉக | கக | எ - து | எ - று. |
| உஉஉ | ரு௫ | எ து | எ. து. |
| உஉரு | உ0 | அநீதத்திற் | அதீதத்திற் |
| உஉசு | உக | ொன்க | ொ ன்க. |
| உஉஎ | உச | யறினும் | யுறினும் |
| உஉஎ | உஎ | நடைக்கைகளில் | நடக்கைகளில் |
| உஉஎ | ருஉ | ஏ தோற்றம் | ஏ. தேற்றம் |
| உஉஅ | க0 | கைவவ்லிய | கைவல்லிய |
| உரு0 | எ | வராச்சி | வாராய்ச்சி |
| உருக | எ | யெனனும் | யென்னும் |